உ

கணபதி துணை

அஷ்டாதச புராணத்துள்

ஒன்றாகிய

MARKANDAYA PURANAM.

மார்க்கண்டேய புராணம்

வசனகாவியமும்

அரும்பத விளக்கமும்,

இஃது

சென்னை பிரஸிடென்ஸி காலேஜில்
தமிழ்ப்புலமை நடாத்தியவரும்
சமரசவேத சன்மார்க்க சங்கவித்வான்களி லொருவருமாகிய
உபயகலாநிதிப் பெரும்புலவர்
தொழுவூர்-வேலாயுத முதலியார்
மொழிபெயர்த்தது.

ஷையார் மூத்தகுமாரர்
தொழுவூர். வே. திருநாகேஸ்வர முதலியார்
பரிசோதித்துத்தர

சிறுமணவூர்

அண்ணுமலை முதலியாரவர்களால்

தமது

சென்னை, சூளை

ஆயுர்வேத அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

[இரண்டாவது பதிப்பு.]

1909௵ ஏப்ரல்மீ

Copyright Registered.

14684
MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR, MADRAS

பெரிய சுகர்நாடி என்னும்

சோதிட சிகாமணி.

திருகால கணிதம்

பெரியபுத்தகம்.

ஜோதிடங்களில், மூதநூல், வழிநூல், சார்புநூல், பென்று சொல்லப்பட்ட பூர்வீகசாஸ்திரங்களில் இந்த சுகர்நாடி யென்றும் சோதிடசாஸ்திரம் ஒன்றைத்தான் முதல் நூலென்று சொல்லப்படும் (அதாவது) பசும் பாலிலிட மாக, தயிர், மோர், வெண்ணெய், நெய், முதலியவைகள் யெப்படி உண்டு பண்ணிக்கொள்வார்களோ, அதுபோலவே இவ்வுலகத்திலுள்ள எல்லாஜோதிட சாஸ்திரங்களும் எல்லா ஆரூட சாஸ்திரங்களும் இந்த சுகர்நாடி யென்னும் பெருநூலிலிருந்து உற்பத்தியான சிறுசிறு இனநூல்களென்று யாவரும் பரிஷ்காரமாய் தெரிந்துகொள்ளலாம்.

இந்த சுகர் நாடி யென்பது சுமார் ஐயாயிரகலோக தாத்பரியங்களும் அனேகநூறு கணக்கான காலசக்கரங்களும் அடங்கியிருப்பதன்றியில் சந்தேக வினாக்களுக்கு விடையும் தெரிவித்திருப்பதினால் இந்த சாஸ்திரம் ஒன்றைக்கொண்டே பூமிக்குமளவில் எல்லா காலங்களுக்கும் எல்லா ஜெனனங்களுக்கும் மனிதர் விலங்கு பாவைமுதலிய ரூபபேத குறிப்புகளும்பிரித்தெழுத ஒழுங்கான பிரம்மாண்டமான பெரியசாஸ்திரம் 700-நூறு லக்கங்களுக் கதிகமான பக்கங்களுடைய பெரியவாரிநூல் இதன் விலை ரூபா 3 8 0

வீ. பி. தபாற்கூலி அணா 0 5 0

ஸ்ரீ வசிஷ்ட முனிவரும் ஸ்ரீவால்மீகியும் இருவரும் ஸ்ரீராமருக்கு உபதேசித்த

ஞானரகசியக்கதை.

இதில் வசனரூபமாக ஸ்ரீவசிஷ்டரும் ஸ்ரீவால்மீகியும் ஸ்ரீராமருக்கு உபதேசித்த (ஞானரகசியக்கதை) இதில் எல்லாவிஷயங்களும் அடங்கியது இக்கிரந்தம் ஒன்றைமாத்திரம் கவனமாய் படித்தால் ஸ்ரீவால்மீகமகாமுனிவர் இராமாயணத்திலும் கிடையாது இது வைணவாசிகளிடமிருந்து எனக்கு கிடைத்தது. அதை யான் அச்சிட்டு பரோபகாரமாய் வெளிப்படுத்தியது. இதில் உலகம் ஜீவன், ஈசுவரன் என்பவைகளை யறிந்து உலகத்தை அனித்திய மென்று விடுத்து ஈசுவரனைப்பூசித்து அவனது அருளால் மோக்ஷசாம்ராஜ்ஜியத்தை அடைவது சத்தியம் நமது இந்துதேசத்திலுள்ள ஒவ்வொரு இந்துக்கள் வீட்டிலும் ஒரு இரத்தினமாகப் பாவிக்கவேண்டியது.

விஸ்வாமித்திரர் தசரதருக்குச் சொல்லுதல். வால்மீகர் இராமருக்கு ஞானம் போதிக்குதல் இதன் விலை அணா 0-8-0. வி. பி. அணா 0-3-0.

புத்தகவிளம்பரம்.

மார்க்கண்டேயர் புராணம் 24-அத்தியாயம் சேர்ந்தது ...	1	8	0
அகஸ்தியர் ஞானசாநூல் உயர்ஞானசாநூல் பீர்மகம்மது மெஞ்ஞான சாநூல் இம்மூன்றடங்கியது ஒரேகட்டடம்...	0	4	0
கண்டசுத்தி கதைகள் யென்கிற விகட அதிவினோத கதை ...	1	0	0
அகஸ்தியர் பஞ்சபட்சிசாஸ்திரம் மூலமும் புதிய உரையும ...	0	8	0
மாதர்நீதி வசனம் எல்லோரும் வாசிக்கத் தகுந்தது ...	0	12	0
பட்டணத்தார் புராணம் புதிய பதிப்பு ...	0	12	0
விநோத பஞ்சபட்சி மூலமும் புதிய உரையும் ...	0	12	0
மருத்துவ சாஸ்திரம் ...	1	8	0
ஞான ரகசியம் வசனநடை ...	0	8	0
நான்குவேத ரகசியம் வசனநடை ...	0	8	0
சல்லாபலாவணி எரிநதகட்சி யெரியாதகட்சி ...	0	4	0
இங்கிலீஷ் தமிழ்வைத்தியசிகாமணி ...	3	8	0
சோதிடசிகாமணி மூலமும் உரையும் ...	3	8	0
சுருக்குபஞ்சபட்சி சாஸ்திரம் ...	0	2	0
போகர்பஞ்சபட்சி மூலமும் உரையும் ...	0	12	0
கமலமுனி இரேகைசாஸ்திரம் மூலமும் உரையும் ...	0	8	0
பிரபஞ்ச உற்பத்தி எல்லாதேவதைகள் உற்பத்தியும் ...	2	0	0
உலகவிசித்திரக்கதை 19-அடங்கியது ...	1	0	0
சிவவாக்கியம் ஆயிரம்பாடல் ...	0	8	0
பதிவிரதைகள் சரித்திரம் 44-கதைகளடங்கியது ...	0	12	0
பார்வதிபரணியமென்னும் விஷவைத்திய சிந்தாமணி ...	0	12	0
உயிரெழுத்து மூலிகை மர்மம் ...	0	8	0
மானிடரகசியமென்னும் சரீரசாஸ்திரம் ...	0	8	0
அஷ்டதிக்கு ஆருடம் ...	0	12	0
தசண்ட ஆருடம் ...	0	12	0
நவக்கிரக நவகண்ட ஆருடம் ...	0	8	0
புலவுநூல் என்னும் இந்தியா சமையல் சாஸதிரம் ...	0	8	0
சர்வபிரயாண சகுனசாஸ்திரம் ...	0	4	0
பெண்கள் ருதுஜனன ஜாதகம் ...	0	4	0
சிவராத்திரி புராண வசனம் ...	0	3	0
மருமக்கள் துயரம் நூதனம் ...	0	2	0

சிறுமணவூர்,

அண்ணாமலை முதலியார்

சூளை போஸ்ட், மதராஸ்.

இப்புத்தகத்திலடங்கியவை.

1. இரண்டாம்பதிப்பின் முகவுரை. ... ...
2. மார்க்கண்டேயபுராண அதிகார அட்டவணை ...
3. மார்க்கண்டேயபுராண வசனம். ... ...
4. நூலாசிரியர் வரலாறு. ... ...
5. மேற்கோள் விளக்கம். ... ...
6. அரும்பத விளக்கம். ... ...
7. பிழை திருத்தம். ... ...

கணபதி துணை.

இரண்டாம்பதிப்பின் முகவுரை.

—(*)—

ஸ்ரீ கைலையங்கிரியின்கண், "அடியார்க்கெளியரும்" அநாதி மலமுத்தருமாகிய பரசிவப் பிரபு சந்நிதானத்தில் ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் ஓர்காலத்து விண்ணப்பித் தநுக்கிரம் பெற்றபடி அவ ரோர் கலை இப்பரதகண்டத்தில் ஸ்ரீபராசருக்கும் யோசனைகந்திக்கும் ஸ்ரீவாதராயணராக வவதரித்தது. அவ்வியாத முனிவர்தயவுடன் வேதங்களை நான்குகூறாக்கிச் சீர்ப்படுத்தினர். அவைகளை யோதியறியமாட்டா மந்தமதியினர்க் குபயோகமாம்படி பரமசிவன்கட்டளைப்பிரகாரம் ஸ்ரீசனற்குமாரரிடம் பதினெண்புராணங்களை யோதியுணர்ந்தனர். அவற்றுள், சைவம், பவிஷ்யோத்தரம், மார்க்கண்டம், இலிங்கம், காந்தம், வராகம், வாமனம், மச்சம், கூர்மம், பிரமாண்டம் ஆகிய இவைபத்தும் சிவபுராணங்களாம். கருடம், நாரதம், விஷ்ணு, பாகவதம் ஆகிய இவைநான்கும் விஷ்ணுபுராணங்களாம். பதுமம், பிரமம் ஆகிய இவையிரண்டும் பிரமபுராணங்களாம். பிரமகைவர்த்தமாகிய வொன்றே சூரியபுராணமாம். ஆக்கினியமொன்றே அக்கினி புராணமாம்.

இவற்றில் துவாதசாந்தத்தலமாகிய மதுரையையாண்ட அதிவீரராம பாண்டியர், கூர்மபுராணத்தையும், வரதுங்கராம பாண்டியர் இலிங்க புராணத்தையும, வேம்றுருவர் மச்சபுராணத்தையும் தம்முல மசையபுள நண்டயாகமொழி பெயாததனா. ஸ்ரீ விஷ்ணுபுராணமும், கருடபுராணமும், சிவமஹாபுராணமும்தமிழ்வசனநடையில் வெளிவந்திருக்கின்றன. காந்தபுராணமும், காசிகாண்டமும், வாயுசங்கிதையுமாகிய விவை செய்யுள் நடையியியற்றப்பட்டன. மற்றவை எவ்வகையானும் வெளியாக வில்லை. இக்குறையை நிவர்த்திப்பான் வேண்டி சிலகனதனவான்கள், சென்னை பிரஸிடென்ஸி காலேஜில் தமிழ்ப்புலமை நடாத்திய எந்தையாகிய தொழுவூர்-வேலாயுத முதலியாரைப் பன்முறைதூண்ட, அதையுள்ளத்தடைத்து, "ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க்கு, எண்பொருளேனைய விரண்டுமொருங்கு," என்றபடி தமதுபொருட் குறைவால் நிறைவேறாமையை யோசித்து, தமது நண்பராகிய சிதம்பரம்-இரததினசபாபதி முதலியாரைக்கொண்டு இம்மார்க்கண்டேய புராணத்தை சுப்பிரமணிய சாஸ்திரியார் உதவியைப் பெற்று வசனநடையில்

மொழிபெயர்த்து மாதசஞ்சிகையாக சிறுகச்சிறுக வெளிவர ஏற்பாடு செய்தனர். அம்முதலியாரவர்கள் அதற்கொப்பி நான்கு சஞ்சிகைகளை நடத்தி மேற்சில சலகத்தால் சரிவர நடத்தாது நிறுத்திவிட்டனர். அப்படி இருபத்துநான்கு அத்தியாயங்கள் மொழிபெயர்த்து வெளிவந்தன. மேல் அச்சிட்டவரையில் புத்தகமாக்கி விற்பனை செய்யப்பட்டு வந்தது. அப்புத்தகங்கள் நாளடைவில் இல்லையாய் விட்டமையாலும் அநேகம் நண்பர்கள் அதனருமையை நோக்கி விரும்பினமையாலும் மறுபதிப்பு பதிப்பிக்கலாயிற்று. இக்காரியம் இன்னம் முன்னமே செய்யப்பலவகையி லிடையூறுகள் நேர்ந்தமையால் காலந்தாழ்ந்தது. அடியேனது ஆப்தரத்தினமாகிய ஸ்ரீமன், டி-எஸ்-குமாரசுவாமி பிள்ளையவர்கள் இதிலீடுபட்டு, சென்னை, சூளை, ஆயுர்வேத அச்சுக்கூடத்துத் தலைவராகிய சிறுமணவூர் அண்ணாமலை முதலியாரவர்களிடம், இருவருக்கும் அநுகூலமான ஏற்பாடுகளைச் செய்தனர். ஷை அண்ணாமலைமுதலியாரவர்கள் இப்பதிப்பிற்கு வேண்டும் செலவுகளைத் தாமே மேற்கொண்டு வெளியிட்டனர். இவ்வகையில் அவ்வவ்வச்சுக்கூடத்துத் தலைவர்களும் தமிழ்நூல்களை யாதரிப்பார்களாயின் அநேகவரிய பெரியநூல்கள் வெளிவந்து பலர்க்கு முபயோகமாம். இதற்கு பரசிவப்பிரபு கருணைபுரிவாராக. இந்நூலைத் தமிழுலகிற் குபகரித்த எந்தையாரது சரிதச்சுருக்கம், அரும்பதவிளக்கம், மேற்கோள்விளக்கம் முதலிய சேர்த்துள்ளனன். இப்பதிப்பை விரைவிற் பூர்த்திசெய்ய வடியேனையும், ஷை அச்சுக்கூடத்துத் தலைவரையும் தூண்டி முற்றுவித்த சற்குரு, ஸ்ரீ திருவருட்பிரகாசவள்ளலாரது இணையடியை முக்காலும் வணங்கியுய்வேனாக.

இப்புராணம் வடமொழியில் நூற்று முப்பத்தொன்பது அத்தியாயங்கள் கொண்டது. அவற்றில் இருபத்துநான்கு அத்தியாயங்களே தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. மற்றைய வத்தியாயங்களை இரண்டாம் பாகமாக விரைவிற் பூர்த்திசெய்யத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. "வகுத்தான் வகுத்தவகையல்லாற் கோடி, தொகுத்தார்க்குந் துய்த்தலரிது என்று" விதித்தபடி பரசிவப்பிரபு இம்மார்க்கண்டேய புராணம் முற்றவும், இந்நிலவுலகத்து நிலைத்துலவவும் கருணைபுரிவாராக. சுபம்.

இங்ஙனம்,

அடியார்க்கடியன்.

தொழுவூர். வே. திருநாகேஸ்வரன்.

மார்க்கண்டேயபுராண அட்டவணை.

முதலாவது அத்தியாயம்.

	பக்கம்.
மார்க்கண்டேயரை ஜைமினிகாண்டல்	3
ஜைமினிமுனிவர் வினவுதல்	3
தருமபக்ஷி கதை	4
நாரதர் நந்தனவனமுற்ற கதை	5
வபுதா நுவாசரால் சாபமடைதல்	7

இரண்டாவது அத்தியாயம்.

தருமபக்ஷிகளை வளர்த்த கதை யுரைத்தது	8

மூன்றாவது அத்தியாயம்.

தருமபக்ஷிகதை யுரைத்தது	14
பறவைகள் முனிவர்க்குக் கூறல்	15
தருமப்பறவைகளுக்குச் சாபம்வந்த வரலாறு	16

நான்காவது அத்தியாயம்.

ஜைமினி முனிவர் பறவை முனிவரிடஞ் சென்றது	22
தருமப்பறவைகளுக்கும் ஜைமினிக்கும் வார்த்தைப்பாடு	23
தருமபக்ஷிகள் வினவல்	24
ஜைமினி விடை கூறல்	24
தருமபக்ஷிகூறல்	25
ஜைமினிமுனிவர் வினா	25
விஷ்ணு துதி	26
பிரமதுதி	26
உருத்திர துதி	26
நாராயணனென்பதன் பொருள்	27
விஷ்ணுவடிவம் நான்கு	27
விஷ்ணு அவதாரங்கள்	28

ஐந்தாவது அத்தியாயம்.

இரண்டாவது வினாவிற்கு விடை	30
விருத்திராசுரனை அழித்தது	30
இந்திரன் விசாரித்தல்	31
தேவாசுரர் அம்சங்களின் அவதரிப்பு	31

இந்திரனொருவனே பாண்டவராானது 32
துரோபதை இந்திராணியின் அவதரிப்பு 32

ஆறுவது அத்தியாயம்.

பலராமன் தீர்த்த யாத்திரை 33
இரைவதமலைச் சிறப்பு 33
முனிவர்கள் பலராமனை உபசரித்தல் 34
பலராமன் சூதனை வதைத்தல் 35

ஏழாவது அத்தியாயம்

அரிச்சந்திரன் கதை 36
அரிச்சந்திரன் விசுவாமித்திரனிடம் வருதல் 37
அரிச்சந்திரனுக்கும் விசுவாமித்திரனுக்கும் சம்வாதம் 38
விசுவாமித்திரர் தானம் வாங்கல் 39
விசுவதேவரை அம்முனி சபித்தல் 41

எட்டாவது அத்தியாயம்.

அரிச்சந்திரன்காசி புகுதல் 42
அரசன் மனைவியை விற்றல் 46
அரசன் சண்டாளனை எதிர்தல் 48
மயானச்சிறப்பு 50
மயானத்துள் அரசனிருப்பு 51
அரசன் கனு 52
அரசன் புத்திரசோகமுறல் 55
தீப்புகவேண்டி அரசன் தெய்வம் வாழ்த்தல் 59
அரசனுக்குத் தேவர்கள் காட்சிதருதல் 60
அரசன் நகரமாக்களோடு சுவர்க்கம் புகுதல் 62
இக்கதையின் பயன் 63

ஒன்பதாவது அத்தியாயம்.

வசிட்ட விசுவாமித்திர யுத்தம். 64

பத்தாவது அத்தியாயம்.

தந்தை புதல்வர் வினவிடை 66
தந்தைக்குப் புதல்வன் கூறிய முற்பிறப்பின் செய்கை 68
உயிர்களின் பாவபுண்ணியங்களின் பயன் 71
இயமன் சொரூபம் 74
இரௌரவ நரகம் 74

பதினோராவது அத்தியாயம்.

சனனமரண சமுசார துக்கம் 76

பன்னிரண்டாவது அத்தியாயம்.

மஹா இரௌரவ நரகவியல் 79
தமோ நரகம் 80
நிகுந்தன நரகம் 80
அப்பிரதிட்டை நரகம் 81
அஸிபத்திரவன நரகம் 81
தப்தகும்ப நரகம் 82

பதின்மூன்றாவது அத்தியாயம்.

விதேகராசன் கதை யுரைத்தது 83
காலகிங்கரரும் விதேகராஜனும் வருகை 84
காலகிங்கரனை விதேக ராஜன் வினவுதல் 85
சாலதூதுவன் கூறிய விடை 86

பதினான்காவது அத்தியாயம்.

பாவங்களுக்குத் தக்க பிறவி 93
நரகத்தினின்றும் வந்தவர்களின் அடையாளங்கள் 95
சுவர்க்கம் புகுந்து வந்தவர்களின் குறி 96
அறக்கடவுளிந்திர னரசனைக்காண்டல் 98

பதினைந்தாவது அத்தியாயம்.

தத்தாத்திரேயர் அவதாரம கூறியது 100
கௌசிகன் மனைவியின் கற்புநிலைமை 101
கற்பினலம் வெளிப்படுதல் 103
அநுசூயைக்கும் கௌசிகன் மனைவிக்கும் சம்வாதம் 104
மாதராடவ ரொழுக்க வியல் 105

பதினாறாவது அத்தியாயம்.

சந்திரன் தத்தாத்திரேயர் தூர்வாசர் அவதரித்தல் 109
தத்தாத்திரேயரது தவமும் மகிமையும் 110
கார்த்தவீரியார்ச்சுனன் வரலாறு 111
கருக்கர்கார்த்தவீரியன் வினவுரை 112
தேவர் தத்தாத்திரேயரை யடைதல் 113
அசுரர் இலச்குமியாரைக் கவர்தல் 115
இலக்குமியின் தானமெட்டு 116

பதினேழாவது அத்தியாயம்.

கார்த்தவீரியார்ச்சுனனுக்குத் தத்தாத்திரேயர் அனுக்கிரகித்தது 117
கார்த்தவீரியன் பட்டாபிஷேகம் 119

பதினெட்டாவது அத்தியாயம்.

இருதத்துவசனென்னுங் குவலயாசுவன்வரலாறுரைத்தது 122
காலவமுனிவர் மகிமையுள்ள குதிரையை சத்துருசித்து மஹாராஜனுக்குக் கொடுத்தல். 125

பத்தொன்பதாவது அத்தியாயம்.

குவலயாசுவம் பிலத்துட் புகுந்தவரலாறுரைத்தது 127
அரசமைந்தன் மாதெர்ருத்தியைக்கண்டு மயங்கல் 128
மதாலசையின் வரலாறு குண்டலை கூறல் 129
குவலயாசுவன் தன்வரலாறு கூறல் 130
குண்டலை கூறிய நீதி 131
சத்துருசித்து தன்மகனுக்குரைத்த நீதி 183

இருபதாவது அத்தியாயம்.

தாலகேது மாயை புரிந்தது 185
சத்துருசித்தரசனுக்கும் அவன்மனைவிக்கும் நடந்தசெய்தி 187

இருபத்தோராவது அத்தியாயம்.

குவலயாசுவன் தன்மனதைத் தேற்றிக் கொள்ளுதல் 139
கலைமகள் துதி 142
சிவபெருமானிடத்து வரம் பெறுதல் 144
குவலயாசுவன் நாகலோகத்தை யடைதல் 147
குவலயாசுவன் அசுவதரனைக் கண்டுசன்மானம்பெறுதல் 147

இருபத்திரண்டாவது அத்தியாயம்.

அசுவதரனுக்குங்குவலயாசுவனுக்குஞ்சல்லாபப்பிரகரணம் 149
குவலயாசுவன் மதாலசையைக் காண்டல் 151
மதாலசையை மாமன்மாமி கண்டுகளித்தல் 152
தாயார்குமாரனுக்குத்தத்துவோபதேசஞ் செய்தல் 153

இருபத்துமூன்ருவது அத்தியாயம்.

மதாலசை குமாரர்களுக்கு நீதி உபதேசித்தல் 155

இருபத்து நாலாவது அத்தியாயம்

அலர்க்கனுக்கு மதாலசை இராஜநீதி தெரிவித்தல் 185

அட்டவணை முற்றிற்று.

உ

கணபதிதுணை.

மார்க்கண்டேயர் வரலாறு.

பரமசிவத்தி னருள்பெற்று ஸ்ரீ மகாவிஷ்ணு ஓர்கலையால் பூமியில் வியாதமா முனியாக அவதரித்தனர். அவர் பல்வகையில் சிதறுண்டிருந்த வேதங்களைத்திரட்டி நான்குகூறாக வகுத்து அக்கூறுகளுக்கு, இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் எனப்பெயரிட்டு, பல முனிவர்களுக்குக் கற்பித்துப் பரவச்செய்தனர். அவை சிலர்க்கு ஓதி யறியத் தெளிவுவாராத காரணத்தால், சிவபிரான வருந்தவகணம் ஸ்ரீ நந்திதேவரது அனுக்கிரகம் பெற்ற சனற்குமாரரிடம், சைவம், பிரமாண்டம், வாமனம், மச்சம், கூர்மம், வராகம், காந்தம், இலிங்கம், பவுடியம், மார்க்கண்டம், கருடம், வைணவம் நாரதீயம், பாகவதம், பிரமம், பதுமம், ஆக்கினேயம், பிரமகைவர்த்தம் எனப் பெயரிய பதினெண்புராணங்களை யோதி யறிந்து பலர்க்கு முபதேசித்தனர். அவற்றில் இம்மார்க்கண்டேய புராணம் சிவபரமானது. இதை மார்க்கண்டேயமகாவிருடியானவர் குரோஷ்டி என்னும் முனிவானுக்குப் புகன்றனர். அதை வியாசருடைய சீடராகிய ஜைமினி முனிவருக்கு துரோணருடைய மக்களாகிய நான்குசேனமுனிவர்கள் விரித்துச் சொல்லினர். ஆதலால் இது மார்க்கண்டேய புராணமெனப் பெயர்த்து ஆனல், அம்மார்க்கண்டேயமுனிவர் எவ்வகைப் பெருமையும், குணமும், தன்மையுமுடையரென்பது அவரது வரலாற்றால் தெரியவரும். அதுவருமாறு.

கொடிகள் நாட்டிய மதிலாற் சூழப்பட்ட கடகம் என்னும் பதியில், அமிர்தத்தைப்போலு மினிய மங்கையரது கூர்மையாகிய வேல்போன்ற கண்களால் யாதொரு மயக்கத்தையு மடையாதவரும் அரிய தவத்தின் மேம்பட்டவரும், பூலோகத்து வேதியருட் சிறந்தோருமாகிய குச்சகனென்னும் முனிவேந் தொருவனுளன். அத்தன்மையோனுக்கு அரியவேதங்கள் பயின்ற நாவினனாகிய கவுச்சிகனென்னும் பெயர்வாய்ந்த புத்திரனொருவனுளன். அக்கவுச்சிகன் "அறவாழியந்தணான்றாள் சேர்ந்தார்க்கல்லாற், பிறவாழி நீந்தவரிது" என்றும்," பிறவிப்பெருங்கடனீந்துவர் நீந்தாரிறைவனடி சேராதார் "என்றுஞ் சிந்தித்துப் பிறவிப் பெருங்கடலைக் கடக்கவேண்டி பரமும் அபரமுமாய் விளங்கும் முதலாம் சிவபெருமானைத் துதித்து

தவஞ் செய்தற்காக வோர்குளிர்ந்த நீர்நிறைந்த குளக்கரையைச் சேர்ந்தார். அவ்விடத்து மந்தைவெளிக் கல்லைப்போன்று அசையாது சுவாசபந்தனஞ்செய்து, "காயிலையுதிர்ந்த கனிசருகு புனன் மண்டிய கடும்பசி தனக்கடைத்துங்-கார்வரையின் முழையிற் கருங் கல்போலசையாது கண்மூடி நெடிதிருந்தும், தீயினிடைவைகியுந் தோயமதின் மூழ்கியுந் தேகங்களென் பெலும்பாய்த்-தெரியநின்றுஞ் சென்னிமயிர்கள் கூடாக்குருவி தெற்றவெயிலூடிருந்தும், வாயுவை யடக்கியு மனத்தினை யடக்கியு மௌனத்திலே யிருந்து-மதிமண்டலத்திலே கனல்செல்ல வமுதுண்டு வனமூடிருந்து மறிஞ, ராயு மறை முடிவான வருளுடிஞராடிமை யகிலத்தை நாடன் முறையோ-வண்டபகிரண்டமு மடங்கவொரு நிறைவாகியானந்தமான பரமே" என்றபடி நின்று, உலகம் பித்தென்று மதிந்து, கெடாதவின்ப வாரிதி மூழ்கி, "காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி, யோதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது, வேதநான்கினு மெய்ப்பொருளாவது, நாதனும நமச்சிவாயவே" எனச்சிவனையும் அவரது மந்திரத்தினையும், அவரது பெருமையையும், இயல்பையும் நினைத்துள்ளுருகித் தவடங்கிடந்தார். அவர் யாதொரு பதுமைகளைப்போன்று வாய்பேசாமையுற்று, அக்குளக்கரையில் உண்டி துயில் முதலியனநீத்து, அழிவின்றித் தவஞ்செய்கையில் அக்குளக்கரையில் வசிக்கும் எல்லாமிருகங்களும், தினவெடுக்குங் காலத்து, அவர் முதுகில் உராய்ந்து கொண்டுபோகும். அவைகள் அப்படிப் போகுங்காலத்து மறியாதுகித்தான் மேற்கொண்ட தவத்தைச் செய்தலைத் திருமாலானவர் அதைநோக்கி, "முற்றின்பமா மருளின்மூழ்குவது மோகயிகு, சிற்றின்பமா மருவிற் சேர்குவது-முற்றிங், கறிந்தானன்னெஞ்சேயகிலாண்ட மெல்லாஞ், செறிந்தான் செயலேல்தெளி" என்றபடி, சிவபெருமானது திருவருளிதுவென வியந்து, தேவர்கள் புடைசூழ ஆகாயமார்க்கமாயவரிடம் வந்தனர். அங்குவந்ததிருமால் ஆச்சரியமடைந்து அம்முனிவரின் அரியதவத்தைப் புகழ்ந்து, சூரியப்பிரகாசமாயிருக்கும் அவர் திருமேனியை அழகிய தனது திருக்கரத்தால் தடவிக்கொடுத்து, மலைபோலசைவற்றுள்ள முனிவ, மிருகங்களின் தினவு நீக்கியோயாதலின் உனது பெயர் மிருகசண்டுயனென்று வழங்கக்கடவதென்று செப்ப, உடனே அம்முனிவர் தவத்தினின்றும் எழுந்து கைகளாற்றொழு தெதிர்நின்றார். அப்படிப் பணிந்தெழுந்த அம்முனிவரைப்பார்த்து, பரிசுத்தமமைந்த இளம்பிறைசூடிய திருமுடியையுடைய சிவபெருமானது பூரணமான திருவருள் நின்பாலாகக்

கடவது, முற்பிறப்பிற் செய்துள்ள பாவங்கள் ஒருங்கே கெட்டழி யக்கடவது என்று அன்புட னனுக்கிரகித்து, கருடவாகனராகிய திருமால் தேவர்கூட்டத்துடனே சடுதியில் திருவுருக்கரந்து சென்ற னர். திருமால் அனுக்கிரகித்து மறைந்தபிறகு முனிச்சிரேட்டனு கிய அம்மிருககண்டேயர், முப்புரங்களைப் புன்னகைத் தீயாலெரித்தொ ழித்த முக்கணனாகிய சிவபெருமான் றிருவருளால், அதிவிரைவிற் றமது பிதாவாகிய குச்சகமுனிக் கெதிரிற்சென்று அவரது திருவடி களை முறையேபணிய, அவர் "தம்மிற்றம் மக்களறிவுடைமை மாநில த்து, மன்னுயிர்க்கெல்லா மினிது" எனவும், மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை, யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்" என வும் வரும் விதிகளின்படித் தன்மகனுரை மிக்க மனக்களிப்புடன் பார்த்தெடுத் தணைத்துக்கொண்டனர். மேலக்குச்சகர்தன் தநயனுன மிருககண்டேய முனிவரைப்பார்த்து, அப்பா, நீ செய்ததவத்தில் உனக்குநேர்ந்த விடயங்களை கூற வேண்டுமென, அதற்கவர் களிப் பினை யடைந்த தமது பிதாகேட்கும்படி உள்ளபடியே கூறியவுடன், விசேடித்த களிப்பினையடைந்து, ஐயா! மிருககண்டேய, உன்னுடைய குலத்தினருள்ளே இத்தகையவரத்தின் பயனை உன்னைப்போன்று பெற்றார் யாருமில்லை, நினக்கு அருமையானதொன்றுள்ள தென்பது கிடையாது. இந்நிலவுலகத்துள்ளவர்களிலும் ஆகாயத்திருப்பவர்க ளிலும் இன்பந்துய்க்குஞ் சொர்க்கமென்னும் உலகத்திருப்பவர்களி லும் அல்லது மற்றைய உலகத்திலுள்ள முனிவர்களிலும் உன்னை யொப்பார் யாரிருக்கின்றார்கள். நீ புரிந்ததவப்பயனைக் கருநிறங் கொண்டுள்ள கண்டமுடைய எமது பிதாவாகிய சிவனையன்றி மற்றி யாரறிவார்கள். என்றிவ்வண்ணம் பலவிதமாகப் புகழ்ந்த மாத்திர த்தில், இம்மிருககண்டமுனிவரது சந்ததியில் பிற்காலத்தில் யாவரு டைய மனதிலும் குடிகொண்டிருக்கத்தக்க ஓர்புத்திரன் யமனைச் சயிக்கவேண்டியகாரணமிருந்தலினாலே, ஆன்மாக்களின்வினைப்பகை த்தன்மையை நிவாரணிக்கும் சிவபிரான் திருவருளால்மற்றொரெண் ண முதித்தலும் பிதாவாகிய குச்சக முனிவர் தமது சிறந்தபுத்திர, ராகிய மிருகண்டேய முனிவருக்குக் கூறலாயினர். ஐயனே! உனக் குக் கூறத்தக்க தொன்றுண்டு அதனைக் கேட்பாயாக, யாராயினும் தள்ளத்தக்க தன்மை யல்லாதனவும் முறைமை யமைந்த வேதியர் கள் கைக்கொள்ளத்தக்க கடமையாயுள்ளனவுமாகிய சிறந்த நான்கு பிரிவுகளாக, புராதனமாகியுள்ள அளத்தற்கரிய வேதமுதலிய நூல்க ளிற் கூறப்பட்டுள்ளன. அந்நான்கும், நினைத்தற்கரிய பிரமசரிய

வாச்சிரமத்தி லொழுகுதலும், கிரகஸ்தாச்சிரமத்திலிருத்தலும், வானப்பிரஸ்தாச்சிரமத்தை யடைதலும், அதன்பின் பெருந்தவத்திற் குரிய சந்நியாச வாச்சிரமத்திற் கூடியிருத்தலு மென்று கூறப்படும்; இந்நான்கனுள் முதன்மையுடையதாகிய பிரமசரிய வாச்சிரமதருமத்தை இன்றையவரையிற் புரிந்தனை, நீ அந்நான்கிலக்கணங்களும் அறிவாயாகலின், அதையுனக்குக் கூறவேண்டிய தில்லை. பின்னுற்கூறிய இரண்டும் பிற்பட்டுக் கடைப்பிடிக்கவேண்டியவை, சொல்லவேலாத முதலாச்சிரமமும் நீ புரிந்ததனாலே முடிந்தது. மத்தியில் வைத்துக் கூறிய ஓராச்சிரமத்தின் கடமையை இக்காலத்தில் தொடங்குதல் வேண்டும், ஆதலால் பரிசுத்தனே அவ்வாச்சிரமத்தி னொழுக்கத்தை நடாத்துதற்கு மனங்கொள்வாயாக வென்றனர். இவ்வகையாக வக்குச்சகர் மொழிய, மிருககண்டேய முனிவர் அதைக்கேட்டு, எனது தந்தையார் இவ்விடத்தில் எனக்கு இனிமையான ஒருண்மையைக் கூறினரென்று, தமமுடைய மனத்திற்றோன்றிய புன்முறுவல் செய்து, தீவினைகளற்ற தவத்தராகிய தேவரீரும் புத்திரனாகிய ஒருவனுக்கு இவ்வார்த்தைகூறுதல் முறைமையோ என்றனர். பின்னும் அறியாமையை யுண்டாக்கும் பிறவிக்கடலைக் கடக்கின்ற ஞானத்தைத் தெளிந்தவராகலின், பிரியமுள்ள குமாரராகிய • கவுச்சிகரென்னும் பெயரிய அம்மிருககண்டேய முனிவர், தந்தையாகிய குச்சகருக்கு இதனைக் கூறுகின்றனர். எந்தையே, "தாரதனமிகு மென்னிற்றனையாகு மப் பாசந்தனைத்துக் கொண்டா, லாரதனையறுத்தாலும் விரகுடை யாரறிவிலாராசை விஞ்சிக், கூரிதயமப்போகத் தழுன்றழுக்குங் கொடுந்துயரைக் குறித்தபோதே, நீரதைபாமறிஞருக்கு விரத்தியுளதாய்ச் சித்தந்தெளியுமன்றே" எனக்கடத்தரிதாய்த் தொன்று தொட்டுவந்த பாசப்பிணிப் பறுக்கவிரும்பிய அடியேன், பின்னரும்மணமென்னும் பாசத்தாற் கட்டுப்படுவேனாயின், "தந்தைதாய் தன்னுடன் றோன்றினர் புத்திரர் தாரமென்னும், பந்தநீங்காதவர்க்கு[illegible] போக்கில்லெனப் பற்றினையே, வெந்தநீறுடியாராதியார் சோதியர் வேதகீத, ரெந்தையாரூர் தொழுதுய்யலா மையல்கொண்டஞ்ச னெஞ்சே" என்றவிதிப்படி, தனக்கிணைதானேயாய சிவபிரானையானெவ்வண்ண மடியேனடைந்துய்வேன், அக்காலத்து அடியேன் துன்பக் கடலில்வீழ்ந்து வருந்துவேனே. வேறுயாதோர் துணையின்றித்தன திரண்டுகைகளே பற்றுக்கோடாகத் தவழ்ந்து செல்லுவன் ஒருவன் அக்கைகளுக்குமோர் ஊறுபாடு நேர்ந்தாலவனுயிர்தரியான், அவனைப்போல நானும் வருந்துவேனே "ஒன்றோர்த்தெற்று முவந்தாரையாக்

கது, மெண்ணிற்றவத்தான்வரும்'' எனவும், "கூற்றங் குதித்தலுங்
கைகூடு நோற்றலி, னாற்றலைப்பட்டவர்க்கு'' எனவும் தேவர் விதித்
தபடி எல்லா வல்லபத்தையு மடையும்படி செய்யாநின்ற தவத்தினை
யல்லது "குடும்பயாரந்தலைக் கொண்டவர்க்கல்லல், றிடும்பரி சின்
மையாலுந்தீபற, மெய்யுணர்வெல்லாமுந்தீபற'' எனப்பொய் நிறை
ந்துள்ள இல்லறத்தை மேற்கொண்டா நம்முடைய வினைகளைப்போ
க்கிக்கொள்வது. அப்படிச்செய்தல், விசேத்த தெளிவான நீரிருக்கவும்
சேறுயிருக்கும் கொஞ்சஞ் சலத்தில் சரீரத்துள்ள அழுக்கைக்
கழுவுந் தொழிலைப்போன்றதல்லவா "சிறும்வினையது பெண்ணு
ருவாகித் திரண்டுருண்டு கூறுமுலையு மிறைச்சியுமாகிக் கொடுமை
யினாற், பீறுமலமு முதிரமுஞ்சாயும் பெருங்குழிவிட், டேற்றங்கரை
கண்டிலே னிறைவாகச்சி யேகம்பனே'' எனவும், "பெண்ணென்று
ரைக்கிற் பிறப்பேழுமாற்றுய, மெண்ணென்ற நல்லோர் சொலெண்
ணிலையே'' எனவும் விதந்தபடி நிலவுலகத்துள்ள அளவிறந்த பெரும்
பாதகங்களைப் பெண்வடிவமாகப் பிரமன் சிருட்டித்தனன், தேவரீ
ரதை யறிந்திருக்கின்றீர். அம்மாதர்களை மனதில் நினைத்தவால்
விளைகின்றபாதகங்கள் எழுபிறப்பினுந் தீருவதோ. "ஆமுனிச்சையே
மேனு மேலும் பிறப்பளிக்கும் வித்தென நெஞ்சே, நீமறித்திடாசை
க்கடல் தவறுமேனினை வெனுந்திரைமாயும், போமிறந்தெலா நினைவு
மெப்பொழுதிலப்பொழுது பூரணமாய, சோமசேகரத்தெந்தை பொ
ற்கழலையுந் தொழுலை யமிலைநாமே'' எனவும், "பெண்ணாகிவந்தொரு
மாயப்பிசாசம் பிடித்திட்டென்னைக், கண்ணால் வெருட்டி முலையான்
மயக்கிக் கடிதடமாம், புண்ணாங்குழி யிடைத்தள்ளி யென்போதப்
பொருள்பறிக்க, வெண்ணாதுனை மறந்தே னிறைவாகச்சி யேகம்ப
னே'' எனவும் வகுத்தபடி ஆவல்கொண்டு சுழலுகின்ற ஐம்புலன்க
ளென்னும் பூதங்களிழுத்தலால் துக்கித்திருக்கும் அற்பத்தன்மைய
னாகிய யான், மகளிர்களென்னும் பிசாசம் வந்து என்னைப்பிடித்துக்
கொண்டால் என்செய்வேன், ஐயோ! எனக்குத்தானோ இதுவரும்.
"அம்பிதுணையாக வாறிழிந்தவாறொக்குங், கொம்மைமுலைபகர்வார்க்
கொண்டாட்ட-மிம்மை, மறுமைக்கு நன்றன்று மாநிதியம்போக்கி,
வெறுமைக்கு வித்தாய்விடும்'' எனமாதர்கள் விருப்பம, ஆண்மக்க
ளுக்குப் பலகாலமும் இம்மையில் துன்பத்திலழுத்தும், மறுமையில்
பெரியநரகத்துய்க்கும் எக்காலத்திற் சுகம்பாவிக்குமோ. நாயானது
தன்பற்கள் மிதவும் அசையும்படி ஊனற்ற எலும்பைக்கடித்தால்
மிக்கமதுரமும் பெறுமோ, அதுபோல, துன்பத்தையநுபவிக்க வே

ண்டிபதியினைச் சம்பந்தமுடையவர்கள், இன்பமனுப விப்பவர்களைப் போன்று, மாதர்கள் கண்வலையிற் சிக்கினார்கள். "பைந்தொடியார் ராஜசநோய்கம்பிரமனிதரையும்பதுமந்தன்னை, முந்திரவிகதிர்போல மிளிர்விக்கும் கனலிடியு முனைக்கூர்வாளும், வெந்த விருப்புப் பொறியுமெனக் கொடியமன வேட்கைமேருவொத்த, சுந்தரஞானியர் தீரர் சூரரையெல்லா மிமைப்பிற்றுரும்பு செய்யும்" என்றபடி, மைதீட்டிய கூரியவேல்போலும் கண்களைப்படைத்த மாதர்மீதுண்டாகும் பேராசையானது, ஒருவர் மனதிற் பிரவேசிக்குமாயின் மீண்டும் ஒழியுந் தன்மையுடையதோ. குறைவுபடாமல் அவர் பிராணனை எக்காலத்தும் வதைத்துக்கொண்டேயிருக்கும், ஆதலால், இதைப்பார்க்கினும் விஷமே நல்லது, அது ஓர்தினங்கூட வருத்தாது. "அத்திமலரு மருங்காக்கை வெண்ணிறமுங், கத்துபுனன் மீன்பதமுங் கண்டாலும்பித்தரோ, காணார்தெரியற் கடவுளருங் காண்பரோ, மானார் விழியார் மனம்," "நாவாரவேண விதஞ்சொல்லுவாருனை நான்பிரிந்தாற், சாவேனென்றே யிருந்தொக்க வண்பார்கள் கைதான் வறண்டாற், போய்வாருமென்று நடுத்தலைக்கேகுட்டும் பூவையருக், கேவார் தலைவிதியோ விறைவாகச்சி யேகம்பனே" என்றும், "நாட்பட்ட கமல மன்னவிதயமேவு நறுந்தேனை தன்மார்க்க நாரிமார்கள், வாட்பட்ட காயமிந்தக் காயமென்றேவன் கூற்றுமுயிர்பிடிக்க வருமந்நீதி" என்றும் பெரியோர்கள் கூறியபடி, இந்நிலவுலகிற் பிறப்பிறப்பிற் றடுமாற்ற முறுபவர்களனைவரும், சொல்லுவதொன்றாகவும் எண்ணம் வேறொன்றாகவும் தொழில் மற்றொன்றாகவும், அறியாமை நிலைமையையே கடைப்பிடியாகக்கொண்டு பெரும்பாதகங்களைப்புரிகின்ற மகளிர்களின் கண்வலைக்குள்ளாகி அறிவிழந்தவர்களல்லவோ. அப்படியிருந்தாலும், "பெண்ணிற் பெருந்தக்க யாவுளகற்பென்னுந், திண்மை யுண்டாகப் பெறின்" என்றதேவர்மொழிப்படி இந்நிலவுலகில் அருமையான கற்புநிலைமையைப் படைத்த மாதர்களில்லையோவென்று கேட்பீராயின், தலைவணங்கிய தங்கள் கணவனொழுக்கத்திற்றவராத தேன்போலும் இனிமை யமைந்தவார்த்தையுடைய மாதர்களுமசிலருண்டு "அணங்குநோயெவர்க்குஞ் செய்யுமனங்கனை லலைப்புண்டாவி, யுணக்கினு ருள்ளஞ் செல்லுமிடனறிந்தோடிச் செல்லா, குணங்குல மொழுக்கங் குன்றல் கொலைபழி பாவும்பாரா, விணங்கு மின்னுயிர்க்கு மங்கே யிறுதிவந் துறுவ தெண்ணா" எனவும், "உள்ளினுஞ் சுட்டிடு முணருங் கேள்வியிற், கொள்

ளினுஞ் சுட்டிடுங் குறுகிமற்றதைத், தள்ளினுஞ் சுட்டிடுந் தன்மை யினாற், கள்ளினுங் கொடியது காமத்தீயதே "என்றார் பெரியரும். ஆதலால், வீசுகின்ற காற்றிலே ஓர் நெருப்புப் பொறியை மூட்டினால் கூட்டமாயிருக்கும் பிரகாசம் மேலேவீசி, நெருப்பு அதிகப்பட்டு, பற்றக்கூடாத பலவற்றினுஞ் சென்று பற்றிக்கொள்ளும். இவ்வுலகத் தில் ஓர் பெண்ணைக் கலக்கின்ற ஆசையும் அதற்கொப்பென்னலாம். மாதர்மயக்கத்தால் "நின்றவாசவன் முகத்தினை நெடுந்தவனோக்கி, யின்று சாம்பர் செய்திடுகு வனிந்திரனை, யொன்றுவேட்டு வந்தா ய்க் குடன்முழுவதும் யோனி, நன்றுமேவுகவெனப் பெருஞ்சாப நாட்டினால்" என்றபடி, சந்திரனுக் கொப்புமை கூறத்தக்க அழ கிய முகமும் பசியவளைய லணிந்தகைகளுமுடைய மகளிர்கள்பலரும் பக்கலில் நெருங்கவிருந்த, வேல்போலும் கண்களைப்படைத்த கௌ தமமுனிவரின் பத்தினியாரால் இந்திரனுக்கு எக்காலமு மொழியாத தபரோடபெடிய பழியொன்றடைந்தது. மேலும் "ஊருமெழுந்த வுநகெழுகு சந்திக்கு, நீருட்குளித்து மயலாகு நீருட், குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன்றேறி, யொளிப்பினுங் காமஞ்சுடும்" என்றவிதி யின்படி வளைவாகிய அர்த்தசந்திரனையொத்த நெற்றியையுடைய மக ளிர்கள் கூட்டத்திற் கெல்லாம், தானே முதன்மை யமைந்த தலைவியா யிருக்கும்படித் தன்கைகளாற் சிருட்டிக்கப்பட்ட மான்போலும் பார்வையையுடைய திலோத்தமைக்கு முன்பாக, இணையற்ற தாம ரையாதனனாகிய பிரமனே காமுற்று அவள் சென்ற நாற்றிசையி லும் ஓடிப்பார்த்துத் திசைமுகனாயின னென்பதை நாமறியாததல்ல வே. "ஒருகோட்டுக்கலை முனியு மொளிதிகழுங் கடலாடை யுடுத்த கோவும், மருமலர்வாழ்திசை முகனும் வானவர்கணாயகனு மயிடன் றானும், கரியசிறத் திருமாலும் வாலியும் பாராசனுமே காமனம்பாற், பெருமை யிழந்தனரென்றாற் சிறுமனிதர்க் கெப்படியோ பேசுங்கா லே" என்றவாக்கின்படி, மயக்கம்புரிவதாகிய காமத்தினால் மற்றை யமுனிவர்களும் தேவர்களும் அடைந்துள்ள செய்கைகளனைத்தும் சொல்லினும் அளவுபடாததாகும். அஃதெல்லாம் நிற்க, திருத்தமா கிய ஆபரணமணிந்துள்ள மகளிர்கூட்டம் பெறும்படியான இல்லற வொழுக்கம்பூணேன். ஆனால் அடியேன் மேம்பட்ட தவத்தினைச் செய்து எனது பிறவியை ஒழிப்பேன். "கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினு, நள்ளேனினதடியாரொ டல்லானர கம்புகினு, மெள்ளேன்றிருவருளாலே யிருக்கப்பெறினிறைவா, வுள் ளேன் பிறதெய்வ முன்னையல்லா தெங்களுத்தமனே" என்றமற

மொழிப்படி, ஆபரணம் பூண்டுள்ள மலைபோலும் திண்ணிய புயங்களைப் படைத்த இந்திரன் முதலியோருடைய செல்வமும் விரும்பேன், இல்வாழ்க்கை யென்னும் கொடிய சிறைச்சாலையிலும் புகமாட்டேன், மாட்சிமையின் மேம்பட்ட ஐம்புலன்களால் அழிவதாகிய அஞ்ஞானத்தை யொழித்து, தவமெனக் கூறுகின்ற பெருஞ்செல்வத்தை யடைந்து இன்பமடைந்திருப்பே னென்றனர். இவ்வாறான பலவார்த்தைகளைக் கூறியமாத்திரத்தில் அவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த குச்சகமுனிவர் இந்நிலவுலகம் மதிக்கும் பொருட்டுச் சொல்லப்படுகின்ற இல்லறதருமத்தைக் குற்றமுள்ளதென் றிகழ்கின்றான். நான்கு வேதங்களின் முடிவையும் அங்கீகரிக்க வில்லை. தபோ விச்சை கொண்டனனென்று துயரடைந்து கூறலாயினர்.

"இல்லற முயன்று கடன்மூன்று மினிதீர்ந்தா, லல்லலறமேவு மெதியாகி யமர்சிற்பார், முல்லை நகைமாதர் கடிமுற்றிய தினத்தி, னெல்லையெதியாகி யுணர்வுற்றிடலுமாமால்" என்ற விதியின்படி ஓ! புலத்திய முனிவரைப்போலும் மேன்மையையுடையவனே ஒப்பற்ற மங்கல மமைந்த பொன்னா பரணங்களணிந்துள்ள ஓர் பெண்ணை விவாகமுடித்து அவளைத் தழுவி நமது குலமுறைமையை முறைப்படி பாதுகாப்பதற்காகப் புத்திரர்களைப் பெற்ற பின்பல்லவா, நல்ல சிறப்புடைய தவத்தைச்செய்து யாவராலு மடைதற்கரிய முத்தியின் பமடைதல் வேண்டும் "தம்பொருளென்பதம் மக்களவர் பொருடந்தம் வினையால்வரும்" எனவும் "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த, மக்கட்பேறல்லபிற" எனவும், "எழுபிறப்புந் தீயவை தீண்டாபழி பிறங்காப் பண்புடைமக்கட் பெறின்" எனவும் விதியாகையால் உலகத்துள்ள மக்கட் பரப்பைப்போல உணர்விழந்து மயங்குகின்றகாமவின்பத்தை நீ அநுபவிப்பதற்காகவா நான் கூறினேன், முன்னிறந்துள்ள நமதுகுலப்பெரியோர்களுடைய துயரத்தையும் நரகப்பிராப்த்தியையும் நீக்கத்தக்க பழைமையைக் குறித்து அன்புள்ள புத்திரர்களைப்பெறுவதற்காகவே, ஐயனே ஓர்பெண்ணைக் கைக்கொள்ளக்கடவாய். அழகு விளங்குகின்ற சிவந்தவாயையும் சிற்றடியையும் உடைய குழந்தைகளைப் புத்திரரென்று கூறுகின்ற சொல்லுக்குள்ள பொருளுணிலைமையை மறந்துவிட்டனைபோலும். இத்தன்மையைக் குறித்து இல்லறவொழுக்கத்தை மேற்கொண்டிருத்தல் உத்தமமார்க்கமாகும். தவத்தின்முறைமையும் அதுவேயாகும். அப்பனே, நீ இப்பொழுதே மேம்பட்ட தவவொழுக்கம் பூண்டொழுக

னைத்தல், திரட்சியுடையதாய் அதியுன்னத மமைந்த ஓர் மலையின் சிகரமென்னும் குன்றிலேறுவதற் கவாவுள்ளவர்கள் அம்மலைக்குப் பொருந்தியுள்ள சாரலையடைந்து படிப்படியாகப் போவதேயல்லது அவ்வுச்சிக்குப்போக ஒரேதடவையாய்ப் பாயுந்தன்மைக்குச்சமான மாகும். விருக்ஷங்களினும் அத்தகைய பிறபொருள்களினும் விசேடமாக விளையும் பிரயோசனத்தைக் கைக்கொள்ளுதற்கல்லவா அவைகளை நீக்கமாட்டார்கள். அதுபோலச் சிறப்பமைந்த இல்லறதருமத்திலேனும் புத்திரனைப் பெறும் பொருட்டு நீயும் ஓர் பெண்ணை விவாகம் முடித்து, அதன்பின் அருமையான தவத்தைப் புரிவாயாக. மேலும் இந்த இல்லறவொழுக்கத்தை முற்காலத்திலேயே சிந்திக்காமற்போயினை, இன்றையவரையில் முதனிற் செய்யவேண்டிய பிரமசாரியவொழுக்கத்தை இயற்றி முடித்தனை, இது முறைமையே, பலகாலமுஞ் சிந்தித்திருக்கும் தேவர்கட்கு யாகாதி கிர்த்தியங்களால் அவிமுதலிய சிறப்புகளியற்றலில்லை. ஆதலால் புத்திரனே, நீ இப்போதே தவஞ்செய்யும்படி சிந்திக்கத்தகுமோ. இந்திரர்கள் புகழுகின்ற பழைய கீர்த்தியையுடைய இல்லறதருமத்தைப் புரிகின்றவர்கட்கு, தங்கடங்கள் வருணாச்சிரம ஒழுக்கங்களுக் குரிய தகுதியமைந்த முன்றமைகள் வழுவுமாயினும், அவ்வழுக்களைப் போக்கற்குரிய கழுவாய்க ளுள. தவம்புரிவோர்க்கு அத்தகைய வழுக்கள்நேரின், மலையுச்சியினின்றும் தவறியதுபோலப் பிழைத்தலரிதாகும். சுழித்தலையுடையதாய்ச் சூழ்ந்துள்ள பிறவி யென்னும் அலையிலசைப்பட்டுச்சோர்வடைந்து அழிகின்ற துயர்க்கடலைக் கடக்க வேண்டியதே யாயினும், கழியவேண்டிய நாளிலல்லது அதிவிரைவில் துறவடையலாகுமோ. முன்னுள்ள உனது பெரியோர்களின் முறைமைப்படி அவ்வில்லற தருமத்தை நடாத்தக்கடவாய். பார்வதியாருடன் சேர்ந்து முற்காலத்தில் அழிதற்கரிய புவனம் முதலிய சராசர வுயிர்களை யளித்த சிவபெருமான், தேவர்களும் முனிவர்களும் சிவந்த கண்களைப்படைத்ததிருமாலும் பிரமனும் மற்றுள்ள அனைவரும், பத்தினிமாருடனே இல்லறதருமத்தில் நடக்குந் தன்மையடையும்படி கற்பித்தன ரல்லவா, என்னை, “தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற்றம்பலவன், பெண்பாலுகந்தான் பெரும்பித்தன் காணேடீ, பெண்பாலுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர், விண்பாலியோகெய்திவிடுவர் காண் சாழலோ” என்றாராகலின். பண்டைய முறைமையைத் தெளிந்துள்ள தூய்மையுடையவனே, அச்சிவபெருமான் விதித்துள்ள வாய்மைந் தடுக்கற்க, தவமார்க்கத்தை

யே விரும்பி எனது வார்த்தையை வெறுக்கற்க, பசைக்கும்படியாக முனியற்க, வேறோர் வார்த்தையும் மறுத்துரையற்க, எங்களை யிப்பேழுதே துறக்கற்க, வசிட்டமுனிவர் என்பவர் பொன்போன்ற அழகினையுடைய அருந்ததியென்னும் தேவியைவிட்டுப் பிரியாமல் பக்கத்திலேயே யிருக்கும்படி வைத்துக்கொண்டிருந்தும், விசேடித்த தவ விரதத்தை மேற்கொண்டிருக்கின்றனர். அதுவல்லாமலும் பெருமைமிக்க நிலவுலகத்தில் அவர் பழிப்படைந்த துண்டோ. தளர்வுற்ற ஜனன துக்கத்திற் சம்பந்தமற்ற பரிசுத்தர்கள் விருப்பு வெறுப்பற்றால், எக்காலத்தினும் இளமையமைந்த மாதர்களுட னிருப்பினும் பெருந்தவம் புரியினும் அவர்களுடைய வியப்படைந்துள்ள மனத்தினுதித்த மெய்யுணர்வு வேற்றுமையடையுமோ. என்னை, "சீரக்கிரத்தேயதீதத்தைப்புரிந்தவர்களுலகிற்சர்வசங்கநிவிர்த்தி வந்த தபோதனர்களிவர்கள், பாக்கியத்தைப் பகர்வதுவென் னிம்மையிலேயுயிரின் பற்றறுத்துப் பரத்தையடையாவுசிவரன்றோ, வாக்குமுடிகவித்தரசாண்டவர்களரிவையரோ டனுபவித் திங்கிருந்திடினுமகப்பற்றற்றிருப்பர், நோக்கியது புரியாதோர் புறப்பற்றற்றாலுநுழைவர் பிறப்பினில் வினைகளுங்கிடாவே" என்றாராகலின். மேன்மை யமைந்த தன்மையால் திருமணம் முடித்த ஓர்பெண்ணைச் சேர்ந்தால், தானமுண்டாகும், அத்தானத்தால் தபோமார்க்கம் வாய்க்கும், அத்தவப்பேற்றால் சொர்க்காதி போகங்களும் கிடைக்கும், நிலவுலகத்தினும் கீர்த்தியுண்டாகும், யாதோர் பழுதுமுண்டாகாது, அருமையான தொன்றுமில்லை. என்னை, "கருமத்தான் ஞானமுண்டாங்கருமத்தைச் சித்தசுத்தி, தருமத்தாலிகந்த சித்தசுத்தியைத் தருமநல்கு, மருமைத்தாந் தருமத்தாலே சாந்தியுண்டாகுமான்ற, பெருமைத் தாஞ்சாந்தியாலே பிறப்பதட்டாங்கயோகம்" என்றாராகலின். "தெய்வந்தொழாஅள்கொழு நற்றொழு தெழுவாள், பெய்யெனப் பெய்யுமழை" என்றபடி, யாவராலும் காணுந்தன்மை வாய்ந்த தங்கள் கொழுனர்களைத் தெய்வத்தைப்போல் விரும்புகின்ற கற்புள்ள மாதர்களின் உண்மைவாக்கியத்தில், இந்நிலவுலகத்தில் விளங்கும் தெய்வீகமும் சிறந்த மேகமும கட்டுப்பட் டிருக்குமென்றுசொல்வோமாயின், ஆண்மக்களும் அத்தகைய கற்புள்ள மகளிர்கட் கொப்பல்ல. ஓர் பெண்ணுடன் கலந்து இன்பமடைவதாகிய இல்லறத்தைமுதலில் நடாத்தாமல், பரிசுத்தமாகச் சிறந்த தபோமார்க்கத்தைத் தொடங்குவாயாகில், மாயையின் மேம்பட்டதாகிய காமமென்னும் விடம்வந்து சேர்ந்தால், அம்மா ! சிருட்டித் தொழி

லைமேற்கொண்ட பிரமனே பரிபாலிக்கினும் அக்காமத்தை விலக்க முடியுமோ. என்னை, "உண்டார்க்கன்றியுட் பசியோயுமோ, கண்டவர்க்கன்றிக் காதலடங்குமோ, தொண்டருக்கெளியானென்று தோன்றுவான், வண்டமிழ்க் கிசையாக மதிக்கவே" என்றும், "நாணியென்பதை நாரியென்றுரைத்திடு நசையால், வேணுவானது வளைந்துபோய்ப் புகுந்தது வென்றாற், காணலாவதோ ருருவமெய்ந்நாரியைக்கண்டால், பூணுவார் மயல்காளைய ரென்பதும் புதிதோ" என்றும் பெரியருரைத்தா ராகலின். "துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கு மிறந்தார்க்கு மில்வாழ்வானென்பான் றுணை" என்றும்," தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கறுனென்றாங், கைம்புலத்தாறோம்பறலை என்றுமுணர்த்தியபடி, துறவாச்சிரமத்தையுடையோர்கட்கு வேண்டியதாயுள்ள நிகரற்றதாய் அனுபவிக்கத்தக்க பொருள்களைக் கொடுத்து, இறந்தவர்களாகிய தென்புலத்தார்கள் விரும்புகின்ற சிறந்த கடன்களைச்செய்து, பலவித தருமங்களையும் புரிந்து விருந்துபசரித்தலாகிய முறைமையைத் தவிர மானிடராய்ப் பிறந்த தன்மையானுண்டாகும் பெரும்பயன் யாது. மேன்மையான வல்லபமுடைய ஆண்மக்களும் மிருதுவான தன்மையைப்படைத்த மாதர்களும், மனம்பொருந்தி நன்மையும் தீமையும் புரிவது ஊழ்வினை செலுத்தியபடியே யல்லது வேறில்லையாகும். அதெப்படியெனில், பயிர்செய்வோர் சிறந்த வயலில் விதைத்ததின் பிரயோசனத்தை யல்லது வேறொன்றைப் பெறலாகுமோ. என்னை, "உள்ளதொழிய வொருவர்க்கொருவர் சுகங், கொள்ளக் கிடையா குவலயத்தில்-வெள்ளக், கடலோடி மீண்டுகரையேறினாலென், னுடலோடு வாழுமுயிர்க்கு" என்றாராகலின். நல்ல தவமாகிய இல்லறதருமத்தை நடாத்திய பிறகு, உறவினர்கள் நீங்கும்படி துறக்கின்ற துறவே துறவாகும், அவ்வில்லறதருமத்தை நீ இயற்றுவையாயின் உனக்குக்குற்றம் வராது. நம்மாணைப்படி அத்தகைய இல்லறதருமத்தை மறுத்துக்கடக்காதே என்றுரைத்தனர். என்னை, "பாரனைத்தும் பொய்யெனவே பட்டணத்துப் பிள்ளையைப்போ, லாருந்துறக்கை யரிதரிது-நேரே, மனத்துறவுமப்படியே மாணுவிலற்றி, னுனக்கிசைந்தவாறென்றே யோர்." என்றாராகலின்.

அவ்வாறான பலவற்றைச் சிறந்தகுச்சகமுனிவர் கூறியவளவில், அவற்றையுணர்ந்து, இவர்சொல்வது புராதனமாயுள்ள வேதமுதலிய கூறிய நிச்சயப் பொருளென்றார், சர்ப்பாபரணமணிந்த சிவபிரான்

கட்டளையுமென்று கூறினர். இனிநாம் சொல்வதென்ன வென்று நினைந்து வருந்தி நின்றனர். தங்கள் தங்கட்குரிய அன்புள்ள இருமுதுகுரவர்கள் அழிவற்ற செல்வங்களைவிட்டுக் கடலில் வீழ்வாயாக்வென்று கட்டளையிடினும், அன்புடனே அவ்வாறு செய்வதே புத்திரர்களுடைய கடமையாகும், இது நூதனமல்லவே, ஆதலால் இவர் சொல்லும் வார்த்தையைத் தடுக்கமாட்டேன். நானும் சம்மதிப்பேன். என்னை, "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை, தாய்சொன்மிக்க வாசகமில்லை" என்றாராகலின். பிதாவாக்கியத்தைப் பேணாதவர்களும் மாதாவாக்கியத்தை மறுததவர்களும் ஆசாரியர் ஆக்கினையைக் கடந்தவர்களும், யாவரும் வந்திக்கின்ற வேதமார்க்கத்தை மாறுபடுத்தினவர்களும், அவியாத சிவந்த அக்கினிமயமான நரகத்திலே வீழ்வார்கள். ஆதலால் பிதாவார்த்தையைத் தள்ளுதல் நீதியல்லவென்று நிச்சயித்து, குற்றமற்ற குணத்தின் மேம்பட்டகுச்சகமுனிவருடைய அழகிய பொன்போலும் திருவடிகளிற்பணிந்து, சினங்கொள்ள வேண்டாம், தேவரீர்கட்டளைப்படி யொழுகுவேன், ஆயின் அடியேன் தேவரீருக்குக் கூறவேண்டிய தொன்றிருக்கின்றதென்று கூறலாயினர். தன்வார்த்தையைக் கேளாதமனைவியுடன் கூடிவாழ்தலினும் கொடிதாகிய நரகத்தில் விழுவதே சிறநதது. அப்படிப்பட்டமனைவியரோடு கூடிவிரும்பி யிருக்கும் கணவர்கட்கு வேறோர் யமனுண்டோ நோயுமுண்டோ. என்னை, "பத்தாவுக்கேற்ற பதிவிரதையுண்டானால், லெத்தாலுங் கூடியிருக்கலாகுஞ்-சற்றேனு, மேலறுமாறாகவிருப்பளேயாமாயிற், கூறாமற்சந்நியாசங்கொள்," "கொடியது கேட்கினெடியவெவ்வேலோய், கொடிதுகொடிது வறுமைகொடிது, அதனினுங் கொடிதிளமையில் வறுமை, அதனினுங் கொடிது ஆற்றொணாக் கொடுநோய், அதனினுங் கொடிதன்பிலாப் பெண்டிர், அதனினுங்கொடி, தின்புறவவர் கையிலுண்பது தானே" என்றாராகலின். அடியேன் வார்த்தையிற் சற்றும் குறைபாடின்றிப் பொருந்தியுள்ள இலக்கணங்களமைந்த பெண்ணிருப்பாளாயின், அப்பெண்ணையான் அக்கினியின் முன்னே மணஞ்செய்வேனென்று மிருககண்டேயமுனிவர் கூறியவார்த்தையைக் கேட்டுக் குச்சகமுனிவர் மனங்களித்துக் கூறுகின்றனர். எனது வாக்கியத்தைத் தடுக்காமல், மனத்திற்பதியக் கொண்டனை யாகலின், நானும் வாழ்வுற்றேன் எனதுறவினரும் ஈடேறினர், தவஞ்செய்துன்னைப் பெற்ற மாதாவும் வாழ்வுற்றனள், தவவிரதங்களும் நிலைத்தன, மேம்பட்ட கிருபையும் அவ்வாறே யோங்கின, தேவலோகங்களுந் தழைத்தன, நிலவுலகங்

னும் விர்த்திக்தன, இந்திரனென்னும் பெயருடன் வாழ்ந்திருக்கும் தேவர்கள் தலைவனும் ஈடேறினன். உனக்குவேண்டிய விருப்பத்தைக் கூறுவாயாக, மைந்தனே! நீ கூறிய இலக்கணங்க ளனைத்தும் அமைந்த குற்றம் சற்றேனுமில்லாத நிகரற்ற ஓர்பெண்ணை இந்நிலவுலகத்தில் தேடி உன்னிடத்திற் சேர்ப்பேன், அவ்வாறு செய்யாமற் போவேனாயின் குறைந்துதேய்ந்து போகின்றதேய்பிறைச்சந்திரனையேபோல, எனது தவம் அழியக்கடவது என்றுரைத்தனர். இத்தன்மையாகக் குச்சகமுனிவர் சபதவார்த்தை கூறியவளவில், ஆதிகாலத்திற் றவஞ்செய்கையால் திருமால்தரித்த உண்மைப் பெயரைப் பூண்டுள்ள அப்புதல்வர், அப்பிதாவின் அழகிய திருவடிகளைச் சிரத்திற் கணியாகத்தரித்து, ஒரே பேறானபுத்திரனாகிய அடியேன் ஈடேறுங் காரணமாக இச்சபதங்கூறினீர், தவத்தின் முதன்மைபெற்ற முனிவர் தேவரீராகலின், உமக்கருமையாயிருக்கும் ஓர் பொருள் திரிலோகங்களினுமுண்டோ. அவ்வாறாயினும் அடியேன் சொல்லவேண்டியவையுசிலவிருக்கின்றன. அவையாவன,

ஒரேகோத்திரத்திலுதித்தவளையும், தேகத்தில் கொடிய வியாதியையுள்ளவளையும், பழிமொழியினையுடைய குடும்பத்திற் பிறந்தவளையும், விரும்பத்தக்க பெருமையையில்லாத பெண்பிள்ளையையும், பாம்பின்பெயரினையும், பறவைகளின் பெயரினையும், மலையினது பெயரினையும்; நட்சத்திரங்களின் பெயரினையும் வாய்ந்த பெண்களையும் விவாகஞ்செய்யலாகாது. அமிர்தத்தைப்போன்ற தண்ணிய சொல்லினையுடையவளாய், அழகினில் இலட்சுமியைப் போன்றவளாய், அநேகம் பிள்ளைகளுக்கு இளையவளாகி நறுமணம் கமழப்பெற்ற தேகத்தையுடைய பெண்ணை விவாகஞ்செய்தலே கடமையாம். தனக்கொத்த குலத்தன்றி மேம்பட்டகுலத்திலும், கீழ்ப்பட்டகுலத்திலும், வழிமுறையில்லாத மிகத்தாழ்ந்த குலத்திலும் பிறந்தபெண் அழகுள்ளவளென்று கருதி விவாகம் முடிக்கில் அம்மகன் நரகத்தையடைவன்.

பரிசுத்தம் பொருந்திய சிவந்த பாதங்களையும், அப்பாதங்களில், குடை, சக்கரம் முதலிய மெய்மையாகிய ரேகைகள் விளங்கியிருத்தல் மேன்மையுடைத்து. உயர்ந்த நடுவிரலுள்ள ரேகைகள் மேனோக்கி வளர்ந்திருக்குமாகில், இலக்கணங்கள் முழுதும் நிறையப்பெற்ற இலட்சுமியினதருள்வந்து பொருந்தும். பாம்பைப்போலும், பிரயோசனமற்ற ரேகைகள்பொருந்தியிருந்தால் தரித்திரமுள்ளவர்க

ளாவார்கள். வேலைசளுக் குபயோகமுள்ள பாதங்களின் பெரு விரல்கள் இரண்டும் திரண்டு பெருத்திருக்குமாயின் இலட்சுமிதேவி வந்து பொருந்துவள். அவ்வகையான விரல் விலகி யிருந்தாலும், அளவுக்கு அதிகமாக நீண்டிருந்தாலும் செல்வம் நீங்கிவிடும். பாத விரல்கள் ஒன்றின்மே லொன்றேறிப் பொருந்துமாயின் இனிமை யாகிய கணவன் இறப்பன். அவைகள் அகன்றிருந்தால் செல்வம் நீங்கும். பொருந்தி யிருக்கப்பட்ட கடைவிரலானது நிலத்திற்றாக்கா திருந்தால் விவாகம்பொருந்தும். நரம்புகள் உயர்ந்திருந்தால் ஊர் கள்தோறுந் திரிவள். வளர்ந்திருந்தால் பிச்சை புகுவள். கோல் போன்று உயர்ந்திருந்தால் சிறப்பில்லையாம். பூமியில் நடக்குங்காலை யில் தூசு எழும்பும்படியாக நடந்தால் மூன்று குலமும் நசித்துவிடும். மேலும் மேலும் வரவாய்ப் பெருத்து வாரால் மீன்போன்று பொருந்தி யிருக்கப்பட்ட மயிர்த்திரளானது வெளிபிற், றோன்றுத கணைக்கா லுடையாளானால் அரசற்கான மாதாவள். வயிறானது மேன்மையா யிருக்குமாகில் செல்வத்தையுடைய மக்களைப்பெறுவள். அவ்வயி றானது பரந்திருந்தால் சிறைச்சாலையை யடைவள். மிகவும் தொங் கினால் தான்போய்ப் பொருந்தும்படியான கணவனைக் கொன்றிடு வள். பெண்களுக் கிருக்கும்படியான மயிரொழுங்கானது மேன் மையானதாகிப் பிரகாசிக்கின்ற நீலநிறமான வோர் கொம்பைப் போன்றிடி னம்மாது இலக்குமியின்மிக்க சிறப்பினை யுடையளாவள். அவ்வகையான மயிரொழுங்கு வளைந்திருந்தால் விதவையாவள். சிவ ந்திருந்தால் பொறாமையுடையளாவள். அது நடுநடுவில் சிதைந்து போ யிருந்தால் அழகுபொருந்திய செல்வம் நீங்கிவிடும். செப்பம் பொருந்திய கழுத்தின் அடிப்புறத்தில் எலும்பானது மேலெழும் பாது அமைந்திருந்தால் செந்தாமரை மலரில் வாழும் மகாலட்சுமி யைப்போல வாழ்வள். பரிசுத்தம்பொருந்திய யாதொரு அழகுமில் லாமல் மேலெழும்பித் தாழ்ந்து கொஞ்சமுயர்ந்திருந்தால் துக்கத் தில் அமிழ்ந்திருப்பள். மெய்மையைக் கொடுக்கும் இரண்டுதோள் களும் குறுகுதலும் நீண்டிருத்தலுமின்றி மூங்கிலைப்போன்று இர ண்டு விரும்பத்தகும் அழகானது பொருந்தியிருக்குமாகில் சிறப்பு டையதாம்.

கைவிரல்கள் உள்ளங்கையானது வரிசையால் இடைவெளி யில் லாமல் பொருந்துதல்நன்மையானதாம். புறங்கையிற்பொருந்தியிருக் கப்பட்ட எலும்புகளும் நரம்புகளும் வெளியிலெழாது மிகவும் தசை

கன் மூடிமயிரானது இராதிருந்து அளவிலடங்கா அழகினைப்பெற்ற
பிரகாசித்தால் எப்பொழுதும நிலைமையைப் பெற்ற செல்வத்தை
யடைந்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்திருப்பள். யாதொரு மங்கைக்கு
கையினிடத்துரேகைகள் பலபடவிருக்குமாகில் அவள் கைம்பெண்
ணாவள். யாதொருரேகையு மில்லாமற்போனல் செல்வம்தங்கி யிரு
க்கமாட்டாது. செவந்த நரம்புகள் உயர்ந்திருந்தால் பிச்சையேற்
றுண்புள். மலர்ந்த தாமரைப்பூப்போன்றரேகையமைந்திடில் அவள்
அரசனுக் குரியளாவள். ஆண்மக்களையே பெறுவள். சக்கரத்தைப்
போலவும், குடையைப்போலவும், ஆமையைப்போலவும் ரேகை
கள் பொருந்துமாகில் எவ்வகைப்பட்ட பாக்கியமும் நிறையப்பெறு
வள். ரேகைகள் சிவந்த கயல்மீனைப்போன் றிருக்குமாகில் நிலைபெ
ற்ற கற்புடையவளாவள். பொருந்தியிருக்கப்பட்ட வலம்புரிச் சங்
கைப் போன்றிருக்குமாயின் மின்னலைப் பிரகாசிக்கும் வேலாயுதத்
தைக் கையிலேந்தியவெற்றியுள்ள அரசனுக்குரியளாவள். ரேகைக
ளானவை, யானையைப்போலவும், குதிரையைப்போலவும், வெள்
ளிய இடபத்தைப்போலவும், தோட்டியைப்போலவும், வச்சிராயுத
த்தைப்போலவும், கொடுமையுள்ள அம்பைப்போலவும், கையினிற்
பொருந்தியிருக்கப்பட்ட சக்கிராயுதத்தைப் போலவும் காணப்படு
மாயின் அம்மங்கையானவள் அரசர்க்குரியவளாவள். கதாயுதத்தைப்
போலவும், சூலத்தைப்போலவும், வேலாயுதத்தைப் போலவும்,
கொலைத்தொழிலைச் செய்யும்படியான வாளைப்போலவும், சிறப்பினை
யுடைந்து காணப்பட்டால், ஒருவர்க்கு வந்தடையும்படியான செல்
வத்தினது குவியல்கள் யாவும் குறைவற வந்துசேர்ந்திடும். அம்மங்
கையானவள், தனது நல்ல உறவினர் யாசகர் முதலிய யாவர்களுக்
கும் மிகவும் பிரியத்துடன் நாள்தோறும் அவரவர்கள் வேண்டுவன
வெல்லாங்கொடுத்து உதவியைச்செய்து நல்லபுகழினை யடைவள்.
ரேகைகள் விஷத்தினைக்கக்கும் பாம்பு, ஒட்டகம், தவளை, வெடிப்
பினையுடைய கழுதை, கழுகு, நரி, பூனை, செந்நாய், கொடுமையை
யுடையவண்டு ஆகியவிவைகளைப்போன்றிருந்தால்வெறுப்பினையுடை
யதுன்பத்தையடைவள். நகங்கள் நீட்சியையடைந்து, சிவப்பு நிற
த்தினை யுடையதாகில் நன்மையை யுடையதாம். விரும்பப்படும் நன்
மையான பிரகாசமில்லாது பொன்னிறமுடையதாய், பள்ளத்தினை
யுடையதாய், வெண்மை நிறம்வாய்ந்தாலும் பொருந்தி யிருக்கப்
பட்டதுன்பத்தினை யடைவள். புள்ளிகளை யுடையதா யிருக்க லா
காது. பிரகாசிக்கின்ற முழங்கு, இடுப்பு, ஆகியஇவற்றின் நடுவிலுள்ள

எலும்பானது தசையால் மூடப்பட்டு மயிர்களில்லாமல் பொருந்தியிருக்கப்பட்ட அழகினைப்பெற்றால் நன்மையாம். கூனினைப்பொருந்தி வலிமைபெற்ற மயிரினையடைந்து எலும்புகளோடு பல நரம்புகள் மேலெழுந்தும், தாழ்ந்தும், உயர்ந்துமிருக்குமானால் தீமையையே யுண்டாக்கும். பெருமையாக அவ்விடத்தில் பரவியிருக்கப்பட்ட நரம்புகள் நடுவில் மேலெழும்பாது உயர்ந்த தசைகள் பொருந்தியிருக்குமாகில் நல்ல ஐசுவரியமுண்டாகும்.

மெல்லியகழுத்தானது நான்கங்குலமுள்ளதாகி, பரிசுத்தமமைந்த அழகோடு பாக்குமரத்தைப்போன்று திரட்சியை யடைந்து மூன்று •ரேகைகளைப் பெற்றிருக்குமாகில் மிகவும் பெருமையை யுடையதாம். நாடிகளானவை அழகோடு பொலிவினை யடைந்து நிலைத்திருக்கப்பட்ட இரண்டங்குல வளைவைக்குத் திரண்டிருக்குமாகில் நன்மையான இலட்சணமுடையதாம். நெருங்கியிருக்கும்படி நீட்சியை யடைந்து இரண்டுபிளவுக ளுள்ளதாய்ப் பெருமையினை யடைந்து மயிர்களானவை பொருந்தி யிருக்குமாகில் தீமையை யுடையதாம். கபோலத்தினது தன்மையைச் சொல்லுமிடத்து தசைகள் நிரம்பி அவ்விடத்தில் கண்ணாடியைப்போல பிரகாசம் பொருந்தினால் இனிமையா யிராது. மேலே மிகவும் பள்ளமாய் மயிரோடுகூட வன்மையாய்ப் பரந்திருந்தால் தீமையையுடையதாம். கிரணங்கள் நிரம்பிய பிரகாசத்தை வீசி வட்டவடிவினதாய்ப்பூரணசந்திரனைப்போல அழகானதுபொருந்தும்படி தோன்றி முற்றிய சுகந்தம் வீசுந் தாமரைபோற் சிறப்பினையடைந்த ஒளிபொருந்திய முகமிருக்குமாகில் அது நன்மையை யுடையதாம். கீழுதடானது உருண்டு பவளநிறம்வாய்ந்து நடுவினில் ஓர் இரேகை பிரகாசிக்கும்படி பொருந்தியிருந்தால், அதிகபுத்தி நுட்பத்தோடு உலகத்தைக் காத்தளிக்கு மரசர்களது மனைவியாய் சந்தோஷத்தைப் பொருந்தியிருப்பள். சிறுத்தும் மிகவும் பருத்தும் கீழாகத்தொங்கலடைந்து இரண்டுதடென்று சொல்லும்படிக்குத் தோன்றி ஒன்றே இரேகையைப் பொருந்தியிருக்குமாகில் செல்வமானது நீங்கி துன்பத்தையடையும. அவைகருமையை யடைந்து அதிகமாகப் பருத்திருந்தால் கைமமையை யடைவள். மேலுதட்டின் நடு சிறிதுயர்ந்து அழகு பொருந்தி யிருந்தால் நன்மையாம். உலர்தலையடைந்து நீட்சியான மயிர்கள் இருக்குமாகில் மிகுந்த துக்கத்தையடைந்து அதனால் வருத்தப்பட்டு இறப்பள். பிரகாசிக்கின்ற கிரணங்களை மிகவும்

பரப்பி வெண்மையை வீசி வெள்ளிய முத்துக்கூட்டங்களை வரிசைப்பட வைத்தாலென்னப் பொருந்திய முப்பத்திரண்டென்னும் கணக்கின்படி வாயினிடமாகப் பற்கள் சேர்ந்திருந்தால் மிகவும் நன்மையதாம். அப்படிக்கின்றி பரந்து உயர்ச்சியையடைந்து நீண்டு பொன்னைப்போல் பசுமையினையுடையதாகி சுற்றிலும் சரிந்து முத்தினது சிப்பியைப்போன்று இருந்தால் மிகுந்த துயரத்தை யடைந்து அத்துயரத்தால் சோர்வினையடைவள். சிவந்து குளிர்ந்த சந்திரனைப்போன்ற பற்களானவை உயர்ந்திருந்தால் பெற்றதாயினது உயிர் போகும். அதற்கு மாறுபட்டிருந்தால் கணவனுவன் இறந்துபடும். அப்படி கணவனிறவானுயின் அம்மங்கையானவள் பல புருடர்களோடு கலந்திடுவள். நாவினது அடியில் சிவந்து பிரகாசம் பொருந்தி மேன்மையா யிருந்தால் இன்பமானவைகளை அநுபவிக்காள். பொருந்திய பாம்பினது நாக்கைப்போன்று நுனியானது பிளந்திருந்தால் வெவ்விய துன்பத்தை அடையும். நிலைபெற்ற நாக்கானது வெளுத்திருந்தால் ஜலத்தி லிறந்திடுவள். கறுத்திருந்தால் மிகவுஞ் சீறிப்பாய்வள். நெருங்கி மிகவும் பெருத்திருந்தால் வறுமையையடைவள். நீண்டு உயர்ந்திருந்தால் நன்மையான பரிசுத்தம் பொருந்திய யாவற்றையும் விரும்பிச்சாப்பிடுவள். விலகி யிருந்தால் துன்பத்தை செய்யும். பொருந்தியிருக்கப்பட்ட உண்ணுக்கானது தனதிடமாய்ப் பொருந்திய சிவப்பினையடைந்து வெண்ணெயைப்போல உண்மையில் மெல்லியதாய்ப் பிரகாசிக்குமாகில் மிகவும் நன்மையாம். சொல்லப்பட்ட இக்குணங்களல்லாமல் உண்ணுக்கானது மிகவும் நெருங்கி நீட்சியை யடைந்து வளர்ந்து பொன்னிற மீள்ளதானுல் ஒப்பற்ற வேற்றூரிடத்திலெல்லாம் போயலைந்து வறுமையையடைவள். வன்மையை யுடையதா யிருக்குமாகில் உள்ளமாண்டு பயத்தினையடையும் திருடர்களது மனைவியாவள். வெளுத்திருந்தால் அணியும்படியான ஆபரணங்கள் நீங்கிவிடும். பிரகாசிக்கும்படியானகருமையை யடைந்தால் திருத்தமான கணவனைவிட்டுப் பிரிந்து மனவாட்டமுற்றுச் சோர்வினையடைவள். மூக்கானது குமிழம்பூப்போல மிருதுவாய் சற்று உயற்சியினையடைந்து வாசனை வீசும்படியான எள்ளுப்பூப்போல நீட்சியை யடைந்து தாழ்ந்து வரவர மேலேபோகும்படியாய்க் குற்றமற்ற நாசிதுவாரங்க ளிரண்டும் சிறுத்து இரண்டுபக்கங்களும் நேராகவும் சமமாகவு மிருந்தால் எல்லா தேசங்களையும் காத்தலைச்செய்து எல்லா வுயிர்களுங் கைதொழுத் தேத்திடும் செல்வத்தைப்பொருந்தி பெருமைபெற்று வாழ்வாள்.

அம்மூக்கிற்பொருந்திய நுனியானது வளைதலையடைந்து நடுவில் பள்
ளமாயும் கருமையாயும் சிறப்பில்லாமல் தேய்ந்து நுனிக்கருகிற்
பருத்திருந்தால் வைகம்பெண்ணாவள். மூக்கின்நுனி மடிப்பினையடை
ந்திருந்தால் தோழிப்பெண்ணாவள். பொருந்திய உருவமானது தேய்
ந்து மிகவும் குறுகியிருந்தால் கலகஞ்செய்பவளாவள். கன்னமானது
விளங்கி ஒளிபொருந்தியபல்லானது பொருந்தி குறைவுபடாது கண்
ணானது இடுக்கமடையாது பல்லானது முத்துப்போன் றிருந்தால்
நன்மையாம். மேற்சொல்லிய வண்ணமல்லாது வேறுமாதிரியாக
உண்டாயிருந்தால் வெவ்விய துக்கத்தையடைவள். ஒருமாதான
வள் தும்முங்காலத்து நிதானித்து மெதுவாக விருமுறை மும்
முறை தும்மல் வியாதிக்கறிகுறியாம். வேறுவகையிற் சுகமுள்ள
தேகமாகாது. நிலைபெற்ற கண்ணிலுள்ள மணியானது கறுத்து
அம்மணியிருக்கும் இடம் நீங்கலான மற்றையவிடம் வெளுத்து செ
வ்வரியானது முழுதும் பரவி, கடைக்கண்ணானது சிவப்படைந்து
பசியகுவளைப்பூப்போன்று பிரகாசித்தல் மேன்மையதாம. வேற்
படையைப்போலுள்ள கண்ணானது உயர்ந்திருக்குமாகில் ஆயுள்
குறையும். வட்டவடிவினதானால் பலபுருடர்களைச் சேர்ந்திடுவள்.
மதத்தைப்பொழியாநின்ற யானையினது கண்ணைப்போன்று சிறுத்
திருந்தால் அம்மங்கையை நீக்குதல் நன்மையதாம். மேன்மை
யாகிய புறாவின் நிறத்தை யுடையதாயிருந்தால் அழகு நிறைந்த நிற
த்தையடையும். நன்மை குணங்களொன்றும் பொருந்தாது மிக
வும் சிவந்திருந்தால் தன்னுடனிருக்கும் கணவனுடைய உயிர்போ
கும். மூழுக்கத்தையுடையதா யிருந்தால் தளர்ச்சியை யடைந்து மிக
வும் சோர்வையடைவள். பொருந்தி யிருக்கப்பட்ட கண்ணா
னது பசுவின் கண்ணைப்போன் றிருந்தால் அதிக இச்சையை
யுடையளா யிருப்பள். ஆட்டினது கண்ணைப்போன் றிருந்தா
லும், வேறுமாதிரியா யிருந்தாலும் அழகு குன்றிவிடும். இடது
பக்கமாகப் பார்வை சாய்ந்திருக்குமாகில் துயரத்தையும், தேகத்
தில் அசதியையும் அடைவள். வலதுபக்கம் பார்வைநோக்கி யிருந்
தால் மலடியாவள். கண்ணினது நிறமானது தேனைப்போன்றிருக்
கின் செல்வம்பொருந்தி புகழ்வெளிப்பட வாழ்ந்திருப்பள். பிரகாச
ம்பொருந்திய இமையின் மயிர்பருத்து மிகவும் நெகிழ்ச்சி யடை
யாது, அழகுபொருந்தினதாகி கறுத்திருக்குமாகில் மிகுந்த செல்
வத்தை யடைந்து பெருமையை யடைவள். பொன்னிறமுள்ளதாய்
யிண்டையிடையே பொருந்திய வெளியிருக்குமாகில் ஆகாது. அழகு

நிறைந்த முகத்தில் வில்லினைப்போன்று மிகவும் மெல்லியதாயி கருமையை யடைந்து, அதிகமான பிரகாசத்தைக்கொண்டு புருவங்கள் ஒன்றோடொன்று சேர்ந்து இருக்குமாகில் அழகானதாகும். பரிசுத்தம் பொருந்திய புருவத்தினது மயிர்பருமையை யடைந்து நீட்சியுள்ளதாய் அகன்று பொன்னிறமுள்ளதாகி இருக்கப்பட்டது ஒன்றோடொன்று சேர்ந்திருக்குமானல் கொடியதுன்பத்தை யடைவள். காதினிடமாக இனிமையான சுழியிருந்தால் நல்ல மக்களைப் பெறுவள். கெடுதலில்லாமல் மேலெழுந்து அழகு பொருந்திய நரம்புகளும் மயிரும் உயர்ந்திருந்தாலும் வளைந்திட்டாலும் துக்கத்துடன் தரித்திரத்தை யடைவள். அழகிய நெற்றியானது மூன்று விரலகலமுள்ளதாகி மயிரும் நரம்புமின்றி யாதொரு ஊனமுமின்றி நிலைபெற்ற கிரணங்களை வீசாநின்ற வெண்ணிறம் பொருந்திய பிறைச்சந்திரனைப்போன்றிருந்தால், சகலவளப்பங்களும் அதிகமாக நிரம்பப் பெற்று வாழ்வள். விரும்பப்படும் சோத்திரைரேகை அமைந்திருந்தால் அரசர்களுக்கு உரியவளாய் வாழ்ந்திருப்பள். நரம்புகளும், மயிர்களும் நிறைந்திருந்தால் பலபுருடர்களைச் சேர்ந்திடுவள். சிறப்பு நிரம்பப்பெற்ற சீமந்த ரேகையானது நெற்றியினிடமாகப் பொருந்தியிருந்தால் பலவகைய சிறப்புக்களெல்லாம் வந்தடையும். அழகுள்ள தலையானது அழகில் அதிகப்பட்டு இனிமையாகவும் வட்டமாகவு மிருந்தால் நன்மையான இன்பங்கள் பொருந்தும். மிகவும் பெருத்திருந்தால் கைம்பெண்ணுவள். நீண்டிருந்தால் பலபுருடர்களைச்சேர்ந்து சோர்வினை யடைவள். அழகில்லாமல் அகன்று பரவியிருந்தால் எல்லோரும் இகழும்படியான வறுமையை யடைவள். கருமணலின் தன்மையையடைந்து மிகவும் வளர்ச்சியைப் பொருந்தி முனையில் குழைந்து பார்க்கும்போது அழகு நிரம்பி நிறைந்த இருளைப்போலும் கறுத்து வாசனையையுடையதாகி வண்டைப்போல முறை முறையாய் பொருந்தி குறுகுதலும் நீட்டலுமின்றி வளர்ந்துவரும் முனையில் பிளப்பில்லாமல், பொருந்திப் மேன்மையாகி, நன்மையான பிரகாசம் நிறைந்து எண்ணெய் பூசியிருந்தால் அத்தலைமயிர் இனிமையானதென்று மேலோர் சொல்வார்கள். அப்படிக்கல்லாமல் முனையில் பிளந்து வெளியாக நடுவில் தோன்றி அந்த வியல்போடு சுருண்டு குழைத லில்லாமல் அழகில்லாமல் மிகவும் நீண்டு செந்நிறமுடையதாயும், பொன்போன்ற நிறத்தினையுடையதாயிருந்தால் மிகவும் கொடுமையான துன்பத்தில் அமிழ்ந்து கிடக்கும். செப்பமாகிய நெற்றியினிடத்துள்ள

புருவத்தின் நடுவில் செம்மையான மறுவுண்டா யிருந்தால் இந்த ஜகத்தைக் காப்பாற்றுபவளாகும். பொருந்தியிருக்கப்பட்ட இடது பக்கத்தில் தழும்புடன் வன்மையான புள்ளியுண்டாகும் படிக்கான மறுவுண்டா யிருக்குமாகில் தரித்திரமானது நீங்கிவிடும். மார்பின் வலத்தில் தழும்பும் மறுவும் நன்மையாகப் பொருந்துமாகில் பலகுடும்பங்களைக் காப்பாற்றும்படிக்கான மைந்தனைப் பெறுவள். மேலும், பதுமையைப்போல அசையும் இடையினையுடைய நான்கு பெண்களையும் அழகுபொருந்திய வயிற்றினிடமாகப் பெறுவள். நிலைபெற்ற மூக்கினுநுதியினிடை மறுவிருக்குமாகில் உலகங்களை ஆளும்படிக்கான அரசர்களது மனைவியாய் நன்மையானது பெருகும்படியான இல்வாழ்க்கையைப் பொருந்துவள். நாம் முன் எடுத்துச் சொன்னமறுவானது கறுப்பாயிருக்குமானால் துன் பத்தையடைந்து கைம்பெண்ணு(ட)ச் சோர்வினையடைவள். அப்படிக் கில்லாவிட்டால் நல்ல கணவனை யிழந்து உலகத்தில் எல்லோருட னும் விருப்பத்துடன் சேர்வள். இன்னும், இடது பக்கத்திலுள்ள கைதனிலும், கழுத்திலும் அழகிய காதினிடத்திலும், மகிழ்ச்சியை யுடைய கபோலத்திலும் மறுவுண்டா யிருந்தால் அழகுபொருந்திய குமாரனைப்பெற்று சந்தோஷத்துடன் வாழ்வள். குற்றமற்ற பாத முதற்கொண்டு உயர்ந்திருக்கும்படியான தொப்புள்வரையிலும் கொசுகைப்போலச் சொல்லப்பட்ட வடுக்களானவை பொருந்தி யிருந் தால் தரித்திரத்தையடைந்து பிரதிதினமும் துயரத்தினால் அமிழ்ந் திருப்பள். தலையிலுள்ள மத்தகத்தில் மூன்று தலைகளை யுடைய சூல ப்படையைப்போலும் இரேகையானது இருக்குமாகில மதர்த்த வேல்போலும் வடித்தெடுத்த கண்களையும், புதிய அமுதத்தைப் போன்ற மொழியினையுடைய பணிப்பெண்கள் ஆயிரம்பேர் பணி விடை செய்யும்படிக்கு பூமியில் வாழ்ந்திருப்பள். மலர்போன்ற கை யினிடத்திலும், தொப்புளிலும், மார்பினிடத்திலும். வலது சுழித் தொழும் சுழிகளிருந்தால் மிகவும் நன்மையதாம். பொருந்தியிருக் கப்பட்ட முதுகினிடமாகவும் இடையினிடமாகவும் வலதுபக்கமாக வலஞ்சுழியுானது பொருந்தியிருந்தால் மிகுந்த சிறப்புடன் வாழ்ந் திருப்பள். பின்பக்கத்தில் இரண்டுவலஞ் சுழியானது பொருந்தி யிருந்தால் ஆயுளானது விருத்தியாகும். செல்வமானது வளரும். அழகுபொருந்திய நல்ல தொடைமுதற்கொண்டு வயிறுவரையில் ஓர் சுழிபொருந்தி யிருக்குமாகில் அம்மங்கையின்கணவனும், குழந்தை யுடன்இறப்பன். அந்தத்தொடை முதல்வயிறளவுக்கும் முன்னே எடு

ந்துச்சொல்லப்பட்ட இழிந்த சுழியானது பொருந்தி யிருக்குமாகில்
கொண்ட கணவனானவன் இறப்பன். அவ்விடத்தில் இவ்விரண்டு
சுழியிருக்குமாகில் பழியையுடைய மொழியை எல்லோரும் சொல்
லும்படிக்கு தன்குலவொழுக்கத்தி னின்றும் தவறிக் கன்னியான
வளும் தன்கற்பினை யிழந்து பலபுருடர்களை யணைந்திடுவள். சொல்
லும்படிக்கான கண்ணினிடமாக சுழியானது இருக்குமாகில் கைம்
பெண்ணாவள். அப்படிக்கில்லாவிடில், கற்பினையிழப்பள். மூக்கி
னிடமாக மறுக்களிருக்குமானால் கற்பினை யுடையளாவள். காதின்
மீது அழகுபொருந்திய தலைமயிரினிடமாக வுள்ள வுச்சியினிடத்தில்
வலஞ்சுழியானது பொருந்தியிருந்தால் தன்கணவனானவன் இறப்
பன். ஒப்பற்ற உச்சியினிடமாக ஒருசுழியேனும், இரண்டு சுழி
யேனும் பொருந்தியிருந்தால் அம்மங்கையின் அழகானது நீங்கி
விடும். நெற்றியினிடத்தில் வலஞ்சுழிபொருந்தி யிருக்குமாகில் அம்
மங்கையை நீக்கிவிடுதல் நன்மையாம். பிடரியில் சுழியானது வல
மாகவும் இடமாகவும் மருவியிருந்தால் அம்மங்கையை மணந்த கண
வனானவன் அப்படி மணந்ததினமுதல் ஒருவருடத்திற்குள் இறந்து
விடுவன். ஒருமங்கையானவள் பெரியோரால் சொல்லி யிருக்கப்
பட்ட பலவகைப்பட்ட இலக்கணங்கள் முழுதும் நிரம்பியிருந்தா
லும், பரிசுத்தம் பொருந்தியவளா யிருந்தாலும், அம் மங்கையான
வள் நித்திரைசெய்யும்போது பற்களை கடித்தால் அவளை மணப்பது
கூடாதென்று பெரியர் சொல்வார்கள். பொருந்தி யிருக்கப்பட்ட
மெல்லிய அரையினில் சுழியிருக்குமாகில் அம்மங்கை விவாகமா
காத கன்னியா யிருந்தாலும கற்பழிந்தவளாகும். பெருமைபொரு
ந்திய நூல்கள் எடுத்துச்சொல்லும் இலக்கணங்கள் எல்லாம் நிரம்பி
யிருந்தாலும் நிலைத்திருக்கவேண்டிய நற்குணங்கள் பொருந்தி யிரு
க்கவேண்டும். அதுவுமன்றி என் ஐயனே அடியில் வருவனவற்றை
யுந் தயைசெய்து கவனிப்பீராக. பெருமைநிரம்பிய தனது கணவ
னானவன் புசித்த பின்பு தான் புசித்தல்வேண்டும். அக்கணவன் நித்
திரைசெய்தபின் தான் நித்திரைசெய்தல் வேண்டும். அவன் துயிலெ
ழுவதன் முன்தா னெழுதல்வேண்டும். தனது அருமையான கேள்வ
னானவன் அருகிலிருக்கும்பொழுது தான் பலவகைப்பட்ட ஆபர
ணங்களை அணிந்துகொள்ளவேண்டும். அவன் தூரத்தே சென்றபின்
அவ்வாபரணங்களை கழற்றிவைக்கவேண்டும். இவைகளெல்லாம் கற்
பினையே அணிகலனாகப் பூண்ட மங்கையர்களது செய்கையாம். நிர
ம்பப்பெற்ற அன்பினையுடைய கணவனானவன் கோபித்தாலும், தன்

பஞ்செய்தாலும், அவனுக்கு மாறுபட்டு எதிராக நின்று கற்புடைய
மங்கையர்கள் பேசார்கள்; இன்பத்தைப் பொருந்தினவர்களாகவே
யிருப்பார்கள். தாம்வசிக்கும் வீட்டைவிட்டு வெளியில் போகார்.
அப்படி வீட்டினை விட்டுப்போகுமவர்களைப்பாரார். மேலான பதவி
யைப்பெற்ற கற்பரசியாகிய அருந்ததி தேவியைப்போன்ற பெருமை
யினை யுடையவர்ளாக கற்புடைப்பெண்டீர்கள் இருப்பார்கள். திரு
விழாக்களைப் போய்ப்பார்த்தல, பெரியோர்களை வணங்கல், நோன்
புமுதலியவைகளைக் கிரமமாகச் செய்தல், குளிர்ச்சிபொருந்திய தெ
ய்வநதிகள், குளங்கள் முதலியவற்றில் புண்ணியத்திற்காக முழுகு
தல், முதலிய காரியங்களைத் தங்கடங்கள் கணவனுடைய உத்திரவின்
படி அருந்ததி தேவியின்மேம்பட்ட கற்பினையுடையமாதர்கள் செய்
வார்கள். தங்களுடைய ஆபரணங்களைத் தமக்குமாற்றுளாகிய மாது
க்கருக் கணவனுவன் கொடுத்தால் மிகவும் சந்தோஷித்திருப்பார்கள்.
மிகுந்த கற்பினையுடைய உத்தமமாதர்கள் வயது மூத்தவர்கள் இல்
லாத வீட்டினிடத்தில் வாசஞ்செய்யார்கள். தமது கணவனது ஆயு
ள்குறைந்துபோமென்று அவனுடைய பெயரை எடுத்துத் தாம்
சொல்லமாட்டார்கள். அக்கணவனானவன் உண்ட மிகுதியைத்
தேவர்கள் உண்ணும் அமிர்தமென்று நினைத்துச் சந்தோஷத்துடன்
உண்பார்கள். கிரமமாக அக்கணவன் ஓரிடத்திருந்தபிறகு போய்
வேறோரிடத்திலிருப்பர். இரவிலாவது அல்லது பகற்காலத்திலா
வது அன்புடையவராகிய தன்கணவர் எதையாவது கேட்டால் அந்
தவஸ்து இல்லையென்று சொல்லார்கள். எக்காலத்தும் வீண்வார்த்
தைகளைப் பேசமாட்டார்கள். எப்போதாவது பேச வேண்டிவந்து
பேசினால் மெய்ம்மொழியல்லது பொய்பேசார்கள். பிச்சை புகு
வோர்களுக்கும், யாவற்றையும் முற்றத்துறந்த சந்நியாசிகளுக்கும்,
தெய்வங்களுக்கும் தமதுகுடும்பத்தில் இறந்து பட்டோர்களாகிய
மூதாதைகளுக்கும், தாங்களிடும் பணிகளைச் செய்யும் பணியாட்க
ளுக்கும், தம்மில்லத்தினைநோக்கி விருந்தாக வருவோர்களுக்கும் தங்
கடங்கள் கணவனுடைய உத்தரவின்படி கொடுப்பார்கள். சத்திக்
கின்ற வீரகண்டாமணியணிந்த தங்கணவன் யாதேனு மொன்றைக்
கேட்குமுன்னர் அக்குறிப்பினையறிந்து அதைக்கொடுப்பார். தமக்
குரித்தான கணவனைப் பழிப்பாகப் பேசுவோரிடம் யாதொரு காரி
யத்தை முன்னிட்டும போகார்கள். இல்லறத்திற்குவேண்டியவை
களான வஸ்துக்களையெல்லாம் பிரியத்துடனும், பரிவினுடம் சேகரி
ப்பார்கள். அப்படி யருமையாகச் சேகரித்த பண்டங்களை வீண்

செலவு செய்யார்கள். தமது அருமையான கணவனுக்கு அவர் ஆயுள் விருத்தியாகும் வண்ணம், பரிசுத்தமான மஞ்சட்பூச்சைத் தமது தேகத்தில் அணிந்து கொள்வார்கள். தமது கணவன் அழகில்லாதவனானாலும், தீராநோயுள்ளோனானாலும் அவனை அவமதிக்காது அவனுடனன்புடன் கலந்தின்புறுவர். பிறரொருவரோடு பேசும்போது தங்கள் கைகளை நீட்டி நீட்டிப்பேசார்கள். தமது குரவர் யாதாமொன்றைக் கொடுக்கும்போது அவ்வஸ்துக்களை ஒருகையல் ஏற்காது இரண்டுகையாலும் வாங்கிக்கொள்வார்கள். தெருவினின்றாகிலும், சபையினிடத்தி னின்றாகிலும் செய்யவேண்டிய வைகளைச் செய்யார்கள். இவையெல்லாம பெருமைபொருந்திய அறிவினால் மிகுந்தவராகிய கற்புள்ளமாதர்களது குணங்களாம். தமக்கு முன்னிறந்து பட்டார்களது தேகத்தை உயிரோடிருப்பவர்களது தேகத்திற்கு ஒப்புச் சொல்லார்கள். தமது தேகத்தினிட மமர்ந்திருக்கும் தூசுகளை துடைத்துத் தள்ளிக்கொண்டு போகமாட்டார்கள். மேலிட்டுச்சென்று மற்றொருவரைக் கோபித்துப் பேசிடார்கள். இவைகள் தருமததின் வழிநின்ற கற்புடைமடவார்களது நன்மையான குணங்களாம். தாம் உடுத்திக்கொண்டிருக்கும் ஆடையைக் கிழிட்டு வெற்றுத்தரையின்மீது படுத்து உறங்கிடார்கள். தாம் படுத்திருக்கும் கட்டிலின்மீதேறி தம்பாதங்கள் பொருந்தும்படி நிற்கமாட்டார்கள். தாம்முடித்த மலர்களை மோந்து வாசனை பரிட்சை செய்யார்கள். தம்மால் முகரபபட்ட புஷ்பங்களை தமது கூந்தலில் முடித்துக்கொள்ள மாட்டார்கள் அடுத்தடுத்து தினந்தோறும் வாசனையோடு கூடிய பூச்சாந்துகளை அணிந்து கொள்ளமாட்டார்கள். அருந்ததிக்கொப்பான கற்புள்ளமாதர்கள், அரிது சேர்த்து வைத்த திரவியத்தை இழக்கில் அதனால் மனத்தில் வாட்டத்தை வையார்கள். தமது கைக்கெட்டாத வைகளை எந்த நாளிலும் விரும்பிடார்கள். வளம்பத்தை யுடைய பொருளானது தமது கைக்கெட்டாமையால் மனதினிடமாக வருத்தத்தை யடையார்கள். உள்ளமானது மகிழ்ச்சியை யுடையத்தகுந்த கருமங்களெல்லாவற்றையும் வேதங்களை யோதித் தெளிந்த அந்தணர்களது சொல்லின்படி செய்வார்கள். தெளிந்த அலைகளாற் சூழப்பட்ட உலகத்தில் மேன்மையானது சிறப்பாகப் பொருந்தியிருக்கப்பட்ட கற்புள்ள மாதர்கள்தாம் தமது கண்களினாற் கண்டவைகளைப் பிறரிடம் வெளியிடார்கள். காதினாற் றாம் கேட்ட விஷயங்களைக் கனவிலும் பிறருக்குச் சொல்லமாட்டார்கள். தாம் புசித்த உணவினைப்புழுத்தல் செய்யார். தாம் பிறருக்குச் சே

ய்த உபகாரத்தையும், தருமத்தையும், நோன்பையும் மனதிலிடமாகக்கொண்டு சந்தோஷிப்பார்கள். தம் கணவனன்றி மற்றை யாவரும் சொல்லும் மந்திரங்களை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். கற்புள்ளமாதர்கள் தங்கள் கணவர்களை நீர் உண்டவுணவிற்குக் கறிகளென்னவென்று வினவார்கள். அதன்றி மற்றயாரையும் உண்டவுணவும் அதற்கான கறிவகைகளுமென்னவென்னார்கள். தம்மினுமுயர்ந்தவர்கள்வருவார்களானால் அவர்களை எதிர்சென்றுபோய் நின்று அழைக்கமாட்டார்கள். எவரையும் அவரவர்களுக் கிட்டுள்ள பெயரைவைத்து அழைக்கமாட்டார்கள். மேன்மையோடு கூடிய வுறுதியான கற்புள்ள மாதர்கள் பெருமையிருந்த கணவர்களது தேக நிழலைத் தாம்மிதித்துக்கொண்டு நிற்கமாட்டார்கள். அவர்கள் பக்கலிலுராய்ந்துகொண்டு போகார். அப்படிக்கு நடுவிலிருக்க நேர்ந்தால் அக்கணவனை பிரதக்ஷிணஞ்செய்து வணங்கிச் செல்வார்கள். தகுதியான நல்லவார்த்தைகளைப்பேசி கணவன் பேசும்போது அதைத் தடுத்து நடுவில் பேசார்கள். அக்கணவனது எதிர் நின்று உரத்துப் பேசார்கள். குற்றமற்ற கற்பினையுடைய மாதர்கள், தாம் அதிக அழகினைப்பெற்ற மாதர்களென்று அறிவிலாது சொல்வோருடன் ஒருநாளும் பழகமாட்டார்கள். தங்கடங்கள் தேகத்தை அடிக்கடிக்கு உற்றுப்பார்க்க மாட்டார்கள். ஒருவரையும் பழிப்பான வார்த்தைகளைச்சொல்லமாட்டார்கள். விரும்பப்படுகின்ற தங்கள் கணவனை விட்டு வேறுபுருடர்களைப் பார்க்கமாட்டார்கள். தங்கள் தலைமயிரைக் கையினால் அடிக்கடிக்குக் கோதமாட்டார்கள். கற்புள்ளமாதர்கள் நாமொருவரே யுண்ணவேண்டுமென்று அடுப்பில் உலையை வைக்கமாட்டார்கள். பிறருக்கு ஒருகையினால் யாருக்கும் உண்ணும்படிக்கு நீரினைக்கொடுக்கமாட்டார்கள். பிரகாசம்பொருந்திய விளக்கினை அவிக்கமாட்டார்கள். தங்கள் வாயினால் அடுப்பிலிருக்கப்பட்ட நெருப்பை யூதார்கள். ஒருயிரைக்கொலைசெய்து அந்த மாமிசத்தை உண்ணமாட்டார்கள். நீட்சியையடைந்துள்ள தங்கள் தலைமயிரினை குலைந்துபோகும்படி வீசமாட்டார்கள். தமது ஆடையை பலபேர் நடுவிலிருந்து உதறமாட்டார்கள். கற்புள்ள மாதர்கள் வேறொருவர் தமது இல்லத்தை விளக்குங்காலத்தில் நடுவிலே போகமாட்டார்கள். தமதிரண்டு கைகளாலும் தண்ணீரையள்ளி யுண்ணமாட்டார்கள். இரண்டு கைகளாலே தம்முடைய தேகத்தைத் தொட்டுச் சொறியமாட்டார்கள். மாலைக்காலத்திலும், காலைவேளை

களிலும் படுத்திருக்கமாட்டார்கள். கற்புடைய மாதர்களது இயல்பாவது தமது கணவன் இறந்தால் தாமும் உடனே இறத்தல், அவன்வாழ்ந்தால் தாமும் உயிர்வாழ்ந்திருத்தல், அவன் துன்பத்தையடையுங்காலத்தில் தாமும் அத்துன்பத்தை அனுபவித்தல், தம்முடையகணவன் காலலம்பும நீரைக் கங்கையெனவும், கணவனைத் தெய்வமாகவும் எண்ணுவார்களாம். அழகினையும் மடப்பத்தையுமுடைய மாதர்கள் தாங்கள் பூப்பினையடைந்த மூன்றுதினங்களிலும் தங்களுடைய முகத்தினைத் தங்கள் கணவனுக்குக் காட்டார்கள். மேலும் அக்காலத்தில் உரத்துப்பேசார்கள். நான்காம் தினம் நல்ல நீரினிடத்து முழுகிவந்து தங்கள் கணவனுடைய முகத்தைப் பார்ப்பார்கள். அந்த தினத்தில் கணவனில்லாவிட்டால் அவனை மனதினிட்மாகத் தியானித்து சூரியனைப் பார்ப்பார்கள். குற்றமற்ற கற்பினால் மிகுந்த அழகினையடைந்துள்ள மாதர்கள், தங்களுடைய கணவன் தங்களை யழைத்தகாலத்தில் அதி சீக்கிரமாக அவனுக்கெதிரில் வருவார்கள். தாய் தந்தையரைக் காட்டிலும், தாங்களரிநிற் பெற்றெடுத்த குழந்தைகளைப் பார்க்கிலும் குற்றமற்ற கணவன்மீது நிரம்பிய அன்பினையுடையவர்களாவார்கள். கற்பில் மேம்பட்ட உடுக்கையைப்போன்ற இடுப்பினையுடைய மாதர்கள், உயற்சியையுடைய உலக்கையின்மீதும் உரலின்மீதும், அம்மியின்மீதும், முறத்திலும், வாசலிலுள்ள படியின்மீதும் பெருமை பொருந்திய இலக்குமி நீங்கிவிடுவளென்று உட்காரமாட்டார்கள். பெருமையுடன் சூரியனனவன் உதிக்கும்படியான பகற்காலத்தில் படுக்கையின்மீது படுத்து உறங்கமாட்டார்கள், இன்பத்தைச் செய்யும்படியான கணவனுடைய உத்தரவில்லாமல் விரதங்களையும் தெய்வபூசையையும் விருப்பமாகச் செய்தால் அம்மாதர்கள் நரகத்தில் அழுந்துவார்கள். தமதுகணவன்மீது பழியைச்சுமத்துபவர்களும், சொல்வோர்களும், அக்கணவனுடன் எதிர்த்துக் கோபித்துச் சொல்வோர்களும், கொடுமைமிக்க நரியாயும் நாயாயும் மறுபிறப்பு பிறப்பார்கள். பொருந்திய தமதுகணவன் சிறிக்கோபித்தால் அவன்முன்பாக வந்து அவனைவைதவர்கள் மிகுந்தவலிமையை யுடைய புலியாகப்பிறப்பர். சக்களத்தியைக் கண்டால் அவளருகிற்சென்று கோபிப்பவர்கள் கோட்டானாகப் பிறப்பர். தமது கணவன் பசித்திருக்கும்போது உண்பவர்கள் பன்றியாய்ப்பிறப்பர். அறிவில்லாமல் அயல்புருடனுடைய அழகினைக்

கண்டு சந்தோஷிப்பவர்கள் மறுபிறப்படைந்தார்களானால் பேயாய்ப்பிறந்து அலைவார்கள். தமது கணவனை நிந்தித்து தாய்வீட்டிற் போயிருப்பவர்களை யமனுடைய தூதர்கள் கோபத்தோடு கட்டிப்பிடித்து மிகவும் எரிகின்ற நரகத்தினிடைச் சேர்ப்பார்கள். தமக்கு உரிமையானகணவன் இறந்தால் அவனுடனே நெருப்பில் விழுந்து சாகமனஞ் செய்தற்கு வழிநடக்கும்மாது வைக்கும் ஒவ்வோரடிக்கும் ஒரு அசுவமேதயாகஞ்செய்த பலன்கிடைக்கும். அம்மாதர்கள் யமனுடைய தூதர்களுடைய கையைப்பறித்து அவ்விடத்தில் போய்ச்சேர்ந்த குற்றமற்ற தங்கள் கணவனுடன் புண்ணிய பூமியாகிய சுவர்க்கம் புகுவார்கள். தங்களுடைய கணவனானவன் மகாபாவியானாலும் அக்கணவனுடன் சிகைகள் நிறைந்தநெருப்பில் வீழ்ந்தவள் கற்புடையவளே யென்றால் அப்படி வருபவளை யமன்காணுவானானால் மனதினிடத்தில் அச்சத்தையடைந்து தனது தூதர்கள் தீன்னைப் பூடை சூழ்ந்துவர அவளையும் அவள் கணவனையுமவிட்டுப் போய்விடுவான். தன்னுடைய கணவனோடு சென்று எரியில் மூழ்கும்படியான கற்புடைய மாதர்களது தேகத்திலுள்ள ஒவ்வொரு மயிருக்கு ஆயிரகோடி காலவளவுக்கு தனது கணவனுடனே தானுமபொருந்திய விசேடப்பிரகாசம் வீசும்படியான சுவர்க்கத்தில் இனிமையாக வாழ்வள். மேன்மைபொருந்திய கற்பில் மிகுந்த மாதரைக் கண்டால் சூரியனும், வெண்மையான சந்திரனும், பரிசுத்தம் பொருந்திய அக்கினியும் தங்கடங்கள் பிரகாசம் குன்றிப் போவார்கள். அவ்வகைப்பட்ட மாதினுடைய தாய் தந்தையரும் அவளை மணம்புரிந்த கணவனும் மற்றும் இருபததோரு தலைமுறையிலுள்ள சுற்றத்தார்களும் அழிவில்லாத சுவர்க்கம் பெறுவார்கள். பரிசுத்தம் பொருந்திய கற்புள்ளமாதர்களது பிரகாசம் பொருந்திய அடிச்சுவடுள் படிந்த எல்லாவிடங்களும் மேன்மை நிறைந்த புண்ணியத் தலங்களினும் மேம்பட்டதாகும். பூலோகத்தில் நிரம்பி யிருக்கப்பட்ட புண்ணியநதிகள் யாவும் தங்கடங்கள் பாவங்கள் நீங்கும்பொருட்டுக் கற்புடைய மாதர்கள் தத்தமிடம்வந்து முழுகும்படிப் பிரார்த்திக்கும். பெருமைமிகுந்த கற்பில்லாத மாதர்களைப்பெற்றதாய் தந்தையர்கள் அவர்கள் குடியிலுள்ளோர்கள் கணவன் மரபினிலுள்ளோர்கள் ஆகிய இவர்களெல்லாம் துன்பத்தையடைந்து ஏக்கமுறும்படி யமதூதர்கள் நெருப்பினைக் கக்கும் நரகத்தினிடத்தில் தினந்தோறும் வீழ்த்துவார்கள். மிகுந்த செல்வம் நிரம்பிய மாடங்களும் கோபுர

ங்களும் நிறைந்த வீடாயினும் கற்புடைய மாதர்களில்லாத வீடா னது பேய்கள் நிரம்பப்பெற்ற காட்டிற்குச் சமான மாகுமென்று பெரியோர்கள் சொல்வார்கள். வெள்ளிய சந்திரனும், சிவந்த கிர ணங்களுடைய அக்கினியும், வாயுவும் செபபமாகிய கற்பினையுடைய மாதர்களது தேகத்தைத் தொட்டால தங்கடங்கள் மனதில் பயத்தி னையடைவார்கள். கணவன் இறக்கத்தாம் மேலணிந்திருக்கும் ஆபர ணங்களை யிழந்தமாதர்களை உயிரானது நீங்கிய தேகத்தைபபோல் வேறொருவரும் தீண்டமாட்டார்கள். தெருவில்போகும் வழியி லவர்களைக் கண்டால் போகும் காரியத்திற்குத் தடையுண்டாயிற் றென்று தத்தமிடத்திற்குத் திரும்பிவிடுவார்கள். அம்மாதர்களது ஓர்சொல்லும் கொடுமையான விஷமென்று சொல்வார்கள். கற் புடைய கைம்பெண்கள் தமக்குப்பொருந்தி யிருக்கப்பட்ட ஒழுக் கத்தைவிட்டு நீங்கில் தங்கடங்கள் அருமையான சுறறத்தாரோடு நர கத்தில் தள்ளப்படுவார்கள். அவ்வகைய கைமபெண்கள்தமதுமயிர்த் தலையை மொட்டையடிக்கா விட்டால் யமனுடைய தூதர்கள் அக் கைம்பெண்களுடைய கணவர்களது தோள்களில் கயிற்றைப் போட் டிழுப்பார்கள். மிகுந்த தயவினையுடைய கணவனிறக்கில் அக்கைம் பெண்கள் பகலில் ஒருபோதுணவு, வெற்றிலைப் பாக்கையும், படுக் கும் பாயையும் நீக்கிவிட்டு, வீட்டினிடத்தில் மண்ணின்மேல் நித்தி ரைசெய்து, கடினமான விரதங்களைச் செய்து, பரமசிவத்தினுடைய மகத்துவம பொருந்திய சிவபூசையைச்செய்து அச்சிவபிரானது தா மரைபோன்ற பாதங்களை வணங்கவேண்டும். இவ்வகையான வித வைகள் பற்பல விரதங்களைச்செய்தால சிவபிரானது அருளைப்பெற் று நல்லகதியினை யடைவார்கள். பிதாவற்றவர்களும், தாயற்றவர்க ளும், தம்முடைய தமையன்மா ரில்லாதவர்களும், தங்கையரில்லாத வர்களும் காவலாயுள்ள ஆண்மக்களுடன் பிறவாதவர்களும், அத்த கைய ஆண்மக்களிறக்கப்பெற்றவர்களும், பெருஞ்சுற்ற மில்லாதவர் களும், யாவரும் வியக்கத்தக்க செல்வமற்றவர்களும், உயர்குடிப் பிறவாதவர்களும், நோயுள்ள மாதாபிதாக்களிடத்திற் பிறந்தவர்க ளும், தீயொழுக்கமுள்ள மதங்களிற் பிறந்தவர்களும், நோயாளிக ளும், ஊமைகளும், முடவர்களும், செவிடர்களும் அயலார் வீட்டிற் குப் போகின்றவர்களும், தாசிகளைப்போற் பார்ப்பவர்களும், பல காலமும் யௌவனமுடைய ஆடவர்களைப் பார்த்துக்கொண்டு மிக

வும் ஆவலுள்ளவர்களாய் வாயிற்படியில் நிற்பவர்களும், அழகு மேம்படும்படி அலங்கரித்துக் கொள்பவர்களும், மீதூண்விரும்புவோர்களும், நெடுந்துயில்கொள்ளும் சுபாவமுள்ளவர்களும், தம்மினும் மேம்பட்ட வயதுடையவர்களும் ஆகாவாம். ஒற்றுமைப்பட்டகோத்திரத்திலும் மரபிலுமுள்ளவர்களும் நெட்டையா யிருப்பவர்களும் குட்டையாயிருப்பவர்களும் தூலித்தசரீர முடையவர்களும், சுட்கித்த சரீரமுடையவர்களும யாதொரு பிரயோசனமுமற்ற கருநிறங்கொண்ட சரீரமுடையவர்களும், பொன்போன்று அழகு மிக்க சரீரமுடையவர்களும், பெருமைதாங்கிய தேமல் படர்ந்துள்ள சரீரமுடையவர்களும, வெளுத்த சரீரமுடையவர்களும், உதிரத்தைப்போன்ற நிறத்தில் மேம்பட்டவர்களும், வெட்க மற்றவர்களும் ஆட்வர்கள் கலவியில் அதிவிருப்பமுள்ளவர்களும், சதாசிரிப்பவர்களும், அதிக பலவீனர்களும், விசேடவலியில் மேம்பட்டவர்களும், மாதாபிதாக்களின் ஆக்கினையைக் கடந்தவர்களும், மிக்க கோபமுள்ளவர்களும், விசேடபகைமையுள்ளவர்களும, போர்புரியுந் தன்மையில் முயற்சிப்பவர்களும், கூத்து முதலியவற்றைப் பார்க்க விருப்புமுள்ளவர்களும், மன்மதனால் வருந்துவோர்களும், சிவபெருமானிடத்தில் அன்பில்லாதவர்களும், பெருந்தன்மையை வாய்ந்த முனிவர்களை நிந்திப்பவரும், சிவர்களிடத்தில் அன்பென்பவை யில்லாதவர்களும், தங்கள் குலாசாரத்திலொழுகாதவர்களும், குற்றமுள்ள குணமுடையவர்களும், கற்பற்றவர்களும, மனமென்னும் காவலில்லாதவர்களும், ஆசாரியரை மனிதனென்று நினைத்தவர்களும், தெய்வமூர்த்திகளைக்கல்லென் றுரைத்தவர்களும், பத்துக்குமேற்பட்ட வயதுள்ளவர்களும், பூப்பு நிகழும் பருவமடைந்தவர்களும் கணவன் குணத்திற்கேற்ற குணமில்லாதவர்களும், அச்சமற்ற மனமுடையவர்களும், இடியேற்றைப்போன்ற குரலுடன் வசனிப்போர்களும், மதாபிதாக்கள் மணமுடித்துக் கொடுப்பதற்கு முன்பே ஒருவரிடத்திற் காதல் வைத்து அவரை யணையும்படி மனம்வைத்தவர்களும், செருக்குற்றவர்களும், மடம் பயிர்ப்பு என்னும் குணங்களில்லாதவர்களும், பிறவிக்குருடர்களா யுள்ளவர்களும் பிறந்தபின்பு பார்வை யிழந்தவர்களும், பூப்பட்ட கண்களுடையவர்களும், படலம் படர்ந்துள்ள பார்வையை யுடையவர்களும், குறிப்பாக மெதுவாய் திரும்பிப்பார்க்கும் குருடர்களும், குருட்டுப் பார்வை யுடையவர்களும், நிறப்பிற்ற

பூனைக்கண்ணுடையவர்களும், க்ஷணநேரத்திற் கோர்கால் சுழன்று
கொண்டிருக்கும் சிவந்த கண்களை யடைந்தவர்களும், அடர்ந்துள்ள
கூந்தலுடையவர்களும், நரைமுதிர்ந்த கூந்தலுடையவர்களும், மாசு
படிந்துள்ள கூந்தலுடையவர்களும், விரிந்துள்ள கூந்தலுடையவர்க
ளும் அளவற்ற செம்பட்டமயிர்களுள்ள கூந்தலுடையவர்களும், பூமி
யிற்படியும் நீட்சியுள்ள கூந்தலுடையவர்களும், பழுதற்ற கூந்த
லுடையவர்களும், மிருகத்தைப்போன்ற உரத்த குரலுள்ளவர்களும்,
சிறுத்தகண்களை யுடையவர்களும், விசேடமாக நீண்டிருக்கும் மூக்
குள்ளவர்களும், இரண்டுபுருவங்களும் ஒன்றுசேர்ந் துள்ளவர்களும்,
குறுகிய காதுடையவர்களும், நீண்ட பற்களுடையவர்களும், வளை
ந்த கழுத்துள்ளவர்களும், மறுவற்றிருக்கும் முதுகுடையவர்களும்,
அழகியதேமல் படரத் தனங்களுள்ள மார்புடையவர்களும், சிறுமை
யுற்ற இடையில்லாதவர்களும், வில்லென்று சொல்லும்படி மிகப்
பருத்த வயிறுள்ளவர்களும், சாமுத்திரிக நூலில் முறைமைப்படி
கூறியுள்ள இலக்கணங்க ளில்லாதவர்களும், இதழ்களும் உள்ளங்கை
யும் நகங்களும் காலடிப்புறமும் அழகமைந்த சிவந்த நிறமில்லாதவர்க
ளும், சிலமயிர்கள் பொருந்திய அகன்ற பாதமுடையவர்களும், மிரு
துவான சிறகுகளைப் படைத்த அன்னப்பறவையைப் போன்று சிற
ந்த நல்ல நடையற்றவர்களும், கால்விரல்கள் பூமியிற் படாதவர்களும்
ஆகாரவாம். மேற்சொல்லிவந்த தோஷகுணங்கள் நீங்கியவளும், நற்
குணங்கள் நிறைந்துள்ளவளு மாகிய, மேற்காட்டப்பட்ட கற்பிலக்
கணங்கள் நிரம்பப்பெற்ற கன்னிகை யொருத்தி யிருப்பாளாயின்
அவளை அடியேன் மணப்பன். ஆகையால் தேவரீர் அத்தன்மை வா
ய்ந்த பெண்ணைத் தேடித் தருவீராகவென்று மிருககண்டுயென்னும்
கவுச்சிகமுனிவர் சொல்லினர்.

இவ்வார்த்தைகளைக் குச்சகமுனிவர்கேட் டளவில் புனமுறுவ
லும் சந்தோஷமு மடைந்து, அழிவற்ற சிறப்பினையுடைய இவ்வில
வுலகத்துள்ள நாடுகளில் நீ விரும்பிய வண்ணம், நல்லிலக்கணமமை
ந்த பெண்ணை உன்னிடத்திற் சேர்க்கின்றேன், நீ அது விஷயத்தில்
சந்தேகங்கொள்ளவேண்டா மென்றனர், அதன்மேல் அக்குச்சக
முனிவர் தம் மைந்தரைத் தமதாச்சிரமத்தினிறுத்தி அதிவிரைவுடன்
உலகத்திலே திருத்தமிக்க பிரகாசமோங்கிய பதியொன்றிற் செய்து

ஓர்பாணத்தின் மத்தியில், யாவரும் விரும்பும்படி பதிப்பதற்கு வேண்டிய அருமையான ஓர் நாயகமணியைக் கொள்ளவேண்டித் தேடுகின்றவனைப்போல, ஓர் பெண்ணைத் தேடலுற்றனர். அவ்வாறு தேடிச்செல்லும் குச்சகமுனிவருக்கெதிரில், இன்னுஞ் சில முனிவர்கள் வரலும், அவர்களுடன் பெண்ணைக் குறித்துக்கேட்டு, சோழ தேசத்தில் அக்ரமயமென்னும் பெயருடைய குற்றமற்றவனத்திலே உசத்தியரென்னும் முனிவரிடத்தில் ஓர் பெண்ணிருப்பதாகத் தெரிந்து அவரிடத்துச்செல்லுதலும், அவர் இவர்வரவைக்கண்டு இவரது பாதங்களிற் பணிய, தாமும் எதிர்பணிந்து தழுவிக்கொண்டு அம்முனிவருடன் உள்ளே செல்ல, பழுதற்று விளங்கும் தமதாச்சிரமத்தினுள்ளே யழைத்துக்கொண்டுபோய், முறைமை தவறாதியற்றியுள்ள ஆசனத்திலெழுந்தருளப் பண்ணி, தமது புத்திரியையும் மனைவியையும் அவ்விடம் வரவழைத்து, நமதாசிரியர் எழுந்தருளினர் நீங்கள் வணங்கிக் கொள்ளுங்களென்று தலையிற்பணிவித்து, செய்யத்தக்க வழிபாடுகளியற்றி முகமலர்ச்சியுடன் உபசாரவார்த்தைகளைக் கூறி, உசத்திய முனிவர் அவருடன் அளவளாவி மகிழ்ந்தனர். அறுசுவையமைந்த நறுமணங்கமழும் திருவமுதும் சிற்றுண்டி வகைகளும் விசேடித்தனவாக வுண்பித்து, யாதோர் குறைபாடுமின்றிய தேவரீருக்கு அடியேனிடத்திற் பெறவேண்டிய எண்ணமுடைய தென்னென்றுரைக்க, குற்றமற்ற தவம்வாய்ந்த குச்சகமுனிவர் மனங்களித்து நீர் பெருந்தவம்புரிந்து பெற்றபுத்திரியை எமது ஒரே பேரன் புத்திரனுக்கு மணம்பேச வந்தேனென்று திருவாய் மலர்ந்தனர். இவ்வார்த்தையைக்கேட்டு உசத்தியமுனிவர் களித்து, அடியேன் புதல்வியாகிய விருத்தையென்பவளை, இலக்கணமமைந்த தேவரீர் புதல்வர்க்குக் கொடுப்பதற்காகப் பூர்வத்திற் புரிந்த சிறந்த தவம்யாதோ எனக்கூறி, தம்முடைய மனத்தின்கண் முழுவதுங் களிப்புமேம்பட மணஞ்செய்து கொடுக்க ஒருப்பட்டு, பெருந்தவமுடைய குச்சகமுனிவரை அவ்விடத்திற் சிலகால மிருக்கச்செய்து பரிபாலித்து வழிபட்டுக்கொண்டிருக்குங் காலத்தில், பழுதற்ற உசத்தியமுனிவரின்பத்தினியாகிய மங்கலையின் உத்தரவைப் பெற்றுக்கொண்டு அவரது புத்திரியாராகிய விருத்தை அவ்விடத்திருக்கும் தோழியர்களின் கூட்டத்தோடு, சிவந்தகயல்மீன்கள் பாய்ந்து கொண்டிருக்கும் காளயாற்றில் நீராடச் சென்றனள்.

அந்த அநாமயமென்னும் காட்டிற் பெருகுகின்ற வெள்ளத்திற் சிறந்த நீரிலே முழுகிக்களித்து, தெய்வப்பெண்களொத்த பாக்கியருடனே அதன்பக்கத்திருந்த சோலையிற்சென்று, அங்குள்ள மலர்களைப்பற்றித்துச் சூட்டிக்கொண்டும் மாலை கட்டிக்கொண்டுமிருந்தனள். தெய்வப்பெண்ணையொத்த விருத்தை அச்சோலையினின்றும் பணிய ஆபரணங்களணிந்துள்ள பாக்கியர் கூட்டத்துடனே புறப்பட்டு, களங்கமற்ற நட்சத்திரங்கள் முறைமையாகச் சூழ்ந்துள்ள பிரகாசமமைந்த சந்திரனைப்போன்று வீட்டிற்குத் திரும்புமத் தருணத்தில், அச்சத்தை விளைக்கும் பிளிறோசையுடனே, இடிகளைக் கக்குகிற கருநிறங்கொண்ட மேகமிதுவென்றுரைக்கத் தக்கதாய்க்கோபித்து, வெப்பமுடைய அக்கினிப்பொறிகளைப் பொழியும் விழிகளையுடையதும், அச்சங்கொள்ளத்தக்க சரீரமுடையதும், விசேஷித்த ஆற்றுப்பெருக்கொத்த மதஜலத்தோடும் வருகின்றதும், தொங்கிக்கொண்டிருக்கும் துதிக்கையுடையதும், வளையத்தின் தன்மையொத்து வயிரமமைந்துள்ள தந்தங்களுடையதும், உரல்போன்ற கால்களுடையதுமாகிய ஏழுமுழமுயர்ந்துள்ள காட்டானையொன்று, எதிரிலேவந்து வலியுள்ள மலைகளையெல்லாந்தூளாக்கிவிட்டுப்போயிற்று. அந்த யானையைப் பார்த்தவளவில் அம்மார்க்கத்திற் போய்க்கொண்டிருந்த ஆண்தன்மையுடைய ஆடவர்களும் மிகநீண்டுள்ள திருப்பாற்கடலினிடத்து மேலோங்கிய கொடிய ஆலகாலம் சேர்ந்தவளவில் ஓடிய தேவர்களையொத்து, அச்சங்கொண்டு மனங்கலங்கி அவ்விடத்தினின்றும் நீங்கியோடினார்கள்.

அப்போது அன்னப்பறவையைப்போலும் மிருதுவான நடையையுடைய பாக்கியர்களனைவரும் இந்த யானையைக்கண்டு துன்பமடைந்து அவ்விடத்தினின்றும் நீங்கியோடுதலும், விருத்தை வேகத்துடன் முயற்சித்து ஓடுதலும், நரகத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் பாவிகளின் கூட்டத்தை யொத்து, தொங்கிக்கொண்டிருக்கும் பசும்பூடுகள் நெருங்குதலால் தான்மறைபட்டு ஆழமாயுள்ள கிணறொன்று கிட்ட, அவ்விருத்தையென்பவள் அக்கிணற்றில் வீழ்ந்தழுந்தி இறந்தனள். வளைந்துள்ள மயிர்கள் அசைந்துகொண்டிருக்கும் பேரழகு வாய்ந்த நெற்றியையுடைய ஆண்சிங்கம் எதிர்த்துவந்தாலும் பசைக்கும்படியான, மதத்தைப்பொழிகின்ற அப்பெரிய யானையானது, சேரநாட்டை யடையும்படி கல்லென்னும் பேரி

றோசையுடன் ஓடியது. ஒட்டமெடுத்த பாங்கியர்களனைவரும் எவ்விடங்களினுமாகப் பரவியிருந்து பின்னர் ஒருங்குகூடி, வியர்வையடைந்த சரீரமுடையவர்களாகவும் சரிந்த அளகமுடையவர்களாகவும் வாடிய மனமுடையவர்களாகவும், களிப்பற்றவர்களாகவும் சென்று விருத்தையைத் தேடினார்கள். தான் சென்ற வழியெங்கும் மதத்தைப் பொழிந்து மேகத்தைப் போன்ற நிறம்வாய்ந்து வந்த இரண்டு தந்தங்களைப் படைத்த அந்த யானையைக் காணவில்லை. விருத்தையென்னும் கன்னிகையையும் காணாதவர்களாய் உயிர் உண்டில்லை யென்று சொல்லத்தக்கதாய்ச் சுவாசம் நீங்கி மூர்ச்சையுற்றார்கள். பூமியில் நதிபோலப் பிரவாகிக்கும்படி இரண்டு கண்களும் நீரைச் சொரியக்கலங்கிச் சோர்ந்து, திடுரென்று உணர்ச்சிதோன்ற நடுங்கி, புண்ணில் விசேட அக்கினி பட்டவர்களைப்போன்று துக்கிக்கலாயினர். மாதர்கட் கோராபரணம் போல்வாளே, விசேடித்த அழகிற்குவமை கூறத்தக்க ஒருருவம் போல்வாளே, பார்க்கின்றவர்கள் கண்களுக்கோரழகா யிருப்பவளே, செந்தாமரை மலரிலிருக்கும் திருமகளை யொத்தவளே, இவ்வுலகத்திலுள்ள கான்யாற்றில் நீராடினை தேவலோகத்திலுள்ள ஆகாயகங்கையினும் நீராடுவதற் கெண்ணங்கொண்டு நிச்சயித்தோ எங்களைவிட்டுப் போயினை! நிறமுள்ள நீரில் முழுகுவித்துப் பாதுகாத்து அதிவிரைவில் மின்போ லொளியமைந்த எனது புத்திரியை அழைத்துவருவீர்களென்று விடைகொடுத்தனுப்பிய உனது மாதாவுக்கு யாங்கள் யாது கூறுவோம், கொல்லத்தக்க யானைக்குமுன்பாக உன்னைத் தனியே விட்டுவிட்டு நாங்கள் உயிர்தப்பித்துக்கொண்டு வந்தோமே. உனது பிதாவாகிய உசத்திய முனிவரும் மாதாவாகிய மங்கலையம்மையாரும், உலகத்தினர் துதிக்கின்ற உனதுமாமனாராகிய குச்சகமுனிவரும் கவலைக்கடலில் முழுகும்படி மறைந்தனையே, இன்னும் ஒருமுறை உனது செபபமைந்த முகத்தையும் அழகுள்ள முறுவலையும் காட்டமாட்டாயோ, என்று அத்தோழியர்கள் இவ்வாறு பலவிதமாகத் துக்கித்து வருந்தி, நினைத்தற்கரிய சிறப்பமைந்த உசத்தியமுனிவர் மேலான தவத்தில் நிலைத்துள்ள தெய்வீகமமைந்த அகாமயமென்னும் வனத்தில் அவரது இல்வாழ்க்கைத் துணைவியாராகிய மங்கலை யம்மையாருக்கு இச்செய்தியைக் கூறி யழுதார்கள். விருத்தையின் தாய் கேட்டவுடனே வயிற்றைப் பிசைந்துகொண்டு சுவாலித்தெரியும் நெருப்பிலிட்ட அரக்கையொத்து மனமுருகிக் குழம்பி வாள்போலும் கிராலித்த கண்களில் நீர் துளிக்க அயர்ச்சியால் வாய்

குளறி, தனது பத்தாவின் பாதங்களிற் பணிந்து நேர்ந்த சம்பவத்தைக்கூறினர். மன ஒருமையிற் காணும் காட்சியை யடைந்துள்ள உசத்தியமுனிவர் அவற்றைக்கேட்டு, கன்றைப் பிரிந்த தாய்ப்பசுவைப்போல வருந்தி புலம்பி, தமது புத்திரியுடன் கூடிச்சென்று பிரிந்த தோழியர்களைப் பார்த்து, கோபம்மிக்க அந்த யானைதான் கொலை புரிந்ததோ, அதை பயப்படாமல் சொல்லுங்களெனக் கூறுதலும், பரிசுத்தமான காவியாற்றில் முழுகித் துறைக்குவந்து, அங்கு சூழ்ந்துள்ள சோலையில் பெண்கள் கூட்டத்துடன் மலர்கொய்து மாலை கட்டி விளையாடி அவ்விடம்விட்டு நீங்கி இங்குவருவதற்காக வருகையில், எரிந்துகொண்டிருக்கும் அக்கினிபோலும் கொடிய கண்களைப் படைத்த மதயானை வந்ததைப்பார்த்து, யாவரும் உணர்ச்சியற்றவர்களாய் போயினோம். இவ்வாறேடியுழன்று ஒருவர்போனவழி யொருவர் போவதற்கில்லாமல் ஆபரணத் தொகுதிகளைப் போக்கி துரத்திவந்த மதயானைக்குத் தப்பித்துக்கொண்டு, பிறகு அவ்விடம் சென்று விருந்தனையைத் தேடிப்பார்த்துக் காணாமையால் வந்துவிட்டோம் என்று கூறுதலும், அக்காவியாறும சோலையுமுள்ள இடத்திற்குப் போய் அவ்வெல்லையிற் றேடிப்பார்த்துத் தியங்கி நின்றனர். அப்போது தனது புத்திரியின் காந்தி விசேடித்த பொன்னாபரணங்கள் ஒவ்வொன்றாகத் தனித்தனியே ஓர்வழியில் சிதறிக்கிடக்கப் பார்த்து, எனது தாய் சென்றமார்க்கம் இது தானோவென்று மயங்கினர். அவ்வாபரணங்கள் சிதறியிருக்கும் வழியைப் பிடித்துக்கொண்டே போய், நமது புத்திரியைப் பார்ப்போமென்று மேகம்போன்ற கூந்தலுள்ள பாங்கியர்களோடு சென்று, மாட்சிமையுற்ற கிணறொன்று சமீபத்தில் எதிர்க்க, அக்கிணற்றில் மிகவும் ஆழத்தில் வீழ்ந்துள்ள தன்புதல்வியைப்பார்த்து மனஞ்சுழன்றனர். கிணற்றில் வீழ்ந்திருப்பதைப் பார்த்து மிகவும் பெருமூச்செறிந்து கண்களின் வழியாகத் துக்கக்கண்ணீர் துளிக்கக் கிணற்றிலிறங்கி, பேராசைகொண்டு தனது புதல்வியை யெடுத்து விசாலித்த அக்கிணற்றின் கரையிடத்திற் சேர்த்துத் தூக்கித்துவளவில், தோழிப்பெண்க ளனைவரும் அவளைத் தழுவிக்கொண்டழுதார்கள். அவ்விருத்தையைப்பெற்ற மங்கலை யம்மையார் சோலையிலுள்ள குயில்போலும் அழுது பெரிய துக்கசாகரத்தி லழுந்தினர். தன்னிடத்து வந்துதித்த தெய்வப்பெண்ணொத்த தனதுபுதல்வியைப் பிரிந்து சகியாதவராகி, அப்புதல்வியின்மீது வைத்துள்ள பேரன்பாலே உயிர்பதைக்கும்படி வயிற்றைப் பிசைந்து வருந்திப் புலம்பி ஏக்கங்கொண்டு, ஓர் மின்னுக்கொடிமீது மற்றோர் மின்னுக்

கொடி பதிந்திருக்கும் தன்மையைப்போன்று அவள்சரீரத்தின்மேல் விழுந்து, ஓ, புதல்வியே தென்னாட்டிற் கேகினையோ என்று துக்கித்துத் தேம்பலாயினர். தாயே, தாயே, தருமம் மிகக்கொடிதோ, ஐயோ, யான் அறியேன், முற்காலத்திலோ நெடுநாளாகப் புத்திரப் பேறில்லாமல் பெருந்தவம் புரிந்தீன்ற ஓ மின்னற்கொடிபோல் வாளே, உயிர் நீங்கி வெற்றிடத்திற் படுத்திருப்பதோ? பிரமதேவன் விடுத்தவிதி இவ்வாறோ? நானொருத்தி பெண்ணாகப்பிறந்து பெற்றுக்கொண்ட ஊதியம்இதுதானல்லவா? புலிக்கூட்டங்கள் சஞ்சரிக்கின்ற காட்டிலே ஒருமானை வளர்த்து அதைக் கைதப்பவிட்டு நின்று துக்கிப்பவர்களைப்போன்று, நானும் என்மகளைக் கைவிட்டுப் புலம்பிக்கொண்டிருக்கின்றேன், தாமரை மலரின் கணுள்ள திருமகளையொத்த எனது புத்திரியைக் கொல்ல முற்பட்டுவந்தது, கொல்லுந் தன்மை யமைந்த அவ் யானையின் வடிவமன்று, கொடுந்தன்மையுடைய யான் முன்பு செய்துள்ள பெரியபாவத்தின் வடிவமல்லவா? தருமம் வனத்திற் கொடியதோ? தெய்வமும் இவ்விடத்திலையோ? அரிதாகிய முத்தித்தன்மையைக் காட்டுகின்ற தபோமார்க்கங்களும் பொய்த்துப் போயினவோ? இப்போதே கலிவந்து விட்டதோ? கொடுமையை விளக்குகின்ற காட்டானை வந்தெதிர்க்க இவ்விடத்தில் எனது புதல்வி யிறந்து புறங்காட்டில் விழுந்து கிடப்பதோ? இது ஒரு புதுமையாகும், என்னை! என்னை! என்றிவ்வாறாய்ப் பலவற்றையுங் கூறித்துயரடைந் தழுந் தருணத்தில், மணமும் அழகுமமைந்த அளகத்தையுடைய மாதர்களனைவரும் சூழ்ந்து வருந்தி மயங்க, அவர்கட்குரிய உறவினரும் மற்றையர்களும் மனமுருகி வாடினார்கள். அத்தினத்தில் அங்கெழுந்த துக்கத்தின் பெருங்கோஷ்டம் சொல்லும் தகுதியுடையதோ? நிச்சலன சித்தமுடையவராகிய குச்சகமுனிவர் அவ்விடத்தடைந்து, கண்களில் துக்கக்கண்ணீர் துளிக்கச் சோர்ந்து கிடக்கும் மாதர்களிடத்தில் வந்து, உங்கள் மகளை மறுபடி மீட்டுக் கொடுப்பேன் நீங்கள் அழவேண்டாமென்று கூறி, வேறோர் பக்கத்தில், தனியாயிருந்த பிதாவாகிய உசத்திய முனிவருக்கு இவ்வாறு விரித்துக் கூறுகின்றனர். வேதம் முதலிய நுண்ணிய நூல்களைக் கற்றுணரா மனிதர்களாகிய கீழ்மக்கள் வயோதிகர் பாலியர்கள் செப்புமான ஆபரணமணிந்துள்ள மாதர்கள் ஆகிய இத்தகையோர் அடைகின்ற துயரமடைந்தனை, ஊழ்வினையின் தன்மையையும் உணராவில்லையாவுமுணர்ந்துள்ள அறிஞனாகிய நீ இவ்வாறு துயரமுற்றால், "தேசான் றெளிவுந் தெளிந்தான் கணைபுரவுந்-தீராவிடும்பைதரும்" என்

றபடி வேறுயாவர்தான் அத்துயரத்தை யாற்றத்தக்கவர்கள். ஐயா! கேட்பாயாக! உன்மனத்தில் துன்பமடையவேண்டாம், மரணத்தி ரிந்து விசேடித்த மூர்ச்சையடைந்தவரைப் போன்று உனது புதல்வி யாகிய இப்பெண்ணை நானைக்கு நான் வரவழைத்துக் கொடுக்கிறேன் மறுதினம் நீ நமது புதல்வனுக்கு மணமுடித்துக் கொடுப்பாயாக, இவ்விஷயம் சந்தேக முள்ளதென்று மனத்திலெண்ணி வருந்தாதே, விதியும் அவ்வாறே யிருக்கின்றது. இதனை நாம் ஞானவழிவாலறிந் தோம். ஆகையால் இவ்விருத்தையின் சரீரத்தை, எண்ணெய் நிறை ந்துள்ள தோணியில் மூழ்கும்படி வைத்திருப்பாயாக, அக்கன்னிகை யுயிரை அதிவிரைவில் தவம்புரிந்து மீட்டுத்தருவோம் என்றனர். என்னை? "ஒன்னார்த் தெறலுமுவந்தாரை யாக்கலு-மெண்ணிற் றவத் தான்வரும்" என்றாராகலின்.

குச்சகமுனிவர் கூறியதைத் தேர்ந்தபிறகு, அக்கன்னிகையின் பிதாவாகிய உசத்தியமுனிவர் தைலக்கடாரத்தில் தமது புதல்வியை ப்போட்டுப் பாதுகாத்துக்கொண்டிருக்க, பெரியோராகிய குச்சக முனிவர் அவ்விடத்திருந்து சென்று ஓர் தடாகத்தில் மூழ்கியிருந்து கொண்டு, யமனைக் குறித்துத் தவம்புரிய, வளைந்துள்ள காதணியணி ந்த மாதர்களச்சமுறும்படி, முன்வந்த யானைமீண்டும் வாயுவேகமாய் ஓடிவந்து. அத்தடாகத்தில் நிறைந்துள்ள நீரிற்புகுந்து தனது கால் களாற் கலக்கியடித்து, படத்தோடு கூடிய சர்ப்பத்தையொத்த செய் கையமைந்த விசேடித்த வல்லபமுள்ள துதிக்கையினால், இடங்க டோறுந் துழாவி அங்குத் தவஞ்செய்துகொண்டிருந்த குச்சகமுனி வரைப்பிடித்துத் தனதுகழுத்தின் மேலேற்றிக்கொண்டு அதியுன் னதமாய் ஆகாயமார்க்கத்திற் போயிற்று. குற்றமற்றகுணத்தின் மே ம்பட்டவராகிய குச்சகரென்னும் பெயருடைய புராதனரான பெரு ந்தவத்தர் தமது தபோநிஷ்டைகலைந்து, அதன்பின் மதங்கொண்ட யானையைப்பார்த்து, இவ் யானை என்னைப்பிடித்துக்கொண்டு போகி ன்றதே இதற்கென்ன காரணமென்று சிந்தித்து, ஞானத்தின் வல்ல பத்தால் அவ் யானையின் ஊழ்முறைமையைச் சிந்திக்கலாயினர். பெருங்கொலையைப் புரிகின்ற யானைகளின் மதசலமான்து காதவழி தூரம் மண்மீசுகின்ற கலிங்கநாட்டிலே, ஆபத்திற்குதவும் நிகேஷ பம் போன்றமனிதர்கள் வாழ்ந்திருக்கும் அரிபுரம் என்னும் நகரித் தில் வணிககுல திலகனுக்கத் தேவதத்தனென்பவன் ஒருவனுண்டு. அத்தேவதத்த னென்பவன் தவத்தினாற்பெற்ற புத்திரன் தருமதத்த

னென்று உலகத்துள்ள பெரியோர்கள் புகழும்படி தருமம் புரியும் கீர்த்தியுடையவன், வருத்தமடையாமலே அறம்பொருள் இன்ப மென்னும் மூன்றுவகை அநுபவங்களையும் அநுபவிப்பவன். சங்க நிதி, பதுமநிதி என்னும் இரண்டிற்கும் இறைவனாகிய களிப்பின்மிக் கூர்ந்த குபேரனைப் பார்க்கினும் செல்வத்தின் மேம்பட்டவன், அவ னுக்கு மாதாபிதாக்களிறந்தவுடனே, தனிப்பட்டவனாகி மனத்திற் கொடிய துயரமடைந்து, அதன்பின் ஒருவாறு தெளிவுபிறந்த தரு ணத்தில், அத்தருமதத்தனுடைய பெருஞ்செல்வத்தை யொழிப்பத ற்காக, எவர்களுடைய மனமும் மயங்கச்செய்ய வல்ல வாதியொரு வன் வந்து சேர்ந்தான். முண்டிதஞ் செய்துகொண் டிருக்கும் சிர முடையவனாகவும் பஞ்சலோகங்களும் கலந்துசெய்த குண்டலமுடை யவனாகவும் அழகிய முப்புரிநூல் அணிந்துள்ள மார்பை யுடையவ னாகவும் திருவெண்ணீற்றால திரிபுரண்டர மணிந்து விளங்கும் நெற்றி யுடையவனாகவும் சட்டைதரித் துள்ளவனாகவும், நவீன னாகவும், உருத்திராக்க மாலிகாபரணந் தரித்துள்ளவ னாகவும், பிரம்பேந்திய கரமுள்ளவனாகவும், வந்த அவ்வாதியைப் பார்த்து, அவன் பாதங்களை முறைமைப்படி பணிந்தான். அருவமா யுள்ள சிவபிரானைத் தரிசித்தவனைப் போன்று பெருங்களிப்பின் மீக்கூர்ந்தனன், இவர் இந்நில வுலகத்துள்ளாரே யாயினும் மிக வும் நவீனராயிருக்கின்றார், அன்றியும் இவர் தவத்திலும் மேம்பட் டவரென்று சிந்தித்துக்கொண்டு தனது மனையைச் சேர்ந்தான். பொன்னாலாகிய அருமையான உண்டிபாத்திரத்தைத் திருத்தி, தாளி த்த கறிவகைகளுடன் கூடிய போனகத்தைச் சிறந்த இனிமையமை யும்படி படைத்தூட்டினன், உபசாரவார்த்தைகளுங் கூறினன். அத ன்பின்னர் வணிகர்கட்குத் தலைவனாகிய தருமதத்தன் அவ்வாதியை எதிரேபார்த்து, ஓ! முதியோரே! இவ்விடத்திற்கு வந்ததற்குக் கார ணமென்னையென வினாவினன். அதற்கவன் சிவபிரான் நமக்கனுக் கிரகித்த வித்தையொன்று எம்மிடத்திருக்கின்றது, அவ்வித்தை எவர்களிடத்தும் சொல்லத்தக்க தன்மையுடையதல்ல, ஆசாரியனிட த்தில் விசேடித்த அன்புடையவர்கட்கு மாத்திரம் சொல்வது, ஆத லால் மனத்திலே சற்றும் குற்றமற்றிருக்கின்ற உனக்கு அவ்வித்தை யை உபதேசிக்கின்றோம் என்றுரைத்தனன். நாம் சொல்லும் இத் தன்மையே யாகும், சிவபிரானை யொத்துத்தானே தோன்றிய ஒப்பு ற்றபெருமையுற்ற இரதமிருக்கின்றது, அதைப்பொன்னாகச் செய்து விட்டோம், அவ்வாறு செய்வது எமக்கோர் அருமையுமல்ல, அந்த

யெத்தவைகளாய்ப் பலவித்தைக ளிருக்கின்றன, அவ்வித்தைகளை விரதத்துடனிருந்து பெருந்தவம் புரிவோரொழிய ஏனையர் யார்தான் விரும்பமாட்டார்கள். கருநிறங்கொண்ட இரும்பையும் காரீயத்தைப்போலக் காட்டுவோம். அன்றியும் கறுத்த அழகுடைய அவ்விரும்பையே பொன்போன்று மாற்றுரைப்பதற்கு முரித்தாகச் செய்வோம். மேருகயிலாயம் என்று சொல்லப்படும் இரண்டுமலைகளையும் எவர்களும் பார்க்கும்படி காட்டுவோம். இச்செயல்களனைத்தும் நமக்கருமையான வைகளோ? நம்மிடத்திற் கிடைக்கின்ற ஈயத்தையும் இரசத்தையும் வெள்ளியென்றேசொல்லத்தக்கதாய்ச்செய்வோம். அதுவல்லாமலும் அவ்வீயத்திலேயே பொன்னையும் காட்டுவோம், அதிவிரைவிலே அவ்வீயம்வசிக்கும்படிக்கும் செய்வோம். ஆனல்பெரியோர்களிகழ்ந்து கூறுகின்ற வஞ்சகத்திற் பழகும் மனிதர்களுக்கு இவ்வித வித்தைகளைச் சொல்லோம். இரும்பிலே செம்பெடுப்போம், ஈயத்திலும்அவ்வாறேயெடுப்போம், உலகத்தில்வழங்குகின்றனைப்பற்ற லோகங்களை யெல்லாம் முறைமைப்படி அருமையான பொன்னிறமாகச் செய்வோம், இன்னும நாமடைந்துள்ள வல்லபங்களை யெல்லாம் சொலவிரும்புவோமாயின், எண்ணிறந்த வருடங்கள் வேண்டும். ஒருபொன்னைக் கோடிபொன்னுக்குவோம், கோடிபொன்னிருப்பதானல் மலைபோலக் கோடிகோடியாகச் செய்வோம். ஆதலால், உனக்குரித்தா யிருக்கும் பொருளனைத்தையுந் தருவாயாயின், உனது மங்கலம் பொருந்திய மாளிகையில் பொருள்களை வைப்பதற்கிடமில்லை என்று சொல்லும்படி செய்வோம். என்றிவ்வாறு கூறியகளவனுகிய வாதியைத் தருமதத்தன்பணிந்து, பிதிரார்ஜிதமா யுள்ள திரவியங்களையும், தான் தன்னுடைய சுதந்தரத்தால் முயற்சித்தமையின் அதன் பின்னடைந்துள்ள சுயார்ஜிதமான திரவியங்களையும், பெட்டிகளில் நிரம்பியுள்ள ஆபரணவகைகளையும், இமைநேரத்திற்குள்ளாகக்கொண்டுவந்து அவ்வாதிக் கெதிரிலே வைத்தான். அவ்வாறுகொண்டுவந்து வைத்தபெருஞ் செல்வத்தைப் பார்த்தவுடனே, ஓகோ! வைசியகுலத்தின் மேம்பாடடைந்தோர் சேகரித்த திரவியங்களிதானுவென் றுரைத்து, கையோடு கைசேர்த்துத் தட்டி, இராத்திரிகாலத்தில் நட்சத்திரக் கூட்டங்கள் ஒன்றுசேர்ந்ததுபோலச் சிரித்தான். உன்னுடையதாகிய இந்தப் பொருள்கள் நம்முடைய வித்தைக்கு இறையளவும்பற்றுது, நாம்வழக்கமா யுருக்குகின்ற விடத்தில் தவறிச் சிந்திப் போகின்ற அவ்வளவிற்கும் இப்பொருளில்லை, நமக்குப்பின்னே நீ திரிவாயாகில் அளவிறந்த பொருள்கள் கோடிப்

பேகம், ஆதலால் இதை நீயே வைத்துவைப்பாயாக வெனக்கூறினன். ஐயரே! சினங்கொள்ளவேண்டாம், தேவரீர் விரும்புகின்ற விசேட திரவியங்களனைத்தும் இனிமையுடனே தேடிக்கொண்டு வருகின்றேன், இவ்விடத்திற்றானே யிருப்பீராக வெனக்கூறி, தான் தரிக்கத்தக்க வஸ்திரங்களையும் பூஸ்திதிகளையும் இரத்தினங்களையும் ஆபரணங்களையும் வீடுகளையும் பசுக்களையும் ஒப்பற்ற வைசியனாகிய தருமதத்தன் விற்றனன். போர்புரியத்தக்க அதத்தைப்புரிகின்ற நீண்ட தந்தங்களையும் துதிக்கையையுமுடைத்தாய் விசேடித்த மதயபொழிகின்ற யானையை யொத்து மயக்கமுற்றனன். பொருள அதிகமாய்க் கிடைக்குமென்று உண்மையாக நம்பிய தருமதத்தன் தருபொருள்களையும் விற்று, இவ்வுலகத்தின்கண் தருமதத்தனென்னும் பெயரை எக்காலத்தும் நிலைநிறுத்தினன். இவ்வண்ணமாகச் சேகரித்த விசேட திரவியங்கள் யாவையும் கையாலே சுமந்து கொண்டுபோய், வஞ்சகனுக்கு முன்பாக அவன்பார்க்கும்படி வைத்து எதிரிலே நிற்கவும் மனங்களித்தவனாய் அவற்றையெல்லாம் வாங்கிக்கொண்டு, நெருங்கிய செந்நிறச் சுவாலையையுடைய அக்கினியிலே யுருக்கத்தொடங்கினன். அத்திரவியங்களை யெல்லாம் சேர்த்து ஒருண்டையாகச்செய்தான், அச்செம்பொன்னிற் கிரட்டித்த எடை நிறுத்த பாதரசத்தை ஓர்காந்தக் கல்லிற்குப பூசி, அக்கல் முழுமைக்கும் பொன்னைப்பூசி மயக்கி அக்கல்லை வலிவாக வு நட்டி, பெரியதாகச்செய்த ஓர் மண்மூசையில் தன்னிடத்திருந்த மருந்தை உள்ளே போட்டான். அழகாகத் திரட்டிவைத்திருந்த பொன்னுருண்டையை அம்மூசையுள்ளே போட்டு, அம்மூசையின் பக்கங்களிலும யாவராலும் எண்ணுதற்கேற்றதாகிய மேற்புறத்திலும் ஓர்வகைக் களங்கத்தைப் போட்டு மண்தடவிய ஓர் சீலையைக்கொண்டு மூடி, பக்கத்திலேயே காணக்கூடியதான் செந்நிறத்தீயினால் மேலும் பக்கமும் மறைத்தான். இவ்வண்ணமாகத் தனித்தனி நூற்றெட்டுப் புடங்கள் போட்டு அதிவிரைவாக எடுத்துப்பார்த்தான், மிகவும் மாற்றுயர்ந்திருந்தது, அதுகண்ட அவ்வஞ்சகன், ஒப்பற்றவராகியின் அனுக்கிரகத்தால் இனி யாவையும் பழுத்துவிடும் நீ மயங்கவேண்டாம், காற்று வீசாதிருக்கத்தக்க ஓர் உள்ளிடம் காட்டென்று தருமதத்தனைக் கேட்டான். காவலாயிருக்கின்ற ஓர் உள்ளிடத்தைக் காட்டியவுடனே, அவ்விடத்திலேபோய் அழகமைந்துள்ள விறகின் கட்டத்தின்மீது பாலை நிலமரீக்கள் கொளுத்துகின்ற காடாக்கினியாக வளர்கின்னம் ஓர்மருந்துப் புகையை மேலேதூவி அவ்வக்கினியைப் புகையும்

படியாகச்செய்தான். அப்போது அவ்வணிகன் எதிர்நில்லாமல் மோடினான். கண்களில் நீர் விசேடித்துச் சொரியவும், பிராணன் அலையவும், விம்பிதங்கொண்ட சரீரம் வெப்பமடையவும், எவ்விடத்திலும் வியர்க்கவும், பக்கத்திலேயிருந்த வைசியர்கள் தலைவனாகிய தருமதத்தன் ஊமையென்று சொல்லும்படி வார்த்தையாடாதவனாகவும், உள்ளே செல்வதற்குத் தொடங்காதவனாகவும் நின்று பட்டுக்கொண்டிருந்த துயரத்தை எவர்களுரைப்பார்கள். அத்தருணத்தில் அக்கொடியோன் புடத்தில் வைத்திருக்கும் பொன் மூசையை யெடுத்துப் பையத் தனது வஸ்திரத்தில் மறைத்துக்கொண்டான். அதிவிரைவில் மீண்டும் அம்மூசையைப்போல முன்புசெய்து வைத்திருந்ததைப் பக்கத்தில் எடுத்து வைத்தனன். அக்கினியால் விளைந்த விசேடித்த புகையையும் தணித்துவிட்டான். தருமதத்தனே! இம்மூசையை உன் கையினாலேயே தூக்கி அக்கினியின்மீது வைக்கக்கடவாயென்றுரைத்தனன். அவனும் அவ்வாறே செய்தமாத்திரத்தில், முறைமைப்படியே அவ்வாறு புடமிடுவதற்கும் புரியவேண்டிய எவற்றையுஞ் செய்துமுடித்து, விசேடமமையும்படி காவலில் வைத்து ஓர்செய்கை கட்டளையிடுகின்றான். குற்றமற்ற குணமுடையவனே, ஆகாரத்தை வெறுத்து ஒருவருடனும் வார்த்தையாடாதவனாகி மாதர்களை விரும்பாதவனாய் வேறொருவரையுங் காணாதவனாய், இவ்வண்ணம்மூன்று தினங்கள் எம்மையே மனத்தில் நினைத்துக்கொண்டிருக்கக்கடவாய். நறுந்தைலத்தின் மணம் வீசும் சிவந்த சடைமுடியுடைய காளிக்கு முன்னே, விசேடித்த அக்கினியாலாகும் ஒப்பற்ற ஓர் யாகம் முடிக்கும் வழக்கமுண்டு. செய்யத்தக்க கடமையாகிய அவ் யாகத்தை நிறைவேற்றியபிறகு, நான்காவதுதினம் இவ்விடத்திற்கு வருவோமென்றுரைத்தனன். அவ்வாறே செய்வீரென்று, அவ்வாதியின் பாதங்களை மும்முறை பணிந்து, முதன்மையும் பெருமையுமமைந்த வைசியத் தலைவனாகிய தருமதத்தன் அவன்பின்னே தொடர்ந்து செல்லாமல் நின்றுவிட்டான், வஞ்சகம் விசேடித்த மனமுடைய அவ்வாதி அதிவிரைவில் நீங்கினான். அவ்வஞ்சக வாதியானவன், ஒவ்வோர் காததூரம் ஒவ்வோர் நாழிகைக்குள்ளாகக் கடந்து சென்று வெளியுருவத்தை மாற்றிக்கொண்டு ஓடிப்போய் வேறோர் நகரத்திற் சேர்ந்தான்; இவ்விடத்திலே தருமதத்தனென்னும் வைசியன் அவன் கட்டளைப்படி யிருந்தான்.

வாம் மூன்று தினங்கள் கழிந்தவுடனே, போதிவாளென்கிற அப்பெரியவர் தமக்குக் கட்டளையிட்ட மூன்று தினங்கள் அளவுங்கழிந்த தல்லாமல் நான்காவது தினமாகிய இன்றும் வரவில்லையே என்னைப்போலும் அப்பெரியவர் வார்த்தை தவறுவாரா என்று மனம்வருந்தியிருந்து, புராதனமாயும் விசேஷித்த புகழுடையதாயுமுள்ள காளியின் ஆலயத்தனை மேன்மையுமைந்து சிறந்த அங்கமெங்கும் பார்த்துத் தேடினன். காணாமையால் மயங்குசஞ்சுற்ற மனமுடையவனாயினன். அதனாலே மிகவும் வாட்டமுற்றுத் திரும்பித் தனது மாளிகைக்குவந்து சேர்ந்தனன். தன் வீட்டிற்சேர்ந்து முன்பு தான்வைத்த அருமையான மூசையை எடுத்து அதனைப் பார்த்தபோது இது இரும்பாயிருக்க களங்கமற்ற சித்தமுடைய தருமதத்தன் இது மாசையோ என்று அம்மூசையைக் கீழேபோட்டான், அது விழுவதற்கு முன்பாகத் தானும் மூர்ச்சித்து விழுந்தான். அன்னோ! "ஆசையெனும் பெருங்காற்றாடிலவம் பஞ்செனவு மனமலைவுங் காலை, மோசம் வருமிதனாலே கற்றதால் கேட்டதாற் தீர்ந்து முத்திக்கான, நேசமுநல் வாசமும் போய்ப் புலனாயிற் கொடுமை பற்றிவிற்பார்கள், தேசுபழுத்தருள் பழுத்த பராபரமே நிராசையின்றேற்றெய்வமுண்டோ." "கெடுவதாம் பொருட்செல்வமே பல்வகைக் கிலேசமற்றது தன்னை, விடுவதே சுகமெனவு மோர்ந்திலை முனம் விடுத்தவோர்க் குனைப்போலு, நெடிய பூகமதில்லையோ சொல்லுதி நெஞ்சமேயினிப்பற்றற்றடைதுமே லானருளையே பொருளென வருஞ் செல்வமது தானே" "இன்னறநம்பொருளை யீட்டுதலுந் துன்பமே, பின்னதனைப் பேணுதலுந் துன்பமே, மன்ன, தழித்தலுந் துன்பமே யந்தோ பிறர்பால், விழுத்தலுந் துன்பமேயென்" என்றாரகளின். திரவியமுழுவதும் போய்விட்ட மாத்திரத்தில் வைத்தியங்கொண்டமனத்துடனே துயரமுண்டவனும் மெலிந்தனன். ஆபுரி ஜனங்களும் சம்பவித்ததை யால் தருமதத்தனும் தேவலோக முண்டாந்தனன். தரும சொத்துக்களை விற்பனைசெய்த கொடூரச்செய்கையால் கொடுமை யடைந்த தருமதத்தனும் மயக்கங்கொண்ட யானையின் உருவாகிய பிறந்தனன். இப்போது முன்னிருந்த தன்மைகளனைத்தையும் மறந்துவிட்டானென்று தம்முடைய மனதில் அறிந்துகொண்டு, "மன்னுயிரோம்பியருளாள்வார்க்கில்லென்ப, தன்னுயிரஞ்சும்வினை" "என்றபடி இப்பிறவிலும் அறிவில்லா விலங்கு மாத்திரமானேன்," என்று கூறி, தாம்முன்பு தவம்புரிந்துகொண்டிருந்த காலத்தில் அநுஷ்டித்திருக்கும் ஓர் காளைய விரத புலவொழுக்கமுடை, அவை, வல்லபமுள்ள இரதயானைக்குச்சேர்க்

கடவதெனத்திருவாய்மலர்ந்தனர். இவ்வாறு அங்குக்கூறியவளவில், அப்பொழுதே அத்தருமதத்தன் அவ்விடங்கொண்டிருந்த யானையின் சரீரத்தின் உருவத்தைக் கழித்துக்கொண்டவனாய், யாவராலும் சொல்லுதற்கரிதான தேவசரீர முடையவனாயினன். அப்போது தேவதுந்துமிகள் முழங்கின, தேவர்களெல்லாம் மலர்மாரி பெய்தார்கள். தேவலோகத்தினின்றும் தெய்வவிமானம்வந்தது. அவ்விமானத்தின் மீது இந்திரனென்று சொல்லும்படி யேறினன். பசும்பொன்னாகிய ஆபரணங்களணிந்துள்ள அரம்பையர்கள் பலபேர் சூழ்ந்து வெண்சாமரை வீசினார்கள். தேவலோகத்து வசிபோர்களாகிய வானவர்கள் ஆசிவசனங்களுரைத்தார்கள். அப்போது அவ்விடத்திலிருந்த தமதாசிரியராகிய குச்சகமுனிவரின் திருவடிகட்குச் சிரமேற்கரங்குவித்துநமஸ்கரித்தனன். அதன்பின்னும் பெருந்தவத்தன்மையுடைய குச்சகமுனிவரைப்பார்த்து, எவராலும் நீக்குதற்கரிதாயுள்ள தீவினையை நீக்கியருளினீரென்று, தன்வாயில் வந்தவாறே தோத்திரஞ்செய்துவிட்டு, அதிமேன்மையுடன் சிறந்துள்ள தேவர்கள் வசிக்கின்ற தேவலோகத்தைச் சேர்ந்தான். அத்தருமதத்தன் தேவலோகத்திற் சேர்ந்தவளவிலே, இந்நிலவுலகத்திருந்த குச்சகமுனிவர் முன்போலவே அளவுபடாத தவங்களைச் செய்துகொண்டிருக்கவும், அவர் நினைத்துக்கொண்டிருந்த தென்றிசைப்பரிபாலகனான இயமன் பிரசன்னமாயினர்.

பிரசன்னமாகிய இயமன் காமம் வெகுளி மயக்கமென்னும் முப்பகைகளையும் வென்ற முனிவரே, உமது தவநிலைமையைப் பார்த்துக்களிகூர்ந்தோம், நம்மிடத்திலே உமக்குவேண்டிய தெதுவென்று வினவுதலும், அவ்வியமனுடைய திருவடிகளிற் குச்சகமுனிவர் பணிந்து இவ்வாறு கூறலாயினர். உலகெங்கும் தமது கீர்த்தியைப் பரவச்செய்த உசத்தியமுனிவரின் புத்திரியை எனது புத்திரனுக்குக் கலியாணஞ் செய்விக்கவந்தேன், அப்பெண் முற்பட்ட நேற்று இறந்தனள். ஆதலால், அப்பெண்ணை முன்போலவே உயிருடன் தருதல் வேண்டுமென்று கூறியவுடனே, இயமனென்பவன் இத்தவசிரேஷ்டர் விரும்புகின்ற பெண்ணின் உயிரை நேற்று வைத்திருக்கின்றேமே அதை அதிசீக்கிரத்தில் மீட்டுக்கொண்டு இவ்விடத்தில் செலுத்தக்கடவாயென்று தூதுவனுடனே கூறினான். இயமன் இவ்வாறுரைத்து மறைந்தனன், அவன் கூறியவார்த்தையைத் தெளிந்த தூதுவன் முன்னேசென்று அங்கிருந்த அவ்வுயிரைக்கொண்டுவந்து,

அப்பெண்ணின் சரீரத்திற் பிரவேசிக்கும்படி செய்வித்தான். அப்பெண்ணின் யாக்கையில் ஆவி பிரவேசித்தவளவில், சுபாவ அறிவு சற்றுதித்தது, மூக்கில் சுவாசந்தோன்றிற்று, கால்கள் துடித்தன, மார்புபதைப்புற்றது, முகம் அசைவுற்று விளக்கமடைந்தது, சரீரம் துவளலுற்றது, கைகளோங்கின, தோள்கள் அசைவுற்றன, கண்களிமைத்து விழித்தன, இத்தருணத்தில் இளங்கொடியொத்த அப்பெண்ணும் நித்திரை தெளிந்தவளைப் போன்றெழுந்தாள். அங்குள்ளவர்களனைவரும் பக்கத்திற் சூழ்ந்துகொண்டார்கள். அப்போது அப்பெண்ணின்தாயும் அவளைத் தழுவிக்கொண்டு வருந்தினள், பிதாவும் அவளை எடுத்தணைத்துக்கொண்டு பன்முறை உச்சிமோந்து, தனது இரண்டு தொடைகளின் மீது விளங்கும்படி இருக்கவைத்து எனது குருவும் எனது தெய்வமும் எனது தவப்பயனுமாகிய எனதுபிதாவான குச்சகமுனிவர், நேற்று சொல்லிய வண்ணமே தவம்புரிந்து இப்பெண்ணைப் பிழைப்பித்தனரென்று நிச்சயித்துக் கூறினர். புராதனமான உலகத்திலுள்ளோர் பெற்றுக்கொண்ட செல்வம்போன்ற உசத்தியர் பத்தினியார் சூழ்ந்திருக்கும் உறவினரும் அல்லாத மற்றையரும் ஆச்சரியமடையும்படி, தனது புத்திரியாகிய தெய்வப்பெண் போன்றவளது முகத்தைப்பார்த்து, பெண்ணே! நீ இவ்விடத்தில் வந்ததுவும் அதன்பின் இறந்ததுவும் மறுபடி உயிர்பெற்றதுவும் வரிசைப்படவே சொல்லுவாயாக என்று வினவலும், பொன்வளையலணிந்த அப்புத்திரி அதனைக்கேட்டு நடந்த சம்பவங்கள் யாவையும் கூறலாயினள். மிகத்திரண்ட மகளிர்கள் கூட்டத்துடனே தான் சென்றதுவும் விசேடித்த நீர் நிறைந்த காட்டாற்றில் முழுகியதும் அங்கு நின்றும் திரும்பியதும் மதங்கொண்ட யானை வந்ததுவும் அதைப்பார்த்தோடித் தானொருத்திமாத்திரம் தனியாய் விட்டதுவும் அங்கிருந்த கிணற்றில் வருந்தி விழுந்திறந்ததுவும் மறுபடி உயிர்பெற்று வந்ததுவும் இயமலோகத்தில் நடக்கின்ற வகைகளையும் விபரமாகக் கூறினள். இவ்வாறு விவரமாகக் கூறியவார்த்தைகளைக்கேட்டுப் பெருங்களிப்புற்றிருக்கும் தருணத்தில், மாசற்ற பரிசுத்தரான குச்சகமுனிவர் வெற்றி கூறத்தக்க மூன்று தலைகளைப் படைத்த சூலாயுதமேந்திய இயமனுடைய திருவருளைப் பெற்றுச் சேர்ந்தவுடனே, பெரிய உறவினரும் உசத்தியமுனிவரின் பத்தினியாரும் சிறப்புற்ற அம்முனிவரும் இவ்விருவரும் ஈன்றருளிய புத்திரியும் எதிர்கொண்டுவந்து அவர் திருவடிகளிற் பணிந்து துதிபுரிய, அவர்களுக்கு முறைமைப்படி அனுக்கிரகம் புரிந்தனர். அடியே

னுடைய ஆவியும் மிகப்பெருகியிருக்கும் உறவினர்களுடைய ஆவியும் அடியேனுடைய இல்லறத்திற்கிசைந்த பத்தினியின் ஆவியும் அடியேனை நேசித்தவர்களின் ஆவியும் பிழைத்திருக்கும்படி, அடியேன் தவம்பெற்று யீன்றபுத்திரியின் ஆவியைப் பாலித்தருளினீர். அம்மா! இச்செயல் உமக்கருமையோ! கடலாற் சூழும் உலகத்தில் நிலைபெற்றுள்ள ஆன்மாக்களனைத்தையும் பரிபாலித்திரக்ஷிக்கின்றவரும் தேவரீரே யென்று எனமனம் நிச்சயித்தது. வள்ளலே! தேவரீர் திருவுளப்பாங்கை யாவரறிவார்கள், கவுச்சிகரென்னும் உமது புத்திரருக்கு அடியேன் ஈன்ற தெளிந்த அமுதம்போலும் இனிக்கும் வார்த்தைகளையுடைய விருத்தையென்னும் பெயருடைய பெண்ணை இத்திசையிற் றேடிவந்து மருகியாக்கிக்கொள்வதற்கு வந்தீரோ? இயமனாற்சொல்லப்பட்ட அப்பெண்ணின் ஆவியைப் பையச்சரீரத்திற் புகும்படி வரவழைத்துக் கொடுப்பதற்கு வந்தீரோ? ஐயரே! தேவரீரே திருவாய் மலர்வீராக. என்றிவ்வாறாக, செய்தற்கரிய தவத்தின் மேம்பட்ட உசத்தியமுனிவர் குச்சகமுனிவரைப் பார்த்து இதுபோன்ற உபசாரவார்த்தைகள் பலவற்றையும் விரித்தோதி, அம்முனிவரைத் தம்முடனே அழைத்துக்கொண்டு உறவினர் யாவரும் சேர்ந்து புடைசூழும்படி, தமது பத்தினியாரோடும் புத்திரியாரோடும் ஏனையமகளிர்களோடும் அதிதுரிதமாகச் சென்று, தமது மாளிகையுள்ளே சேர்ந்து வீற்றிருந்தனர். அதன்பின்னும் சில தினங்கள் வரையில் குச்சகமுனிவரை அவ்விடத்திலேயே இருக்கும்படிசெய்து, ஓ பெரியவரே! இவ்விடத்திலே அடியேனுடைய புத்திரியைத் தருகின்றேன், உமது புத்திரரை அழைத்துக்கொண்டு வருவீராக என்று உசத்தியமுனிவருரைக்க, அவ்வாறே குச்சகமுனிவர் தமது புத்திரரை அழைத்துக்கொண்டு வந்தவுடன், நல்லதினத்திலே சுபமுகூர்த்தத்தில் விருத்தையென்னும் தமது புத்திரியை அக்கினி சாட்சியாக அன்புடனே வேதவிதிப்படி திருமணம் முடித்துக்கொடுத்தனர். இவ்வாறு திருமணம் முடித்துக்கொடுத்தவுடனே, கவுச்சிகர் விருத்தையென்னும் இவர்களிருவரும் அன்பினுெருப்பட்டுப் பலகாலம் இல்லறம் நடாத்திக்கொண்டிருக்கக் கிருபைபுரிகின்ற குச்சகமுனிவர் பார்த்துப் பெருந்தவம் புரிவதற்காக வடதிசை நோக்கிச் சென்றனர்.

குச்சகமுனிவர் தவத்திற்குச் சென்றவுடனே, இல்லறத்தை நடாத்திக்கொண்டிருக்கும் தூய்மையாளனாகிய கவுச்சிக முனிவருடைய பெருந் தபோபலத்தாலும் விருத்தையென்னும் அவர் பத்தினியா

 14684

ருடைய விரதபலத்தாலும், உலகத்துள்ளார் அதிசயிக்கும்படி எண்ணரிய அழகுடையவராய் மிருகண்டு என்னும் ஓர் புத்திரர் அவதரித்தனர். அப்புத்திரருக்கு ஆறுவருடம் கழிந்தபோது உண்மையான பிரமணீகத்துவம் விளங்குகின்ற தன்மையால் உபவீதச் சடங்கை நிறைவேற்றி, தமது பிதாவையொத்தே கவுச்சிகமுனிவரும் சொல்லுதற்கரிய பெருந்தவஞ் செய்தற்குச் சென்றனர். அறிவுடைமையமைந்த மிருககண்டுவென்னும் பெயருடைய மிக்கதவவல்லபரான கவுச்சிகமுனிவர் வடதிசைக் கேகின பின்னர் அம்முனிவருடைய தோற்றம்போலவே விளங்கும் அவருடைய புத்திரராகிய மிருகண்டு முனிவர் புராதனவழக்கத்தை யாலோசித்து, முதலில் செய்யத்தக்கதான பிரமசரிய ஒழுக்கத்தைப் பாதுகாத்தனர். அதெப்படியென்றால்.—

பெருமையினைப் பொருந்திய காயத்திரியை அநுசந்தானம் பண்ணி, பிரகாசிக்கின்ற நான்குவேதங்களையும் முறையே ஆறு அங்கங்களோடும் பயின்று அவரவர்களுக்குரிய ஒழுக்கத்தில் தவறாது நின்று, மற்றவைகளையும் வேத வேதாங்கங்களில் விதித்த கிரமத்தைப்பாதுகாத்து அவைகளை நன்றாயாராய்ந்து குறையாமல் நிற்றல் பெருமையாகும். யாதொருபிரமசாரியானவன் குலத்திலுயர்ந்தபிராமணர்கள் வீடுகள்தோறுஞ் சென்று பிச்சையேற்ற வன்னத்தைத் தனது ஆசிரியனது உத்தரவைப்பெற்றே புசித்தல் வேண்டும். பழஞ்சோறு, தேன்முதலிய இனிப்பான வைகளை யுண்ணல் குற்றமுள்ளதாகும். சூரியனுக்கு அர்க்கிய பாத்தியமுதலிய கொடுக்காது எதிராகப்பார்த்தல் கிரமமானதல்லவாம். அழகில் சிறப்பினையடைந்த மாதர்கள்மீது ஆசைவைத்தல் கூடாது. தங்களுடைய சுற்றத்தாரோடு புசித்தல் கூடாது. அறிவில்லாதவர்களுடைய கூட்டத்திற் சேர்தலும், அவர்களைத் தங்கள் கூட்டத்தில் சேர்த்தலும் இழிவானதாகும். பெருமைபொருந்திய ஆசிரியனது பாதங்களை விருப்பத்துடனேத்தல் செய்யவேண்டும். தெய்வத்தன்மை பொருந்திய முனிவர்களைக்கண்டால் விரைவாகப் போயவர்களது பாதங்களை வணங்கியவர்கள் பக்கத்தில் நின்று அவர்களுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுப் போகுதல் நன்மையானதாகும். அவ்வகையான முனிவர்கள் நடுவிற்போகுதலும், அவர்களைக்கண்டவுடனே எழுந்திராமல் உட்கார்ந்திருந்தாலும் இவ்வகையான வேறு கெட்டகுணங்களுடையவரானால் அவர்களே இழிந்தவர்களாம். வாசனையோடுகூடிய நல்ல சந்

தூபம், வெற்றிலைப்பாக்கு புஷ்பமாலைகள், பற்கொம்பு, கப்பு முதலியசேர்ந்து பொரிக்கறிகள், பிரகாசம்பொருந்திய பல்லக்கு முதலியவாகனங்களில் ஏற எண்ணங்கொள்ளுதல், குடைபிடித்துக் கொள்ளல், உலகத்திலே பல உயிர்களை இம்சித்தல் முதலியவைகள் ஆகாவாம். விளங்குகின்ற கைத்தண்டிற் கட்டியுள்ள தோலும், உபவீதத்திற் கட்டும் முஞ்சிப் புல்லும் கெடாமலிருக்கவேண்டும். கட்டிலும், பாயும், பலவகைய வாகனங்களும், அலங்காரமான ஆடைகளும், பார்த்ரட்சையும், பல்லாவணைகள் முதலிய ஆகாவாம். கைவிரல்கள், கால்விரல்களாகிய இவற்றிலுள்ள நகங்களை எடுத்தல் கூடாதாம். பகற்காலத்தில் நித்திரைசெய்யலாகாது. அரைஞாணுக்கு மேலிருக்கும்படியான பூணூலும் முஞ்சிப் புல்லும் விளங்கிடவும், மூன்று கண்களையுடைய பரமசிவனைப் பூசிக்கவேண்டும். தங்களுடைய அறிவின் வலிமையால காமமுதலாகிய ஆறுபகையையும் ஜயித்து, வேதத்தில் விதித்தபடி பஞ்சாக்கரத்தையோதி, திருவெண்ணீறு, உருத்திராக்கம் முதலிய தரித்துக்கொண்டு, பிரதிதினம் காலையிலும் மாலையிலும் சமித்துக்களைக்கொண்டு ஓமஞ்செய்து, கங்கையைச் சடாபாரத்திற்றரித்த சிவபிரானைத் தொழுதல் நன்மையானதாம். முப்புரிநூலைத் தரித்தல் அந்தணர்களுக்குப் பதினாறாம் வயதிலாம். தேசங்களையாளும் அரசர்களுக்கு இருபத்திரண்டாம், மிகுந்த செல்வத்தையுடைய வணிகமாக்களுக்கு இருபத்து நான்காம். இவ்வாண்டுகளுக்கு மேற்பட்டால் அவரவர்களுக்கு விதித்த பிராயச்சித்தமின்றி பூணூல் தரித்தல் கூடாதாம். வேதங்களையோதும் வேதியர்களுக்கு கலைமான்தோல், நீண்டவேலாயுதத்தை யுடைய அரசர்களுக்கு சிவப்புவஸ்திரம், செல்வத்தையுடைய வணிகர்க்கு வெள்ளை வஸ்திரம் இவ்வாறாக முப்புரிநூலுடன் அவரவர்கள் அணிந்துகொள்ளவேண்டும். அந்தணர்களுக்கு உயர்ந்த முஞ்சிப்புல்லும், அரசர்களுக்கு சணற்புல்லும், வணிகர்களுக்கு பிரகாசம்பொருந்திய பஞ்சும் பூணூலாகத் தரிக்கத்தக்கனவாம், பயனைத்தரும்படியான ஆத்திமரப்பட்டை, வில்வநார், தருப்பை, தாமரைக்கொட்டை, பெருமைபொருந்தியபொன்முதலிய வைகளை மார்பினிடமாகத் தரித்தால் நன்மையானதாம். சொல்லப்பட்ட வேதியர்களுக்கு பலாசமரமேதண்டமாகும். வெற்றியையுடைய அரசர்களுக்கு அரசமரத்தண்டைக் கையிலேந்தல் நன்மையதாம். பெருமைபொருந்திய வணிகருக்கு மூங்கிலாகிய தண்டமாம். இவ்வகையான தண்டங்களில் தாங்கட்கள் தரித்துக்கொள்ளும் யோவனத்தைக் கட்டிவைத்தல் சிறப்

யுண்டயதாம். இவ்வகைப்பட்ட மாங்களின் தண்டமுபர்ச்சிப்பிரமாணம் அந்தணர்களுக்குத் தங்கள் தலைவரையாம். அரசர்களுக்கு நெற்றிவரையாம். வணிகர்களுக்கு மூக்குவரையாம். விளக்கமமைந்த முப்புரிநூலும் கிரமமாக அந்தணர்களுக்கு ஒன்பதும், அரசர்களுக்கு ஆறும், வணிகர்களுக்கு மூன்றும் என்று வேதங்கள் கூறும். நிலைபெற்ற இருக்கு எசுர் என்னும் வேதங்களை யோதுபவர்கள் ஆவணிமாதத்தில் வரும்படியான அவிட்ட நட்சத்திரங்கூடிய பௌர்ணமையில் முப்புரிநூல் தரித்தலாகும். குறைபாடிலாத சாமவேத மோதுவோர்க்கு புரட்டாசிமாதத்தில் வரும் பௌர்ணமையில் முப்புரிநூல் தரித்தலாகும். இவ்வகையான அக்காலத்தில் பதினைந்து தினங்கள் வரையில் வேதத்தை யவர்கள் ஓதமாட்டார்கள். தேவதர்ப்பணங்கள் செய்யுங்காலத்தில் பூணூல் கிரமப்படி யிருக்கலாம். ஒப்பற்ற இருடிகளுக்குக் தர்ப்பணங்கள் செய்யுங்காலத்தில் பூணூல் தாழ்வடமாக விருக்கவேண்டும். அவரவர்களுடைய பிதிரர்களுக்குத் தர்ப்பணங்கள்செய்யுங்காலத்தில் அழகுபொருந்திய தோளிலிருக்கவேண்டும். வீடுகள்தோறும் பிச்சையேற்றுண்டு பழமைப்பட்ட மூன்று வேதங்களிலொன்றை நன்றாயோதி யுள்ளத்தி லமையும்படி யுணர்ந்த பின்னர் சமாவர்த்தனத்தை விதிப்படி செய்துமுடித்து இல்லறத்திற்கேற்ற கன்னிகை யொருத்தியை மணம்புரியவேண்டும்.

மேற்கூறிப்போந்தபடி பிரமசரிய வொழுக்கத்தை மிருகண்டுமுனிவர் பாதுகாத்து வந்தபின்னர், யாவராலும் சொல்லப்படுகின்ற நூல்களை யுணர்ந்துள்ள, முற்கலமுனிவரின் புத்திரியாகிய மருத்துவதியென்னும் பெண்ணை, இரண்டாவதாகிய கிரகஸ்தாச்சிரம முறைமைதவறாதபடி, மாவுரியாடையினை நீக்கினவரான இவர், அப்பெண்ணிற்குச் சிறந்த ஆடையையும் ஆபரணங்களையும் கொடுத்துக் கலியாணத்தை முடித்தனர். அருமையான தவம்புரிந்துள்ள மிருகண்டுமுனிவர், அநாமயமென்னும் பெயருடனே விளங்குகின்ற தபோவனத்தில் தமது பத்தினியாருடனும் உறவினருடனும், "தாமப்பணிகளொன்றித் தோய்ந்தாலென வொருவார், காபர் மனைவியெனக் கைகலந்து நாயந், தொலையாத வின்பமெலாந் துன்னினர் மண்மே, விலையாமை கண்டவர்போலின்று என்றும், "தயங்கினர்க்கோதை தன்னுடுதருக்கி, வயங்கினர்த்தாரோன் மகிழ்ந்து செல்வழிநாள், வீரொலிகூந்தற்பேரியற்கிழத்தி, மறப்பருந்தேண்மையோ டறப்பரிசாரமும், விருந்து புறந்தரு உம்பெருந்தண் வாழ்க்கையும்,

வேறுபடு திருவின் வீறுபெறக் காண, வுரிமைச்சுற்றமோ டொருதனி புணர்க்க," என்றும் கூறியுள்ளபடி, இல்லறதருமத்தில் யாதொரு வழுவும் நேரிடாதபடி நடத்திக்கொண்டிருந்தனர். அப்போது அம் மிருகண்டு முனிவர் தமக்கு "எழுபிறப்புந் தீயவைதீண்டா பழிபிறங் காப், பண்புடை மக்கட்பெறின்," "தம்பொருளென்ப தம் மக்களவர்பொருள், தந்தம் வினையான் வரும்" "மக்கண்மெய் தீண்டலுடற்கின்பமற்றவர், சொற்கேட்டலின் பஞ்செவிக்கு" என்றபடிக்கு சந்தோஷங் கொள்ளத்தகுந்த புத்திரப்பேறின்மையால் வருத்தமுற்றவராய்க் காசியென்னும் க்ஷேத்திரத்திற் சேரலாயினர். காசியைச் சேர்ந்த மாத்திரத்தில், தேவர்களனைவருங் கூடிக்கடைந்ததாகிய அலைகளையுடைய பாற்கடல்போன்ற கங்கைநீரில் முழுகி நீராடினவராய் பெருந்தவசிகளாயுள்ளார் ஒருங்குகூடி நெருங்கியிருக்கின்ற வீதியினிடத்து அதிவிரைவிற் சேர்ந்தனர். பொன்னரின் திட்சிபோன்று உயர்ந்துள்ள மதிலின்பக்கமாக மணிகன்றிகை என்று சொல்லப்படுகின்ற ஒப்பற்ற திருவாலயத்திற்குச்சென்று பிரதட்சணமாக வந்து, சந்திரனையணிந்த சடைமுடியையுடைய சிவபிரானது பொன்னம்பலத்திற் றாண்டவம் புரிகின்ற திருவடிகளைப்பணிந்து துதித்தனர். உண்மையாகிய வேதங்களையுணர்ந்துள்ள மிருகண்டு முனிவர், அவ்வகையான பெருமையமைந்த திருவாலயத்தின் சமீபமாய் ஓர்பக்கத்தில், சொல்லப்படுகின்ற சிவாகமங்களின் தேர்ச்சியாற் றெளிவமைந்த விதிப்படி மிகச்சிறந்த நீலகண்டக் கடவுளைப் பூசித்தனர். வெய்யில் பனிமழை காற்று என்னும் இவைகட்கு அச்சமுறாத விருட்சங்களைப்போன்று ஆறுபருவங்களிலும், பார்வதியாரை ஓர்பாகத்துடைய எந்து சிவபிரானைத் தியானித்து, ஓர் புத்திரப்பேறெய்தும்படி பெருந்தவம் புரிந்தனர். இவவாறாக ஓர்வருடம் வரையில் அருமையான தவம்புரிந்துகொண்டிருக்கையில், முற்காலத்திருந்த பொன், வெள்ளி இரும்புக்கோட்டையாகிய திரிபுரங்களை யெரித்தருளிய சிவபிரான், அவருக்கு வரமளிக்கும்படி எதிரில் எழுந்தருளலும், பெருந்தவம் புரிகின்ற அம்முனிவர் உடனேபணிந்து துதித்தனர். முற்பட்டு நிற்கின்ற அம்முனிவர் முகத்தைச் சிவபிரான் கண்ணுற்று நீ உன்மனத்தில் விரும்பியது யாதோ அதனைச்சொல்லுவாயென்று திருவாய் மலர்தலும், அடியேன் ஓர்புத்திரனை விரும்பினேன் அவ்வரத்தைப் பாலிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, எமது பிரானாகிய சிவபிரானும் புன்னகைகொண்டு இவ்வாறு திருவாய் மலர்கின்றனர். பெருந்தவத்தையுடைய முனிவனே! நிறையமைந்த குணமே மேம்

யட்டுச்சற்றும் உண்மையறிவில்லாமல், ஊமையாகவும் செவிடாக வும் மூடமாகவும் குருடாகவும், விசேடித்த நூறுவயது வரையில் சம்பவித்த பிணியால் வருந்துபவனுகவும் இவ்விடத்தில் ஓர்புத்திர னைக் கொடுக்கலாமோ? அலங்காரத்துடன் கூடிய சரீர அழகும் விசேடித்துக் குறைபாடற்ற அவயவங்களடைந்து, சரீரத்திற்கு நேரி டற்குரிய வியாதிகளில்லாமல் எம்மிடத்திலும் மெய்யன்புடையவ னுய், பதினறுவருடமே ஆயுளாகப்பெற்றுப் பலசாத்திரங்களைக்கற் றுத் தேர்ந்த ஓர்புத்திரனைக் கொடுக்கலாமோ? இவ்விரண்டில் உன் எண்ணம் எதுவோ? அதனைக் கூறுவாயாக என்று திருவாய்மலர்ந் தனர். மாட்சிமையுடைய தவத்தின் மேம்பட்டவராகிய வேத முணர்ந்துள்ள அம்முனிவரானவர் அவ்விரண்டையு முணர்ந்து ஆயு ளுள் குறுகியிருக்கினும் அறிவுடையவனுய்ச் சரீரத்திற் கியாதோர் குறைபாடுமில்லாமல் எமது பெருமானுன தேவரீரிடத் தன்பூண்ட ஒப்பற்ற புத்திரனைப் பெறவே விரும்பினேன் அவ்வரத்தைப் பாலி க்கவேண்டுமென்று பிரார்த்தித்தனர். என்னே! "பெறுமவற்றுள்யா மறிவதில்லை யறிவறிந்த, மக்கட்பேறல்லபிற" என்றுராகலின். என் றிவ்வண்ணம் முடிவாகக்கூறுதலும், அது திருச்செவியேற்ற சிவ பிரான் உனக்கு நன்மையமைந்த புத்திரனைப் பாலித்தோமென்று திருவாய் மலர்ந்தருளலும், எதிரிலே நின்றிருந்த மிருகண்டுமுனி வர் அப்பெருமானைத் துதித்து மனக்களிப்புற்று, தமக்குப் பொரு ந்தி யுள்ள உறவினரோடும் வாழ்ந்திருந்தனர். அவ்வாறு வாழ்ந்தி ருக்குங் காலத்தில், உலகத்துள்ள துயரங்கள் நிவாரணமாகவும், குற் றமற்ற தருமமார்க்கங்கள் மேம்பாடுறவும், பெருந்தவமுடைய முனி வர் ஈடேறவும் வேதசம்பந்தமான சைவசமயம் விர்த்தியாகவும், முத ல்வராகிய சிவபெருமான் திருவருளாலே இயமன் இறக்கவும் அம் மிருகண்டுமுனிவருடைய பத்தினியார் வயிற்றில் ஓர்கருப்பம் உண் டாயிற்று. அவ்வாறு கருப்பமடைந்தவுடனே அதைப்பார்த் துண ர்ந்த மிருகண்டு முனிவர், அங்குள்ள சிவனடியார்கள் அனைவர்க் கும்வேண்டியபடியே விசேடித்த பலவகைத்திரவியங்களையுங் கொடு த்து, பூரணமாகின்ற மாதங்களிலெல்லாம் செய்யவேண்டிய பும்ஸ வனம், சீமந்தம் முதலிய கிரியைகளையுங் கடமைகளையும் முறைமை ப்படி நடாத்தி, காசியென்னும் க்ஷேத்திரத்தில் வசித்திருந்தனர். விஷத்தைக் கக்கி விளங்குகின்ற பற்களையுடைய கொல்லத்தக்க கோபத்தோடு கூடியபாம்பு கவ்விக்கொள்ள, குறைவற்ற வடி வமைந்த சந்திரன் அமிர்தத்தைப் பொழிந்தது வென்று, இமைய

வரையின்ற டார்வதியாரையொத்த மருத்துவதியென்பவர் கருப்ப
வேதனையில் வருந்தி, வேதங்களைப் புகன்றருளுகின்ற சிறுபுத்திரரை
க்கிருபையுடனே ஈன்றனர். பங்குனிமாதமும் ரேவதிநட்சத்திர
முங் கூடவும், மிதுனராசி நடக்கவும், குறைபாடற்ற சுக்கிரனும
சிறப்புற்றவியாழனும் உச்சமாகிய தானத்தில இனிமையுட னிருக்க
வும், சூரியன் முதலாயிருக்கின்ற மற்றையகிரகங்களும முனிவர்களும்
நாகர்களும் தங்கள் தங்கள் இடங்களிலிலை யிருக்கவும், இவ்வா
றமைந்த சுபதினத்தில் புத்திரன் பூமியிலவதரித்தனர். நவரத்தினத்
தினத் தொகுதிகளையும, பொன்னையும், பொற்சுண்ணங்களையும், புட்
பங்களையும், மகரந்தங்களையும, பரிசுத்தமும மிராதத் தன்மையு
மமைந்த கலவைச்சாந்தையும், குளிர்ச்சியுற்ற கஸ்தூரிக்குழம்பையும்
தனித்தனியாக எடுத்துக்கொண்டு அழிவற்றவர்களான தேவர்களும
மானிடர்களும் ஆச்சரிய மடையும்படி சிதறி ஆரவாரித்தாரகள,
தேவதுந்துபிகள் கோஷித்தன. சிருஷ்டி சுது அவைகளை இரட்சித்
துச் சங்கரிக்கின்ற திருத்திய கர்த்தர்கள் மூவரொழிய மற்றையர்க
ளெல்லாரும் வரிசைவரிசையாக ஆசி கூறினார்கள். இந்த நகரயாத்
திரையல்லாமல கடலாற் சூழப்பட்ட உலகமனைத்தும் என்னகார
ணமென்று அறியமாட்டாமல் களிப்பில மூழ்கிபயச்சமுற்றிருந்தது.
அப்பிதாவாகிய மிருகண்டிய முனிவரும் அச்செய்தியைக் கேட்டு,
ஒலித்தகங்கைநீரில ஸ்நானஞ்செய்து வேதியர்கள் முதலியோர்களை
வர்க்கும்பொன், விதை முதலிய பலவற்றையும் தானஞ்செய்து, சாத
கருமம், காப்பு முதலிய புத்திரோதயச் கிரியைகளை நிறைவேற்றிய
வுடனே, தாமரையாதனமுடைய பிரமன் வந்து அப்புத்திரருக்குரித்
தான பெயர் மார்க்கண்டேய ரென்று வழங்கும்படி செய்தனர். அச்
செல்வக்குழந்தை தொட்டிலிற்கிடந்து தாய சிவபிரானுறைப் பிரிந்
தவருக்குக் குறிப்பு வெளிப்பட அழுதும, இனிபாசப பிணிப்பையும்
மயக்கப்பற்றையுமுதறி யுதைத்துத்தள்ளுங்குறிபபும், இயமனைவன்
சிவபரம் பொருளால் தன்னிமித்தம் உதைத்து ஒழுக்கப்படுவமெனன்
னுங் குறிப்பும் வெளிப்படுத்துவதுபோற் கையுதறிக் காலுதைத்து
ஆடியும, உலகர் பேய்மதியையும், இயமன் பாசமிலதனிடத்தி
லுண்மைபத்தி செலுத்துவோரை யவமதித்துத் துன்புறு மவமதி
யையுங் கண்டு நகைப்பார்போல் நகைத்தும, பிறவித்துன்பத்திற்கும்
பின்னர் தாம் இயமனாலும, அவனதூதராலும் வருந்தவேண்டிய
துன்பத்திற்கு மஞ்சுவார்போலஞ்சியும, பயமும் வஞ்சங்களும் கவி
ழ்ந்திருப்போல் முகங்கவிழ்ந்தும், சிவனார் தய்யை பாசப் பிணிப்பினி

ன்று விடுவிக்குமருளொளிகண்டு தலையெடுத்தசைத்துச் செங்கீரையாடியும், மேற்சிவயோகத்தும் சிவபூசையிலும் தோத்திரத்திலுறும் பணியிலும் தாமிருக்குஞ்செய்தி வெளிப்படவிருந்து சப்பாணிகொட்டியும், தாய்முகநோக்கிப் புன்முறுவல்செய்து பாலுண்டும் மகிழச்செய்து களங்கமற்ற சந்திரனைப்போன்று வளர்ந்து வந்தனர். இங்ஙனமாக அருமகப்பெற்றோரும் அவ்விடமுற்றோரும் பூரணசந்திரனைக்கண்ட சமுத்திரம்போன்று மகிழ்ச்சிபொங்க நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக அச்சைவக்கொழுந்தாகிய மார்க்கண்டேயமுனிவரை வளர்த்து நான்காமாதத்திற் சந்திபித்தலையும், சந்திர தரிசனைபண்ணுவித்தலாகிய உபசிட்டானத்தையும், ஆறுமாதத்தில் விதிப்படி உருத்திரப் பல்கணத்தாராகிய சிவனடியாரை உண்டிவினையாதியாற் பூசித்து, அம்மகேசுரப் பிரசாதத்தால் அன்னப்பிராசனமென்னும் சோறூட்டுதலையும் செய்வித்தார்கள். சரியாசப் பன்னிரண்டு மாதங்களும் நிறைந்த முதல்வருடத்தில் நீண்ட தலைமயிர் வாங்குதலென்னும் கேசரிக்கிரியையும் முடித்து, சிறப்பமைந்த இரண்டாம் வருடத்தில் காதுகுத்துதலென்னும் கர்ணவேதனக் கிரியைச்செய்தனர். அக்குழந்தைப் பெருமானும் அப்பால் தவழ்பருவங்கடந்து தளர்நடைப் பருவ மடைதலும் கொந்தளமாகிய சூழியம்விளங்க, காதிற்சிறுகுதம்பை யூசலாட மார்பினிற் படைமாதாணி முத்தாரங்கள் மழலைவழிவோடமுத செய்யக் கையிற் கடகமின்ன, அரையின் மணிக்கோவை சிற்றோசைசெய்யக் காலிற் சிறுசதங்கையோடு தண்டைகலீலென வொலிப்பத்தத்தடியிட்டு நடந்துமோடியும், வீதியிற் சிறுதேருருட்டியும், பேதைச் சிறுமியரிழைத்தாடுஞ் சிற்றிலழித்தும், நற்றாய் செவிலித்தாய முதலியரோடுபின்சென்று அழைப்பவோடி பொளித்தும் பேதையர் வண்டலாட்டு விருந்தாயும், ஏனைய முனிச்சிறரோடு வேறுபலவிளையாடியும், திருமேனி புழுதியாடி, அன்னைமார் பலரும் வேண்டி, "ஐயவருக அண்ணல்வருக அமுதவருக வருகவே, அப்பவருக அழகவருக அந்தவருகவருகவே செப்பவருக தேசவருக செல்வவருக அல்லல்தீர், தீர்த்தவருக மூர்த்திவருக சீல்வருக வருகவே, தூய்யவருக சோதிவருக துணைவவருக மகவிலாத், துக்கமகல வந்தவின்ப சுகசொரூபவருகவே, வையமுழுதுமுய்யவந்த வள்ளால் வருகவருகவே, மாசிலாத மார்க்கண்ட வருக வருகவருகவே" என்று அழைக்கவோடி அவரவர்களுக்கு முத்தமளித்தாடியும் வந்தனர். பழுதற்ற ஐந்தாம் வருடத்தில் உபவீதம் தரித்தலாகிய பூணூல் கலியாணமும், வித்தியாரம்ப

முஞ் செய்வித்து யாவராலும் சொல்லப்படுகின்ற நாலுவேதங்ம். ஆறு அங்கம், அஷ்டாதசபுராணங்கள், ஸ்மிருதிகள், இதிகாசங்கள், இலக்கியங்கள், இலக்கணங்கள், ஜோதிஷம், கணிதம் வைத்தியம், சாமுத்திரிகா சாஸ்திரம், இரத்தினப்பரிட்சை, முதலிய அறுபத்து நான்கு கலைகளையும் கற்று வல்லவரானார். அப்படி அந்நூல்களை யெல்லாம் அவர்மனதித் பதியும்படி போதிக்குங் காலையில் வேதங்களும் ஏனையநூல்களும் உட்கொண்டிருக்கும் சிறந்தபொருளை யுணர்ந்தவராய் மேன்மையமைந்த முழுமுதறகடவுள் சிவபிரானை யென்று கருதி அப்பெருமான் திருவடிகளை காப்பென்றடைந்தனர். என்னை, "வேதமோதிலென் சாத்திரங்கேட்கிலென், நீதிநூல் பலவித்தல் பயிற்றிலென், ஞோதியங்கமோராறு முணரிலென், ஈசனை யுள்குவார்க்கன்றியில்லையே" என்றாராகலின். பிறவிப் பிணியைப் போக்கவந்தவராகிய மார்க்கண்டேய முனிவர் சிவபெருமானை முதலிற்பணிந்து, அதன்பின் அப்பெருமானடியார்களை வணங்கி, அதன்பின் தங்கள் குலகுருவை நமஸ்கரித்து, அதன்பின் குற்றமற்ற பெரியோர்களை வந்தித்து, தம்மைப்பெற்ற இருமுது குரவரின் திருவடித் தாமரைகளைச் சிரமேற் சூடிக்கொண்டு பிரமசரிய ஒழுக்கத்தை எப்போதும் பாதுகாத்தனர். இவ்வாறு நிகழுங்காலத்தில் பதினாறுவதானவருஷமும் பிறந்தது. அவ்வண்ணம் பதினாறும் வருஷம்பிறந்ததைக்கண்டு அப்புத்திரரைப்பெற்ற பிதாவும் மாதாவும் வெவ்வேறாகவிருந்து, வெறுமனே மிகவும் கொடிதான துன்பசாகரத்திலே வீழ்ந்து பொருமலுடனே வருந்தி மெலிந்தனர். அவ்வண்ணம் துக்கிப்பதை அப்புத்திரர் பார்த்து அம்மாதா பிதாக்களின் பக்கத்திற் சேர்ந்து அவர்கள் திருவடித்தாமரைகளைப் பணிந்து, நீங்களிருவரும் துயரமடைகின்றீர்கள், இவ்விடத்தில் இதற்கென்ன காரணம், அடியேன் இன்னும் யாதொன்றையும் அறிந்து தெளிய கில்லேன். ஆதலால் துக்கிப்பதை விலக்குங்கள், உங்களுக்குச் சம்பவித்ததைக் கூறுமென்றுரைத்தனர். புத்திரனே, நாங்கள் சொல்லிய வார்த்தையை மனத்தில் வைத்துக்கொண்டு அவ்வாறு நீ நடந்துகொண்டிருக்க, எங்களிடத்தில் வேறொருதுன்பம் சம்பவித்து அதனால் வருந்துவதும் உண்டோ? முற்காலத்திலே இடபவாகனத்தை யுடைய நின்மலமூர்த்தியாகிய சிவபிரான் உனக்கு வயது பதினாறென்று வரம் பாலித்தனர், அவ்வருடம் வந்ததனாலே துயரமடைந்தோம். என்று கூறிய பிதாவின் துக்கமுடைய முகத்தைப்பார்த்து, யாதொன்றுக்கும் நீங்கள் வருந்தவேண்டியதில்லை, ஆன்மாக்கட்கெல்லாம் யமமா

ண்மாவாக எக்காலத்திலு மிருக்கின்ற சிவபிரானைத் துதித்துப் பூசை யை நிறைவேற்றி, யமனுடைய பெருவல்லபத்தைப் போக்கி அதி விரைவில் உங்களிடத்திற்கு வருகின்றேன். நீங்கள் இவ்விடத்திற் றானே யிருப்பீர்களென்று பலவித நியாயங்களையுங்கூறி அவர்களிரு வர்மனத்தையும் மிகவும் தேறும்படி செய்து அவர்கள் திருவடிகளை முறைமைப்படி பணிந்து எதிரிலே நிற்கையில் அவரைப்பெற்றமேன் மையுடையவர்களாகிய அவ்விருவரும் அழகின்மேம்பட்ட புத்திரரை த்தழுவிக்கொண்டு உச்சிமோந்து முன்பு தாங்கள்கொண் டிருந்த துயரமும் அகன்று மனமகிழ்ந்தார்கள். தமது மாதாபிதாக்களின் கட்டளையினால் சிவபிரானென்னும் ஒப்பற்றவருடைய திருவருளும் மெய்யன்பும்" என்னையேது மறிந்தில னெம்பிரான், றன்னை நானு முன்னேது மறிந்திலே, னென்னைத் தன்னடியானென் றறிதலுந், தன்னை நானும் பிரானென் றறிந்தேனே" என்றபடி தம்முடனே உற்றதுணையாய் வரும்படி சமானரகிதமான களிப்பானது விசேடி க்க அதிவிரைவிலே அங்குநின்றும் வெளிக்கொண்டுசென்று, திரு மணிகன்றிகை என்னும் பெயருடைய பசும்பொன் மயமாயுள்ள திருவாலயத்திற் சேர்ந்தனர். எலும்புகளெல்லாம் நெக்குவிட்டுருக வும் கண்களில் ஆனந்தபாஷ்பம் சொரியவும் அவ்வாலயத்தைப் பிர தக்ஷணமாகவந்து, சிவபிரான்சந்நிதிக்கெதிரிலேநமஸ்கரித்துத் தமது சென்னியின்மீது அப்பெருமான் திருவடிகளைத் தரித்துக்கொண்டு அவ்வாலயத்திற்குத் தென்புறமாக ஓர்பக்கத்தடைந்து சிவலிங்கம் பிரதிஷ்டைசெய்து, அம்மூர்த்தத்தை மெய்யன்புடன் பூசித்துத் துதி த்து அருமையான தவம்புரிந்தனர். அதெப்படியென்றால்,—

சூரியனுதிக்குமுன் ஐந்துநாழிகை யுண்டென்னுங் காலமாகிய பிராமீமுகூர்த்தத்திலே நித்திரை விட்டெழுந்து, இயன்ற சரீரசுத்தி செய்து விபூதி தரித்துக்கொண்டு தத்தமக்கு அதிகாராநுகுணமாகச் சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித்துத் துதித்து வணங்க வேண்டும். அப்புறம் "ஒன்றாவுலகனைத்து மானோர் தாமே யூழி தோறூழியுயர்ந்தார் தாமே, நின்றாகி யெங்கு நிமிர்ந்தார் தாமே நீர் வளிதீயாகாசமானார்தாமே, கொன்றாடுங் கூற்றையுதைத்தார் தாமே கோலப்பழனை யுடையார் தாமே, சென்றாடு தீர்த்தங்களானார்தாமே திருவாலங்காடுறையுஞ் செல்வர்தாமே" என்று தியானித்து நதி, குளம், ஓடை, புண்ணியதீர்த்தம், கிணறுமுதலியவற்றில் முழுகிவிபூ தியை முதலில் உத்தூளனஞ்செய்துபின் "மந்திரமாவது நீறு வான

வர் மேலதுநீறு, சந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு, தந்திரமாவதுநீறு சமயத்திலுள்ளதுநீறு, செந்துவர் வாயுமை பங்கன் றிருவால வாயான்றிருநீறே'' என்று கற்பம், அநுகற்பம் முதலிய வகையில் சேகரித்துள்ள விபூதியைப் பரிசுத்தம் பொருந்தியதும், வடிகட்டியதுமான ஜலத்தைக்கொண்டு குழைத்து, கூர்மாதனத்திலேவடக்கு நோக்கி யிருந்துகொண்டாவது கிழக்கு நோக்கியிருந்து கொண்டாவது அனுஷ்டானத்தை விதிப்படி செய்யவேண்டும். விதிப்படி தேடியெடுக்கப்பட்ட உருத்திராக்கமாலை தரிக்கவேண்டும் பிறகு, கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ முதலியவற்றில, மரத்தின் மீதேறுதலும், மடங்கல், மயிர்ச்சிக்கு, வாடல், சிலந்திக்கூடுக் கட்டியிருத்தல் முதலிய குற்றங்களின்றிய, வில்வம், இலந்தை, மா, கிளுவை துளபம், பட்டி, நாயுருவி, வன்னி, மந்தாரம், எலுமிச்சை, நாரத்தை, கோங்கு, மாதுளை, அசோகு, புன்னை, விளா, பொன்னூவிரை, தாமரை, செவ்வல்லி, முல்லை, கார்தள், கருநெய்தல், இருவாட்சி, கொன்றை, பொற்றாமரை, வெண்டாமரை, தாளி, அறுகு, தும்பை, விஷ்ணுகாந்தி, கொக்கிறகு, நந்தியாவட்டம், முதலிய புட்பங்களைச் சுத்தவிடங்களினின்றும், வண்டுகள் மொய்க்காதபடி, கொள்ளத்தக்க நாட்களில் அவையவைகளைக்கொண்டு, திருப்பூங் கூடையிற் சேமித்து வைத்து, இண்டைமாலை, கண்ணி, தொடையல், பிணையல் முதலிய மாலைகளாகச் சமைத்து வைக்கக்கடவர்கள். சுவாமிக்கு நிவேதனத்திற்கு வேண்டிய, அப்பவர்க்கம், எள், பொரி, அவல், முதலிய சாமக்கிரியைகளையும் முன்னதாய்ச் சேகரித்து வைத்துக்கொள்ளவேண்டும். சிவபூசை செய்யுமிடத்தைக் கோமயங் கொண்டு மெழுகி, பச்சரிமா, பருப்புப்பொடி, செழ்வரகுப்பொடி, முதலியவைகள் கலந்தகோலத் திரவியங்களைக்கொண்டு விசித்திர கோலங்களிட்டு, மாவிலை தோரணம், வாழை, தெங்கு, கமுகு முதலியவற்றால் பூசாவிதானம் சமைத்தல்வேண்டும். அவ்வகையில் அமைக்கப்பட்டிருக்கும் பூஜாவிதானத்தில் பூசைப்பெட்டகத்தை யோர் உயர்ந்த பீடத்தின்மீது எழுந்தருளப் பண்ணி, அதனருகில் இருபுறத்தும் திருவிளக்குகளை, நெய்யினாலும், பரிசுத்தம் பொருந்திய எண்ணெய்யாலும் அழகுபெற ஏற்றிவைத்தல்வேண்டும். பிறகு வடக்கு முகமாக ஆசனத்திருந்து, தேகசுத்தி, ஆத்தமசுத்தி, ஆசனசுத்தி, திரவியசுத்தி முதலிய சுத்தி வகைகளைச்செய்து சிவபிரானைத் திரிகரணசுத்தியுடன் தியானித்து "தோடுடைய செவியன் விடையேறியோர்தூவெண்மதிசூடிக், காடுடைய சுடலைப்பொடி பூசி யென்னுள்

ளங்கவர்கள்வ, னேடுடைய மலரான் முனநாள் பணிந்தேத்த வருள்
செய்த, பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே", "முன்னை
த்தானை யெல்லார்க்குமுன்னே தோன்றி முதிருஞ்சடைமுடி மேன்
முகிழ்வெண்டிங்கள், வளைத்தானை வல்லசுரர் புரங்கண் மூன்றும்
வரைசிலையா வரவமா நாணாக்கோத்துத், துளைத்தானைச் சுடுசரத்
தாற்றுவள நீறாத்தூமுத்த வெண்முறுவலுமையோடாடித், திளைத்
தானைத் தென்கூடற்றிருவாலவாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றே
னானே" என்று தோத்தரித்து பூதசுத்தி செய்து, "பனைக்கை மும
மதவேழமுரித்தவ, னினைப்பவர் மனங்கோயிலாக் கொண்டவ, னனை
த்தும் வேடமாமம்பலக்கூத்தனைத் தினைத்தனைப்பொழுதும் மறந்துய்
வனோ" என்று உட்பூசை செய்யவேண்டும். "மூவெயில் செற்ற
ஞான்றுய்ந்த மூவரிலிருவர் நின்றிருக்கோயிலின் வாய்தல், காவ
லாளரென்றேவியபின்னை யொருவனீ கரிகாடரங்காக, மானைநோ
க்கியோர் மாநடமகிழ மணிமுழா முழக்கவருள்செய்த, தேவதேவ
நின்றிருவடி யடைந்தேன் செழும்பொழிற்றிருப்புன் கூருளானே"
என்று துவாரபூசைசெய்து, "பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே
பரமயோகி, யெத்தினாற் பத்திசெய்கேனென்னை நீ யிகழவேண்டாம்,
முத்தனே முதல்வா தில்லை யம்பலத்தாடுகின்ற, அத்தாவுன் னாடல்
காண்பானடியனேன் வந்தவாறே" என்று சிவோகம் பாவனைசெய்
து, "ஆவாகி யாவினிலைந்துமாகி யறிவாகி யழலாகி யவியுமாகி, நா
வாகி நாவுக்கோருரையுமாகி நாதனாய் வேதத்தினுள்ளானாகிப், பூவா
கிப் பூவுக்கோர் நாற்றமாகிப் புக்குளால் வாசமா நின்றானாகித், தே
வாகித் தேவர் முதலுமாகிச் செழுஞ்சுடராய்ச் சென்றடிகணின்ற
வாறே" என்று திரவியசுத்திசெய்து, "பேராயிரம் பரவி வானோ
ரேத்தும் பெம்மானைப் பிரிவிலாவடியார்க்கென்றும், வாராத செல்
வம் வருவிப்பானை மந்திரமுந் தந்திரமு மருந்துமாகித், தீராநோய்
தீர்த்தருள வல்லான்றன்னைத் திரிபுரங்கடீயெழத்திண் சிலைக்கைக்கொ
ண்ட, போரானைப்புள்ளிருக்கும்வேளூரானைப்போற்றாதேயாற்றநாள்
போக்கினேனே" என்று மந்திரசுத்தி செய்யவும். பச்சைமண்ணாலா
கிய விலிங்கமாவது, சுட்டமண்ணாலாகிய விலிங்கமாவது, மரத்தா
லாகிய விலிங்கமாவது, சிலையாலாகிய விலிங்கமாவது, அழகியசெம்பு,
வெள்ளி, பொன்முதலிய உலோகங்களினாலாகிய விலிங்கமாவது,
இரத்தினங்களாலாகிய விலிங்கமாவது, மணியினாலாகிய விலிங்கமா
வது, வாணலிங்கமாவது, இரசலிங்கமாவது, சுயம்புலிங்கமாவது
ஆகிய இவைகளிலொன்றைப் பிராமணர்கள் பன்னிரண்டு பதினா

MAHAMAHOPADHYAYA

ன்று, பத்துமாகிய மூவிதவங்குலவுயரத்தில் தாபிக்கவும். அரசர்கள்
ஒன்பது, எட்டு, ஏழு ஆகிய மூவிதவங்குல வுயரத்தில் தாபிக்கவும்.
வைசியர்கள் ஆறு, ஐந்து, நான்கு மாகிய மூவகை யங்குல வுயரத்
தில் தாபிக்கவும். சூத்திரர்கள் மூன்று இரண்டு ஓரங்குல வுயரத்தில்
தாபிக்கவும். நான்கு வருணத்தாருக்கும் முறையே முதற்கட்கூறிய
பன்னிரண்டு ஒன்பது ஆறு என்னும் அங்குலவளவுகள் உத்தமமாம்.
இடைக்கட்கூறிய பதினொன்று எட்டு ஐந்து இரண்டு என்னும நான்
கும் மத்திமமாம். கடைக்கட்கூறிய பத்து ஏழு நான்கு ஒன்று என்
னும் நான்கும் அதமமாம. மேலும், ஓரிலிங்கம் பூசிக்கில் முத்தி
யுண்டாம். இரண்டிலிங்கம் பூசிக்கில் வியாதியுண்டாம. மூன்றி
லிங்கம் பூசிக்கிற் புத்திமுத்தி இரண்டுமுண்டாம். நான்லிங்கம் பூசி
க்கில் ஆயுவும் செல்வமும் கீர்த்தியும் நசிக்கும். ஐந்திலிங்கம் பூசிக்
கிற் பஞ்சமகாபாதகம் நீங்கும். ஆறிலிங்கம் பூசிக்கில் மரணமுண்
டாம். ஏழிலிங்கம் பூசிக்கிற் பாவநாசமாம். எட்டிலிங்கம் பூசிக்கில்
வியாதியும் சத்துருவுமுண்டாம். ஒன்பதிலிங்கம பூசிக்கின் இட்ட
மும் சிவலோகமும் உண்டாம். மேற்கூறிப்போந்த இலக்கணங்களை
யுடைய தொருலிங்கத்தைத் "பந்தபாசமறுத்தெனை யாட்கொண்ட
மைந்தனம் மணவாளனை மாமலர்க், கந்தநீக் கடுவாய்க் கரைத்தென்
புத்தூர், எந்தை யீசனைக்கண்டினிதாயிற்றே" என்று அபிடேக பீட
த்தின் மீதெழுந்தருளச்செய்து, "இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
யியமானனா யெறியுங் காற்றுமாகி, யருநிலைய திங்களாய் ஞாயிறாகியா
காசமா யட்டமூர்த்தியாகிப், பெருநலமுங் குற்றமும் பெண்ணுமா
ணும் பிறருருவுந் தம்முருவுந் தாமேயாகி, நெருநலையா யின்றாகி நா
ளையாகி நிமிர்புன் சடையடிக ணின்றவாறே" என்று இலிங்கசுத்தி
செய்து, "அட்டமாமலர்சூடி யடம்பொடு, வட்டப்புன் சடைமா
மறைக்காடரோ, நட்டமாடிய நான்மறை பாடியு, மிட்டமாகவிருக்
குமிடமதே" என்று அஷ்டபுஷ்பஞ்சாத்தி, எந்தமது சிந்தை பிரி
யாத பெருமானென விறைஞ்சி யிமையோர் வந்து துதிசெய்ய வளர்
தீபமொடுதூப மலிவாய்மையதனா, லந்தியமர் சந்தி பலவர்ச்சனைகள்
செய்ய வமாகின்றவழகன், சந்தமலி[illegible]ந்தளநன் மாதினொடு மேவு
பதிசண்பை நகரே" என்று தூபதீபங்கொடுத்து, "ஆடினாய் நறு
நெய்யொடுபால் தயிரந்தணர் பிரியாத சிற்றம்பல், நாடினாயிடமா
நறுங்கொன்றை நயந்தவனே, பாடினாய் மறையோடுயல் கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்டிங்கள், சூடினாயருளாய் சுருங்க
வெந்தொல்வினையே" என்று எண்ணெய்க்காப்பிட்டு "செய்ய மேனி

யன்றேனொடுபால் தயிர், நெய்யதாடிய நீலக்குடியரன் மையலாய் மறவா மனத்தார்க்கெலாங், கையிலாமலகக்கனியொக்குமே" என்று நெல்லிக்காப்பிடவும். பிறகு "பாவமும் பழிப்பற்றறவேண்டுவீர், ஆவிலைஞ்சுகந்தாடுமவன் கழல், மேவராய்மிகவும் மகிழ்ந்துள்குமின், காவலாளன் கலந்தருள் செய்யுமே" என்று பஞ்சகவ்விய அபிடேகஞ்செய்து "பாலினானறு நெய்யாற்பழத்தினாற் பயின்றாட்டி, நாவினான் மணமாலை கொணர்ந்தடியார் புரிந்தேத்தச், சேவினார் வயல் புடைசூழ் செங்காட்டங் குடியதனுட், காலினாற் கூற்றுதைத்தான் கணபதீச்சரத்தானே" என்று பஞ்சாமிர்தத்தாலும், "நெய்யாடிநின்மலனே நீலகண்டா நிறைவுடையாய் மறைவல்லாய் நீதியானே, மையாடு கண்மடவாள் பாகத்தானே மான்றோலுடையாய் மகிழ்ந்து நின்றாய், கொய்யாடு கூவிளங்கொன்றை மாலைகொண்டடியே னானிட்டுக்கூறி நின்று, பொய்யாத சேவடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்று நெய்யாலும், "பாலையாடுவர் பன்மறையோதுவர், சேலைபாடிய கண்ணுமை பங்கனார், வேலையார் விடமுண்டவெண்காடர்க்கு, மாலையாவதுமாண்டவராங்கமே" என்று பாலாலும், "நெய்யும் பாலுந் தயிருங்கொண்டு நித்தம் பூசனை செய்யலுற்றாற், கையிலொன்றுங் காணமில்லைக்கழலடி தொழுதுய்யினல்லா, லைவர்கொண்டிங் காட்டவாடி யாழ்குழிப்பட் டழுந்துவேனுக், குய்யுமாறொன்றருளிச் செய்யீரோண காந்தன் றளியுளீரே" என்று தயிராலும், "வான நாடனே வழித்துணை மருந்தே மாசிலாமணியே மறை ப்பொருளே, யேனமா வெயிறாமையு மெண்புமீடுதாங்கிய மார்புடையானே, தேனெய்பால் தயிராட்டுகந்தானே தேவனே திருவாவடுதுறையு, ளானையே யெனையஞ்ச லென்றருளா யாரெனக் குறவமரர்களேறே" என்று தேனாலும், "ஆலைப்படுகரும்பின் சாறுபோல வண்ணளிக்கு மஞ்செழுத்தி னாமத்தான்காண், சிலமுடை யடியார் சிந்தையான் காண்டிரபுர மூன்றெரி படுத்த சிலையினான்காண், பாலினொடு தயிர் நறுநெய்யாடினான் காண் பண்டரங்க வேடன். பலிதேர்வான்காண் வேலைவிடமுண்ட மிடற்றினான்காண் விண்ணிழி தண்வீழி மிழலையானே" என்று கருப்பஞ் சாற்றினாலும், "கனியினுங் கட்டி பட்ட கரும்பினும், பனிமலர்க் குழற்பாவை நல்லாரினுந், தனிமுடி கவித்தாளு மரசினும், இனியன் றன்னடைந்தார்க் கிடைமருதனே" என்று, கிச்சிலி, நாரத்தை, தமரத்தம், முதலிய பலவகைக்கனிகளாலாகிய சாற்றினாலும், "நெய்யினொடு பாலிள நீராடினான்கா ணித்தன் மண

வூழவெனை நிற்கின்றான்காண், கையின் மழுவாளொடு மானேந்தி
னான்காண் காலனுயிர் காலாற்கழிவித்தான்காண், செய்யதிருமேனி
வெண்ணீற்றினான்காண் செஞ்சடைமேல் வெண்மதியஞ் சேர்த்தி
னான்காண், வெய்யகனல் விளையாட்டினான்காண் விண்ணிழிதண்வீழி
மிழலையானே'' என்று இளநீராலும், நன்றாய்த்தெள்ளிச் சுத்தஞ்
செய்து, புனுகுசட்டம், பனிநீர் முதலிய வாசங்கள் கலந்துள்ள மிக
வும் வெள்ளிய விபூதியாலும், "தொண்டனேன் பட்டதென்னே
தூயகாவிரியினன்னீர், கொண்டிருக்கோதி யாட்டிக் குங்குமக் குழ
ம்பு சாத்தி, மண்டைகொண்டேற நோக்கி மீசனை யெம்பிரானைக்,
கண்டனைக் கண்டிராதே காலத்தைக் கழித்தவாறே'' என்று, குங்கு
மப்பூ, பச்சைக்கற்பூரம் முதலிய கலந்துள்ள சந்தனக்குழம்பினாலும்
அபிடேகஞ்செய்து "தொங்கலுங் கமழ்சாந்து மகிற்புகையுந் தொண்
டர்கொண், டங்கையாற் றொழுதேத்த வருச்சுனற் கன்புருள் செய்
தான், செங்கயல் பாய்வயலுடுத்த செங்காட்டங் குடியதனுட், கங்
கைசேர் வார்சடையான் கணபதீச்சரத்தானே'' என்று சந்தனம்,
அகில், சாம்பிராணி, குங்கிலியம் முதலிய கலந்த தூளால் தூபங்கொ
டுத்து, "தடங்கொண்டதோர் தாமரைப்பொன் முடிதன்மேற், குட
ங்கொண்டடியார் குளிர்நீர்சுமந்தாட்டப், படங்கொண்டதோர் பாம்
பரையார்த்த பரமனிடங்கொண் டிருந்தான் றனிடைமருதீதோ''
என்று சுத்தஜலத்தால் "பந்தமறுமரர்பிருடர் பவுருருத்திரர்களொரு
பதினொருவர் மிளிர்பீடமேற், படியில்லை வகைப்படு மீசர்தாநிதம்
பத்திலெண் வித்தையிறைவர், சந்தமுறு கோமுகத்தைங்கலைகள் சந்
திசாதாக்கிய மூர்த்திவதனந, கட்டற்ற வட்டந்தி லொட்டற்ற சிற்
சத்தி தானுற்ற நாளத்திலே, நந்தலற வருகோளகந்திகழ் சிதம்பர
நற்கிகையினிற் சூனிய, நட்டமற வலமைகின்ற விட்டவடிவொடு
நின்ற ஞானமயமோன நடுவே, டந்தமற முந்துபர மானந்த நிநந்த
வபிடேகமாடி யருளே, யறிவுற்றெனங்கைமலர் செவியுற்றமர்ந்த
விறையபிடேக மாடியருளே,'' "நாடரிய சத்தியோ சாதத்தும் வாம
த்து நன்றுமகோரத்தினு, நலையற்ற புருடத்து மாகம மொரைவ்
வைந்து நல்கியிசானத்திலே, பீடுதருமெட்டு முறைதந்த வற்றிடை
நீ சொல்பெருமை பெறு மருமை விதியிற், பேசரிய பூசைசிவகோ
சரியேனப்புரிதல் பெற்றிலேன் மற்றடியனேன், வேடுவர் குலத்தலை
வன் மெய்யன்பு பூண்டிலேன் வேட்டொருவர் மாட்டருளினான்,
பீடுகொளொருபுடையொப்பு நோக்கிவைத்தனை சாற்றின் வேண்டல்
வேண்டாமை யில்லாயாலாடு நின்பால் வேறுபா டொன்றிலாமையா

லபிடேகமாடியருளே, யறிவுற்றெனங்கைமலர் செறிவுற்றமர்ந்த விறையபிடேகமாடியருளே," "நவிற்றலரு மிதயமிளிர் கண்ட நாவடி புருவநடுவு பிரமப்புழையெனு, நல்லிடத்தகராதி கிரியாதி மணமுதல நண்ணியுமைம் மூவகை, யிவற்றிலொவ்வொன்ற கலநின்றவிடயங்க ளெதிர்வின்றிச் சிவகாரமர். யெதிருநனவுஞ் சோகமென்று பாவித் தலுறு மென்கனவு ஞாதுருவொடே, யுவப்பறிவு ஞேயமென் வுற் றனு பவித்திடுமொண் சுழுத்தியு ஞானமே, யொளிர் துரிய மூர்த்தியா த்துயர் சிவாநந்தநகர் வுறுமதீதமுமாகுநல், லவத்தைகள் கடந்த விற்றப்புறப்படு மமல னபிடேகமாடியருளே, யறிவுற்றெனங்கை மலர்செறிவுற்றமர்ந்த விறையபிடேகமாடியருளே" "ஒருவனோர்பொ ருளிலாற் குற்றுதவினுளம் வியந்தோகைபெறுமன்றி யுடைமை, யுஙவுறுவமையத்தி லுதவினுந் தன்னிடத்திதுள்ளதிற் பெரிதனிக் கும், பொருளதாயினு மதனினினியதாயினு மவன் புந்திமகிழ்வுற்றி டுவனல், புனல் விடுத்திடு முடிமானிற் புணரியிற் பெருகு புண்ணி யத்தெய்வ நதிதான், "மருவலானீர் விருப்பிலை நினக்கொரு திவலை மற்றென் முடியிற் றெறிப்பின், வைப்பன் வானத்தினெனவெத்திற த்தானு நினைமக்கணினைவுற் றுய்ந்திட, வருளினன் முனம்விதித்தன னுதலான் மகிழ்ந்தபிடேக மாடியருளே, யறிவுற்றெனங்கைமலர் செறிவுற்றமர்ந்தவிறை யபிடேகமாடியருளே", "கருகிச்சிவந்த கடு வருகிப் பொருந்தமிளிர் களம்வாழ்வு மேவவணிவாய், கடலிற் சிற ந்த நிறவுடலிற்றிருந்து மணிகதிர்போலவேயு நெடுமா, லொருகட் கிசைந்த வடியிருகட்கிணங்க வறமுடையர் முனோடிவருவா, யுலகத் தைவென்ற மனமிலகுற்றமன்றி னிடையுமைகாண வாடல்புரிவாய், மருகற்பெரும்பதியி லொருகற்பணங்கு தொழமணவாளனுவியுதவா, மயிலைக்கணென்பினுயிர் பயில்வுற்றெழுந்துவர வருவாயெனு முனை மையபா, வருகர்க்கணங்கு தருமுருகர்க்குகந்த வரனபிடேக மாடி யருளே, யறிவுற்றெனங்கைமலர் செறிவுற்றமர்ந்தவிறை யபிடேக மாடியருளே", "ஓகைமலி குருவாலை யுறுவிக்கு மாணையுமுயர் புரா தன சரிதமோ, டொக்குநடை வருவிக்குமுவமையுந் தன்மகனை யொண்சுவத்திக மேற்றுபு, சோகமறு மனுமயஞ் செய்தமைத்திடு மொருசுவத்தி காரோகணமுநால், சொல்லியவிடங்களிற் றூய நீற ணிதருந் தொல்விபூதிப்பட்டமு, மாகலசநீராட்டு கலசாபிடேகமு, மருவு சிவநோக்குவிக்கும், வயங்குலிங்காயதமு மன்னுசிவ லிங்கா முருவனை சுவாயதமுமெனுமே, மூகுநெறிதான் மருவியாக மிசையி லகுமரனபிடேகமாடியருளே, யறிவுற்றெனங்கைமலர்செறிவுற்றமர்ந்

தவிறை யபிடேகமாடியருளே", "போயகுல மொடுசரண ரொடு மேவு சமயமும் பொன்றுலகம் விட்டமலனார், பூசனைகெளரிய நிச்சஞ் சாரமுங் கொடியபொன் பெண்மண்ணாசை நெறியிற் பாயமன மோடாத நிட்பிராணமு மெய்ம்முப்பத்தாறு தத்துவமறப், பகுதியொடுணர்ந்து தத்துவமு மிறைபஞ்சனீ பாரென்று மான்மிகமுமே, மேயசடுலிங்க முடனாறங்கமாகுமொரு மெய்யனுக் கிரகநிலையும், விமல மூறு சச்சிதானந்த சிவமயமென்று மிக்க சத்தியசுத்தமு, மாய வெழுவகை நெறியினுவி யிடையிலகுமரனபிடேக மாடியருளே, யறிவுற்றெனங்கைமலர் செறிவுற்றமர்ந்தவிறை யபிடேகமாடி யருளே" "கிடைத்த சிவலிங்கமன்றுணராத வேகாக்கிர சித்தமென்னும் விரதங்கெடாத திடவிரதம் விடயங்கள் சிவனுக்குதவுகின்ற விந்திரியார்ப்பித, முடற்றியுயிர் கொன்றிடா நின்றிடு மகிஞ்சை சிவனுண்மை கொளிலிங்க நிசமே, யுயர் சிவத்துள மடங்குறுமனோலய மதனிலொன்றாகி நின்றபேதம், விடுத்தலுறு சத்தியோன் முத்தியெனு மிவையேமு மிக்ககுருவருள் புரியவே, மேவலரு மெய்ஞ்ஞான பாவனிலை மேவியிடும் வேதமுடியாவுமுணரா, தடுத்தமன மொழியுடற் கப்புறப்படுமமல னபிடேக மாடியருளே, யறிவுற்றெனங்கைமலர் செறிவுற்றமர்ந்தவிறை யபிடேகமாடியருளே", "நல்லதில நெய்யாடி யானிடத் தைந்தாடி நவையிலே யமுதமாடி, நல்குகாரண காரியம் முறையினன்றியே நறுநெய்பாற யிராடியே, மெல்லமலர் மதுவாடி யின்கழைச்சாறாடி மென்பழச்சாறாடியே, விழையுமிளநீராடியாரக்குழம்பாடி விதியினமை நபனமாடி, யொல்லைநகு வெண்டிலைப் புழையினிடையோடி நல்லுத்திகொடுபைத்ததலைய, வுரகநுழை வுமுவிளங் குழவிமதி யொருபுடையொதுங்க விடுமின்றியசைய, வல்லறநிறை கங்கை யசையாது நிற்பவே யபிடேகமாடியருளே, யறிவுற்றெனங் கைமலர் செறிவுற்றமர்ந்தவிறை யபிடேகமாடியருளே", "நார்கடமினாசரவர் தமினிய திவவியாழ் நண்ணு நாகந்தருவர்தா, நவிலுமவர்தமினமா கந்தருவாரவர் தம்மினுடரிய தேவராவரிற், சுராதிபனுவனியனுயர் சார்குரவனவனியன் சொன்முறையினூறு மடிமேற், றன்னு சுகமொருநிலையளவு மின்முக மிகுசுகவேலை புகலீகுவாய், தனைமுதற் பூதங்கள் புத்திகுண தத்துவந் தகுதிபெறு பகுதிபுருட தத்துவம் வித்தைமுத லனவெனு மிவற்றிலுறு சமயரென வெவை விடமேலருளினினை யடைதலுறு மரியபத மருளுமவனபிடேகமாடி யருளே, யறிவுற்றெனங்கைமலர் செறிவுற்றமர்ந்தவிறை யபிடேக மாடியருளே" என்று திருமஞ்சனம் செய்து "அண்டமா நிருளும்

கடந்தும்பர், உண்டுபோது மோரோண் சுடரச்சுடர், கண்டிங்காரறி வா ரறிவாரெலாம், வெண்டிங்கட் கண்ணி வேதியனென்பரே" என்றும், "என்னி லாருமெனக் கினியாரில்லை, யென்னிலு மினியானொருவன்னுளன், என்னுளே யுயிர்ப்பாய்ப் புறம்போந்துபுக், கென்னுளே நிற்கு மின்னம்பரீசனே" என்றும் பாசிவப் பிரபுவை ஆகவாகனஞ்செய்து, "தோடொருகாதனுகி யொருகாதிலங்கு சுரிசங்கநின்று புரளக், காடிடமாக நின்று கனலாடு மெந்தையிடமா யகாதனைகர்தான், வீடுடனெய்துவார்கள் விதியென்று சென்று வெறிநீர் தெளிப்பவிரலா, னூடுனுடுசெம்மை யொளிவெள்ளமாரு நனிபள்ளிபோலு நமர்காள்" என்று அர்க்கியங்கொடுத்து, "பாவணமேவு சொன் மாலையிற்பல, நாவணங்கொள்கையி னவின்ற செங்கய, ராவணங் கொண்டமையாள்வராயினுங், கோவணங்கொள்கையர் கொள்ளிக் காடரே" என்று கோவணம் பாவனைசாத்தி, "பட்டநெற்றியர் பான்மதிகீற்றினர், நட்டமாடுவர் நள்ளிருளேமமுஞ், சிட்டனூர் தென்பாய்த் துறைச்செல்வனூர், இட்டமா யிருப்பாரை யறிவரே" என்று கீள்பாவனைசாத்தி, "கட்டிட்ட தலைகையேந்திக் கனலெரி யாடிச் சீறிச், சுட்டிட்ட நீறுபூசிச் சுடுபிணக் காடராகி, விட்டிட்ட வேட்கையார்க்கு வேறிருந் தருள்களுள் செய்து, பட்டிட்டவுடையராகிப் பருப்பதநோக்கினாரே" என்று பரிவட்டஞ்சாத்தி, "பாந்தள் பூணாரம் பரிகலங்க பாலம் பட்டவர்த்தனமெருதன்பர், வார்ந்தகண்ணருவி மஞ்சனசாலை மலைமகள் மகிழ் பெருந்தேவி, சாந்தமுந் திருநீறருமறை கீதஞ்சடைமுடி சாட்டியக் குடியீா, ரேந்தெழி லிதயங்கோயின் மாளிகையேழிருக்கையு மிருந்த வீசனுக்கே" என்று திருவெண்ணீறு சாத்தி, "ஆளானவடியவர்கட் கன்பன்றன்னை யானஞ்சுமாடியை நானபயம்புக்க, தன்னானைத் தன்னொப்பாரில்லாதானைச் சந்தனமுங்குங்குமமுஞ் சாந்துந் தோய்ந்த, தோளானைத் தோளாத முத்தொப்பானைத் தூவெளுத்த கோவணத்தை யரையிலார்த்த, கீளானைக் கீழ்வேளூராளுங் கோலவக்கேடிலியை நாடுமவர் கேடிலாரே" என்று சந்தனஞ்சாத்தி, "மங்கையோர் கூறுடையான் மன்னுமறை பயின்றான், அங்கையோர் வெண்டலை யானுடரவம் பூண்டுகந்தான், றிங்களொடு பாம்பணிந்த சீரார் திருமுடிமேற், கங்கையினுன்மேவி யுறைகோயில் கைச்சினமே," என்று திருவாபரணங்கள் சாத்தி, "முத்தேர் நகையாளிடமாகத் தன்மார்பில் வெண்ணூல் பூண்டு, தொத்தேர்மலர்சடையில் வைத்தாரிடம் போலுஞ் சோலைசூழ்ந்த, வத்தேன்விம்முண் களியாலிசை முரல்வாலத்

அம்பி; தெத்தேயென முரலக்கேட்டார் வினைகெடுக்குந் திருநாளே'' என்று பூணநூல் சாத்தி, "நின்போலமரர்க ணீண்முடி சாய்த்து நிமிர்த்துகுத்த, பைம்போதுழக்கிப் பவளந்தழைப்பன பாங்கறியா, வென்போலிகள்பறித்திட்ட விலையுமுகையுமெலாம், அம்போதெனக்கொள்ளுமையனை யாறனடித்தலமே'' என்று புட்பாஞ்சலி செய்து, "அண்டமாதியா யருமறையோ டைம்பூதப், பிண்டமாயுலகுக்கோர் மெய்ப்பொருளாம் பிஞ்ஞகனைத், தொண்டர் தாமலர் தூவிச் சொன்மாலை புனைகின்ற, இண்டைசேர் சடையானை யென் மனத்தே வைத்தேனே'' என்று இண்டைமாலைசாத்தி, "போதுதாதொடு கொண்டுபுனைந்துடன், தாதவிழ்சடைச் சங்கரன்பாதத்துள், வார்ந்ததீர்க்கவென் றேத்திப்பராய்த்துறைச், சோதியானைத் தொழுதெழுந் தும்பிரே'' என்று திருப்பள்ளித் தாமங்கள்சாத்தி, "ஆலந்தானுகந் தமுதுசெய்தானை யாதியை யமரர்தொழுதேத்துஞ், சீலந்தான்பெரிதுமுடையானைச் சிந்திப்பாரவர் சிந்தையுளானை, யேலவார்குழலாளுமை நங்கையென்று மேத்தி வழிபடப்பெற்ற, காலகாலனைக் கம்பனெம்மானைக் காணக்கண்ணடியேன் பெற்றவாறே'' என்று இலட்டுகம், அப்பவர்க்கம், சமபாவரிசி வகையிற் செய்யப்பட்ட பரமான்னம், பாயசம் முதலியவைகளைத் "தூய்மறைபாடும் வாயர் முன்வைத்து நிவேதித்து 'ஆகாத நஞ்சுண்ட வந்திவண்ணா ரேழைய மாதுணங்கொண்டம் பொற்றேண்மே, லேகாசமாவிட் டொன்றேந்தி மர்ந்து திருவேபலி யென்றார்க்கில்லை புக்கேன், பார் கேதுங்கொள்ளார் பலிபுங்கொள்ளார் பாவியேன் கண்ணுள்ளேபற்றி நோக்கிப், போகாத வேடத்தர் பூதஞ்சூழப் புறம்பய நம்மூரென்று போயினாரே'' என்று ஜாதிக்காய், ஜாதிபத்திரி, இலவங்கம், ஏலம், சுக்கு, வால்மிளகு, பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ முதலியவைசேர்ந்த பாக்கினுடன் அடைக்காம்பு நிவேதித்து "வெந்த குங்கிலியப் புகைவிம்மவே, கந்த நின்றுலவுங் கழிப்பாலையார், அந்தமு மளவு மறியாததோர், சந்தமாலவர் மேவிய சாந்தமே'' என்று தூபங்கொடுத்து "எல்லாவுலகமு மானாய் நீயே யேகம்பமேவி யிருந்தாய் நீயே, நல்லாரை நன்மையறிவாய் நீயே ஞானச்சுடர்விளக்காய் நின்றாய் நீயே, பொல்லாவினைகள் தறுப்பாய் நீயே புகழ்ச்சேவடியென் மேல்வைத் தாய்நீயே, செல்லாத செல்வந்தருவாய் நீயே திருவையாறகலாத செம்பொற்சோதீ'' என்று பலவகைய தீபாராதனை கொடுத்து, "நீறுமெய்ப்பூசவல்லானு நினைப்பவர் நெஞ்சத்துளானும், ஏறுகந் தேறவல்லானு மெரிபுரை மேனியானும், நாறுகரந்தையினானு நான்

மறைக்கண்டத்தினானும், ஆறுசடைக் கரந்தானு மாரூரமர்ந்த வம்
மானே" என்று திருநீறு மறுபடியும் சாத்தி, 'பூம்படி மக்கலம்
பொற்படி மக்கலம் மென்றிவற்றா, லாம் படிமக்கலமாகினு மாரூரி லி
தமர்ந்தார், தாம்படிமக்கலமே வண்டுவரேற்றமிழ் மாலைகளால்,
நாம்படி மக்கலஞ்செய்து தொழுதுய்மட நெஞ்சமே" என்று தாம்
பணந் தெரிசிப்பித்து,' "காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி, யோது
வார்தமை நன்னெறிக்குய்ப்பது, வேதநான்கினு மெய்ப்பொருளா
வது, நாதநாம நமச்சிவாயவே" என்றும் "சொற்றுணை வேதியன்
சோதிவானவன், பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்,
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும், நற்றுணையாவது நமச்சி
வாயவே" என்றும ஜெபம்பண்ணிய பிறகு, "இட்டனும் மடியேத்
துவாரிகழ்ந்திட்டநாள் மறநதிட்டநாள், கெட்டநாளிவை யென்ற
லாற் கருதேன் கிளர்புனற் காவிரி, வட்டவாசி கைகொண்டடிதொழு
தேத்துபாண்டிக்கொடுமுடி, நட்டவாவுனை நான்மறக்கினுஞ் சொல்
லுநா நமச்சிவாயவே" என்று அர்க்கியங்கொடுத்து, "கொக்கிறகோடு
கூவிளமத்தங்கொன்றை யொடெருக்கணி சடையர், அக்கினோடாமை
பூண்டழகாக வனலதுவாடு மெம்மடிகள், மிக்க நல்வேத வேள்வியு
ளெங்கும் விண்ணவர் விரைமலர்தூவப், பக்கம் பல்பூதம் பாடிட
வருவார் பாம்புரநன்னகராரே", "ஏறுமொன்றேறி நீறுமெய்பூசி,
யிளங்கிளை யரிவையோ டொருங்குடனாகிக், கூறுமொன்றருளிக்
கொன்றையந்தாருங் குளிரிளமதியமுங் கூவிளமலரு, நாறுமல்லி
கையு மெருக்கொடு முருக்கும் மகிழிளவன்னியுமிவை நலம்பகர,
வாறுமோர் சடைமேலணிந்த வெம்மடிகளச்சிறு பாக்கமதாட்சி
கொண்டாரே", "அம்புய நீலங்கழுநீரணி செய்தல், வம்பவிழ் பூகமு
மாதவி மந்தாரந், தும்பைவகுளஞ்சுர புன்னை மல்லிகை, செண்
பகம் பாதிரி செவ்வந்தி சாத்தியே" 'வேற்றாகி விண்ணாகி நின்றாய்
போற்றி மீளாமேயாளெனைக்கொண்டாய் போற்றி, யூற்றாகியுள்
ளேயொளித்தாய் போற்றியோ வாதேயுணர்ந்தத் தொலியேபோற்றி, யா
ற்றாகி யங்கேயமர்ந்தாய்போற்றி யாறங்க நால்வேதமானாய் போற்றி,
காற்றாகி யெங்குங்கலந்தாய்போற்றி கயிலைமலையானே போற்றிபோ
ற்றி" என்றும் சிவாஷ்டோத்தர சதநாமத்தாலும் அருச்சித்து,
"குற்றமறுத்தார் குணத்தினுள்ளார் கும்பிடுவார் தமக்கன்பு செய்
வார், ஒற்றைவிடையினர் நெற்றிக்கண்ணா றுறைபதியாகுஞ் செறி
கொள்மாடஞ், சுற்றியவாசலின் மாதர்விழாச் சொற்கவிபாடநிதான
நல்கப், பற்றியகையினர் வாழுமாரூர்ப் பருபதீச்சரம் பாடுநாவே".

என்று எழுந்து கும்பிடவும். பிறகு "மதிதருவாய் நெஞ்சமே யுஞ்சபோக வழிபாவதிதுகண்டாய் வானோர்க்கெல்லாம், அதிபதியே யாரமுதே யாதியென்று மம்மானே யாரூரெம்மை யாவென்றுந், துதிசெய்து துன்றுமலர்கொண்டு தூவிச்சூழும் வலஞ்செய்து தொண்டுபாடிக், கதிர்மதிசேர் சென்னியனே காலகாலா கற்பகமே யென்றென்றே கதறுநில்லே' என்று பிரதக்ஷணஞ்செய்யவும். "அந்தியுநண்பகலு மஞ்சுபதஞ்சொல்லி, முந்தியெழும் பழைய வல்வினை மூடாமுன், சிந்தைபராமரியாத் தென்றிருவாரூர்புக், கெந்தைபிரானாரையென்று கொலெய்துவதே" என்று ஜெபித்துச் சாத்தவேண்டும். "இயக்கர் கின்னரர் ஞமனொடுவருணரியங்கு தீவளி நாயிறு திங்கள், மயக்கமில் புலிவானரநாகம் வசுக்கள் வானவர் தானவரெல்லாம், அயர்ப்பொன்றின்றி நின்றிருவடியதனை யார்ச்சித்தார் பெறுமாரருள்கண்டு, இசைப்பொன்றின்றி நின்றிருவடி யடைந்தேன் செழும்பொழிற் றிருப்புன் கூருளானே" என்று துதித்து, "வாழ்த்தவாயும் நினைக்கமட நெஞ்சந், தாழ்க்கச் சென்னியுந் தந்த தலைவனைச், சூழ்த்தமா மலர்தூவித் துதியாதே, வீழ்த்தவா வினையே னெடுங்காலமே", "ஞானத்தாற் றொழுவார் சிவஞானிகள், ஞானத்தாற் றொழுவேனுனை நானலேன், ஞானத்தாற் றொழுவார்க டொழக் கண்டு, ஞானத்தாலுனை நானுந் தொழுவனே" என்று சொல்லி நமஸ்கரிக்கவும். "பொய்தொழாது புலியுரியோன் பணி, செய்தெழா வெழுவார் பணிசெய்தெழா, வைதெழா தெழுவாரவரேழ்கதிர், கைதொழா வெழுமின் கரக்கோயிலே" என்று துதித்துக்கொண்டெழ வேண்டும். மேல், "தாயு நீ தந்தைநீயே சங்கரனே யடியேன்; ஆயு நின்பாலன்பு செய்வானுதரிக்கின்றதுள்ளம், மாயமாய காயந்தன்னு ளைவர் நின்றொன்ற லொட்டார், மாயமே யென்றஞ்சுகின்றேன் வலிவலமேயவனே", "அப்பனீ யம்மைநீ யையனுநீ யன்புடையமாமனு மாமியுநீ, யொப்புடைய மாதருமொண் பொருளுநீ யொருகுலமுஞ் சுற்றமுமோரூருநீ, துய்ப்பனவு முய்யப்பனவுந்தோற்றுவாய்நீ துணையா யென்னெஞ்சந் துறப்பிப்பாய்நீ, யிப்பொன்னீ யிம்மணிநீ யிம்முத்துநீ யிறைவனீயேறூர்ந்த செல்வனீயே", "சங்கரனே நின்பாதம் போற்றிபோற்றி சதாசிவனே நின்பாதம் போற்றிபோற்றி, பொங்கரவா நின்பாதம் போற்றிபோற்றி புண்ணியனே நின்பாதம் போற்றிபோற்றி, யங்கமலத் தயனோடு மாலுங்காணா வனலுருவா நின்பாதம் போற்றிபோற்றி, செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி திருமூலத்தானனே போற்றிபோற்றி," "பொன்னார் மேனி

யனே புலித்தோலையரைக் கசைத்து, பின்னார் செஞ்சடைமேல் மிளி ர்கொன்றை நயந்தவனே, மன்னே மாமணியே மழபாடியுள் மாணி க்கமே, யன்னேயுன்னை யல்லாலினியாரை நினைக்கேனே'', "உடைய நாதனே போற்றி நின்னலாற் பற்றுமற்றெனக் காவதொன்றினி, யுடையனோ பணிபோற்றி யும்பரார்தம் பராபராபோற்றி யாரினுங், கடையனாயினேன் போற்றி யென்பெருங்கருணையாளனே போற்றி யென்னைநின், னடியனாக்கினாய் போற்றி யாதியுமந்தமாயினாய் போற் றியப்பனே,'' "செங்கணாபோற்றி திசைமுகாபோற்றி சிவபுர நக ருள் வீற்றிருந்த, அங்கணாபோற்றி யமரனேபோற்றி யமர்கடலை வனேபோற்றி, தங்கணான்மறைநூல் சகலமுங் கற்றோர் சாட்டியக் குடியிருந்தருளும், எங்கணாயகனே போற்றி யேழிருக்கை யிறை வனே போற்றியேபோற்றி,'' "பாலுக்குப்பாலகன் வேண்டி யழு திடப் பாற்கடலீந்தபிரான், மாலுக்குச் சக்கரமன்றருள் செய்தவன் மன்னியதில்லை தன்னுள், ஆலிக்குமந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே யிடமாகப், பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறு துமே'', "ஐய நின்னதல்ல தில்லை மற்றோர்பற் றிவ்வஞ்சனேன், பொய்கலந்த தல்ல தில்லைபொய்ம்மையேனெ னெம்பிரான், மைகலந்த கண்ணிபங்க வந்துநின் கழற்கணே, மெய்கலந்தவன்பரன் பெனக்கு மாகவேண்டுமே,'' "அங்கணாபோற்றி வாய்மையாளாபோற்றிநாக, கங்கணாபோற்றி மூலகாரணாபோற்றி நெற்றிச், செங்கணா போற்றி யாதிசிவ பரஞ்சுடரேபோற்றி, யெங்கணாயகனே போற்றி யீறிலா முதலேபோற்றி,'' "யாவையும்படைப்பாய்போற்றி, யாவையுந்துடை ப்பாய்போற்றி, யாவையுமானாய்போற்றி யாவையு மல்லாய்போற்றி, யாவையு மறிந்தாய்போற்றி, யாவையு மறந்தாய்போற்றி யாவையும் புணர்ந்தாய்போற்றி யாவையும்பிரிந்தாய்போற்றி,'' "பழியொடுபாச மாறுகெடவாசவன்செய் பணிகொண்ட வண்டசரணம், வழிபடுதொ ண்டர்கொண்ட நிலைகண்டு வெள்ளிமணிமன்றுளாடி சரணஞ், செழி யன்விளிந்திடாதபடி மாறியாட றெளிவித்தசோதிசரண, மெழுகடல் கூவிமாமியுடன்மாமனாட விலைசெலித்த வாதிசரணம்,'' "சலந்தரனுட லங் கீண்டசக்கரப் படையாய்போற்றி, வலந்தருமதனை மாயோன் வழிபடக் கொடுத்தாய்போற்றி, யலர்ந்தசெங்கமலப் பூத்தேனடுச் சிரமரிந்தாய்போற்றி, சிலந்தியை மகுடஞ்சூட்டவரசருள் செல்வம் போற்றி'' என்று தோத்திரங்கள் பலவுஞ்செய்து சிவபூசையை முடி த்து மேல், "தழைத்ததோரத்தியின் கீழ்த்தாபர மணலாற் கூப் பி, யழைத்தங்கே யாவின்பாலைக் கறந்துகொண் டாட்டக்கண்டு,

பிழைத்தன்றுதை தாளைப்பெருங்கொடு மழுவால் வீசக், குழைத்தவோர்முத மீந்தார் குறுக்கை வீரட்டனாரே" என்று சண்டேசுர பூசையையும் முடித்துப் பணியவேண்டும்.

மேல்மார்க்கண்டேயர் இவ்வகையான சிவபூசையை மெய்யன்புடன் கனிந்து செய்து முடித்தலும், சிவபிரானும் அவரது பூசைக்குத் திருவுளமுவந்து அவ்விடத்திற் பிரசன்னமாகி, சிறந்ததவத்தை நமது வழிபாட்டுடன் செய்கின்றனை, அத்தவமும் வழிபாடும் குற்றமற்றதாகலின் நாம் களிப்புற்றோம், இனிமேல் நீ பெறவிரும்பி யவற்றைக் கூறுவாயென்னத் திருவாய் மலர்தலும், தலைவரே! நின்மலரே! யாவுமாய்விளங்கும் சத்தியரே! மேம்பாடுடையவரே! மலாகிதரே! மழுவேந்திய திருக்கரமுடையவரே! கீழ்மகனாகிய அடியேனை யமனுடைய கையிலகப்படா தீடேறும் வண்ணம் அக்காலத்தில் அடியேனுக் கெதிரிலேவந்து தேவரீர் உதவி புரிதல் வேண்டுமெனப் பிரார்த்தித்தலும், நீயமனுக்காக அச்சமுறாதே, என்று தமது சிவந்ததிருவடிகளிரண்டையும் சிரமேற் சூட்டியவுடன் அடியேன் இனி ஈடேறினேனென்று மார்க்கண்டேயருரைக்க, விடமணிந்த கண்டத்தையுடைய சிவபிரான் அதிவிரைவிலே கரந்தருளிச் சிவலிங்கத்திற்சேர்ந்தனர். அம்மாதிரியாகவே இவர் பூசையைத் தினந்தோறும் செய்துவந்தனர். இவர் சிவத்தலந்தோறும் சென்று சென்று பணிந்துவந்து கொண்டிருந்தனர். அக்காலத்தில் இவருக்குப்பதினாறு வருடங்களென்னும் ஆயுணாள் கழிதலும், ஆகாயத்திலோடுகின்ற மேகத்தைப்போன்ற வேகத்துடனே அதிவிரைவில் திடீரென்று ஓர்யமதூதன்வந்தான். அச்சமயத்தில் இவர்தெற்கே சிவபிரானது அட்டவீரட்டத்தொன்றாகிய திருக்கடவூர் சேர்ந்திருந்தனர். அந்தயமதூதன் முற்காலத்தில் திரிபுரங்களை தகித்தருளிய, சிவபிரானது தாமரை மலர்போலும் திருவடிகளைப் பூசிக்கின்றவழிபாட்டைப் பார்த்தவுடனே அச்சமுற்று, மார்க்கண்டரென்னும் இவரையான் சமீபிப்பது அருமையென்று அவ்விடம் விட்டு நீங்கிப்போயினன். நெருப்புப்பொறி பறக்கும்படிபார்த்து நெருங்கிப்போகாமல் அதிதூரத்திலே சென்ற ஓர் புலியைப்போன்ற தன்மையுடையவன் தூதுவனாகவந்து அதன்பின் திரும்பி, தென்றிசைக் கதிபனாகிய இயமனுடைய திருவடிகளைப்பணிந்து கூறலாயினன். இந்திரர்களாற் புகழப்படும் தலைவரே கேட்பீராக. செவ்வானம்போன்ற நிறமுடைய சிவபிரானிடத்திற் பொருந்திய மனமுடையவன், அவர் திருவடி

களிற் படிந்த சிரமுடையவன், எக்காலமும் அப்பெருமானுடைய கீர்த்தியையே கூறுகின்ற விரதமுடையவன், சிவபிரான் பூசையைச் செய்துகொண் டிருக்கிறான், குற்றமற்ற மனமுடையவன், பேரறிவுடையவன், பிராமணோத்தமன், காசியில் வாழ்பவன், மார்க்கண்டனென்று கூறத்தக்க சிறப்புடைய பெயர்பெற்று விளங்குபவன், அத்தகைய சிறுவனைக் கிட்டுதற்கும் அச்சமுற்றேன், அன்றியும் திரிநேத்திரங்களுள்ள எமது பெருமானிடத்தி லிருக்கின்றனன், ஆதலால் அவனுக்கெதிரிலும் செல்லவில்லை, தண்டநாயகரே! இதனைத் தேவரீர் ஆலோசிப்பீராகவென்று தெளியும்படி யுரைத்தனன். இவ்வாறு தூதுவனுரைத்த மாத்திரத்தில் அதுகேட்ட இயமன், தணிந்திருக்கும் நெருப்பிலே நெய்யையூட்டினாற் போன்று கோபித்துப் பெருமூச்செறிந்து, சிறுபிள்ளையாகிய அவன் அழிவற்றவராகிய சிவபிரானோ வென்றுரைத்தான். என்னுடைய கணக்கர்களை அழைத்து வருவாயென்று இயமன் கூற, அங்கிருந்த தூதுவர்கள் ஓடிப்போய் உங்களை நம்மிறைவர் அழைக்கின்றார் வாருங்களென்று சொல்ல, உடனே கணக்கர்கள் வந்து இயமனுடைய பாதங்களைப் பணிந்தார்கள். அப்போது தென்றிசைக்கதிபனாகிய இயமன், யாவராலுங் காணவேலாத ஒலிக்கின்ற வீரக்கழலணிந்த சிவபிரானைப் பூசித்துத் துதித்தவனாகிய களங்கமற்ற தோற்றமுடைய மார்க்கண்ட னென்னும் பெயருடைய சிறுபிள்ளைக்கு ஆயுட்பிரமாணத்தைக் கூறுங்களென்று கட்டளையிடுதலும, சித்திரகுத்திரரென்று பெயர் கூறப்படும் சிறப்புடையவர்களும், ஒரேதன்மையான இயல்புடையவர்களுமாகிய அறிவின் மேம்பட்ட அவர்கள், தங்கள் கையிலிருந்த கணக்கைப்பார்த்து, இத்தன்மையைக் கேட்பீராக வென்று கூறலாயினர். தலைவரே! நெற்றிக்கண்ணராகிய சிவபெருமான் முற்காலத்திலே அப்பிள்ளைக்குப் பதினாறுவருடங்களென்று ஆயுட்பிரமாணம் கட்டளையிட்டனர். அப்பதினாறுவருடங்களுங் கழிந்தன. ஆனால், அப்பிள்ளை யியற்றிய சிவபூசை புண்ணியப்பகுதி யுடையதாகும், விசேடித்தபெருந்தவமுடைய முனிவர்களாயினும், சிறப்புற்ற செல்வத்துடன் விளங்குபவர்க ளாயினும், விவேகமுடையவர்க ளாயினும், வல்லபமுடையவர்க ளாயினும், விதிப்பயனை வெல்லும் தன்மையுடையவர்கள் எவர்கள்? என்னை, "வினைப்பயனை வெல்வதற்கு வேதமுதலா, வனைத்தாய நூலகத்துமில்லை-யெனைத்தொன்றுங், கண்ணுறுவதல்லாற் கவலைபடனெஞ்சமே, விண்ணுறுவார்க்கில்லை விதி," "ஊழிற்பெருவலியாவுள மற்றொன்று, சூழினுந்தான்முந்துறும்"

என்றார் பிறரும். ஆதலாலே தேவலோகமடைதற் குரித்தாயினான். அச்சமுறுதற் கேதுவாகிய நரகப்பிராப்தியையும் விட்டு நீங்கினான். இதுதான் அப்பிள்ளையின் தன்மையென்று அக்கணக்கர்களிருவரும் கூற, மேன்மைமிக்க இயமன் மிகக்கோபங்கொண்டான். அப்போது இயமன் தனது மந்திரியாகிய கொடூர வல்லபமுடைய காலனென்பவனை யழைத்து, காசியிலிருக்கிற அந்தணனொருவ னுடைய ஒரே புத்திரனது சீவனைக்கொண்டு வரக்கடவாயென்றுகட்டளையிடுதலும் நிலவுலகத்திற்கு வந்தான். அக்கால னென்பவன் வந்து குற்றமற்ற சிறந்த தவத்தராகிய மார்க்கண்டேய ரிருக்குமிடத்தடைந்து, நான்குவேதங்களை யுணர்ந்த மார்க்கண்டேய ருடைய வழிபாட்டையும் நோக்கத்தையும் கண்டு, இவர் எவ்வாறு வருவாரென்று சிந்தித்து ஏக்கமுற்றனன். அம்மார்க்கண்டேயருடைய கண்களுக்குத் தெரியும்படியாகச் சென்று, அப்புத்திரரைப் பணிந்தான். அப்போது மார்க்கண்டேயர் நீயார் சொல்லக்கடவாயென்று வினவுதலும், நான் உலகங்களனைத்திலு முள்ள சீவராசிகளெல்லா வற்றையும் கொல்லுகின்ற கட்டளையை யுடையவனாகிய இயமராசனது திருவடிகளுக்குத் தொண்டியற்றுகின்றவன். அதைக்கேட்டு மார்க்கண்டேயர் அக்காலனைப்பார்த்து, நீர் இவ்விடத்திற்கு வந்தகாரணம் யாதென்று கூறுவீராயின், அடியேன் அறிந்துள்ளதைக் கூறுகின்றனன். அதற்கு அக்காலன், முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் உமக்கருளிய வருடங்கள் பதினாறும் நேற்றுடனே கழிந்துபோயின, ஆதலால் தேவரீர் இயமபுரத்திற் கடைதல்வேண்டும். இவ்விதிவசம் ஒருவராலும் தடுக்குந் தன்மையுடையதல்ல. நான்கு முகங்களையுடைய பிரமனுக்கும் சம்பவிக்கத்தக்கதே. நூதனமாக நேர்ந்ததுமல்ல. சிருட்டிக்கின்ற கிருத்தியத்தைப்போலும், இரட்சிக்கின்ற கிருத்தியத்தைப்போலும், இயமன் கொல்லுகின்ற கிர்த்தியமும் நீலகண்டக் கடவுளருளிய கட்டளையே யாகும். ஆதலால், உம்மை யழைத்தனர். அதுவல்லாமலும் சிவபெருமானுடைய சிறந்த திருவடித்தாமரைகளைத் தேவரீர் பூசித்துக்கொண்டிருப்பதைப் பலரும் கூறுவதால் மனங்களித்து, உம்மைத் தரிசிக்கவெண்ணித் தென்றிசைக்கதிபராகிய இயமராசன் பேரவாவுடையவராயிருக்கின்றனர். கொலையை மேற்கொண்ட தொழிலுடையவ னென்பதனால் அவ்வியமனைக் கொடூரனென்று அறிவில்லாதவர்கள் கூறுவார்கள். அளவிறந்த சீவராசிகளனைத்திற்கும் அவ்வச்சீவன்களியற்றிய வினைகளையோசித்து அதற்குத்தக்க தன்மையாகச் செய்கின்றபடியால், நடுவனென்

பதே அவ்வியமன் பெயரென்று உலகமெங்கும் கூறும். மனத்தில் யாதொன்றும் சிந்திக்கவேண்டாம். தென்றிசைக்கணுள்ள யமபுரத்திற்கு வருவீராயின், அவ்வியமன் எதிர்கொண்டுவந்து இட்டிக்கைகளைச் சிரமேற் கூப்பி வணங்கித் துதித்து உபசார வார்த்தைகள் கூறி இந்திரபதவியை யருளுவர், ஆதலால் வருவீராக என்றுரைத்தனன். இவ்வார்த்தையைக் கேட்டவுடனே, இளம்பிறையைச் சூடிய சிவபிரானைப் பூசிக்கின்ற மெய்யடியார்கள் இந்திர லோகத்திற்கும் செல்லமாட்டார்கள். உங்களுடனே கூடி யமலோகத்திற்கும் வர மாட்டார்கள். மேம்பாடுற்றதாகிய சிவபதவியைப் பெற்று இனிமையுட னிருப்பார்கள். என்னை, "புள்ளியதோலாடை புனைந்தரவப் பூணணிந்த, வெள்ளிய செங்கண்விடையா னடிக்கமல, முள்ளிய மெய்யன்புடையா ரருவருத்துத், தள்ளிய செல்வத்தருக்கினை யென் செய்தாய்", "கற்றுக்கொள் வனவாயுள நாவுள, விட்டுக்கொள் வன பூவுள நீருள, கற்றைச் செஞ்சடையானுளன் யாமுளோ, மெற்றுக் கோநமனால் முனிவுண்பதே" என்றனர் பெரியோர்கள். சிவபிரான் திருவடியார்களுக்கு நானும் அடியவனாயிருக்கின்றேன். ஆகையால் நான் உங்களுடைய யமபுரத்திற்கு வரமாட்டேன். பிரமன் திருமால் என்னும் இவர்கள் விரும்பி யிருக்கும் பதவிகளையும் இச்சியேன். இனி நீ சீக்கிரத்திற் போகக்கடவாய் என்று கூறுதலும், நல்லதென்று அவனும் ஒருப்பட்டுச் சென்றனன். என்னை, "கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வுகுடிகெடினு, நள்ளேனினி தடியாரோடல்லானரகம்புகினு, மெள்ளேன் றிருவருளாலே யிருக்கப் பெறினிறைவா, வுள்ளேன் பிறதெய்வமுன்னை யல்லா தெங்களுத்தமனே" எனவும், "படையும் பாசமும் பற்றிய கையினீ, ரடையன்மின் னமதீச னடியாரை, விடைகொளூர்தியி னடியார்குழாம், புடைபுகாது நீர் போற்றியே போமினே" என்று பெரியர் விதித்தாராதலின். அங்கு நின்றும் சென்றகாலனென்பவனும் இயமனைப் பணிந்து நடந்த செய்தியனைத்தையும் கூறுதலும், மனம்பதைபதைப் படையச் சரீரமும் மார்பும் வியர்க்கக் கண்களில் தீப்பொறிபறக்க வளைவாய் நீண்டுள்ள புருவங்கள் மேலேறக் கோபித்தான். நமது எருமைக்கடாவை அழைத்து வாருங்களென்று கட்டளையிட்டவுடனே அக்கடாவந்தது. அக்கடாவின்மீது துதிக்கையோடு கூடிய யானைமீதேறுதல்போன்று முதுகிலேறி, நிழல் தருவதாகிய ஒப்பற்ற குடையுங் கொடியும் மேலோங்கவும், கிங்கரர்கள் துதித்துக்கொண்டு சூழ்ந்துவரவும் இயமன் வந்தான். யமபுரத்தினின்றும் வந்தயமிருகண்டு முனிவர் புத்திரரான

மார்க்கண்டேயர் இருக்குமிடத்திற் சென்று, சிவந்த தலைமயிரும் மேகம்போற் கறுத்த சரீரமும் கோபத்தாற் சிவந்திருக்கும் கண்களும் பிடித்திருக்கும ஓர்பாசக்கயிறும் கரங்களில் தண்டமும் சூலமும் உடையவனாய் எதிரில்வந்தான்,

இவ்வாறு வந்து எதிரிலே நின்றவளவில், மார்க்கண்டேயரென்பவர் யமன்வந்து சமீபித்திருக்கின்றானென்று சிந்தித்தவராய், அவனுடைய குரூரச் செய்கைகளைக் கண்ணுற்று எமது பெருமானுடைய திருவடிகளைத் துதித்துவணங்கினர். அத்தருணத்தில் யமன் மார்க்கண்டரைப்பார்த்து, பிள்ளாய்! நீ என்னை நினைந்து எக்காரியஞ்செய்பினும், முற்பட்ட ஊழ்வினையின் கிரமத்தையும் திரிநேத்திரங்களுள்ள சிவபிரான் திருவாய்மலர்ந்த முறைமையையும் அழிக்க முடியுமோ? ஊழ்வினையின் வல்லபமும் சற்றேனும் உணரவில்லை. யாதோர் நிச்சயத்தையும் அறியவில்லை போலிருக்கின்றது. இறப்பு, பிறப்பு என்னும் இவை யிரண்டையும் எப்படிப் பட்டவர்களும் அடைவார்கள். அதை நான் விரித்துக் கூறவேண்டியதோ? என்னை "தோற்றமுண்டேன் மரணமுண்டு துயரமனைவாழ்க்கை, மாற்றமுண்டேல் வஞ்சமுண்டு நெஞ்சமனத்தீரே, நீற்ற ரேற்றர் நீலகண்டர்நிமிர் புனனீள் சடைமே, லேற்றர் கோயிலெதிர்கொள் பாடியென்பததடைவோமே" என்றது தமிழ்மறை. மேம்பாடு விசேடித்த பெருந்தபோதனருக்காயினும் ஈடேறாத இவ்வெண்ணம் கைகூடுமென் றெண்ணிக்கொண்டு, அந்த நாட்டத்துடனே இவ்வாறிருத்தல் நூல்களைக் கற்றுணர்ந்த ஆண்மக்கட்குச் சுபாவமாகுமோ? என்னை, "தந்தையார் போயினார் தாயரும் போயினார் தாமும் போவார், கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார் கொண்டுபோவா, ரெந்த நாள் வாழ்வதற்கே மனம் வைத்தியாலேழை நெஞ்சே, யந்தணாரூர் தொழுதுய்யுலா மையல்கொண்டஞ்ச நெஞ்சே" என்றார் பெரியரிற் பெரியாரும். சிவபிரான் திருவடியின்மீது அன்புள்ள மனமுடைய நீ தினந்தோறும் செய்கின்ற பூசையானது, உன்னுடைய பாவத்தைப் போக்குமேயல்லது, நான் வீசுகின்ற பாசக்கயிற்றை விலக்கவும் வல்லபமுடையதோ? கடலின்கண் நெருங்கியுள்ள மணல்களைத் தொகைப்படுத்தினும், ஆகாயத்திற் சஞ்சரிக்கும் நட்சத்திரங்களைத் தொகைப்படுத்தினும், அளவில்லாமல் எனதாக்கினையா லிறக்கின்ற இந்திரரைத் தொகைப்படுத்த முடியுமோ? என்றால் இறந்த மற்றைத்தேவர்களையும் என்னால் முடிவாகு அசுரர்களானவர்களையும், முழுமையும்

சொல்லவேண்டுமாயின் முடிவுபெறாதாகையால், மற்றவர்களை யெல்லாம்நான்சொல்லவும்வேண்டுமோ? "மாகர்க்கசுரர் ... மகிழ்ச்சிவிட்ட மிகவுள, தாகத்தகலா நோயுமுள தனக்குள் நகையுளது, போகத்தழிந்தன் மிகவுளது பொன்றறுளதாக ... சோகத்திறங்களினையுடைய துறக்கத்தென்னை சுகமுளதே" என்று கூறியுள்ளபடி, பிறப்பிறப்பாகிய இரண்டும் மேன்மைமிக்க தாமரை யென்னும் அழகியகண்களுடைய திருமாலுக்கும் உண்டு பிரமனுக் குமுண்டு எனக்குமுண்டு என்றுசொல்வேனாயின், உனக்கும் உண் டென்று கூறுதல்வேண்டுமோ? மணமிக்க மலர்களைச்சொண்டு அரு ச்சித்துப் பூசித்தகாரணத்தால், சிவபிரான் முன்னாளில் அடியேனுக் கனுக்கிரகித்தவைகளாகும், குற்றமற்ற இவ்வரசாட்சியும், நான் தா ங்கியிருக்கும் பாசக்கயிறும் சூலாயுதமும் மழுவாயுதமும் தண்டா யுதமும், தேவர்களே உனக்குப் பாதுகாப்பாயிருக்கினும், சிருட்டித் திரட்சித் தழிக்கின்ற திரிமூர்த்திகளே உன்னைப் பாதுகாக்கினும், இன்னும் வல்லபமுடையோர்களாகிய எவர்கள் பாதுகாக்கினும் காக்க, இன்றையதினத்தில் உனது பிராணனைப் பற்றிக்கொண்டே யல்லாமல் திரும்பிப் போவேனோ? சுயமென்பதை நீமனத்திற் கொள்ளவேண்டாம், சூலபாணியாராகிய சிவபிரானடியாராயினும், ஆயுணாள் முடிவு சம்பவித்தால், அவர்களையும் யமபுரத்திற் சேர்ப் பேன் இது நிச்சயமாகும். ஆகலால், இனி நீ என் பின்னே செல்வா யெனக் கூறுதலும் மார்க்கண்டேயர் அவ்வார்த்தையைக்கேட்டு, யம னே கேட்பாயாக! எமது பிதாவாகிய சிவபெருமான் திருவடியார் கட்கு முடிவென்பதே யில்லை. அவ்வாறுண்டாயினும் உன்னுடைய யமபுரத்திற்கு வரமாட்டார்கள், திருக்கயிலை மலைக்குச் செல்வார் கள். "வானமதனை நீங்காது வாயுவினைரந்து மதனைப்போல், ஞான மயனை நீங்கார்கண் ஞானத்தவரு நடுக்கத்தாந், தேனின்மொழியா ரிணைக்தோளைத் திளைக்குமபொழுதுஞ் சினஞ்செறிய, வூனத்தினை யுவர்த்தொறுக்கும் பொழுதும் யாதாமொருபொழுதும்" என்றபடி அவ்வடியார்களுடைய தன்மையைக் கூறுகின்றேன் கேட்பாக, அவர்கள் தூய்மை யமைந்த பெருந்தவசிகளாயினும், அழகமைந்த இல்லறவாழ்க்கையில் வாழ்பவர்களாயினும், வினைகளற்றதாகிய முத் தியின்பமடைவார்கள். பழுதற்று விளங்குகின்ற இருசுடர்களையும் பஞ்சபூதங்களையும் ஆன்மாவையும் அப்பரம் பொருளல்லவென்று தெளிவார்கள், பிறப்பிறப்பை நிவாரணித்தவர்கள், "பூதங்களல்ல பொறியல்ல வேறுபுலனல்ல வுள்ளமதியின், பேதங்களல்ல வினைவ

யன்றி நின்றபிறிதல்லவென்று பெருநூல், வேதங் கிடந்ததடுமாறும் வஞ்சவெளியென்ப கூடன் மறுகிற், பாதங்களேனுவ வரிலயிந்தனுதி புகர்வாரை யாயுமவரே” என்ற பெருமையின் யுடைய சிவனடியார் களது திருவடியை யடைதலே பரமுத்தி யடைவதாகும், “செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று, பத்திசெய் மனப்பாறைகட்கேறு மோ, வத்தனென்றரியோடு பிரமனுந், துத்தியஞ்செய நின்றநற்சோதியே” எனவும், “வாதுசெய்து மயங்குமனத்தரா, யேதுசொல்லு வீரலிறு மேழைகாள், யாதோர் தேவரெனப் படுவார்க்கெலாம், மாதேவனலாற்றேவர் மற்றில்லையே” எனவும், வண்டுளறுந் தண் மிழாய்மாயோனிறு மாப்பும், புண்டரிகப்போதுறையும் புத்தேளிறு மாப்பு, மண்டர்தொழ வாழுன்னிறுமாப்பு மாளா, மூண்டவனைப் பூசித்தபேறொன்றுணர்ந்திலையால்” என்று பெரியர் பலரும் விதித்த படி, அத்தகைய சிவபிரான் திருவடியார்கள் உன்னையும் மதியார்கள் தேவர்களையும் மதியார்கள் அவர்கட்கரசனாகிய இந்திரனையும் மதி யார்கள், சிறந்த தாமரைமலராதனமுடைய பிரமனையும் மதியார்கள், அதன்பின் குளிர்ந்த துளபமாலை யணிந்துள்ள திருமாலையும் மதியார் கள். “எவரேனுந் தாமாக விலாடத்திட்ட திருநீறுஞ் சாதனமுங் கண்டாலுள்கி, யுவராதேய வரவரைக்கண்டபோதி லுகந்தடிமைத்திற த்தினுந் தங்குவந்துநோக்கி, யிவர் தேவரவர் தேவரென்று சொல்லி யிரண்டாட்டா தொழிந்தீசன் றிறமே பேணிக், கவராதே தொழு மடியார் நெஞ்சினுள்ளே கன்றுப்பூர் நடுதறியைக் காணலாமே” என வும், “சங்கமந்தனக்கொருசாதி யுன்னினு, மங்கையினமர்தரு மர ற்கு முன்னினுன், சங்கரனொடு சரந்தம்மில் வேறெனு, மங்கவ னறி வருமுனற்றமுங்குவான்” எனவும் விதித்திருக்கின்றபடியால், சிவபெ ருமானையும் அப்பெருமானுடைய திருவடித்தாமரைகளைச் சேர்ந்து வணங்குகின்ற மெய்யன்பர்களையும் வேற்றுமைப் படுத்துதல் அறி வற்ற தன்மையென்று, வேதங்கள் முறையிடுகின்ற மேன்மையான பொருள் பொய்ப்படுமோ? செப்பமாகிய மனமுடையவர்கள், இறப் பற்றவர்கள், கோபமென்பதை அழித்து விளங்குகின்றவர்கள், தாம் என்னும் அகங்காரத்தையும் விட்டொழித்து மேன்மையுற்றவர்கள், மறுமையி லின்பமடைவதேயன்றி இம்மையினும் இன்பமடையத் தக்கவர்கள், இல்லாமையென்பதை எவ்விடத்திலு மில்லாதவர்கள், நல்வினை புரிவதே, சுபாவகுணமாகப் பெற்றுள்ளவர்கள், அற்பமா கிய பொருள்களை அபேட்சியார்கள், அவ்வடியார்களியல்பை யாவர் தான் கூறவல்லவர்கள். அத்தகைய அடியார்க ளியல்பைத்

தெரிந்தாயில்லை, அவர்களையும் உலகத்தவர்போலவே நினைக்கின் றனை, அவ்வடியார்களிடத்திற் சேர்ந்திருக்கும் என்னுடைய பிராண னுக்குங் கெடுதி சிந்தித்தனை, இவைகளெல்லாம் உன்பிராணனுக்கும் இவ்வதிகாரத்திற்கும் அழிவல்லவோ? கொடுமையான வார்த்தை கள் என்காதிற் கேட்கும்படி கூறுகின்றனை, மேல்விளையப்போகும் புகழை யறிந்தாயில்லை, பேதையே பேதையே! நீ இங்கு நிற்கவுங் கூடுமோ? ஆதலால் நீ செல்வாயாக செல்வாயாக என்று குற்றமற்ற மார்க்கண்டேயர் கூறினர். சிறுவராகிய மார்க்கண்டேயர் சொல் லிய இவ்வார்த்தைகளை இயமன் கேட்டான். சுவாலித்தோங்குகின்ற செந்நிற அக்கினிப் பொறிகள் பறக்கின்ற கண்களை யுடையவனாய், நான்வெருளும்படியான வல்லபத்தைக் காட்டுகின்றனை, வல்லபமற் றவனே! நமதுயிரை இயமன் கைப்பற்ற மாட்டானென்றே சிந்தித் திருக்கின்றனையோ? என்றுரைத்து ஆகாயத்தில் முழங்கும் இடி யேற்றை யொத்துக்கர்ச்சித்தவனாய், இவனுக்கெதிரிற் சும்மாநின்று கொண்டிருந்தால் வரமாட்டானென்று கருதி, சிறுவயதுடைய மார் க்கண்டேயருக்குச் சமீபத்தில் நீண்ட நீலமலைபோன்று கைவலுபுரி யும் வேலேந்திய இயமன் சென்று, பாசக்கயிற்றை வீசுவதற்காக யோசித்தான், அதன்பின் அவ்வாறே பாசக்கயிற்றைவீசி யிழுக்கத் தொடங்கினன், இத்தருணத்தில் இதையுணர்ந்த மார்க்கண்டேயரும் சிவபிரானைத் துதித்து அவரது திருவடி நீழலைப் பிரியாதிருந்தனர். அப்போது தேவர்களும் இப்பெருமை யுமைந்த பாலனும் இறந்தா னல்லவா என்று மயங்கினர்கள். அவர் எவ்வாறு துதித்தாரெனில்,

திருக்கடவூர்த் திருவீரட்டம்

திருச்சிற்றம்பலம்.

சடையுடையானு நெய்யாடலானுஞ் சரிகோவண
வுடையுடையானு மையார்ந்த வொண்கண்ணுமை கேள்வனுங்
கடையுடை நன்னெடு மாடமோங்குங் கடவூர்தனுள்
விடையுடையண்ணலும் வீரட்டானத் தானல்லனே. (1)

விரிதருவார் சடையானும் வெள்ளைபெருந்தேறியும்
புரிதருமாமலர் கொன்றைமாலை புனைந்தேத்தவே
கரிதருகாலனைச் சாடினானுங் கடவூர்தனுள்
வரிதருதோல்புகழ் வீரட்டானத் தானல்லனே. (2)

நாதனு நள்ளிரு ளாடினானு நளிர்போதின்கட்
பாதனும் பாய்புலித்தோலினானும் பசுவேறியுங்
காதலர் தண்கடவூரினானுங் கலந்தேத்தவே
வேதமோதியும் வீரட்டானத் தானல்லனே. (3)

மழுவமர் செல்வனு மாசிலாத பலபூதமுன்
முழவொலியாழ் குழன்மொந்தை கொட்டம் முதுகாட்டிடைக்
கழல்வளர்கால் குஞ்சித்தாடினானுங் கடவூர்தனுள்
விழவொலிமல்கிய வீரட்டானத தானல்லனே. (4)

சுடர்மணிச்சுண்ண வெண்ணீற்றினானுஞ் சுழல்வாயதோர்
படமணிநாகமரைக் கசைத்தபரமேட்டியுங்
கடமணிமாவுரித் தோலினானுங் கடவூர்தனுள்
விடமணிகண்டனும் வீரட்டானத் தானல்லனே. (5)

பண்பொலி நான்மறை பாடியாடிப் பல்லூர்கள்போ
யுண்பலிகொண்டுழல்வானும் வானின்னொளி மல்கிய
கண்பொலி நெற்றிவெண்டிங்க ளானுங் கடவூர்தனுள்
வெண்பொடி பூசியும வீரட்டானத் தானல்லனே. (6)

செவ்வழலாய் நிலனாகி நின்றசிவமூர்த்தியு
முவ்வழனன் மறையைந்து மாயமுனி கேள்வனுங்
கவ்வழல் வாய்க்கத நாகமார்த்தான் கடவூர்தனுள்
வெவ்வழலேந்துகை வீரட்டானத்தா னல்லனே. (7)

அடியிரண்டோருடம் பைஞ்ஞான்கிருபது தோள்தச
முடியுடைய வேந்தனை மூர்க்கழித்த முதன்மூர்த்தியுங்
கடிகமழும் பொழில்சூழுமந்தண் கடவூர்தனுள்
வெடிதலையேந்தியும் வீரட்டானத்தா னல்லனே. (8)

வரைகுடையா மழைதாங்கினானும் வளர்போதின்கட்
புரைகடிந்தோங்கிய நான்முகத்தான் புரிந்தேத்தவே
சுரைகடல்சூழ் வையங்காக்கின் றானுங்கடவூர்தனுள்
விரைகமழ் பூம்பொழில் வீரட்டானத்தா னல்லனே. (9)

தேருமாசுகொண் மேனியாருந் தெளியாததோ
ராருஞ் சொற்பொருளாகி நின்றவெமதாதியான்
காரிளங்கொன்றை வெண்டிங்களானுங் கடவூர்தனுள்
வீரமுஞ்சேர்கழல் வீரட்டானத் தானல்லனே. (10)

வெந்தவெண்ணீறணி வீரட்டானத் துறைவேந்தனை
யந்தணர் தங்கடலூருளானை யணிகாழியான்
சந்தமெல்லா மடிசாத்த வல்லமறை ஞானசம்
பந்தன்செந்தமிழ் பாடியாடக் கெடும்பாவமே. (11)

திருச்சிற்றம்பலம்.

எனவும்,

திருச்சிற்றம்பலம்.

பொள்ளத்தகாய மாயபொருளினைப் போகமாகா
வெள்ளத்தைக் கழிக்கவேண்டில் விரும்புமின் விளக்குத்தூப
ருள்ளத்ததிரியொன்றேற்றி யுணருமாறுணரவல்லார்
கள்ளத்தைக் கழிப்பர்போலுங் கடவூர் வீரட்டனாரே. (1)

மண்ணிடைக் குரம்பைதன்னை மதித்துநீர் மையலெய்தில்
விண்ணிடைத் தருமராசன் வேண்டினால் விலக்குவாரார்
பண்ணிடைச் சுவைகள் பாடியாடிடும் பத்தர்க்கென்றுங்
கண்ணிடை மணியர்போலுங் கடவூர் வீரட்டனாரே. (2)

பொருத்தியகுரம்பை தன்னுட் பொய்நடை செலுத்துகின்றீ
ரொருத்தனை யுணரமாட்டீ ருள்ளத்திற் கொடுமைநீக்கீர்
வருத்தின களிறுதன்னை வருத்துமா வருத்தவல்லார்
கருத்தினிலிருப்பர்போலுங் கடவூர் வீரட்டனாரே. (3)

பெரும்புலர் காலைமூழ்கிப் பித்தற்குப் பத்தராகி
யரும்பொடு மலர்கள்கொண்டாங் கார்வத்தை யுள்ளேவைத்து
விரும்பி நல்விளக்குத்தூபம் விதியினாலிட வல்லார்க்குக்
கரும்பினிற் கட்டிபோல் வார்கடவூர் வீரட்டனாரே. (4)

தலக்கமே செய்துவாழ்ந்து தக்கவாறொன்றுமின்றி
விலக்குவாரிலாமையாலே விளக்கத்திற் கோழிபோன்றேன்
மலக்குவார் மனத்தினுள்ளே காலனார்தமர்கள்வந்து
கலக்கநான் கலங்குகின்றேன் கடவூர் வீரட்டனாரே. (5)

பழியுடையாக்கைதன்னிற் பாழுக்கே நீரிறைத்து
வழியிடை வாழமாட்டேன் மாயமுங்தெளியகில்லேன்
அழிவுடைத்தாய வாழ்க்கை யைவராலலைக்கப்பட்டுக்
கழியிடைத் தோணிபோன்றேன் கடவூர் வீரட்டனாரே. (6)

மாயத்தை யறியமாட்டேன் மையல்கொண் மனத்தனாகிப்
பேயொத்துக் கடைகயானேன் பிஞ்ஞகாபிறப்பொன்றில்லீ

நோயத்தால் நினையமாட்டே னீதனே நீசனேனுன்
காமத்தைக் கழிக்கமாட்டேன் கடவூர் வீரட்டனாரே. (7)

பற்றிலா வாழ்க்கைவாழ்ந்து பாழுக்கே நீரிறைத்தேன்
உற்றகால் கயவர் தேருமென்னும் கட்டுரை யோடொத்தேன்
எற்றுளே னென்செய்கேனா னிடும்பையால் ஞானமேதுங்
கற்றிலேன் களைகண் காணேன் கடவூர் வீரட்டனாரே. (8)

சேவிலே ரனையகண்ணார் திறம்விட்டுச் சிவனுக்கன்பாய்ப்
பாலுநற்றயிர் நெய்யோடு பலபல வாட்டியென்றும்
மாவினைத்தவிர நின்ற மார்க்கண்டர்க் காகவன்று
காலனை யுதைப்பார்போலுங் கடவூர் வீரட்டனாரே. (9)

மூர்த்தருவிருவரோடு மூவருமாயினாரும்
இந்திரனோடு தேவரிருடிகளின்பஞ் செய்ய
வந்திருபது கடோளாலெடுத்தவன் வலியைவாட்டிக்
கந்திருவங்கள் கேட்டார் கடவூர் வீரட்டனாரே. (10)

திருச்சிற்றம்பலம்.

எனவும்,

திருச்சிற்றம்பலம்.

மலைக்கொளானை மயக்கிய வல்வினை
நிலைக்கொளானை நினைப்புறு நெஞ்சமே
கொலைக்கை யானையுங் கொன்றிடுமாதலாற்
கலைக்கை யானைகண்டீர் கடவூரரே. (1)

வெள்ளிமால் வரைபோல் வதோரானையார்
உள்ளவாறெனையுள் புகுமானையார்
கொள்ளமாகிய கோயிலுளானையார்
கள்ளவானைகண்டீர் கடவூரரே. (2)

ஞானமாகிய நன்குணரானையார்
ஊனைவேவ வுருக்கிய வானையார்
வேனவானை யுரித்துமை யஞ்சவே
கானலானை கண்டீர் கடவூரரே. (3)

ஆலமுண்டழகாய தோரானையார்
நீலமேனி நெடும்பளிங் கானையார்

கோலமாய கொழுஞ் சுடரானையார்
காலவானை கண்டீர் கடவூரரே. (4)

அளித்தவா னஞ்சுமாடிடு வானையார்
வெளுத்த நீள்கொடி யேறுடை யானையார்
எளித்த வேழத்தை யேழ்குவித் தானையார்
களித்தவானை கண்டீர் கடவூரரே. (5)

விடுத்தமால்வரை விண்ணுற வானையார்
தொடுத்தமால்வரை தூயதோ ரானையார்
கடுத்தகாலனைக் காய்ந்ததோ ரானையார்
கடுத்தவானை கண்டீர் கடவூரரே. (6)

மண்ணுளாரை மயக்குறு மானையார்
எண்ணுளார் பலரேத்திடு மானையார்
விண்ணுளார் பலரும் மறியானையார்
கண்ணுளானை கண்டீர் கடவூரரே. (7)

இனக்குஞ் செம்பவளத் திரளானையார்
மனக்கும் வல்வினை தீர்த்திடு மானையார்
அனைக்கு மன்புடையார் மனத்தானையார்
கனைக்குமானை கண்டீர் கடவூரரே. (8)

வேதமாகிய வெஞ்சுடரானையார்
நீதியால் நிலனாகிய வானையார்
ஓதியூழி தெரிந்துணரானையார்
காதலானை கண்டீர் கடவூரரே. (9)

நீண்டமாலொடு நான்முகன்றனுமாய்க்
காண்டுமென்று புக்கார்க ளிருவரும்
மாண்டவா ரழலாகிய வானையார்
காண்டலானை கண்டீர் கடவூரரே. (10)

அடுத்துவந்த விலங்கையர் மன்னனை
யெடுத்தோள்க ளிறநெரித்தானையார்
கடுத்தகாலனைக் காய்ந்ததோ ரானையார்
கடுக்கையானை கண்டீர் கடவூரரே. (11)

திருச்சிற்றம்பலம்.

எனவும்,

“பாற்கடல் கடையப் படுங்கடு வெண்ணெயைத்
திருமிடற் றடக்கிய சிவனே படைக்கலம்
அடங்கலு மடக்கிடுங் கடுங்கொலைக் காலனைக்
காலெடுத் துதைத்த கடவுளின் னடைக்கலம்
உலகடங் கலும்படைத் துடையவன் றலைபறித்
திடக்கையி லடக்கிய விறைவநின் னடைக்கலம்
செய்யபொன் னம்பலச் செல்வநின் னடைக்கலம்
ஐயநின் னடைக்கல மடியனின் னடைக்கலம்
மனைவழி யலைத்திடுங் கனவெனும் வாழ்க்கையும்
விழும்பொரு ளறியா வழுக்குறு மனமும்
ஆணவ மலத்துதித் தலைந்ததி னுழைந்திடு
நினைவைப் புழுவென நெளிந்திடு சிந்தையும்
படிறும் பாவமும் பழிப்புறு நினைப்பும்
தவறு மழுக்கா றுமிவறு பொச்சாப்பும்
கவடும் பொய்யுஞ் சவடும் பெருஞ்சின
விகலுங் கொலையு மிழிப்புறு புன்மையும்
பகையுமர் சமுந் துணிவும் பனிப்பும்
முக்குண மடமையு மைம்பொறி மயக்கமும்
இடும்பையும் பிணியு மிடுக்கிய வாக்கையை
உயிரெனுங் குருகுவிட் டோடுங் குரம்பையை
எலும்பொடு நரம்பு கொண்டிடையிற் பிணித்துக்
கொழுந்தசை மேய்ந்து மொழுக்கு விழுங்குடிலைச்
செழும்பெழு வுதிரச் சிறுபுழுக் குரம்பையை
மலவுடற் குடத்தைப் புலவுடற் புட்டிலைத்
தொலைவிலாச் சோற்றுத் துன்பக் குழியைக்
கொலைபடைக் கலம்பல கிடக்குங் கூட்டைச்
சலிப்புறு வினைப்பல சரக்குக் குப்பையைக்
கோட்சரக் கொழுகும் பீறற் கோணியைக்
கோபத் தீமூட்டுங் கொல்லன் றுருத்தியை
ஐம்புலப் பறவை யடையும் பஞ்சரத்தைப்
புலராக் கவலை விளைமரப் பொதும்பை
ஆசைக் கயிற்றி லாடு பம்பரத்தைக்
காசிற் பணத்திற் சுழலுங் காற்றாடியை
மக்கள் வினையின் மயங்குந் திகிரியைக்
கடுவெளி புருட்டிய சகடக் காலைப்
பாவச் சரக்கொடு பவக்கடல் புக்குக்
காமக் காற்றெடுத் தலைப்புக்
கொடுவழிக் கரைசேர் கொடும்மரக் கலத்தை
இருவினை விலங்கொடு மியக்கு புற்கலனை
கடுவன் வந்தழைத்திட நடுங்கிடும் யாக்கையைப்

பிணைமெனப் படுத்தியான் புறப்படும் பொழுதுநின்
னடிமலர்க் கமலத்துக்க பயகின் னடைக்கலம்
வெளியிடை யுருமிடி யிடித்தென வெறித்தெழுங்
கடுநடை வெள்ளிடைக் கடவுணின் னடைக்கலம்
இமையா நாட்டத்திறையே யடைக்கலம்
அடியார்க் கெளியா யடைக்கல மடைக்கலம்
மறையவர் மன்றுணின் றாடிக்
கருணைமொண் டலையெறி கடலே யடைக்கலம்
தேவருமுனிவருஞ் சென்று நின்றேத்தப்
பாசிழைக் கொடியொடு பரிந்தருள் புரியும்
எம்பெருமானின் னிணையடிக் கபயம்
அம்பலத்தரசே வடைக்கல முனக்கே''

எனவும், மனமுருகித் தோத்தரித்த வளவில், இழுத்தற்குரிய பாசக் கயிறானது தன்கழுத்திற் சேர்ந்தும் துயிரில்லாத மார்க்கண்டேயரு க்கு முன்பாக, அலைகலையுடைய பாற்கடலிற் றோன்றிய கறுத்தவிட மணிந்த கண்டத்தினரான நெற்றிக் கண்ணுடைய சிவபிரான் பிர சன்னராய், உன்னிடத்திற் சம்பவித்த துயரத்தை நிவாரணிக்கின் றேம் நீ அச்சமுறாதே யென்று திருவாய் மலர்ந்தனர்.

அப்போது மூன்று நகரங்களென்னும் மதில்களை நகைத்தழி த்தவராகிய சிவபிரான், இவ்வியமன் அகங்காரத்தில் விசேடித்தவ னாய், மார்க்கண்டேய னுடைய பிராணனை வாங்குவதற்காகப் பதை ப்புற்றனனென்று திருவுளங்கொண்டு சினந்தவராய், தமது இடது பாதத்தால் சற்றுவீசி யுதைத்தருளினர். உடனே இயமனென்பவன் ஆகாயத்தி லுலவும் மேகத்தை யொத்துப் பூமியிற் படியும்படி வீழ்ந் தான். இயமன் அவ்வாறு பூமியில் விழுந்தகாலத்திலே பிரமன் முதலிய தேவர்கள், தாங்கள் வாழ்கின்ற தன்மையை யுடையது எவ் வுலகமோ என்று வருந்தினார்கள், உலகத்தைச் சூழ்ந்துள்ள கடலும் முழங்கவில்லை, கீழும் மேலுமாகவுள்ள அண்டகோடிக ளனைத்தும் உடைபட்டன, பூமியும் பிளவுபட்டது. பக்கத்திலேயிருந்த சைனி யங்களும் ஏறிச் செல்லும் எருமைக் கடாவும் ஏக்கமுற்றுப் பூமியில் வீழ்ந்திறந்தன. கொடுமையாயுள்ள தீவினையைச் செய்பவர்கள் அழி ந்துபோகும் காலத்தில் அவர்களைச் சேர்ந்தவர்களும் அழிந்துபோ வார்களோ! "அல்லலென்செயு மருவினையென்செயுந், தொல்லை வல் வினைத்தொண்டர்தா மென்செயுந், தில்லைநகர்ச் சிற்றம்பலவனார்க், கெல்லையில்லத் தோரடிமை பூண்டேனுக்கே'' என்றும், "நாளென் செயும் வினைதா னென்செயு மெனைநாடிவந்த, கோளென்செயுங் கொடுங்கூற்றென்செயுங் குமரேசரிரு, தாளுஞ் சிலம்புஞ் சதங்கை யுந் தண்டையுங் கிண்கிணியுந், தோளுங் கடம்புமெனக்கு முன்னே வந்து தோன்றிடினே'' என்றும் பெரியர்களருளியபடி, அப்பொ ழுது நமதுயிரைப் பாதுகாத்தற்குச் சிவபிரானிருக்கின்றனர், அவ்

வியமன் வந்து என்ன செய்வான் என்று; வடமொழிச் சந்தப்பாவி ஞாலும் தோத்திரஞ்செய்து ஒப்பற்றவராய் விளங்கிய, சிறுவராகிய மார்க்கண்டேயரைக் கண்ணுற்று எமது சிவபிரானும் திருவுளங் களித்தனர். புதல்வனே நீ நம்மைத் துதித்துக் குற்றமற்ற உத்தம தரமான வழிபாடியற்றிய காரணத்தால், உனக்கு அழிவுறாததாகச் சிறந்த ஆயுளை நாம் பாலித்து விரும்பினேமென்று திருவாய் மலர்ந் தருளினர். இவ்வாறு திருவாய் மலர்ந்த தருணத்தில், காலகால ரா கிய அப்பெருமான் தமது திருவடியைத் துதிக்கும் மார்க்கண்டே யர் பூசிக்கின்றதற் குரியதாகும் அச்சிவலிங்கத்திற் கரந்தருளினார். அவ்வாறெதிரிலே நின்றமார்க்கண்டேயர் சிவபிரான் திருமே னியைப் பொருந்திய பேரன்பினாலே தியானித்து ஆலயத்திற் குப்போய், அப்பெருமான் திருவடிகளைச் சிரசிற் சேர்த்துக்கொண் டனர். மனம் வருந்தும்படியாகத் துக்கித்துக் கண்ணீர் பெருகிய கடலிலழுந்திச் சோர்ந்திருக்கும் மாதாபிதாக்களைத் தழுவிக்கொண்டு பணிந்து, முற்பட்டிருந்த பயமனைத்தையும் ஒழித்தனர். அவ்விட த்தில் சிலகாலம் வசித்திருந்து நீங்கி, சிவந்தகண்களைப் படைத்த இடபத்தை வாகனமாகக்கொண்டருளும் சிவபெருமான் விசேட மாகச் சானித்தியமா யிருக்கின்ற தலங்களனைத்தையும், அம்மார்க் கண்டேயர் பெருகிய மெய்யன்புடன் சென்று துதிக்கலாயினர். முழுதொருங்குணர்ந்த மார்க்கண்டேயர் சிவபெருமான் திருவால யங்கள் எவற்றையும், தினந்தோறும் பத்தியுடனே முற்பட்டு வண ங்கி, மிகுந்த தூய்மையுடையவராகி அழிவற்ற சிவன் மூர்த்தியை யடைந்தனர். அந்த மார்க்கண்டேயர் தேவலோகத்தினு மிருக்கின் றார், விருப்பத்துடனே துதிக்கின்றோர் கண்களினு மிருக்கின்றார், அத்தகைபோருடைய இதயத்தினு மிருக்கின்றார், நிலவுலகத்தினு மிருக்கின்றார், ஆதலால் அவருடைய செய்கை நினைக்குந் தகுதி யுடையதோ. திருமால் நாபிக்கமலத்திற்றோன்றிய பிரமன் இறந்த காலவளவைக் கணித்தாற் பயனென்னை; உலகத்தை இரட்சிக்கின்ற திருமால் இறக்கும்படி, அம்மார்க்கண்டேயர் கண்டிருக்கின்ற கற்ப காலங்களோ எண்ணிறந்தனவாகும்.

இத்தகைய பெருமைவாய்ந்த அம்மார்க்கண்டேயர் குரோஷ் டிக்கு இம்மார்க்கண்டேய புராணத்தை விருப்பத்துடன் ஓதியருளி னர். சுபம்.

இச்சரித்திரவசனம் ஒருவாறு தொழுவூர் - வெ - திருநாகேசுவர முதலியாரால் எழுதப்பட்டது.

மார்க்கண்டேயர் வரலாறு

முற்றிற்று.

14684

మంగళాచరణం.

ఓంకారార్థంమహాత్మానంసచ్చిదానందలక్షణం
శ్రీసర్వమంగళోపేతంజగత్ప్రభుముపాస్మహే॥

ప్రతిజ్ఞా.

అష్టాదశపురాణేషుమార్కండేయంహిసప్తమం
తత్పుస్తకానిప్రాచీనలిఖితానివిలోక్యచ॥
దేవస్వామ్యాదిగచ్ఛద్వ్యాఖ్యానాన్యపిచసాదరం
యాథాతథ్యేనతస్యార్థంవక్ష్యేద్రమిడభాషయా॥

பிரணவப்பொருளாயும் பெரியோனாயும் உண்மையறிவானந்த வடிவனாயும் முழுமங்கலியோடு கூடியவனாயுமுள்ள உலகநாயகனாகிய பெரிய பெருமானை வணங்குகின்றோம்.

பதினெண்புராணத்துள்ளும் ஏழாவதாகிய மார்க்கண்டேயபுராணம், முன்னோரால் பொறித்துவைக்கப்பட்ட அப்புத்தகத்தைத் தேடித் தேவசுவாமி முதலியர்களால் செய்யப்பட்டுள்ள பொழிப்புரைகளை ஆராய்ந்து உண்மை தவறாதபடி, சரியான அதன்பொருளினைத் தமிழால் கூறுகின்றோம். எ-று.

—(*)—

புராணபடனவிதி.

వేదవ్యాసంనమస్కృత్యసశిష్యంలోకవందితం
దేవీసరస్వతీంనత్వాపురాణపఠనంచరేత్.

மாணாக்கரோடு உலகத்தாராருச்சனைக்குரியராய் வீற்றிருக்கும் வேதவியாசருக்கு நமஸ்காரஞ்செய்து சாஸ்வதிக்கு நமஸ்காரஞ்செய்து புராணபாராயணமென்னும் வாசிகவேள்வியைச் செய்யத்தக்கது. எ-று.

உ

ஓம் சிவகணபதயே நம:

பாயிரம்.

ஓமெனுந்தாரகப்பொருளாயம்மையப்பனாயுலகையுதவிக்காக்கும்
தேமருவும்பேரொளியைத்திருவனைத்துந்தருந்தெய்வத்திருவன்றன்னை
நாமனைத்துநண்ணுமோனாமெனைத்துமின்புறவுண்ணயந்துநின்று
பூமணத்திலமர்ந்தானைப்பொதுவிருந்தபுண்ணியனைப்போற்றிவாழ்வாம். (க)

ஞானமதவாரணத்தையருட்பிரகாசக்கனியைநயந்தென்னுள்ளத்
தானமறவீற்றிருந்தவுத்தமனைத்தினம்பழிச்சியொருபானெட்டென்
றானபுராணத்துண்மையருணுமைந்தரறிதரத்தென்சொல்லால்
ஈனமறவுரைப்பனெனமொழிவித்தவருள்வாழியினிதுமாதோ. (௨)

உ

திருச்சிற்றம்பலம்.

(*)

மார்க்கண்டேய புராணம்.

தருமபக்ஷி ஜைமினி சம்வாதவாசகம்.

முதலாவது,

ஜைமினிமுனிவர் வினாமுதலிய வுரைத்த அத்தியாயம்,

ஸ்ரீசூதபுராணிகர், சௌனகர்முதலிய மஹாவிருஷியர்க்குச் சொல்லத் தொடங்கினர்.

தியானயோக விரதத்திலும் வேதமோதலிலும் எப்பொழுதும் பிரியாத மார்க்கண்டேய மஹாமுனிவரை வணங்கி வியாசர் மாணாக்கருமாயிருந்த வொளியையுடையவருமாகிய ஜைமினி முனிவர் வினவினர்.

மார்க்கண்டேயரை ஜைமினிகாண்டல்.

அறுகுணக்குன்றாகிய மார்க்கண்ட முனிவரே! பாரதமென்னும் இதிகாசம் பெரியோராகிய வியாசராற்கூறப்பட்டது. குற்றமில்லாமலே புனிதமாயிருக்கும் பலசாத்திரங்களின் கூட்டத்தால் நிரம்பியது. சொல்வளத்தோடுங் கூடிய தெளிவினையுடையது. நல்ல சொற்களால் புனையப்பட்டது. பூருவ பக்கவாக்கியங்களாலும் சித்தாந்தமுடிவாலும் நன்கு அமைக்கப்பட்டது. தேவர்களுக்குள் திருமாலும், மக்களுள் வேதியனும், அணிகளுட் சூடாமணியும், படைகளுள் வச்சிரப்படையும், கரணங்களுள் மனமும் சிறந்திருப்பதுபோலும் நூல்களுள் மஹாபாரதம் சிறந்துள்ளது. இதனிடத்து அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகை உறுதிப்பொருளுங் கூறப்பட்டன. அவ்வுறுதிப்பொருள், ஒன்றுடன் ஒன்றுசேர்ந்தனவாயும், அதனதன் அநுபந்தத்தோடு கூடியதாயும், வேறுவேறாயும், உரைக்கப்பட்டன வாதலின், இந்த மஹா பாரதமே சிறந்த தருமநூலும், உயர்ந்த பொருணூலும், மேம்பட்ட இன்பநூலும், அவ்வாறே மதித்தற்கரிய வீட்டுநூலும், ஆம். நான்கு ஆச்சிரமத்தின் தருமவொழுக்கங்களுக்கும் உணர்ச்சிக் கருவியாகிய இந்தப் பாரதம் அறிவாராகிய வியாசராற் கூறப்பட்டது. எம்பெருமானே! இந்தச் சாத்திரம் எந்த விரோதவகையாலும் விலக்கப்படாதது, எவ்வகையாற் பரவுமோ, அவ்வகையாற் செய்யப்பட்டது. வேதமென்னும் மலையிலிருந்து வியாச்மொழியென்னும் வெள்ளமிழிந்து குதர்க்கமென்னும் மரங்களை வேர்பறித்தெறிந்து, நிலத்தில் இராஜசகுணமென்னுந் துகளை யடக்கிவிட்டது. நன்மொழியென்னும் அன்னப்பறவைகளை யுடையதாய், நல்ல உபாக்கியானம் - கதைகளென்னும் தாமரையோடு விளங்கி, கதைப்பெருக்கென்னு நீரோடு நிரம்பியதோர்பெரியமடுவாக விருக்கின்றது. அப்படிப்பட்ட இப்பாரதகதை விரிந்த வேதப்பொருள் பலவற்றோடு சேர்ந்திருத்தலின் அதனுண்மையினை அறிய விரும்பினவனாய் நான், ஞானம், வைராகம், தவமிவற்றிற் குறைவற்ற தேவரீரை அடைந்தேன். ஆதலால், என்னிறு வென்னையெனில் ?

ஜைமினிமுனிவர் வினவுதல்.

ஸ்ரீதனவிது.—உயிர்களைத் திருத்துபவனும், எல்லாவற்றிலும் வசிப்பவனும், உலகத்தின் தோற்றம், நிலை, ஒடுக்கம் இவற்றின் கா

ரணனுமானவன், மாயைக்குணமில்லாதவனே யாயினும் ஏன் மானிடதேகத்தை யடைந்தனன்.

இரண்டாவது.—துருபதன் மகளாகிய கிருஷ்ணதேவி-துரௌபதை ஒருத்தியே பாண்டுமக்களைவருக்கும் ஏன் மனைவியாயினாள்? இவ்விடயத்தி லெனக்கு ஐயம் மிகவும் உள்ளது.

மூன்றாவது.—கலப்பையையே படைக்கலமாக வுடையவனும் மிகுவலியுடையவனுமாகிய பலராமன் தீர்த்தயாத்திரையின் சம்பந்தத்தினால் பிரமகத்திக்கு ஏன் அவிழ்தஞ்செய்துகொண்டார்?

நான்காவது.—மஹாரதர்களாகிய அந்தத் திரௌபதையின் மக்கள் சிறந்தவர்களேயாயும், பாண்டவர்களாகிய சார்பிடமிருந்தும் மணவினையில்லாதவர்களேயாய்த் திக்கற்றவர்களைப்போல ஏன் மரணத்தை யடைந்தனர்?

சுவாமி! தேவரீர், அறியாதவர்களை அறிவிப்பவராதலின் இதனை எனக்கு விரித்துக் கூறத்தக்கவராக விருக்கின்றீர் என்று வினவினர். அதுகேட்டு, மார்க்கண்டேயமுனிவர் பதினெட்டு நற்குணக் கருத்தினை யுடையவராய், (அல்லது, பதினெட்டுக் குற்றமில்லாதவராய்) கூறத்தொடங்கினர். இதனால் "ஆசானுரைத்த தமைவரக்கொளினும் காற்கூறல்லது பற்றலனாகும்" எனவும் "பெரியாரைத் துணைக்கொள், பேதமை யகற்று" எனவும் கூறிய, விதிமொழி விளங்கிற்று. சைமினியே வினவலால்.

தருமபக்ஷி கதை.

இருடியரிற்சிறந்த ஜைமினிமுனிவரே? இப்போது உமது வினாவுக்கு நாம் விடைசொல்லத்தக்கதேயாயினும் அது மிகவிரிவுடையதாதலானும், நித்திய கருமகாலம் சமீபித்திருத்தலானும் இந்த வேளை யதற்கு ஒத்ததல்ல. ஆனால், உமக்கு அதனைச் சொல்லத்தக்கவர்களைச் சொல்லுகிறேன், கேளும். உம்மைச் சந்தேகமில்லாதவ ராக்கத்தக்க பிங்காக்ஷன், விபோதன், சுபத்திரன், சுமுகன் என்னும்பெயருடைய துரோணபுத்திரர்களாகிய சிறந்தபறவை வடிவமுடையவர்கள்

நால்வர் தத்துவங்களை உணர்ந்தவர்களாயும் சாத்திரங்களைச் சிந்திப்பவர்களாயுமுள்ளனர். வேதசாத்திரங்களின் விசேட ஞானத்தில் அறிவு மழுக்கத்தை யடையாத அம்முனிவர்கள் விந்தகிரியின் குகைக்கண்ணே யுள்ளனர். அங்கு அவர்களைச் சென்றடைந்து, வணங்கிக்கேட்பீராக என்றனர்.

இது "பருவத்தோடொட்ட வொழுகறிருவினைத், தீராமையார்க்குங் கயிறு" என்பதை யுணர்த்திற்று.

ஞானியான மார்க்கண்டேயமுனிவரால் இவ்வாறு சொல்லப் பட்டவராய் ஆச்சரியத்தோடு மலர்ந்த மனத்தையுடைய இருடிகள் தலைவராகிய ஜைமினி, மறுபடியும் வினவத் தொடங்கினர்.

ஓ! அந்தணர் பெருமானே! பக்ஷிகட்கு மானுடவாக்குண்டாவது மிகுந்த வியப்பாகவே யிருக்கின்றது. அளவற்ற அருமையோடு கூடிய விசேட அறிவை அந்தப்பறவைகள் அடைந்தது மிகுந்த அதிசயம். அவர்கள் திரியக்குயோனியிற்றானே பிறந்திருந்தவர்களானல் அறிவு எவ்வாறு வந்தது. அந்தப் பறவையானவர்கள் துரோணர் மக்கள் என்று எவ்வாறு கூறப்படுகின்றனர். அந்நான்கு மக்களையும் பெற்ற துரோணரும் யர்ர்? குணவான்களாகிய அப்பெரியோர்களுக்கு எவ்வாறு ஞானம் உதயமாயிற்று? என்றார்.

நாரதர் நந்தனவனமுற்ற கதை.

அதுகேட்ட மார்க்கண்டேயமுனிவர் கூறுவார். முன்னாளில் * நந்தவனத்தில் நாரதர வந்தபோது இந்திரனுக்கும் அரமாதருக்கும் நடந்ததைச் சொல்லுகின்றேன். ஞாபகத்தோடும கேட்பீராக. நாரதர், நந்தன வனத்தில் அரம்பையர் நடுவே இருந்து அவர்முகத்தே மயங்குற்ற நோக்கமுடைய இந்திரனைக்கண்டார். கண்டவளவில், அவ்விந்திரன் எழுந்து அவருக்கு அன்போடு ஆசனங் கொடுத்தான். தேவமாதாகள் வலாசுரனையும் விருத்திராசுரனையுங்கொன்ற அந்த இந்திரன் எழுந்ததைப்பார்த்துத் தாமும் மிகுந்த பயபத்தியோடும் தலைவணங்கி நின்று அத்தேவரிஷியைத் தொழுதார்கள். இவ்வாறும்

---

* நந்தவனம் என்பது இந்திரன் பூந்தோட்டம்.

அவர்களாற் பூசிக்கப்பட்ட அந்த நாரதர், இந்திரன் தன்னாசனத்திலிருந்தபின்பு, தக்கபடி இனிய வார்த்தையாடி நல்லகதைகளைச் சொல்லிக்கொண்டிருந்தனர். அப்போது, இந்திரன் அம்முனிவரை நோக்கிச் சொல்லத் தொடங்கினன்.

சுவாமி! இவள் அரம்பை, இவள் மிசிரகேசி, இவள் ஊர்வசி, இவள் திலோத்தமை, இவ்ள் கிருதாசி, இவர்கள் மேனகை முதலியவர்களாம். இத்தாசிகளுள்ளே தேவரீர்க்கு யாரிடத்து விருப்பமோ அவளைப் பணிசெய்வதற்குக் கட்டளையிட்டருளும் என்றான். அதுகேட்டு முனிவரிற்சிறந்த நாரதர் சிறிது ஆலோசித்து, பயபத்தியோடும் எதிர்நிற்கும் அந்த அமாமாதர்களை நோக்கி, இதனைக் கூறலாயினர். நும்மனைவருள்ளும் யார் அழகினாலும் உதாரமுடைமையாலும் நற்குணத்தாலும் தன்னைச்சிறந்தவளாக வெண்ணியிருக்கின்றாளோ, அந்த மாது என்னெதிரே நடனஞ்செய்க. குணம், வடிவில்லாதவளுக்கு நடனத்திற் சுவையுண்டாகாது. நல்லசார்புடைய கூத்தே கூத்து. அல்லாதது பகடிக்கூத்துப்போலாம் என்றனர். அங்ஙனம் அவர் சொல்லியவளவிலே, அவ்வரமாதருளொவ்வொருத்தியுமெழுந்து நாரதரைவணங்கி, நான்குணவதி, நான்குணவதியென்று கூற, மற்றொருத்தி நீயல்ல நீயல்லவென்று மறுத்து நிற்க, இறைவனாகிய இந்திரன் அவர்கள் விரைவையும் ஊக்கத்தையும்நோக்கி, உம்முள் யார்குணவதியென்று கூறும்படி அம்முனிவரைக் கேளுங்களென்று கூறினன். கூறவே அவ்விந்திரன் கருத்தின்படி நடக்கும் அந்தமாதர்களும் அவ்வாறே நாரதரை வினவினர். அப்போது அந்நாரதர் சொன்னசெய்தியைச் சொல்லுகின்றேன் கேளும் ஜைமினி முனிவரே! என்று மார்க்கண்டேயர் கூறுவார்.

மலையாசினிடத்தில் தவஞ்செய்துகொண்டிருக்கும் முனிவர்க்காசாரிய துருவாசரை நம்மில்யார் மனத்திற் காமமுண்டாம்படி செய்து வருத்தவல்லவளோ, அவளே குணவதியாக நான் கொள்வேன் என்றுநாரதர் கூறினர். அவ்வுரைகேட்ட அரமாதர் யாவரும் மெலிந்த உள்ளத்தினையுடையவர்களாய் இது எம்மாலாவதல்ல என்று சொல்லிப் பின்னிடைந்தனர். அவருள் வபு என்பவள் அம்முனிவரைத் தன்புறத்தலில் அஞ்சாத நெஞ்சுடையவளாய், நாரதரை

நோக்கி, ஐயரே! அத்துருவாசமுனிவர் எங்குள்ளாரோ, அங்கு இப்போதே போகின்றேன். உடம்பாகிய தேரின்கண்ணே, இந்திரியங்களென்னும் குதிரைகளை மனமென்னுங் கயிறுபூட்டி, புத்தியென்னும் தேர்ப்பாகனால் இழுத்துப்பிடித்து நடத்தும் அப்பெருமுனிவர்மேல் மன்மதன் பாணங்களை விடச்செய்து இந்திரியக் குதிரைகள் பூண்ட கயிற்றை அறுப்பித்து, சாரதியின் வலிமையைக் கெடுத்துச் சிதறவடிக்கின்றேன். பிரமதேவனேயானாலும் விஷ்ணுவேயானாலும், முடிவில் சிவனேயானாலு மாகுக, அவர்களையும், இப்போதே, மன்மதபாணத்தால் மனநோகச்செய்வேன் என்று கூறிவிட்டு அந்த வபு என்பவள் இமயமலைக்குச் சென்றாள்.

வபு துருவாசரால் சாபமடைதல்.

அங்கே தவத்தின் பெருமையால் கொடுமையுள்ள செந்துக்களின் துன்பமெல்லாம் ஒழிந்திருந்த, அம்முனிவர் இருக்குமிடத்திற்குச் சென்று குரோசதூரத்தில் நின்று குயில் கூவினாற்போலும் இனிமையான கானம்பாடினள்.

அப்போது, சிறந்தவளாகிய அவ்வரமாது பாடும் இசையைக் கேட்டு, அப்பெருமுனிவர் மனத்துள்ளே வியப்பினை யடைந்தவராய் இனிய குரலோசையுங் கூடிய அப்பெண்ணிருக்கு மிடத்திற்கு வந்து, முற்றழகோடும் கூடியிருக்கும் அவளைப் பார்த்து, அம்முனிவர் பெருமான் தமது நெஞ்சினைச் சலிக்கவொட்டாது நிறுத்தி, அவள் தம்மை வருத்தவேண்டியேவந்தவளாக அறிந்து பெருவெகுளிகொண்டு அவளைநோக்கியொன்று சொல்லத் தொடங்கினார்.

அந்தரத்திற்றிரியுஞ் சிற்றறிவினை யுடையவளே! நீ அழகின் செருக்கினால் தருக்கடைந்து, மிகமுயன்று அரிதிற்றேடிய என்றவத்தைக் கெடுத்தலினால் எனக்குத் துன்பஞ்செய்யும்பொருட்டு வந்தாயாதலால் உன் இயற்கையான வடிவைவிட்டு, என்சினத்தினாற் பாவமுற்றவளாய்க் கருடன்மரபில் பிறப்பினையடைந்து பறவைவடிவு கொண்டு பதினாறியாண்டிருக்கக்கடவை அரமாதருள் இழிந்தவளே! பின் உனக்கு நால்வர்மக்கள் பிறப்பர். அவர்களிடத்திலும் மக்களின்

பம் அனுபவியாது ஆயுதத்தாலடிபட்டுச் சுத்தமடைந்து, மீட்டும் சுவர்க்கத்தை யடைவை இதனை யினி நீ மறுத்துக் கூறலாகாது என்று, கேட்பதற்கும் அரிதாகிய வன்மொழிகளை, கண்சிவந்து, கைவளைகலிக்க நடுங்கிநின்ற அவ்வரமாதினுக்குக் கூறிப் பின்பு அம் முனிவர்கோமான் பூலோகத்தை விடுத்து, அசைவுடைய அலைகளை யும், புகழத்தக்க நன்மைக் கூட்டங்களையு முடைய ஆகாயகங்கை யை நோக்கிச் சென்றனர்.

இதனால், "குணமென்னுங் குன்றேறிநின்றார் வெகுளி, கணமே யுங் காத்தலரிது," எ-ம் "ஒன்னார்த்தெறலு முவந்தாரையாக்கலும், எண்ணிற்றவத்தான் வரும்" எ-ம். "அடக்கமமரருளுய்க்கு மடங்கா மை, யாரிருளுய்த்துவிடும்." எ-ம். "யாகாவாராயினும் நாகாக்க கா வாக்காற் சோகாப்பர், சொல்லிழுக்குப்பட்டு" எனவும் வரும் விதி மொழிகள் விளங்கின. அடக்கமில்லாமையின் குற்றமும், பெரியோர் தவத்தின் பெருமையும் விளங்கலின்.

முதலாவது அத்தியாயம் முற்றிற்று.

இரண்டாவது

பிங்காக்ஷன் முதலிய தருமபக்ஷிகளை வளர்த்த கதையுரைத்த அத்தியாயம்.

மார்க்கண்டேயர், ஜைமினி முனிவரைநோக்கிக் கூறுவார். ஐயரே! அரிட்டநேமி யென்னும் கசியப முனிவருக்கு மகனாகிய கருடன் பறவைகளுக்கு அரசனானான். அக்கருடன் மைந்தன் சம் பாதி மிகு புகழ்பெற்றவனாயிருந்தான். அவனுக்கு வாயுவொத்த ஆற் றலையுடைய சூரனாகிய சுபார்சுவன் என்னும் புதல்வன்பிறந்தான். அவன் புத்திரன் கும்பி. அவன் தநயன் பிரலோலுபன். அப்பிர லோலுபனுக்குக் கங்கன், கந்தரன் என்னும் மக்களிருவர்பிறந்தனர். அவருள் கங்கன் என்னும் புள்ளரசு, ஒருநாள் ஆகாயத்திற் சஞ்சா ரஞ் செய்துகொண்டே கைலைமலைச் சிகரத்திற்குவந்து, அங்கு குற்ற மற்றதாயும் மங்கலகரமாயுமுள்ள ஒரு கற்பீடத்தின்மேல் மனைவி

யோடு, ஆடையாபரண மலர்முதலியவற்ருல் அலங்காரஞ்செய்து கொண்டு, விநோதமாக காமவிச்சையுடையவனுகிய வித்தியுத்துரு வன் என்னும் அரக்கன் தாமரைபோலும் கண்களையுடையனுய் உட்கார்ந்திருக்கையில் அவ்வழகனைப்பார்க்கச் சென்றனன்.

இங்ஙனம் சென்று பார்த்த அளவிலே குபேரன் ஏவலனுகிய அவ்வரக்கன் கோபமுடையனுய், அப்புள்ளரசைநோக்கி, இழிந்தபறவையே! நீயெங்கிருந்து இங்கேவந்தனை பெண்பாலோடு கூடியிருக்கும் என்னிடத்திற்கு நீ வரலாமா? மிகுந்தவுரிமையோடு தேடிக் கொள்ளத்தக்க பொருளினைப் பற்றினூர்க்கு இது தருமமல்ல என்றான். அதற்கு அக்கங்கன், இந்தச்சிறந்தமலை உனக்கெப்படியோ? அப்படியே எனக்குமாம். அன்றிமற்றைப் பிராணிகளுக்கும் பொதுவேயாம். ஆகவே, இங்கு உனக்கென்னை? சுதந்தரம். என்று வினவினன்.

இங்ஙனம்கூறிய அக்கங்கன் என்னும் கழுகரசை அவ்வரக்கன் தன்வாளால் வெட்டியெறிதலும், உதிரஞ்சோர பயங்கரமாக வுணர்ச்சியின்றி விழுந்திறந்த செய்தியைக் கேள்விப்பட்டு, அவன் தம்பியாகிய கந்தரன் என்னும புள்ளேறுகோபத்தால் மெய்ம்மறந்து தெளிந்து, வித்தியுத்துருவன் என்னும் இராக்கதனை உடனே கொல்ல வேண்டு மென்று எண்ணி, திருக்கயிலாயத்தின் கொடுமுடியில் கங்கன் இறந்துகிடக்கும் இடம் வந்துசேர்ந்து, தமையனுக்குத் திக்கடன் நீர்க்கடன் முதலிய கழித்துக் கோபத்தாலும் மானத்தாலும் கண்கள்சிவந்து சுழலமிடப் பாம்பைப்போலும் சீறிக்கொண்டு, நம் தமையனைக்கொன்ற அரக்கப்பாவி எங்கிருக்கின்முனே, என்று அவ்விடந்தேடிச் செல்லுகையில் சிறகுகளின் பெருங்காற்றினுல் மலைகளையெல்லாம் அசைப்பித்து, பறக்கும வேகத்தால் மேகக்கூட்டங்களைச் சிதறவடித்துக்கொண்டு, கணத்திலே பலகவனை இறகுகளினுலே யழிக்கவல்லவனுய் அவ்விடம்வந்து அங்கே, மதுபானத்திலே விருப்பங்கொண்டு சிவந்தமுகமுங் கண்ணுமுடையனுய், சந்தனக்கலவையணிந்து பூமுடித்து, பொற்கட்டிலின்மேற படுத்து, தாமரை முகையையொத்த பற்களையுடைய கோரமுகத்தோடு கூடியிருக்கும் அந்த இராக்கதனையும், அவனது இடதுதொடைமே லுட்கார்ந்திருக்கும் அகன்றகண்ணினையும் குயிலைப்போலும் இனியகுரலினையு

முடைய தமனிகை அல்லது மதனிகை எனனும் பெயரையுடைய அவன் மனைவியையும்பார்த்து, மானம்வருத்திய உள்ளத்தினனாய் அக்கந்தரன் அம்மலை முழையிலிருக்கும் அவ்வரக்கனைச்கூவி, ஏடா! கொடும்பாவி! என்னோடுபோர்க்குவா அச்சந்தோன்றுது கவலையற்றிருந்த என்தமையனைக் கொன்றனையாதலால் உன்னை உன்செருக்கோடும் எமபுரஞ் சேரச்செய்கின்றேன். இப்பொழுது என்னாற் கொல்லப்படும் நீ, நம்பனைவைத்துக்கொல்லும் பாவியர்க்கும், பெண்கொலை சிசுக்கொலை செய்தவர்க்கும் உண்டாகத்தக்க நரகங்களெல்லாவற்றிற்கும் போகின்றாய் என்று கூறினான்.

இதனால், கங்கன் இடனறியாதுசென்று உயிரிழந்ததும், விந்தியுத்துருவன் வலியறியாது போர்செய்து உயிரிழந்ததும் கூறப்படுதலின் "ஆற்றருமாற்றி யடிபவிடனறிந்து, போற்றார்கட் போற்றிச் செயின்" எ-ம், "உடைத்தம் வலியறியா ரூக்கத்தினூக்கி, யிடைக் கண்முரிந்தார் பலர்" எனவும்வரும் விதிமொழி விளங்கிற்று.

இங்ஙனம், கந்தரனென்னும் சேனராஜனால் அறைகூவி யழைக்கப்பட்ட அந்தவிராக்கதன், மனைவி பக்கத்திலிருந்தமையால் உடனே பெருஞ்சினம் கொண்டவனாய் அப்புள்ளரசைநோக்கிக் கூறலாயினன். உன்தமையன் கொல்லப்பட்டனன், ஆயின் அந்த ஆற்றலன்றோ, முன் காட்டப்பட்டது. இப்போதும், இதேவாளால் உன்னையும கொல்கின்றேன், கொடும்பறவையே! ஒருகணம் இங்கு நில் பிழைத்துப் போகலாற்றாய் என்றுகூறி மைக்குழம்புபோலும் ஒளிவிட்டுக்கொண்டிருக்கும் தன்வாட்படையை யெடுத்துக் கொண்டனன்.

பின்பு அப்புள்ளரசினுக்கும் குபேரன் ஏவலாளியான வரக்கனுக்கும முன்கருடனுக்கும் இந்திரனுக்கும் நடந்தாற்போலும் ஒப்பற்ற போர்நடந்தது. அப்போது, அவ்விராக்கதன் கருநிறமுடைய வாளினை யேந்திக்கொண்டு வேகமுடைய அச்சேனராஜன்மீது வந்தான். அதுகண்ட புள்வேந்தும் நிலம்விட்டு மேலெழும்பிக் கருடன்பாம்பினை யறைந்துகொண்டு போனாற்போலும் அவ்வாளினை மூக்கினாற்பற்றி காலினால் முறித்தெறிந்தது. இவ்வாறு வாட்படை முறியவே அவ்விருவர்க்கும் மல்லயுத்தம் நடந்தது, பின்பு அக்கந்தரனாகிய பறவைபேறு அரக்கனைப்பற்றிக் கீழ்விழத்திமார்மேலேறி

மிதித்து நின்று, கால்நகந்தால் தலையைப்பற்றித் தெறிந்தனன். உடனே உதிரம்பெருக அவ்விராக்கதன் இறந்தான். அதுகண்ட அவன் மனைவி பயமுற்றவளாய் நான் உமக்கு மனைவியாகின்றேன் என்று அப்பறவைக்கு அடைக்கலம்புகுந்தாள். அவளை அக்கந்தரன் அழைத்துக்கொண்டு, தன் தமையனைக்கொன்ற வித்தியுத்ருபனைக் கொன்று பகைதீர்ந்து மனைவந்து சேர்ந்தான்.

இதனால் "தலைவராய்ச்சென்றோர் நம் எனை வினையுலப்பவேறுகி வீழ்வர் தாங்கொண்ட, மனையாளை மாற்றார்கொள" என்றமுதுமொழி விளங்கிற்று. அப்பால் மேனகைமகளாகிய அந்தமாது நினைத்தபடி உருவெடுக்கும் காமரூபியாதலால் கருடப்பேட்டின் உருவந்தரித்து அக்கந்தரனென்னும் பறவைவேந்தன் மனையிலிருக்கையில் அவள் அவனிடத்து, தார்க்ஷி என்னும் பெண்பறவை யொன்றைப்பெற்றாள். அப்பறவைதான் துருவாசமுனிவர் சாபத்தாற் பிறந்த வபு என்னும் சூரமாது.

* பின்பு மந்தபாலன் மக்களா போறிவினையுடையராய் ஜரிதாரி என்பவர்முதல் துரோணர் வரையிலுமாகிய சிறந்த நான்குமுனிவர்களிருந்தனர். அவருள் கனிட்டராகியும் வேத வேதாங்கமுதலிய கலைகளை முற்று முணர்ந்தவராகியும தரும சிந்தையராகியுமுள்ள துரோணர், கந்தரன் என்னும் பறவையரசனது உடன்பாடுபெற்று, மங்கலவடிவளாகிய அந்தத் தார்க்ஷி என்னும் பறவைக்கன்னிகையை மணம்புரிந்து வாழ்ந்துவருகையில் அந்தத்தார்க்ஷி கருப்பமடைந்து மூன்றரை மாதமானபின்பு ஒருநாள் குருக்கேத்திரத்துக்குப் போனபோது, அங்கே கௌரவர்க்கும் பாண்டவர்க்கும் கோரமான சண்டை நடந்துகொண்டிருந்தது. முன்னை சில்காரியம் நடக்கவேண்டியிருப்பதால் அந்தப் பெண்பறவை போர்க்களத்து நடுவேபோக, அவ்விடத்து அருச்சுனனுக்கும் பகதத்தன் என்னும் அரசனுக்கும் நடக்கும் போரைப்பார்த்திருக்கையில் அருச்சுனன் வில்லினின்றும் விடுபடும் அம்புகள், வெட்டுக்கிளிக் கூட்டம்போல ஆகாயவெளியை மூடிக்கொள்ள, அவற்றுள் கரும்பாம்பைப் போலும் வேலொன்று

* பாரதம், காண்டவ வன தகனக்கதையுட்பறவை வடிவாயிருக்கும் மந்தபாலமுனிவர் உபாக்கியானத்துள் அவர் சரிதம் காண்க.

மிகு வேகத்தோடுஞ்சென்று அப்பெண்பறவையின் வயிற்றைக் கிழித்தெறிந்தது. இதனால் "மூளாமுகத்து நில்லேல்" என்ற ஔவையார் திருமொழிப்பொருள் விளங்கியது.

இவ்வாறு கருப்பை கிழிந்தபோன மாத்திரத்தில் சந்திரமண்டலம்போலும் ஒளியுடைய நான்குமுட்டைகள், ஆயுள்வலியால் பஞ்சுப்பொதிமேல் விழுந்தாற்போலும் நிலத்தின்மேல் மெல்லெனவந்து விழுந்தன. படுக்கையிட்டாற் போற்சிதறிக்கிடந்த மாமிசத்தின்மீது அங்ஙன மவைகள் கீழ்விழுங்காலத்திற்குச் சரியாகச் * சுப்பிரதீபம் என்னும் சிறந்தயானைக்குக் கட்டியிருந்த பெருமணிபாணத்தா லறுபட்டுக் கீழ்விழுந்து நிலத்தைக் குழிசெய்து அசையாது வலுவாகப் பற்றி கடவுள் அருளால் அந்தப் பெரியமணி அந்நான்கு முட்டைகளுக்கும் கேடுறாதபடி மேலேவந்து மூடிக்கொண்டது. அப்பால் கௌரவர்க்கும் பாண்டவர்க்கும் பலநாள்யுத்தநடந்து முடிந்தபின்பு மஹான்மாவாகிய பீஷ்மரால் தருமமுடிபுகளை வினவியறியவேண்டித் தருமராஜன் அவ்வீட்டுமரிடத்திற்குப் போயிருக்கையில் முனிவர்கள் பலர் அங்கு வந்துகொண்டிருந்தார்கள். அப்போது, மணிக்குள்ளே நான்குமுட்டைகள் காக்கப்பட்டிருந்தவிடத்திற்கு அருகாகச் சமீகமுனிவர்வந்தார். அங்கே மணிக்குள்ளே இருந்தமுட்டைகள் சிறுபறவைகளாய்ப் பேரறிவினையுடையவர்களா யிருந்தாலும் பிறந்தபிறப்பின் சாதிக்குத்தக்க குரலோடு வீச் வீச்சென்று மழலைக் கூச்சலிடுகின்ற சத்தத்தினைக்கேட்டு அப்பெருமுனிவர் மாணாக்கரோடு அந்தமணியை மேலெடுத்துப்பார்த்து ஆச்சரியமடைந்து, தாய்தந்தை யொருவருமின்றிச் சிறகும்முளையாது, நிலத்தின்மே லிச்சிறுபறவைகள் கிடக்கின்றனவே, என்று இரங்கி மிகுந்த தயவுடையாராதலின் அம்முனிவர் தமக்குண்டாகிய வியப்பினைத் தம்முடன் வந்த வேதியச்சிறுவர்களுக்குச் சொல்லத் தொடங்கினர்.

ஆ!! ஆ!! தேவர்களாலடிபட்ட அரக்கர்படை முதுகிட்டோடும்போது, அந்தணர் தலைவராகியசுக்கிரன் அவர்களைநோக்கி நன்று சொன்னர். என்னெனில், அச்சமுற்றவர்களே ஏன் ஓடிப்போகின்

---

* நரகாசுரன் மகனானபகதத்தன் சுப்பிரதீபம் என்னும் யானைமேலேறித் துரியோதனனுக்குப் படைத்துணையாகவந்தான் என்றது பாரதம். இது அந்த யானை எனவறிக.

றீர்கள், ஓடத்தக்கதில்லை. மீளத்திருப்புங்கள். வீரத்தையும் புகழையும் விட்டு, எங்குபோனாற்றான் என்னை, சாகாமலொழிவீரோ, பிரமன்முதலில் எவ்வளவு விதித்தாரோ அவ்வளவே ஆயுளுண்டாமன்றிப் பார்த்திருந்தாலென்னை, போர்செய்தாலென்னை, மனத்தினினைத்தபடியெல்லாம் ஆயுள்கிடைக்கமாட்டாது. சிலர் பிராணபயத்தினால் தமது மனையிலிருப்பவர்களும் சாகின்றனர். சிலரோடிப்போயும் சாகின்றனர். சோறுண்ணும்போதே சிலர், நீர்குடிக்கும்போதே சிலர் சாகவில்லையோ, நினைத்தவிடத்திற்குச் செல்லும் ஆற்றலும் நோயொன்றுமில்லாதிருத்தலும் எந்தபடைகளாலும் வருபயமில்லாமையும், களிப்பினையும் உடையவர்களான பலரும் இறந்தொழிந்தனர். ஒழியாத தவத்திலிருப்பவர்களும் எமதூதர்களாற் கொண்டுபோகப்பட்டார்கள். விடாத யோகப் பயிற்சியிலிருப்பவர்களும் அந்தமரணத்தைத் தப்புவித்துக் கொள்ளமாட்டாதவர்களானார்கள். தேவேந்திரன் வச்சிரப்படையால் பலகாலும் அடித்தபோதும் சம்பராசுரன் சாகவேயில்லை, அந்த வச்சிராயுதத்தினைக் கொண்டு காலம்வந்தபோது அவ்விந்திரனால் அனேகம் தைத்தியரும் தானவர்களும் அடிபட்டு உடனேயிறந்தார்கள். இவைகளை ஆராய்ந்தறிந்து, பயத்தினையொழித்து, பின் திரும்புவீர்களாக என்று கூறினார்.

அதுகேட்டு, அந்தத் திதிபுத்திரர்களாகிய அசுரர்கள் மரணபயத்தைவிட்டு, முதுகிட்டோடாமல் திரும்பினார்கள். ஆதலால் மானுடர் ஆற்றலுக்கு முடியாத இந்தப் பெரியசமரிலும் இங்கிருந்தே சாகாது பிழைத்திருந்த இந்தச் சிறந்த பக்ஷிகளால், அந்தச்சக்கிரன் சொன்னசொல் உண்மையாயிற்று.

“வகுத்தான் வகுத்தவகையல்லாற் கோடி, தொகுத்தார்க்குந் துய்த்தலரிது, என்பது மதம். ஓ, அந்தணர்மக்களே! முட்டைகளை விழுவதெங்கே, அவற்றிற்குச் சரியாக மணி விழுவதெங்கே, அவற்றிற்கு ஒத்தபடி நிலத்தின்மேல், மாமிசமும் புண்ணீரும இரத்தமுமாகிய இவற்றினால் மெழுகிப் பரப்பியவாறுபோலக் கிடத்தல் எங்கே, எல்லாவகையாலும் விசாரிக்குமிடத்து, இந்தப்பிராணிகள் யாரோ, மகானீமாக்களாக விருக்கலாமன்றிச் சாதாரணப்பறவைகளல்ல இவ்வரலாறு, உலகத்துள் தெய்வானுகூலத்தையும், பெரும்

பேற்றினையும் தெரிவிக்கின்றன என்றுகூறி, அந்தச் சமீகமுனிவர், மாணாக்கர்களை நோக்கி மறுபடியும் கூறுவார்! நீவிர்கள் அனைவரும் இப்படியே திரும்பவும்போய் இப்பறவைக் குஞ்சுகளாயிருப்பவைகளை நமது ஆச்சிரமத்திற் சேர்ப்பித்துப் பூனை, எலி, வல்லூறு, கீரி முதலியவற்றின் உபாதியில்லாத விடத்தில் வைக்கவேண்டுவது. ஓ! வேதியமைந்தர்களே! அவ்வளவு பெருமுயற்சிதான் செய்யவேண்டுவதென்னை, பல்லாவுயிர்களும் அவற்றவற்றின் கருமபாகப்படியே காக்கப்படுவனபோல இப்பறவைகளும் காக்கப்படும். ஆயினும், மாந்தர்கள் எல்லாத்தொழிலிலும் முயற்சி செய்தலேவேண்டும். அவ்வாறுசெய்தவன், கொடியவர்வாய்க்கு இலக்கு ஆகமாட்டான். "முயற்சி திருவினையாக்கு முயற்றின்மை, யின்மை புகுத்திவிடும்." என்னும் விதிவிளங்கக்கட்டளையிட்டனர். உடனே இருடிபாலர்கள், அந்தப்பறவைகளை யெடுத்துக்கொண்டுபோய், முனிவர்களால் விரும்பத்தக்க தாகவும் வண்டு மொய்த்திரையும் கிளைமலர் முதலிய உடையமாங்களை யுடையவாயுமுள்ள ஆச்சிரமத்தையடைந்தனர். உடனே அந்தச்சமீக முனிவரும தமக்கு வேண்டும் காடுபடுபொருளாகிய, கனி, கிழங்கு, மலர், தருப்பை, முதலி யவற்றைத்தேடிச்சேகரித்துக் கொண்டுவநது, விஷ்ணு, உருத்திரன், பிரமன், இந்திரன், இயமன் அக்கினி, வருணன், பிரகற்பதி, குபேரன், வாயு, தாதா, விதாதா, முதலிய தேவர்க்கு வேதவிதிப்படி செய்யும் வைசுவதேவமென்னும் நற் கருமங்களைச் செய்திருந்தனர்.

இதனல், "அந்தண ரென்போரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ், செந்தண்மை பூண்டொழுகலான்." என்பது விளங்கிற்று.

இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

மூன்றாவது தருமபக்ஷி கதையுரைத்த அத்தியாயம்.

கேட்டீரோ, ஜைமினி முனிவரே! பின்பு முனிவர் திலகராகிய அந்தச்சமீகர் நாடோறும் அப்பறவைக் குஞ்சுகளைப் பால்வார்த்தும் தக்ககாப்பில் வைத்தும வளர்த்து வந்தார். அவ்வாறு, ஒருதிங்களாகவே அவைகள், சூரியன்தேர் வழியால் உலாவிவரத்தொடங்கிக் களிப்போடும் சுழலும் விழியோடு முனிமக்களாற் பார்க்கப்பட்டு,

சமுத்திரங்களாலும், வைப்பினுலும் பெருத்த நதிகளாலும், பட்டணங்களாலும் கூடியுள்ள நில உலகமெல்லாம் தேர்வண்டியைப் போலும் வட்டமாக விருப்பதைப்பார்த்து, மீட்டும் ஆச்சிரமம் வந்து சேர்ந்தன. இங்ஙனம் பறவையோனியிற் பிறந்த அப்பெரியோர்கள் உழைப்பினுல் இளைப்படைந்து தெளிவார்கள். இவ்வாருக, அவ்விடத்து அம்முனிவர் மகிமையால் அந்தப் பறவைகளானவர்களுக்கு நல்லஞானமும் விளங்கியது. ஆதலால், அந்தமுனிவர், தமது மாணுக்கர்கட்குக் கருணையால் தருமமுடிபுகளைச் சொல்லிக் கொண்டிருக்குகையில் இப்பறவைக ளானவர்களும் அவ்வரை வலம் வந்து பணிந்து விண்ணப்பிக்கத் தொடங்கினர்.

இதனுல், பெரியோ ரருளால் எப்படிப்பட்டவர்க்கும் நல்லறிவுண்டாகும் என்ற கருத்தினுல் "மனத்துளது போலக்காட்டியொருவர்க், கினத்துள தாகு மறிவு" என்பது விளங்கிற்று.

பறவைகள் முனிவர்க்குக் கூறல்.

தவத்திற் சிறந்த எம்மையரே! கொடியமரணத்தி னின்றும் தேவரீரால் நாங்கள் காக்கப்பட்டோம். இடமும், உணவும், பாலும் கொடுத்துக்காத்த தேவரீரே எமக்கும் பிதாவும் குரவனுமாக விருக்கின்றீர். நாங்கள் கருவிலிருக்கும் போதே தாயிறந்தாள். தந்தையாலும் வளர்க்கப்பட்டோமில்லை. குழவிகளாகிய நாங்கள் தேவரீராற் பிழைத்தோம். நிலத்தின் மேல் விழுந்து புழுக்களைப்போல உலர்ந்துபோகக் கிடந்த எம்மைப் பேராற்றலுடைய தேவரீர் யானைக்கண்டையுணின்று மெடுத்துத்துன்ப மொழிவித்தீர் ஐயா! வலுவற்ற விக்குஞ்சுகள் எவ்வாறு வளருமா. இவைகள் சுகமாக விருக்க எப்போது பார்ப்பேன். எப்போது இந்தநிலத்தைவிட்டு மாத்திற்று வித்திரியப் பார்ப்பேன். இவைகள், என்னிடத்து விளையாடிக் கொண்டிருந்து சிறகுகளை அசைப்பதனுல் உண்டாகும். காற்றினுற்றுகளெழும்பி எப்போது, என்னுடம்பு, அழுக்கடையும் என்று சிந்தித்த தேவரீரால நாங்கள் முழுவதும் வளர்க்கப்பட்டோம். அப்படிப்பட்ட நாங்கள் இப்போது அறிவினை யடைந்துள்ளோ மாதலால், தேவரீர்க்கு என்னை கைம்மாறு செய்யப்போகின்றேம் என்றுர்கள்.

இது, "உதவி வரைத் தன் றுதவி யுதவிசெயப்பட்டார் சால்பின் வரைத்து" என்பதனை விளக்கிற்று எனவறிக.

இவ்வாறு, நன்குகற்றவர்கள் திருத்தமுறத் தெளியக் கூறுமாறு கூறும் அப்பறவைகளின் மொழிகேட்டு, தமது குமாரனை சிருங்கி யென்பவனோடுமே மாணாக்கரோடும் மிகவும் அன்பும் ஆச்சரியமு முடையவராய் மயிர்க்குச்செறிதலால் போர்க்கப்பட்டவராய், அப் புள்வடிவமுடையாரை நோக்கி வினவத்தொடங்கினர். ஓ!! பறவைகளே! உங்களுக்குத் திருத்தமான சொல்லுண்டாவதன் காரணம்யாது? அதனை யுண்மையாகச் சொல்லவேண்டும். யார்சாபத்தால் உங்கள்வாக்கும், உருவமும் பெருவிகாரத்தினை யடைந்தன, அவற்றை நீக்கவெனக்குச் சொல்லத்தக்கவர்களா யிருக்கின்றீர்கள் என்றார். அப்போது அத்தருமப்புட்களும் கூறத்தொடங்கின.

தருமப்பறவைகளுக்குச் சாபம் வந்த வரலாறு.

முன் விபுலர் என்னும் முனிவரொருவரிருந்தார். அவருக்குச் சுகுருசர், தும்புருவர் என மைந்தரிருவர் பிறந்தார்கள். நல்ல பெரியராகிய அந்தச் சுகுருசர்க்கு நாங்கள் நால்வர் மக்கள்பிறந்தோம். அந்தமுனிவர் தவம்புரிவதில் ஆற்றலுடையராய் பொறிகளை யடக்கிக்கொண்டிருக்கையில், எப்பொழுதும் அடக்கம், ஒழுக்கம், பத்தி வணக்கத்தினையு முடையவர்களாய் அவர்க்குச் சமித்து, தருப்பை, உணவுக்குரியன முதலியன அவர்க்கு எது எது எப்படி யெப்படி விருப்பமோ, அவைகளை யெல்லாம் அவ்வாறே சேகரித்து, உதவிப் பணிவிடை செய்துகொண்டு நாங்கள் காட்டிலிருக்கும்போது, இந்திரன், வாய்மை, சுத்தம் ஒழுக்கம் பொறுமை ஈகையையும் உடைய அந்தப்பெருமுனிவரைச் சோதிக்கும் பொருட்டும், எங்களுக்கு இக்கொடிய சாபபயத்தை யுண்டுபண்ணும் பொருட்டும், பெருத்த தேகமுடையவனும் இறகு முன் முறிந்த, சிவந்தகண்ணினையுடைய ஓர் கிழப்பறவையாய்ப் பயந்துகொண்டேவந்து, ஓய்! வேதியர் தலைவரே பசியையுடைய என்னைக்காக்கவல்லீரே, ஆற்றலுடையவரே! நான் உணவினை விரும்பிவந்தேன். எனக்கிப்போது நீர் நிலைமையைத் தருபவராக வேண்டும். நான் விந்தமலை யுச்சியிலிருந்து, ஒருவன் எய்த அம்பினால் கீழ்விழுகையில் பெருங்காற்றொன்றினால் நிலத்திலறைபட்டு ஏழுநாள்வரையும் உணர்வற்றுக்கிடந்து எட்டாநாளுணர்ச்சி பெற்றேன். உடனே பசி என்னுட் புகுந்ததனால், ஆகாரங்கிடையாமல் களிப்பற்றுத் துன்பமுறும் மனத்தோடு உணவின் பொருட்டு உம்மைச் சரணமடைந்தேன். ஆதலால், நின்மலசித்தரே

என்னைக்காப்பதற்கு மனத்தைத் திடஞ்செய்துகொள்ளும். உயிரைப் பாதுகாத்துக் கொள்ளும் வல்லமையில்லாத எனக்கு, ஓய்! அந்தணர் தலைவரே! சிறிதுணவுப் பொருளைத்தாரும் என்றான்.

அப்போது, எங்கள்பிதாவானவர் பறவைவடிவமாக விருக்கும் அந்த விந்திரனைப்பார்த்து, உன்னுயிரைக்காப்பதற்கு வேண்டும் பொருளைத் தருகின்றேன் என்று வாக்குத்தானஞ்செய்து, மறுபடியும், அப்பறவையைநோக்கி. ஓய்! அதிதி! உமக்கு என்னையாகாரம் வேண்டுமென்றார். அதுகேட்ட அப்பறவை, நராமாமிசத்தால் எனக்குத் திருத்தியுண்டாமென்றது. அதற்கு அம்முனிவர், இளமைப் பருவங் கடந்தது, யௌவனமும் ஒழிந்தது, உனக்கு வயதடங்குகின்ற காலமாயிற்று. உண்மையாகவே, ஓ! பறவையே! உயிர்களுக்கு எல்லா ஆசையும் ஒழியத்தக்க இந்தக்காலத்திலும் நீ யேன்? இவ்வளவு கொடியகொலை நெஞ்சுடையையா யிருக்கின்றனை! நராமாமிசம் எங்கே? இக்கிழத்தனமெங்கே? எவ்வகையாலும் கொடிய எண்ணமுடையவர்களுக்குத் திருத்தியுண்டாக மாட்டாது. ஆயினும் இவ்வுரையால் எனக்கு வரும்பயன் யாதுள்ளது. கொடுக்கின்றேன் என்று உடன்பட்டபின், எப்போதாவது கொடுக்கவே வேண்டும் என்பது, என்னெஞ்சுடன் படுகின்றது என்றுகூறி, அந்தமுனிவர் அவ்வாறே செய்யத்துணிவுகொண்டு, உடனே எங்களை யழைத்து, எங்கள் குணங்களைப்பற்றிப் புகழ்ந்து, தாம் மனவருத்தத்தோடு, பயபத்தியோடும் வணங்கி நிற்கின்ற எங்களைப்பார்த்து, நல்லதோர் கிட்டுரமொழிகூறினார். சிறந்த அந்தணமரபினரே! நீவிர்கள் அழுக்கமற்ற நெஞ்சினையுடையவர்களே யாதலின் என்னோடு கடன்கழிக்கத் தக்கவராகின்றீர்கள். பிறந்தமக்கள் தக்கோராகில், தந்தையின் கடனையொழிக்கின்றார்கள். நீங்கள் அப்படிப்பட்டவராகவே எனக்குப்பிறந்ததாக நினைக்கின்றேன். குருபூசைசெய்வது உடன்பாடாயிருந்தாலும், தந்தையினும் சிறந்தகுருவில்லை என்பதும், நீங்களறிந்திருந்தபக்ஷத்திலும், உடனே என்வார்த்தையால் வஞ்சகமற்றுப பணிசெய்யக்கடவீர்கள். என்று, எங்கள் தந்தை சொல்லிக்கொண்டிருக்கும் காலத்திற்றானே, நாங்களும், ஐயா! தேவரீர் எதனைக்கட்டளையிடுவீரோ? அது செய்யப்பட்டதாகவே திருவுளஞ் செய்ய வேண்டும் என்று அன்போடுஞ் சொல்லிவிட்டனம்.

அப்போது, அம்முனிவர் ஓ, மக்களே! இந்தப்பறவை பசிதாகங்களால் வருந்தி என்னை அடைக்கலம்புக்கது, எதனால் அது திருத்தியடையுமோ? அது உங்கள் தசைகளாக விருக்கின்றன. அதன் தாகமும் உங்களிரத்தத்தாற் றணியவேண்டுவதாக விருக்கின்றது. ஆதலால் அதனைவிரைவிற் செய்யக்கடவீர்கள் என்றமாத்திரத்தில், நாங்கள், மிகவும் உளைப்புற்றவர்களாய் நடுநடுங்கி அச்சம்வெளிப்பட இதுமிக அரியது அரியது என்றுசொல்லி, இதனைச் செய்யமாட்டோம்! செய்யமாட்டோம்! அறிந்தவன், பிறனொருவன் தேகத்தின்பொருட்டுத் தன்னுடம்பினை எவ்வாறு அழிப்பன், அல்லது கொலைசெய்வன், தான் எவ்வாறோ, அவ்வாறன்றோ மக்களும், மக்களாகப்பிறந்ததற்குத் தேவர்கடன், பிதிரர்கடன், விருந்தினர் கடன், தீர்ப்பதன்றி தேகத்தைக் கொடுப்பவர் அல்லர். ஆதலின் இதனைநாங்கள் செய்யமாட்டோம். முன்னே பெரியோர்களுள் ஒருவரும் செய்ததுமில்லை. பிழைத்திருப்பவன் க்ஷேமத்தையே அடைகின்றான்; புண்ணியத்தையும் செய்கின்றான். சாகின்றவனுக்குத் தேகநாசமும், தருமக்கேடும் உண்டாகின்றன. தருமமுணர்ந்த பெரியோர்கள் எல்லாவகையாலும் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டுமென்று கூறுகின்றனர் என்று மறுத்தோம்.

அதனை அப்பெரியவர்கேட்டு, கண்சிவந்து சுழலமிட வெகுண்டு சீ! சீ! என்ற கொடுமொழியோடு, நீங்கள் புதல்வராகப் பிறந்தும், நான் சபதஞ்செய்து சொன்னசொல்லை என்பொருட்டு நடந்தாமற் போனதால், என்சாபத்தால் சுடப்பட்டவர்களாய்ப் பறவைவடிவத்தை யடைவீர்கள் என்று எங்களைச் சபித்தனர்.

இது, "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" என்றவிதியைக்கொள்ளாதார்க்குறும் துன்பத்தினை விளக்கியது.

அந்தப்பெரியவர் உடனே தன்னுடைய வேள்வித்தீயில் ஈறுதிக்கருமவேள்வியை முடித்து நூல்விதிப்படி மேலானதேகம் வருவதற்கு ஏதுவானகிரியைகளைச் செய்துகொண்டு, அந்தப்பறவையை நோக்கி, ஓய்! புள்ளரசே! அச்சமின்றி இப்போது என்னையுண்டுவிடு என்னுடைய உடம்பு என்னாலே உனக்கு ஆகாரமாகக் கொடுக்கப்பட்டது. ஓ! பறவையே! எதுவரையில் தன் சத்தியத்தைத்தான் தவறாது காத்துக்கொள்வதோ, அதுவரையுமே, அந்தணனுக்கு

அந்தணத் தன்மையுண்டு, எனவே சத்தியத்தைக் காத்துக்கொள்ளுமளவே அந்தணத்தன்மையாம். வேதியர்கள் சத்தியத்தைக் காத்துக்கொள்வதினால் எவ்வளவு புண்ணியத்தினைப் பெறவல்லவரோ, அப்புண்ணியத்தினைப் பெரிய கொடையினையுடைய சிறந்த வேள்வியாலும் மற்றெந்தக்கருமத்தாலும் அடையமாட்டார்கள். "மனத்தொடுவாய்மை மொழியிற்றவத்தொடு, தானஞ்செய்வாரிற்றலை" என்றபெருமொழியும் அது.

என்றுசொன்ன முனிவர் வார்த்தையைக்கேட்டுப் பறவைவடிவமாக விருக்கும் அவ்விந்திரன் தன்னுள்ளத்தில் அடங்காத வியப்பினை யடைந்து, அம்முனிவரைநோக்கி, அந்தணர்பிரானே! நீர் யோகசமாதியிலிருந்து தேகத்தினை விட்டுவிடும். ஏனெனில், பிழைத்திருப்பவர் தசையை நான் எப்பொழுதும் தின்பதில்லை என்றான். அதுகேட்டு, அம்முனிவர் யோகப்பயிற்சியில் வீற்றிருந்தார். அத்துணிவைக்கண்டு இந்திரனும் தன் உண்மைவடிவோடு எதிர் நின்று ஓய்! முனிவரேறே என்னைத் தேவேந்திரன் என்று தேறியக்கடவீர் உம்முடைய உள்ளத்தினிலைமை யறியவேண்டி இப்பெருங்காரியஞ் செய்தேன். பிழையற்றவரே! பிணக்கற்ற பேருள்ளத்தினரே! நான்செய்த துன்பத்தினைக் கருத்திற்கொள்ளாது பொறுக்கவேண்டும். நீர்வேண்டுவன என்னை, நீர் உமதுவாய்மையைக் காத்துக்கொண்டமையால் உம்மிடத்து எனக்கு மிகவிருப்பமாயிற்று. இதுமுதல் உமக்கு * ஐந்திர ஞானம்பிறக்கும். இனி, உமதுதவத்திலும் தருமத்திலும் இடையூறு ஒன்றும் உண்டாகமாட்டாது. என்று சொல்லி இந்திரன் தன்னிடம் சேர்ந்தான்.

பின்பு, வெகுளியோடுங் கூடியிருந்த எங்கள் தந்தையை நாங்கள் மறுபடியும் வணங்கி, எம்பெருமானே! சிறியோங்களாகிய எங்களுக்குச் சீவன் தித்திப்பாயிருந்ததாற் சாக அஞ்சினேம், தேவரீர் எல்லா முணர்ந்தனீர் ஆதலின், எம்பிழைபொறுத்தல் கடனாகவிருக்கின்றது. தோல், எலும்பு, தசைகூட்டமாகக்கூடி, உதிரமும் மலமும் நிரம்பி யிருப்பதாயும், அநுவருக்கத்தக்க பண்டங்களில் முத

* இது மேலான ஐசுவரியம். இந்திரன் எனவே, ஈச்சுரன். ஆதலால், ஐந்திரஞானம்-சிவஞானம். அதனைப்பெறுதல் சத்தியத்தால் என்பது. ஈண்டு இந்திரன், குருவாயினன் எனக்கொள்க.

ளவதாய் மிகவிழிந்ததுமாயும் இருப்பது உடம்பென்று தெரிந்திருந்தும் அதனிச்சை எங்களைவிட்டொழியவில்லை. யாவரும் துதிக்கும் பெரியோய்! இவ்வுலகமே பெருத்த இச்சை வெகுளிப்பகையால் மெய்ஞ்ஞானத் தழுந்திப்போகும் நிலைமையைத் திருவுளஞ் செய்ய வேண்டும். இவ்வுடம்பென்பதே ஒருபெரிய பட்டணமாம். அதனுள் அறிவென்பதே அரணமாக எலும்பென்னும் கழியால் அரண்மனையொன்று கட்டப்பட்டுத் தோற்சுவர்வைத்து, இறைச்சியுதிரச் சேறுபூசி, ஒன்பதுவாயில்விட்டு, புண்ணீரகழியால் சூழப்பட்டு உட்புகுவதரியதாய், புருடன் என்னும் சீவனே அங்கு அரசனாய் உணர்ச்சி அரசாட்சியை செய்துகொண்டு வருகின்றான். அவனுக்கு புத்தி, மனம், என்னும் மந்திரிகள் இருவரும் ஒருவருக்கொருவர் பகைத்தே முரண்கிச்செய்து வருகின்றனர். காமம், வெகுளி, மயக்கம், இவறல்-உலோபம் என்னும் பகைவர் நால்வர் அவ்வரசனுக்குள்ளனர். அவர்கள் படைகளோ தீக்குணங்களாம். அரசன் எல்லாவாயில்களையும் மூடிக்கொண்டு தன்படைசிதறாமல் வைத்திருக்கில் அச்சமின்றியிருக்கின்றான், வாயில் திறந்திருந்தால் சத்துருக்கள் உள்ளே புகுகின்றார்கள். அவருள் இச்சையென்னும் பெரும்பகைவன் கண்முதலிய ஐந்துவாயில்களிலும் சென்றுலாவி மற்றையமாற்றார் மூவரையும் பட்டணத்துள் வரவழைத்துக்கொண்டு பொறியுணர்ச்சியாகிய நகரவாசிகளோடும் மனமென்னும் மந்திரியோடும் மற்றவர்களோடுஞ் சம்பந்தஞ்செய்துகொண்டு தான்விருத்தியாய் வலுவுற்று நகரக் கோட்டைவாயிலைத் தன்வசமாக்கிக்கொண்டு அறிவென்னும் அரணத்தை நாசஞ்செய்கின்றான் "அறிவற்றங் காக்குங் கருவிசெறுவார்க்குஞ், முள்ளழிக்கலாகாவரண்" என்பது முதுமொழி இங்ஙனம் மனமென்னும் மந்திரி பகைவர்பக்கலாக விருப்பதையுணர்ந்து புத்தியாகிய மந்திரி உடனே தன்னுரிமை விட்டுவிடுகின்றான். அமைச்சர்களுதவியுமில்லாமல் நகரவாசிகளும் கைவிட, பகைவர்கையில் அகப்பட்டு அரசன் நாசத்தை அடைகின்றான். இவ்வாறு, காமம், வெகுளி, இவறல், மயக்கம், என்னும் நான்கு துட்டர்களும் ஒருமனிதனுடைய நல்லுணர்ச்சியை யழித்து விடுகின்றார்கள். காமத்திலிருந்தும வெகுளிபிறக்கின்றது. வெகுளியால் இவறலுண்டாகின்றது. அதில் மயக்கமுண்டாகின்றது. அதனால் அறிவழிந்துபோகின்றது ஆகவே புத்திகெட்டு விடுகின்றது. புத்திகெடவே புருடனுங் கெடுகின்றான். சாதாரணமாகவுலகமுற்று மிவ்வாறிருக்க அவருள், ஏழை

யோங்கள் எவ்வளவு தரமுடையோம். ஆசைக்கும் உலோபத்திற்கும் அகப்பட்டு விவேகமற்றவர்கள் கெடுவது இயற்கையே. பெரியோர்சினம் கெடுதிசெய்வதில் எவ்வளவு பெரியதோ, அவர்கள் தயவு நன்மைசெய்வதில் அதனிலும் பெரியதாக விருக்கின்றது. ஆதலால்! குணக்குன்றாகிய எம்மையரே! உயிர்பிழைக்க வேண்டுமென்று கருதியதொழிய வேறொரு குற்றமும் நாங்கள்செய்ததின்று, தேவரீர் வெகுளியால் பேரிருளாகிய கீழ்நிலையிற் றள்ளுண்டு போகின்றோம். எம்பெருமானே! தேவரீர் நல்லோர் என்னுமொழிப் பொருளாதலால், அவ்வளவு துன்பத்தைப் பொறுக்கமாட்டாத எங்களிடத்தில் கருணைசெய்யவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொண்டோம்.

அப்போது, அம்முனிவர்கோமான் கருணைவைத்து, என்னாற் சொல்லப்பட்டது பொய்த்துப்போகாது. ஆ! மைந்தர்களே! என் சொல்லிதுகாறும் ஒன்றும் தவறிற்றில்லை. இவ்விடயத்தில் தெய்வமே பெரிதென்று நினைக்கின்றேன். இப்படியாமென்று நினையாததொன்று வலுவில் செய்விக்கப்பட்டவாறாயிற்று. சீசீ!! மானுடமுயற்சியால் ஆவதொன்றில்லை. ஆயினும், நீங்கள் வேண்டிக்கொள்வதால் திரியக்குகளாகப் பிறந்தாலும் மேலான ஞானத்தை யடைவீர்கள். எப்பொழுது, ஜைமினிமுனிவர் உங்களைவினவும் சந்தேகவினாக்களுக்கு விடைசொல்லுவீர்களோ, அப்போது என்சாபம் உங்களைவிட்டொழியும் என்று அனுக்கிரகித்து, இவ்வாறு, ஞானத்தால் (பிழைக்கும்) வழிகாட்டப்பட்டவர்களாய்த் துக்கத்தினையும் கவலையையும் உதறிவிட்டு, என்னுடைய அனுக்கிரகத்தால், நீங்கள் ஐயமின்றி மேலானகதியை யடைவீர்கள் என்றருளிச் செய்தார்.

ஐயா! சமீகமுனிவரே! இவ்வாறு தெய்வகதியால் நாங்கள் தந்தை சாபத்தையடைந்து, நெடுங்காலங்கழிந்து வேறுயோனியில் வந்து பிறந்துபோர்க்களநடுவே கிடந்து தேவரீரால் காக்கப்பட்டோம். அந்தணரரசே! எங்களுக்குப் பறவைவடிவம் இவ்வாறு கிடைத்தது. பயனற்ற குடும்பவிகாரத்தாலும், கருமத்தாலும், துன்பமடையாதவர்களில்லை என்றார்கள். கேட்டீரோ, ஜைமினிமுனிவரே! பின்பு அச்சமீகமுனிவர் அப்பறவைச்சிசுக்களின் வார்த்தையைக்கேட்டு, அருகிருக்கும் மாணார்களை நோக்கி, கேட்டீர்களோ, இவை சாதாரணப்பறவைகளல்ல யாரோ, நல்லபெரியோர்களாக

விருப்பார்கள், இல்லையெனில் மானுடமுயற்சிக்குத் தப்பமுடியாத பெரும்போரில் தப்பிப்பிழையாது, என்றுநான் உங்களுக்குமுதலி லேதானே சொல்லவில்லையா, என்றுகூறிப்பின்பு மிகுந்த அன்புடையவராய் அனுக்கிரகிக்க அப்பறவைமுனிவர்கள் அவ்வருளைப்பெற்று காடுசெடிகளால், அலங்காரஞ்செய்தாற்போலுமுள்ள விந்தமலையை அடைந்தார்கள். இவ்வாறு, சுகுருசமாமுனிவர் புதல்வர்களாகிய நான்குமுனிவரும் பிதாசாபத்தால் பறவைவடிவ மடைந்திருந்தாலும், தங்கையநாளாலேதானே ஞானம்பெற்றவர்களாய்ச் சமீகமுனிவர் கருணையால் வளர்க்கப்பட்டவராய் விந்தமலைச் சிகரத்தில், புண்ணிய தீர்த்தங்களோடுங்கூடிய ஆரணியத்தில், தவம், வேதமோதல், யோகசமாதி, இவைகளில் சித்தமுடையவர்களாய் இன்று மிருக்கின்றார்கள்.

மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

நான்காவது

ஜைமினிமுனிவர் பறவைமுனிவரிடஞ்சென்ற அத்தியாயம்.

கேளும், ஜைமினிமுனிவரே! துரோணர்மக்களாகிய அந்தச் சேனமுனிவர்கள் ஞானிகளாய் விந்தகிரியில் இருக்கின்றார்கள் ஆகையால், அவர்களையடுத்து வினவுமென்று மார்க்கண்டேய முனிவர் கூறினாரென்று சூதர் சௌனகாதியர்க்கு அப்பால் சொல்லத்தொடங்கினார்.

கேளும் முனிவர்களே! ஜைமினிமுனிவர் அதைக்கேட்டு அத்தருமப்பறவைகளாகிய முனிவர்களிருக்கும் விந்த பருவதத்தை யடைந்து, வேத மோதிக்கொண்டிருக்குஞ் சத்தத்தினைக்கேட்டு ஆச்சரியத்தால் விழுங்கப்பட்டவராய் தம்முள்ளே யோசிக்கலாயினார். ஆ!! வேதமொழியிலக்கணங்கூறும் நூலுட்கூறியபடி எழுந்தோசைப்பிறப்பு மாறுபட்டதில்லை. சுவாசசுரத்தை விதிப்படி திருத்தி, வழுவோசையில்லாமலும் வழுச்சொன்முதலிய குற்றங்களுமின்றிப் பாராயணஞ்செய்யப்படுகின்றது. பறவையோனியிற்பிறந்திருந்தாலும் இந்தமுனிமக்களைக் கலைமகளவிடாமலிருப்பது பெருவியப்பாகவே எண்ணவேண்டும். "ஒருமைக்கட்டான் கற்றகல்வியொருவற்கு, கெழு

ண்மையுமே மாப்புடைத்து'' என்பதுமது. சுற்றத்தினரும் நண்பினரும் பிறவும் விட்டொழிவதன்றிக் கல்வி நீங்குவதல்ல. (எனவே, எச்செல்வங்குறையினும் தான்கற்ற கல்விச்செல்வம் என்றும் விட்டொழியா தென்பது கருத்து. இதனாலன்றோ நன்பொருள், விழுப்பொருள், "கேடில் விழுச்செல்வங் கல்வி'' எனச் சான்றோர் சிறப்படை கொடுத்துக் கூறியவாறு.) என்று தம்முள் எண்ணிக்கொண்டே அந்த ஜைமினிமுனிவர் அம்மலைக்கணுள்ள குகையிற்புகுந்து, அவ்விடத்து கற்பாறையின்மீதுட்கார்ந்திருக்கும் அந்தஞானப்பறவைகளைநோக்கிச் சொற்குற்றமின்றி ஓதிக்கொண்டிருக்கு மதனைக்கேட்டு உலகத்துன்பங்களை மறந்து பெரியகளிப்பினால், அப்பறவை முனிவர்களோடு வார்த்தை சொல்லத் தொடங்கினார்.

தருமப்பறவைகளுக்கும் ஜைமினிக்கும் வார்த்தைப்பாடு.

இருபிறப்பாளர் தலைவர்களே! நுங்களுக்கு நன்னிலைமையுண்டாவதாக. வியாசர் மாணுக்கனாகிய ஜைமினி எனபேர். நான் உங்களைத் தரிசிக்கும் பொருட்டு வந்தேன். பெருஞ்சினங்கொண்ட உங்கள் தந்தையால் சபிக்கப்பட்டவர்களாய்ப் பறவைப் பிறப்பையடைந்த நீங்களும் வெகுளி கொள்ளலாகாதன்றோ, "சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லியினமென்னும், ஏமப்புணையைச்சுடும்'' என்பது மது. ஆகவே உங்களுக்கும் நேர்ந்தது, எல்லாவகையாலும் தெய்வவசமாகவே யிருக்கின்றது. முன்னாளில் சிலதவசிகள், செல்வமிகுதியுடைய மரபிற்பிறந்து, பொருளெல்லா மழிந்தபின்பு, அவ்வந்தணரிற் றலைபெற்றவர்கள் ஓர்வேடனால் தேற்றப்பட்டார்களன்றோ, கொடுத்துக் கொண்டேயிருப்பவர் வாங்குகின்றவர்களு மாகின்றார்கள். கொல்வோர்கள் கொல்லப்படுவோரு மாகின்றதுண்டு. ஒருவரை வெற்றிகொண்டவர்கள், அவ்வல்லமைக்குக் காரணமாகிய வூழ்கெடுதலினாலே தோல்வியடைவதுமுண்டு. இவ்விபரீதம் அனேகமாயிரம் நானேபார்த்துள்ளேன் உள்ளது கெடுவதும் இல்லாதது உண்டாவதுமாகிய அதிசயங்களாற்றானே யிவ்வுலகம் கவலைப்பட்டுள்ளது. என்பதை நீங்கள்சிந்தித்து உங்கள துன்பத்தினை யொழித்துவிடுங்கள். துக்கத்தாலாலும் சந்தோஷத்தாலாலும் சலியாமலிருப்பதுவே ஞானத்தின்பயனாக விருக்கின்றது. என்றுகூறினார்.

அப்போது, அப்பறவையான முனிவர்கள் அருக்கியமுதலியவற்றால் ஜைமினி முனிவரைப்பூசித்து, வணங்கி, க்ஷேமலாபங்களை வினவி வீற்றிருந்த அந்தணியாச மாணாக்கராகிய அம்முனிவர்க்குத் தமது இறகுகளால் மெல்லெனவீசி யிளைப்பாற்றினர்.

தருமபக்ஷிகள் வினாவல்.

இப்போது, எங்கள்பிறப்புப் பயன்பெற்றது. தேவரும் வணங்கத்தக்க தேவரீர் திருவடிகளைத் தரிசிக்கநேரிட்டால் எங்கள்பிழைப்பும் நல்லபிழைப்பே எங்களுடைமைபப்பற்றிச் சுட்டுக்கொண்டிருந்த. எங்கள் பிதாவின் கோபத்தீயானது, தேவரீர் தரிசனமென்னும் நீரால் குளிர்விக்கப்பட்டது. அந்தணர்பிரானே! உமக்கும் உமது ஆச்சிரமத்துள்ள பசு, பக்ஷிமுதலிய இயங்குதிணையும், மரம், கொடி, புல்முதலிய நிலைத்திணையுமாகிய வுயிர்களும் பிறவும் நன்றாகவுள்ளனவோ, அங்ஙனம், நாங்கள் வினவியது முறையல்லாமையிற் சரியல்ல. என்னை, தம்மையொத்த பெரியோர் சம்பந்தமுடையவற்றிற்குச் சுகம் ஏன் இல்லாமற்போம், தேவர்கள் சம்பந்தம்போலத் தேவரீர் சம்பந்தம் எங்களுக்கு உள்ளது மிகச்சிறந்ததாகவே யிருக்கின்றது. எங்கள் யாதோர் பெரும்பாக்கியத்தால் தேவரீர் எங்களுக்குமுன் அழைத்துவரப்பட்டருளினீர், ஐயரே! தேவரீர் எங்களிடத்துத் தயவுசெய்து எழுந்தருளும்படி நேர்ந்தகாரணத்தைச் சொல்லவேண்டும் என்று வினவினார்கள்.

ஜைமினி விடைகூறல்.

அப்போது, ஜைமினிமுனிவர் அப்பறவைகளைநோக்கி, ஐயர்களே! நருமதை நீரால்நிறைக்கப்பட்ட இனிய இந்த விந்தகிரிக்குகைக்கு வந்தகாரணம் சொல்லுகின்றேன் கேளும். பாரதநூலின்கண் உண்டாகிய ஐயத்தைக் கேட்டு ஒழித்துக்கொள்ள வந்தேன். என் எனில், பிருகுவம்சத்திற் பிறந்த மகான்மாவாகிய மார்க்கண்டேயரை அப்பாரத சந்தேகங்களை வினவினேன். அவர் விந்தகிரியிலே துரோணருடைய மக்களாயமகான்மாக்கள் உமக்கு விரித்துச் சொல்வார்கள் என்று கட்டளை யிட்டனர். அவர் கட்டளைப்படி இப்பெருமலைக்கு வந்தேன். ஆதலால் என்வினாக்களை முழுவதுங் கேட்டுப் பின்பு நீங்களவற்றினை விளங்கக்கூறவேண்டுமென்று கூறினார்.

தருமபக்ஷி கூறல்.

அதுகேட்டுத் தருமபக்ஷிகளாய பெரியோர்கள் நீர்தெரிந்து கொள்ளத்தக்க விடயமிருந்தாற் சொல்லுகின்றோம். நீர் கவலையின் றிக்கேளும் எங்களறிவினுக்குத் தோற்றியதை யெவ்வாறு சொல்லா மற்போவோம். நான்குவேதத்துள்ளும் தருமநூல்களினுள்ளும் அங்கநூல்க ளெல்லாவற்றிலும் இன்னும் வேதசம்பந்தமுடைய எல் லாநூல்களிலும் எங்களுக்கு ஐயந்திரிபற்ற உணர்ச்சியுண்டு. அங்ஙன மிருந்தாலும், வினவியவைகளுக் கெல்லாம் விடைகொடுப்போம் என்னும் சபதம் சொல்லுவதற்கு எங்களுக்குச் சத்திபோதாது. ஆத லால் பாரதத்தின் உமக்கு என்னசந்தேக முள்ளதோ, அவற்றினை ஐயப்படாமல்வினவும்தருமமுணர்ந்தவரே அவற்றினைக்கூறுவோம். இல்லையேல் அறியாமைகெடாது இருந்தபடியே யிருக்கும் என்று சொன்னார்கள். அதுகேட்டு சைமினியானவர் அவர்களைநோக்கி, ஐயரே! என்சந்தேகத்தைக் கேளும் என்று சொல்லத் தொடங்கி னார்.

சைமினிமுனிவர்வினா.

ஐயரே! முதலாவது, எல்லாவற்றினையுந் தாங்குமிடமாயும், காரணங்களுக்கெல்லாம் காரணமாயும், எல்லாவுயிர்களையும் தண்டி க்குமவனும், எல்லாப்பூதங்களிலு மிருப்பவனுமானவன், குணமற்ற வனும் மானுடத்தன்மை எவ்வாறு அடைந்தான்.

2-வது, துருபதன்மகளாகிய கண்ணையென்னும் துரோபதை யொருத்தியே பாண்டுமக்களைவர்க்கும் என்மனைவியாயினள், இவ்வி டத்தில் எனக்கு ஐயமிகவுள்ளது.

3-வது, கலப்பையைப் படையாகக்கொண்ட அதிபலவானாகிய பலராமன் தீர்த்தயாத்திரையாற் பிரமகத்திக்கு மருந்துசெய்வா னேன்.

4-வது, துரோபதை மக்களும் பெருந்தரும மகான்மாக்களு மான இளம்பாண்டவரைவரும் மணமில்லாதவர்களாய்ப் பாண்டவர் கள் ஆதரிப்பவர்களா யிருக்கையிலும் திக்கற்றவர்களைப்போல என் கொல்லப்பட்டார்கள்.

பாரதத்திலுண்டாகிய இந்தச்சந்தேசமெல்லாவற்றினையும் எனக்குச் சொல்லவேண்டும். இதனால் நான் திருந்திய அறிவுப்பொருளுடையவனாயென்னாச்சிரமஞ் செல்வேனென்று கூறிய சைமினிக்கு அந்தத் தருமப்பறவை முனிவர்கள் கூறத்தொடங்கினர்.

தெய்வவாழ்த்து.

விஷ்ணுதுதி.

தேவனுபகனும் எங்குமுள்ளவனும் வெற்றியாளனும் பழயதலைவனும் அழிவற்றவனும் பிரிக்கப்படாதவனும் நால்வகைத்தாகிய அறிவினையுடையவனும், அதா என்னு மொழிப்பொருளாய், முக்குணமுடையவனும், குணமற்றவனும், சிறந்தவனும், பெருமையையுடையவனும், மேலானவனும், முக்திவடிவனுபுள்ளவனும் யாரினும் சிறிய பொருளும், யாரினும் பெரிய பொருளுமில்லையோ, யாரால் இவ்வுலகு தன்னுள்ளாக்கப்பட்டதோ, யார்பிறப்பற்றவனோ, யார் இவ்வுலகிற்கு முதலானவனோ, தோற்றம், ஒடுக்கம், காணப்படுதல், மறைதல், இப்படிப்பட்டதென்னும் சுட்டறிவுக் கிலக்கியமாகாமை முதலிய வியல்பினையுடைய இந்தப்பிரபஞ்சம் யாரால் தோற்றுவிக்கப்பட்டதெனவும் அவ்வாறே முடிவில் ஒடுக்கப்பட்டதெனவும் கூறுவரோ, அப்படிப்பட்ட தலைவனுக்கு வந்தனம்.

பிரமதுதி.

யார் தனது முகங்களால் இருக்கு, சர்மம் முதலியவற்றினைக் கூறி மூவுலகத்தினையும் புனிதமாக்கின்றனனோ, அந்தமுதற் றெய்வமாகிய பிரமாவினை யொத்தமனதிலேயோடு வணங்குதும்.

உருத்திர துதி.

யாருடைய அர்சநத்தினால் அசுரர்கள் வேள்விசெய்பவருடைய வேள்விகட்குக் கேடுசெய்வதில்லையோ, யாருடைய அழல்விழியால் மீனக் கொடியினையுடைய மன்மதன் எரிக்கப்பட்டானோ, யார் பார்வதிதேவியாரைத் தன்னொருபங்கில் வைத்திருப்பவனோ, குணங்களையெல்லாங் கடந்துநின்ற உமாபதியான அந்த ஈசானமூர்த்திக்கு நமஸ்காரம். என்றுமூவரையும், வாழ்த்தி யாரால் பாரதத்தைக்குறித்துத்தருமம் வெளிப்பட்டனவோ, அப்படிப்பட்டவியாசர்கருத்தினை யெல்லாம் சொல்லுகின்றோம்.

நாராயணனென்பதன் பொருள்.

நீரைநாரமென்று உண்மையுணர்ந்த முனிவராற் கூறப்பட்டது. அந்தநாரம் அவனுக்குமுதலில், அயனம் எனவேயிடமாக விருக்கின்றது. அதனால் நாராயணன் என்றுகூறப்பட்டான். அறுகுணனாயும் பெரியவனாயும், உள்ள அந்தநாராயணன் எல்லாவற்றையுந் தன்னுளடக்கி நான்குவகையாக விருக்கின்றான்.

விஷ்ணுவடிவம் நான்கு.

ஓ அந்தணரே! கேளும், அவன்குணத்தோடு கூடினவனாயும் கூடாதவனாயும் உளன். அவன் வடிவால் இப்படிப்பட்டவனென்று குறிக்கக்கூடாததாக விருக்கின்றனன். சத்தியையுடையஞானியர் அதனைக்காண்கின்றார்கள். எரிதழற் பிழம்பால் சூழப்பட்ட அவன் வடிவு யோகிகட்குச் சிறந்த நிட்டையாக விருக்கின்றது. தூரமாயும் சமீபமாயுமுள்ளது. குணங்களைக்கடந்துநிற்பதாக அறியத்தக்கது. குறியற்ற வெறுவெளியிலுள்ளது. இலக்கியமென்பது காணத்தக்கதென்றியாவராலும் கூறப்பட்டது. அதுதேவர்கட்கும் அடையக்கூடாதது. ஒளியுருவானது. அழிவற்றது. வாசுதேவன் என்னும் பெயருடையது. எனது என்னும் பற்றறுதியால் நோக்கத்தக்கது. அதற்குவடிவு, வண்ணம், முதலிய குறியெல்லாம் கற்பனையாகவுள்ளவாறன்றி யுண்மையாகவில்லை. சுத்தமானது, என்றுமுள்ளது. சத்து மெய்யொன்றுமே வடிவாகவுடையது. இதுவே மூலவடிவமாம். இரண்டாம்வடிவு தாமதகுணத்தினால் தாமசி என்று கூறப்பட்டதாய்த்திரியக்கு வடிவினையடைந்து (சருப்பவடிவாய்) சேடன் என்னும் பெயரையடைந்து இப்பூமியின் கீழிருந்து அதனைத் தலையாற்சுமந்து நிற்கின்றது. மூன்றாவதுவடிவம், உயிர்களைக்காப்பதே கருத்தாய்த் தொழில்களை நடத்துகின்றது. சத்துவகுணம், அதிகரித்துடையது தருமத்தை நிலைநிறுத்துவது என்று உணரத்தக்கது. நான்காவது வடிவம், நீர்நடுவே பாம்பின் படுக்கைமேற் படுத்துள்ளது. வைகுந்தன், நரசிங்கன், வராகன், கபிலன் என்னும்பெயர்களை யுடையது. இங்ஙனம் அவ்வறுகுணச்செல்வன் நான்குவடிவ முடையவனாயும் நான்கு, அணிவகுப்பினை யுடையவனாயும், எடுத்துக்கூறப்பட்டுள்ளான். அந்தநான்காவது வடிவத்தின்குணம் இராசதம். அந்தமூர்த்தம் என்றும் படைப்புத்தொழிலுடையது *

---

* சதுர்வியூஹ:—நான்கு அணிவகுப்பினையுடையவன் வாசுதேவன், பிரத்தியும்நன், அநிருத்தன், சங்கர்ஷணன். இவற்றுள் வாசுதேவன், குணங்கடந்தவடிவன். அதுவேயெல்லாப் பூதங்களிலும் கலந்த பிரமவுண்மை. ஏனைய மூன்றும் குணவடிவு. அவற்றுள், சத்துவகுணத்தோடு பிரத்தியும்ந வியூகம் விஷ்ணுவடிவால் உலகத்தைக் காக்கின்றது.

விஷ்ணு அவதாரங்கள்.

அந்த அரியின் மூன்றாவது மூர்த்தி உலகத்தினைக்காக்கும் கருத்தால் பூமியிற்றவறாதபடி தருமத்தை நிலைநிறுத்துகின்றது. தருமத்தைக்கெடுத்து அகங்கரித்த அரக்கர்களை யழிக்கின்றது. தேவர்களையும், அவ்வாறே தருமத்தை வளர்க்கும் வழியில் செல்லுகின்ற ஏனையர்களையும் காக்கின்றது. ஜைமினிமுனிவரே! எப்போதெப்போது தருமஞ்சுருங்கி அதருமம் செழிக்குமோ! அப்போதப்போ தெல்

இராஜசகுணத்தால் அநிருத்தவியூகம் பிரமரூபத்தால் உலகத்தைத்தோற்றுவிக்கின்றது. தமோகுணத்தினோடு சங்கரிஷண வியூகம் உருத்திரரூபத்தால் உலகத்தை யழிக்கின்றது. அந்தச்சத்துவ மூர்த்தி உலகக்காப்பின் பொருட்டு தருமத்தை நிலைநிறுத்தவேண்டி அவதாரங்களைச் செய்தது. என்பதீண்டு குறிக்கப்பட்ட தன்கருத்து. இதனைநோக்குமிடத்து பாஞ்சராத்திராகமமென்னும் வைணவ சங்கிதையைப்பற்றி வைஷ்ணவமதத்தின் அனுகூலப்படி சிறிதுதோன்றுவது ஆயினும் அவ்வாறன்று. அதற்கு மிதற்கும் வேறுபாடுள்ளது. என்னை, அந்தவைஷ்ணவாகமத்துள் வாசுதேவ வியூகத்தினூற் சங்கரிஷண வியூகமும் அதினின்றும் பிரத்தியும்ந வியூகமும் அதனால் அநிருத்தவியூகமும் பிறந்ததெனவியூகங்களினுக்குத் தோற்றம் கூறப்பட்டுள்ளது. அது சுருதிமிருதிகட்கு முரண் என்று பிரமசூத்திரம் இரண்டாமத்தியாயம் இரண்டாம் பாதம் "உத்பத்தியசம்பவாத" என்றசூத்திரத்தில் மறுக்கப்பட்டுள்ளது. அவ்வாகமப்படி ஆன்மாவால் சீவன்பிறக்கின்றான். சீவனால் மனம்பிறக்கின்றது. மனதினால் அகங்காரம் பிறக்கின்றது. எனவும் உருவற்ற பிரமத்தினின்றும் முதலில் தாமதகுணமுடைய தத்துவப்பொருள் ஒன்று. அதனாற் சத்துவமுடையது ஒன்று. அதனால் இராஜசகுணமுடையதொன்று எனவும் கூறப்பட்டது. அங்ஙனமாயின் தமோகுணமுடைய உருத்திரனால் சத்துவகுணமுடைய விஷ்ணு பிறந்ததாகக் கூறியவாறாயிற்று. அது சைவத்துடன்பாடாவதன்றி வைஷ்ணவத்திற்கு முரணாம். அந்தவைஷ்ண வாகமத்தாலும் சைவசித்தாந்த வுடன்பாடேயாம்.

எனவும், அங்கு கூறப்பட்டுள்ள சீவோற்பத்திகருமமுறை வேதவிருத்தமெனவும் பிரமசூத்திரத்தின் பாஷியங்கள் மறுக்கின்றன. அவற்றினையெல்லாம் வைஷ்ணவ பாஷியக்காரரும் பூர்வபக்ககருத்து என்று அனுவதித்துடன்பட்டனர். இப்புராணத்துள்ளோ எனின், அவ்விசேடம் கூறப்பட்டதில்லையாதலின்வைணவர்க்கே அனுகூலமென்று எனையர் ஐயப்படலாகாது. சுருதிமிருதிகளைபோலப் புராணமும் பார்க்கும்போது யார்க்கு முடன்பாடென்பது கருத்து.

லாம் அந்தமூர்த்தி அவதாரஞ் செய்யும். முன்னாளில், சங்கன் என்னும் அசுரனால் நான்கு வேதங்களுங் கொள்ளையிடப்பட்டன. அவ்வசுரன் கடனீரில் ஒளிந்துக்கிடந்தான் அப்போது மச்ச அவதாரங் கொண்டு மிகவலியனாகிய அச்சங்காசுரனைக்கொன்று மூவுலகத்திற்கு மின்பமுண்டாகும்படி அவ்வேதங்களை மீட்டுவந்தார். ஆதிகூர்மமாக அவதரித்து பெருத்தபாரத்தினால் வருந்திக் கொண்டிருக்கப்பட்ட பூமி, ஏழாவதாகிய பாதலத்தினின்றும், எள்ளைப்போல மேலெடுக்கப்பட்டது. மற்றொருகாலத்தில் வராகவடிவமாய்க் கோரைப்பற்களால் நீரைப்பிளந்துகொண்டு தாமரை நாளத்தைப்போல இந்நிலவுலகம் ஒற்றைக்கோரையால் மேற்பறித்து வரப்பட்டது. பெருத்த கண்களும், கோரைப்பற்களும், சடைகளும், பேழ்வாயுமாக அலங்கரித்தாற் போலும் நரசிங்கவடிவங் கொண்டன்றோ, இரணியகசிபன் கொல்லப்பட்டான். விப்பிரசித்தி என்பவன் முதலிய மற்றையசுரர்களும் நாசஞ்செய்யப்பட்டனர். பிறப்பற்றவனுடைய வாமனமுதலியமற்றை யவதாரங்களைக் கணக்கிடுவதற்கு நாம் ஊக்கம் கொள்வதில்லை. இப்போது இவ்வவதாரமோ, மிக இனிமையுள்ளது. இவ்வாறாக அந்தச் சத்துவமூர்த்திப் பிரத்தியும்ந னென்னப்பட்டு உலகோமயலில் தலைப்பட்டு அவதாரம் செய்கின்றது. தெய்வத்தன்மையிலாவது, மானுடத்தன்மையிலாவது, அஃறிணையாகிய திரியக்கு யோனியிலாவது இருந்துகொண்டு அவ்வாசுதேவன் இச்சையால் எப்போதைக்கும் அந்தவியற்கையையே கொள்ளும். இது உமக்காகச் சொல்லப்பட்டது. அந்தப்பிரபுவாகிய நாராயணன் செய்யத்தக்கதொன்றுமில்லாதவனேயாயினும் மானுடத்தன்மையை யடைந்தார். இனி அப்புறத்து வினவுக்கு விடைகூறுதும் கேட்பீராகவென்று தருமப்பறவை முனிவர்கள் கூறத்தொடங்கினர்.

நான்காவது அத்தியாயம்

முற்றிற்று.

ஐந்தாவது.

இந்திரன் பாண்டவராகப் பிறந்தமை யுரைத்த அத்தியாயம்.

இரண்டாவது வினாவிற்கு விடை.

தருமப்பறவைப் பெரியர் ஜைமினி முனிவரைப் பார்த்துக் கேளும், முனிவரே! முன்னாளில் துவட்டா என்னும் வேதியன் படைப்பவனாகி யிருந்தான். அவனுக்கு மூன்றுதலையுடைய மகனொருவன் பிறந்தான். அவன் தலைகீழாகத் தவஞ்செய்துகொண்டிருக்கையால், ஐயத்தினால் இந்திரன் அவனைக்கொன்றான். ஓ அந்தணா! இங்ஙனம் பிரமகத்தியாவிழிவுபட்ட இந்திரனுக்குப் பெருங்கெடுதி யுண்டாயிற்று. அந்தணனொளி கெடச்செய்த கொடுமையால் இந்திரனிடத்திருந்த அந்தப்பிரமவொளி தருமதேவதையை யடைந்தது. இந்திரன் ஒளி யிழந்தவனானான்.

விருத்திராசுரனை அழித்தது.

பின்பு துவட்டா, தன்மகன் இந்திரனாற் கொல்லப்பட்டமை யறிந்து கோபமுடையவனாய்த் தன்சடையு ளொன்றைப்பறித்துக் கூறுவான். என்னுடைய ஆற்றலை இம்மூவுலகும் எல்லாத்தேவரும் பார்க்கக்கடவர். கொடுஞ்செய்கையாலென்மகனைக்கொன்ற அவ்விந்திரனும் பார்க்கக்கடவன் என்றுகூறிச் சினத்தால் சிவந்தகண்ணோடு அந்தச்சடையைத் தீயில் ஓமஞ்செய்தான். பின்னர் அத்தீயில் அழல்வட்டத்தாற்சூழப்பட்டவோரசுரன்தோன்றியெழுந்தான். அவன்பெருத்தயாக்கையையும், கோரைப்பற்களையுமுடையவனாய்ப் பிளந்த அஞ்சனமலைபோன்று, இந்திரனைப்பகைத்தவனாய், இயற்கையாலும் ஊக்கத்தாலும் அளக்கலாகாதவனாய் அந்த அசுரன்துவட்டப் பிரஜாபதியின் ஆற்றலால் உபகரிக்கப்பட்ட வல்லமையுடையவனாய் நாடோறும் எறிந்தபாணம் விழுந்தூரம் உடம்புவளர மிகுந்த வலிமையுடையவனாயினான். நித்தநித்தம் வளரும ஆற்றலுடைய தேகத்தோடுங் கூடிய அவ்வசுரனைநோக்கியிந்திரன் பயத்தோடும் தீவரப்பட்டவனாய்ச் சந்தி-சமாதானஞ்செய்து கொள்ளும்பொருட்டுச் சத்தவிருடிகளை யனுப்பினான். எவ்வுயிர்களிடத்தும் இன்பம் புணர்

த்தும் தயவே விரும்பும் தவமாகவுடைய அம்முனிவர்கள் அவ்விருத்திராசுரனுடன் இந்திரனுக்கு நட்புண்டாக்கி ஒருவருக்கொருவர் கெடுதிசெய்யாதபடிச் சபதஞ்செய்வித்தனர். அங்ஙனமிருக்க காலம் பார்த்திருந்து, அச்சத்தியத்தினைக் கடந்து, இந்திரன் அவ்வசுரனைக் கொன்முன். அப்போது, முதனிற்றனே பிரமகத்தியா லொளியிழந்த இந்திரன் ஆற்றலானது, சத்தியத்தினைக்கடந்தகுற்றத்தினால் மீட்டும் உடைபட்டு இந்திரன் யாக்கையைவிட்டு வெளிவந்து எங்குங்கலந்தவனும், கட்புலனாகாதவனும், ஆற்றலுக்கே அதிதெய்வமாகியும் உள்ளவாயுவிற் கலந்தது.

இந்திரன் விசாரித்தல்.

அப்பால், முன்கௌதமர் மனைவியாகிய அகலிகையை அவமானஞ்செய்தபோதே இந்திரன் வடிவங்கெட்டது. கௌதம முனிவர் சாபத்தால் அவன் தேகமுழுவதும் ஆயிரம்யோனியும் உண்டாயின. அதனால அவ்விந்திரனுடைய அங்கங்களினும பிரதியங்கங்களினும் உள்ளமனத்துக்கினிய பேரழகு குற்-முடைய அவ்விந்திரனுடம்பினைவிட்டு, அசுவனிதேவ ரிருவரையும் அடைந்தன. தருமம் ஒளி, ஆற்றல், வடிவு இல்லாதவனுயினு னென்றறிந்தபின் அவ்விந்திரனை வெல்லுவதற்கு அசுரர்கள் முயனமூர்கள். முனிவரே! கேளும் பின் அந்த அசுரர்கள் பூவுலகத்தில் நல்ல ஊக்கமும வலிமையுமுள்ள அரசர்கள் மரபில் பிறந்தார்கள்.

தேவாசுரர் அமிசங்களின் அவதரிப்பு.

சிலகாலமானபின்னர், அரசர்களாகப்பிறந்த அசுரர்களின் பாரத்தால் வருத்தப்பட்ட பூமிதேவி மேருமலையுச்சிக் கண்ணதாகிய தெய்வசபையை யடைந்து, அசுரர் அரக்கராற் றனக்குண்டாகிய பளுவின் வருத்தத்தினைக்கூறி ஓ! தேவர்களே! மிகுந்த வல்லமையுடையராயிருந்து மும்களாற் கொல்லப்பட்ட அசுரர் அனைவரும் நிலவுலகத்தி லரசர்களாகப் பிறந்தனர். விரிந்த அக்ஷௌஹிணி சேனைகளோடு அதருமங்களைச் செய்கின்றனர் ஆதலின் அப்பாவிகள் பாரத்தினால் நான் கீழ்க்குப்போகின்றேன். தேவர்களே, இனி அவர்கள் ஒழிந்துபோகும் மார்க்கமொன்றை நீங்கள்தேடவேண்டும் என்ருள்.

இந்திரனொருவனே பாண்டவரானது.

அப்போது, தேவர்களிசைந்து தங்கள் தங்கள் அம்சங்களோடு நிலவுலகத்திற் பிறந்தார்கள். உயிர்களுக்கு இன்பமுண்டாம் பொருட்டும் பூபாரம் ஒழியும்பொருட்டும் தருமதேவதை தன்னிடத்திருந்த இந்திரன் ஒளியைக் குந்தியிடத்து விட்டது. அதனால் மிகுமொளியினை யுடைய யுதிட்டிரனாகிய தருமராஜன் பிறந்தார். வாயு தன்னிடத்திருந்த இந்திரன் ஆற்றலை விட்டதனால் வீமன்பிறந்தான். இந்திரன் வீரியத்தாலே அருச்சுனன் பிறந்தான். அசுவனிதேவர்கள் தம்மிடத்திருந்த இந்திரன் வடிவத்தினை மாத்திரி தேவியினிடத்தில் விட்டதனால் மிகுந்த ஒளியையுடைய நகுலசகாதேவர் என்னும் இரட்டைப் பிள்ளைகள் பிறந்தார்கள். இவர்களுள், தருமராஜனே நிலத்தின் தத்துவக்கூறு. வீமன் வாயுதத்துவக்கூறு. அருச்சுனன் சலத்தின்கூறு. அக்கினியின் வடிவமுடைய நகுலனே தீயின்கூறு. சகதேவனே ஆகாயத்தின்கூறு. இங்ஙனம் இந்திரன் பஞ்சபூதக்கூறும் பஞ்சபாண்டவராகப் பிறந்தன.

துரோபதை இந்திராணியின் அவதரிப்பு.

பின் இந்திரனுடைய தருமபத்தினியாகிய சசியானவள், வேள்வித்தீக் குழியினின்றும் தோன்றித் துருபதராஜன் மகளென்று கூறப்பட்டு அப்பாண்டவர்களின் பட்டத்தரசியாயினாள். தன் கணவனாகிய இந்திரன் ஐந்துவடிவாகப்பிறந்தமையால் அவனைக்களிப்பிக்க வேண்டிப் பெருமை பொருந்திய அக்கற்பரசிதான் இந்திரனொருவனுக்கே மனைவியாதலையுடையளாதலின் கன்னியாய்ப் பிறந்து தன் பதியொருவனையே அடைந்தாள். யோகிகளானவர்கள் ஒருகாலத்திற்றானே பலதேகங்களைக் கொள்கின்றனர். ஆகலால் இங்ஙனம் ஐவருக்கும் ஒருத்தியே மனையாளான வரலாற்றினுண்மை உமக்குச் சொல்லப்பட்டது. இனிபலராமன் சரச்சுவதி நதிக்குச் சென்றவாறு கேளும் என்று சொல்லத் தொடங்கினர்.

ஐந்தாவது

அத்தியாயம் முற்றிற்று.

ஆறாவது
பலராமன் தீர்த்த யாத்திரை யுரைத்த
அத்தியாயம்.

பலராமன் தீர்த்த யாத்திரை.

ஐயா! அலப்படையையே படையாக வுடைய இராமன் கண்ணனுக்கு அருச்சுனனிடத்தில் இருந்த அன்புடைமையை யறிந்து, பல்முறைத்தாலும் சிந்தித்து இனியான் என்செய்தால் நன்மையாம். கண்ணனைவிட்டுத் துரியோதனன் பக்கல் யான்போவதற்கு அமையாது. அல்லது கண்ணன்பொருட்டுப் பாண்டவரையாவது அடுத்து மருகனும் மாணாக்கனும் உள்ள அத்துரியோதனனை யெவ்வாறு கொல்வேன். ஆதலால் நான் அவ்விருவர் பக்கலும் சேர்வதில்லை. அக்கௌரவர்க்கும் பாண்டவர்க்கும் போர்முடியுமளவும் நல்லமனத்தோடு என்னுடற்பிணைத் தீர்த்தங்களாலாட்டுவிக்கின்றனன், என்றுதுணிந்து கண்ணன், அருச்சுனன், துரியோதனன் இவர்களுக்குத் தன்கருத்தினைக்கூறி அவர்களுடன்பாடுபெற்று, வசுதேவன் மகனாகிய பலராமன் தன்படையோடு களிப்பினையுடைய செல்வர்களாலிறைகொள்ளப்பட்ட துவாரகை என்னும்பட்டணத்திற்கு வந்தான். அங்ஙனமிருக்க, நாளையதினம் தீர்த்தயாத்திரைக்குப் போகவென்றிருக்கையில், அந்த அலாயுதன், போகத்தின் பொருட்டுத் திருத்தியாக மதுபானஞ்செய்து மயங்கினவனாய், அரமாதோடொத்த இரேவதியென்னும் தன்மனைவிகையைப் பிடித்துக்கொண்டு மாதர்கூட்டத்தினடுவே தளர்நடையிட்டுக்கொண்டு மிகப்பெருத்த இரைவதமலையின்கண்ணுள்ள வன விளையாட்டுச் செய்வதற்குப் புறப்பட்டான்.

இரைவதமலைச்சிறப்பு.

பின்பு, அந்த இரைவதகிரியை யடைந்து மிகச்சிறந்ததும் களிப்பைத்தருவதுமாகிய உய்யான வனத்தைப்பார்த்தான். அங்கே எல்லாப் பருவங்களினும் பழுக்கத்தக்க பழங்களாலும் பூக்களாலும் நிரம்பியவற்றால் குரங்கு முதலியவற்றிற்கு விருந்துசெய்வதாக விருந்தது. அது திருத்தமாகிய தாமரையோடை, கயம், குளம், முதலியவற்றினால் விளையாட்டுக்கு மிகத்தக்கதாகவிருந்தது. அவ்விடத்து, இளங்

துளிர்களையும், பூக்களையும், பழங்களையுமுண்டு செருக்கடைந்து, வலியவாயும், இனிமையாயும், கேட்பதற்குச் சுவையாயும், மங்கலமாயும், நல்லோசையாயும், இன்பவிளைவாயும், ஆசையையும் பற்றினையும் உண்டாக்குவதாயும், உள்ளபறவைகளின் தழனிகளைக் கேட்டுக்கொண்டு, வரிசையாயும், கூட்டங் கூட்டமாயும், அலங்காரமாயும், ஏற்பட்டு நல்ல நீழலோடும், பார்ப்பதற்கு நல்ல நிறங்களையுடைய தளிர்களோடும் பூக்களோடும், கனிக்கொத்துக்களோடும் விளங்கிக்கொண்டு கொடிகளால் சூழப்பட்டு, நல்லமணம்வீச பறவை முதலிய பல்வுயிர்களுக்கும் இளைப்பாற்றுவதாய், விரிந்துபரந்த கிளைகளை யுடையனவாய்ச் செழித்திருக்கும் மரங்களைப்பார்த்தான். அவற்றில், பலவேறு வகைப்பட்ட மா, புளி, விளா, தெங்கு, கமுகு, வில்வம், அரசு, பேரீந்து, மாதுளை, எலுமிச்சை, கிச்சிலி, கோங்கு, பலா, மகிழ், ஈந்து, வாழை, தக்கோலம், நாவல், பாதிரி, நெல்லி, அசோகு, புன்னை, சண்பகம், கோரண்டை, கடு, சண்டரம், பனை, பாரிசாதம், புன்கு, மஞ்சாடி, இலந்தை, பலாசம், சாலம், கூந்தற்பனை, ஆல், இரளி, அத்தி, மூங்கில், தேவதாரம், சந்தனம், முதலிய பல்வகைப்பட்ட மரங்களும் உண்டாயிருந்தன. சகோரம், சக்கிரவாகம், அன்னம், கொக்கு, கிளி, குரவங்கம், குயில், புறா, வல்லூறு கோட்டான், பூவை, தூக்கணாங், முதலிய வேடிக்கையான பறவைகளும், வேறு வேறு வகைப்பட வொலிசெய்யும் செந்துக்களும், மல்லிகை, குன்றிமுதலிய கொடிகளும், செந்தாமரை, வெண்டாமரை வெண்ணெய்தல், கருநெய்தல், செவ்வாம்பல், நூற்றிதழ் முதலிய நீர்ப்பூவும், நீர்க்கோழி, நீர்ப்பறவை, மீன், யாமைமுதலிய நீர்வாழ்வனவும், தேனும், வண்டும் தெளிந்தநீரும் பிறவுங்கூடி இன்பமாகவும் குளிர்ந்த இளங்காற்றினை யுடையதாகவும், காமவிளக்காயும் உள்ளன. அந்தவனத்தை மெதுவாகப் பார்த்துக்கொண்டே மாதர்புடை சூழ்ந்துவரப் பலராமன் உலாவியிருந்தான்.

முனிவர்கள் பலராமனை உபசரித்தல்.

அங்கு, பலராமன் வேதத்தினையும் அங்கங்களையும் முற்றுமுணர்ந்த, விசுவாமித்திரர், பிருகு, பரத்துவாசர், கௌதமர் முதலிய மஹா ரிஷிகளின் மரபிற்பிறந்து தங்களுக்குரிய தருமந்தவறாது அந்தணரிற்றலைமை பெற்றவர்கள் புராணங்களைக் கேட்பதற்கு மிகுந்த அன்புள்ளவர்களாய், மான்றோல், தருப்பை, தழை, பலகை முத

லிய ஆசனங்களின்மேற் சுகமாக வீற்றிருக்கும் பெரியோர்களையும் அவர்கள் நடுவே புராணவாசிரிய பீடத்தின் மேலிருந்து முற்காலத்துத் தேவர் முனிவர்களது சரிதங்களைச் சொல்லிக் கொண்டிருக்கும் சூதமுனிவரையும் கண்டான். அப்போது, அவ்வேதிய ரனைவரும் தம்மிடத்திற்கு வந்த பலராமனை நோக்கி, இவன் மதுபானத்தாற் சிவந்த கண்களை யுடையவனா யிருத்தலின் இப்போது நல்லுணர்ச்சியுள்ள சமயமாயிராது, மதமுடையவனைப் பெருமையோடும் உபாயத்தாற் றப்புவித்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்து, புராணங்கூறுஞ் சூதமுனிவரொழிய மற்றையந்தணர்க ளெல்லாரும் ஒருங்கெழுந்து அப்பலராமனை யுபசரித்தார்கள்.

பலராமன் சூதரை வதைத்தல்.

பின்பு, கலப்பையை யுடைய மிகுபலவானாகிய இராமன், அரக்க ரனைவரையும் கெடுத்தவனாதலால் மிகுந்த வெகுளியால் விழுங்கப்பட்டு விழி சுழலப்பார்த்து, அச்சூதமுனிவரைவெட்டியெறிந்து விட்டான். பிரமாசனத்தின்மீது வீற்றிருந்த அச்சூதபுராணிகர் கொல்லப்பட்டமாத்திரத்தில், * வற்கலையையும் மான்றோலையுமுடுத்த ஏனையமுனிவர்களெல்லாம் அந்தவனத்தைவிட்டு ஓடிப்போனார்கள். அப்போது, அந்த அலாயுதன் தெளிந்து, தன்னைப் பிழிக்கப் பட்டவனாக வுணர்ந்து, பெரியோனாதலின், இஃதென்னை, என்னால் மஹாபாதகஞ் செய்யப்பட்டதே! என்று சிந்தித்தான். இங்ஙனம் இறந்தவர் சூதராகப் பிறந்தவராயினும் பிரமாசனத்தின்மீது வீற்றிருக்கும்போது கொல்லப்பட்டார், அதனால் இந்த வேதியரனைவரும் என்னைநோக்கி ஓடிப்போய்விட்டார்கள். என்னுடம்பிலும், இருப்புமுதலிய உலோகங்களிலுண்டாம் தீநாற்றத்தினைப்போலும் தீயநாற்றம் உண்டாகின்றது. நான் இழிந்த பிரமகத்திசெய்த பாதகனாகவே யென்னை நினைக்கின்றேன். சீச்சீ! கோவங்கெட்டது. சீச்சீ! மதுபானமுங் கெட்டது. சீச்சீ! செருக்கடையலாகாது. சீச்சீ! அச்சமின்றி நடக்கலாகாது. இந்நான்கு குற்றமும் என்னுட் புகுந்தவதனால் இப்பெரும் பாவத்தைச் செய்தேன். வினைமுடிந்த பின்பு தெளிவும் இரக்கமும் வந்ததற்குப் பிராயச்சித்தத்தால் சுத்தஞ்செய்து செய்துகொள்வதே கடனாம். ஆதலால், இனி அப்பாவத்தை நீக்கிக்கொள்ளத்தக்கதாகப் பன்னிரண்டி யாண்டு செய்யத்தக்க பெருநோன்பு செய்யக்

* வற்கலை எ-து மரச்சீலை.

கடவேன். என்பாவத்தை யானே கூறிச்சிறந்த பிராயச்சித்தத்தைச் செய்து கொள்ளுகின்றேன். ஆனால், நான்செய்யவேண்டு மென்று துணிவு கொண்டிருந்த தீர்த்தயாத்திரைக்கே புறப்பட்டு பிரதிலோமப்பிராயச்சித்தமாகிய சரச்சுவதி நதியாட்டுக்குச்செல்லக்கடவேன். உண்மையை விசாரிக்கு மிடத்தில் இச்சிறுபாவம் என்னை வருத்த மாட்டாது. ஆயினும், நான், உலகத்தில் நல்ல ஒழுக்கத்தினை வழங்கு விக்கவேண்டுவ தாகலின் தீர்த்தயாத்திரைக்குப் போகின்றேன் என்று துணிவுற்று, அப்பலராமன் சரச்சுவதி தீர்த்த முழுக்காட்டுக்குச் சென்றான். கேட்டீரோ! ஜைமினி முனிவரே! உமது மூன்றுவது வினாவின் விடை. இனி உபபாண்டவர் சரிதையைப்பற்றிய வினாவுக்கு விடைசொல்லுகின்றோம். கேளும் என்று பறவை முனிவர் கூறத்தொடங்கினர்.

ஆறுவது,
அத்தியாயம் முற்றிற்று.

௳

ஏழாவது
விசுவதேவர் இளம்பாண்டவரான கதை யுரைத்த அத்தியாயம்.

நான்காவது வினாவுக்கு விடை.

அரிச்சந்திரன் கதை.

முனிவர் தலைவரே! திரேதாயுகத்தில் அரிச்சந்திரன் என்றொருவன் புகழ் பெற்றிருந்தான். அந்தத் தருமவடிவன் உத்தமனாய் உலகோம்பி வருநாளில், உலகத்துள் கருப்பு, நோய், அகாலச்சாவு, யாரையும் துன்பஞ்செய்ததில்லை. நகரத்தவர்கள் பாவவிருப்ப மற்றவர்களாயிருந்தனர். செல்வம், தவமிவற்றின் செருக்கால் மயங்கினவரில்லை. யௌவனபருவத்தினை யடையாதமாதர் பிறந்ததில்லை. இங்ஙன மிருக்க.

அரிச்சந்திரன் விசுவாமித்திரனிடம் வருதல்.

அவ்வரசன் ஒருநாள் வேட்டைக்குப் புறப்பட்டுப்போய் காட்டினிடத்து மிருகங்களைத் துரத்திக்கொண்டு செல்லும்போது, காத்தருள், காத்தருள் என்று அடிக்கடி சொன்னமாதர்கள் சொல்லைக் கேட்டான். உடனே அவ்வரசன் மிருகங்களைத் துரத்துத லொழித்து, நான், காப்பவனாக விருக்கையில் எந்தத் துர்ப்புத்தியுடையவன் கொடுமை செய்வான் அஞ்சற்க, அஞ்சற்க என்று கூறினன். அவ்வளவில், அந்த மாதர், அழுதுகொண்டிருக்குங் காலத்தில், உருத்திர சம்பந்தமுடையவரும் தொழிற்கெல்லாம் இடையூறு செய்யுந் தலைவராயுமுள்ள விக்கினத்தலைவர் எண்ணத் தொடங்கினர். என்னெனில், இந்த விசுவாமித்திரர் ஒப்பற்ற தவத்தைச்செய்து மிகுந்த ஆற்றலுடையவராய் முதலிற் றமக்குச் சித்தியாகாதிருந்த அபவத்துவம் (பிறவாமை) முதலிய வித்தைகளைச் சாதிப்பதற்கு விரதஞ் செய்தவனாக விருக்கின்றான். பொறுமை, மோனம், சுத்தம், மனமடக்கலும் உண்டாகிய இந்த விசுவாமித்திரனால் சாதிக்கப்படுகின்ற அந்த வித்தியாதெய்வங்கள் அச்சமுற்று முறையிடுகின்றன. சித்திக்கும் வித்தைக்கும் நாம் தலைவனாதலின் செய்யத்தக்கதென்னை? குசிகவமிசத்திற் பிறந்த தலைவனாகிய இந்த விசுவாமித்திரன் பெருந்தவத்தால் அளவற்ற வொளியினையுடையவனாய் அவ்வித்தைகளைப்பற்றி யீர்க்கின்றான். அந்தக்கல்விகள் அவன்வசமாக மாட்டாது ஓலமிடுவது. அவற்றிற்குத் தலைமை நாம் இப்போது ஒன்று செய்யலாகாதவராயுள்ளோம். இதுதுன்பம் முடிவற்றதாக விருக்கின்றது. அல்லது, இந்தவரசன் அஞ்சற்க, அஞ்சற்க என்று அடுத்தடுத்துச் சொல்லிவந்தமையால் இவனுள் நானிருந்து செய்யத்தக்கனவற்றைச் செய்து விடுவேன் என்று அவ்விக்கினத்தலைவர் அரிச்சந்திரனுள்ளத்திற் புகுந்தனர். உடனே அவ்வரசன் தன்வசந்தப்பி வெகுளியோடு வலியாலும் ஒளியாலும் விளங்கும் நான் அரசனாக விருக்க எந்தப்பாவி முன்றானையால் நெருப்பை முடியிடுவன். என் விற்லினின்றும் விடப்பட்டுத் திசைகளையெல்லாம் ஒளிரச்செய்யும் பாணங்களால் பேதிக்கப்பட்ட அவயவங்களை யுடையவனாய் யார் இப்பொழுது மீளாவுறக்கத்தை யடையப்போகின்றான், என்று தன்னுளிற் கூறினன்.

அரிச்சந்திரனுக்கும் விசுவாமித்திரனுக்கும் சம்வாதம்.

பின்பு விசுவாமித்திரன் அந்தமொழியைக் கேட்டு, பெருஞ்சினம் பூத்தனன். இங்ஙனம் அப்பெருமுனி கோவங்கொள்ளலும் ஒருகணத்தில் அவ்விந்தை யெல்லாம் நிற்கவல்லமை யில்லாததாயிற்று. அவ்வரசனும் தவநிதிபாக விருக்கும் அவரைப்பார்த்துப் பயந்து, அரசிலைபோலவிசு நடுநடுங்கினன். அப்போது, அம்முனிவன், கொடியவனே நில் என்றார். உடனே அந்த அரசன் வணக்கத்தோடும் பணிந்து எதிர் நின்று, குணக்குன்ற மாகிய எம்பெருமானே! இது என்தருமம். பிழையன்று, முனிவர! என்சருமத்தில் யான் முயன்றிருக்கையில் தேவரீர் முனிவுசெய்தல் மரபன்று. தருமத்தை யுணர்ந்த வேந்தன் தருமநூற்படி தானஞ்செய்தல் வேண்டும், உலகு காத்தல் வேண்டும், வில்லெடுத்துப் போர்செய்தல் வேண்டுமே என்றான். அதுகேட்ட விசுவாமித்திரன் யார்க்குத்தானஞ் செய்தல் வேண்டும்? யாரைக்காத்தல் வேண்டும்? யாரோடு போர் செய்யவேண்டும், ஓய் அரசனே உமக்குப் பாவபயம் உண்டாயிருந்தால் இதனை விரைவிலெனக்குக் கூறும், என்று வினவ, அரிச்சந்திரன், அவரைநோக்கி, வேதியரிற் சிறந்தவர்க்கும். பிழைக்கும் வகையற்ற ஏனையர்க்கும் கொடுத்தல் வேண்டும். எப்போதும் அஞ்சி வந்தவரைக் காத்தல் வேண்டும். தன்னை எதிர்த்த பகைவனோடு போர் செய்யு வேண்டும். என்று கூறக்கேட்டு விசுவாமித்திரர், வேந்தனை நோக்கி, நீ அரசனேயாய் அரசநீதியை நன்றாக அறிந்திருந்தால் இங்கே நான்வேதியன் வேள்விசெய்ய விரும்புகின்றேன், நான்விரும்பிய பொருளைக்கொடு என்றார். அப்போதவ்வரசன் மிகுந்த மகிழ்ச்சியடைந்த மனத்தினை யுடையவனாய்த் தான் மறுபிறப்புப் பிறந்தவனாக வெண்ணிக்கொண்டு, விசுவாமித்திரரை நோக்கிக்கூறுவான் அந்தணர் பிரானே! தேவரீர் வேண்டுவதை ஐயமின்றிக் கேட்டருளும். தாம் எதனைக்கேட்பினும் கிடைப்ப தருமையதேயாயினும், அது என்னாற் கொடுக்கப்பட்டதென்றே கொள்ளும். பொன்னாயினும், மகனாயினும், மனைவியாயினும், என்னுடம் பாயினும், உயிராயினும், அரசாட்சியாயினும், நகரமாயினும், செல்வமாயினும், ஆக தேவரீர்க்கு வேண்டுவதொன்றைக் கேட்டருளும என்று சொன்னான்.

விசுவாமித்திரர் தானம் வாங்குதல்.

அதுகேட்ட விசுவாமித்திரன், ஓ! அரசனே! உம்மாற் கொடுக்கப்பட்ட வாக்குத்தானத்தைப் பெற்றுக்கொண்டேன். ஆனால் இராஜசூய யாகத்தைச்செய்து கொடுக்கத்தக்க பொருளை முன்னே கொடுத்து விடும் என்றார். அதற்கு வேந்தன், அவ்வையரை நோக்கி ஐயரே! அந்தத் தக்ஷிணையையும் கொடுக்கின்றேன். அந்தணர் பெருமானே! இன்னும் உமக்கு வேண்டுவதைக் கேளும் என்றார். அப்போது, விசுவாமித்திரன் மீட்டும் கேட்கத்தொடங்கினார். வேந்தனே கடல், காடு, மலை, நாடு, நகரம், காற்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை, பசுநிரை, கருவூலம்-பொக்கசம், தானியசாலை பிறவுமுடைய உன்னரசு எல்லாவற்றினையும், உரிய மனைவி, மகன், உமது உடம்பு, உம்மைப் பின்தொடரும் தருமமிவை யொழியப் பிறபொருளினையும் ஒருநீர்க்கக் கொடுத்து விடும் என்று வினவினார். கேளும் சைமினி முனிவரே! அப்போ தவ்வரசன் அம்முனிவர் சொல்லைக்கேட்டு முகஞ்சிறிதுஞ் சுளுக்காமல் மிருகளிப்போடும் இருகரங்களையும் அஞ்சலியாகப் பிடித்துக்கொண்டு, அவ்வாறே யென்று சொன்னார். அங்கு அம்முனிவன், ஓய் இராஜ விருடியே! உமது அரசு, நிலம், சேனை, பொருள் பிறவுமாகிய எல்லாப் பொருளும் எனக்குக் கொடுக்கப் பட்டதேல், தவஞ்செய்யும், யான் அரசாள வேண்டும், வேண்டினால் தலைமை, யாரது? என்றார். அதற்கு அந்த இறை மகன், ஓய்! வேதியா! எந்தக் காலத்தில் எல்லா நிலத்தையும் உமக்குத்தானஞ் செய்தேனோ, அப்போதே நீர்தலைவராயினீர். இப்போது, உம்மை இறைவனென்று வேறுசொல்வானேன் என்றார். அதனைக்கேட்ட விசுவாமித்திரர், எல்லாப்பூமியையும் எனக்குத்தானஞ் செய்தீரன்றோ, உம்முடைய நாடுமுழுவதும் என் பொருளாயிருத்தலின் நீர் வெளியிற்போக வேண்டும் என்றார். இடியிடித்தார்போலுங் கூறிய அம்மொழியை அரசன் கேட்டு, முகூர்த்தகாலம் அசைவற்றிருந்து, இனி நானென்றுகேன் என்று சிந்தித்து நின்று பின்தெளிந்து, முனிசாபத்திற்குப் பயந்து விரைவுற்றுத் தமது ஆசிரியராகிய வசிட்டர் நீர்மேலிருக்கின்றார் என்று கேள்விப்பட்டு, எல்லாவற்றையும் ஒழிக்கவெண்ணி, அரைஞாண்வரையும் மேலுள்ள வெல்லாவற்றினையும் நீக்கிவிட்டு நார்ச்சீலையைத் தரித்து, சிபிவமிசத்திற் பிறந்தமனைவியோடும், இளமகவாகிய மைந்தனோடும்

புறப்பட்டு, அவ்வாறே செய்து, அவ்வாறே சொல்லி விட்டு அ. புறப்பட்டுப் போகத்துணிந்தார்.

பின்பு அம்முனிவன் வழிதுறைக்கிட்டு நின்று, இராஜசூய தக்ஷிணை கொடாமலெங்குபோகின்றாய் என்றார். அரசன், ஐயரே! முட்களையெல்லாம் முறித்து அரசையுமக்குக் கொடுத்தேன். இப்போது, இம்மூன்றுடலே யிருந்துள்ளன. என்ன விசுவாமித்திரன், அரசனே அவ்வாறாயினும், அந்த வேள்விக் கொடைப் பொருளைக் கொடுக்கத்தான் வேண்டும். பிராமணர்களுக்குக் கொடுக்கின்றேன் என்று சத்தியஞ்செய்யப்பட்டது கொடாவிட்டால் நாசஞ் செய்கின்றது. இராஜசூயயாகத்தில், பிராமணர்களுக்குத் திருத்தியுங் களிப்பும் உண்டாகும்வரையில் கொடுக்கவேண்டுமது. அதுவே இராஜசூயதக்ஷிணையாம். கொடுப்பேன் என்றதைக் கொடுத்தல் துட்டர்களோடு போர் செய்தல் அடைந்தவரைக் காத்தல் இவற்றைச் செய்யவேண்டுமென்று முன்னமே உம்மாற் கூறப்பட்டதன்றோ, என்று வினவ அவ்வரசன், பிரமமுனிவ! இப்போதென்னிடத் தொன்றுமில்லை. காலக்கிரமத்திற் கொடுக்கின்றேன். இப்போது, என்னிடத்தில்லாமையை எண்ணித் தயவுபண்ணுமென்று வேண்டிக்கொள்ள விசுவாமித்திரன் வேந்தனே எத்தனைகாலம் வரையில் நான் எதிர்பார்க்கவேண்டுவது விரைவிற் சொல்லும் இல்லையேற் சாபத்தீச் சுட்டுவிடும் என்றார். அதற்கவ்வரசன், அந்தணரே! ஒருமாசத்துள் உமக்குக் கொடுக்கத் தக்கதனைக் கொடுக்கின்றேன், எனக்கிப்போது விடைகொடுக்க வேண்டுமென்று கூற அம்முனிவன், ஓயரசர்க்கரசனே! போம்போம் உமது தருமத்தைக்காத்துக்கொள்ளும், நல்வழியுமக்கேயாக. உமக்குப் பகைவரில்லையாக என்று வாழ்த்தினர்.

கேட்டீரோ சைமினிமுனிவரே! பின்பு, அவ்வரசன் மனத்துள்ளே பெருவியப்பினை அடைந்தவராய், விசுவாமித்திரரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டார். காலால் நடந்தறியாத அவர்மனைவி கணவனைப் பின்பற்றி நடந்தார். இவ்வாறு மனைவிமகனோடும் ஊர்விட்டுப் போகும் அவ்வரசனை நோக்கி, நகரவாசிகளும் பரிவாரங்களும் அழுது துயரப்பட்டு, அந்தோ! இறைவ! ஏழைகளாகிய எம்மைக் காத்திருந்த நீர் இப்போது விட்டு விட்டு எங்குபோகின்றீர். நீர் தருமத்திலே தானே விருப்பமுடையீர். ஆ! வேந்தனே! நீர்

தருமத்தைக் கடைப்பிடித்தவரானால் எங்களையும் அழைத்துச் செல்லும். ஒரு முகூர்த்த காலமாயினும் நில்லும், உமது திருமுகத்தாமரையின் இனிமைத்தேனை யெங்கள் கண்வண்டு விருந்து கொள்ளுமாக. இனி எப்போது, திரும்பப்பார்ப்போம். அச்சோ? உலகத்தின்கணுள்ள அரசர்களெல்லாம் வணங்கி யேவல்கேட்டுப் பின்றொடரச் செல்லவும், பரிசனர்கள் முன்னிருந்து பணிவிடை செய்துவரவும் நடக்கும் இந்த அரசர் பெருமான் தனியே காலால் நடந்துசெல்லப் பின்றொடர்ந்து செல்வாரொருவருமின்றி மனைவியொருத்தியே யினியமகனை யெடுத்துக்கொண்டு செல்லப்போவதே கருமம்? ஆ!! வேந்தே! இவ்வளவு கோமளமும் அழகுமாயிருக்கும் உமது முகம் வழியிலே தூசுபடிந்தா லென்னவாமோ? குடிகளைக்காப்பதும அரசர்க்குரிய தருமமன்றோ? எங்களை நீர்காத்திடும். எவ்வகையாலும் யாம் துர்ப்பவசமாகாதபடி புரந்தவரன்றோ இப்படிப்பட்ட வும்மைப் பிரிந்திருக்க மாட்டோம். மனைவி, மக்கள், பொன், மணி, நெல், முதலிய என்னிருந்தாலென்னை! அவைகளையொழித்து உமது நிழல்போலவே யிருக்கின்றோம். இறைவனே! எம்மையேன் விடுத்துப்போகின்றீர்? நீரிருக்குமிடமே எங்களுக்கு இன்பவிடம், பட்டணம், சுவர்க்கமுமாம். என்றிவ்வாறு சொல்லிக்கொண்டு பின்பற்றி வரும் நகரவாசிகளின் சொற்களைக்கேட்டு. அந்த இறைமகன், துயரக்கடலுள் மூழ்கினவராய் அக்குடிகளிடத்துள்ள கருணையால் வழியில் சற்று நின்றார்.

உடனே விசுவாமித்திரர், அங்கு வந்து, சினத்தால் கண்சுழல, சீ! சீ! தீயசெய்கையுடையோய்! உண்மையற்றவனே! எனக்குக் கொடுத்த அரசினை மீட்டும் பறித்துக்கொள்ளவோ முயற்சிசெய்கின்றாய் என்றார். அக்கொடுமொழியைக் கேட்டு, அரசன் நடுக்கமுற்றுப் போகின்றோம் என்று சொல்லி உடனே மனைவியைப்பற்றி யீர்த்துக்கொண்டு நடந்தார். கணவனிருக்க அபலைக்கினி மெல்லியதேகமுடையவராயும் இளைப்பாற்றாதவராயுமிருக்க விசுவாமித்திரன் தமது கைத்தண்டத்தாற் புடைத்தார். இங்ஙனம் அவ்வம்மை யடிபட்டதைப் பார்த்தும் துயரத்தை உள்ளடக்கிக்கொண்டு போகின்றேன் என்று அரசன் கூறியதன்றி மற்றொன்றும் செய்தானல்லர்.

விசுவதேவரை அம்முனி சபித்தல்.

பின்னர், விசுவதேவரில் ஐவர் தயவுடையராய், ஆ!! வேள்வி செய்வாரிற்றலைமை பெற்ற இவ்வரசன் இராஜ்ஜியத்தினின்றும் வில

கச் செய்து, இக்கொடுமைசெய்யும் விசுவாமித்திரன் எந்தக்கதியடைவானோ? இனியாருடைய சிரத்தையும் பத்தியுமுடைய பெருவேள்வியில் மந்திர முன்னிலையாக யாம் சோமபானஞ்செய்து களிப்படைவோம் என்று சொன்னார்கள். அதுகேட்டு விசுவாமித்திரன், வெகுண்டு நீவிரனைவரும் மானிடரேயாக வென்று சபித்தனர். அப்போது அவர்கள் அவரைப்புகழ்ந்து வேண்டிக்கொள்ளவே, உங்களுக்கு மனிதத்தன்மை வந்தாலும், மணவினையும் சந்ததியு மில்லாதொழியும். ஆகலால் காமம், வெகுளி வன்மமில்லாதவர்களாயாய் மீட்டும் தெய்வத்தன்மையை யடைவீர்கள் என்று விசுவாமித்திரன் அனுக்கிரகித்தார். சேனும் ஜைமினிமுனிவரே! பின்னர் அந்த விசுவதேவர் தங்கள் கூற்றினால் குருவமிசத்தில் துரௌபதை கருப்பத்தில் இளம்பாண்டவரைவராகப் பிறந்தார்கள். இந்தக் காரணத்தாலே மஹாரதரான அப்பாண்டவ மக்களைவருக்கும் மணமும் சந்ததியு மில்லையாயின. இதுவே உபபாண்டவரைப் பற்றிய உமது வினாவுக்கு விடையாம். இனி நீர் வினவத்தக்கதுண்டோ? என்று பறவைமுனிவர் கூறினர்.

ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

அ

எட்டாவது அரிச்சந்திரன் கதை யுரைத்த அத்தியாயம்.

அரிச்சந்திரன் காசிபுகுதல்.

பின்பு ஜைமினிமுனிவர், அந்தச்சேன முனிவர்களை நோக்கி, தருமவடிவராகிய பெரியோர்களே! என்வினாக்களுக்கு எல்லாம் முறையே விடை கூறினீர். ஆயின், சத்தியவிரதரான அரிச்சந்திர மஹாராஜனுடைய மற்றைக்கதைகளையும் கேட்கவேண்டுமென்னும் விருப்பமிகவுள்ளது. ஆ!! ஆ!! அந்தப் பெரியோனுக்கு எவ்வளவு பெருந்துன்பம் நேர்ந்தது. முடிவிற் சுகப்பட்டாரோ; என்று வினவக்கேட்ட தருமப்பறவை முனிவர்கள் கூறலாயினர்.

கேளும் ஜைமினியாரே! அவ்வரிச்சந்திர மஹாராஜன் விசுவாமித்திரன் சொல்லைக்கேட்டு துயரத்தையுள்ளடக்கிக்கொண்டு இளைய மகனைத்தாங்கி மனைவி பின்வர எங்குபோவோமென்று சிந்தித்து, மனிதர்க்குச் சுதந்தரமின்றிச் சிவபிரானுக்குரியதாகியவாரணாசி என்னும் காசிப்பதியை நோக்கிப் பாதசாரியாய் மெல்லப்போய் அந்த நகரத்துட்புகும்போதே எதிரில் விசுவாமித்திரன்வந்து நிற்கக்கண்டு வணக்கத்தோடுமுடிசாய்த்து அஞ்சலிசெய்து நின்று, இதோ என்னுயிருள்ளது மனைவியும் மகனுமிருக்கின்றார்கள் வேண்டுவதைப் பெற்றுக்கொள்ளும், தாரைநீரைப் பெற்றுக்கொள்ளும். இனிநான் செய்யத்தக்கது எதுவோ, அதைக்கட்டளையிடும் என்றார். அதுகேட்ட முனிவேந்தன், அரசனே! நீர் சொன்ன மாசவெல்லை கடந்து விட்டது. நீரும் சுகமாக விருக்கின்றீர், சொன்னசொல்லுமக்கு ஞாபகமிருக்குமாயின் இராஜசூயக் கொடைப்பொருளைக் கொடும் என்று கூறவே, ஓய் அந்தணா! இன்று மாசவெல்லை முடிவதன்றோ, இன்று இன்னம் பாதிநாள் உள்ளது, அதுவரையில் எதிர்பாரும் என்று வேந்தன் சொல்ல அவ்வாறுமாக மீட்டும் வருகின்றேன் வேந்தனே அப்போதும் கொடாவிடிற் சபிப்பேன் என்று முனிவரன் கூறித் தம்மிடம் போனார்.

பின்பு, அவ்வேந்தர்பிரான் தம்முள்ளேதானே, இம்முனிவனுக்குத் தருவேன் என்றுசொன்ன பொருளை யெவ்வாறு செலுத்த வல்லேன். நிறைந்த பொருளினையுடைய நண்பன்யாருளன், எனக்குப் பொருளெங்குள்ளது, நான்பிறனிடஞ்சென்று இரப்பதும் பாவமன்றோ, யாரை எதனை யெவ்வாறு இரப்பேன், உயிரைவிடுவேனோ, ஏதுமற்றவனாய் எங்குசெல்வேன், வேதியனுக்குக் கூறியபடி செலுத்தாது நான் இறந்தாலும் அந்தணன் பொருளை வவ்வியகுற்றத்தால் இழிந்த புழுவாய் கடையரிற் கடையனாவேனே. இல்லை எனில், என்னையாருக்காவது விற்று அந்தப்பொருளால் வேதியன் கடனைத்தீர்த்து அடிமையாவது ஆவேன். என்று கவலைப்பட்ட எண்ணத்தோடு தலைசாய்த்து நிற்கும் இலட்படு வேந்தனை நோக்கி, அவரது கற்பின் மனைவியாகிய சைப்பியாதேவியானவர் கண்ணீருங் கம்பலையுடன் தேம்பிக் குழறுகுழுந்த குரலுமாக, அரசரேறே! இனிக்கவலையை யொழித்து விடும். உமது சத்தியத்தினைக் காத்துக்கொள்ளும். உண்மை யில்லாத மானிடன் சுடுகாடேபோலக் கைவிடத்தக்கவ

ளும். ஆண்மகனுக்கு உண்மையினும் மேலான தருமமில்லை. "யாமெய்யாகக் கண்டவற்றுளில்லையெனத் தோன்றும், வாய்மையினல்ல பிற" என வேதங்கூறும். ஆண்டலைவரே! தனதாண்மையைக் காத்துக் கொள்வதற்குச் சரியானது வேறொரு தருமமில்லை. பூசித்த யாகவேள்வி, கற்றவேதம், கொடுத்தகொடை, செய்தகிரியை, முதலிய வெல்லாம சத்தியமில்லாவிடின் வீணும். உயிர்களைப் பாவக்கடலினின்றும் கரையேற்றுவதற்குச் சத்தியமொன்றே தலையானகருவி, முழுகடித்துக் கெடுப்பதற்குப் பொய்மையே தலையானகருவி, என்பது தருமநூலுணர்ந்தவர்களின் முடிபு அன்றோ? நீர் ஏழு அசுவமேத வேள்வி புரிந்து, இராஜசூயவேள்வியும் செய்து இதுவரையில் ஒரு காலத்தும் தவறாது சத்தியத்தைக்காத்து நிலைபெற்ற சுவர்க்கப் பேறு பெறுதற்குரிய பேரரசமுனியா யிருக்கின்றீர். உமக்கு மகனும் பிறந்தனன், என்றவளாவே மகவாசையால் துக்கம் தலைக்கேறிக் கோவெனக்கதறியழுதார். உடனே வேந்தன், கண்ணீரால் நனையும் மனைவியைநோக்கி, மங்கலமுடையவளே! துயரத்தினை விடு, மகனிருக்க; நீ சொல்லவந்ததனைச்சொல் என்று வினவ; வேந்தே! எனக்கு மகனுண்டாயினன். உலகத்தில நல்லோர் புதல்வனென்னும் பயன் பொருட்டன்றே, பெண்கள் என்னும கொடியைக் காக்கின்றனர். என்னைவிற்று வந்தபொருளை வேதியர்க்குக்கொடும் என்றார். அதனைக்கேட்டவுடனே, அரசன மூர்ச்சையடைந்து தெளிந்து எழுந்து பெருந்துயரத்தினை யடக்கலாற்றாது புலம்பி, மங்கலமுடையவளே! நீ என்னோடு இவ்வாறு கூறுகின்றாய், இது மிகுந்த துக்கத்திற்கிடமானது. நீ நகைத்துக்கொண்டே சொன்ன நன்மொழிகளைப் பாவியாகிய நான் மறந்தேனே, அச்சோ!! நீ என்னுடன் இதனைக்கூறலாகாது. சொல்வதற்கே நாவெழாத இவ்வருங்கருமத்தினை நான் எவ்வாறு செய்வேன். சீச்சீ!! என்று மறுபடியும் நிலத்தின் மேல் மூர்ச்சித்து விழுந்தார். அதனைநோக்கி, அவர் கற்பின்கிழத்தி இளிவரலோடுங் கூடியதுயரால் துயரமுற்றவராய், ஆ!! ஆ!! வேந்தர் வேந்தே! யார்க்குக் கொடுமை யெண்ணாத உமக்கிந்த வருத்தம் நேரிட்டது, மேன்மாளிகையிற் சயனித்திருந்தநீர் நிலத்திற்கிடப்பதே, கோடி கோடியாகப் பொருட்குவையல்களை வேதியர்க்குக்கொடுத்த வள்ளலாகிய என்தலைவர் தரையிற் படுக்கலாமே, அக்கோ! தெய்வமே! இவ்விறைமகன், உனக்கு என்னசெய்தார், இந்திரனையும் உபேந்திரனையும் ஒத்த இவ்வேந்தன் உறங்கினரைப் போலாயினரே!

என்று சொல்லிக்கொண்டே, அவ்வழகிய பெண்ணரசியும் களைத்து விழுந்தார். இங்ஙனம் திக்கற்றவராய் நிலத்தின்மேன் மயங்கி விழுந்த இருமுதுகுரவரையு நோக்கி, பசியுறுத்தப்பட்டவனாய் அழுது கொண்டே ஐய! உண்ணத்தாரும் அம்மே! அம்மே! சோறிடு பசி மிகுந்தது, நாவுலர்ந்தது என்று அச்சிறுமகனும் சொல்லிநின்றான். அவ்வளவில், மிகுந்த தவசியாகிய விசுவாமித்திரன், காலமிருத்தியுவைப்போலத் தன்பொருளைத் தண்டுவதற்கு வந்து, நிலத்தின்மேற் களைத்து விழுந்துகிடக்கும் அரசனைநோக்கி, தனது கமண்டல நீரைத்தெளித்து தெளியச்செய்து, ஒய் அரசர்சிங்கமே! மேலெழுந்திரும் மேலெழுந்திரும், இச்சித்த பொருளைக் கொடும். கடன் சுமந்திருப்பவனுக்குத் துன்பம் நாடோறும் வளரும், என்று கூறினார்.

அப்போது, குளிர்ந்த தண்ணீரால் உபசரிக்கப்பட்ட அவ்வரசன் சிறிது உணர்ச்சிபெற்றுக் கண்திறந்து விசுவாமித்திரனை நோக்கிக் கவலை, பயம், துயரமிவற்றால் நோய்படுதலால், அறிவு சுதந்தரமின்றி மறுபடியும் அவ்வாறே களைத்து விழுந்தார். அதனை அவ்விருடி நோக்கிப் பெருஞ்சின மடைந்தும், அரசன்மிகுந்த இளைப்பினையடைந்தார் இப்போது, கோபித்தால் இறந்துவிடுவார் என்று அறிந்து, அந்தணருத்தமனாதலின் இனியமொழிகளாற்றேறுதல் சொல்லி எழுப்பத்தொடங்கினர். வேந்தனே! நீர் தருமத்தை யுணர்ந்தவராயிற்றே, என் கொடைப்பொருளினை யெனக்குக் கொடுத்துவிடும். சத்தியத்தால் சூரியனும் ஒளிசெய்கின்றான். சத்தியத்தாலே இம்மண்ணும் நிற்கின்றது. சத்தியமே மேலானதருமம் என்று வேதத்தர்களும் கூறப்பட்டது. சத்தியத்தால் சுவர்க்கப்பேறும் தவறாதுள்ளது, ஆயிரம் பரிமேதவேள்வியும் ஒரு சத்தியமும் துலையொப்ப நிறுக்கப்பட்டபோது, அந்த ஆயிர அசுவமேதத்தினும் சத்தியமொன்றுமே துலையுயர்ந்து நின்றது. என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அரசனுக்குச் சிறிது தெளிவுவந்தது. அஃதுணர்ந்த முனிவன், இவ்வளவு இன்மொழிசொல்ல எனக்கு நிமித்தமின்று. தகுதியில்லாதவனும, பாவவெண்ண முடையவனும், கொடியவனும, பொய்யனுமாகிய நீ அரசனாகப் பிழைத்திருக்கின்றாய். உள்ளசாரத்தினைக் சொல்லுகின்றேன்கேள், சூரியன் அத்தமான கிரிக்குப்போமளவும் பார்த்துப்பின் சபிக்கின்றேன், இஃதுண்மையென்று கூறிப்போனார். அப்போ தவ்வரசன் பொருளின்மையின் அச்சத்தால்

விசைவுற்று, கொடியராகிய விசுவாமித்திரர் பொருளினிமித்தம் வருத்தலினால் வருந்தியபோது அவரை நோக்கி மனைவியார் மறுபடியுஞ் சொல்லுவார், அரசே! என்சொற்படி செய்க வீணே அம்முனிவர் சாபத்தாற்றீயவேண்டாம். என்று பலகாலுஞ் சொலலக்கேட்டு, அவ்வரசன், சுபவதி! தயை அற்ற யான் உன்னைவிற்றுவிடுகின்றேன். உயிர்க்கொலைசெய்யும் கடிசுனும் செய்யலாற்றாத தொழிலினைச் செய்கின்றேன். இவ்வளவு கொடுமொழி சொல்வதற்கும் என்வாயிசைந்த தன்றோ? என்று சொல்லிக்கொண்டே போதபோகின்றான். அவனும் அச்சத்தோடு விரைந்து, மனைவிகையைப் பிடித்துக்கொண்டு காசிப்பட்டணத்தின் தெருவேசென்று அழுதசண்ணும், தேம்பியடைதத குரலுமாக, நாகரீகர்களே!! நான்காதகல் மாறுடனன்று, அரக்கனிற் கொடியோன் ஆதலின், பாவம பூண்டேன். யாரைவிட்டால் உயிர்விடத்தக்கதோ? அப்படிப்பட்ட மனைவியை விற்கவந்தேன். என் மனைவியை அடிமைத்தொழிலுக்கு ஏற்றுக்கொள்ள யாாக்கேனும் சமமதமுண்டாயின் என்னுயிரிருப்பதனுள் வந்து விலைகேட்க என்றார்.

அரசன் மனைவியை விற்றல்.

கேளும் ஜைமினிமுனிவரே, பின்பு ஒரு விருத்தவேதியன், அவ்வரசனிடம் வந்து, இந்த பெண்ணடிமையை எனக்குக் கொடும் எனக்குப் பெரும்பொருள் உளளது ஆதலின் விலைப்பொருளைத் தருகின்றேன். என இல்லாள் மெல்லிய சாயலாள் ஆதலின் மனைத்தொழில் செய்யலாற்றாளாகவே இவளைக் கொளகின்றேன். பணிசெய்தல், பருவம், வடிவம, இயற்கைமுதலிய இக்குணங்களையுடைய நின்மனைவிக்கு விலைப்பொருளிது அம்மடந்தையைக் கொடும என்றான். அப்போது, அவ்வரசன் நெஞ்சு, நீரிற்பட்ட சுண்ணக்கற்போல இற்றுக்கரைந்து துயரத்தால் மறுமொழி யொன்றுங் கூறிலர். பின் அவ்வேதியன் பொருளை அரசன் முன்றானையின முடிந்துவிட்டு, அவ்வரசபத்தினி கூந்தலைப்பற்றி அடிமையே வாவென்று, ஈர்த்தான். அப்போது, அரசன் மகனை இரோகிதாசுவன் இன்னும் பக்கச்சிகையோடுங் கூடிய சிறுவனேயா மாகலின், அந்தணனுலிழுக்கப் பட்டுள்ள தாயைநோக்கி, கையால் சீலையைப்பற்றி யீர்த்தழுதான். அங்கு அச்சிறுவனை யக்கிற்பாசி நோக்கி தீயைபை யுடையவனாய், அந்த விருத்தவேதியனோடு, சுவாமி! சிறுபோது அடியேனை விடும். குழந்

தையைப் பார்த்து வருகின்றேன். ஐய! மறுபடியும் இக்குழவியைப் பார்ப்பது எனக்கு அருமையாம் என்றுசொல்ல, ஆயிற்றா என்று அம்மறையவன் கூறினான். மைந்த, வா உன்தாய் வேறொருவனுக்கு அடிமையாயினாள். நீசிறந்த அரசிளங்குமரன், அடிமையைத் தொடலாகாது அப்பனே, என்றாள். பின் அவ்விரு பிறப்பாளன் தாயை யீர்த்துக்கொண்டுபோகையில், அச்சிறுவன் கண்ணீர்வடிய, அம்மா அம்மா என்று கதறிச் சோறிடு என்று முன்றானையைப்பற்றி யீர்த்துக்கொண்டே பின்வந்தான். அப்போது, அவ்வேதியன் மிகு கோபங்கொண்டவனைப் போவென்று காலாலுதைத்தனன். அங்ஙனமுதைபட்டும் அவ்விளம் பாலன் கதறிக்கொண்டே தாயைவிடா தொழிய அவ்வரசபன்னி, அம்முது மறையோனைநோக்கி, தலைவரே என்னிடத்திற் றயைவைத்து, இச்சிறுவனையும் விலைக்குப் பெற்றுக் கொள்ளும். நான் உம்மால் வாங்கப்பட்டவளேயாயினும், இவனில்லாவழி நான் உமது பணிக்காகேன். தீவினையேனாகிய வென்னிடத்துக் கருணைசெய்து, பாற்பசுவினிடத்துக் கன்றினை விடுத்தாற்போலுமிவனை யென்னோடு சேர்த்துவிடும், என்ன, அப்பார்ப்பான் அரசனைநோக்கி, ஐய, இப்பொருளினைப் பெற்றுக்கொண்டு, அச்சிறுவனையும் எனக்குக்கொடும். நூறு, ஆயிரம், இலக்ஷம், கோடி என்ன, ஆடவருக்கும் மகடூஉவுக்கும் விலையெனத்தருமநூலோர் விதித்தனர் அன்றோ, எனக்கூறிச் சிறிது பொருளை அவ்வரசன் முன்றானையின் முடிந்து அச்சிறுவனையும் வாங்கிக்கொண்டு தாயோடுசேர்த்து, அழைத்துக் கொண்டுபோனான். அரசன் அவ்வாறு விலைப்பட்டுச் செல்லும் மனைவியையும் மைந்தனையுநோக்கித் துன்பத்தால் நசுக்குண்டு, அடிக்கடி தழல்கொப்புளிக்கப் பெருமூச்செறிந்து அழுதார். எந்தக்கற்புடையாளை! காற்று, சூரியன், சந்திரன், துட்டர், பார்த்தறியார்களோ, அப்படிப்பட்ட இல்லறக்கிழத்தி இப்போது அடிமையேயாயினாள். சூரியவமிசத்திற் பிறந்தும், இவ்விளஞ் சிறுமைந்தன் பொருட்டு விலைப்பட்டான். சீச்சீ நான்கொடு நெஞ்சன். ஆ!! பிரியமுடையாளே, ஓ? மகனே! என்கொடுநீதியால் தெய்வாதீன தசையடைவிக்கப்பட்டீர்களே. அந்தோ! இன்னும் நான் செத்தேனில்லை. என்று அழுதுகொண்டிருக்கையிற்றானே, மனைவியும், மகனும், விலைகொண்டவேதியனும், வீடு, செடி மறைத்தலால் மறைந்து போனார்கள். அச்சமயத்தில் விசுவாமித்திரன்வந்து என்கொடைப்பொருளைத் தாவென்றார். அரசனும் மனைவிமகனை விற்றதனால் வந்தபொருளைத்

கொடுக்க, அப்பொருள் மிகச்சிறிதாகலின் இன்னும் கொடுத்தற்கில்லையென்று வருந்துகின்றார். அப்போது, விசுவாமித்திரன் முனிவு கொண்டேடா! வேந்தரிலிழிந்தோய்! எனக்குக்கொடுக்குங் கொடைப்பொருளிதுவோ, ஆயின் அதிகவிரைவில் என்சிறந்தவலிமையைப்பார் நெடுங்காலம் அரியதவத்தினைச்செய்து, குற்றமற்ற வேதியனாய், நன்றாகவேதமோதிப்பெற்ற பலமறிந்த புகழாற்றலைப் பார் என்றார். அப்போது அவ்வரசன், ஐய, இன்னும் வேறுதகூலியையும் கொடுக்கின்றேன் சிறுபோது பொறுக்கருளும். மனைவியையும் மகனையும் விற்றேன், இப்போது வேறொருபொருளொன்றுமில்லை. என்று சொல்லக்கேட்ட, அம்முனிவன், வேந்தே, இன்றைய நாள் நாலில் மூன்றுபங்காயிற்று. இன்னும் ஒருபாகமேயிருக்கின்றது. ஆகலின் அவ்வளவு காலந்தான் பார்ப்பேன். மேல் ஒன்றும் நீ கூறலாகாது. என்று சொல்லி, இரக்கமற்ற கொடிய கிட்டுரமொழிகூறி அப்பொருளினைப் பெற்றுக்கொண்டு கடுகடுப்போடும் போய்விட்டார்.

அரசன் சண்டாளனை யெதிர்தல்.

இங்ஙனம் முனிவரன்போன பின்பு அவ்வரசன் பயம், அச்சமென்னுங் கடலடுவே நின்று, எல்லாமதுவாகத் துணிந்து தலைவணக்கிக்கொண்டு, உரக்கவொரு மொழியாக, என்னை அடிமை கொள்வதற்குத்தக்க பொருளுடையவர்களாய் வேண்டினவர்களிருந்தால் இன்று சூரியன் அத்தமானமாவதற்குள் வந்து பெறுக என்று கூறினார். பின்னர் தருமதேவதை, உடனே, தீநாற்றம், அங்கப்பழுது, கொடியதன்மை, நீண்டதாடி மீசை, தயவில்லாமை, கருமைநிறம், பெருவயிறு, தடித்தவுடம்பு, அச்சந்தருமுகம், உரத்த சத்தமுமுடையதாய்க் கையிற்பறைவைகளைக் கோத்த கொத்துக்களைப்பிடித்துக் கொண்டு, பிணஞ்சூடிய மாலையைச்சூடி, தலையோட்டினைக் கையிற்றாங்கிப் பேழ்வாய்திறந்து, பார்க்கமுடியாத வடிவோடு நாய்க்கூட்டஞ் சூழ்ந்துவரத் திறந்த மெய்யினை யுடையதாய்க் கோலொன்றுபற்றி, பொருசேரிப்பறையன் வடிவாக எதிர்வந்தது.

அங்ஙனமாக வந்த சண்டாளன், உன்றற் பணிசெய்வித்துக் கொள்ளும் விருப்பமுடையன், உனக்கு விலை யென்னை, விரைவிற் சொல், சிறிதேயாயினுமாக, பெரிதேயாயினுமாக எவ்வளவு கொடுத்தால் நீ வருவாய் சொல்லுக என்றான். கேளும் ஜைமினிமுனிவரே,

இங்ஙனம் கொடும்பார்வையோடு கடுகடுப்பாகப்பேசும் அந்நீசனை நோக்கி, அரசன் நீ யாரென்று வினவ, அச்சண்டாளன், நான் இக் காசிப்பதியில் பேர்பெற்ற பிரவீரன் என்னும் பெயருடைய சண்டாளன். கொலைத்தண்டம் விதிக்கப்பெற்றவரைக் கொல்வதும, இறந்தவர் முழுத்துண்டம் முதலிய பொருளைப் பெறுவதும் என்தொழிலென்று கூற, அரசன், சீச்சீ, சண்டாளனுக் கடிமையாவது மிகக் கொடியது. அந்தணன் சாபத்தால் அழிவதேசாலும். பறையனுக்கு அடிமையாவ துடன்படத்தக்கதல்ல. எனறு சொலலிக்கொண்டிருக்கையில், அருந்தவ விசுவாமித்திரன் அங்குவந்து கண்சிவக்கக்கறுவி அரசனே, இச்சண்டாளன் உனக்குப் பெருந்தனம கொடுக்க வுடன்பட்டு வந்திருக்கின்ருன். ஆகவே, எனக்குக் கொடுக்கத்தக்க தக்ஷிணையைச் சரியாக ஏன் கொடுக்கலாகாது, என்ருர.

அதற்கு, அரசன் அவரை நோக்கி, முனிவேந்தே நான் சூரிய வமிசத்திற்பிறந்த க்ஷத்திரியன் என்பதறியீரோ, பொருள்வேண்டி நீசனுக்கு எவ்வாறு அடிமையாவேன், என்ன, முனிவன் வெகுண்டு நீ உன்னைவிற்றுச் சண்டாளன் பொருளையேனும் என் காலவெல்லைக்குள் கொடாவிட்டால் உன்னைச் சபிப்பேன் என்பதற்கைய மில்லை என்ருர். பின்னர் அமமன்னவன் சிந்தித்து நடுநடுங்கி, தயவுசெய்யுமென்று அவ்விருடி காலினைப்பற்றிப் பிரமமுனிவ மிகவருத்தப்பட்டுள்ளேன், மிகவஞ்சினேன், உமமிடத்திற் பத்தியுமிகவுடையேன். இப்போது உமக்கே அடிமையாயினேன். நான் கொடுக்கத்தக்க கொடைப்பொருள எவ்வளவானாலுமினி நீர் வினவாதபடி யென்னையுமக்கே கொடையாகக் கொடுத்துவிட்டேன. நான் சண்டாளக் கலப்பை அடையமாட்டேன். என்னிடத்துக் கருணைசெய்து வேண்டும்பணிவிடைகளைப பெற்றுக்கொள்ளும. உமது கருததேபோல உமது கட்டளையைச் செய்கின்றேன் முனிவரரசே நான் உன்னடிமையென்று சொன்னுர். அப்போது, விசுவாமித்திரன் அவரைப் பர்த்து, எட நீ என்னடிமையன்ரே? உன்னை நான் ஓரற்புதம்-ஆயிரக்கோடி பொன்னுக்காக இச்சண்டாளனுக்கே விற்று விட்டேனென்று கூற, அந்தக்கணததிற்ருனே, நாயைத்தின்பவனுகிய அச்சண்டாளன் களித்தமனத்தினனுய் முனிவனுக்கு அப்பொருளினைக் கொடுத்துவிட்டு, பெருங்கவலையோடு பொறிகலங்கச்சுற்ற நட்பினையொழித்துத் துயரப்படும் அவ்வரசனைப் பாசத்தாற் பிணித்துக்

கோலாற்புடைத்து, பறைச்சேரிக்கு அழைத்துச் சென்றான். அரசர் பெருமான் அங்கிருந்துகொண்டு முச்சந்தியிலும் இங்ஙனம் புலம்பத் தொடங்கினர்.

இளம்பருவப்பெண், வறியளாகிய இளமகவின் முகம்பார்க்குந் தோறும், அரசன்வந்து நம்மை இச்சிறை மீட்டுச்செல்வார் என்று நினைப்பளேபோலும். விசேடம் பொருளைத்தேடி தக்ஷிணைக்கடனைத் தீர்த்து எங்களையும் மீட்பிப்பரென்றும் நினைப்பார்கள். நான் தேடிக் கொண்ட ஆபத்தினை அவளறியாள், அரசாட்சிபோயிற்று. நண்பரும் போயினர். நல்லெண்ணத்தினையும் விட்டேன். மனைவிமக்களையும் விற்றேன். சண்டாளனுமாயினேன். ஆ! தன்பம் வழிவழிவிளைந்த வே "ஆபத்துள் தருமம் ஆதாரவிதி" யென்று நூலுட்கூறப்பட்ட வற்றினை நானே முடிவுகண்டவாறாயிற்றென்று எண்ணிப்புலம்பி உடம்பையும் அறியாது முற்றும் அறிவுமயங்கியவராயிருந்தார். இவ்வாறு சிலநாள் கழிந்தபின்பு, அவ்வரசன் புலையனவசப்பட்டு அவன் தொழிலிற் பயின்று, பிணத்தின் ஆடையைக் கொண்டுவரும் ஏவல னாயிருந்தார். அப்போது அச்சண்டாளன, ஏட ஏவல, நீ நாடோறு மிரவும்பகலும் பிரியாது மயானத்தே குடியாக விருந்து வரும்பிணங் களைப்பார்த்துப்பிணத்திற்கும் காசுமுதலிய கட்டணம் வாங்கி அரச னுக்குச் செலுத்தவேண்டும். ஒரு பிணத்தின் வருவாயாறுபங்காம். அவற்றுள் நான்கு கூறு என்னது. இரண்டுனக்குக்கூலி என்று விதித்தான். பின், அவ்வரிச்சந்திரன் அக்கட்டளைபெற்றுச்சென்று காசியின் தெற்குப் புறத்துள்ள ஈமப்புறங்காட்டை யடைந்தார்.

மயானச்சிறப்பு.

அந்த ஈமக்காடானது, கோரமாகிய ஓசையும் வடிவுமுடையதாக விருந்தது. அங்கு நாய்நரிகள் குரைத்தூளையிட்டுத் திரிவன. பிணத்தினைச் சூடியபண்டத்தால் குப்பை குவிக்கப்பட்டன. பேய், பூதம், காக்கை, கழுகுமுதலியன கூட்டங் கூட்டமாகத் திரிவன. எலும்பின் குவையல் விளங்குவன. தீ நாற்றமும் பிணப்புகையும் சூழ்ந்துள்ளன. பிணங்களும் அவற்றைச் சுமப்பவரும் அவற்றினைப் பற்றிப் பலவாறு அழுது புலம்புவாருமாகக் கேட்கமுடியாத அழுகுரலே எங்குமாக, ஐயோ மகனே, அந்தோ நண்ப, அச்சோ தலைவ, அந்தோ அம்மே, அந்தோ அப்ப, அன்னே, ஐயா, வென்று அழு

வார் கூக்குரல் செவிக்கு கோரமாயிருந்தது. சுடப்படும் பிணங்கள், அடுக்கிய விறகுக்குவையல்கள், பற்றியெரியும் இராசிகள், சாம்பல் மலைகள் காணப்படுவன. பிணங்களிற் சில கண்மூடியது, சமுசாரம் முன்னும் பின்னும் இருள்மூடியதாக விருக்கின்றது என்பது போலும், திறந்தது, உள்ளொளி இவ்வழியாற் போய்விட்டதெனக் குறிப்பதுபோலும், வெந்துகொண்டிருக்கும் பிணங்கள் சில வாய் திறப்பது உடம்பினது நிலைமையிதுவென நகைப்பது போலும், எரிகின்றதீயின் சடசடப்போசை யிறந்தவன் பாவத்தைப்பற்றிக் கூறுந் தண்டனை மொழிபோலும் இருந்தன. அந்தச் சுடுகாட்டில் வசிக்கும் சண்டாளர், புற்கசர், சுவபசர்கள் வருவோரழுகுரல் கேட்டு மிகவு மனங்களிப்படைவர். எரி எருவினிராசிகளே மலைமலையாகக் காணப்படும். அவற்றைச் சுட்டுச் சாம்பலாக்குவதே அவ்விடத்திய தொழில், பேய்க்கூட்டங்களே வாழும் குடிகள். இறந்தவர் ஆடை ஆபரணம், பூ, பலிச்சோறு, எங்குமிறைந்துள்ளன. எப்போதும் துயரப்படுவோர் கூட்டமே நிறைந்துள்ளது. அவ்விடுகாடு, துக்கம் வைராக்கியம், ஆச்சரியம், பயம், இரக்கம், தருமசிந்தை, மனவூக்கமுறுதல், உழைப்பினுணர்ச்சி, அகங்காரவொழிவு, முதலிய பண்டங்களை விற்கும் கடைத்தெருவாகவு மிருந்தது. அதனாலே, சிவராஜதானியாகிய ஸ்ரீ காசித்தெய்வப்பதியின் தென்பாலுக்கு ஒரு அலங்கார நகரம்போலு மிருந்தது.

மயானத்துள் அரசனிருப்பு.

பின் அந்த அரசன் மயானத்தை யடைந்து துயரத்தால் விழுங்கப்பட்டவராய் ஆ!! ஆ!! என் ஏவலரே! எங்குசென்றீர்கள், அமைச்சரே என்னை சொல்கின்றீர்கள், வேதியரே! எதனை விதிக்கின்றீர்கள், எங்கே அரசு, தெய்வமே! சுகமெவ்விடஞ் சென்றது. சிபிமரபின்மகளே! ஓ! இளங்குழந்தாய்! விசுவாமித்திரர் சற்பனையால் வறியனை என்னைவிட்டெங்கு சென்றீர்கள். என்று பலவாறு சிந்தித்துக்கொண்டு, அப்புலையன் அடிக்கடியிடும் வேலைகளைச் செய்து, அழுக்கும் புழுக்கமுமடைந்த வுடம்பினராய் மயிர்கழியாது வளர்ந்து நிற்கத் தீயநாற்றத்தோடு சுடலைகாப்போன் குறியோடு கையிற்றடிபிடித்து மிருத்யுவைப்போலும் இங்குமங்குமாக வோடிக்கொண்டு, இப்பிணத்திற்கு இவ்வளவுகொள்ளிக்காசு, இவ்வளவு வந்தது. இவ்வளவு வரத்தக்கது, இவ்வளவுவரும், இது எனக்கு, இது

அரசனுக்கு, இது வெட்டித்தலைவனுக்கு, என்றிவ்வாறு எண்ணி
எண்ணி யுழன்றுகொண்டு, அவ்வுடம்போடுதானே வேறுமொரு
தேகத்தை யடைந்தவரானார். பிணத்தின் முழத்துண்டமே போர்ப்
யது. முடியிட்ட * கவந்திகளைச் சுமப்பது. பிணஞ்சுட்ட சாம்ப
லின்றுகள் மூடியதோள், மார்பு, முகம் முதலிய அங்கமும், சுடுபிண
நிணம் பூசியகைகாலு முடையராய், பிரேதபிண்டமாகிய வாய்க்கரிசி
யாலமைந்த உண்டியையு முடையராய், பிணவணிகளைத் தாமணிந்தி
ருப்பது. இவ்வாறெல்லாமாக அறிவுமழுங்கி உழைப்பு மிகுதியாலி
ரவும் பகலுங் கூச்சலிட்டுக்கொண்டும் நாய்போலலைந்து திரிந்து
கொண்டுமிருந்தார். இங்ஙனம், பன்னிருதிங்களும் நூறாண்டுபோற்
கழிந்தன.

அரசன் கனா.

பின்பு, அவ்வரசன் வருத்தப்பட்டு உபசரிப்பாரின்றிச் சுற்றத்
தினரைப்பிரிந்த ஆற்றாமையோடு உறக்கமின்றி உழன்று வேலை
செய்து வெம்பிய உடம்பினராய் வலிகுறைந்து, ஒருநாள் தம்மை
மறந்து நித்திரைபோனார். அங்ஙனம், படுத்துறங்கும்போது கனவில்
வியக்கத்தக்க பெருவியப்பெல்லாம் அனுபவித்தனர். எமப்புறங்காட்
டிலிருந்த பழக்கப்பாவ வாதனையாலும், துய்த்தொழிக்க வேண்டிய
ஊழின்வலி மிகுதியாலும், இன்னும் குருதக்ஷிணை கொடுக்க வேண்டு
மேயென்னும் ஞாபகம் வந்ததாகக்கண்டு, அவ்வேறு தேகத்தால்
குருதக்ஷிணை கொடுத்தவாறாக அந்தப்பாவம் பன்னிரண்டாண்டு துன்
பம் நுகர்ந்து ஒழிக்கவேண்டுவதான கழுவாயுடையதாகவாயிற்று.

அல்லாக்கால், விசுவாமித்திரன் தக்ஷிணையின்பொருட்டுத் தூல
வுடம்பினைக் கொடுத்து விட்டவழியும் பொருளற்றவர் ஆகவில்லை.
மனமாகிய சூக்குமவுடல் வேறு பொருளாகவிருத்தலின் அதனது
நுகர்ச்சி கனவினிடத்ததாகலின் அங்கு குருதக்ஷிணை கொடுக்க
வேண்டியகடன் அரசனிடத்தி லிருத்தலினாலும், தூலம் புலைத்தொழி
ற்செயற்கைபதாகலின் உண்மைத்தருமவினை ஞாபகமுறுமையாலும்
கனவிற் குருதக்ஷிணை கொடாதவராயினாராகவே யப்பாவத்தின்
பொருட்டு அக்கனவின்கண்ணே பன்னிருயாண்டு துன்பநுகர்வதே

* கவந்தியென்பது கந்தையென மருவிற்று.

கழுவாய், இந்நெஞ்சு நிலைமை சோதித்தற் பொருட்டுப் புலையற்கு முனி அரசனை விற்றதென்பது தரும விரகசியமாம். ஆதலின் தேகமொன்றினாற்றானே யறஞ்செய்தல் போதாது. அதனோடு ஒப்ப மனத்தாலும் அறஞ்செய்தல் வேண்டும். மனஞ்சிறந்ததாயினும் உடல்வினை சுத்தமாகாவிடின் மனஞ்சுத்த மாகாமையின் தருமவழியின் சுத்தப்பொருட்டு வருணாச்சிரம தருமங்களைக் கெடுத்தலாகாதென்ற வாறாயிற்று.

பின்பு, அரசன் கனவிற்றான் புற்கசிசாதிமாதினிடத்திற் பிறந்ததாகத் தன்னைப்பார்த்தார். அப்பிறப்பி லிருக்கும்போது, இங்கிருந்து போனால்தான் தானதருமஞ்செய்வதாக வெண்ணிக் கொண்டே கருப்பயாதனையை யனுபவித்தார். புற்கசச்சிறுவனாகப் பிறந்தபின் ஏழுவயதாகலும் மயானத்துப்பிணஞ் சுடுதொழிலுக்கு வந்தார். அங்கு நற்குணனாகிய வோரவேதியன் மிருந்த வறியனாயிருந்திறந்த உடனே அவன்சுற்றத்தினர் அந்த ஈமக்காட்டிற்குக் கொடுவந்தனர். அப்போது அப்புற்கசச்சிறுவனை அரிச்சந்திரன்பொருள்கொடாது பிணத்தைச் சுடலாகாதென்று வேதியரை மறுத்தான். அதற்கவ் வேதியர்கள்முன்னாளில் விசுவாமித்திரர் கோவத்தால் அரிச்சந்திரன் புற்கசனாகவில்லையோ, ஏடபாதகா! நீ கொடிய அமங்கலவினை செய்பவனாகுக. ஏழைவேதியன் பிணத்தைச்சுடவொட்டாத பாவத்தாலும் வேதியரைத் துன்புறுத்தியதாலும் நீ யிப்போதே கோரநரகத்தையடையென்று சபித்ததால் அப்போதே பாசத்தைக் கையிற்பிடித்து இயமன்றூதுவர் வந்துவலுமையாகத் தம்மைப்பற்றிக்கொண்டு போவது நோக்கித்துயராமுற்று. அந்கோ, அந்தோ, என்று இரங்க, சலசலப்போடு காய்ந்துகொண்டிருக்கும் எண்ணெய்க் கொப்பரையில் தலைகீழாக விழுத்தினர். ஈர்வாளாலறுக்கப்பட்டும், உடைவாளால் வெட்டப்பட்டும் சீழுதிரங்களைக் குடிக்கும் குருட்டிருட்டு நரகத்தும் இமிசைசெய்யப்பட்டார். இங்ஙனம் ஒவ்வொருநாளில் ஒவ்வொரு நரகத்தினிடமாக வருந்தும்படி யிடப்பட்டும், தேள், பாம்பு காக்கை முதலியவற்றால் கொட்டல், கடித்தல், கொத்துண்ணலாதி புரிவிக்கவும் பட்டார். ஒரு புறம்நோய், ஒருபுறம் துக்கம், ஒருபுறம் நாய் கவ்வல், ஒருபுறம் சுண்ணாம்புக் காளவாயிற் கிடத்தல், பெருங்குளிர், பெருவெப்பம், பெருங்காற்று இவைகளால் வருந்தல் முதலிய உண்டாகவே ஆற்றலாகாது புலம்பிக்கொண்டிருந்தார். இங்ங

ளம் அந்த நரகங்களில் ஒருதினம் நூறாண்டாகக்கழியப் பலநாள் துயரமுற்று மறுபடியும் நிலவுலகம்வந்து நாயாகப்பிறந்து மலம், எச்சில்களைத்தின்று கிடந்தபின்னர் ஒரு திங்களில் இறந்து, கழுதையாகப் பிறந்து, பின் யானை, குரங்கு, மாடு, யாடு, மோத்தை, பூனை, கழுகு, பறவை, புழு, மீன், யாமை, பன்றி, கோழி, கிளி, பூவை, தேள், பாம்பு, நரி, உடும்பை, மரம், கல்முதலியவாகத்தினமொரு பிறப்பாகப்பிறந்து நாளொன்று நூறுவருடமாகத் தீயயோனிபலவற்றுள்ளும் பலநாள் பிறந்து துன்பப்பட்டார். பின்பு அவ்வரசன் தன் குலத்திற்றானே பிறந்ததாகக்கண்டு அரசனுய்ச் சூதாடி அரசிழந்து மனைவி மக்களைவிட்டுத் தனியே காடுசென்று அங்குவாய்திறந்து விழுங்கவந்த சிங்கத்தினையும் சரபத்தினையுங்கண்டு அவற்றால் கொலையுண்டு தின்னப்பட்டு, மீட்டும் மனையாளை யெண்ணியழுது, ஓ!! சிபியரசன் வழிமகளே! என்னைவிட்டு எங்குபோகின்றாய் என்று வாயாற்கூறிப் பின் எவ்வளவோதேடியும் கண்ணுக்கு அப்பால் அகப்பட்டதில்லை. பின்பு அவ்வரசன் சுவர்க்கத்தை யடைந்து தன்மனைவியைக்கண்டார். அங்கு தலைவிரித்து ஆடையின்றிச் சிலராலீர்த்துச் செல்லப்பட்டு, ஐயோ! காத்திடு காத்திடு என்று ஓலமிட, எமன் ஆணையால் வா என்ற சத்தத்தினைக்கேட்டு அவ்விடம்போக; அங்கே ஏட எமனிடத்து உன்மேல் விசுவாமித்திரர்கோள்சொன்னார் என்று கூறித் தூதர் தாம்பினாற் கட்டியீர்த்துப்போயினர். எமன் விசுவாமித்திரர் கெடுதியெல்லாம் கூறினான். அவ்வளவாயும் அவ்வரசனுக்கு அக்கனவிலும் விசுவாமித்திரன் விஷயத்தில் வேறுபாடு உள்ளத்திலும் பிறந்ததில்லை பாவபுத்தியும் பிறந்ததில்லை. இவ்வாறு பல சோதனைகள் பன்னிரண்டாண்டு காலவளவாகக் கனவிற்பட முடியாத பாடுகள்படச்செய்து இத்துன்பமுனக்கு விசுவாமித்திரரால் நேர்ந்ததென்னவும் அவர்விஷயத்தில் பத்திகெட்டதில்லை. பின்னர் இயமன் தூதுவரால் கொண்டுபோகப்பட்டு உண்மை வடிவோடுங் கூடிய இயம தருமராசனைப்பார்த்தார். அப்போது, இயமன், ஐயா! மகான்மாவாகிய விசுவாமித்திரன் கோவம் ஒழிப்பது அருமையாகவே யிருக்கின்றது. இனி உமக்குப் புத்திரசோகத்தினையும் கொடுப்பார். நீ, மனிதருடைய வுலகமே மீண்டுசெல், இன்னும் அனுபவிக்க வேண்டிய துன்ப சேடத்தினையும் ஒழித்துவிடு. அப்பால் உனக்கு நன்மையுண்டாமென்று சொல்லியனுப்ப, காலதூதுவராற்றள்ளுண்டு நிலவுலகம் வந்தார். (இவ்வளவும் கனவுதகர்ச்சி,

இங்ஙனம் கனவுகண்டு உடனே விழித்துணர்ந்து அச்சத்தோடு நடுக்குற்று, ஓகோ! எவ்வளவு துன்புற்றேன் என்று எண்ணி இனை ப்பாற்றி அக்கனவினை நினைததுப் புண்ணிற் காரமிட்டாற் போலாய் அந்தோ! கனவிலுங் கலக்கந்தானு! என்று எண்ணித் தன்னேவலாளாகிய புற்கசர், வெட்டித்தொழிலரை யழைத்து, ஏடா, நான் படுத்துப் பன்னிரண்டு வருடமாயிற்றே, என்று வினவ; சிலர் இல்லை இல்லை என்றனர், சிலர் ஆம் ஆம் என்றனர். அரசன் அவற்றைக்கேட்டுத் தேவர்களை வணங்கிப்பழிச்சி எனக்குச் சுபமுண்டாவதாக, தரும சிந்தையும் உண்மை யுணர்ச்சியுங் கெடாது நிற்க, மனைவியுமக்களும் சுகம்பெறுக. அறம் வாழ்க. மாதேவர்களுக்கு வந்தனம். கண்ணனுக்கு வந்தனம். பிரமனுக்கு வந்தனம். தலைமையிற் றலைமையவாய், சுத்தமாய்; முதல் முடிவற்றதாயிருக்கும் பிரமத்திற்கு வந்தனம், பிரகற்பதியே, போற்றி, இந்திரனே, போற்றி என்றுகூறி அவ்வரசன் மீட்டும், வெட்டித் தொழிலிற்றலைப்பட்டு பிணங்கட்குக் கொள்ளிக்காசு வாங்கிச் சிறந்தவொழுக்கவழி மறந்து, அழுக்கடைந்தவராய்ச் சடை முடிதரக் கருமைவடிவோடு கோலேப்பிடித்து விகாரவுருவாய் மனைவிமக்களை மறந்து, ஊக்கமின்றி அப்புறங்காட்டில இருந்தனர்.

அரசன் புத்திர சோகமுறல்.

பின்பு, பாம்பாற்கடியுண்டு இறந்த மகனை யெடுத்துக்கொண்டு அவ்வேந்தன் மனைவி மயானத்திற்கு வந்து அழுதனள். ஓ! மகனே, ஓ! புதல்வ, என்று அடிக்கடி கூவியழைத்துக் கோவென்று கதறிக் கூந்தலிற் றாசுபடிய கறுத்திளைத்த மேனியராய், ஓ! அரசரேறே, முன்னிலத்தின்மேல் விளையாடிக்கொண்டிருக்கக்கண்ட மகன் இப்போது அரவின் வாய்ப்பட்டு இறந்து கிடப்பதைப்பாரும், என்று ஓலமிட, அரசன் அம்மொழிகேட்டு, ஏதோ, புதுப்பிணம வந்ததே உரிமைக்காசு தண்டுவோமென்று விரைவிலங்குவந்தனர். அங்கு அழுதிருந்த மாதர் தம்மனைவி என்று அறியாதபடி நெடுநாள் வேறிடமிருந்ததாற் புதிதுபிறந்து வந்தவாறுயிற்று. முன் அழகிய கூந்தலும் மேனி நலவண்ணமு முண்டாயிருந்தது, பின் சிக்குண்ட மயிரும் கறுத்தவண்ணமும் அழுக்காடையு முடையராய் வந்தமையால் அவர், அரசமாதராகத் தோறறவில்லை. ஆகவே, அவ்வரசனும் முன்னிலைமையொன்றுமின்றி உலர்ந்தமரமபோலும் புலைவடிவாக விருத்தலின் அவ்வமமையும் அவரைத் தமது கணவரென்றுணர்ந்திலர்.

அவர் பாம்புகடித்திறந்து கறுத்தவாடையின்மேற் கிடத்திக்கிடக்கும் மகனைப்பார்த்து வியப்படைந்து சிந்தித்து, அழகிய தலைச்சுழி உயர்ந்து வளைந்த புருவம், சிறந்ததாடை, சுருண்டு மெலலிய சிறுகுஞ்சி, தாமரைமலர்ந்தகண், கொவ்வைவாய், அழகிய பல்வரிசை, மெல்லிய ளங்கை, பெருத்த நெற்றி, நீண்டதோள், அகன்ற மார்பு, உயர்ந்த நாசி, தெளிந்திறையமைந்த விரல்கள், இவ்வாறாக நல்ல அரச விலக்கணம் அமைந்துள்ளன; ஆகலின் நல்ல இராஜவம்சத்திற் பிறந்த மைந்தனே போலும், அந்தோ, பாழான ஊழ் இவனுக்கு இத்துன்பத்தை விளைத்ததே என்று அச்சிறுவன் முகம் பார்த்தளவிலே, மன்னவன் நெஞ்சுகரைந்து சோகம் பிறந்தது. இந்தச்சிசுவை நோக்குந்தோறும் தாய்மடியிற படுத்துக்கிடக்கும் இரோகிதாசுவனாகிய என்னிளஞ் சேயின் ஞாபகம் வருகின்றது அவனும் இதேபருவமுடையவன் இவ்வாறே யிருந்தான். ஆயின் கொடிய மிருத்தியு அவனுக்கு இந்த நிலையுண்டாக்க மாட்டாது. என்று அரசன் தன்னுள் எண்ணிக்கொண்டிருந்தான.

அப்போது அவ்வரசமாது, மகனே, எங்கப்பாவ வெண்ணத்தால் கொடிய விப்பெருந்துன்பம வந்தது. இதன் முடிவு தெரிந்தேயில்லை. ஓ! என்தலைவராகிய மன்னர்மன்னரே, இப்பெருந் துன்பக் கவலையுள் திகைத்துக்கிடப்பேனைத் தேற்றாது எங்கு சுகமாக விருக்கின்றீர், அரசுபோயிற்று. அன்புடை நண்பர் போயினர். மனைவி மக்களையும் விற்றீர். ஓ, கொடுந்தெய்வமே, அரிச்சந்திர மஹாராஜனுக்கு என்செய்தாய், என்று அவ்வாறமை புலம்பும்போது, அவ்வரசன் சிறிதுதூரம் பின்னுக்குச் சென்றுநின்று, அழுபவளை தம்மனைவி இறந்தவன் தம்மகன் என்றுணர்ந்து, என்னிது, எந்த வீட்டிலிருந்த என்மனைவித்து, எவ்வாறு மகனிறந்தான். அவளலலள்போலும், என்று ஐயப்பட்டுக்கொண்டு, அப்பெண்ணரசியின் குரலை நன்றாகக் கேட்டுத்தம்மனைவியேயவர், தம்மைந்தனே யச்சிறுவனெனத் துணிவாக வுணர்ந்து, ஆற்றாத துன்பத்தினராய், ஆ ஆ மகனே மகனே என்று கூவிமூர்ச்சித்து நிலத்தின்மேல் விழுந்தார். அக்கற்பரசியும், அப்படிப்பட்ட அவத்தையுட்பட்டவரைத் தம்முடைய கணவராகிய அரிச்சந்திரன் என்றுணர்ந்து துயரத்தால் மூர்ச்சித்துச் சேட்டையற்று நிலத்தின் மேல்விழுந்தார்.

பின் அவர்கள் மூர்ச்சை தெளிந்தெழுந்து துக்கத்தோடு; ஓ, மகனே!! நல்ல வுன்முகம் வாடியிருப்பதை நோக்கி எங்கள் நெஞ்சு இன்னந்தரித்ததே. அப்பா!! அப்பா!! என்று அழைத்துவரும் உன்னைக் குழந்தாயென்று இனி எப்போது வாயார வழைப்பேம்? இனியாருடைய தத்தடியிட்ட அடியின் றுகளினால் எங்களாடையும் உடம்பும் அழுக்கடையும்? என்னுடலைக் குளிர மனத்தை மகிழச் செய்யவந்தமகனே!! உனக்கு நான் சந்தையாயும் கன்றினையிற்றாற் போல் விற்றேனே! என்னரசைப்பறித்து, என் சுகப்பொருளெல்லாவற்றையும் கவர்ந்துகொண்ட ஊழானது பாம்பாகவந்து என் மைந்தனுயிரையும் வாங்கிக்கொண்டதே! இச்சிறுவன்முகம் பார்த்தால் அந்தவிடம் என்கண்ணினுக்கும் ஏறியிருக்கலாம். இப்போது குருடனேயானேன்! என்றிவ்வாறு புலம்பி, அந்த இளமகவை யெடுத்தணைத்து, கம்பியகுரலோடு அழுதழுது இளைத்து மூர்ச்சித்துப் பிணம்போல் நிலத்தின்மேல் விழுந்தார்.

அப்போது, அவ்வரசபன்னி, கணவனைநோக்கி, இவரே சிறந்த வென்கொழுநர்; குரலால் விளங்குகின்றது. அறிவுடையோர் மனத்திற்குச் சந்திரனை போலும் அரிச்சந்திரமஹாராஜன் இவரே. ஐயமில்லை. இவர் நாசிநீண்டு முனைவளைந்துமுள்ளது. முல்லையரும்பு போன்ற பல்வரிசையும் முகச்சாயலும் அவ்வாறே யிருக்கின்றது. இவ்வரசன் மயானத்துக் கேன்வந்தார் என்று எண்ணிக்கொண்டே அந்தமாதரசி புத்திரசோகத்தினை யொழித்து நாயகனையே பார்த்தார். அப்போது, அவர் கையில் தாழ்ந்த வெட்டித்தொழிற் புலையன் கையிலுள்ள தோர்தண்டமிருக்கக்கண்டு துயரத்தோடு மறுபடியும் மூர்ச்சித்து விழுந்து பின்தெளிந்தெழுந்து, கம்பியகுரலோடு, ஓ! தெய்வமே! எல்லைகடந்து பழித்தொழில் செய்யப்பட்டது. சீச்சீ என்னை செய்தாய்! தேவரோடொத்த அரசனைப்புலைய னாக்கினையே! அரசாட்சியைப் பறித்தாய்! சுற்றத்தினரைப் பிரித்தாய்! மனைவி மக்களை விற்பித்தாய்! இவ்வளவிற்றிருத்தி யடையாது புலையனுமாக்கினையே! அந்தோ! என்னரசே! துக்கித்து நிலத்தின்மேல் விழுந்து துயரப்படும் என்னையெடுத்து இப்போது, கட்டிலின் மீதிருவென்று ஏன் சொல்லமாட்டீர்? குடை, கவரிமுதலிய அரசசின்னங்களும், வெள்ளி, பொன் முதலியவற்றாற்செய்யப்பட்ட அரச செல்வக்கலன்களும் இப்போது காணப்படவில்லையே. ஏன் இந்தத்தசைவேறுபட்

டது? முன்னம் எதிரே அரசர்களெல்லாம் ஏவலராய்த் தமது மேலாடையால் நிலம் விளக்கிச் செல்ல, நடக்கு மிம்மன்னர் மன்னன், இப்போது இத்தலைமண்டையோடு உருளும் பிணவலங்காரங்களும், அவைபூண்ட பண்டங்களும், கலன்கழிமகளிர் கூந்தலும், உதிரமாமிசங்களும், வெந்தும் வேகாதுமான பிரேதங்களும், நெருப்பு, புகை, கரி, சாம்பல், காக்கை, கழுகு, பருந்து, நாய், நரி முதலியவைகளுமுடையவாய்த் தீநாற்றத்தால் சூழப்பட்டு அச்சம் விளைப்பதாயும் அசுத்தமாயுமுள்ள இம்முதுகாட்டில் துன்பப்படுகின்றாரே! ஐயோ! இதனைப்பார்க்கிலும் துன்ப முள்ளதோ? என்றிவ்வாறு சொல்லிக் கொண்டேவந்து, அந்த மஹாபதிவிரதை, அம்மன்னவனைக்கட்டிக் கொண்டு கோவெனக்கதறி, ஏ! பெருமை பொருந்திய அரசனே! ஏனிப்படியானீர். என்னெஞ்சையேதோ! மருள்வந்து மூடுகின்றது. இது என்ன, கனவோ, அல்லது நனவோ, நனவேயாயின் தருமத்தை நம்பினவனுக்குத் தருமம் துணையென்பது இனியில்லை. நீ, அவ்வளவு சிறந்த தேவபிராமணரை உபசரித்தனையே! வாய்மை யறத்தினையே நயமியுள்ளனையே, அப்படிப்பட்ட வுனக்கு இவ்வளவு கொடிய துன்பகதையுண்டான பின் தருமம் எங்குள்ளது, சத்தியம் எங்குள்ளது, இனி நற்குண மென்செய்ய, என்று புலம்பும் அம்மனை விமொழிகேட்டு காவலன். வெய்துயிர்த்து, கம்மியகுரலோடும் தனக்குப்புலைத்தன்மை வந்தவாறுமுறையே கூறினர். அந்தக்கற்பரசியும் கேட்டு மிகவும வருத்தப்பட்டுப் பின்பு, தன்மகன் இறந்ததையும் முறையேசொன்னாள். அதனைக் கேட்டவ்வரசன் துக்கத்தோடு விழுந்தெழுந்து, இறந்து கிடக்குந் தமது மைந்தன் முகத்தை நாவினால் வருடிச் சொல்லுகின்றார்.

அன்புடையாளே! இனிநெடுநாழி யிவ்வாறு புலம்பிக்கொண்டிருப்பதற்கு மனமில்லை. பார் என்கொடுமையை, என்னுடம்பு என் சுதந்தரத்திலில்லை. புலையன் கட்டளையின்றி நான் தீயில் வைத்தால் மீட்டும் புலையனடிமையாகவே நான் பிறக்கவேண்டிவரும். அன்றி அவ்வளவில அக்குற்றம் ஒழிவதல்ல. கிருமிகீடங்களைத் தின்னும் நரகத்திலும் விழுவேன். மலராசிவடிவமாகிய வைதரணீநரகம், துண்டந்துண்டமாக வெட்டப்படும் அசிபத்திர நரகம், மிகக்கொடு வருத்தமுள்ள இரௌரவ நரகமுதலியவற்றுள் பலவேதனைப்படக் கிடந்து பல இழிபிறப்புப் பிறக்கவேண்டும். பிழைத்திருக்கலா

மென்றால் துயரக்கடலுள் எழுந்துகின்றேன். இதனில் இறப்பதே மேலாம் போலும். அஃதங்ஙனமாக; எதுவரினும் வருக என்றிருக்கையில் வமிசத்திற் கொரேசிறுவனிருந்தான் அவனும் இங்கிறந்தான். இனியென்கொடுமை பெரிது. பிறனொருவனுடைமையாகிய இவ்வுடம்பினை நான்கெடுத்து எவ்வாறு கீழ்நிலைச்குப் போவேன். அந்தோ! ஆபத்தே! இனி என்முயற்சியில்லை. அல்லது, அதிக துன்பம் வந்தவழி எவனும் பாவத்திற்கஞ்சான். தாழ்ந்தபிறவியிற் பிறக்கினும் பிறக்கலாம். இத்துன்பம் ஒழிவதே சாலும். எந்த நரகத்துன்பமும் இப்புத்திர சோகததோடொத்த தன்று. ஆதலின், நான் பிணக்கட்டை வேகும்போது, மகனுடம்போடு நெருப்பில் விழுந்து போகின்றேன். நல்லவளே! என்னுடைய கொடுந்தொழிலாகிய விதனைப்பொறுத்திடுக. நான் எவ்வளவுகொடுமை புரிபினும் நகைத்திருக்கும் இயற்கையோய்! நான் என்சொல்லினும் பிரசாதமென்றே கொள்ளும் கொள்கையோய்! இப்போதும் என் சொல்லை இழுக்காதே. என்னால் விதிக்கப்பட்டவளாய் வேதியன் மனைச்குப் போகுதி, கணவனையும் மகனையும் விட்டுப்போகலாற்றாயோ, நாமிதுவரையினும் ஏதேனும் தானதருமம் செய்திருந்தாலும், வேள்விக்கருமஞ் செய்திருந்தாலும், பெரியோரைப் பூசித்திருந்தாலும், மறுமையிற் றொடர்புண்டாகின்றது. இனி இம்மையிற் கிடையாது. ஆனால், புதல்வனைத் தேடிச்செல்லும் பொழுது, உன்னோடு போவதே முறை நன்னகையாய்! நான் ஏகாந்தத்தில் நகைத்துக் கொடுமொழியேதேனுங் கூறியிருந்தால் அதை நெஞ்சிற் கொள்ளாதே. வேதியன் மனையிலிருக்கும்போது நான் அரசபன்னியென்று நினைத்து அவ்வேதியனை அவமதியாதே, எல்லா முயற்சியாலும் அவரைக் களிப்பித்தல் செய்தி. அவரே உனக்குத்தலைவனும் தெய்வமுமாம். என்று கூறக் கேட்ட அவ்வரசி, அரசரேறே! நானும் உம்மோடு தீயிற்புகுவேன். இனியும்மை விட்டு இத்துன்பத்தை அநுபவித்திருக்க மாட்டேன். சுவர்க்கமேனுமாக நரகமேனுமாக நாமிருவரும் ஒக்க அநுபவிப்போம். என்றுகூற, அவ்வரசனும் அதற்கிசைந்தார்.

தீப்புகவேண்டி அரசன் தெய்வம் வாழ்த்தல்.

பின்பு, அவ்வரசன் எரு விறகுகளைச்சேர்த்து அடுக்கிவைத்து, அதன்மேற் றன்மகனைக் கிடத்தித் தாம் மனைவியோடும் இருகையேற்று, உயிர்க்குயிர், ஈசன், அன்பின்வழியன், பாசப்பகை, எங்கு

முன்னோன், சுரேசன், ஆதி, அங்கண்ணன், பிரபு என்னும் பெயர்க்குப் பொருளாய்த் தம் உள்ள வெறுவெளிப் பெருங்குகைக்கண்ணே இருக்கும் முதலீறில்லாத மெய்ப்பொருளைத் தியானித்தார்.

இதனைப் பிரமசூத்திரம் முதல், அ-ம் 3-ம் பாதம் தாராதிகரணத்துட் காண்க. தைத்திரியோபநிஷத்து, 6-வது பிரசினம் தகரவித்தை பிரணவோபாசனையையும் காண்க.

அரசனுக்குத் தேவர்கள் காட்சிதருதல்.

அங்ஙனம் அரசன் தியானித்திருக்கையில் எல்லாத்தேவரும் இந்திரனும் தருமதேவதையும் முன்னடக்க வந்து சேர்ந்து, யாவரும் ஒரு முகமாக, ஓ கோ! அரசர்க்கு அரசனே கேளும். இவர் பிரமதேவன், இவர் தருமதேவதை, இவர்களோ சாத்தியதேவர், விசுவதேவர், சத்த மருத்துக்கள், உலகபாலகர், சாரணர், நாகர்கள், சித்தர்கள், கந்தருவர்கள், உருத்திரர்கள், அசுவனிதேவர்கள் முதலிய மற்றைத்தேவரும் வந்தனர். மூன்றுலகத்தாலும் நண்பு கொள்ளுவதற்கு யார் அரியவரோ, அப்படிப்பட்ட விசுவாமித்திரனும், உம்மோடு நண்புகொண்டு, உமது எண்ணத்தினை நிறைவேற்ற விரும்பி நிற்கின்றார் என்றுகூறி, ஓ; அரசனே! வன்செய்கை செய்யவேண்டா, யானே தருமதேவதை உமது பொறுமை, சாந்தம், வாய்மை முதலிய நற்குணத்தால் களித்தல் செய்தவனாய் உம்மிடம் வந்தேன் என்று அறக்கடவுள் கூறிற்று. பெருத்த புகழ்வாய்ந்த அரிச்சந்திர மஹாராஜனே! நான் இந்திரன் உம்மிடம் வந்தேன். மனைவி மக்களோடு நீர் அழியாத புண்ணிய லோகத்தை வெற்றி கொண்டீர். ஓ! மன்னர் பிரானே! நீர் உமது குடும்பத்தோடு சுவர்க்கம் புகும்.

என்று கூறலும், அரிச்சந்திரன், அவ்விந்திரனை நோக்கி, ஓய் தேவராஜனே! என்னை ஏவல்கொண்ட நாய்த்தின்னி புலையனது கட்டளையின்றி அவனுக்குச் செய்யத்தகுவனவற்றைச் செய்யாது நான் சுவர்க்கம்பெறேன் என்றார்.

அதன்பின் தருமத்தெய்வமானது, அவரை நோக்கி, ஐய! உமக்கு இத்துன்பம் வருமென்றறிந்து நானே நாய்த்தின்னும் புலையனாய் "பக்கண" மென்னும் புலைச்சேரியைத் தோற்றுவித்தேன் என்றது. அப்

போது, இந்திரன் மறுபடியும் மண்ணின்மேல் எல்லா மனிதராலும் எந்தவிடம் வேண்டுமென்று விரும்பப்படுகின்றதோ அப்படிப்பட்ட புண்ணியத்தானத்தை நீரடையும் என்றான். அதுகேட்ட அரிச்சந்திரன், ஓய்! தேவரிறையே! உமக்குத்தெண்டன் என்னிடத்து அருளினால் இன்முகத்தோடும் வந்த உம்மிடத்துச்செய்யும் என் விண்ணப்பத்தினைக்கருணைசெய்து கேட்டருளும். என்னெனின், அயோத்தி நகரத்தின்கண்ணுள்ளார் என்பொருட்டெழுந்த துக்கத்தினால் விழுங்கப்பட்டவர்களா யிருக்கின்றனர். அவர்களைவிட்டு யானொருவனும் எவ்வாறு சுவர்க்கம்புகுவேன். "எல்லைக்கணின்றார் துறவார் தொலைவிடத்துந், தொலைவிலைக்கணின்றார் தொடர்பு" என்பது * ஒத்தன்றே.

குருவினைக்கொன்றதீமை, வேதியனைக்கொன்றதீமை, பசுவைக்கொன்றதீமை, மாதரைக்கொன்றதீமை என்னும் பாதகத்தோடொத்த பெரும்பாதகம் தன்னை யடைந்தாரைக் கைவிடுதலால் வருமென்று கூறப்பட்டது. தன்னேவல் பூண்டொழுகும் அன்புள்ள அடியவன் விடப்படுவோன் அல்லன். குற்றமற்றவனாகிய அவனைவிட்டவனுக்கு இம்மையிலேனும் மறுமையிலேனும் சுகமுள்ளவாறாக யான் கண்டதில்லை. ஓ! இந்திரனே! இங்ஙனமாக யான் எவ்வாறு சுவர்க்கம் குறுகுவேன். தேவர் கோமானே! அயோத்தியா ரனைவரும் என்னோடும் வரற்பாலரேயாயின், யானும் அங்குவருகின்றேன். இன்றேல் அவரோடு நரகம் புகவும் புகுவேன் என்றார்.

அதுகேட்ட இந்திரன். அவ்விறைமகனை நோக்கி ஐய, அவரவர் செய்த நல்வினை தீவினை வேறுவேறாகப் பலவுள்ளன; அங்ஙனம் அவரனைவரும் ஒரேபடித்தாய்ச் சுவர்க்கந்துய்க்கவெனக் கூறுவதெங்ஙனமாம் என; அரிச்சந்திரன், ஓய்! தேவர் கோவே! நாட்டின்கணுள்ள குடிகளின் உதவியால் அரசன் அரசுசெய்வதும், பெருந்தவேள்வி செய்வதும், புண்ணிய மீட்டுவதும் ஆதலான் அக்குடிகளுடைய உதவியாலே யானும் அவ்வனைத்தினையுஞ் செய்தேனாகை, இப்பொழுது சுவர்க்கவேட்கையால் அத்தகைய நன்றிசெய்தவரை விடலாற்றேன். "செய்யாமற் செய்தவுதவிக்கு வையகமும், வானகமு மாற்றலரிது" ஆதலின், மகவேந்தே! யான்செய்த வினைகளுள் எதேனுஞ் சிறிது

* ஒத்து-விதி.

நல்வினையிருந்தாலும் தானம், வேள்வி முதலிய கருமங்களுட் சிறிது நெடுங்காலம் அனுபவிக்கத்தக்கதா யிருந்தாலும் அவையெல்லாம் அக்குடிகளோடு ஒத்தபடி நான் துய்ப்பதாகுக, நீர்கருணை செய்து ஓர் போதேயாயினும் யான் அவரனைவரோடும் சுகமுறும்படி யருளுக "சுற்றத்தாற் சுற்றப்படவொழுகல் செல்வந்தான், பெற்றத்தாற் பெற்றபயன்" என்றிரந்தாரென மேல்தருமப்பறவை முனிவர் கூறுகின்றனர்.

பின்பு, ஓய் அரசனே! அவ்வாறேயாகுகவென்று, மூவுலகநாயகனாகிய இந்திரன் களித்துக் கூறினான். தருமதேவதையும், காதிவேந்தன் மகனாகிய விசுவாமித்திர முனிவனும் "கெடாவழிவந்த கேண்மையார் கேண்மை, விடார் விழையுமுலகு" என்று அவ்வரசன் நிலைமையை வியந்தனர்.

அரசன் நகரமாக்களோடு சுவர்க்கம் புகுதல்.

பின்னர் இந்திரன், அரிச்சந்திர மகாராஜனோடும் அயோத்திமாநகரமடைந்து, ஓய், மாந்தரே, அனைவரும் வருக. அறக்கடவுளருளால் அநேகங்கோடித் தெய்வவிமானங்களுண்டாய் மனிதர்க்கு அருமையாயுள்ள சுவர்க்கப்பேறு இந்த மண்ணிலம்போல நுங்கட்கெளியதாயிற்று, என்று கூறினன்.

இங்ஙனம் இந்திரன் கூறிய சொல்லைக்கேட்டலாலும், அரிச்சந்திரமகாராஜன் அன்பு செய்தலாலும், அந்நகரமாக்களனைவரும் தத்தம் மனைவி, மக்கள், சுற்றம், நண்பர், ஏவலர் முதலியோரோடும், சுவர்க்கம் ஏறுங்கால் அங்கங்கு வெவ்வேறு விமானங்களில் ஊர்ந்து சென்றனர். அப்பொழுது அனைவரும் களிக்க அரசனை அரிச்சந்திரன், உரோகிதாசுவனை தன்னுசைமைந்தனை அழகிய அயோத்திநகரத்தில் மகுடஞ் சூட்டினான். தேவர்க்களோடு முனிவரனைவரும் அவ்வரசிளங்குமரனுக்கு அரசிறைமை யளித்தனர். அவர்களிடத்து அன்புள்ள மாந்தரனைவரும் "ஊருணிநீர்நிறைந்தற்றே யுலகவாம், பேரறிவாளன்றிரு" என்பதுண்மையாயிற்றே! என்று களிப்படைந்தார்கள். இவ்வாறு ஒப்பற்ற செல்வம் பெற்று, அவ்வரிச்சந்திர மகாராஜன், ஓர் நகரம்போலும், * உய்யான முதலியவற்றாலும், அரணாலும், கொடிமுதலியவற்றாலும் அணிந்துள்ள விமானம் புகுந்தார்.

---

* உய்யானம்-சோலை.

அதன்பின், எல்லா நூல்களினுள்ளமு முணர்ந்து, மிகுந்த பெருமையுடைய அசுர குருவாகிய சுக்கிரன், துதிக்கத் தொடங்கினான்.

அரிச்சந்திரனோடொத்த அரசன் முன்னிருந்ததுமில்லை. இனியுண்டாவதுமில்லை. ஆ! ஆ! எவ்வளவு பொறுமை எவ்வளவு ஆழ்ந்துணர்ந்த நெஞ்சுடைமை, எவ்வளவு கொடை ஆ! ஆ! அவற்றின் பயன் எவ்வளவு பெரியது. மானிடனான அரிச்சந்திரன், தெய்வமாயினனே "அடக்கமமரருளுய்க்கும்" என்பதுண்மையே என்றான்

இக்கதையின் பயன்.

என்று தருமப்பறவை முனிவர், சைமினியை நோக்கி, இவ்வரிச்சந்திரன் கதை முழுவதும் உமக்குச் சொல்லியாயிற்று. ஓ! வேதியனே, யார் இந்தப் புண்ணியக் கதையினைக் கேட்கின்றாரோ, அப்படிப்பட்ட விவேகி, ஆயுள், நோயின்மை, செல்வம், பகையொழிவு, சுகம் முதலிய நன்மைகளைப்பெறுவன். மகப்பேறில்லாதார், மகப்பேற்றையும், ஊர்தி வேண்டினோர், ஊர்தியையும், கல்வியை விரும்பினோர், கல்வியையும், ஞானத்தை விழைந்தோர், மேலான ஞானத்தையும் பெறுவர். ஒருகாலிக்கதையைக் கேட்டோர்க்குண்டாகும் புண்ணியப்பயனைக் கூறுதும் கேட்பீர். அவனுக்கு மனைவி மக்களோடு ஒருபொழுதும் பிரிதலறியான. அவன்பால் தேவர் மகிழ்ச்சி கூர்வர். யார்க்குந் தருமத்தில் உயர்ந்த சுவையுண்டாம். பெறும அவ்வளவும் சுகமேயுண்டாம். மேலான செல்வம் பெறுவர். செய்கையில் மயக்கமுண்டாகா. எப்போதும் துன்பற்றிருக்கும். இருப்பிடம் ஒழியாது. ஆதாயம் பெருகும். எம்முகத்தும் துன்பம ஒழியும். பாவமும் போரும் உண்டாகாது. போரில் வெற்றியுண்டாம. சுவர்க்கப்பேறு விரும்பினோர் சுவர்க்கம் பெறுவர். மணவிருப்போர் மணம் பெறுவர். (எனவே அன்போடு மிக்கதை கேட்கவேண்டும் என்பது கருத்து. அங்ஙனம் கேட்டு நம்பிக்கைவைத்தவர் சொன்ன சொற்றவறாது கடவுளுண்மை யெண்ணிச் சத்தியத்திற் கட்டுப்பட்டிருப்பர். அங்ஙனமாதலே யிப்பயன் கூறலின் கருத்து. இம்முடிபை மீமாஞ்சை அருத்தவாதாதி கரணத்துள்ளுங் காண்க.)

அதன்பின்னடந்த கதையைக் கேளும் வேதியனே. இராஜசூய யாகத்தில் உண்டாகிய கருமத்தவறினால் உலகத்தை அழிக்கவல்ல கூகை கொக்குகளின் பெரும்போரொன்று உண்டாயது.

மார்க்கண்டேய புராணம்.

என்று, தருமப்பறவை முனிவர் ஜைமினி முனிவர்க்கு மேற் கூறத்தொடங்கினர்.

எட்டாவதத்தியாயம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

ஒன்பதாவது அத்தியாயம்.

வசிட்ட விசுவாமித்திர யுத்தம்.

———(*)———

ஐய முனிவரே, அரசொழித்த அரிச்சந்திர மகாராஜன் சுவர்க்கம் புகுந்த பின்பு, நீருண்மூழ்கி யோகத்திருந்த பேரொளியுடைய இராஜபுரோகிதரான வசிட்டர் பன்னிரண்டியாண்டுங்கழித்து வெளிவந்து, விசுவாமித்திரர் செய்த கொடுமைகளனைத்தினையும், பெருங்குணமுடைய அரிச்சந்திரனுக்குண்டாகிய இடுக்கண்களையும், சண்டாளரோடுகூடி மனைவிமக்களை விற்றுத் தன்பமுற்றதையுங் கேட்டு, அரசனிடத்து மிகுந்த அன்பினையும் மானத்தையு முடைய வசிட்டர் பெருந்தவமுடைய ராதலின், அவ்விசுவாமித்திரமுனிவரை வெகுண்டு எண்ணத்தொடங்கினர்.

ஆவர்! அவ்விசுவாமித்திரன் என்மக்கள் நூற்றுவரைக்கொன்றான். அக்காலத்திலும் எனக்கிப்போதுண்டான கடுஞ்சினம் உண்டானதில்லை. ஏனெனில், அரிசசந்திரன் பெருங்குணமுடையன், மிக்க பொறுமையுடையன், தேவரையும் வேதியரையும் பூசிப்போன், வாய்மையேகூறுவோன், சாந்தவியற்கையுடையோன், பகைவரிடத்திலும் பகைமையில்லாதவன், குற்றமென்பதறியாதவன், கருத்துடனே நடப்பவன், சோர்வற்றவன், முற்றும் என்னையே சார்பாகவுடையவன், அப்படிப்பட்டவன் இக்கொடியனான விசுவாமித்திரனால் மனைவி மக்களோடு மிகக்கீழ்நிலைமையிற் றள்ளுண்டானே! அரசினின்று நீக்கப்பட்டான், பலவகையாலும் வருத்தப்பட்டான், கெடுக்கப்பட்டான் என்று நொந்து, இங்ஙனம் ஆதலால் அறிவுடை

யோர் ஒழுகுநெறியைத் தடுக்கும்பிரமவிரோதமுடைய துரான்மாவாகிய இவ்விசுவாமித்திரன் என்சாபத்தால் மொத்துண்டு அறிவிழந்து மூடனாய்க் கொக்கென்னும் கொடும்பறவையாகக்கடவன் என்றார்.

அதுகேட்டு, மிகுமொளிபெற்ற விசுவாமித்திரமுனியும் ஓய்! வசிட்டரே! நீரும் கூகையாகுகவென்று மறுசாபமிட்டார். இவ்வாறு அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் சபித்துக்கொண்டதனால், திரியக்காகிய பறவைகளாய் ஆற்றலும் வீரமுமுண்டாய் விரைவில் போர்செய்யத் தொடங்கினர். கூகையானது இரண்டாயிரங் காத உயரவளவுடையதாயது. கொக்கு மூவாயிரத்துத் தொண்ணூற்றாறு காதவுயரமுள்ளதாயிற்று. மேலாயவலிவுடைய அவ்விரு பறவையும் இறகுகளினால் ஒன்றினையொன்று அடித்தன் முதலியவற்றால் உலகத்துயிர்களுக்கு மிகுபயத்தினை விளைவித்தன. இறகுகளை விரித்து கண் சிவப்பச்சென்று கொக்கு கூகையையறைந்தது. அப்போதக்கூகை கழுத்தினை நீட்டிக் கொக்கினைக்காலினாற் புடைத்தது. அவற்றிறகின் காற்றினால் மலைபுரண்டு வீழ்ந்தன. அதனால் தரைநடுங்கிற்று. அந்நடுக்கத்தால் கடல்கொதித்தது. சாய்ந்த பக்கத்துப்பள்ளங்களில நீர் குத்திச் சென்றது. மலைபுரளுதலாற் சிலரும், தரைநடுக்கத்தாற் சிலரும், கடலின் கொதிப்பினாற் சிலருமாக மக்கள் பலர்பட்டனர். இங்ஙன முலகமுழுவதும் பாழ்படுத்தப்பட்டு, அச்சமடைந்து, வாய்விட்டரற்றி, அந்தோ மைந்த, அச்சோ ஐய, அக்கோ அம்மே, அந்தோ அன்னே, மலைவீழ்கிறதே, என்செய்வோம், என்செய்வோம் வாருங்கள். ஓடுங்கள். என்று இரைந்து கூக்குரலிட்டிருக்கையில், தேவர்களோடு மூவரிலொருவராய் பிரமதேவன்வந்து கோலத்தோடுங்கூடிய அப்பறவைகளை நோக்கி, நீவிர்போரொழித்துச் சுகமாக விருக்கக்கடவீரென்றார். அவ்வியக்த தத்துவத்தினின்றும் பிறந்த அப்பிரமன் மொழியைக்கேட்டும் ஒழியாத வெகுளியோடும் சினத்தோடும் கண்சிவப்ப அப்பறவை யிரண்டும் போர்செய்திருந்தவே யொழிய நின்றனவல்ல. பின்னரந்தப் பிரமதேவன், உலகமழிவதைப் பார்த்து, அவ்விருவர்க்கும் நன்மைசெய்ய விரும்பி, அவர்களது பறவைப் பிறவியை யொழித்துவிட்டனர். அதன்பின் அவ்விருவரும் தம்பழய உடம்பினையுடையராய் நின்றார்கள். அப்போது பிரமன், அவர்களைநோக்கி, உங்கள் தாமசவெண்ணம் ஒழிக்கப்பட்டது. இ

மைந்த, வசிட்ட, கோபத்தை யொழிச, ஓ, விசுவாமித்திர, நீயும் சாந்தமுறுக. "சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லியினமென்னு, மேமப்புணையைச்சுடும்" தாமசகுணத்தினால் நீவிரிருவரும போர் செய்தீர்களே அதுநுங்கள் பிழையன்று. அரிச்சந்திரமகாராஜன் செய்த இராஜசூயயாகத்தில் சிலகருமங்கள் கெட்டுவிட்டதனால் சேர்ந்த பாவத்தினுடைய தீயபயன் இங்ஙனமாக வெளிப்பட்டு, உங்களுடையபோர் உலகுபாழாவதற்குக் காரணமாயிற்று. அந்தணனை வசிட்ட, இவ்விசுவாமித்திரமுனிவன், அவ்வரிச்சந்திர மகாராஜனுக்குத் தீங்கொன்றுஞ் செய்யவில்லை. சுவர்க்கப் பேற்றிற்குக் காரணனே யாதலின், உபகாரஞ் செய்தோரிடத்திற்று னுள்ளான். காமம், குரோதம் என்னும் தீக்குண மிரண்டும் தவத்திற் கிடையூறு விளைவித்து அநர்த்தத்தை யுண்டுபண்ணுகின்றன. ஆதலால், அவற்றை நீங்களொழித்து விடுங்கள். "தன்னைத்தான்காக்கிற சினங்காக்க காவாக்காற், றன்னையே கொல்லுஞ்சினம" மென்மையே யுண்டாம். பிரம சாதிப்பயனன்றோ மேலானது என்று பிரமதேவன் சொன்ன சொல்லினால் அவ்விருவரும் நாணமுற்று, எங்கள் பிழையினைப் பொறுத்தல் வேண்டுமெனபிரமதேவனை யிரந்து வேண்டிக்கொண்டு "நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற், பகையுமுளவோபிற" எனத்தம்முனிவரும் தழுவி நண்பிற் கலந்தனர். பின்னர் தேவரால் துதிக்கப்பட்ட பிரமன் தம்மிடஞ் சென்றனர். முனிவரிருவரும் தத்தமாச்சிரமஞ் சென்றனர். இக்கதை கொக்கின்போரையும் அரிச்சந்திரன் கதையையும் அன்புடன் படிப்போர் கேட்போர் பாவமொழியும். அவர்கள் தொழின்முயற்சி யென்று மிடையூறடையாவாம் என்று தருமபக்ஷி முனிவர் கூறினர்.

ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

உ

பத்தாவது அத்தியாயம்,

தந்தை புதல்வர் வினாவிடை.

ஜைமினி முனிவரானவர். ஓய், சிறந்த விருபிறப்பாளரே, யான் வினவுகின்றனவற்றிற்குத் தக்கவிடை கூறவேண்டும. அதாவது இப் பூதங்கள் எங்கு தோற்றும், எங்கு ஒடுங்கும், உயிர்கள் எவ்வாறு

தோன்றும் எவ்வாறு வளரும்; உறுப்புகளினால் நெருக்கிப் பிழியப் பட்டு வயிற்றினுள் எவ்வாறிருக்கும், வெளியில் வந்து எவ்வாறு வளரும், இறக்கும்பொழுது அறிவினால் எவ்வாறுவிடப்படும்; இறந்தவன் புண்ணியபாவப்பயன்களை எங்கிருந்தனுபவிக்கின்றான், அவ்வுயிரைக் கண்டவனுக்குப் பயனென்னை, தாய்வயிற்றினுள்ளிடப் பட்ட எவ்வகைப் பண்டங்களும் செரித்தொழிந்துபோகவும் இச்சிறுத்த மாமிசபிண்டம் எவ்வாறு செரியாதிருக்கும், இவ்விடயத்தில் உலகத்துள்ளார் யாதொன்றும் உணராசவராயிருக்கின்றனர். ஆகலால் இவ்விரகசியத்தின் உட்பொருளைச்சந்தேகமற எனக்குக்கூறல் வேண்டும் என்றார்.

அசற்கவர்கள், இவ்வினாவாகிய வொப்பற்ற பெரும்பாரம் எம்மேற் சுமத்தப்பட்டனவே, இவை பூதங்களின் தோற்ற வொடுக்கங்களைப்பற்றியவாகலின் எவர்க்கும் இவ்வாறிருக்குமென மதிப்பதற்கரியவாயுள்ளன. ஒரு சந்தையானவனைக்கு அவன் மகனாலுணர்த்தப்பட்ட செய்தியொன்று பெரியோய், கேட்டிடுக.

முன்னாளில், பிருகுமுனிவன் சந்ததியிற் பிறந்த சுமதி என்னும் பெரிய அறவடிவனை வேதியன் ஒருவனிருந்தான். அவன் உபநயனஞ்செய்யப்பட்டு, சாந்த நடையனைச் சடப்போலிருக்க நோக்கிப் பேறறிவினையுடைய அவன் பிதா சொல்லத் தொடங்கினர். ஓ! சுமதி! வேதங்களை முதற்றொடங்கி முறையே யோதுக.

"இம்மைபயக் குமாலீயக்குறைவின்றால்
றம்மைவிளக்குமாற் றாமுளராக் கேடின்றால்
எம்மையுலகத்தும் யாங்காணேங் கல்விபோல்
மம்மரறுக்கு மருந்து."

பலியன்னமெடுத்துப் புசித்து ஆசிரியன் பணிவிடையைப்புரிக. "எத்திறத்தாசானுவக்குமத்திற, மறத்திற்றிரியாப் படர்ச்சிவழிபாடே." பின்பு இல்லற தருமத்தையடைந்து "தென்புலத்தார்தெய்வம் விருந்தொக்கறொனென்றாங், கைம்புலத்தாறோம்பறலை" ஆதலால் சிறந்த வேள்விகளைச்செய்து "பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்தமக்கட்பேறல்லபிற" ஆகலின் நல்ல புதல்வரைப்பெறுக. அதன் மேல் வானப்பிரத்தனாகுக. என்னை,

"மக்களொடு மகிழ்ந்து மனையறங்காத்து
மிக்ககாமவேட்கை தீர்ந்துழித்
தலைவனுந்தலைவியுந் தம்பதிநீங்கித்
தொலைவில்சுற்றமொடுதுறவறங்காப்ப"

என்பவாகலின் அப்பால் மேற்கொண்ட சமுசாரத்தை யொழித்துச் சந்நியாசியாச்சிரமத்தை அடைக. "பற்றற்றகண்ணே பிறப்பறுக்கு மற்று நிலையாமை காணப்படும்." என்பது முதுமொழியன்றோ, இங்ஙனஞ்செய்தால், எதனையடைந்தவன் துன்பமடையானோ அப்படிப்பட்ட பிரமத்தினையடைவாய் என, அங்ஙனம் விரித்துரைக்கக் கேட்ட அச்சிறுமைந்தன் சடனைப்போல் யாதோர்விடையுங் கூறுதிருக்கப் பிதா, மகன்பால்வைத்த நேயத்தால், அடுத்தடுத்து, நண்போடும், அன்போடும், இன்மொழியாக வினவிவந்தனர். அப்போதச்சிறுவன் நகைத்து, இங்ஙனம் கூறலாயினன்.

தந்தைக்குப் புதல்வன் கூறிய முற்பிறப்பின் செய்கை.

ஐயா! தேவரீரால் இப்போது உபதேசிக்கப்பட்ட விடயங்களெல்லாம், முன்னமே எண்ணிறந்த காலம் என்னால் அனுட்டிக்கப்பட்டவாயின. அவ்வாறே, எல்லநூல்களும் பலவேறுவகைப்பட்ட சிற்பவித்தைகளும் பதினாயிரம் பிறப்பில் பயின்றவாறு என்ஞாபகத்திற்கு வந்துள்ளன. இனி, "கற்றுரை யான்வேண்டேன் கற்பனவுமினியமையும்." அனுத்த துன்பங்களும் களிப்பும், இறப்பும், பிறப்பும், மைந்தரும், மனைவியும், சுற்றமும், உண்டாதலும், அழிதலும், அனேகமாக ஞாபகத்திற்கு வருகின்றன. அனேகந்தாயரும் தந்தையரும் பார்க்கப்பட்டனர். பல்லாயிரம் சுகதுக்கங்களை யனுபவித்தேன். எத்தனையோ சுற்றம், எத்தனையோமைந்தர் பிறந்தனர். மூத்திரபுரீடக்கேணியாகிய மாதர் கருவிற்கிடந்தேன். கொடிய கருநோயனைத்தினையும் ஆயிரமாயிரமாக அனுபவித்தேன். இளமை, வாலிபம், கௌமாரம், கிழத்தனமிவற்றுள் அனுபவித்ததுன்பங்களனைத்தினையும், இப்போது ஞாபகஞ்செய்து கொள்ளுகின்றேன். பிரமக்ஷத்திரிய வைசிய சூத்திரசாதிகளிலும், செல்வர் மனையினும் ஏழையர் இல்லத்திலும், வீரரிடத்திலும் பிறந்தேன். "புல்லாகிப் பூடா

ய்ப் புழுவாய் மரமாகிப், பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக், கல்லாய் மனிதராய்ப் பேயாய்க்கணங்களாய், வல்லசுரராகி முனிவராய்த்தேவராய்ச், செல்லாய நின்றவித்தாவரசங்கமத்து, ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்.'' அவ்வாறே உமதுமனையிலும் பிறந்தவனேன். சேவகன், அடிமையென அனேகர்க்கு அடங்கிக்கிடந்தேன். தலைவனும் பெருஞ்செல்வனுமாகவு மிருந்தேன். வறியனும் உடையனுமாயு மிருந்தேன். கொன்றேன். கொல்லப்பட்டேன். கொல்வித்தேன். கொல்விக்கப்பட்டேன். கொடுத்தேன், பலவாகக் கொடுக்கபபட்டேன். தாய்தந்தை மனைவிமக்கள் சுற்றமுதலியோர்க்கு வேண்டுவன கொடுத்தேன். களிப்பாற்களித்தேன், துயராற்றுயர்ந்தேன். அந்தோ! ஐயா! இடர்ப்பிழம்பான இப்படிப்பட்ட சமுசார சக்கரத்திலுழலும் நான் வீட்டுக்கு ஏதுவாகிய இவ்வறிவை யிப்போதடைந்தேன். ஆதலால், மூன்றுவேதத்தினுமுள்ள எல்லாமந்தணமும் அறியலாயிற்று. பயனற்ற விக்கருமநெறிக்கவந்திபோர்வை இனி யொத்ததன்று. ஆதலால், ஞானம்பிறந்தவனுக்கு வேதத்தாலென்ன பயனுள்ளது. குரவனருளாற் பெறப்பட்ட அறிவினால்நிறைந்த வுள்ளம் பெற்ற எனக்கு எந்த ஆசையுமில்லை, ஆன்மசொரூபனாகவே யிருக்கின்றேன். அறிவனாகவே யிருக்கின்றேன். அறுவகையான கருமங்களின் துன்பவின்பத் தன்மைகள் சாத்துவிக இராஜச தாமசமாயவா குணங்கள் இல்லாத பரமபதமான பிரமத்தை யடைகின்றேன். காமம், குரோதம், உலோபம், அறியாமை, பகை, ஆங்காரத்தோடு கூடியகளிப்பு, பொய் முதலிய தீக்குணக்கயிற்றாற் பின்னப்பட்டவலை, பலவகைப்பட்ட சிறுபற்றுக்களாகிய பாசத்தோடு கூடி, மனிதராகிய மிருகங்களை அகப்படுத்துக்கட்டி விடுகின்றன. அதனாலுண்டாய துன்பங்கள் ஒருபெரிய சந்ததியாக வளர்கின்றன. ஆதலின், ஐயா! இதனை நான் விட்டொழிகின்றேன். மூன்று வேதத்தினுமுள்ள தருமம், அதருமத்தானே நிரம்பியுள்ளன. "உலகச் சமயங்களோவ்வாத சாத்திரமாஞ், சவலைக்கடலுளனாய்க் கிடந்து தடுமாறுங், கீவலைகெடுத்துக் கழலிணைக டந்தருளுஞ், செயலைப்பரவிராந்தெள்ளேணங் கொட்டாமோ,'' என்பது மந்திரமொழி முருக்கம் பூப்போலும் இருக்கின்றது. முருக்கம் பூபார்வை யொன்றற்கே செம்மையதன்றி அனுபவிப்பதற்கு மணமும் சுவையுமில்லாதவாறு. (கருமநெறியும் அங்ஙனமுள்ளதென்பது கருத்து.)

என்று அச்சிறுவன் சொன்ன சொல்லைக்கேட்டு, அவன்றந்தை களிப்பாலும் வியப்பாலும், உரையாடவசமின்றி நாக்குழறியிருந்து பெருந்தன்மையுடைய தம்மைந்தனைநோக்கிச் சொல்லுகின்றார். மைந்தா! என்னை பேசுகின்றாய், இவ்வளவறிவுனக்கெதனாலுண்டாயிற்று. இதுவரையில் சடனாயிருந்தனையே, இப்பொழுது சிறந்த அறிவுடையனாகின்றனையே, முனிவர் தேவர் முதலியோர் சாபத்தால் விகாரமாய்ப் பிறந்து, அவ்வுருவமொழிதலும் அறிவுதோற்றியவாறோ, உன்வரலாற்றினை முற்றுமறிதற்கு நான் மிகுந்த ஆவலுடையனாயினேன் அவற்றை முழுவதுங் கூறுதியென மைந்தன் கூறலாயினன்.

தந்தையே, எனது முற்பிறப்பின் வரலாறு கூறுகின்றேன் கேளும். யான் வேதியனாகப் பிறந்து சந்நியாசத்தினையடைந்து என்னறிவைப்பிரமத்திற் செலுத்தி, ஞானநூலாராய்ச்சியின் மேலான அசையா நிலையைப்பெற்றேன். எக்காலத்தும் யோகத்தாலொருங்கியிருத்தலாலும், சமாதி பழகுதலாலும், நல்லோரிணக்கத்தாலும், நல்லியற்கையாலும், விதிப்படி யாராய்ந்து சோதித்தலாலும் பிரமபோதமுடைய எனக்கு அப்பிரமத்தினிடத்தில் மிக்க அன்புண்டாயிற்று. பின்னர் மாணாக்கரது ஐயமொழித்தலின்வல்லனாய் ஆசிரியத்தன்மையடைந்தேன். அப்பால் நெடுநாள் கழிந்த மேலான தன்னந்தனியனாயினேன். ஒருவனேயாயிருத்தல், ஒரேமுகமாயிருத்தல், ஒரேமனமுடையனாயிருத்தல், முற்றுமொழித்தல், இரண்டாவதில்லாதிருத்தல், (மந்தனமாதல்.) முடிவில், அத்தசையால் வியப்பு அறியாமையாலீர்த்துச் செல்லப்பட்டு, நினைப்புமறந்து, கெடுநிலை யடைந்தேன். ஆயினும் இறந்ததுமுதல் பின்னிட்ட உணர்ச்சி எனக்கு மறந்ததில்லை. பதினாயிரம் காலமாக நடந்தபிறப்பினுருவெல்லாம் உணர்ச்சிக்கு வந்தன. முற்பிறப்பில் யான்செய்த பழக்கவலிமையாலிப்பொழுது நான்புலன்கடந்தவனாயுள்ளேன். "ஒருமைக்கட்டான் கற்றகல்வியொருவற்கு, எழுமையுமேமாப்புடைத்து." என்பதுண்மையன்றோ. ஐயா! இனி "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது, வேண்டாமைவேண்ட வரும்." ஆதலால், நான் என்றும் பிறவாதவனாதற்கு வேண்டுங்காரியஞ்செய்ய முயற்சிக்கண்ணிப்போதிருக்கின்றேன். இப்பொழுதெனக்குண்டாயிருக்கும் முற்பிறப்பின் ஞாபகமும், அறிவும் மாணாக்கருக்கு ஞானதானஞ்செய்தவற்றின் பயனுள்ளது. மூன்றுவேதத்துமுள்ள கருமகாண்டத்தை முற்று மடை

ந்தவர்க்கும் இது பெறலாம் பேறல்ல. நான் முன்னைய வாச்சிரமத்திருந்தே ஞானத்தினையாவியல்பினையடைந்திருந்தேன். இப்பொழுது தன்னந்தனிமை பெற்று, ஆன்மாவுக்கு முத்தியுண்டாம் வகையில் முயற்சிக்கின்றேன். சிறந்த தாதையே! உம்முடைய மனத்துள் ஐயப்பட்ட வெல்லாவற்றினையும் கேளும். இவ்வளவிலாயினும் உமக்குத் திருத்தியுண்டாகும்படிசெய்து உமது கடனைத் தீர்த்து விடுகின்றேன் என்றான்.

அதனைக்கேட்ட பிதாவானவர் "தம்மிற்றம்மக்களறிவுடைமை மாநிலத்து, மன்னுயிர்க்கெல்லா மினிது," என்பதால அம்மொழிகளை நம்பி, மகனைநோக்கக் கூறலாயினர்.

ஐய மைந்த! உன்னாற் கேள்வியுற்றதெல்லா மிச்சமுசாரப் பெருங்காட்டைப் பற்றியவே என.

உயிர்களின் பாவ புண்ணியங்களின் பயன்.

மைந்தனும், அப்பா! இப்பெரும்பாடு எத்தனையோவிசை யென்னால அனுபவிக்கப்பட்டது. இச்சுடும்பஞ் சகடக்காலினை யொத்தது. அதற்கு எப்பொழுதும் கிழத்தனமில்லை. நீரோ வேண்டிக் கட்டளையிட்டதனால் கூறுகின்றேன். இறக்குந் தருணமுதல் வேறொருவன் வந்து கொன்றதாகத் தேகத்தில அழலையெழுந்து, வேகத்தினையுடைய காற்றினால் மூண்டு, உடலைப்பற்றி இரகசிய விடங்களையெல்லாம் பேதித்து, விறகுளாதனையும் பற்றியெரிந்து, அஃதொழிந்தபி னடங்குந் தீப்போல அடங்குகின்றது. பின்னர் உதானன் என்னுங்காற்று மேலெழுந்து போகின்றது. உண்டசோறுந் தண்ணீரும் கீழ் நோக்கவொட்டாது தடைசெய்கின்றது. ஆதலால், யார், அன்னந் தண்ணீர் முதலிய தானங்களை மிகச்செய்திருக்கின்றார்களோ அவர்கள் அத்தான வலிமையால் அப்போது திருத்தியடையும்படி நேரிடுகின்றது. அன்னதானஞ் செய்யாதிருந்தாலும், விடாய்ப்பற்றேனும் அப்போதும் யார் பொய்கூறுவதில்லையோ அவரும், நட்பினரைப்பிரிவு காணாதிருந்தவரும், ஆஸ்திகரும், (கடவுள், மேலுலகம், தருமம், சாத்திர வளவை, உண்டென நம்பி நடப்போன்.) சுகமாக மரணத்தினை யுடையவர். யார் தேவர்களையும் வேதியரையும

பூசிப்பதில் அன்புடையரா யிருப்பாரோ, அழுக்காறில்லாதவரோ, ஆற்றலுடையாரோ, உதாரகுண முடையாரோ, நாணமுடையரோ அப்படிப்பட்டவர்கள் சுகமான மரணமுடையவர்களாவார்கள், யார் காமத்தாலாயினும், ஆத்திரத்தாலாயினும், பகையாலாயினும் தருமத்தை விட்டுவிடானோ, பெரியர் விதித்தபடி எத்தொழிலினையுஞ் செய்யவல்லவனோ, கொடுமையில்லாதானோ அவன் வருத்த மிளைப்பில்லாத மரணத்தையடைவன். சாங்கால நேரும்போது, மனைகொளுத்தினவனுக்கு உடம் பெரிச்சலுண்டாம், சோறிடாதானுக்குப் பசி நோயுண்டாம். பொன்னைத்தானஞ் செய்தவனுக்குக் குளிருண்டாகாது. நீரைத்தானஞ் செய்தவன் தாகத்தை வெல்லுவான். யாவர் மனத்தினையு நோகச்செய்யாதவன் கடுநோயான மரணயாதனையை வெற்றிகொள்வன். "தீப்பாலதான் பிறர்கட் செய்யற்க நோய்ப்பால தன்னையடல் வேண்டாதான்." ஞானத்தை உபதேசித்தவன் மோகத்தை யறுப்பன். "தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின், றன்னெஞ்சேதன்னைச் சுடும்." என்பதனால் கூட்டசாக்ஷியும், பொய்யும் கூறுவோனும், கெடுதியான வற்றைப்பிறருக்கு வலிந்து போதிப்போனும், வேதத்தைப் பழுதுகூறுவோனுமாகிய விவரனைவரும் மரணகாலத்தில் மயக்கத்தோடொழிலர். மிக அச்சஞ்செய்பவராயும் தீநாற்றமுடையராயும், பெருந்தடிகொண்டு கூட்டங்கூட்டமாய் வருபவராயும், இரக்கமற்ற நெஞ்சுடையவராயுமுள்ள யமபடர்கள் அந்தச்சமயத்துள் வருகின்றனர். அவர்களைப் பார்த்தவளவிலே அங்கு சாகின்றவனுக்கு உடம்பு நடுங்குகின்றது; அழுகின்றான், உடன்பிறந்தவரையும், தாயையும், மைந்தரையு மற்றவரையும் அழைக்கின்றான் சொற்களோ தெளிவுற்றனில்லை. எழுத்துக்கள் நன்றாகப் புலப்படுவதில்லை. விழிசுழல மிடுகின்றது. பயத்தோடு உயிர் விடுதலினால் முகம் சோடைப்படுகின்றது. உயிர்மேலெழுதல் கண்டஞ்சடைதல், துன்பம், நோய், இவற்றால் நிரம்புற்று அவ்வுடம்பினை விடுகின்றான். காற்றினாற்றரப்பட்ட வடிவினையுடைய வேறியாக்கையைப்பெறுகின்றான். அவ்வுடல் கருமதுக்கங்களை யனுபவிக்கத்தானே தோன்றியதே யன்றி, தாய்தந்தையராற் பிறந்த தொன்றன்று. அதன் அளவு வயது, அவயவங்களினிருப்பு, இவையெல்லா முன்னையதேகத்தி லெவ்வாறோ அவ்வாறாம். பின்னர்யமபடர் கொடியபாசத்தாற் கட்டித்தடியாலடிக்க, இவனழுது கொண்டிருக்கையில் தென்முகமாக இழுத்துச் செல்கின்றனர், அவ்வழியோ, மிகு முருடாகிய அரிதாளினு

லும், பெருமுட்களாலும், முளிகளாலும், புற்றுக்களாலும், கற்கள் முதலியவற்றாலும் நடத்தற்கரிய கடினமாகவேயுள்ளது. அவ்வாறே எரிநெருப்போடுங் கூடியது. சில விடங்கள் அப்பிரகக்கற்கள் மிகுதியுமுள்ளதாய் உச்சிப்போதைய சூரியன்கதிர்களால் மிகக்கொளுத்தப்பட்டுள்ளது. சில விடங்களில் நரிகள் ஊளையிட்டிருக்கும். இப்படிப்பட்ட கடுஞ்சுரத்திலே, பலநூறு நரிகள் சூழ்ந்து பறித்துத்தின்னப்பயங்கரமான காலதூதுவரா லீர்க்கப்பட்டுப் பாவகருமஞ்செய்த பிராணி இயமலோகம் புகுவன். குடை, செருப்பு முதலியதானஞ் செய்தவரும், மனை யில்லமுதலியதானஞ் செய்தவரும் நன்மார்க்கத்திற் சுகமாகச் செல்கின்றனர். பிணம்பட்ட ஆன்மா பாவத்தா னெருக்கப்பட்டவனாய்த் துன்பங்களை யனுபவித்துக் கொண்டே பன்னிருநாளில் யமபுரம் புகுவிக்கப்படுகின்றான். (மனிதருக்கொரு மாசகாலம் பிதிருக்கு ஒருநாள்.) தேகம்பற்றி யெரிகையில் பேரெரிவும் தாகமும் பிறக்கின்றன. அவ்வுயிர் தன்னுடம்பைப் பிடுங்கித்தின்றாய், பனுவர்புகளை முறித்தும், மிகுகுளிர் பனிநீரிற் றோய்த்தெடுக்கவும் விடாத துன்பத்தையே யனுபவித்துக் கிடக்கும். தான் செய்துகொண்ட வினைத்திட்பத்தினால் (செய்ததொழில் கெட்டுமாறுக வொளிபடிதல். வினைத்திட்ப மெனப்படும்.) "தம்பொரு ளென்பதம்மக்களவர்பொரு, டந்தம் வினையான்வரும்," என்பதற்கு அவன் மற்றொருமெய்யினை யடைந்தானாயினும் முன்னைய பிறப்பின்கண் வாய்ந்த சுற்றத்தினர், அவனுக்குச் செய்த எள்ளுந் தண்ணீருமாகிய இவற்றினாலும், பிண்டதானத்தினாலும், யமபுரஞ் செலுத்தப்படும் உயிர் திருத்தியை யடையும். இறந்தாரைநோக்கி, யிங்கு செய்வித்த என்னையபுழுக்காலும் வேதியர், சற்றமிவர்களை யுண்பிக்களாலும் திருத்திபெறும். இறந்தோனைக்குறித்து, இவ்வுலகத்தில் அவன் சுற்றத்தினர், தக்கவேதியர்க்குத் தானமுதலிய செய்தால் அவ்விறந்தவனுக்கு இனிமையுண்டாம். சுற்றத்தினர் இங்குநிலத்திற் கிடந்தால் அவன், அங்கிருந்து துயரமடையான். பிணத்தைக் கொண்டுபோகையில் தன்னுடம்பைத் தானறியாது. ஆனால் பிண்டத்தினையும் எள்ளுந் தண்ணீரையுமாத்திரம் அனுபவிக்கின்றது. (பிணமென்றது இவ்விடத்து இறந்தவுயிரெனக் கொள்க.) பன்னிருநாளுங் கழிந்தபின்பு அவனுக்கு இயமன் றரிசன மாகின்றது.

இயமன் சொரூபம்.

எழுவைப் போன்று, அச்சந்தருமுருவமுடைய இயமனிடத்து ஈர்த்துச் செல்லப்பட்டவுயிர், சிவந்தகண்ணினையும், மைக்குழம்பினை யொத்த காந்தியையுங்கொண்டிருந்து, மிருத்தியு, காலன், அந்தகன் இவர்கள் நடுவே, கோரைப்பல்லோடுகூடிய பேழ்வாயையும் சுழல் விழியோடு கொடும்பார்வையையும் பெற்று, பலவகைப்பட்ட விகார முடைய குரூரத்தவடிவத்து, நோய்த்தெய்வங்களோடுங்கூடித் தண்டிப் பதிற்றுனே விருப்பமும், பாசந்தாங்கிய கையும் பெருத்ததோள்க ளும் நடுக்கஞ்செய்யத்தக்க பெருத்த வடிவமுமுடைய அந்த இயம னைப் பார்க்கின்றான்.

இரௌரவ நரகம்.

பின்னர், அந்த இயமனால் அவ்வுயிர் புண்ணியபாவ நிலைமைகள் விசாரிக்கப்பட்டவுடனே, விதித்த கதியைப் பெறுகின்றது.

கூடசாக்ஷி யானவனும், பொய்பேசினவனும், இரௌரவ மென்னும் நரகத்தினையடைகின்றான்.

அந்த இரௌரவத்தின் வடிவங்கூறுகின்றேன் கேளும். இரண் டாயிர யோசனை விசாலமுடையது அந்நரகம். ஆழமோ, முழங்கா லளவிற்று. கடத்தலாகாதது. அதனுண்ணிரம்பி நெருப்பிராசியுள் ளன. செம்புமயமான நிலங்கொளுத்தப்பட்டு மிகுமழலாயுள்ளது. இயமன் றூதுவர் பாவியை அதனுட்புகுவிப்பர். அவன் அவ்வெப்ப த்தினை யாற்றாது ஓடியோடிக்கால்வெந்து பரிதபிப்பன். அவனை யொவ்வொருபகல் ஒவ்வோ ரிரவுகழிந்தபின் அந்நரகத்தினின்றும் சிறுபொழுதெடுத்து வெறுநிலத்து விட்டாற்றுவிப்பர். (அங்ஙன மில்லையேல் நாளைக்கொருகா லொவ்வோரடியெடுத்து வைப்பது மாம்.) இங்ஙனம் அந்த ஆயிரங்காதமும் நடந்தால் பின்னர் அவன் அந்த நரகத்தினின்றும் விடப்படுவன். அதன்பின்னர் மற்றபாவங்க ளொழியுநிமித்தம் அப்படியேவேறொரு நரகத்தை யடைகிறான். அவ் வாறு எல்லா நரகத்தினின்றும் வெளியபட்டுவந்த பாவியானவன் பின்பு விலங்கின்பிறப்பினை யடைகின்றான். புழுக்கள், தேண்முத லிய கீடங்கள், கொசுமுதலிய பதங்கங்கள், மரமுதலிய தாவரங்கள், ஏனைய இயங்குதிணை யுயிர்களாகிய யானை, குதிரை, நாய், முதலிய

பலவகைப்பட்ட துன்பயோனிகளாகப் பிறப்பன். முடிவில் மானிட யோனியை யடைந்தாலும், மிகக்குள்ளன், கொடியன், அவயவங்கள் குன்றினவனுமாவன். சண்டாளன் புற்கசன் முதலிய பலவிதப்பும் பிறப்பன். பின்மிக்கிருந்த புண்ணியபாவச் சேடங்களோடுகூடி. உயரத்தொடங்குகையில் முறையேசூத்திரன், வசியன், க்ஷத்திரியன், வேதியன், தேவன், இந்திரனாகவும் உயர்நிலைமை பெறுவன். ஒரு வேளை பாவமே யதிகப்படின் கீழ்ப்போம் வழியில் விழுந்த பாவியர் நரகங்களில் முன்போலவே விழுவர்.

புண்ணியசீலர் எவ்வாறு உயர்நிலை யெய்வதுவென்னிற் கேட்பீராக. விரைவில் விமானமேறி சிறந்த சந்தனம், பூ, அணி தரித்து இயமனாற்காட்டப்பட்ட புண்ணியகதிக்குச் செல்கின்றனர். அருமையான ஆடல்பாடல் வல்லவரும், பொன்னணிபுனைந்த பூங்கொம்பு ஒத்தவருமாகிய சூரரமாதர் பணிகேட்ப, முன்னுள தனது இளமைத் தேகத்தினையடைந்து, போகத்தை யனுபவிக்கத்தக்க தேவர் பொன்னுலகையேனும், தான்வேண்டிய தொன்றையேதேனு மடைவர். அவர் மனத்தில் விஷ்ணுவுலகம், சிவனுலகம், பிரமனுலகம், மற்றைய வுலகமிவற்றுளதைவிரும்பு வாராயினும் பெறுவர். ஆனால், தாம்செய்த புண்ணியத்திற்குத்தக்க வுலகமெதுவோ அதுவே கிடைக்கும். அதற்குத்தக்க சுகமே அனுபவிப்பர். நல்லவலங்காரத்தோடும் விமானமேறித் திரிவர். புண்ணியம் முடிந்து அங்கிருந்து வழுவிக் கீழ்விருந்தவர்கள், அரசர்மனையிலேனும், நல்லோர் மனையிலேனும், நோய்த் துன்பமற்றவர் மனைகளிலேனும் பிறந்து, நல்லொழுக்கத்தினை யோம்பி, சிறந்த வின்பப்பயனைத் துய்த்து, புண்ணியத்தினை யீட்டிப் பின்னுஞ் சிறந்த மேலாங் கதியினையே பெறுவர். அக்காலத்தில் சிறிது பாவமே அதிகப்படின் மேற்கூறியபடி கீழ்நிலைமைக்கே போவர். இங்கு உயிர்கள் துன்ப நிலைமையைப் பெறும்வகை யனைத்தும், சொல்லப்பட்டவாறாயிற்று. உயிர் எவ்வாறு கருவை யடையுமோ அதனை அந்தணோத்தமரே! கேளும்.

பத்தாவதுமகன் தன்முன்வரலாற்றினைத் தந்தைக்குக் கூறிய அத்தியாயம் முற்றிற்று.

பதினோராவது
பிண்டோற்பத்தியுரைத்த அத்தியாயம்.

சனனமரண சமுசார துக்கம்.

ஐய! கேளும். உயிர் நரகத்திருந்தாயினும், சுவர்க்கத் திருந்தாயினும், வெளிப்பட்டவுடனே, புருடதேகம் சேர்ந்து, சுக்கிலவடிவாய்ப் பெண்ணுடம்பை யுற்று, இரஜசுவிற் கலந்து உந்தியின் கீழ்க்கிழங்கில் (கருப்பையுள்) அந்த பெண்ணாண் வித்திரண்டுங் கலந்து நின்று, தளதளவென்றசைந்தாடி நீர்க்குமிழி போலெழுந்து, பேசியுருவமடைந்து, (பேசி-முளை வெளிப்படாதும் வித்தாகாது மிருப்பது.) வித்திலிருந்து முளை வெளிப்பட்டது போலும் அந்தமாமிச பிண்டத்தினின்றும் ஐந்தங்கங்கள் முறையே பிறக்கின்றன. (தலை, மார்பு, கை, வயிறு, கால்) அவற்றுனின்றும் உபாங்கங்களான விரல், கண், மூக்கு, வாய், காது பிறக்கின்றன. அதனுள் நகம் முதலியன பிறக்கின்றன. அப்பால், புரை, தோல், சிறு உரோமங்கள், பின்னர்ப் பெருமயிர்கள் பிறக்கின்றன. தேங்காய், தன்மட்டையோ டெவ்வாறுள்ளேதானே பெருத்துக் கொண்டு வருமோ அப்படி, கருப்பையினுள்ள பிண்டம் மேற்பக்க முகமுடையதாய்த் தசைப்பெருக்கத்தையடைகின்றது. இருமுழந்தாளினுள்ளே யிருகையும் வைத்துக் கொண்டு வளர்கின்றது. இருமுழந்தாளின்மேல்பா லிருகை வைத்திருத்தலு முண்டு. காலை நீட்டி இருகைப் பெருவிரலையும் முழந்தாள் மேல் வைத்து, மற்றைகால் விரலால் அம்முழந்தா ளடிப்பங்கைப் பற்றி யிருத்தலும், முழந்தாளின் கீழ்ப் பக்கத்தில் கைப்பெருவிரல் வைத்து மற்றைய விரல்களை மேற்பக்கஞ் சாயவைத்து, பார்வையை முழங்காற் பின்பாகத்து நிறுத்திவைத்திருத்தலும, முழங்காலை மடித்து மூக்கினை யிருமுழந்தாளோடு விருத்திக்கைகளை நடுவே நெருக்கி வைத்திருத்தலும், அங்ஙனம் கை காலாக முகம் மேல் நிமிர்ந்திருத்தலும் உண்டு. இடையினிரண்டு பக்கங்களிலும் முன்றொன்றும் கோவை எலும்புகளாகிய சாகினியும் முழந்தாளோட்டு எலும்பும், தோள்களின் பூட்டெலும்பும் மாத்திரம் வெளிக்காணும்; பிறவெல்லாம் முடங்கிக் கிடக்கும். இங்ஙனம், பெண் கருவிலிருக்கும் சிசு

முறையே வளர்கின்றது. ஏனைய யோனியுயிர்களின் கருப்பத்துள்ளிருக்கும் உயிர்கள் அவ்வவ்யோனி நிலைமையையும் வடிவினையும் ஒத்திருக்கும். அம்மிருதுவாகிய பிண்டம் சடராக்கினியின் சூட்டினால் வன்மைப் பட்டுக்கொண்டே வரும். தாயுண்ட அன்னந்தண்ணீரால், தான் சிசு சீவிக்கின்றது. புண்ணியான்மாவிற்குக் கருவிற் சுக நிலைமையும், பாபான்மாவிற்குத் துன்ப நிலைமையுமாம். (ஆப்பியாயனி) திருத்தி செய்வது என்னும் பெயரையுடைய நாடி அக்குழவியினது உந்தியிற் கட்டுண்டு, அப்பெண்ணின் வயிற்றிலுள்ள அன்னப்பெருக்குடலின் புழையுள்சேர்க்கப் பட்டிருக்கும். அவள் புசித்த வுணவுநீர் அந்நாடிவழியாக அச்சிசுவின் உடலிற்புகுந்து வளரச்செய்யும்.

கருவுள்ளிருக்கும் சிசுவுக்கு முன்னைப் பிறப்பின் செய்கை முற்றும் ஞாபகத்திற்கு வரும். அதனால வைராகத்தை யடைந்து, கருப்பப் பீடைகளனைத்தினையும் அனுபவித்து, இம்முறை இக்கருப்பையை விட்டகன்றால், மறுபடியும் இங்ஙனமாகப் புரியேன். இனியிங்கு வாராவழி தேடுவேன் என்றுபலபிறவித்துயரையும் நினைத்துநினைத்து "மாய்வ தன்முன்னே வகைப்பட்ட நல்வினையை, ஆய்வின்றிச் செய்யாதார் பின்னைவழி நினைந்து, நோய்காண் பொழுதின்றஞ் செய்வார்க் காணுமை, நாய்காணிற் கற்காணுவாறு." என்றவாறே துயரப்பட்டுக் கொண்டிருக்கும்.

இங்ஙன மிருக்கையில் முறையே ஒன்பதாவது திங்களிலாயினும் பத்தாவது திங்களிலாயினும் பெருங் குடலோடு பற்றுண்டு கிடக்கும் நாடி முனையற்று விடுபட்ட வுடனே மேனோக்கி யிருந்த சிசு கீழ்முகமாகத் திரும்பிக் கொள்ளும் அதுதான் தாய்க்குப் பிரசவவேதனை யென்று சொல்லப்படும் (சில வுயிர்கள் அருமையாகக் கால் கீழாகவும் பிறத்தலுண்டு.) தெய்வச்செயல்-அதிர்ஷ்ட முயற்சியால், பிரஜாபதி-பிரமாவைத் தெய்வமாகவுடைய வாயுவினால் (இதனைப் பிரசூதி வாயுவெனவுங் கூறுவர்.) அறையுண்டு, தள்ளப்பட்டு ஈர்த்துச் செல்ல, அழுது துயரமுற்று, வயிற்றினைவிட்டு வெளிவருங் காலத்து, பொறுக்கக் கூடாத மிகுந்த இளைப்பை யடைந்துவெளிப்படும். (அதுவே பிறப்பென்று சொல்லப்படும்.)

இங்ஙனம் பிறந்த சேய்க்கு வெளிக்காற்றுப்பட்டவுடனே கலை தெரிந்து அறிவு வருகின்றது. உடனே மோகினி என்னும் பெய

டையுடைய விஷ்ணு மாயைவந்து மூடலும், முன்னிருந்த அப்பிறப்பின ஞானமுதலிய வெல்லாம் மறந்துபோம். பின் னிவ்வுலகஞாபகமுமின்றி பாலவறிவை யடையும். பின்னர் வளர்ந்து கௌமாரப் பருவத்தையும், யௌவனப் பருவத்தையும், அப்பால் விருத்தப்பருவத்தையும் அடைந்து, செத்து, அவ்வாறே மீட்டும்பிறப்பன். இவ்வண்ணம் குயவனது மட்கலத்திகிரியேபோலச் சமுசாரத்துள் கரகரவென் றுழல்வன். இறந்தாலோ வொருபோதுசுவர்க்கமும் புகுவன் ஒருபோது நரகமும் புகுவன், இதுவன்றிச்சுவர்க்க நரகமிரண்டினையும் ஒப்பவுந் துய்ப்பன். அஃதன்றி, இறந்தவனுடனே யிவ்வுலகத்திற் பிறந்து தான் தேடியகருமப்பயனை நுகர்தலுமுண்டு. ஒருக்கால் செய்த வினைப்பயனையெல்லாமிங்குத்தானே யுண்டுவிட்டுச் சிறிதினுக்கே வேறுலகத்தையடைதலுமாம்; மற்றொருக்கால் அக்கருமப்பயன் முழுவதையும் மேலுலகத்தே யனுபவித்துச் சேடமாயுள்ள சில தீமை நன்மையாகிய வினையோடு இங்குவந்து பிறத்தலுமாம். நரகத்துள்ளே பெருந்துன்பமும், சுவர்க்கத்துள்ளே பேரின்பமும் உண்டு. சுவர்க்கத்துள் ஒளிசெய்திருப்பவரும், நரகத்துள் வீழ்த்தப்பட்டவர்களும் உளர்.

ஐயா! இனி சுவர்க்கத்துட்டான் என்னை துன்பமில்லையோ! மேலேறினவன் நான் எப்போது விழுந்துவிடுவேனோ வென்னும் பயம் விழுங்குண்டு கிடப்பன். நரகத்துள் வீழ்ந்து நோயுறுபவனைப் பார்த்து, எமக்கும் இந்நிலைமை வாராமே, என்னும்பெரிய ஏக்கம் மனத்துள்ளே பாய்ந்துகிடக்கும். ஆதலின், இவ்வினையுயிர்கட்கு எங்கும் கவலையொழியவில்லை. தாய்வயிற்றுறுந்துன்போ பெரிது. பின் யோனி நெருக்கத்து வெளிப்படுந்துயரோ, சீச்சீ கெட்டது. அப்பால், இளமையும் முதுமையும் தன் வசமற்றுப் பிறர் வசப்பட்டது ஓகோ! அறப்பெரிது. அது கிடக்க, டூனிக்காமம், குரோதம், பொறாமை முதலிய துற்குணங்களா லீர்த்துத்தின்னப்பட்ட யௌவனப் பருவமோ, தாங்கலாற்றாத கட்டமானது; அம்முதிர்தலோ, துன்பமயமே யாய்விட்டது: இவையிப்படியாக, மரணமென்பதோ, மரணமென்பதோ, அப்பா! எவற்றினும்மேலாய துன்பப்பெருங்கடல், இறந்தவுடனே! இயமன்றூதுவர் ஈர்த்திழுத்து அலைக்கு மிடத்து அல்லலென்பது ஒருவாயா, மீட்டும் கருக்குழியில் வீழ்வதும், பிறப்பதும்,

சாவதும், நரகம் புகுவதுமாகச்சக்கரத்திலிட்டுச் சுழற்றிநிற்போலும் மூலப்பகுதிப்பாசத்தாற் பிணிப்புண்டுயிர்கள் அல்மருதலையடையும். இங்ஙனமான பலகோடித்துன்பத்தால் ஆகுலப்பட்டுள்ள விச்சமுசாரத்துச் சுகமென்ப தொட்டுணையுமில்லை. ஐயனே, முத்திப்பொருட்டு முயலுகின்ற நான் இந்த மும்மறைச்கருமகாண்டத்தை யெங்ஙனம் பற்றுகேன், எங்ஙனம் பற்றக்கடவேன், "யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்கென் கடவேன், வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்" என்றான்.

பதினோராவது பிண்டோற்பத்தி உரைத்த அத்தியாயம்.

முற்றிற்று.

உ

பன்னிரண்டாவது

நரகவியல்புரைத்த அத்தியாயம்.

---(*)---

மஹா இரௌரவ நரகவியல்.

இவ்வாறு கூறிய மைந்தனை நோக்கித் தந்தையானவர், ஓ! மைந்த! விதைதையைத் தானஞ்செய்தபெருந்தபுண்ணியபவலிமையால, இச்சமுசாரமென்னும் பெருங்கானகச்சரிதம் நன்று கூறினை. ஆயின், அதனிடத்து, இரௌரவநரகத்தியல் கூறியதுபோல மற்ற நரகவியல கூறப்பட்டதில்லையன்றே, பேரறிவாள! அவையெல்லாவற்றினையும் விரித்தெனக்குக்கூறுக என்றார்.

அதுகேட்ட அச்சிறுவனும், இரௌரவம் முன்கூறினேனன்றே, இனிமஹா இரௌரவ நரகத்தைக் கூறுவல் கேட்டிடுக, ஐயா! அந்த நரகமெல்லாம் ஐம்பத்து நாலாயிர யோசனை விசாலமாம். (அல்லது, நாலாயிர வையாயிர யோசனை.) அதனடியில் நிலம் செம்பாலாயதாம். அதன் கீழ் நெருப்புமுண்டு. அதனால் அது சிவக்கக்காய்ந்து

மின்னலேபோல மின்னிக்கொண்டு, பார்க்கவுந் தொடவும் மிகுந்த பயமுள்ளதாயிருக்கும். அதனிடத்து, பாவியானவன் காலபடமாற் கட்டியீர்க்கப்பட்டுக் கையாலும், காலாலும், புரண்டும் நடக்கின்றான். காகம், கழுகு, கொக்கு, கோட்டான், பருந்து, தேள், குருட்டீக்கள் முதலியவற்றால் பிடுங்கித்தின்னப்பட்ட டவ்வழியில் விரைந்திழுத்துச் செலுத்தப்படுவன். இங்ஙனம் வறுக்கப்படும் அப்பாவி, அம்மா! அப்பா! எனப் பயத்தோடிரைந்துகொண்டு சாந்தமற்றவனாய்ப் பதினாயிரம் யாண்டு கழியுமளவுங்கிடந்து, மிகு துட்ட சிந்தையனாகிய அவன் வெளிவிடப்படுவான்.

தமோ நரகம்.

அவ்வாறே தமசு என்னும் பெயருடைய நரகமும் வேறுள்ளது. அது இயற்கையானே வெகுசீத முடையதும் மஹாரௌரவம் போலும் விசாலமுள்ளதும், குருட்டிருட்டுச் சூழலுமாம். அக்கொடிய விருணரகத்துப் புகுந்தபாவியர், குளிரால் வருந்தியொருவரையொருவர் கட்டிக்கொண்டு, அவ்விருளில் ஓடுவர், குளிரால் பல், படபடத்து விழும். பசிதாகமிகவுள்ளதாம். அவ்வாறே ஏனைய நோயுமுள்ளன. பனிக்கட்டியோடுங் கூடிய காற்றுவீசும். அது, எலும்பினையெல்லாம் பிளக்கும். உடம்பினுதிரம் பெருக் கெடுக்கும். பசியோடவ்விரத்தத்தினை நக்குவர். இருளில் ஒருவரையொருவர் திடீரென முட்டித்துன்பத்துடன் நடப்பர். ஓ வேதியருளுத்தமனே! அவர்கள் அப்பாவ மொழியுமளவு மங்கிருப்பர்.

நிருந்தன நரகம்.

நிருந்தனம் (கத்தரிப்பது.) என்னும் பேர்பெற்ற மற்றொரு பெருநரகமுள்ளது. அதனுள் குயவன் திகிரிபோன்று ஒரு சக்கரம் விடாது சுழன்றுகொண்டிருக்கும். பறலியின் றூதுவர் பாவிகளை யமபாசத்தாற் பிணித்து அச்சக்கரத்தின் மீதேற்றி, நூலினைத்தொட்டு தலைவரையில் கொதிக்கொத்தி வெட்டிக்கொண்டிருப்பர். அவ்வளவு செய்தும் அவர்களுயிர் நீங்காது. நூறுநூறு துண்டங்களாக வெட்டுண்ட அவயவங்களுமீட்டும் ஒன்றாகச் சேர்ந்துகொள்ளும். அவர்களிங்ஙனம் ஆயிரம்வருடகாலமிவ்வாறு வெட்டுண்டுகிடந்து மீள்வர்.

அப்பிரதிட்டை நரகம்.

அவ்வாறதனுட் பாவஞ்செய்து கழிந்து வந்தபின் அப்பிரதிட்டை என்னும் வேறொரு நரகமுள்ளது. அதனிடத்துப் பொறுத்து முடியாத துயரம் அனுபவிக்கப்படும். அங்குள்ள குலாலசக்கரமின் குழுள்ளன. பானைகளாகிய வியந்திரங்களுமுள்ளன. அவையெல்லாம் பாவியர்க்குத் துன்பஞ்செய்யுங் கருவிகளாம். அத்திகிரிமேலேற்றப்பட்டுச் சிலர் கொட்பிக்கப்படுவர். ஆயிரமியாண்டாமளவுமிடையில் நிற்றலில்லை. நீர்க்குடங்களைக் கட்டியவாறுபோ லவரை யக்குடவியந்திரங்களிற் கட்டிச் சுழற்றுகையில், அடிக்கடி உதிரங் கக்குவர்; குடர்வாய்வழிவரும். விழிகள் பிதுங்கி வெளிப்படும், உயிர்களால் நுகர்தற்கரிய துன்பப்பயனை நுகர்வர்.

அசிபத்திரவன நரகம்.

இனி அசிபத்திரவன நரகமென்னுமற்றொருவகை நரகத்தினைக் கேளும். அது ஆயிரயோசனை யளவினையுடையது. எரி நெருப்பு நிலமுடையது. அதனுள கொடிய சூரியகிரணம் பிரளயகாலத்துத் தீப்போல எப்பொழுதும் பாவிகளைக் காய்கின்றது. அதனடுவே நுண்ணிய தளிர்களையுடைய குளிர்ந்தசோலை யொன்றுள்ளதாகக் காணப்படும். அதனிலை பழமுதலியன வாள்முதலிய படைகளாம். உருவமில்லாதது. (அல்லது விகாரவடிவுடையது, உரத்தகுரலோடு ஒலிசெய்வது. பெரும்புலிபோலும் நகத்தையும் பெருத்த கோரைப் பற்களையும், சாம்பல்வண்ணத்தையுமுடைய பதினாயிரம் நாய்கள் குலைப்பதாயுள்ளது. அந்நரகத்துள் வேதனைப்படும் உயிர்கள் அதிக விரைவுள்ளதாகமுமமிலத்தின் சூட்டால் வெதுப்பப்பட்ட காலுமுடையராய் ஐயோ! அப்பா! அம்மா! என்றுமிகுதுயரத்தோடும் அழுதுகொண்டேபோய், எதிரே தோன்றுகின்ற குளிர்ந்த நீழலையுடைய அவ்வனத்தைநோக்கிச் செல்வர். அவ்விடத்திலாவெனின், காற்றுவீசுமாயினும் அங்குள்ள தருக்களின் கண்ணவாகிய இலைகள் போன்றுகாணப்படும் வாள் அக்காற்றினால் வாரப்பட்டு வந்து மேல் விழும். அங்கிருந்து நெருப்பின் குவியன்மேல் விழுந்து, சூடு நிலத்தின்மேலுழலுவர். அப்போது அந்நாய்கள் விரைந்து வந்து வீழ்ந்து கடித்து, அவயவங்களைக் கிழித்தெறியும், அந்நரகத் தழுதுகொண்டிருப்பவர்களுக்கு மிகுந்த பயங்கரமுண்டாயிருக்கும். இது அதன் செய்தி.

தப்தகும்ப நரகம்.

அப்பால், அதனினும் கொடிய வச்சத்தினைத்தரும் தப்தகும்ப நரகத்தினைப்பற்றிச் சொல்வேன் கேளும், ஐயா! அந்நரகத்துள்ளே, காயப்பட்ட நெருப்புக் குடங்கள் நிரம்பியிருக்கும். எரி சூழ்ந்து கவர்ந்திருக்கும், அக்குடங்களுள் எண்ணெய், அயத்தினரப்பொடி நிரம்புண்டு காய்ந்துகொண்டிருக்கும், யமபடர்பாவஞ்செய்தோனைப் பற்றிவந்து, தலை கீழாக அக்குடத்தினுண்ணுழைவித்து, வேக அவிப்பார்கள். உடம்பினுள்ள மேதை, புண்ணீர் முதலிய தாதுக்கள் வெளிப்பட்டு, மண்டை வெடித்துக் கண்கரைந்து, எலும்பு முறிந்து போம். அங்கு இருப்பு முகக்கழுகுகள் வந்து, அறைந் தெடுத்துப் போய் மென்று மறுபடியும் அதனுட்டானே கொடுவந்து வீழ்த்தும் சலசலவென்று கொதிக்கும் எண்ணெயில் உடம்பின் கண்ணுள்ள தாதுக்களெல்லாம், உலோகங்கள் உருகுதற்போலும் உருகும். காலன்றூதுவர் கரண்டி துடுப்புமுதலிய கொண்டுதுழாவிக் குத்திடுவர். இங்ஙனம் கொதிக்கும் எண்ணெயிற் சுழிகளுண்டாய், அச்சுழியில் பாவியர் சுழலவிட்டலைவர். இவ்வளவு கொடுமை நேர்ந்ததேயாயினும் அப்பாவிகட்கு உயிரும் நீங்காது, உடம்பில் மறதியு முண்டாகாது. அந்த யாதனாதேகம் அடிக்கடி தோன்றிக்கொண்டேயிருக்கும். அதனோடு அப்பெருந்துன்பத்தினை அனுபவித்துக்கொண்டே கிடக்க வேண்டும். கேட்டிரோ தந்தையே! இங்ஙனம் தப்தகும்ப நரகம் விசேடமாகச் சொல்லப்பட்டது.

பன்னிரண்டாவது நரகவியல்புரைத்த அத்தியாயம்.

முற்றிற்று.

பதின்மூன்றாவது
விதேகராசன் கதையுரைத்த
அத்தியாயம்.

அதன்பின்பு அம்மைந்தன் தந்தையை நோக்கிக் கூறுவன். ஐயா! நான், இப்பிறப்பினுக்கு முன் கழிந்த ஏழாவது பிறப்பில் வைசிய குலத்துட் டோன்றி, பசு, நீர்குடிக்கச் செல்லுகையில் போக வொட்டாது தடுத்தேனாக! அப்பிறவி முடிந்தபோதே, அப்பாவம் பக்குவமானதால் மிகுகொடிய நரகத்தினை யடைந்தேன். அந்நர கத்தில் அழற்சிகை அஞ்சத்தக்கதாக விருந்தன. இருப்பு முகப்பற வைகள் மிடைந்தன. அவ்விடத்தில் பாவிகள் இயந்திரத்தால் அழுத் தப்பட்டு உடம்பில் உதிரம் மீறிட்டுக் கொப்புளித்துவரச் சேறுபட் டிருப்பார். இரங்குகின்ற பாவிகளி னழுகுரல் மேகமுழக்கம்போல மனம் கவற்படுத்த அதில் விழுந்துகிடந்த எனக்கு நிரம்ப நூறுவரு டங்கழிந்தன. இங்ஙனம் பெரும்பாவ துக்கத்துடனும், தாகம், எரி ச்சல், வெப்ப மிவற்றுடனும் வருந்தி நிற்கு மென்மேல், இன்பமா கக் களிப்பைச்செய்யு மிளங்காற்றொன்று அப்பொழுதே வீசிற்று. அது, பனிநிறை குடத்தி னின்றும் வெளிப்பட்டதாம். அவ்விளங் காற்றுப் பரிசித்ததனா லங்குள்ளா ரனைவருக்கும் துன்பஞ் சிறிது ஒழிந்த வாறாயிற்று. முன்நான் சுவர்க்கத்திருந்த ஞான்று எவ்வாறி ன்ப முண்டாயிற்றோ, அவ்வாறே யின்று நரகத்தினு முண்டாயிற்று அப்போது, யாமனைவரும் மிகவியப்பினை யடைந்து விழிதிறந்து வா னோக்கி நிற்கையில், ஒருதெய்வ புருடனைக் கண்டோம்.

காலகிங்கரரும் விதேகராஜனும் வருகை.

அங்ஙனம், எங்களை நெருங்கி யந்த புருடரிற் சிறந்தோன்வரு கையில், அவனுக்கு முன் தண்டமொன்று கையிலேந்தி இயமன் றூதுவரி லொருவன், இங்குவா! இங்குவா! என்று அவனையழைத்து வந்தான். அங்கு அப்புண்ணிய வடிவன், கொடுந் துன்பமுழந்து கிடக்கும் பல்லாயிர நரகரையுநோக்கி, யிரக்கமுடையனாய், அத்தூ துவனை நோக்கி வினவலாயினன்.

ஓய்! காலபடா! இக்கொடு நரகினைப் பார்க்கும்படிவர நேர்ந்ததே! யான் என்னபாதகஞ் செய்தேன், கூறுதி. யான் விதேக நாட்டின்கண்ணே சனகராசன் மரபிற் பிறந்து, கலை வல்லோனென்று புகழினை யடைந்து, நீதியோடு * மன்பதை புரந்து, பல வேள்விகளையுஞ்செய்து, தருமத்தோடு முலகை யோம்பினேனே! பயந்து பேரினை யொழிக்க வில்லையே! “மோப்பக்குழையுமனிச்ச முகந்திரிந்து, நோக்கக்குழையும் விருந்து” ஆதலால், என்பால் வந்தவிருந்து முகஞ்சுளித்துப் புறம் போந்ததில்லையே! “தென்புலத்தார்தெய்வம் விருந்தொக்கலொன்றாங், கைம்புலத்தாறோம்பறலை.” ஆகவே பிதிரர், தேவர், எவலர்பால் யான் செலுத்தத்தக்ககடன்களில் எட்டுணையுந் தவறுநேர்ந்ததில்லையே! அயலவன் மனைவி பாலாயினும், பொருளிடத்தாயினும் இச்சைகொண்ட திலலையே! “நலக்குரியார்யாரெனினமநீர்வைப்பிற், பிறர்க்குரியாடோடோயாதார்.” என்பதுதவறன்றே. “காணிற் குடிப்பழியாங் கையுறிற் கால்குறையும், மாணின்மை செய்யுங் காலச்சமாம்-நீணிரயத், துன்பம் பயக்குமாற்றுச்சாரி நீகண்ட, வின்பமெனக் கெனைத்தாற்கூறு.” என்பது விதியாயிற்றே. “அருள்வெஃகியாற்றின்க ணின்றான் பொருள் வெஃகிப், பொல்லாத சூழக்கெடும்.” என்றது முதுவர்மொழியாமே. பருவகாலங்களிற் பிதிரரும், திதிகாலங்களிற்றேவரும் ** நிபானத்தருகு பசுநிரை வந்தாற்போலும் வருகின்றனரன்றே, அவர்கள் அவ்வில்லறத்தானாற் பயன் பெறாது அலைந்து பின்சென்றால் அவனது இட்டகருமம், பூர்த்த கருமம் என்னும் இருவகைத் தருமமும் ஒருங்கு கெட்டொழிகின்றன. பிதிரர்பெருமூச் செறிந்தால், அவ்வில்லறத்தோனது எழுபிறப்பின் புண்ணியப் பயன் கெடுகின்றது, அங்ஙனம் தேவர் பெருமூச்செறிந்தால் மூன்று சென்மப் புண்ணியப் பயன் கெடுகின்றது. ஆதலால், தேவர் கருமத்தினும் பிதிரர் கருமத்தினும் யான் சோர்வின்றி முயற்சியோடும் தவறாது முற்றினேன்; அப்படிப்பட்ட யான் பெருங்கொடுமையுள்ள இந்நரகினுக்கு எவ்வாறு வந்தேன் என்றான்.

கேளுந் தந்தையே! இங்ஙனம் யாம் கேட்டுக்கொண்டிருக்கும்போது, அவ்வரசனால் வினவப்பட்ட கொடிய காலதூதுவன் அவ்வயத்திற்குத் தக்கவாறு கூறலாயினான்.

---

* மன்பதைபுரந்து - மக்களை இரக்ஷித்து.

** நிபானம் — பசுமுதலிய நீர்குடிக்குந் தொட்டி.

கேளும், அரசரேறே! நீர்கூறியது உண்மையே அங்கேதுமையமில்லை. பின்னென்னெனில், நம்மாற் சிறிதே தீவினை செய்யப்பட்டுள்ளது. அதனை நமக்கு ஞாபகஞ் செய்கின்றேன். முன்னம் விதற்பர் கோமான் மகளாகிய பீவரி என்னும் பெயரையுடைய நம்முடையமனைவி இருதுவாகியிருக்கையில் அவளது இருதுகாலம் பயனற்றதாய்விட்டது. அழகுள்ள கேகைய ராசன் மகளிடத்து விழைவனாய் நின்றுவிட்டாய். அங்ஙனம், அந்த இருதுபருவ தருமத்தினைக்கடந்தகாரணத்தால் இக்கொடு நரகினுக்குவந்தீர். ஓமத்தீயோம்பற்கடுத்தகாலம்வாய்த்தபோது, அக்கினி தேவன் நன்கு திருத்தப்பட்ட நெய்தன்பால்விழுதலை எவ்வாறு எதிர் பார்ப்பானோ அவ்வாறே மாதவிடாய்க் காலம் வந்தபோது, பிரஜாபதி என்னுந் தெய்வம் சுக்கில விழுகையை எதிர்பார்க்கும். அறப்பொருட்டாகவாகத்தக்க அந்த நியமத்தினை எவன்கடந்து, ஏனைய காமநுகர்ச்சிபால் அவாவுடையனாகின்றானோ அவன் பிதிருக்குக் கடனுடையனாய்ப் பாவத்தினையடைந்து நரகமுறுவன். "பூத்தகாலை புனையிழைமடந்தை, நீராடிய பின்னீராறுநாளுங், கருவயிற்றுறாஉங்காலமாதலிற், பிரியவும் பெறான் பரத்தையிற் பிரிவோன்." என்றவிதிதோன்றியது மிக்கருத்தேபற்றியாம். நீர் செய்தபாவமும் இவ்வளவிற்றே வேறொன்றுமிராது. ஆதலால், உம்முடைய பெரும் புண்ணியப்பயனை அனுபவித்தற்குமுன் இச்சிறிய பாவப்பயனை நுகர்வதற்குவாரும் வேந்தே! என்றான்.

காலகிங்கரனை விதேகராஜன் வினவுதல்.

அப்போது, அவ்வரசன் வினவத் தொடங்கினன். ஓய்! தருமதூதுவ! நீ எங்கென்னையழைப்பினும் வருகின்றேன். ஆயின், யான் வினவுஞ் சில வினாக்கட்கு நீ விடைதரத்தக்கவனாகின்றாய், வயிரவூசியே போலும் வலியமூக்கினையுடைய விக்காகங்கள் இங்குள்ளவர்களின் கண்களைக்குத்தித் தின்னுகின்றன, மறுபடியும் அக்கண்வளர்கின்றன. அருவருக்கத்தக்க என்னபாவஞ் செய்தனர் இவர் அதனைக் கூறுக. இதுவென்னை, இவர்கள் நாவானவை வளருந்தோறும் ஈர்வாளாலறுக்கப் படுகின்றனவே இவர்களெதனாலிப்பெருந்துன்பமுறுகின்றனர். இவர்களேன், மணற்குடத்துள் தைலக்கஷாயத்தால் சமைக்கப்படுகின்றனர். இருப்பு மூக்கின் பறவைகளாலீர்க்கப்படுவதென்னை, உடம்பு செக்கைச் செக்கையாய்ப் பிளக்கப்பட்டு எரிச்சல்

நோய், தாகமிவற்றோடு விகாரமாக அரற்றுவதென்னை, இரவும் பகலுமாசுச் சுத்தப்படுகின்றனரே! அஃதென்னை, இன்னும்பலவிதமான உபாதிகளிப்பாபிகட்கு உண்டாகின்றது, ஆகவே இவர்கள் என்ன கொடுமை செய்தனர், என்னபாவத்தாலித்துன்பமுண்டாயிற்று என்றான்.

காலதூதுவன் கூறிய விடை.

அதுகேட்ட அந்த யமகிங்கரன், ஓய்! அரசனே! நீர் என்னை, வினவும் பாவப்பயனை யுள்ளவாறுமக்குக் கூறுவேன் கேளும் புருடன்-எது (புருஷம்) புரு-தேகம். அதனிடத்து, (சேதே) படுக்கின்றான். (ஷிங்) இப்பகுதிக்குக் கனவு என்பது பொருள். உபலக்கணத்தால் சாக்கிரம், சுழுத்திக்குங் கூறப்படும். உடம்பின்கண்ணே அணுவென்னும் அபிமான பாசத்தாற்கட்டப்பட்டு, யானே உடம்பு, எனதுடம்பு என்றுகூறி, நனவு, கனவு, உறக்கமென்னு மவத்தைப் பட்டுவருகின்ற ஆன்மாவென்று பொருள்படுகின்றது. பரமான்மாவென்னுங் கடவுள் எங்கு நிறைந்துள்ளவனாகவே யுடம்பின்கண்ணு நிரம்பியிருக்கின்றானாதலின் அப்புருடனென்னுஞ் சொல்லுக்குப் பொருளுமாவன். (ஆபின் ஒருதலையாக இலிங்கதேகப்பற்றுடைய சீவனே புருடனெனப்படுவன். கடவுள் புருடோத்தமனென்று கூறப்படுவன் என்பாருமாவர்.) அப்புருடன் புண்ணியத்தினையும் பாவத்தினையும் ஒன்றன்பின் ஒன்றாகமுறையே அநுபவிக்கின்றான். அப்படிப்பட்ட புண்ணியமேனும் பாவமேனும் நுகர்ந்தன்றிச் சமித்தொழியும். மனுஷன்செய்த இருவினைகளு மனுபவியாதொழியாது "இன்புள்ளிருந்தி யிருவினையை யீடழித்துத் துன்பங்களைந்து துவங்துவங்க டேய்மைசெய்து, முன்புள்ளவற்றைமுழுதழிய" என்பதனால் சந்நியாசத்தாலாயினும், அநுபவத்தாலாயினும் அறம்பாவ வினைகளொழியும், "விளக்குப்புக விருண்மாய்ந்தாங்கொருவன் றவத்தின் முன்னில்லாதாம்பாவம்" என்றது மிக்கருத்தே, பாவஞ்செய்தவன் வறியனாய்ப் பஞ்சத்தினின்றும் பஞ்சமும், கவலையினின்றுங் கவலையும், அச்சத்தினின்று மச்சமும், மரணத்தினின்றும் மரணமும் அடைவன். உயிர்கள் கருமக்கட்டினால் பலவகைப்பட்ட நிலைமையைப் பெறுகின்றன. விழாவினின்றும் விழாவும், சுவர்க்கத்தினின்று சுவர்க்கமும், சுகத்தினின்றுஞ் சுகமும், தெய்வசிரத்தையுடை

யாரும், ஐம்புலனையுந் தம்வயஞ்செய்தவரும், பொன்முதலிய தானஞ் செய்தவர்களும், நல்வினையையே செய்தவர்களும் அடைவர். பாவிகளாற் கொலையுண்டவர்களோ, புலி, யானை முதலியவற்றால் வருந் துன்பத்தினையும், பாம்பு, கள்ளர் முதலிய காரணமாக வரும் பயத்தினையும் பெறுவர். பாவத்தினைத்தாமே செய்தவர்க்கு வேறு என்னுரைப்பது. இதனினும் பெரியதொன்றியாது, புண்ணியசீலரோவெனில், இல்லாமை மேற்கொண்ட காட்டினிடத்தும் நல்ல சந்தப்பூச்சு, நறுமலர்மாலை, இனியவாடை, அறுசுவையுண்டி, அழகிய பணி, இன்பப்பாயல் முதலியவற்றினையுடையரா யாண்டும் புகழ்செல்வர்.

மானுடரின் அறமும், மறமும் இன்பந் துன்பமென்னும் முனைகளையுடையவாம். ஓ! வேந்தே! வித்துமுளையாவதற்கு நீரினை யெவ்வாறு எதிர்பார்க்குமோ, அறம் பாவங்களும் அவ்வாறே இடத்தினையும் காலத்தினையும் எதிர்பார்த்திருக்கும். அடியெடுத்து வைத்தலினால் நேர்ந்த பாவம் முட்டைக்கும் துன்பத்தினைத்தரும். அதனிற் பெரியதொன்று பெருவசியேனும் ஆணிமுதலியவேனுந் தைக்குந் துன்பத்தினைத்தரும். அவ்வாறே கெட்ட வெண்ணமுதலியன தலைநோய் முதலியவற்றினைத்தரும். அசுத்தமானவுண்டி சோறுமுதலிய வுணவிலருவருப்பினையும், சீதத்தினையும், வெப்பத்தினையும், தாபத்தினையும், ஏனைவருத்தத்தினையும் கொடுக்கும். அவ்வண்ணமே, மற்றைத் தீவினைப்பயனையு முணர்ந்து கொள்ளுக. இங்ஙனம் பெரும்பாவங்கள் தீராநோய் முதலியவற்றினையும், கைவிடுபடைகள், தீ முதலியவற்றால் வரும் துன்பங்களையும், சாவினையுந்தரும்.

சிறிதேயாகிய புண்ணியம் சிறு நன்மைகளையும், நன்மணம், நல்லுண்டி முதலியவற்றினைக் கொடுக்கும் இன்பப்பரிசத்தினையும், இன்னோசையினையும், இன்சுவையினையும், நல்லவுருபத்தினையும் உண்டுபண்ணும். பெரும் புண்ணியமானவை நெடுங்காலங்கழியப் பாகப்பட்டுப் பழுத்துப் பெருஞ்சுகத்தினை யுண்டுபண்ணும். இங்ஙனம், புண்ணியபாவங்களாலுண்டான அனேக சுகதுக்கங்களை யனுபவிக்கச் சமுசாரத்தில் அனேகம் பிறவிநேரும்.

சாதிக்கும், தேயத்திற்கும் மாறாகிய கருமங்களை மனமறிந்து செய்யினும், அறியாது செய்யினும் அப்பாவம் இலிங்க தேகத்தினை

த்தொடர்ந்து ஆன்மாவின் கண்ணதாம். மனிதன் செய்யுந் தொழி லோடும், எண்ணத்தோடும், சொல்லோடும் எப்போதேனும் எவ்வி டத்தேனும், பாவ புண்ணியங்களு ளொன்றினைச் செய்வனே யொழி யச் செய்யாதிரான். புருடன் சுகத்தையேனும், துன்பத்தினை யே னும், பெரிதாகவேனும், சிறிதாகவேனும் எதனைத் தனைப் பொருந்து கின்றானோ, அது மனத்திற்கு வேறுபாட்டைச் செய்கின்றது. அவ் வளவிற்றானே அப்பாவ புண்ணியங்களுள் யாதேனுமொன்று அனு பவகால முடியுமளவும் இருத்தலே செய்யும். உண்டவுணவு செரிக் கும் பொழுது சேர்ந்தழி செரித்தொழிந்தாற்போலக் கருமப்பயனு நுகர்ச்சியினு லொழியும். இங்ஙனம் இவ்வுயிர்கள் நரகத்தழுந்தி மிகு கொடுமையான கோரமஹா பாவங்களைக் கடியதுன்பத்தால் இரவும் பகலுமாக அனுபவித்துக் கழிக்கின்றனர்.

ஓ! வேந்தே! அவ்வாறே சுவர்க்கத்தில் தேவ கந்தருவசித்த அர மாதருடைய ஆடல்பாடலோடு புண்ணியப்பயனை நுகர்கின்றனர். தே வத்தன்மையிலாயினும் மானுடத்தன்மையிலாயினும் ஏனையதிரியக் குத்தன்மையிலாயினும் புண்ணிய பாவங்களாலுண்டாகிய நன்மை தீமைகளை, எனவே, இன்பதுன்பங்களை அவரவரனுபவிப்பர். பாவ கருமத்தாலுண்டாகின்ற ஆற்றமுடியாத வருத்தங்களைப்பற்றி எவ் வெப்பாவத்தால் எவ்வெத்துன்பமுண்டாமென்று வினவினீரன்றோ, அவற்றை யுமக்கு முற்றுங் கூறுகின்றேன் கேளும்.

மனிதர் கெடுதியாகிய எண்ணத்தோடு அன்னியன் மனைவியை நோக்கினும், கெட்டமனத்தோடு ஆசையுற்றுப் பிறர்பொருளை நோ க்கினும், அவர்கள் கண்களை வயிரமுகப்பறவை பறிக்கின்றன. அக் கண்கள் மீட்டும் வளர்கின்றன இங்ஙனம் அப்பாவியர் எத்தனை நிமிட பரியந்தம் பார்த்திருந்தார்களோ அந்த நிமிடம் ஒன்றற்கு ஆயிரமா யிரம் வருடமாக வித்துன்பத்தினை யனுபவித்திருப்பர். எவன்பகை வனுக்காயினுமநல்லறிவைக் கெடுப்பதன்பொருட்டு எண்ணுவனோ. கெடுதியாகிய நூல்களைப் போதிப்பானோ நூல்களின் உண்மைக்கருத் தினைமாறுபடுத்திக் கூறுவனோ, நன்மைதராதசொற்கள் சொல்லுவ னோ, அப்படிப்பட்ட பாவத்தினையுடையவினர்கள்தான் மலையுச்சியி னின்றும் பலகாலும்கீழுவீழ்பவர். தேவரையும், வேதியரையும் ஆசி ரியனையும் நிந்தைகூறினவன் நாவானது அடிக்கடி பிடுங்கப்படுகின் றது. அந்நியர் மனத்தை நோகச்செய்தவர்களும், பிறர்க்குண்டாகும

நலத்தை மாற்றினவர்களும், விசறி, காற்றுவரும் கூளரம், சந்தனம், வெட்டிவேர்த்தடுக்கு இவைகளைக் களவுசெய்தவர்களும், நல்லோர்க்குத் துன்பவேலைகளைச் செய்தவர்களும், உயிர்போமளவும் பிறர்க்கு இடுக்கண்செய்தவர்களுமாகிய இப்பாவியர் பனிக்கட்டிமண்ணிலத்தில் வீழ்த்தப்பட்டுப் பெருங்குளிரினால் மிகவருத்தப்படுவர்.

எம்மனிதன் பிறனொருவ னில்லத்துப் பிதிர்கருமத்தழைக்க வுடன்பட்டாயினும், தேவர் கருமத்தழைக்க வுடன்பட்டாயினுமிருந்து அங்குசெல்லாது மற்றொருவன் மனைக்குச் செல்வானாயினவன் பறவைகளால் இரண்டுபிளவாகப் பிளந்து தின்னப்படுவன். யார் சான்றோருடைய இரகசியச் செய்திகளை வெளிப்படுத்தித் தன்னுரைகளாலப்பெரியர் மனத்தைக் கோறல் செய்தாற்போலுந் துன்பத்தினைச்செய்கின்றானோ, அவனையிப்பறவைகள் மறுப்பினும் விடாது கொத்துகின்றன. யாவன் உலோபத்தால் சொல்லுஞ் சொல்லொன்று, எண்ணுமெண்ணம் வேறொன்று ஆகச்செய்வானோ, அவனது நாவினைக்கூரிய வாளாலிருகூறாகப் பிளக்கின்றனர். யாவர், தாய், தந்தை குரவனிவர்கள் முதலிய சான்றோர்க்கு அகங்காரத்தால் அவமானஞ்செய்கின்றார்களோ, அக்கதைய விவர்களை தலைகீழாக மலமூத்திரங்களின் அழுகக்குழியில் வீழ்த்துகின்றனர். தேவர்க்கும், வந்துவிருந்தினர்க்கும், பணிசெய்வோர்க்கும், உண்ணுங்காலத்து வந்தவர்கள் முதலியோர்க்கும், உண்டிகளையூட்டாதும், தாய், தந்தை, வேள்வித்தீ, தன்பாதுகாப்பிலுள்ள பசுபக்ஷிமுதலிய வுயிர்களையுண்பியாதும், தான்முன்பாக யாவன்புசிப்பனோ அவன்மலந்தின்று, உதிரத்தையும் கெட்ட சீழினையும், பிசின்போன்ற கபத்தினையும், ஊசியைப்போலும் தொண்டையுட்டைத்து வருத்துகின்ற பதார்த்தங்களையும் துன்பத்தோடும்புசித்து, மலைப்பாறைபயொத்த உடம்பினையுடையனாய் என்னதுன்பப் படுகின்றனன் பார். ஒரு பந்தியுள் வேதியனை யாயினும் மற்றெந்தச் சாதியனை யாயினும் சமமாகப் புசிப்பியானோ (தன்னினுங் குறைந்த வுண்டியை யூட்டுவிப்பனோ) அவன் அழுகிய வூன்களைத்தின்னுகின்றான். யாவன் வழி நடக்கையில் வழியிற்றன்னோடு வந்த பொருளில்லாது பசித்திருந்தானை விட்டுத்தான் றனியே புண்பரனோ அவனே யிக்கபந்தின்னுமவன்.

பசு, பார்ப்பார், வேள்வித்தீ, இவர்களுக்கு யார் எச்சிலை யூட்டுவரோ அவர்கள் கைகளிதோ! இங்கு எரிகின்றதீயில் வைக்கப்பட்டு

ள்ளன. எச்சிற்கையோடு யார் சூரியன் சந்திரன் உடுமுதலியவற்றை வேண்டுமென்று பார்க்கின்றார்களோ, அவர்கள் விழியினை இயமன் றூதுவர் போழ்ந்தெடுத்து நெருப்பிலிட்டுத் தீக்கின்றனர். யாவன், பசுவை, தீயினை, அன்னை தந்தையை, வேதியனை, தமையனை தமக்கையை, தமைபன்மனைவியை, குரவனை, வயதின்முதியோரைக் காலாற்றீண்டுவரோ அப்பாவியர் இயமன் றூதுவராற்கட்டுண்டு, அக்காலில் அழலிற்காய்ந்த விலங்குபூண்டு, தணல்கொளுந் தெரியும் நெருப்பினுள் நிறுத்தப்பட்டு முழங்கால் வரையினும் சுடப்பட்டுக் கொண்டிருப்பர். யார், பாலாற்சமைத்த சோற்றினையும், பயறிட்டுச் சமைத்த சோற்றினையும், * யாட்டினூனையும், தேவர்கட்குற்ற வேள்வியுணவினையும், மந்திரமுதலியவற்றாற் சுத்தஞ்செய்யாமலே யுண்பார்களோ அந்தப்பாவியரை நிலத்தின்மேற் கிடத்திக் கண்விழித்தவர்களஞ்சும்படி தொண்டையி லிருப்புக்குறடு செலுத்திக், குடர்களைவெளியிற் பிடுங்கி எறிகின்றனர். யார், தேவர்கள, குரவர்கள், வேதியர்கள், வேதங்கள் முதலியோரது நிந்தையைக் காதாற் கேள்விப்படுவரோ அவரும், பாவங்களைக்கேட்டுக் களிப்பவருமாகிய இவர்கள் காதுகளில், காலதூதுவர், அழன்று கொண்டேயிருக்கும் இருப்புத்துணுக்குகளை நிரப்பி அழ வழ அடிக்கடி நெருப்பிலிட்டுத் தீய்ப்பர்.

தண்ணீர்ப்பந்தரையும், தேவர்கோட்டத்தினையும், வேதியர்மனையையும், தருமச்சாலைகளையும், பொதுமண்டபத்தலத்தினையும், ஏழைகளின் ஒதுக்கிடங்களையும், ஆசையாலாயினும் வெறுப்பினாலாயினும், கெடுத்தழிப்பவர்களைப் பற்றி இரங்கவிரங்க விடாது கூரியவாளால் உடம்பின் றோலையுரித்தெடுப்பார். பசுக்கள், வேதியர், சூரியன் இவர்கள் சஞ்சரிக்கும், வழியில் மலமூத்திரங்களைக் கழிப்பவர்களது குடரையும் குதநரம்பினையும் காக்கைபறிக்கும். கன்னிகையை ஒருவனுக்குக் கொடுத்துவிட்டபின்பு வேறே மற்றொருவனுக்குக் கொடுப்பவனைப் பலதுண்டங்களாக வெட்டிக் கார உப்பு ஆற்றின் வெள்ளத்துவிடுவர். மனைவி, மக்கள், ஏவலர், சுற்றத்தினர் முத

---

* ஈண்டூனுணவை யுடன்பட்டது, இது புராணமாதலால் பூர்வமீமாஞ்சகர் மதப்படி செய்யும் வேள்வி முதலியவை யிடத்தென்றும், மெய்ஞ்ஞானியர் முடிபு "அவிசொரிந்தாயிரம் வேட்டலினொன்றனுயிர்செகுத்துண்ணாமை நன்று" என்பதெனவுங்கொள்க. இக்கருத்து மனுமிருதியுள்ளுங்காணலாம்.

லியோர் பட்டினியால் வருந்தவிட்டுத் தன்னையே யோம்புமவனையும், பஞ்சத்திலாயினும், காலவிசேடத்திலாயினும், தன்னையே யுண்டிமுதலியவற்றால் உபசரித்துக் கொள்வோனையும், பல்லினைப்பறித்துத் தன்னூனைத் தான்றின்னச் செய்வர். தன்னையடைக்கல மடைந்தோனை மற்றொருவன் கைக்கூலிகொண்டு கைவிடுபவனு மிவ்வாறே காலதூதுவராற் றுன்புறுத்தப்படுவன். தான் செய்த புண்ணியம் பிறர்க்கு விற்பதனாற்றானே தன்னாயுள் அளவும் போதுகழிப்பவன் சுடுகல்லின் மேலிட்டரைக்கப்படுவன். அவ்வாறே அடைக்கலப் பொருளைவவ்வினோனையும் அவனங்கமுழுவது நாறுங்கக்கட்டி யிரவும் பகலுமாகத்தேள், கழுகு, காகம், புழு முதலியவற்றாற்றின்னப் புரிவர். பிறர் மனைவி யின்பநுகர்ந்தவனையும், பகற்புணர்ச்சி செய்தானையும், பசியோடுகுறைவுற்றும், தாகத்தால் நாவெளிப்பட்டும், தாடையுலர்ந்தடங்கியும் வருந்த இருப்பு முட்களையுடைய மரங்களின்மேலேற்றியுடம்பெல்லாங் கிழிந்துதிரம் பெருகும்படி வைத்து, காலதூதரிவர்களையெல்லாம் பற்றி, மூசையிலிட்டு உலோகங்களை யுருக்கினாற்போலுமுருக்குவர்.

எவன் தன்னுடைய உபாத்தியாயனைத்தன்னிற் குறைந்தவனாகவெண்ணி, முறைமையில் மூடனாப் அத்தியயனத்தையேனும் சிற்பமுதலிய பிறவித்தைகளையேனும் உபாயத்தால் அறிந்துகொள்பவன், சுமக்கலாற்றாத பெருங்கல்லினைத் தலைமேற் சுமந்து இரவும் பகலுமாக வழிநடந்து, பசியால்வருந்தி, பாரத்தாற் றலையிருத்துண்டு துயரமுற்றிருப்பன். நீருள்ளே மலமூத்திரங்களை யொழித்தவனன்றோ இங்கு இந்த மலமூத்திரந் தீநாற்றக்குழியில் விழுந்து கிடப்போன். வந்த விருந்தினை முறையே முதலில் உண்பிக்காமல் தாமுன்னராக வுண்பவர்களும், தம்முட்டாமே யொருவரை யொருவர் விருந்து முதலியவாக வுபசரித்துக் கொள்வோரும் பசியோடும் ஒருவரை யொருவர் பறித்துத்தின்பர்கள். வேதங்களை மறுத்தவரும், வேள்வி புரியாதவரும் பலகாலும் மலைமேலிருந்து வீழ்த்தப்படுகின்றனர் பாரும். கணவனிறந்த கன்னிகையை மறுமணம் புணர்ந்தோன் (புனர்ப்பூபதீயஃ இரண்டாவது மணம்புணர்ந்தவரின் கொழுநர்) எவ்வளவு காலம் பிழைத்திருப்பரோ, அவர்கள் தானிவர்கள், கிருமிகளாய் எறும்பால் அரித்துத்தின்னப் படுகின்றனர் பாரும். பதிதரால் கொடுக்கப்பட்ட தானத்தைப் பெற்றுக்கொண்டவனும், தகாதவ

ளால் வேள்வி செய்வித்தவனும், கல்லின்னடுவிலிருக்கும் புழுவாய்ப் பிறந்து துன்பமடைகின்றான். நண்பரும், ஏவலரும் விருந்தினரும் பார்த்திருக்கத்தா னொருவனாகி அறுசுவையுண்டி தின்றவனன்றோ, இங்கு எரி நெருப்பினைத் தின்கின்றான்.

கொடிதாகிய எவ்வகை மாமிசங்களையு முண்டவர்கள் அஞ்சத்தக்க கோநாயினால் முதுகைப்பறித்துத் தின்னப்படுவர். தனக்கு நன்மை செய்தோனை மறந்து செய்நன்றி கொன்ற அதமன், குருடு, செவிடு, முதலியவங்கவீனனாய்ப் பசிதாகங்களால் வருந்திக்காய்ந்த பானைகளிலிட்டுதிரம் வடித்தெடுக்கக் குட்டயாதனை அனுபவித்துப் பின்பனிக்கட்டி மணலின் மேற்கிடந்து குளிர் நோயடைந்து இயந்திரங்களில் நசுக்குண்டு அசிபத்திர நரகமடைந்து வாளாலறுப்புண்டு, பின் காலசூத்திர நரகத்திற நள்ளுண்டு சதைக்கப்பட்டுப் பலவேதனைப்பட்டும் தண்டனை முடியாது முடிவில் என்னவாக முடியுமோ யானறியேன். "என்னன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லைச், செய்நன்றி கொன்றமகற்கு," என்பது மது.

எந்த வேதியர்கள், பிதிரர் சிரார்த்ததினத்தில் பெண்புணர்ச்சி செய்வரோ, அவர்கள், மலமும், உதிரமும் சேர்ந்த நுரைகளை யெல்லா வுறுப்புக்களாலும் குடிப்பர். பொன்னைக் களவுசெய்தவனும், பிரமகத்தி செய்தவனும், கள்குடித்தவனும், குரு பன்னியைச் சேர்ந்தோனுமாகிய பாவியர் கீழும் மேலுமாக எரிகின்ற நெருப்பில் பல்லாயிரம் வருடங்களாகச் சுடப்பட்டு, பின்பு குட்ட முதலிய பெருநோயுடையராகப் பிறந்து, துயரப்பட்டிருந்திறந்து மீட்டும் அப்படிப்பட்ட நரகத்தினையேயடைந்து மீட்டும் நோயாளிகளாய்ப் பிறந்து, அப்பிரமகற்பாந்தமட்டி லிவ்வாறே அலைந்துழல்வர். பசுக்கொலை செய்தவன் அதனிலுஞ்சிறிது குறைவாகிய துன்பத்தினை யனுபவிப்பன். பின்பு மூன்று சனனத்தில் அப்பாவ மலனை விட்டொழியும், உபபாதகஞ் செய்தவர்களுக்கும் இவ்வாறே பாவத்திற்குத்தக்க தண்டனை நடவா தொழியாது. இஃதுண்மை, நரகத்து ளிருக்கும் உயிர்களிதனை விட்டொழிந்து போன எவ்வெப்பாவ சேடங்களா லெவ்வெந்தக்கொடும் பிறப்பினை யெடுப்பரோ அதனைக் கூறுகின்றேன் கேளும்.

பதின்மூன்றுவது அத்தியாயம் முற்றிற்று.

பதினொன்காவது

பாவப்பயனான பிறவியுரைத்த அத்தியாயம்.

பாவங்களுக்குத் தக்கபிறவி.

பின்பு அக்காலதூதவன் விதேகராஜனை நோக்கிக் கூறுவன். இருபிறப்பாளன் பதிதனால் தனத்தைப் பெற்றுக்கொண்டால் கழுதையாகப் பிறப்பான். பதிதனால் வேள்வி செய்வித்தால் புழுவாகப் பிறப்பன். உபாத்தியாயன் விடயத்து வஞ்சித்துத் தவறுசெய்தால் நாயாகப் பிறப்பன். உபாத்தியாயன் மனைவியை மனத்தாலிச்சித்தாலும் அவன் பொருளையழித்தாலும், தாய்தந்தையரை யவமானஞ் செய்தாலும் கழுதையாகப் பிறப்பன். தாய் தந்தையரை யிழுத்தலைத்தவன் பூவை நாகணவாய்ப் புள்ளாகப் பிறப்பன். தமையன் மனைவியையவமானஞ் செய்தவன் காட்டுப்புறவாகிப் பிறப்பன். தமையன் மனைவியைத் துன்பப்படுத்தினவன் ஆமையாகப்பிறப்பன். ஒருவனுடைய சோற்றைத்தின்று அவனுடைய பகைவனுக்குப் பணி செய்பவன் அறிவற்ற குரங்காகப்பிறப்பன். நம்பிக்கையால் வைத்தபொருளை வவ்வினோன் கழுதையாய்ப் பிறப்பன். (பாடபேதம் புழுவாவன்) பொறாமையுடையோன் இலாவுகப் பறவையாவன். (பாடபேதம் அரக்கனாகப் பிறப்பன்) நம்பிக்கைத் துரோகஞ் செய்தவன் நாயாவன் (பாடபேதம்—மீனாவான்) தானியம், எள், யவம், நெல், உளுந்து, கொள், கடுகு, கடலை, சோளம், காராமணி, பயறு, கோதுமை, அகத்திக்கீரை, முளைக்கீரை, பிறகீரை முதலிய வற்றினைத் தெரியாமற்றிருடித் தின்றவன், பெரிய கீரிப்பிள்ளை போலிருக்கும் எலியாகப் பிறப்பன்.

அயலவன் மனைவியைத் தொட்டவன் பயங்கரமான கோநாயாகவும், நாயாகவும், நரியாகவும், கொக்காகவும், பருந்தாகவும், பாம்பாகவும், கோட்டானாகவும் பிறப்பன். தமையன் மனைவியைத் திக்காரஞ்செய்த மஹாபாவி ஆண்குயிலாகப் பிறப்பன். நண்பன் மனைவி, குருமனைவி, அரசன் மனைவி யிவர்களைக் காமத்தால் திக்காரஞ்

செய்தவன், செத்துப்பன்றியாகப் பிறப்பன். வேள்விக்கும், தானத்திற்கும், விவாகத்திற்கும் இடையூறு செய்தவன் கிருமியாகப்பிறப்பன். கந்நிகையை மறுமணத்திற்குத் தானஞ்செய்தவன் கிருமியாகப்பிறப்பன். தேவர்கட்கும் பிதிருக்கும் வேதியர்க்கும் உண்டிகொடாது தானே யுண்டவன்பெண் அன்னப்பறவையாவன். (பாடபேதம் காகமாவன்.) மூத்ததமையனை யாவது பிதாவோ டொப்பாவானை யாவது அவமானஞ் செய்தவன் கிரவுஞ்சப் பறவையாகப் பிறப்பன். சூத்திரன் பார்ப்பினியோடு புணர்ந்தால் புழுவாகப்பிறப்பன். அவள்பிள்ளை பெறச்செய்தால் மரத்திலுட் புழுவாவதன்றிப் பன்றி, புழு, மற்கு, தவளை, சண்டாளனுமாய்ப் பிறந்து மனிதருள் அதமனாகிய நன்றி கொன்றவனாய்ப்பிறப்பன். நன்றிக்குப்பதிலாக அபகாரஞ் செய்பவன் கிருமி, தேள் முதலிய கீடம், இறகுள்ள கீடம், முண்மீன், முட்பன்றி, ஆமை, புற்கசனாகவும் பிறப்பன்.

நிராயுதனாயுள்ளவனைப் படைகளாற் கொன்றவன் கழுதையாவான். மாதரையும இளங்குழவிகளையும் கொன்றவன் புழுவாவன். உண்டியைக்களவுசெய்தவன் ஈயாகப்பிறப்பன். இவ்விடயத்திற்சிறிது விசேடமுமுள்ளன. அவைவருமாறு, சோற்றையே திருடினோன் பூனையாவன். எள்ளிட்ட சோற்றைத்திருடினோன் "எலியாகப்பிறப்பன் நெய்யைத்திருடினோன் கீரியாவன். மாமிசத்தை அபகரித்தோன் காக்மாவன. ஆட்டிறைச்சியைத் திருடினோன் நீர் வாழ்வனவாகப்பிறப்பான். மீனிறைச்சியை வவ்வினோன் காகமேயாவன். குறும்பாட்டிறைச்சியைக் களவு செய்தோன் சேனப்பறவையாவன். கிழங்கு, காய்கறி, கீரை, தயிர் இவற்றை எடுத்தோன், புழுவாகப் பிறப்பன, பாலைத்திருடினோன் பேட்டன்னமாவன். எண்ணெயைத்திருடினோன் அவ்வெண்ணெ யுண்ணுஞ் சிற்றுயிராவன். தேனைக்களவு செய்தவன் குருட்டு ஈயாவன். அப்பவருக்கங்களை வவ்வினவன் எறும்பாவன், தேவர்க்குரிய அவிசு திருடினோன் மனைப்பல்லியாகப்பிறப்பன். மதர்ப்பினையுடைய கள்ளைக்களவு செய்தவன சிச்சிலிக் குருவியாவன்.

இரும்பு களவு செய்தால் காகம், வெண்கலக் களவுசெய்தால் பச்சைநிறப்பறவை. வெள்ளி பாத்திரங் களவு செய்தால் புறா. பொன்பாத்திரங் களவுசெய்தோன் கிருமி. ஏர்ச்சீலை பட்டுப்புடவைகளவு செய்தோன் சக்கரவாகப்பறவை. மயிராடை, கம்பளம் களவு செ

ய்தோன் கூடு தெற்றும் பறவையும், உலண்டுப்பூச்சியு மாவன். நல்ல வாடைய களவு செய்தோன் கொம்பிரைச்சற் பறவை, சார்ங்காவப் பறவை. இறந்தால் மின்னும் ஆடைகளைக் களவு செய்தோன் கிளிப் பறவை. பட்டாடை, நயமுள்ள நல்லாடை யிவற்றைக் களவு செய்த தால் ஆடு. சிவந்த வாடையைக் களவுசெய்தால் சகோரம் பருத்தியா டையைக் களவுசெய்தால் கிரவுஞ்சம். நாரினைக் களவு செய்தால் கொ க்கு. வண்ணங்களைக் களவு செய்தால் மயில். சித்திரப்புடவை களவு செய்தால் மயிலும் சித்திர வண்ணப்பறவையுமாவன். வாசனைப்பண் டங்களைக் களவு செய்தால் சுண்டெலி. பழயகந்தையைக் களவு செ ய்தால், சுண்டெலி. பழங்களைக் களவு செய்தோன் நபுஞ்சகன். விறகு களவு செய்தவன் எழுத்துப்பூச்சி. (நீரிலோடும் கருநிறப்பூச்சி.) பூக் களைக் களவு செய்தோன் தரித்திரன். வாகனங்களைக் களவு செய்தா ல் காலில்லா முடவன். சலத்தைக் களவு செய்தோன் நிலாமுகிப்பற வை. நிலத்தைத்திருடினவன் இரௌரவமுதலிய கோர நரகங்களை யனுபவித்து, புல், புதர், கொடி, நார், சிறு செடிகளாகவும் பிறந்து பாவங் குறைந்தபின் பாவியான மனிதனாய்ப் பிறப்பன்.

பசு, பொன் முதலியவற்றைத் திருடின பாவியர் நரகங்களையனு பவித்துப் புழு, கீடம் பறவைப்புழு, பறவை, நீர்வாழ்வன, விலங்கு முதலிய பல பிறவிகளையுமெடுத்துப் பசுவாய்ப் பின்புலையன், புழுத் தின்னி, முடவன், குருடன், செவிடன், குட்டநோயாளி, க்ஷயரோகி, வாய்ப்புத்துடையோன், கண்ணிரண முடையோன், ஆசனரோகி யெனப்பிறந்து வேதனையுற்றுப் பித்தனாய்ப் பின்னர்ச் சூத்திரனுமாய்ப் பிறப்பன். இவ்வாறே பாவியர்க்குப் பிறவிகள் உண்டாயிருக்கும்.

வித்தைகளைக் களவிற்கற்றவனும், குற்றத்திற்குத் தக்க பிராயச் சித்தஞ்செய்து கொள்ளாதவனும், விலக்குமுன்னுடம்பட்டுப் பின் மறுத்தவனும், குருபன்னிக்குத் துரோகஞ்செய்தவனும், பிறர்மனை வியைவேறொருவன் புணர்ச்சிக்கு இணக்கிவைப்போரும், மகாகோர நரகங்களைத் துய்த்துமுடிவில் நபுஞ்சகராயும் மூடராயும் பிறப்பர். பார், நன்றியறியாததில் வேறொருமஞ்செய்கிறானோ, அவன் அக்கினி மந்தம் அசீரண ரோகமுடையவனாவான்.

நரகத்தினின்றும் வந்தவர்களின் அடையாளங்கள்.

அந்நியரை நிந்திப்பவனாயிருப்பன். செய்நன்றியை மறந்துவி டுவன். பிறர்பழியையே ஆராய்ந்தெடுத்துத் தூற்றித்திரிவன். யுவதை

யும் வைத கடினகுணமுடையவனாகவு மிருப்பன். தயவிராது, பிறர் மனைவியரையே விரும்பிக்கிடப்பன். அயலவர் பொருளை வவ்வுகின்றவனுவன். துக்கமுற்று அழுதுகொண்டிருப்பன். தெய்வநிந்தை செய்வன். நீதியற்றுப்பிறரை வஞ்சிப்பன். மிகுந்த உலோபமுடையவனுவன், பிறவுயிர்களை வதைப்பன் இன்னும் யெதுவெது செய்யலாகாதனவோ அவற்றையெல்லாஞ் செய்திருப்பன். இவையெல்லாம் நரகத்தினின்றும் வெளிப்பட்டுவந்தவர்களுடைய அடையாளங்களாம் " தீவினையாரஞ் சார்விழுமியாரஞ் சவர், தீவினையென்னுஞ் செருக்கு" என்பதனால்.

சுவர்க்கம் புகுந்துவந்தவர்களின் குறி.

எவ்வகை யுயிர்களிடத்திலு மிரக்கம், நல்லசொற்கள், மறுமைக்கினிமையான தொழில், சத்தியம், உயிர்க்கினிமையாகியமொழி, வேதப்பிரமாணத்து நம்பிக்கை, குரவர், தெய்வம், சித்தராதிபெரியரைப் பூசித்தல், நல்லோருறவு, நல்வினையிற்சிந்தை, யாவரிடத்தும் நண்புடைமை, அறிவுடைமை, தெளிவு, தருமவெண்ணம், நன்மைக்கிசைந்த குணமுடைமை, நகரம் புகினும் பிறக்கினும் பாவங்களையும் உபபாவங்களையும் ஒழிக்கவேண்டுமென்னுங் கருத்துடைமையுமாகிய விவையெல்லாம் சுவர்க்கத்தினின்றும் வந்த புண்ணிய சீலரின் அடையாளங்களாம்.

ஓய் அரசனே! அவரவர்கருமப்பயனை அனுபவித்திருக்கும் புண்ணியர்க்கும் பாவியர்க்கும் உண்டாகும் கதிமுறையே கூறியவாறாயிற்று. நரகத்தினையும் பார்த்தீரன்றோ இனிவாரும் வேறோரிடத்திற்குப் போவோம் என்று கூறிய இயமன் றூதுவனை முன்செலுத்தி அவ்விதேகராசன் புறப்பட்டுப்போக முயலுகையில், அந்தநரகத்தில் பெருந்துன்ப முழந்திருக்குஞ் சீவர்கள் அவ்வரசனை நோக்கி, ஓய் மஹாராஜனே! எம்பாலருளுடையராய் இன்னும் முகூர்த்தகாலம் இங்குத்தானே யிரும். உம்முடைய உடம்பிற்பட்டு வருங்காற்று எங்கண்மேற் படுதலால் மனக்களிப்பினையும் நோய் அறுகையையுந் தருகின்றது என்று கூறலும், அம்மொழியைக்கேட்டவேந்தன் காலதூதனை நோக்கி, வினவுகின்றான். நான் இங்கிருந்தா லிவர்களுக்குச் சுகமுண்டாவதற்குக் காரணமென்னை, அவ்வளவு பெரும்புண்ணியம் பூவுலகத்தென்னை செய்திருக்கின்றேன் கூறுதியென; காலதூதவன் உரைக்கலாயினன்.

ஐயா! பிதிரரையும், தேவரையும், விருந்தினரையும், ஏவலரையும், காக்கப்படத்தக்க ஏனையசுற்றத்தினையும், பெரியோரையும் உண்டிமுதலியவற்றால் உம்முடைய தேகம் உபசரித்தது, உமது மனம் அத்தருமத்தினிடத்தே தங்கியிருந்தது. ஆதலின், புண்ணியமுடைய உமதுடம்பின் சம்பந்தமுடைய காற்று இப்பாவியர்மீது படுந்தோறும் அவர்கட்குச் சுகஞ்செய்கின்றது. அப்பொழுது அந்நரகத்திருப்பவர்க்குத் துன்பமுண்டாகாது. மேலும் நீர் அசுவமேத முதலிய பெரியவேள்விகளனைத்தினையும் விதிப்படி செய்துமுடித்தவர். ஆதலின் உம்மைப் பார்த்தலினால் இயமன் றூதுவரும், நரகவியந்திரங்களும், ஆயுதங்களும், தீயும், காகமும், துன்பம்புரிவது, வெட்டுவது, சுடுவது, முதலியவற்றிற்குரிய கருவிகளும் உமது தருமவொளியால் வலிகுறைக்கப்பட்டனவாய் அந்நரகத்துட்டங்கு முயிர்களை வருத்தாமல் மெலியவாயிற்று என்றான்.

அதனைக்கேட்ட அரசன், நான் இங்கிருந்தால் என்முன்னேயிந்நரகத்துயிர்களுக்குத் துன்பந் தவறுவதாயுள்ள பக்ஷத்தில், ஓ நல்லவனே! யான் யிவ்விடம் விட்டுவாரேன். பெரும்பாறைக் கற்போலிவ்விடத்திற்றானே அசைவற இருத்தல் செயக்கடவேன் என்றான்.

அப்போது, அக்காலதூதுவன் அரசனைநோக்கி, வேந்தர்வேந்தே! வாரும் போவோம். பீடையாற் சுற்றப்பட்ட சீவரையொழித்து நீர்வருந்தித்தேடிய புண்ணிய போகத்தினை நுகரும் என.

அரசன், சுவர்க்கத்திலாயினும், பிரமனுலகத்திலாயினும். துன்பமுறுபவர்களது துன்பத்தினையொழிக்க முயலாது தானொருவனே சென்று சுகமுற வேண்டுமென்றெண்ணுவோனுக்குச் சுகமென்றுமுண்டாவதில்லையென்பதென்றுணிவு. ஆதலின், இங்கிப்பெருந்துயருழக்கும் உயிர்கள் நானிங்கிருப்பதனாற் றுன்பமுறாதிருத்தலால் இனி யெங்கும் நான் செல்லேன். நீயே திக்கு என அடைக்கலம் புகுந்து படபடத்துத்துயருக்கு ஆற்றாமல் வேண்டி நிற்குமுயிர்கள் பகைவரே ஆயினுமென்னும், அவரைக்காவாது விட்டவன் பிழைப்பு சீச்சீ மிக விழிந்தது. இஃதுண்மையானதே யாம். யார்க்கு மனம் துன்பப்படுவோர் விடயத்து இரங்கல் செய்யாதோ அவனுக்கு வேள்வி, தானம், தவம், மறுமையிலாக்கத்தைத் தராவாம். ஏவலனுடையநெஞ்சு இளங்குழவிகள், துக்கமுறுபவர், விருத்தர் முத

விதியோர்பால் வசிமைப்பட்டு இரக்கமற் றிருக்கின்றதோ அவனன்றோ, அரக்கன். 'இவரிடத்து நானிருந்தால் நெருப்பழற்சித் துன்பமும், கொடுநாற்றத்துன்பும், நரகவேதனையும், பசிதாக துக்கமும், மூர்ச்சிக்குந்துயரும் இவைபோன்ற மற்றைய பெரும்யாதனை யெல்லாமென்னை வருத்தலுஞ் செய்யாது. யானும் வருந்தேன். இனியிவர்கள் உயிர்க்கு உறுதிதேடுவதே யெனக்குச்சுவர்க்க சுகமுண்டாவதற்காயினு மேலானதென்று தோன்றுகின்றது. நான் இவ்விடத்திலிருந்தால் துக்கசீவர்கள் பலர் சுகத்தையடைபவரானல் அந்தப் பயன் எனக்கு எதனைத்தான் தாலாற்ருது. ஆதலால், விரைவில் நீ சென்று விடு என்ருன்.

அறக்கடவுளிந்திர னரசனைக் காண்டல்.

அதுகேட்ட காலதூதுவன், ஓய்வேந்தே! இதோ! அறக்கடவுள் இதோ! தேவர் கோமான், இவ்விருவரும் நின்னை யழைத்துச்செல வந்திருக்கின்றனர். நீர்மறுக்காது செல்லவேண்டும். ஆதலின், நீச் போம என்ருன்.

அங்ஙனம் அறக்கடவுளும், ஐயா! வேந்தே! நீர் நன்கறம்புரிந்தீராதலின் உம்மைச் சுவர்க்சமபுகுவிப்பேன். இநத விமானததேறும் போது போக்கல வேண்டாம், வருக, என.

அரசன், அறக்கடவுளே! இந்நரகத்துப்பாவியர்களான மாந்தர்கள் பல்லாயிரவராய்த் துன்புறுத்தப்பட்டு, என்னை நோக்கிக் காசுக வேண்டுமென இரந்து அழுகின்றனர். ஆதலின் யான் வருதற்கிசையேன் என்று கூறினன்.

அதன்பின் இதிரன், ஓய்! இறைவனே! இப்பாவஞ்செய்த வுயிர்களுக்கு அவரவர்வினைப்படி ஒரு தலையாக நரகமேயுண்டாயிற்று. நீர்செய்த நல்வினையால், ஒரே துணிவாக நீர்சுவர்க்கம் போகல வேண்டும் என்ருன்.

அப்பால் அரசன் ஓய்! தருமதேவதையே! ஓய்நூறுவேள்வி புரிந்த தேவர்கோவே! உங்கட்குத் தெரிந்திருந்தால், எவ்வளவு சுபமெனக்குண்டாமோ அதனை யெனக்குத் தெளியவுரைக்கத்தக்கவராயிருக்கின்றீர்கள் என்ருன்.

அச்சமயத்துத்தருமன் கூறலாயினன். ஐயா! சமுத்திரத்தில் நீர்த்துளி இருப்பதுபோலும், ஆகாயத்துள் நக்ஷத்திரமண்டலம் போலும் மழையில் நீர்த்துளிபோலும், கங்கைக்கரையின் மணற்குவியலைப்போலும், யோனிபேதங்களுள் உயிர்களைப்போலும் நீர் செய்த புண்ணியங்களுக்கும் அளவில்லை. இந்நரகத்துத் துன்புறும் பாவியரிடத்துத் தயவைச்செலுத்தியதால் உமக்கு முன்னுண்டாயிருந்த புண்ணியம் நூறுபிரம் பங்கதிகமாயிற்று. ஆதலால், அரசருட் சிறந்தோய்சுகத்தையனுபவிக்கும் பொருட்டுத் தேவருறையுளடைக. இந்நரகப்பிராணிகளோ அவரவர்செய்த கருமப்பயனை நூர்சந்தொழிக்க, என்றான்.

அப்போதரசன் அதனைக்கேட்டு, நான் அவர்களிடத்திருக்கும் போது, அவர்களுக்கொரு நன்மையுண்டாகாதொழியின், நான் இருக்கவேண்டும் என்னும் எண்ணம் அவர்கட்கேன் பிறந்தது, ஆகவே, ஒய் தேவர்கோவே! யான் இதுவரையினும் ஏதேனும் சிறிது புண்ணியஞ்செய்திருப்பேனாயின் அதனால் இந்நரகத்துத்துன்பவேதனைப்படும் பாவியரெல்லாம் துன்பத்தினின்றும் விடுப்படுவாராக வென்றான்.

அதற்கிந்திரன், அரசனை நோக்கி, ஓய் வேந்தே! இவ்வாறேயன்றே நீர் பெரும்புண்ணியந் தேடிக்கொண்டீர். நரகத்தினின்று நீங்கிப்பாவமொழிந்து சுகமுற்றிருக்குமிவர்களைப் பாரும் என்றான்.

கேட்டீரோ தந்தையே! பின் பவ்வரசன் மேற் பூமழை பொழிந்தது. உடனே இந்திரன் அவ்வரசனை விமானத்தேற்றிச் சுவர்க்கம் புகுவித்தனன். அப்போது யானும், மற்றையரும் அந்த நரகத்துள் வேதனைப்படுத்தி யிருந்த பாவத்தினின்றும் விடுவிக்கப்பட்டவராய் மேல் யாம் அடையத்தக்க மற்றொரு பிறவியை யடைந்தோம். கேளும் அந்தணருளுத்தமனே! எவ்வெப்பாவத்தாலெவ்வெப்பிறப்பினையடைதல் வேண்டுமோ, அவைகளெல்லாம் நேரே அனுபவித்தவென்னாலே கண்டவாறே யுமக்குக் கூறப்பட்டன. எனக்குச்செல் பிறவியுணர்ச்சி யுண்டாயிருப்பது வீணல்ல ஓய் தொழுதகு சிறப்பிற் றந்தையே! இனியுமக்கு யான் கூறத்தக்க தென்னுள்ளது என்றான்.

பதினான்காவது அத்தியாயம் முற்றிற்று

பதினைந்தாவது

தத்தாத்திரேயர் அவதாரம் கூறிய

அத்தியாயம்.

அங்ஙனம், மகன் கூறியனவெல்லா முற்றுங்கேட்ட பிதாவான வர், மைந்த! இதுவரையும் சமுசாரத்தினிலைமையும் நாழிகையளக் கும் கன்னல் வட்டில்போல விடாது சுழலும் இவ்வுடம்பினிலைமை யுங் கூறினை இவையெல்லா மறிந்தேன். ஆயின், இனியான் செய் யக்கடவது எதுவோ அதனைக்கூறல்வேண்டுமென மகனுங் கூறலா யினன்.

ஐய! ஐயமுறாது என் சொல்லினை நீர் நம்புவதுண்மையாயிருந் தால், இவ்வில்லற ஒழுக்கத்தினை விட்டு, வானப்பிரத்த நிலைமைபுரி தல் வேண்டும். அங்கதனை விதிப்படி யனுட்டித்து, வேள்வித்தீ முத லியவற்றினை முறையே விடுத்து, நுமது கருத்தினைத் தன்னிலை நிற் கப்புரிந்து, சுகதுக்கமுதலிய துவந்துவங்களை (இரண்டு படுமவை களை) விடுத்து, எனது என்று எழும் புறப்பற்றையும் யான் என்றெ ழுமகப்பற்றையும் ஒழித்துத் தனியேயிருந்து, மனத்தினையும் பொறி களையும் வயஞ்செய்து கொண்டு, "நெடுநீர் மறவிமடிதுயிலிந்நான் குங், கெடுநீரார் காமக்கலன்." என்பது ஒத்தாதலின் இந்நான்கு பெருந்தடைகளையுமொழித்து விழிப்புள்ளவராய்ப்பிச்சையேற்றுண் ணும் துறவியாகுதிர். அத்துறவற ஒழுக்கத்தில் நின்று யோகமே பொருளெனக்கொண்டவராய், வெளிப்பரிச முதலிய விடய சம்பந் தங்களை விட்டொழிந்தாற் பின்னர் யோக நிலைமையைப் பெறுவீர்.

இனி அந்தயோக மெத்தன்மைத்தெனில், துன்பத்தொடக்கா கிய நோய்களுக்கு மருந்தேபோல்வது. முத்திக்கு விததாயுள்ளது. தன்னேடொப்ப தொன்றில்லாதது. சொல்ல வெட்டாதது. யா தொன்றின் பற்றுமில்லாதது. அது உமக்குண்டாயின் நீர் செய்யும் யோகப்பழக்க மீட்டும் உமக்குப் பூதங்களோடு கூடுங் கூட்டுறவினை யொழிக்கின்றது என்றான்.

அப்போது பிதாவானவர், குமார! எந்தயோகம் முத்திக்குக் காரணமாகுமோ, எதனுல் யான் பூதங்களினின்றும் பிரிந்து இனி

என்று மித்தகைய துன்பத்தினைப் பொருந்தேனே, எதனால் சமுசா ரக்கட்டினைத்து மற்றுவிடுமோ, எதனால் இரண்டு பிறந்திறமுண்டாவ தில்லையோ, அப்படிப்பட்ட யோகத்தினைக் கூறுதி. சமுசார மென்னுங் கோடை வெயிலினால் மிகவும் உலர்ந்து பசையற்றவுடம்பினை யும் மனத்தினையும் உடைய என்னைப் பிரமஞான மென்னுங் குளிர்ந்த சொல்லமிழ்தத்தினால் நனைப்பித்திடுதி. அவித்தை அஞ்ஞான மென்னுங் கொடுவிடப் பாம்பினால் கடியுண்டு விடந்தலைக்கேறி, உறங்கிச் சாகக்கிடக்குமென்னை யுன்மொழிமருந்தால் மீட்டும் பிழைப்பித்து, மனைவி, மக்கள், மாடம், பொருள் முதலியவெனது என்னும் மமகார விலங்குபூண்டு கிடக்குமென்னை, அவாவத்தக்க வுண்மைப் பொருளுண்டு என்னும் நல்லறிவை விளக்குதலினால் விடுவித்தி என்றார்.

அதுகேட்ட அச்சிறுவன், ஐயரே! சேனும் முன்னம் ஞானியாரான தத்தாத்திரேயர் நன்றாகக்காணப்பட்ட ஞான அனுபவத்தால் அலர்க்கன் என்பவருக்கு யோகத்தினை எவ்வாறு கூறினரோ அதனை விரித்துமக்குக்கூறுவல் என்றான்.

அங்ஙனம் அவ்வேதியன் மைந்தன் முகநோக்கி, சிறுவ! அந்த தத்தாத்திரேயர் என்பவர் யாரமகன், அவர் எங்ஙனம் யோகத்தினைக் கூறினர், அலர்க்கன் என்பவன் யார், அச்சான்றோன் எவ்வாறு யோகநிலைமையைப் பற்றிவினாவினர், அதனை விளங்கக்கூறுதி யெனத் தநயன், கூறலாயினான்.

கௌசிகன் மனைவியின் கற்பு நிலைமை.

அப்பரே! பிரதிஷ்டானம் என்னும் நகரத்தில கௌசிகன் என்னும் பெயரையுடைய ஒருவேதியன் இருந்தான். அவன் முற்பிறவிகளிற் செய்த தீவினைப்பயனால் குட்ட நோயால் மிகநோதலையடைந்தானாக, அவன் மனைவி அத்தகைய கொடுநோயுழக்குங் கணவனைத் தெய்வமாகவே நினைத்து, காலகழுவல், வருடுதல, உடம்பினைத்தைவரல், எண்ணெய் பூசுதல், ஆடையுடுப்பித்தல், உண்டியுதவல், கபம், உதிரம், சீழ், மூத்திர புரீடமுதலியவற்றின் பெருக்கினைப்பல்காலுங் கழுவல், அந்தரங்கமான வுபசார மனைத்தினையும புரிதல், அன்போடுரையாடல், மிகவடங்கி யொழுகுதல் முதலிய இத்தகைய வகைமை

யால், பொறுமையுடையவளாய்ச் சிறிதும் மனங் கூசாமற் சிரத்தை யோடும் பூசித்துவந்தாள். அந்த நோயாளியோ அறக்கொடிய வெகுளியனாய நிட்டூரவார்த்தைகளால் வைது, அச்சமுறுத்திவருவன். அக்கற்புடையாளோ கொழுநனை அங்ஙனமாயினுந் தான் வணங்கித் தொழுது, அவனைக் கடவுளும், மிகச்சிறந்தோனுமாகக்கொண்டு நய மிப பணிபுரிந்திருந்தாள்.

பின்பந்த அந்தணன், உலாவித்திரியாதிருந்தானாயினும் மனைவியை நோக்கி யொருநாள், ஏடி பெண்ணே! இராஜமார்க்கத்திலுள்ள கணிகைமாதொருத்தியை இன்று காலையிற் கண்டேனாக, இப்போது மாலையும் வந்தது. அந்த நோயோ என் மனத்தினை விட்டொழிந்ததில்லை. தருமமுணர்ந்தவளே! என்னை அவளிடஞ் சேரப்பண்ணுதி. கண்டது முதல் அவள் என்னெஞ்சை யொழித்தகலாள். ஆவா! அவள் வடிவமுற்றும் எத்துணை மேன்மையது, அவளென்னையணையா தொழியின் ஒழியாதழியு மென்னுவியாக வுடம்பொன்றினையே பின்னர் நோக்குவை. மானுடர்க்குக் காமமென்பது மிகவினிமையாவது அன்றே, அம்மாதோ பலராலும் வேண்டப்படுபவளாகின்றனள். அவள்பால் யான், செல்வது முடிவுறாதே யாயினும் எண்ணமாத்திர மென்னைவிடாது துன்புறுத்துகின்றது என்றான்.

அங்ஙனம் காமத்தால் வருந்திய தலைவன் கூறிய சொற்கேட்ட அக்கற்பினளாகிய நற்குலமாது, தன் ஆடையை நன்குடுத்தி, அவ்விலைமாதினுக்குக் கொடுக்கத்தக்க பணயத்தினையுங்கொண்டு, தோளிற் கொண்கனைத்தாங்கி மெல்லநடந்து, அந்த விராயமார்க்கமாகச் சென்றனள். அவ்விரவு மழைக்காலிறங்க கருகிருள்மூடி மின்னலால் வழி காணலாயிற்று. இங்ஙனமாக, அவ்வழியில் முன்னமே களவு என்பது சற்றுமறியாத மாண்டவ்வியர் என்னும தொழுகுலச்செல்வர் களவுக்குற்றஞ் சார்த்தப்பட்டுத் தண்டனையாகக்கழுமுனையேற்றப் பட்டிருந்தனராக, அவர்மாகவிருடி, இவ்விருளிற் செல்லுங்கற்புடை மனைவிதோள்மேற் செல்லுங்கணவனான கௌசிகன் கால்பட்டு அம்மாண்டவ்வியமுனிவர் அசைவுற்றுவருந்திகூறலாயினர் அநியாயமாக இவ்வாபத்துட் சிக்கி வருந்திக்கிடக்கு மெனக்கு மிகுநோயுண்டாம் படியாரால் காரணமின்றியான் அசைக்கப்பட்டேனோ அப்படிப்பட்டபாவியாகிய அதமன், சூரியனை நோக்குதலும் நாசத்தினை யடைகவென்று சபித்தனர்.

கற்பினலம் வெளிப்படுதல்.

அப்போது, அந்நோயாளனான கௌசிகன் மனைவி, அம்மாண்டவியமுனிவரிட்ட கொடுஞ்சாபங்கேட்டு வருத்தமுற்று, அங்ஙமாயிற் சூரியனுதயமாகாதொழிகவென்று தானுஞ் சபித்தனள். ஆகவே, அப்பெருங் கற்பினள் சொல்லினுண்மை யுறுதியாற் பின்சூரியன் குணகடல் குளித்தெழுதலை யிழந்தான், உலகமெல்லா மிருள்சூழ்ந்து என்றுமிரவாகவேயிருந்தது. அவ்விரவில் பலபகற்போதிறாதொழிந்தது. அதனால் அமரரும் அச்சமுற்றனர். வேதமோத வொழிந்தது. "வஷட்டு, சுவாஹா, சுவதா," எனுமந்திரங்களைக் கூறக்கடவதாய கருமங்களொன்று மின்றியது, அந்தோ! இவ்வுலகமெல்லாம் எவ்வாறு நாசமுறுது நிற்கும். இரவிது, பகலிது என்னும் வேற்றுமையில்லையாயிற் பக்கமெங்குள்ளது, மாசமேது, இருது எவ்வாறும், இனிதக்ஷிணாயனமெங்கே, உத்தராயணமெங்கே, யாண்டு என்பது யாண்டு கிடந்தது, அப்பால் காலவுணர்ச்சிக்கு மூலமுண்டோ, இக்கற்பினள் உரையால சூரியன் புறப்படுதலில்லையாயிறறு. அக்கதிரவனெழாவிடின் மன்பதை ஸ்நானதானங்களைச் செய்யார். தீக்கருமமும் வேளவியு நிகழாபோலும். வேள்வியில்லா வழி எமக்குத் திருத்தியுமுண்டாமே, மாந்தர் தக்கவாறு வேள்வியினுரிய பாகத்தைக் கொடுக்கினவற்றால் களிபடுற்றுப் பைங்கூழ்விளைய மழைபெய்வித்து மக்களைப்புரத்தல் செய்வேம். விளைவுண்டாயினவற்றான் மானிடரெம்மைப் பூசிப்பர். அங்ஙனம் பூசித்தார் எண்ணத்தினையுமயாம்முற்றுவிப்போம். யாம் நீர் பெய்விப்பேம். மாக்களெமக்கவிமழை பெய்விக்கின்றனர்.

எந்தமனிதன் எம்மைநோக்கி நித்தகருமமும் நைமித்திககருமமும் பிறகருமமுமதொடங்கி எமக்குரிய அவிர்ப்பாகங்களைக்கொடானோ, அல்லது தானே நுகர்வானோ, அவனையழித்தற் பொருட்டேயாம் நீர், இரவி, நெருப்பு, காற்று, நிலம் இவற்றைக்கெடுத்து விடுகின்றேம். தனது தருமத்தினைத் தவறும்படி விட்ட அப்பாவிக்குக்கெட்ட நீர்காற்றுமுதலியவற்றால் நோய்முதலிய வேதனைகள் பிறக்கின்றன. கொடியவக்குற்றங்கள் அவர்கள் மரணத்தினுக்கு ஏதுவாகின்றன. எங்களைக் களிப்பித்தல்செய்து முறையேகருமங்களைச்செய்து, மிக்கசேடத்தினை அனுபவிக்கின்ற பெரியோனுக்குப் புண்ணியமும் போகமும் யாமளிக்கின்றனம். இங்ஙனமாக, அவைக

ளனைத்திற்குங் காரணனான பகலோனில்லாமையால் மழையின்றி மேற்கூறிய வனைத்தும் கட்டோடுசாய்ந்தது. அந்தோ! இங்ஙனமா யிற்றாக வினிபகற்போதெவ்வாறுண்டாம், வேள்வியற்றதேபோலும் என்றிவ்வாறு சுரர்கள் ஒருவரோடொருவர் பேசி, ஏக்கமுற்றுச், சிந்தித்திருந்தனர்.

அங்கு அம்மொழிகளைப் பிரமதேவன் கேட்டுரைக்கலாயினர். ஓய்! தேவரே! ஒளியொளியானே யடங்கல் வேண்டும், தவம்தவத்தாலே யொடுங்குகின்றது. ஆதலால் என்னுரையைக் கேட்பீர்களாக. கற்பினளது கற்பின் பெருமையாலினி வேறுசூரியன் காணப்படுதலில்லை. அதனாலுங்களுக்கும் மானுடர்க்கும் நேருந்துன்பமொழியாது. ஆபின், அத்திரிமுனியின் பன்னியும் பெருங்கற்பினளுமாய அனுசூயையை நீவிரனைவருஞ்சென்று வழிபட்டு ஞாயிறெழுச்சியின் பொருட்டுப் பிரார்த்திப்பீர்களாக வென்றேவலுந் தேவர் சென்று அவ்வம்மையைத் துதித்தனர்,

சேளும் தந்தையே! பின்பவ்வாறே தேவராற் பூசிக்கப் பெற்ற வவ்வனுசூயையாரவர் நீவிர் வேண்டிற்றை வினவுதிரெனத் தேவரும் முன்போல ஏற்பாடுண்டாகவென்று வேண்டினர். வேண்டலும் அவ்வம்மை யுற்றுநோக்கிக் கற்புடையாளது பெருமை கெடுவதல்ல ஆதலின், நீவிரனைவரும் அவ்வம்மையாளைநன்று உபசரிமின். முன் போலுமுறையே யிரவும் பகலு முண்டாதல் வேண்டும் அக்கற்புடையாள கணவனு முயிர்பெற்றிருத்தல் வேண்டும். அங்ஙனம் பகலையாக்குகின்றேன் என்றுகூறி அனுசூயையார் அக்கற்பினள் மனைக்குச் சென்றனர்.

அனுசூயைக்கும் கௌசிகன் மனைவிக்கும் சம்வாதம்.

அனுசூயையார், அச்கற்புடையாளது மங்கலத திருமனைக்குட் புக்கு அவராலுபசரிக்கப்பட்டு க்ஷேமங்களை விசாரித்தனராய், செல்வத்திருமகளே! நீயும், உன்கணவனும், உன்னறும்ம் நன்று வாழ்கின்றனிரோ, சௌபாக்கியவதி! உன்கணவன் முகத்தினைக்காண்டன் மாத்திரையாற் களிப்படைகின்றனை யன்றோ, தேவரனைவரினும் நின் கொழுநன் சிறந்தோனென நீ ஓம்புகின்றனையன்றோ, யான் ஏன் வினவுவதென்னையேல், மாதர்க்குக் கற்பொன்றினாலே யெல்லா மேன்

மையு முண்டாதல் வேண்டும். என் தலைவனை நான் பூசித்தலான்
பெரும்பயனை யடைந்திருக்கின்றேன். மாதர் தங்களுக்குரிய தரும
த்தினை நன்குணர்ந்தொழுகல் வேண்டும் என அஃதெவ்வாறன்னவே
யென வக்கர்பினள் வினவுதலும் அனுசூயை கூறலாயினர்.

மாதராடவ ரொழுக்க வியல்.

சற்புடைமாதே! மனிதனுக்கு ஐவகைக் கடனுள்ளன. அவை
தேவர்கடன், பிதிராகடன், மானுடர்கடன், முதலியவாம். இல்லறத்
தான் அக்கடனை எப்பொழுதுந் தீர்த்துவருதல்வேண்டும். தனவரு
ணாச்சிரம தருமத்திற்குக் குறைவறாத பொருளினைத்தேடுதல் வேண்
டும். அங்ஙனம் தேடிய பொருளினைத் தக்க வழியிற் செலவழித
தல் வேண்டும். என்றும் சத்தியம், செவ்வனொழுகுதல், தவம்,
கொடை, அருள், இவற்றோடு கூடியே யிருத்தல் வேண்டும், விருப்பு
வெறுப்பினை யொழித்து நாலா னுரைக்கப்பட்ட நல்வினையை நா
டோறும் ஒரு கலைபாகத் தன்னுலியன்றளவு செய்தல் வேண்டும்.
இங்ஙனம் அறஞ்சோரு தொழுகு மாண் மகன், தன்சாதிக்குத் தக்க
புண்ணிய வுலகத்தினையே பெறுவன். பின்னர் பெருமுயற்சியால் பிர
மலோக முதலிய வற்றினைப் பெறுவன். இவ்வண்ணம் அரிதாமுய
ன்று ஆண் மகன் தேடிய வெல்லாத் தருமத்தினும அரைப்பங்கு
பயனை அவ்வாண்மகனுக்கு வாழ்க்கைத்துணையாய் நின்று பூசித்து
வரும் மனைவி கொள்ளை கொள்கின்றாள். மாதர்க்கு வேறு வேள்வி
யில்லை. வேறு பிதிரர் கடனில்லை. வேறொரு விரதநோன்பும் இல்லை.
இவ்வகைய மாதர் கொழுநனை ஓம்புதல செய்யவேண்டு மென்னுமு
சத்தியமாகிய எண்ணம் ஒன்றினாலே தானே தாமிச்சித்த வுலகத்தி
னைப் பெறுகின்றனர். ஆகலால், ஓ பெருங் கற்பின் மாதே! கணவ
னை வழிபடுதலைப் பற்றி நினக்கு ஞாபகஞ் செய்தனன். உனக்கு மே
லானகதி உன் கொழுநன்றான். அவனிடத்தே நின்னெஞ்சு எப்பொ
ழுதுஞ் சென்றிருத்தல்வேண்டும். நாயகன் புரியுந் தேவ யாகத்தி
னும், பிதிரர் முதலியோர்க்குச் செய்யும் அருச்சனையினும் மற்று
முள்ள எவ்வகைப்பட்ட நற்கருமத்திலும் சரி யொத்த பாகத்தினை
மனங் கலங்கா நிலைமை பெற்ற கற்புடைய மனைவி, அந்த கொண்
கனைப் பூசித்தல் என்கிற ஒரு கருமத்தினாலேயே பெறுகின்றனள்
என்றார்.

அது கேட்ட அக்கௌசிகன் மனைவி யன்போடு, அன்னையே! நன்று கூறினீர் என்று மிகுந்த வடக்கத்துடன் கூறத் தொடங்கினள். இயற்கை மங்கலக் கருவூலமாகிய என்னம்மே! எனக்குச்சிறிதே யுண்டாயிருந்த பதி பத்தியை வளர்க்கின்றனையே! யான் புண்ணிய முடையவளாயினேன். அருளப்பாட்டையும் பெற்றவளாயினேன். தேவராலும் நன்றருள் செயப் பெற்றேன். தேவரீர்கூறிய செய்தி யானு மறிவேன். உண்மையே! மாதர்க்குக் கணவனேடொத்த நற்கதி சத்திய மாகவே வேறொன்று மில்லை. கொழுநனுக்கு அன்புண்டாகச் செய்வது இம்மையிலும் மறுமையிலும் செய்த மனைவிக்கே துணையாகின்றது. எந்த மனைவியி னிடத்து அவள் கொண்கன் அருளுடையவனா யிருக்கின்றானே, அம்மாது உயிரோடு கூடி வாழு நாளினும் இறந்தொழிந்த நாளினும் சுகத்தினையே பெறுவள். ஆதலால், மாதர்க்குக் கணவனே யன்றோ பெருந்தெய்வம். தொழத் தகும் அனுசூயைத்தாயே! நீரும் அதநிறத்துப் பெருங் கற்புடையவரே யன்றோ, யாவரும் தொழத்தகும் நீர், என் சிறு குடிலுக்கு எழுந்தருளியவா றெதுவோ, என்னாலாயினும், என்சாமியான தலைவராலாயினும் தேவரீர்க்கு ஆகவேண்டுங் கருமம் யாதோ, என்று வினவினாள்.

அப்போது அனுசூயை யானவர், இத்தேவர்கள் இந்திரனோடும் என்பால் வந்து குறையிரந்தனர். உன்வாய்ச் சொல்லினல் இராப்பகலும், அவ்விராப் பகலிலுண்டாம் நற்கருமமும் இழந்தோராய் வருந்தி, முன்போலப் பகலிரவு உண்டாகப் பெறுதல் வேண்டி நினை யிரக்கின்றனர். அவர் பொருட்டாக யானும் நின்மனைக்கு வந்தேன். யான் கூறுமொழிகளைச் சற்று நெஞ்சிருத்திக் கேட்பாயாக பகற் போதின்மையால் யாவர்க்கும் வேள்வி முதலிய கருமங்கள் இன்றாயின. அதனல் வானவர்க ளனைவரும் உண்டியற்றவர்களாயிளைக்கின்றனர். ஆதலால் தவமுடையாளே! பகலே யில்லாதொழிந்தால் எத்தொழில்தான் நடக்கும். சூரியன் காணவிடின் மழையும் பெய்யுமா, மழையின்றாகில் உலகம் பிழைக்குமா, உன்சொல்லால் உலகமே பாழ்படுகின்றது. உலகமனைத்திற்கு முண்டாயிருக்கும் பேரிடரை யொழிக்கவேண்டு மென்னுங் கருணையுனக்குண்டாகுமாயின் கற்புடையாளே! முன்போலச் சூரியோதயமாம்படி அனுக்கிரகித்தலைச் செய்யென்றார்.

அங்ஙனம் அந்த பார்ப்பனியும், பெரும்புகழ்க் கற்பின் அநுசூயையாரே! மாண்டவிய முனிவர் பெருஞ்சினம் பூத்தவராய்க் கதிரவனுதயமானால் நீயிறந்தொழிவாயென்று என்தலைவரைச் சபித்தனரே யான் என் செயக்கடவேன் என்றாள்.

அதற்கனுசூயை, ஓ கற்புடையாய்! யான்சொல்லுஞ் சொல்லுனக்கு இனிமையாயிருப்பின், யான் என் மொழியால் உன்கணவன் முன்போல நல்ல யாக்கையுடையனாய்ப் பிழைத்திருக்கச் செய்கின்றேன். யான் கற்புடை மாதரிடத்துப் பெரும்புகழையும் மகிமையையும் சிறப்பச்செய்தற் பொருட்டே எப்பொழுதும் முயல்வது. ஆதலால் இங்ஙனம் யான் நின்னையிரக்கின்றேன் என்றார்.

பின்னரக் கௌசிகன் மனைவி, அநுசூயையார் மொழியைக் கேட்டு, அவ்வாறேயாக வென்றாள். அப்பால், பெருந்தவமுடையாளாதலின், அவ்வனுசூயையார் பத்திரவுமோரிரவாகிய அவ்விரவில் அருக்கிய சலத்தைக் கையிலேந்திச் சிந்தித்து மார்த்தாண்டனை வரக்கூவினள், உடனே அச்சூரியனும் அன்றலர்ந்த ஆயிரத் திதழ்த்தாமரை மலர்போலும் செம்மண்டல முடையனாய் உதயகிரியிற்றோன்றினான். பின்பக்கணத்திற்றானே அக்கற்புடையாள் கணவன் ஆவி உடம்பினைவிட்டது. அவனும் நிலத்துவிழுந்தான், விழுகையில் அக்கற்புடையாள் தாங்கிக் கொண்டனள்.

அப்போது அநுசூயையார், அவளைநோக்கி, ஓ சௌபாக்கியவதி! நீவருந்தவேண்டாம், என்னுற்றலைப்பார். யான் நெடுங்காலமாக என்கணவரைத் தொழுது சிறுதவமுடையவளா யிருக்கின்றேன். என்மனமானது எனதுநாயகரோடு, கல்வி, அறிவு, ஒழுக்கம், வடிவு அழகு, இயற்கை, சொல்லினிமை, ஆற்றல், தவம், பெருமை, செல்வமுதலியவற்று ளொன்றாலும் ஒத்தவேறொருபுருடன் உள்ளானைக் காணுமலிருப்பது எவ்வாறு சத்தியமா யிருக்கின்றதோ அப்படிப்பட்ட சத்தியத்தால் இவ்வேதியனும் நோயொழிந்து மீட்டும் இளமைபெற்று, உயிர்பெற்று எழுந்து மனைவியோடு நூறுவருடம்பிழைத்திருக்கக் கடவன்!! என்கணவனுக்கு ஒப்பானவேறு தெய்வத்தினை நான் பாராதது எவ்வாறு சத்தியமோ, அச்சத்தியத்தினால் இவ்வேதியன் மீட்டும் பிழைத்து நோயற்றவனாய் வாழ்க! நான் எப்பொழுதும் என் கொழுநரைப் பூசிப்பதற்கு, மனம், வாக்கு, காயம் இவை

களால் வழுவின்றி மூப்பு நீப்பது எவ்வாறு சத்தியமோ, அந்தச்சத்தியத்தால் இவ்விரு பிறப்பாளன் பிழைக்கக் கடவன் என்று பிரமாணத்தோடும் இங்ஙனம் முக்காலுங் கூறினர்.

கேட்டீரோ தந்தையே! பின்னரக்கௌசிகன் என்னும் வேதியன் பிழைத்தெழுந்து, நோயொழிந்து, இளமைபெற்றவனாய்த் தன் தேகவொளியால் மனைமுழுவதும் பிரகாசிக்கச் செய்தவனாய் அமரர்களைப்போலும் மூப்பற்றவனா யிருந்தான். பூமழை பொழிந்தது. தேவதுந்துமி முழங்கிற்று. தேவர்க ளனைவரும் பெருமகிழ்ச்சியடைந்து அவ்வநுசூயையைத் தாயைநோக்கி, ஓய்மங்கலப் பெருக்குடையீர்! உமக்கு என்ன வேண்டுவதோ அதனைக்கேளும், வானவர்கட்காகத்தக்க பெருங்கருமத்தினை முடித்தனீராதலால் அவர்கள் வரந்தரலாயினர் என.

அநுசூயையாரும், பிரமதேவன் முதலிய தேவர்யாரும் வந்து அருள் செய்பவர்களா யிருந்து, யான்வேண்டும் வரத்தினுக்கு யான் தக்கவளே யென்பதும் உங்கள் உள்ளத்திற்குந் தோன்றுமாயின் பிரமா, விஷ்ணு, மகேச்சுரன் என்கிற மூவரும் என்மகவாகப் பிறக்கக் கடவர். என்கணவரோடும் யான் துன்பவொழிவின் பொருட்டு யோகத்தினைப் பெறுக. அவித்தை, அஸ்மிதம், இராகம், துவேஷம், அபிநிவேசம் இவ்வைந்தும் கிலேசமெனப்படும். கிலேசம்-துன்பம். என்றார்.

அப்போது பிரமா, விஷ்ணு, உருத்திரர் முதலியதேவர் அவ்வாறே யாகுகவென்றுகூறி, தவமுடையவராகிய அவ்வநுசூயை யாருக்கு குறையே அநுக்கிரகித்துப் பழையபடி தத்தமிடஞ் சென்றனர்.

பதினைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

உ

பதினாறாவது

சந்திரன் தத்தாத்திரேயர் தூர்வாசர்

அவதரித்த அத்தியாயம்.

தந்தையே கேளும், அப்பால் சிலநாள் கழிந்தபின்பு பிரமனுடைய விரண்டாவது மகனாகிய அத்திரிமுனிவர், பூப்படைந்து நீராடியவளும், மனதுக்கினிய வடிவமுடையவளும், விழைவினை விளைக்கும் நலனுமுடையவளும், பழிபடாதவளுமாகிய அனுசூயை யென்னும் பெயரையுடைய தன்மனைவியை நோக்கிக் காமத்தினையுற்று மனத்தாற் புணர்ந்தனர்.

சந்திரன் தத்தாத்திரேயர் தூர்வாசர் அவதரித்தல்.

அங்ஙன மவ்வனுசூயையைக்கருதிய அப்பெருமுனிவரனுக்கு வீரியமானது தலைமேற்சிதற, அதனை அதிக விரைவோடு வாயுவானது கீழ்மேல் பக்கமுங் கவர்ந்து எடுத்துக்கொண்டது. உடனே அப்பிரம தேஜசானது வெண்ணிற முடையதாய் எல்லாந் தெறித்து விழுந்து செந்தூளியோடு கூடிச் சந்திரன்வடிவாயது. அதனைப்பத்துத் திசைக்காவலரும் பெற்றுக்கொண்டனர். அவ்வத்திரியென்னு மிரண்டாவது பிரமாவின் மனதிடத்திருந்து பிரமதேவன் கூறுபாட்டால் பிறந்த சோமன் என்னும் அம்மைந்தன் எல்லாவுயிர்களின் ஆயுளுக்கு மாதரமாயினன்.

பின்பு விஷ்ணுவெளிப்பட்டு அவ்வத்திரி முனிவருடைய வுடம்பினுட் புகுந்து சத்துவகுண மிகுதியுமுடைய வேதியனாகப் பிறந்து அனுசூயா தேவியின் பால்குடித்துத் தத்தாத்திரேயனென்னும் பெயரையடைந்து இருந்தனர். இங்ஙனம் அத்திரியின் இரண்டாம் மகனாக விஷ்ணுவே பிறந்தனர்.

அப்புறம், தாய்வயிற்றிருந்து வெகுளி கொண்டதனால் எழுநாளில் வெளிப்பட்டு ஒருவர் வந்தனர். என்னெனில் ஹேஹய தேயத்தரசன் செருக்குடையனாய் அத்திரிமுனிவர் பால்செலலும், அவர் அவ்வரசனை யப்பொழுதே சாம்பராக்குங் கோபத்தினை யடைந்தாராக, சரு

வினிடத்திருந்த சிசுமானமும் சினமு முடையாராய் கருவிருந்ததை விட்டு ஏழாநாள் வெளியில் வந்தனர் அவரே தாமதகுணமிகு உருத்திரமூர்த்தியின் ஒரு கலையாற் பிறந்த துருவாசராம்.

இவ்வண்ணம், பிரமன், விஷ்ணு, உருத்திரன் இவர்கள் கலைகள் அவ்வநுசூயைக்கு மூன்று மக்களாய்ப்பிறந்தன. தேவர்கள் கொடுத்த வரத்தின் சிறப்பாட்டினால் பிரமனே சோமனும், விஷ்ணுவே தத்தாத்திரேயனும், உருத்திரனே துருவாசனுமாகப் பிறந்தனர். அவருள்சோமன் தனது குளிர்ந்த கிரணங்களாற் கொடிகளையும், மற்றைப் பயிர்களையும், மனிதரையும் திருத்திசெய்வித்து எப்பொழுதும் வானகத்துள்ளான். அவனே பிரஜாபதி தேவதையாம். தத்தாத்திரேயன் கொடியராகிய தைத்தியர்களை அழித்தலாலும் உத்தமர்களைக் காத்தலாலும் உயிர்களை யோம்பும் விஷ்ணுவின் கூறாயுள்ளான். பகவனைப் பிறப்புற்ற துருவாசன் உருத்திர நோக்கத்தினை யடைந்து, பார்வை, எண்ணம், சொல் என்னுமிம்மூன்றினாலும் உயர்ந்தோரை அவமதித்தல் செய்வாரைச் சுட்டொழிக்கின்றனன். அத்திரி மகனாகிய பிரமனார் * சோமத்துவத்தினைச் செய்தனர். தத்தாத்திரேயனார் யோகத்திருந்து விஷ்ணுவாதலின் சகலவிடயபோகங்களையே அநுபவித்திருந்தனர். துருவாசனார் தந்தையாரையும் சிறந்த நோன்பினையுடைய தாயாரையும் விட்டு, பித்தினை மேற்கொண்டு பூமிமேற்றிரிவதாயினர்.

தத்தாத்திரேயரது தவமும் மகிமையும்.

தத்தாத்திரேயர்பின் யோக நிட்டையராயிருக்கையில் அதற்கிடையூறாக, இருடிகள் புதல்வர் பலர் அவரைச் சூழ்ந்து பணிசெய்து காலம் பெறவொட்டாது பின்பற்றி நின்றனர். அவர் ஒருவர் தொடர்புமில்லாது தனியிருக்க வேண்டுமென்றெண்ணி பெரியதோர் மடுவில் மூழ்கி நெடுங்காலம் வெளிப்படாமலிருந்தார். அங்ஙனமாயும் விழைதகுசிறப்பின் அப்பெரியோனைத் தரிசித்தலில் மிகுவேட்கையராய் அம்முனிமைந்தர்கள் அம்மடுக்கரையைக் காத்திருந்தனர். இங்ஙனமாகத் தேவர்கள் அளவையால் நூறுவருடங்கழிந்து விட்டதே

---

* சோமம்-அமிர்தம். அது சுவர்க்கத்துள்ளது. சிவசொரூபமானது. அதனைக் காயத்திரி நிலவுலகிற்றந்தது. அதற்கு பிரதிநிதி ஓமமே சோமயாகமாம். இராவ்ஷணயமை.

யாயினும், அந்த தத்தாத்திரேயர் பாலுள்ள அன்பினால் அவ்வந்த ணச்சிறுவர்கள் அம்மடுக்கரை விட்டுப்போயினாரல்லர். அப்பால் தத்தாத்திரேயனார் யான் மாதர் தொடக்கிலிருந்தால் நான் தகாதவனென்றெண்ணி இவர்க ளென்னை யொழித்துப்போவர்! அதன் பின் யான் தொடர்பற்றவனாயிருப்பலென வெண்ணி, நல்லதோர் மாதினையபற்றிக்கொண்டு அந்நீரினின்றும் வெளிப்பட்டார். அவ்வாறாயும அம்முனி மக்க ளவரைவிட்டொழிந்தவரல்லர். அப்போ தவர்களை வஞ்சிக்க வேண்டித் தத்தாத்திரேயர் அம்மாதினோடும் விசேடமாக மதுபானஞ் செய்யத் தொடங்கினர். பாடுதலும், வாத்தியங்களை முழக்குதலும் மாதரைப்புணர்தலும், சன் சடித்தலுமாகிய குற்றமுண்டான பின்னர் அவரைநோக்கிஅம்முனிமகாரனைவரும்வெறுத்தொழிந்தனராய்இனி இவர் நம்மோடு சரியொக்க விருக்கத்தக்கவ ரல்லரென்று புறம்படுத்திவிட்டனர். ஆனால், அந்த தத்தாத்திரேயயோகிக்குப் பாவத்தொடக்கில்லை. மதுபானஞ்செய்பவரைப் போலவே யிருந்தார். புலையர் வேடம் பூண்ட வேதியனை நாய் பற்றிக்கொண்டிருந்தாற்போலுமிருந்தனர். வெறியைத்தருபவைகளைக் குடித்து மனைவியோடும கூடினாராயினும் யோகத்தினை புணர்ந்தவராதலின் தவஞ் செய்திருந்தார். அந்தயோகமுதல்வன், வீட்டினைவிரும்பும் யோகிகளாற் றியானிக்கப் பட்டிருந்தார்.

கார்த்தவீரியார்ச்சுனன் வரலாறு.

பின்னொருகாலத்தில், கிருதவீரியன் என்னும் அரசனுக்கு அருச்சுனன் என்னும் மகனொருவன் பிறந்தான். அக்கிருதவீரியன் சுவர்க்கம்புகுந்தபின் மந்திரி, புரோகிதர், அந்நகரவாசியர் முதலியோர் அவ்வரசனைமைந்தனைப்பட்டாபிடேகத்திற்குவரவழைத்தலும அவரோடு அருச்சுனன் கூறலாயினன். ஓய் அமைச்சரே! மேலும் மேலும் நரகவினைவாகிய இவ்வரசினை இனி யான்விரும்பேன், எதன்பொருட்டரசிறை வாங்கப்படுகின்றதோ அக்கருமத்தினைப் புரியாது என் வீணே யரசாட்சி செய்யவேண்டும். வாணிபஞ் செய்வோர் தங்கள் வாணிக வூதியத்துப் பன்னிரண்டிலொருகூறு அரசனுக்குக் கொடுக்கின்றனர். பசு மேய்ப்போர், நெய், தயிர், பால் முதலிய விலாபத்துள்ளும், உழுது பயிர்செய்வோரும் தமதுபயனுள்ளே யாறிலொரு கூறும் அரசனுக்குத் தருகின்றனர். அவர்களையெல்லாம் கள்ளர்.

*முகளியோராற் றுன்புறுவன்னைக் காப்பது அரசன்கடன். பொது மையில் மக்கள் யாவரும் ஆறிலொருகடமை அரசனுக்குத் தருகின்றனர். அதிகம் பெற்றுக்கொண்டால் அரசனே அக்கள்ளனாகின்றனன். அங்ஙனம் பெற்றுக்கொண்ட இறைப்பொருளால் அரசன் உலகோம்புதலையும், நற்கருமங்களையுஞ் செய்தல்வேண்டும். வேறொருகருமத்தினை மேற்கொண்டு ஒழுகுபவனால் உலகுபரிபாலிக்கப் படமாட்டாது. இவ்வரசன் ஊதியத்தினை உலகோம்பலின் வேதனம (கூலி) ஆக முன்னோரால் நியமிக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்டகாவற்கூலியைப் பெற்றுக்கொண்டு, துட்டராலும், கள்ளராலும் வருந்தாதபடி உலகைப் பாதுகாவாவிட்டால் அப்பாவமுழுவதும் அரசன் பாலாம். ஆதலால் யான் தவஞ்செய்து யோகசித்தியைப் பெற்று, உலகோம்பத்தக்க ஆற்றலுடையனாய் இந்நிலவுலகத்திற் இவனொருவனே இறைவன் என்று சொல்லும்படி படைக்கலங் கையிற் பிடிப்போன் இனி வேறொருவனுமில்லையென்னும்படி மாற்றற் பெருக்கத்தினை யடைந்தால் அப்பொழுது அரசாட்சியைச் செய்வேனே அல்லது, என்னை நான் பாவத்துள்ளாகச் செய்யவிசையேன் என்றான்.

கருக்கர் கார்த்தவீரியன் வினாவுரை.

இங்ஙனங் கூறிய அவனது கருத்தினை யுணர்ந்து, அமைச்சர் நடுவுள்ளிருக்கும் பேரறிவுடை முதியோனாகிய கருக்கமுனிவர் அரசிளமைந்தனோடு கூறுவான். ஓய் இராஜகுமார! இங்ஙனம் நீர் நன்கரசு புரிதல்வேண்டுமென்னு மெண்ணமுடையவனா யிருந்தால் என்னுரைகேட்டு அவ்வாறுபுரிதி. அதாவது சையகிரி நெருக்கத்து ஆச்சிரமஞ் செய்திருக்கும், பெரியோனான தத்தாத்திரேய முனிவரைச் சென்றடைந்து பூசைபுரி. அவர் மூவுலகத்தினையும் ஓம்பவல்லவர், யாவரிடத்தும் ஒத்த பொதுநோக்குடையவர், எப்பொழுதும்யோக நிட்டையிலிருப்பவர், உலகைப்பாதுகாக்கும் பொருட்டு அவதரித்த விஷ்ணுவின் கலையையவர். துட்டர்களாகிய திதிபுத்திரர் தன்னரசினைக்கவர்ந்து கொண்டபோது, ஆயிரங்கண்ணுடையான் யாரைச் சரணடைந்து தனது அரசாட்சியை மீட்டும் பெற்றுக்கொண்டனனோ அவரே யிந்ததத்தாத்திரேய முனிவர் என்றான்.

அப்போது கார்த்தவீரியன், ஐயர்! அவ்வளவு பெருமையை யுடையரோ அத்தத்தாத்திரேயமுனி, அவரைத் தேவர்கள் எவ்வாறு

சரணடைந்தனர், தேவாசுரிசாச்சியத்தினை எவ்வாறு அசுரர்கள் பறித்துக்கொண்டனர், அதனை மீட்டும் இந்திரன் எவ்வாறுபெற்றனன், என்று வினவினன்.

அதற்குக் கர்க்கருங், தேவர்கட்கு இந்திரன் அரசன், அசுரர்க்குச்சம்பாசுரன்தலைவன் இங்ஙனமாக ஞாதியர்பகையால் தேவாசுரர்க்குக்கொடிய போர்நேர்ந்தது. தேவமானத்தால் ஓர் வருடபரியந்தம இங்ஙனம் போர்நிகழ்கையில் தேவர்தோற்றனர். அசுரர்வெற்றி பெற்றனர். விப்பிரசித்திமுதலிய அசுரரால முறியடிக்கப்பட்டு ஊக்கிழந்து முதுகிட்டோடிவந்த வானவர்கள் பிரகற்பதியை யடைந்து அசுரப்படையை நாசஞ்செய்யும்பொருட்டு வாலகில்லியர் என்னும முனிவரைக்கூட்டி மந்திராலோசனை செய்யலாயினர். அவ்வாராய்ச்சியின் முடிவில பிரகற்பதியானவர், அத்திரிகுமாரனும் மிகச்சிறப்புடையனுமாகிய தத்தாத்திரேய ரென்னுந் தவபபேழை யாவரொருவரிருக்கின்றனர். வெளிக்கு அவர் செய்தி அருவருக்கத்தக்கனவாயிருக்கும் ஆயினும் அவரை நீங்களடைந்து பத்திசெய்து களிப்பித்தலைச் செய்வீர்களாக. அசுரரையழிக்கும்படி அவருங்களுக்கு வரத்தினை யளிப்பர். பின்னர் நீவிரனைவருங்கூடி அசுரரை நாசஞ்செய்வீர்களெனக்கூறினர்.

தேவர் தத்தாத்திரேயரை யடைதல்.

கேளும் அரசகுமார! அப்பால் தேவர்கள் தத்தாத்திரேயர் ஆச்சிரமத்தையடைந்து, அங்கு, பொறுமையுடையராய், இலக்குமியோடுகூடி, கந்தருவர் புடைசூழ்ந்து கீதஞ்செய்ய, மதுவுண்டு களித்திருக்கும் பெரியாராகிய தத்தாத்திரேய முனிவனைத்தரிசித்து வணங்கித்தொழுது, துதித்து, சுராவினையும், மிருகத்தினையும், நீர்முதலியவற்றையுங் கையடையாகக் கொடுத்து, தங்கள் பகைவரை யொறுத்தொழிக்கவேண்டு மெனப்பிரார்த்தித்து, அவர்நிற்கின்றும், இருக்கவிருந்தும், நடக்க நடந்தும், இங்ஙனம் அவ்வமரர் அவரைப் பின்தொடர்ந்து வழிபாடுசெய்ய, நல்விருப்பினராகிய அந்த தத்தாத்திரேயர் நீர் வேண்டியதியாது, ஏன் என்னைவழிபடுகின்றனிரென வினவினர்.

அப்போது அவ்வானவர்கள், முனிவரேறே! ஜம்பாசுரன் முதலிய வசுரர்கள், பூவுலகமுதலிய வுலகங்களை வலுவிற்கைப்பற்றிய

சுமியி லெமக்குண்டாம் அவிர்ப்பாக மெல்லாவற்றினையும் பறித்துக் கொண்டிருக்கின்றனர். ஓ அனகரே! எம்மைக்காக்கும் பொருட்டு அவ்வசுரரை யழிக்கத்திருவுளஞ் செய்யுந் தேவரீருடைய அருளால் நாங்கள் சுவர்க்கத்தைமீட்டும் பெறவிரும்புகின்றோம் என்றிரந்தார்கள்.

அதுகேட்ட அந்நீத்தோர் பெருமான், ஐய அமரரே! யானோ மதுபானப்பிரியன், எச்சின்மயக்கமுடையேன், அன்றிப்பொறிவழி யுழல்வதன்றிப் புலனொடுங்கினேனுமல்லன் இத்தகைய வென்னாலுஞ் சத்துருக்களை யொழித்தல் வேண்டுமென் றெவ்வாறு நீவிரெண்ணங் கொண்டீர்கள் என்றார்.

அதற்குத்தேவர்கள், ஓ உலகநாத! உம்மைப்பாவம்பற்றாது. ஞான வித்தையால் மனமுதலிய அந்தக்கரணங்களை நன்று கழுவிவைத்திருக்கப்பட்ட ஞானப்பேரொளியாயிருக்கின்றீர். அப்படிப்பட்டவுமக்கு யாதொரு பழுதுமில்லை என்றனர்.

அங்ஙனந் தத்தாத்திரேயர், வானவரே! இஃதுண்மை. எல்லாவற்றினையும் ஒப்பநோக்கும் எனக்கு ஞானவித்தையுள்ளது. ஆயின் இந்தமாதரோடுகூட்டுறவு செய்தால் நான் எச்சிற்பட்டவனாயினேன் எப்பொழுதும் பெண்களோடு தொடர்புற்றிருப்பவனுக்குப் பெரும் பழுதுண்டாம் என்றார். எனவே அச்சுரர்கள் மீட்டும் விண்ணப்பிக்கலாயினர்.

ஐயரே! இம்மாது உலகமாதாவானவர், குற்றமற்றவர், இவர்க்கோர் பிழையுமில்லை. முற்றுமுணர்ந்த தேவரீர் உள்ளத்தின்கணுள்ள வித்தையின் வடிவமே இவர். சூரியன்கதிர்த்திரள் வேதியன் மேற்பட்டாலென், சண்டாளன் மேற்பட்டாலென், என்றுஞ் சுத்தமுள்ளனவாகவே யிருக்கும், எனக்கூறினர்.

கேளும் அரசமைந்தவென அப்பால் கர்க்கர் கூறலாயினர். இங்ஙனந் தேவர்களால் விண்ணப்பிக்கப்பட்ட தத்தாத்திரேயர் நகைத்து வானவரை நோக்கிக்கூறுவர். உங்கள் கருத்திவ்வாறாயின் அசுரர் அனைவரையும் போர்க்கழைத்து, என் கண்ணிற்படும்படி அவர்களை யிங்கு கொண்டுவாருங்கள். என்பார்வை பட்டவளவில் அவ்வசுரர்

வயிறுண்டாம் நெருப்பினால் அவர்கள் வலிமையும் வீரமுங்கெட்டு நாசமுறுவர் என்றார் என்று அவ்வாசிளங் குமாரனுக்கு அப்பால் நடந்தவற்றை கர்க்கர் கூறத்தொடங்கினர்.

பின்பு தத்தாத்திரேயர் மொழியைக்கேட்டுச் சென்றதேவர்களால் அழைக்கப்பட்ட அசுரர்கள் கோபத்தோடு சுரர்களைத் துரத்திவர, வானவர்களும் அசுரரால் மொத்துண்டுபயத்தோடும் விரைந்து புகலிடந்தேடி, தத்தாத்திரேயர் ஆச்சிரமத்தை வந்தடைந்தனர். இராக்கதர் பின்பற்றித் தொடர்ந்துவந்து தத்தாத்திரேயர் ஆச்சிரமத்துள் புக்கு மதுபானஞ்செய்து தமதுமாதினோடும் படுத்தின்புற்றிருக்கும் பெரியோனாகிய அந்த தத்தாத்திரேயரைப் பார்த்தனர்.

அசுரர் இலக்குமியாரைக் கவர்தல்.

அப்போது அந்த தத்தாத்திரேயர் மனைவி எவ்வுலகமும் விழைகின்ற விலக்குமியே, பெருமங்கலமும், நிரம்பிய வழகுமுடைய மாதர் வடிவமாய் அவர் இடதுபக்கம் நின்றிருந்தனர். அவர்முகம் சந்திரனையொத்துக் கண்களிரண்டும் நீலோற்பலம் போலும் அவயவ பூரணமாய் நோக்கற்குப் பேரமைதியாய் இனியசொற்களைக் கூறி அழகுடைமாதர் குழுவால் சூழப்பட்டிருந்தனர். ஆகவே, அங்குவந்த தைத்தியர்கள் அம்மாதுநல்லவரை நோக்கி விழைவுற்று உடனே காமநோயால் நெஞ்சுபொறுதவராய் விரைந்து தேவர்களைவிட்டிருந்த ஆற்றலோடும் அவ்வணங்கினைக் கவர்தற்குத் தீயவெண்ணத்தா லேவப்பட்டு, உணர்ச்சியை அம்மாதர் பால்விட்டு இவ்வாறு எண்ணத் தொடங்கினர். இப்பெண், மூவுலகத்து முள்ளமாதருள் வடித்தெடுத்த மணியேபோலும். இம்மாதினை நாம்பெற்றுக்கொண்டால் செய்வன வெல்லாஞ்செய்து முடித்தவராயினோம் ஆவோம். ஆதலால் நாமனைவரும் எழுந்து இம்மங்கையைச் சிவிகையிலேற்றி நாமனைவருந்தாங்கி நம்மிடஞ் செல்வோமென்று துணிவுற்றனர்.

என்று கருக்கர் மேற்கூறுகின்றார். இங்ஙனம் அம்மடந்தைபாலுற்ற பெருவேட்கையோடும் அசுரராக்கதர்கள் ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டு காமவேதனைப்பட்டவராய்ப் பெருங்கற்புடையளான அம்மாதரைப்பற்றி வந்து பல்லக்கிலேற்றி அதனைத் தலைமேற் சுமந்தெடுத்து, தம்மூர்முகநோக்கி நடந்தனர். அப்பால் தத்தாத்

திரேயர் அதனைக்கண்டு பெருநகைசெய்து, தேவரை நோக்கிக் கூறுவார், தெய்வகதியால் இலக்குமி அரக்கர்தலைமே லேறலாயிற்று, அவர்கள் ஏழடிவைத்தபின்னர் மறைந்துபோவள். நீங்களனைவரும் இனிச்சுகமுற்று வாழுமென்றனர்.

இலக்குமியின் தானமெட்டு.

அதுகேட்ட அமுதாசனர் அம்முனிவேந்தை வினவலாயினர். எம்பெருமானே! இலக்குமியார் ஆண்மகனுக்கு எவ்வெவ்விடங்களிலிருக்கும்போது எவ்வெப் பயனுண்டாகின்றது. பின் எப்பொழுது அவனைவிட்டு நீங்குவது. இதனைக் கருணைசெய்து அடியோங்கட்குக் கூறவேண்டுமென்று வணங்கி நின்றனர்.

அப்போது அம்முனிவேந்தும், மனிதர்க்குக் காலில்வந்து நின்றால் மனையிடங் கூடும். தொடையிலேறினால் நல்லாடை பலவுந்தரும். குய்யத் தானத்துச் சேர்ந்தால் மனத்துக்கினிய மாதரைப்பெறலாம். கீழ்வயிற்றில் வந்தால் மக்களைப்பெறுவர். மனத்திலடைந்தால் எண்ணிய வெண்ணமெல்லா முற்றிச்செல்வரே யாவர். கண்டத்தில் வந்தால் சிறந்த முத்தணியும், இனியநண்பருஞ், சுற்றத்தினரும், மனைவியும், மக்களும், பிரிந்து நெடுந்தூரஞ் சென்றிருந்துவந்த இனியவொக்கலுமாகத் தழுவிக்களிக்கும்பேறுண்டாம். வாயுட்புகுந்தால், அறுசுவையுண்டி, நல்லுரை, அழகு, ஆணை, சொற்செலவு, வீணாகாத ஆராய்ச்சி, முதலியவற்றினைத் தரும. அன்றிகவிஞனுமாக்கும. சமுத்திரராஜன்மகளான இவ்விலக்குமிதலை மீதேறினால் உதைத்துத் தள்ளிவிட்டு வேறொருவனிடம புகுவள். ஆகவே இப்போது அசுரர்தலையிலேறினள் ஆகையால் இப்போதே அவர்களை விட்டொழிவள். இவர்களுங்கட்குப் பகைவராதலால் படைகொண்டுசென்று இக்கணமே அவரைக்கொல்லுதிர் அஞ்சத்தக்கதல்ல. என்பார்வையாற்றானே அவர்களது ஊழிமழுங்கி விட்டது. அயலவன் மாதினைப் பரிசித்ததினாற் புண்ணியமும் வலியுந்தேய்ந்துகரிந்தொழிந்தது என்றுகூறினர்.

கேளுமரசமைந்த! பின்னரவ்வசுரர் விண்ணவரோடு படையெடுத்துப் போர்புரிந்து, அழிந்துவிட்டனர் என்று யாங்கேள்வியுற்றனம். அத்திருமாது அரக்கர் தலையினை மிதித்துத் துவைத்தொழித்துமே

லெழும்பி பெருமுனிவனான தத்தாத்திரேயரை யடைந்தாள். அச்ச ரழிந்தமையாற் களிப்பினையடைந்த தேவர்கள் அத் * தாக்கணங்கினைத் துதித்து, தத்தாத்திரேய வடிவராகிய விஷ்ணுவினைப்புகழ்வாராயினர்.

அஞ்ஞானபாவங்களை யழுத்து சுத்தஞ்செய்வோனே! உலகமனைத்தினைக்குந் தலைவனே! அசுரர் நாசத்திற்கு முதற்காரணனே! எல்லாமுடையானே! நாராயணனே! நீரிலுள்ளவனே! அழியாதவனே! பதம்விட்டொழியானே! முடிவற்றவனே! எதனுள்ளுங் கலந்து நின்றோனே! ஒழிதலில்லாதானே! மூப்பிலாதானே! உன்கருணையால், சகத்தினையும், அரசினையுந், திருவையுஞ், சுவர்க்கத்தினையும் பெற்றோம் சார்ங்கம் என்னும் வில்லையுஞ் சக்கரப்படையினையுங் கையிற்பற்றி அடியவரிடத்து என்றும் அருளாளனாய்த் துட்டரை ஒழிப்பவனே! உனது கிருபையால் எம்பகைவர் முற்று மொழிந்தனர். என்றிவ்வாறு அமரர் அம்முனிவர்பிரானைத் துதித்துக் கவலையற்றவராய்த் தம்மிடஞ் சென்றனர். கேளுங் கார்த்தவீரியனே! அவ்வாறே நீயும் உன் னெண்ணத்தினைமுற்றி ஒப்பற்ற செல்வத்தினைப் பெறவேண்டுமாயின் விரைந்து அம்முனிவரை வழிபடுதி என்று கருக்கர்கூறினார்.

பதினாறாவது அத்தியாயம் முற்றிற்று.

உ

பதினேழாவது

கார்த்த வீரியார்ச்சுனனுக்குத் தத்தாத்தி ரேயர் அனுக்கிரகித்த அத்தியாயம்.

அப்பால் தந்தையைநோக்கி மகன் கூறலாயினன். கேளும் ஐயா, அரசனான கார்த்தவீரியன் கருக்கமுனிவர் சொல்லைக்கேட்டுத் தத்தாத்திரேயர் ஆச்சிரமஞ்சென்று பத்தியோடவரைப்பூசித்துக்கால் வருடல், உடம்புதைவரல்முதலியபணியாலும், மதுமுதலியவற்றைத் தருதலாலும், பூ, சந்தனப்பூச்சு, நீர், கனி, வெற்றிலைப்பாக்கு முதலியவை சேகரித்தலாலும், மற்றும் வேண்டுவனவாகிய போகத்தினுக்

* தாக்கணங்கு-இலக்குமி.

குரிய பொருள்களைத் திருத்திவைத்தலாலும், எச்சில்முதலியவற்றை யெடுத்துச் சுத்திசெய்தலாகிய ஏனையகுற்றேவலாலும் அவரை யுபசரித்துவந்தான். ஒருநாளில் ஒருநாள் அந்தமுனிவன் குலத்துண்ணின்றும் அழற்காற்றுவந்து அவ்வரசனது இரண்டு தோள்களும் வெந்தொழிந்தது. அத்துன்பத்தினையும் பொறுத்துக்கொண்டு அவ்வரசிளங்குமரன் பத்திசெய்துவந்தான். அதுகண்டு முனிவேந்து திருத்தியுற்றுக்களித்து அக்கார்த்தவீரியனை நோக்கிக் கூறலாயினார்.

மைந்த! முன்னாளில் அமரர்கள் வந்து பணிசெய்திருக்கும்போதே கூறியிருக்கிறேன், நான்கட்குடியன், இதோ ஒருமாதும் என் பக்கம்பிரியாள். இவ்விரண்டின் றொடர்பால் எப்பொழுதும் குற்றமுடையவனாகவே பழிபடுத்தக்கவனாயிருக்கின்றேன். என்னையே வீணாக நீயடுத்துப்பயன்று வருந்துகின்றனை உனக்கு எவ்வகை உபகாரஞ்செய்வதற்கும் யான், ஆற்றலில்லாதவனாகவிருக்கின்றேன். ஆற்றலுள்ளவரைத்தேடி யடுத்துப்பணி புரிந்துன் னெண்ணத்தினை முடித்துக்கொள்ளுதி போக என்றார்.

அதுகேட்ட கார்த்தவீரியனுங் கருக்கர்கூறிய மொழிகளை நினைத்து, தத்தாத்திரேயர் திருவடிகளில் விழுந்து பணிந்து தொழுது நின்று விண்ணப்பிப்பானாயினன். எம்பெருமானே, என்னையேன் மயக்கி மறைக்கின்றீர். தேவர் அனகரேயாவர். நீர்வஞ்ச நடிப்பினை மேற்கொண்டிங்ஙனம் நிற்கின்றீர். இவ்வன்னையானவர், எத்திறத்தவருடைய பந்தத்துக்கக் காடுகளையுஞ் சுட்டழிக்கவல்ல தீயினையுண்டு பண்ணும் அரணியாகின்றனர் என்று கூறலும், அந்த தத்தாத்திரேய முனிவர் கருணைகூர்ந்து, அக்கார்த்தவீரியார்ச்சுனனைநோக்கிக்கூறுவாராயினார்.

ஐய, அரசிளங்குமர நீ பெருவலியுடையன். இப்பூவுலக முழுவதும் உனதுவசமாம். என்னிரகசியத்தினைக்கண்டு பிடித்தனைத்தனை யாதலால் உன்னிடத்தெனக்கு மிகுகளிப்புண்டாயிற்று. உனக்கு வேண்டுவனவற்றை விளம்புதி தருகின்றேன்! திருமகளோடு கூடிய என்னைப்பத்தியோடு நீ சமூஞ்சந்தனம், பூ, தூபம், தீபம், மாமிசம், கள், அறுசுவையுண்டி, நெய், பால்முதலிய நிவேதனத் திரவியங்களோடுஞ் சிறந்த பண்டங்களைக் காணிக்கையாகக் கொடுத்து ஆடல் பாடலாலும், வீணை, குழல், சங்கு, மிருதங்கம், பேரிமுதலிய வாத்தியமுழக்கங்களாலும் களிப்பிக்கப்பண்ணி, வேதியரை யுபசரித்தலால்

மனமுவப்பித்தும் என்னை யார்பூசிக்கின்றார்களோ அவர்களுக்குத் திருத்தியான செல்வத்தினையும், இனிய மனைவியையும், நல்லமக்களையும் கொடுக்கின்றேன். இந்த அவதூதியாகிய நான் என்னையடுத்தவர்களின் அவமானத்தினைப் பொறுக்கேன் அவர்களுடைய ஆபத்துக்களையெல்லாம் ஒழிப்பிப்பேன், ஓ வேந்த! உனக்கு மேன்மையுண்டாகுக, நீ வேண்டியதைத் தரச்சித்தனா யிருக்கின்றேன். உன்மனதில் விழைந்தவற்றினை யெல்லாம் விளுதலைச் செய்யென்றார்.

அதுகேட்ட கார்த்தவீரியன், மனமுவந்து, எம்மிறைவ! இநாண்மானால், யாவர்க்கும் மேலான நிலைமையை யெனக்கருளும், யான் இவ்வுலக மன்பதையனைத்தினையும் புரத்தல் வேண்டும். பாவம் என்னையுறாதொழிக. யார்யார்செயலினையும் யானுணர்தல் வேண்டும். போரில் என்னெதிரில் ஒருவரும் நிற்றலாகாது. ஆயிரந்தோளினை யான் பெறவேண்டும். அணிமாதி சித்திகளென்பாலாகுக. நான் எவ்வாறு ஒழுகினும் அதனால் ஒருபழுதும் என்னையுறாதிருத்தல் வேண்டும். மலை, ஆகாயம், நீர், நிலம், பாதலம் முதலிய எவ்வெவ்விடங்களினுஞ் சஞ்சரிக்க எனக்குத்தடையின்றி யிருத்தல்வேண்டும். மனிதருள் பிழைத்திருந்தாரனைவரினும் மிகப்பல்லாண்டுயான் பிழைத்திருத்தல் வேண்டும். உத்தம புருடனால் எனக்கு மரணமுண்டாதல் வேண்டும். நான் தவறுற்று ஒழுகுங்காலத்தெல்லாம் என்னை நன்னெறி செலுத்தவல்லவர் உண்டாதல் வேண்டும். புகழத்தக்க பெரியரனைவரும் என்னிடத்து உபசாரம் பெறவேண்டும். எனக்குலவாத பொருணிதிய முண்டாவதாக. என்னரசாகிய வுலகத்துள் ளென்னை நினைத்தார்க்கு கேடில்லா தொழிவதாக. பொருளிழந்தோரென்னைக்கருதில் அவர்க்கப்பொருள் கிடைத்தல்வேண்டும். என் பத்தி பிறர்பாற் செல்லாது நின்பாலேயிருத்தல்வேண்டும் என்றுவினவிக் கொண்டனன்.

கார்த்தவீரியன் பட்டாபிஷேகம்.

அப்போது தத்தாத்திரேயருங் கேட்டுக்களிப்புற்று, ஐயா! நீ வேண்டியவரமனைத்தினையும் பெறுகின்றாய். ஓ அரசனே! என்னருளால் நீ சக்கரவர்த்தியாகின்றாய் என்று வாழ்த்தியருளினார். இங்ஙனம் அம்முனிவேந்தால் அருள்செய்யப் பெற்ற அவ்வருச்சுனமகாராஜன் தன்னகரத்தினை யடைந்து அமைச்சரை விளித்து மகுடாபி

ரேடகனுக்கும் கருத்தறிவித்தான். அப்போது விண்ணுலகத்திலிருந்து கந்தருவர், அரம்பையர், வசிட்டர்முதலிய இருடியர், மேருமுதலிய பருப்பதங்கள், கங்கைமுதலிய யாறுகள், அரதனங்களோடு கடல்கள், அரசுமுதலிய மரங்கள, இந்திரன்முதலிய தேவர், வாசுகி முதலிய நாகங்கள், வந்துபட்டாபிஷேகஞ் செய்யக்கூடினர். ஞானமயனும் நாராயணனே தத்தாத்திரேயராதலால் பிரமன்முதலிய தேவரோடுந் தாமவ்விடம்வந்து, ஓமாக்கினிவளர்த்தி, பாவமொழியவும், அறம்வளரவுமாக மகுடாபிஷேகஞ் செய்தனர், இங்ஙனம் ஹேஹயநாட்டின் பட்டாபிடேகசித்தனாகிய அக்கார்த்தவீரியார்ச்சுனன் பூமண்டலத்தில் பாவமென்பதின் பேரொழியவும தருமமுற்றும் நடக்கும்படி பறைசாற்றுவித்தான். இவ்வாறு தத்தாத்திரேயரருளால் மேலான பெருக்கத்தினையும ஆற்றலையும் அடைந்தவனாய் உலகோம்பினான்.

இன்றுமுதலாக யானொருவனொழிய யாரேனுமினியொரு வன்கையிற் படைக்கலந்தொட்டாலும் அந்நியவுயிர்கட்குத துன்பம புரியினும், அக்கள்வன் என்கையாற் கொலையுண்பான். என்று ஆணையிட்டதனால், அவனரசாட்சியுள் அவனொழிய ஆயுதங்களைக் கையாற்றொட்டவனொருவனில்லை. அவனே சிறந்தவல்லபமுடையோன். ஆவா !! அப்பெருயோகியின் அரசாட்சியிலுள்ள ஒவ்வோரிடத்திலும் அவ்வரசனொருவனே ஊர்காவலனும், பசுக்காவலனும், நிலங்காவலனும், வேதியர் முதலிய குலபாலகனுயுந், தவக்காவலனும், பொருட்காவலனும், வழிநடப்போர்க்கு வழித்துணைவனுமிருந்து புரந்தனன். யார்க்கேயாயினும் கள்ளர், பாம்புமுதலிய கொடிய செந்துக்கள், தீ, படைக்கலம், பகைவர், நோய், சமுத்திரமுதலிய நீர் ஆதியால் எவ்வகைப்பட்ட, துன்பம் நேர்ந்தபோதிலும் அக்கார்த்தவீரியனை நினைத்த மாத்திரத்திலே அவ்வாபத்தெல்லாம் விலகுவதாயின. அவன் அரசில்யாருக்கும் எவ்விதபொருணட்டமுமுண்டானதில்லை. அப்பேரரசன், இருத்துவிக்குகளுக்கு அவரிச்சித்த பொருள்களையெல்லாம் தக்ஷிணையாகக்கொடுத்து எல்லாவேள்விகளையும் நன்குமுடித்தனன். நல்லதவஞ்செய்தான். போரில் அவன் முயற்சி யாரினுஞ் சிறந்திருந்தது. அவன்செல்வத்தினையும் பெருமையையும் நோக்கி, அங்கிரசுஎன்னு முனிவன் கூறியதாவது. வேள்வி, கொடை, தவம், போரில்சிறந்தவெற்றி இவைகளால் எவ்வரசனும்

கார்த்தவீரியனது நிலைமையையடைந்ததில்லை. இஃது உண்மை. இவ்விறைமகன் தத்தாத்திரேயரருளால் இவ்வளவு பெருக்கத்தினையடைந்தான் என்பது. மேலும் அவ்வரசன், எந்தெந்தநாளில் தத்தாத்திரேயருக்கு எவ்வாறு வேள்விசெய்துவந்தனனோ அந்த நாளிற்றானே அவ்வரசனுக்கு அவ்வவ்வளவு பெருக்கமுண்டாவதனை நோக்கி உலகத்திலுள்ள மக்களனைவருஞ் சமாதியில் தத்தாத்திரேயரைப்பாவனை செய்து வேள்விகளைச்செய்து எல்லாப்பயனையும் பெறலாயினர்.

இங்ஙனமாக ஞானமுடைய அந்த தத்தாத்திரேயருடைய பெருமை கூறப்பட்டது. எங்குங்கலந்திருக்கும் விஷ்ணுசராசரப்பிரபஞ்சமனைத்தினுக்குங், குரவனாயினோன், சங்கு, சக்கரம், கதை, சார்ங்கம், என்னும் படைகளைக்கையிலேந்திய அப்பெரியவனுடைய அவதாரங்களைப் புராணங்களுட் கூறுகின்றன. இந்த தத்தாத்திரேயருடைய சிறந்த வடிவத்தினையாவன் மனத்துள் தியானிக்கின்றானோ அவன் சுகமுடையனாய்க் குடும்பத்தினின்றும் கரையேறுவன். மாந்தரே! விரைந்து வம்மின்கள். உமக்குப்பத்தியுண்டாமாயின் யான் எளியனாயிருக்கின்றேன். பூ, தழை, பழம் இதனாற் பூசிப்பினும் முத்தியைத்தருகிறேன் என்று யார்மொழியினை மக்களனைவரும் கேட்டனரோ அப்பெரியவன் பாவங்களை யொழிப்பதற்கும் அறத்தினை நிலைபெறச்செய்வதற்கும் உலகத்தினை நன்னெறியில் நிறுவி, பாதுகாக்கின்றனன். முதன்முடிவில்லாத அத்தலைவனது பிறப்பினை இதுகாறுங் கூறப்பட்டது. இனி அலர்க்கனைப்பற்றிய கதையினை உமக்குக்கூறுகின்றேன். தந்தையினிடத்துப் பத்தியுண்டாயிருந்த பெரியனான அலர்க்கனென்னும் இராஜவிருடிக்குத் தத்தாத்திரேயர் யோகத்தினைக்கூறிய வரலாற்றைக்கேளும் என்று மைந்தன் கூறலாயினான்.

பதினேழாவது அத்தியாயம் முற்றிற்று.

பதினெட்டாவது

இருதத்துவசனென்னுங் குவலயாசுவன் வரலாறுரைத்த அத்தியாயம்.

கேளும் பிதாவே! முற்காலத்தில் மகாவீரனான சத்துருசித்து என்னு மரசனொருவ னிருந்தான். அவன் வேள்வியிற் சோமபானஞ் செய்து இந்திரன் மிகுதிருத்தியடைந்தனன். அவன் மகன் ஒப்பற்ற வீரனான சத்துருநிபாதகனாகும். அறிவு, சாமர்த்தியம், உருவம் முதலியவற்றால் பிரகற்பதி, சுக்கிரன் அசுவனிதேவரிவர்கட்கொப்பவன். அவ்வரசகுமரன், அறிவு, ஆற்றல், தொழின்முற்றல், ஆயுளிவைகளால் தன்னையொத்த அரசகுமரரோடுகூடி நாடோறுமவிளையாடிக் கொண்டிருப்பான். சிறுநாளின் பின்னொருகால், நூல்களனைத்தினையு மோதி அறிவோடு நிலைமைபெற்று நிற்பன். மற்றொருகால் காப்பியம், நாடகம், அலங்காரம, நிருத்தம, கீதம், சரசசல்லாப முதலியவற்றால் களித்து மிருப்பன். சூதாடுதல் முதலிய வினோததினும், படைக்கலங்கள் பயிறலினும், மற்போரிலும், குதிரையேற்றம், யானையேற்றம், தேரேற்றம் முதலிய வேற்றங்களிலும வல்லமையடைந்து சிறந்தவனாயினன். பகற்போதில் வெளியிடத்திலும் இராவுப்போதில் உள்ளடக்கத்திலும் எப்போதுங் களிப்பினாலே நாளைபபோக்கிக் கொண்டிருப்பன். அவனோடு ஒத்த பிரம க்ஷத்திரிய வைசியமக்கள் பலர் அங்குவந்து நயமாக விளையாடியிருந்தனர்.

இவ்வாறு சிலநாள்கழிந்தபின் நாகருலகத்து, அசுவதரன் என்னும் பாம்பரசின்மக்களிருவர் நிலவுலகம வந்து, காமரூபிகளாதலால் அந்தணர் வடிவினையடைந்து தமதுண்மை வடிவினைமறைத்து, யௌவனப்பருவமும் அழகும் உடையராய்க் காண்பதற்கினியராய் இவ்வரசகுமரனிடம்வந்து அங்குள்ள பிரம க்ஷத்திரிய வைசிய புத்திரரோடும் அவ்வரசகுமாரனோடுஞ்சேர்ந்து நீராடல், ஆடையாபரணம், பூ, சாந்து முதலியசூடல், உண்டல், விளையாட்டு முதலியவற்றில் மிகுந்த கலந்தவன்போடு வேடிக்கையாய் அவரவரிச்சித்தவாறு செய்து தக்கசுகந்துய்த்திருந்தனர். இங்ஙனம் அந்த சருப்பவேந்தின் மக்கள் நாடோறும் இவ்வண்ணமாகவந்து போவாராயினர். அவர்கட்

தும் அவ்வரசமைந்தனுக்கும் நண்பும் அன்பும் மிகுதியாயிற்று. அவரைக்கண்டவிட்டு அவ்விராஜபுத்திரன் வேடிக்கை புரியான். இனிமையாகப் பேசான். உண்பதுஞ் செய்யான். நீராடான். குடிப்பன குடியான். விளையாடான். தன்னுடைய நற்குணங்களை வளர்க்கும்படியான நூல்களை யோதுவதுஞ் செய்யான். அந்தநாககுமாரரும் இரவுப்போதில் பாதலவுலகஞ் சென்றிருக்கையில் அவ்விறைமகன் தம் மருகிலிராமையால் எதனிடத்தும் விருப்பமின்றிப் பெருமூச் செறிந்து காலம்போக்கி போதுவிடிதலும் அவன்பால் வந்துவிடுவர்.

இங்ஙனமாக வொருநாளிரவு சருப்பவேந்தன் பூவுலகத்தினின்றும் வந்த தன்மைந்தரை நோக்கி அன்புடன் கூறுவான். ஓ மைந்தரே! என்னே, உங்களுக்கு பூவுலகத்திற்றனே ஆசையுண்டாயிருப்பதுபோலும். நெடுநாளாக இப்பாதலத்துப் பகற்போதில் நும்மை யான்கண்டதில்லையே யென்றான். அதற்கம்மைந்த ரிருவரும், வணங்கி அஞ்சலியத்தராய் நின்று விண்ணப்பிக்கலாயினர். தந்தையே! கேளும். சத்துருசித்து என்னு மரசன்மைந்தன் இருதத்துவசன் என்பவன் பூமிமேலிருக்கின்றான். நல்லழகுடையான், அவன்குணமும், ஒழுக்கமுஞ் செவ்வனேயுள்ளன. மிகுமானுபரணன், பெருவீரன், மிக்கவினிமையோடும பேசவல்லான். எம்பால் எவ்வகைப்பட்ட தொன்றினையு மறையான், நல்லசொல்வல்லான், பெருங்கல்விமான், நட்புசெய்தற்குவேண்டிய எல்லாகுணமுமுடையான். யார் நன்கு மதிக்கத்தக்கவரோ அவரை நன்குமதிப்பவன், அவ்வவ் விடயங்களிலுந் தக்கநுண்ணறிவு, கலங்காமை, நாணமும் உடையவன். அடக்கமே அணியாகவணிந்தவன், அவன் செய்யும் உபசாரங்கள், அன்பு, அவ்விடத்திய சுகம இவற்றாற் கவரப்பட்ட எங்கள் மனம் இந்நாக வுலகமேயன்றி மற்றெவ்வுலகத்தினையும் விரும்பலாற்றாது அவனில்லாமையாற் குளிர்ந்தவிப்பாதலமும் வெப்பந் தருவதாயுள்ளது அவனோடுவெயிலிலிருப்பினுங் குளிர்ந்திருக்கின்றது என்றார்கள்.

அதுகேட்ட அவ்வரவரசு உங்களையொத்த குணவான்களுங் காணுமிடத்து அவனைப்புகழ்வதாலல் அவன் புண்ணியமுடையவனென்பதே தேற்றம். ஆகவே அப்படிப்பட்ட மகனைப் பெற்றோனே சான்றோன். உலகத்துள் நூலினை யுணர்ந்தோர் பலர் உண்டு. ஆயி

னும் நல்லியற்கையுடையார் ஆகுதல் அருமை, சிலர் மூர்க்கரேயாயினும் நல்லியற்கையுடையரா யிருத்தலுமுண்டு. நூலறிவும், இயற்கைக்குணமுமாகிய விரண்டு நன்றாகவுள்ள புதல்வனே சிறியோருட் சிறியோன். நல்லோரவைக்களத்து யாருடைய நட்புறுகுணத்தினை நட்டோரும், வீரத்தினைப் பகைவரும், எப்பொழுதுங் கூறுவரோ அப்படிப்பட்டவனால் அவன் தந்தைமக்களைப் பெற்றவனாகின்றான். ஓ மைந்தரே, அவ்வகைத்தான வுபகாரஞ் செய்யும் ஆண்மகனுக்கு வேண்டியது யாதானுமொன்றினைச்செய்து, களிப்பித்தீரோ, இரந்து வந்த இரவலரை வீணே போக்காதவனும் ஆற்றலற்றவர்க் கெல்லா நண்பாவானுமன்றோ சிறந்தோன். அவன் பிழைப்பே பிழைப்பாம் அவன் உடம்பெடுத்ததசா னுடம்பெடுத்தபடி. நமது மனைக்கணுள்ள இரத்தினங்கள், பொன், ஆதனம், ஊர்திமுதலியன வெல்லாவற்றுள்ளும் எது அவனுக்குக் கொடுத்தால் திருத்தியாமோ அவற்றையெல்லாங் கொண்டுபோய் கொடுத்துவிடுங்கள். இதுவிடயத்தில் சங்கை வேண்டாம். நண்பருக்கும், தனக்கு உபகாரஞ் செய்தவருக்குங் கைம்மாறுசெய்யாமலே தான்மாத்திரம் பிழைக்கவேண்டு மென்னு மெண்ணங்கொள்பவன் பிழைப்பு மொருபிழைப்போ! சீச்சீ! கெட்டது கெட்டது! மனிதன் என்னும் வானமானது நட்புப்பயிர்க்கு உதவியென்னு மழையினையும், பகைப்பயிர்க்கு இகன்மழையினையும் பொழியாநிற்கும். பேரறிவினையுடையோர் நட்பின் விளைவினையே வேண்டுகின்றனர் என்றான்.

அதுகேட்ட அப்பணிமக்கள், ஐயா! அவன் செய்தக்கனவெல்லாஞ் செய்துமுடித்தோன். அவனுக்குக் கைம்மாறு செய்வதற்கு யார்தாம். அவனிடஞ் சென்றவர்களனைவரும் வேண்டுவனவெல்லாம் பெற்று உபசரிக்கப்படுகின்றனரேயன்றி அவன் விரும்பத்தக்கதொன்று எங்குமில்லை. அவன் பாலுள்ள மணிகளைப்போலும் நம்மிடத்து இப்பாதல வுலகத்துள்ளு மிருக்கக்காணோம். அவ்வண்ணமே ஊர்தி, ஆதனம், ஆடை, அணிமுதலியன அவன்பாலுள்ளன போல் வேறெவ்விடத்துமில்லை. அவன் பெரும்புலமையை யுடையோர்க்கும் உள்ள ஐயமுதலியவற்றை யெளிதில் உணர்த்தியொழிக்க வல்லதிறமையு முடையன். ஆனால், அவனுக்குக் குறைவாயுள்ளதொன்றுண்டு. அதனை முடித்துக் கொடுப்பதற்குப் பிரம விஷ்ணு உருத்திரரென்னு மூர்த்திகள் மூவருக்கன்றி எம்மால் முடிவதல்லவென்றெங்கட்குத் தோன்றுகின்ற தென்றார்கள்.

அதற்கு அப்பணியாளும், அவ்வரசிளங் குமரனுக்கு வேண்டும் கருமம் அத்துணைச்சிறந்துள்ளதேபோலும், அப்படிப்பட்ட கருமம் நமக்கு இயலுவதேயாயினும், இயலாததேயாயினும் ஆக, அதனையறிந்துகொள்ளவேண்டுமென்பது ஒருதலையான என் எண்ணம், உலகத்துள் அறிவுடையோர்க்கு முடியாததொன்றில்லை. மக்கள், தக்க முயற்சி யுடையவர்களாயிருப்பின் விடாப்பற்றாக வுழைத்த பக்ஷத்தில் தேவர்நிலைமையையே யேனும், தேவர்கோமானிலைமையையேயேனும், அதனினுஞ் சிறந்த தொன்றினையேயேனும், இன்னும் எதனைவிழைந்தானாயினும் அதனையும்பெறலாம் என்பது நிச்சயம். மனிதர் மனத்தினையும் பொறிகளையுஞ் சுத்தமாக்கித் தன்வசஞ்செய்து கொண்டு தக்கயோகத்தில் முயல்பவர்களாயிருந்தால் அவர்களறியாததொன்றுள்ளதா, இம்மையிலாயினும், மறுமையிலாயினும் அவர் செல்லலாகாத இடங்களுமில்லை. அவர்கள் அடையலாகாத பேறுமில்லை. "அலசாது அங்குலியும் நடவாது" முயற்சியுடையார்க்குச் செல்லத்தக்க விடமிது, செல்லலாகாத விடமிதுவென்பதில்லை. பூமியெங்குள்ளது, துருவமண்டல மெங்குள்ளது, உத்தானபாதன் என்னும் அரசன் மைந்தனாகிய துருவன் என்பவன் துருவமண்டல அதிகாரபதத்தினை யடையவில்லையா, ஆதலால், ஓ! மக்களே! சாதுவான அந்தவேந்திளஞ் சிறுவன் பெரியோனாயிருத்தலின் அவனுக்கு ஆகத்தக்க கருமத்தினைக் கூறுமின். அவனால் உபகரிக்கப்பட்டிருக்கு நீவிர் அவன் விழைந்த வற்றைச்செய்துமுடித்து, நன்றிக்கடனைக் கழித்துக்கொள்ளலாற்றுவீரோ, ஆற்றீரோ, அதனை அறிவேம் என்று கூறினன்.

அப்போது, அவர்கள் தந்தையாகிய பாம்பரசைநோக்கிக் கூறலாயினர். ஐயா! பெரியோனான அவ்வரசகுமாரன் நல்லொழுக்கமுடையோனாயிருந்தும், அவன் இளஞ்சிறுபாலனாயிருந்த காலத்து நடந்த செய்தியொன்றினை யெம்பால்கூறியுள்ளான் அதைச்சொல்லுவேங்கேளும் என்று சொல்லத் தொடங்கினர்.

காலவமுநிவர் மகிமையுள்ள குதிரையை சத்துருசித்து மஹாராஜனுக்குக் கொடுத்தல்.

அம்மைந்தன் தந்தையான சத்துருசித்து என்னும் இறையவன்பால் முன்னொருநாளில் அந்தணர் திலகனான காலவனென்னும் பே

ரறிஞன் ஒருவன் நல்ல குதிரை யொன்றினைப்பற்றிக்கொண்டு வந்து கூறுவன். ஓய்! வேந்தனே! யாரோ கொடியோனான அரக்கனொருவன்வந்து எங்களாச்சிரமங்களை யெல்லாமழித்துப் பெரும்பாவியாகின்றான். சிங்கம், யானை, கரடிமுதலிய காட்டுமிருகங்களும் ஏனைய சிறுவிலங்குகளுமான பலவடிவத்தோடும் வந்து இரவும்பகலும் ஒழியாது காரணமின்றியே யெங்களை வருத்துகின்றான். சமாதிநிட்டைகளில் வாய்பேசாது விரதம்பூண்டு இருக்கையில் அவன்வந்து என் மனங்கலங்கும்படிசெய்து என்தவத்தினை யழிக்கின்றான். அப்போதெனக்குண்டாகும வெகுளியென்னும் நெருப்பினால் உடனே அவனைச்சாம்பராக்கி விடக்கக்க ஆற்றலெனக்கிருந்தும, மிகமுயன்று அரிதிற்றேடிய விப்பெருந்தவத்தினை இவ்வாறு சிதைந்து போக்கடித்துக்கொள்ள என் மனம உடன்படவில்லை. "சினத்தைப்பேணிற்றவத்திற் சழிவு" என்பது முதுமொழி ஒவ்வொரு காலத்து அவன் கையிற்சிக்கி வருந்தி யொன்றுந்தோன்றாது மனம்பொறுத்திருந்த எனது வெய்துயிர்ப்பு பொறுக்கலாற்றாது வானத்தின்கண் விடப்பட்டது. உடனே அவ்விண்ணினின்றும் இக்குதிரை நிலத்தின்கணுற்றது. அப்போது ஓர் அசரீரிவாக் கெழுந்தது. கேளும் அரசரேறே.

இப்பூவுலகமுழுவதும் ஒரே சுற்றுகச்சூழ்ந்துவரினும் இளைப்பையடையாத இந்தக்குதிரை சூரியனால் கொடுக்கப்பட்டது. பாதலத்திலும, விண்ணிலும், நீரிலும் மற்றெவ்விடத்திலு மாயினுமாக இதனது நடைக்குத் தடையில்லை. எங்கும் நடக்கும். எத்திசையும் செல்லும். மலைகளிதற்குத் தடைசெய்வனவல்ல. கு என்பது மண், வலயம் என்பது மண்டலம். அதனை யிளைப்பின்றி விரைவிற் சூழ்ந்துவர வல்லதாதலால் இக்குதிரையின் பெயர் "குவலயம்" என்றுகூறப்படும். ஓய்! வேதியர்தலைவ! சத்துருசித்து என்னும் அரசன் மகனான இருதத்துவசன் என்பவன் இக்குதிரைமீதேறி உங்களை வருத்தும் அரக்கனைக்கொன்று புகழ்பெறுவன் என்று கூறிற்று.

கேட்டீரோ காவலோய்! ஆதலால் நான் உம்மிடம் வந்தேன் என் தவத்திற்கு இடையூறு செய்பவனை நீ விலக்கி யொழிக்கவேண்டும். ஏனெனில், தருமத்தோடும் உலகோம்பும் அரசன், முனிவர்கள் தவத்திலும் பாகத்தைக்கொள்ளுகின்றான். இதோ! அக்குதிரையுள்ளது பெற்றுக்கொள்ளும் என்று கொடுத்து, உன் மகனை அனுப்பியும்,

டமக்குத்தருமம் வளரக்கடவது. என்று கூறிய காலவர்மொழியை க்கேட்டு அவ்வரசன் தன்மைந்தனை யழைப்பித்து, அக்குதிரை மீதே ற்றி, அவனுக்கு மங்கலக்காப்பு அணிந்து அக்காலவமுனிவரோடு அனுப்பிவிட்டான். அம்முனிவன், அந்த அரசபுதல்வனை அழைத்துக்கொண்டு தன்னாச்சிரமஞ் சேர்ந்தான்.

பதினெட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

௨

பத்தொன்பதாவது,

குவலயாசுவம் பிலத்துட் புகுந்த வரலாறுரைத்த அத்தியாயம்.

சருப்பவேந்தன் பின்பு மக்களை வினவலாயினன். ஓ! புதல்வரே! நீங்கள் கூறுங்கதை மிகுந்தவியப்புள்ளது. அக்காலவரோடு அவ்வரசமைந்தன்சென்று யாதுசெய்தனனோ அதனைக்கூறுமினென மக்களுரைக்கலாயினர். அவ்வரசகுமாரன் பின்பு காலவமுனிவரது ஆச்சிரமத்திலிருந்துகொண்டு, அங்கு மோதவார்க்குண்டாம் இடையூறுகளனைத்தினையு மொழித்துவந்தான். அக்காலவராச்சிரமத்திருக்கும் வீரமுள்ள குவலயாசுவத்தை யறியாது கருவந்தால் கவரப்பட்டுள்ள அவ்வரக்கன் பன்றியுருவெடுத்துச் சந்திகருமம் புரிந்திருந்த அக்காலவமுனிவரைத் துன்பமுறுத்தவந்தனன். உடனே இருடிகண் மக்கள்வந்துகூறலும். அவ்வரசிளம் புதல்வன் வில்லம்பேந்தி அக்குதிரையேறி அக்கொடு விலங்கினைத் துரத்திச் சென்றான். பிறைவடிவாய் விளங்குமோர் அம்பினை விற்பூட்டி வலுவாகவிழுத்துப் பிரயோகித்து விட்டான், விடலும் அவ்வடிபட்ட அக்கருங்கேழலானது தன்னுயிரைத் தப்புவித்துக்கொள்ள மரம், குன்று, மலைநெருங்கிய பெரியதோர் கானகநோக்கி யோடியது. தந்தையின் கட்டளைப்படி நடப்பவனான அவ்விராஜபுத்திரனால் செலுத்தப்பட்ட அக்குதிரை மனவேகமுடையதாய் அம்மிருகத்தினைப் பின்றொடர்ந்து சென்றது. அவ்வேனமும் அதிகவேகத்தோடு பல யோசனைதூரமும் ஓடித்திரிந்து முடிவில் நிலத்தின்கணுள்ளதோர் பிலத்துட் புகுந்துபோதலும், அக்குதிரையும் மைந்தனும் அதனைவிடாது உடனே பின்பற்றி உள்

நுழைந்து சென்றனர். அங்ஙனம் இருணிரம்பிய அப்பிலத்துள் அவ்விலங்கு கண்ணிற்பட்டதில்லை. பின்பாதலம்புக்குத் தேடியுங் காணாது ஒழிந்தது.

அரசமைந்தன் மாதொருத்தியைக்கண்டு மயங்கல்.

அப்பால் அவ்வேந்தன் மகன், பல்லாயிரம் பொன்மாடநெருங் கியதாய்ப் பெரியமதில்களாற் சூழப்பட்டு, இந்திரன் நகரம்போலும் விளங்கும் பட்டணமொன்றினைநோக்கி யதனுட்புகுந்து தேடியும் ஓர் ஆண்மகனையுங்காணாது திரிந்துபார்த்து வருகையில், திருவிளங்கு முகமுடையதோர் மாது புலப்பட்டனள். அவளை நோக்கி நீயார், எங்கு செல்கின்றனை, என்றவினாவலும் அம்மாது யிறுதோர் விடையுங்கூறாது மேல்மாளிகைக்குச் சென்றனள். அவ்வரசமைந்தனும் உடனே தன் குதிரையை அங்கொருசோலையுட் கட்டிவிட்டு விழித்த பார்வையனாய் வியந்து ஐயப்படாது அவளைப்பின்றொடர்ந்து அவ்வுப்பரிகையை யடைந்து, அவ்விடத்து எல்லாம பொன்மயமாயிருக்கும் பெரியதோர் கட்டிலின்மேல் ஒருத்தி தனியாக வுட்கார்ந்திருக்கும் மங்கையைக் கண்ணுற்றான். அவளும மன்மதனைப்பிரிந்திருக்கும் இரதியைப்போலும் இருந்தனள். அவள திருமுகம் முழுமதிபோலும் விளங்கி நின்றது. வடிவும், உருவும, அழகுந் தேகமுற்றும் மிகச்சிறந்திருந்தது. அதுகண்டு, இவளென்னை, இந்த ரசாதலத்துத் தெய்வமோ என்று மருண்டான். அமமடநதையும் அவ்வரசிளங்குமரனது அரிய பேரழகினை முற்றுநோக்கி, காமமுடையளாய் வியப்பினையும் நாணத்தினையும அடைந்து திடீரென்று எழுந்திருந்து, இவர் யார், தேவனோ, இயக்கனோ, கந்தருவனோ, நாகர்வேந்தோ, வித்தியாதரனோ, என்ன புண்ணியமுடையவனோ, என்றெண்ணியிளைத்து விழுந்து மூர்ச்சித்தாள். அவ்வரசகுமரனும மனமாதவேதனையுடையனாய் அமமாதிடத்துச்சென்று அஞ்சாதேயென்று தேற்றியிருந்தான். பின்பு முதலிற் கண்டமாதானவள் ஒரு விசிறியைக் கையிலேந்திவந்து களைத்து விழுநதவளுக்குக் காற்றுண்டுபண்ணித் தெளிவித்து மூர்ச்சையுண்டானதற்குககாரணம விசாரித்தலும், அவ்வணங்கு சிறிதுநாணத்தோடு முற்றும் ஓதினள். அதனையுணர்ந்து அங்கு சாந்தாற்றியால் வீசிக்கொண்டிருந்த பெண், அவ்வரசமைந்தனைநோக்கி, உம்மைப்பார்த்தது இவ்வனிதையின் மோகத்திற்குக் காரணமாயிற் றென்றுகூறிச் சிலவிடயங்களையு முணர்த்தினள். அஃதென்னெனில்?

மதாலசையின் வரலாறு குண்டலை கூறல்.

தேவருலகத்து, விசுவாவசு என்று புகழ்பெற்ற கந்தருவ அரசனொருவனுளன். மதாலசை என்னும் பெயரையுடைய இவ்வணங்கு அவன்புதல்வி. பாதலத்துவச்சிரகேது என்பவன்மகனான பாதாளகேதுவென்னும் பெயரையுடைய கொடிய அரக்கனொருவன், இவள் உய்யானவனத்திருக்கையில், இருணிறைந்த மாயையால் வஞ்சித்துக் கெடுதிபெண்ணத்தோடும் இவளைக்கைப்பற்றியிங்குவந்துவிட்டான். நாளைவரும் திரயோதசிதினத்தில் அவ்வரக்கனிவளை மணம்புணர்வானும். சூத்திரன் எவ்வாறு வேதமோதுவதற்குத் தகாதவனோ, அப்படியே விழைதகு சிறப்புருவத்து இம்மாதினை மணப்பதற்கும் அவன் தகாதவனாக விருக்கிறான். கழிந்த பகற்போதில் தற்கொலை புரிந்துகொள்ளவேண்டுமென்று இவள் முயலுகையில் காமதேனு இவளைநோக்கி, ஒமாதே! கொடியவனான அவ்வரக்கன் உன்னைப் புணர்வதில்லை. இவன் மண்ணுலகத்தையடைந்தபோது யார் பாணங்களாற் பிளந்தெறிவனோ அவனே யுனக்கு விரைவிற் கணவனாவன் என்றது.

என்பேர் குண்டலை என்று வழங்கும். நான் இம்மதாலசையின் நண்பி. மஹாவீரனான விந்தியவந்தன், என்பவர் என்கணவர். சும்பன் என்பவன் என்கொழுநனைக் கொன்றுவிட்டபின், நான் மறுமைக் கேதுவான தெய்வதீர்த்த யாத்திரை செய்திருந்தேன். பாதாள கேதுவெனும் அதேகொடிய அரக்கன், முனிவர்களுக்கு துன்பு செய்யப்புகுந்து யார்பாணத்தாலோ அடிபட்டு ஓடிவந்தான். அதுகண்டு அவனையடித்தவன் யாவனோ அவனைத்தேடி வருகிறேன். ஏனெனில், இம்மாதுக்கு அவனே கணவனாகவேண்டுவதலின், இவள்மூர்ச்சித்த காரணத்தினை யினி கேளும். இக்கந்தருவராஜன் மகள் மிக்கநற்குணமுடையாள். உமமைப பார்த்தளவில் உம்மிடத்து விருப்பமுற்று மூர்ச்சித்தனள், இவள்நெஞ்சு உண்மையாகவே உம்மை மணஞ்செய்துக்கொள்ள விழைந்துள்ளது. நீரிவளை மணவாவிடில், இவள்பிழைத்துள்ளவரையிற் றுயரமே யனுபவிப்பள். ஆயின், காமதேனுமொழிவேறு வீணாகாதன்றோ? அங்ஙனமாதல் பன்றிவடிவெடுத்து ஓடிவந்த அவ்வரக்கனை அம்பினெய்தவனெவனோ அவனே கணவனாதல் வேண்டும். ஆதலால் அவனெவ

னென்று விசாரித்து வருகின்றேன். நம்பியின் தேகத்தினுக்கு மென்னுடம்பினுக்கும் பேதமில்லையன்றோ? அவன் தக்ககணவனைப் பெற்றாலதுவே யெனக்குப் பெரும்பேறாம். ஆதலின் மறையாது உண்மை கூறினேன். நீர்யார்? ஏன் இங்குவந்தீர். உமது உண்மை வடிவியாது? உமதுசரீர மேன்மையைப்பற்றி விசாரித்தால் மானிடராகத் தோன்றவில்லையே? என்முயற்சி வீணாகாதபடி உள்ளதைக் கூறும் என்றாள்.

குவலயாசுவன் தன்வரலாறுகூறல்.

அதனைக்கேட்ட குவலயாசுவன், தருமமுணர்ந்தமாதே! நீ வினவியதால், என்வரலாற்றினை முறையே கூறுவல்கேட்டி. நான்சத்துருசித்து என்னும் அரசன்மகன். முனிவர்களைக் காக்கும்பொருட்டுக் காலவ முனிவர் ஆச்சிரமத்திற்குத் தந்தையாற்செலுத்தப்பட்டு நான் என்கடமையை முடித்து வருகையில் பன்றிவடிவுள்ளான் யாரோ ஒருவன் அவர்க்கு இடையூறு செய்பவர்தானாக, அவனைநான் பிறைவாயம்பினால் அடித்தேன், அக்கணை அதிகவிரைவோடும் ஓடிப்போகையில், மிகுவேகமுள்ள என்குதிரையைத் துரத்திப் பின்றொடர்ந்தேன், பின்பு அப்பன்றி பெரிய பிலவழி யொன்றினுட்புகுந்து இருளிற் செல்ல என்குதிரையும் அதனைவிடாது பின்பற்றி யுண்ணுழைந்தபடியால் அவ்விருளிலே திரிந்துழன்று வெளிச்சங்காணாது கடைமுறையிங்குவந்தேன், இவ்விடத்துன்னைக்கண்டுன்பின்னாகவே இம்மாடத்தினை யடைந்தேன். இதுதான் என்வரலாறு. நான் தேவனுமல்லன், அரக்கனுமல்லன், மானிடனேயாம். தேவரெல்லாம் என்னால் பூசிக்கப்படுபவராம் என்றான். கேட்டோர்தந்தையே யென்று நாகமைந்தர் மேற்கூறலாயினர்.

இங்ஙனங் குவலயாசுவன் குண்டலையோடு தன்வரலாற்றினைக் கூறுமிடத்து, அக்கன்னிகை மூர்ச்சை தெளிந்திருந்தாளாயினும் நாணமுடைமையால் ஒன்றுங் கூறலாற்றாதவளாய் நம்பியின் முகத்தினை மகிழ்ச்சிக்குறியோடு நோக்கினள். அப்போது, அந்த நம்பியான குண்டலை, அரசிளங்குமரனைநோக்கிமீட்டுங் கூறுவாளாயினள்.

ஓய் வீரனே! நீர்கூறியதுண்மையே! இதில் ஐயமில்லை! ஏனெனில், இவ்வுத்தமியான இவள்நெஞ்சு வேறுவிடயத்திற் சலியாது

உம்மையே நாடுகின்றது. நிலவு சந்திரனையும், வெயில் சூரியனையுஞ், செல்வம் புண்ணியமுடையோனையும், கவலாநெஞ்சு தைரியமுடையோனையும், பொறுமை உயர்ந்தோனையும் அடைவது இயற்கையேயன்றோ, அவ்வாறே இவள்நெஞ்சும் உம்மையடைந்தது. ஆதலால் அந்தபாவியான வரக்கனே அப்பன்றியாய் வந்திருக்கலாம். அதனையடிக்க வல்லவர் நீரேயாமாதலின் அடித்தீர். அங்ஙனமல்லாக்கால் காமதேனுவும் பொய்கூறுமோ, ஆகவே நீரே இவள் தலைவராக வேண்டும். இவள் உம்மைக்கூடிப் பயனுற்றவளாகுக. பலசொல்லி என்னை. இவள் நல்ல தவச்செல்வமுடையவளேயாம் என்று கூறினாள்.

பின்பு அவ்வரசமைந்தன் குண்டலைமொழிகேட்டு, நான் வேறொருவருள்ளே யடங்கினவனாயிருக்கின்றேன். நீவிர் அவ்வாறன்றி சுதந்தரமுடையாராகின்றீர் என்றான். அதற்கு அக்குண்டலையானவள், தங்கள் குலக்குருவாகிய தும்புருமுனிவரைத் தியானித்து நினைத்தளவில், அவர் அம்மதாலசையிடத்துவைத்த அருளினாலுங், குண்டலையின் மேம்பாட்டினாலுந் தருப்பை சமித்து முதலிய கொடுவந்து, அம்மணமகன், மணமகளிருவர்க்கும் மங்கலநீராட்டுவித்துத் தீவளர்த்தி ஓமஞ்செய்து விதிப்படி மணவினை முடித்துத் தம்மாச்சிரமஞ் சென்றனர். பின்னர் அக்குண்டலையென்னும் மாது தன்னண்பியை நோக்கி, அம்மே! நல்ல அழகு, குணம், வீரமுடைய விளையோன் உனக்கு நாயகனாகக் கிடைத்தனன் அன்றோ, இனிநான் கவலையற்றவளாய் தீர்த்தயாத்திரை முதலிய தவத்திற்குச்செல்கின்றேன் என்று கூறி, அவ்விராஜகுமாரனை நோக்கி, அன்போடுங் கூறலாயினள்.

குண்டலைகூறிய நீதி

ஐய! பேரறிவுடைய பெரியரும் உமக்குப் போதிக்கத்தக்கதொன்றுமில்லை. பெண்பாலாகியயான் கூறத்தக்கதொன்றுளது. ஆயினும், என்னண்பியிடத்துள்ள அன்புமிகுதியால் என்மனமீர்க்கப்பட்டதாலும், நீரும் என்னிடத்துமிகுந்தநம்பிக்கையுடையராயிருத்தலாலும், உமக்கு ஞாபகம்வரும்படி சிலவற்றை யிங்கு குறிப்பிக்கின்றேனன்றி, உமக்குக்கற்பித்தல் என்கருத்தல்ல. கேளும், மனைவியை உண்டிமுதலியவற்றா லுபசரித்துத் திருத்தி யுறுவித்தலுங், காத்தலும் எப்போதும் கொழுநன்கடனாக விருக்கின்றது. அறம், பொ

ருள், இன்பங்களைத் தேடுவதற்கு மனைவி கொழுநனுக்குத் துணையாயிருக்கின்றாள். அதனாலே, மனைவிக்கு "வாழ்க்கைத் துணை" யென்ற பேருமாயிற்று. தம்பதியர் தம்முள் ஒருவர்க்கொருவர் தொடர்புரிமையும் ஒருமனப்படுதலும் இல்லையாயின் தருமஞ்சித்தியாது. தேவர்பூசனை, பிதிராகடன், அடிமைகளையோம்பல், விருந்துபசரித்தல் இவற்றை மனைவியில்லாத ஆண்மகன் செய்யலாற்றான். பொருளைத்தேடிக்கொண்டு வந்தாலும், மனைவியில்லாதவனுக்கும், நற்குணநற்செய்கையில்லாத மனைவிக்கும் இன்பத்தைச் செய்யாது துன்பமே விளைக்கும். எவ்வகையாலும் அப்பொருள் வீணாகவே யழியும். மனைவியில்லாதவனுக்குச் செய்கருமங்கைகூடாதென்பது கண்ணெதிராகக் கண்டபடியாம். ஆகவே தருமம் எவ்வாறுசித்திக்கும். புதல்வரைப்பயந்து பிதிர்க்கடனைக் கழிக்கவேண்டும். அன்னமிடுதல் முதலியவற்றால் விருந்தினரை உபசரிக்க வேண்டுவது. பூசைமுதலிய வற்றால் தேவரைக்களிப்பித்தல் வேண்டும். இவை உத்தமமான நற்குணமுங் கற்புமுடைய மனைவியில்லாதவனுக்குக் கிடைக்குமோ, கிடையாது கிடையாது!! ஆதலால் இல்லறத்தானுக்கு உள்ளசெல்வமெல்லாம் மனைவியேயாதலின், இக்கருத்தை யுள்ளத்துவைத்துத் தக்கவன்பேழடும் மனைவியைக் காத்தல்வேண்டும். மனைவிக்கோவெனில், கணவனையொழித்து இம்மையிலாயினும், மறுமையிலாயினும் யாதோர் பயனுமில்லையாம். ஆதலின் எல்லாவகையாலுந் தன்னைக் கொண்டவன் கருத்தை யனுசரித்து, அத்தலைவனுடைய செல்வத்தினையுஞ் சுகத்தினையுங் காக்கவேண்டியபாரம் மனைவிக்கு அதிகமாகவே யிருக்கின்றது. அவள் நல்ல அறிவுடையவளாகத்தக்க மார்க்கத்திற்றருவது கொழுநன் தொழிலாகவே யிருக்கின்றது. ஆதலின் மனைவிக்குத் தக்க கணவனுங், கணவனுக்குத்தக்க மனைவியும் இயையப்பெற்றால் இருவர்க்கும் நன்மையே விளையும். அவ்வகைப்பட்டோர் சந்ததியும் மிகச்சிறந்த நல்லவாம். ஆகவே நீவிரிருவரும் அத்தகையாரேயாம். இம்மனைவியோடு, செல்வம், மக்கள், இன்பம். ஆயுள் மிகப்படைத்துப் புகழுடையவனாய் வாழ்கவென வாழ்த்தித் தன்னண்பியைத் தழுவி அவள்கணவனுக்கு வந்தனஞ்செய்து மறைந்து தான் விரும்பிய விடஞ்சென்றனள்.

குவலயாசுவனுக்கும் அரக்கர்க்கும் நடந்தபோர்.

பின்னர், அந்தசத்துருசித்தென்னும் வேந்தன் மகன், மதாலசை யென்னுந் தன் மனைவியைக் குதிரைமேலேற்றிக்கொண்டு அப்பாதலத்தைவிட்டு வெளிவரும்படி புறப்பட்டான். அச்செய்தியை அரக்கர்களறிந்து, ஏடா! நமது நண்பன் பாதாளகேது கொடுவந்து வைத்திருந்த பெண்மணியையாவனோ மனிதனொருவன் வவ்விச் செல்கின்றான் என்றுகூவ, உடனே அரக்கரெல்லாமொருங்கு சேர்ந்து அப்பாதாளகேது வென்பவனோடு கூடிவந்து, அம்பு, வாள்முதலியபடைமழைகளைப் பொழிந்து சூழ்ந்தார்கள். அப்போதக் குவலயாசுவன் நகைப்பவன்போல, தெய்வதப் படைகளைவிட்டு, அவ்வரக்க ரேவிய பாணங்களை யெல்லாமறுத்து, சிலபோது போர்செய்து முடிவில் மந்திரசித்தியுள்ள துவட்டாவின் படையை விட்டான். (துவட்டா சூரியன்) அதனால் உண்டாகிய தீயினால் பாதாளகேதுமுதலிய வரக்கரெல்லாம், எலும்பின் சேடமே சேடப்படும்படி, கபிலமுனிவர் வெகுளியால்மாய்ந்த சகரர் அறுபதினாயிரவரைப்போற் சாம்பராயொழிந்தனர். பின்பு அவ்வரசமைந்தன் குதிரையோடும் அம்மாதரசியோடுந் தன்னகரமடைந்து தந்தையை வணங்கி நடந்தவரலாறு முழுவதையுங்கூறினான். அப்போது அச்சத்துருசித்தரசன் முழுவதுங்கேட்டு, களிப்படைந்து மகனிடத்துப் பேரன்புடையனாய் அவனையணைத் துச்சிமோந்து கூறலாயினன்.

சத்துருசித்து தன்மகனுக்குரைத்த நீதி.

ஐயமைந்த! மகனொருவனடையத் தக்கபயனை யடைந்தபினன்றோ பிதாவென்பவன் புதல்வனைப் பெற்றோனாவன். பிள்ளையைப் பெற்ற அளவினாலேதானே யொருவன் மக்கட்பேறுடையனாகான். பிறந்தாற்றானென்ன பிழைக்கவேண்டாவா, பிழைத்தாற்றானென்ன கல்வியறிவுடையோனாக வேண்டாவா, கல்விகற்றாற்றானென்ன தருமத்தையடைய வேண்டாவா, தருமியானாற்றானென்ன தன்னைக்காத்துக்கொண்டு, தன்மூதாதைமுதலிய பெரியோர்க்குப் புகழுமின்பமுமுண்டாம்படி செய்யவேண்டாவா, அங்ஙனம ஆனாலன்றோ புதல்வனைப் பெற்றவனாவன். மைந்த! இவ்வளவினையும் எதிர்பார்த்திருந்தயான் இப்போதுதான் மக்கட்பேறுடையேனாயினேன். உன்னால் யான்கடைத் தேறினேன். என்னையடைந்த முனிவர்கள் அச்சத்

இனை நீ யொழித்து, என்னாலும் முடித்தற்கரிய கருமத்தினைச்செய்து முடித்த நீ என்னை யுறுதிபெறப் பண்ணுவித்தாய். என்முன்னோர் நல்லபுகழை யடைந்தனர். நானும் அப்புகழைக்குறைவுறவே காத்துவந்தேன். நீ தோள்வலியால் அப்புகழைப் பெருகவளர்த்துப் போர்வேய்ந்தாய். தந்தைதேடிய கல்வி, பொருள், புகழ், வீரம் இவற்றினைப் போக்கடிக்காமலே காப்பாற்றிக்கொண்டவன் இடைப்பட்டமகனாம். தனயன் ஆற்றலுடையனாய்த் தக்கமுயற்சி செய்து தந்தையினும் ஞானம், சுகம், புண்ணியம், கீர்த்தி இவைகளைத் தேடி வாணுயின் அவனையே புத்ரோத்தமன் (மக்களுட் சிறந்தோன்) எனப்பெரியர் கூறுவர். தன்னாற்செய்து முடிக்கக் கூடுமான 'விடயங்களில் தந்தையின் னிலைமையினுங் குறைவாகவுடையோன் மக்கட்பதடி என்று கூறப்படுவன். இங்ஙனம் அறநூல் கூறுவதால், இவ்வளவுநன்மையைத்தரத்தக்கபேருழப்புழைந்த நீ சிறந்தோனே, யான் சிறந்தோனே, இத்தகைய புத்திரனைப் பெற்றுக்கொண்ட பெருந்தவமுடைய யானேசிறந்தோன். நான் அறிவறிந்ததுமுதல், எல்லா முயற்சியோடும், மஹாவிருடிகளான அந்தணர்கள் அச்சமுறாதபடி அவர்களைக் காப்பதிற்றானே ஒழியாது உழைக்கின்றேன் அல்லாது வேதியர்பொருட்டுத் தனியேபாதலம்புகுந்து பலவரக்கரோடு போர்புரிந்து, அவர்கள் யாரையுங் கொன்று, துட்டரை யொறுத்தலுஞ், சிட்டரைக் காத்தலும் என்னும் அரசதருமம் வழுவுறாது காத்துக்கொண்டு, அச்சான்றோர் ஆசீர்வாதத்தினுக்கு ஏற்றவுரிமையுடையனாய் நமது மரபினுக்கு நல்லபுகழ்படைத்தாய். தந்தைபடைத்த புகழின்மறைவிலே தான் புகழைப் பெறுகின்றமைந்தன் பெருஞ்சந்ததியுடையவனேயாயினும் பயனில்லை. மைந்தனால் மரபினுக்குங் குடிக்கும் புகழ்வருமாயின், அத்திறத்துப் புதல்வனைப்பெற்ற தந்தையின் பிறப்பே முழுப்பயன்பெற்றதாம். மகனாற்புகழைப் பெறுவோன் உத்தமன். தன்னாற்றானே புகழுடையவன் தன்னியனேயாயினும் மத்திமனேயாம். தாதையின் தந்தை, பாட்டன், மூத்தப்பன் முதலியோராலாயினும், தாய்மரபு முதியோராலாயினும் புகழ்படைப்பவன் அதமனேயாம். மகனே! உன்பாலெனக்குப் பெருந்தயை யுண்டாயிற்று. ஆதலால் முழுமனத்தோடும் உன்னை ஆசீர்வதிக்கின்றேன். நீ, வலி, வெற்றி, செல்வம், இன்பம் உடையனாய் வாழ்க. இக்கந்தருவராஜன்மகள் உன்னோடு நீடுவாழ்க என்று கூறிப்பல்யாது மவனை

த்தழுவி, மகனையும், மருகியையும் அவர்கள் இருப்பிடஞ்செல்ல விடுத்தனன். பின்பு அவ்வரசிளங்குமரன் தந்தை நகரத்தின் கண்ணும், உய்யானத் தண்டலைகளிடத்தும், மலைமுதலிய விடங்களினுந் தன் மனைவியோடுஞ்சென்று மனஞ்சென்றவழி யின்பநுகர்ந்திருந்தான். அம்மாதரசி நாடோறும் உதயகாலத்துத் தன்மாமி மாமனிவர்கள் பாதங்களை வணங்கி, அவர்கள் கட்டளைக்கு மாறில்லாமல் நல்லொழுக்கமுடையளாய்க் கணவன் கருத்தின்படி தருமத்தினை நடத்தி மகிழ்வோடும் விளையாடி வாழ்ந்தனள்.

பத்தொன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

உ

இருபதாவது அத்தியாயம்.

தாலகேது மாயை புரிந்தது

இங்ஙனம் பலகாலங் கழியவும் அச்சத்துருசித்தென்னும் அரசன் ஒருநாள் தன்மைந்தனையழைத்து, வேதியர்களின் காப்பின் பொருட்டு உலகசஞ்சாரஞ் செய்யும்படி கட்டளையிட்டு, நாடோறுங் காலையிலெழுந்து, அந்தணர்க்கிடுக்கண்செய்வாரைத்தேடி தண்டிக்க. கொடியசெய்கையுள்ள பாவியாகிய அரக்கர்கள் அநேகர் முனிவர் தவத்தைக்கெடுக்கின்றனர் அதனையொழித்தி யென்று விதிக்கப்பட்ட அவ்வேந்திளங்குமரன் நிலவுலகெங்குஞ்சுற்றித் தந்தை ஆணையின் வண்ணம்புரிந்துவந்து பிதாவைவணங்கினான். ஒவ்வொருபகலினுஞ் சூரியன்கொடுத்த தெய்வப்புரவியின் றுணைவலியால் அரைப்பகலுக்குள் ளுலகமுழுவதுஞ் சுற்றித்துட்டரை யொடுக்கி நல்லோரைக்காத்து, மற்றைப்பொழுதிற் றன்காதலியோடும் இன்பநுகர்ந்திருப்பன். இங்ஙனமிருக்கையில் ஒருநாள், யமுனாநதிக்கரையில் சஞ்சரித்து அங்கு ஓர் முனிவன் ஆச்சிரமத்தினைக் கண்ணுற்றனன். அதன் வரலாறென்னெனின், முன் இவனால் கொல்லப்பட்ட பாதாளகேதுவென்னும் அரக்கனுக்குத் தம்பியாகிய தாலகேதுவென்பவன் பழைய பகையை மனத்திலெண்ணித் தன்மாயையால் ஓர்முனிவேடம்பூண்டு ஆச்சிரமஞ்செய்து கொண்டிருந்தான். அங்கு இவ்வரசகுமரன் செல்லலும், அவ்வஞ்சமுனி கூறலாயினன்.

தாலகேதுவின் மாயையால் மதாலசை யிறந்தது.

அரசிளங்குமர! யான்கூறுமதைக் கேட்பாயாக. பின் உனக்கு விருப்பமுண்டாயின், அவ்வாறுசெய்தி. இரந்தோர் இரவைக்கெடுத்தல் செய்யாதே உன்சபதத்தினை யுண்மைபெறச் செய்தி. நான் தருமத்தின்பொருட்டு வேள்விசெய்கின்றேன். அவற்றுள் அனேகஞ் சிறுவேள்விகளைச் செய்தல்வேண்டும். அதற்கு மிகுந்தபொருள் வேண்டும். வேதியர்க்குத் தக்ஷிணைகொடுப்பதற்கு என்பாற் சாலுமான பொருளில்லை. ஆதலால் உன்கண்டத்திற்கிடக்கும் பொன்னாரத்தினைக்கொடுத்தி. நான் இந்நீருண்முழுகி உயிர்களுக்கு ஆக்கத்தினையுண்டாக்கும்படி வருணனைத் தெய்வமாகவுடைய மந்திரத்தால் அந்நீர்க்கடவுளைத் துதித்து வெளியில் வருகின்றேன், அதுகாறும் என் ஆர்சிரமத்தினைக் காத்திருத்தி என்றான்.

அதுகேட்ட வேந்தன்மகனும் வணங்கி, தன்கழுத்தணியைக் கழற்றிக்கொடுத்து, ஓவேதிய! நீர் சுகமேசெல்லும், நீர் செய்யத்தக்க கருமமனைத்தினையும் விரையாதுசெய்க. நான் காத்தலால் உன்னாச்சிரமத்தினை யொருவருங் கெடுத்தல்செய்யார் என்று கூறினான். உடனே, அவ்வஞ்சகமுனிவன் யாற்றுநீருள் முழுகினான்.

பின்பு அங்குமுழுகினவன் மாயையால் மறைந்தோடி அவ்வரசிளமைந்தன் நகரத்தினையடைந்து, அவன் மனைவியாகிய மதாலசையெதிரேநின்று, "சுத்தவீரனான குவலயாச்சுவன் என் ஆச்சிரமத்திற்குவந்து இருடிகளைக்காத்திருக்கும்போது அந்தணர் பகைவரான அரக்கரோடு போர்செய்கையில் கொடியனான அரக்கனொருவன் மாயஞ்செய்து சூலத்தால் மார்பிற்குத்தினான். அவன் இறக்கும்போது தன்கழுத்தணியினை யென்கரத்திற்றந்து இறந்தான். ருத்திரர்களாகிய தவத்தினர் காட்டிலவனைத் தகனமாற்றினர். தலைவனையற்று வருந்துமவன் குதிரையினைக் கொடியனான அவ்வரக்கனே கொண்டுபோயினான். பெரும்பாவியாகிய நான் இக்கொடுமையைக் கண்ணாற் கண்டும் இவ்வளவுதூரம் உயிர்தரித்துவந்து சொல்லவிசைந்தேன். இனி நடத்தத்தகுங்கருமத்தினை நடத்துக. இக்கழுத்தணியைப் பெற்றுக்கொண்டு அக்குவலயாச்சுவனைப்போலும் அதனைப்போற்றிக் கொள்ளுதிர். தவம்புரியும் எங்களுக்கு இப்பொன்னணியால் ஆவதென்னவென்று கூறிப்போனான்.

கேட்டீரோ தந்தையே! இவ்வாறு அந்த வஞ்சகமுனி கூறி அப்பொன்னணியினை நிலத்தின் மீதெறிந்து தன்னிச்சைவழி மறைந்து சென்றான். அங்ஙனம் அவ்வுரைகேட்டலும், அங்குள்ளாரனைவரும் மூர்ச்சித்து விழுந்தனர். அரசமாதர்கள் அனைவரும் சிறுபோது கிடந்து மூர்ச்சைதெளிந்து அரசனோடு பெருங்குரலோடும் அழத்தொடங்கினர். மதாலசை யக்கழுத்தணியை நோக்கிக் கணவன் மரணத்தினைக்கேட்டுப் பிரிவாற்றாது தன்னுயிரை உடனே யிழந்தாள். அக்கணமே ஊர்முழுதும் அழுகுரலாயின. அவ்வூரிலுள்ள ஒவ்வொரு மனையும் அரசன் அரண்மனைபோலவே துக்கமனையாயிற்று. அப்பொழுதவ்வரசன் உயிர்பிரிந்த தன்மருகியையும், அழுதுகொண்டிருக்கும் மற்றையவரையுநோக்கி மனத்துள் கவற்சியடைந்தவனாய், அறிவாற்றேறிச் சொல்லலாயினான்.

சத்துருசித்தரசனுக்கும் அவன் மனைவிக்கும் நடந்தசெய்தி

யாரும், அழத்தக்கதொன்றுமில்லை. நீங்களும், யாமும், பிறர் யாரும் அனித்த உடம்பினையுடையோமே. நான், இனிமகனுக்கு அழுவதோ! மருகிக்கு அழுவதோ! விசாரிக்குமிடத்து, அவ்விருவரும் செய்துமுடிக்கத்தகுவனவெல்லாம் செய்துமுடித்தவராமாதலின், அவ்விருவர் பொருட்டும் வருந்தவேண்டுவதில்லை. எவ்வாறெனில், மகன், தந்தை பணிபுரிபவனாயும், பிதாவின் கட்டளைப்படி அந்தணரைக்காப்பவனாயு மிருந்தானாகவே அத்தகையோன் மரணத்தினைப்பற்றி அறிவுடையோர் துக்கப்படுவது முறையன்று. சரீரம் என்றெடுத்தபின் எப்போதாயினும் போகவேண்டும். அப்போக்கு வேதியர் பொருட்டாகத் தருமத்திறகழிந்தால் பயனுடையதாகவே முடிகின்றது. என்மகன் வேதியர் பொருட்டுயிரைக் கொடுத்தது, எங்கள் குடிக்கு ஆக்கஞ்செய்தவாறாயிற்று. நற்குடிப்பிறந்த விம்மருகியாகியமாதும், தனக்குரிய தருமப்படி கணவன் பணிபுரிந்தனள். மாதர்க்குக் கணவனொழியத் தெய்வம் வேறுயாதுள்ளது, அப்படிப்பட்ட அறங்காத்தமாது இறந்தால் அழுவானேன், ஆயின் எமக்குஞ், சுற்றத்தினர்க்கும், மற்றுமுள்ளவர்க்கும் இவள் கணவன் போனதற்கு இவளாவது சிலபோதிருந்து சென்றால் வருந்தக்கூடியதாயுள்ளது, அங்ஙனமொன்றும் நேர்ந்ததில்லை. கணவன் மரணத்தி

னைக் கேட்டவக்கணமே உயிரையிழந்தாள். இவள் ஒருங்கு தீப்பாய்ந்தவளேயாயினள். இப்பதிவிரதையின் மரணம்பற்றி இரங்குவது பேதைமையாம். கணவனிறந்தபின் உயிர்வாழும் மங்கையர்க்கே யிரங்குவதுகடனன்றி, இத்தகையார்க்கு இரங்கல் கடனன்று. இதத்தினை எண்ணுவோன், சொல்லுவோன், கொடுப்போன், இம்மைக்கண் மாத்திரமேயன்றி மறுமைக்கண்ணும் இன்பம்புரிவோன் கணவன், ஆகவே அவனை மனிதனென்று நினைப்பவள்யார். ஆதலாலே இம்மாது ஒருகணந்தானுங் கைம்மையை அநுபவித்திலள்! ஆதலால், மைந்தனைப்பற்றியாவது, அவன் மனைவியைப்பற்றியாவது துக்கிக்க வேண்டுவதில்லையன்றோ, இனி அப்படிப்பட்ட புதல்வனை யிழந்ததனால் அவனைப்பெற்றதாய் தந்தையரான எம்பொருட்டே யாங்கள் வருந்தவேண்டுவது. ஆராயின் அதுவுமுறையன்று. என்னை, அந்தணர் பயன்பெறும் பொருட்டு எம்மைந்தனுயிரைக் கொடுத்ததால் யாம் அனைவரும் கடைத்தேறினோம், அந்தணர் தருமததினைக்காத்து, வேறுநோயின்றிப்போரில் வீரத்தோடும் உயிரைவிட்டான். நற்குடிப் பிறந்தோன், நல்லகற்புடையாள் புதல்வன் என்ற சொல்லினையும் தேடிக்கொண்டான். ஆகவே தந்தைதாயிருவரும் அவனால் பெறத்தக்கபயன் இத்தனையேசாலும், என்றான்.

தாயானவள், தன்புதல்வன் சாவினைக்கேட்டு, தன் கணவனது நிலைமைநோக்கிக் கூறலாயினள், ஓய் மன்னர்மன்ன! எனக்கு என் தாய், என்னுடன் பிறந்தார் முதலியோரால இத்துணை நயம்பிறந்ததில்லை. முனிவரைக்காக்கச்சென்று இறந்தவனைப்பற்றிச் சுற்றத்தினர் இத்துணைக் கவலையடைந்து பெருமூச்செறிந்து ஏன் இரங்குகின்றனர், நோயுழந்து இறந்தவர்களின் தாய்மார்க்கு மாத்திரமே புதல்வரை யிழந்தமை யுண்டாமன்றி, வேந்தர்மரபிறபிறந்து, போரில் அஞ்சாதுசென்று, பசுவினையும் பார்ப்பாரையுங் காக்கும்படி சென்று, பகைவர் வஞ்சனையால் வெட்டுண்டு இறந்தால், அவன்தாயும் மைந்தனையிழந்தவளாவளோ ஆகாள். ஆதையால், அத்தகையமாந்தரே உலகத்தில் வருந்தத்தக்கவராவர். யார், நண்பருக்கும், இரந்தவர்க்கும, பகைவர்க்கும் முகத்தினையும், கையையும் சுருக்கிக்கொள்ளானோ அவன் யாராயினும் இறந்தாலும் பிழைத்துள்ளவனே யாவன், அவனைப்பெற்றோனே புதல்வரைப் பெறறவனாவன். அப்படிபபட்ட பிள்ளையைப் பெற்றவளே பிள்ளைபபேறுடையவளாவள், இவ்விதசீர்த்தி

சம்பாதித்த குமாரன் யுத்தகளத்தில் சத்துருக்களால் இறந்தாலும், அல்லது அவரைவென்றாலும் பெருமையே யடைவன். அவனைப் பெற்றெடுத்ததாய் கருப்பத்தில் பத்துமாதஞ்சுமந்து பட்டபாடுகளெல்லாம் அப்பொழுது தான் பலனைத்தர மகிழ்வாள், என்று கூறினள். இவ்வாறு தந்தைதாயர்களிருவரும் மனதைத் தேற்றிக்கொண்டதின்மேல் பிதாவாகிய சத்துருசித்தரசன் பட்டணத்திற்கு வெளியேபோய், ஸ்நானஞ்செய்து குமாரனையும் மருகியையுங்குறித்து விதிப்படி செய்யவேண்டிய அபரகிரியைகளெல்லாவற்றையுஞ், செய்து முடித்தனன். மாயாமுனிவடிவங்கொண்டுவந்த தாலகேதுவென்னும் ராக்ஷதன் யமுனாநதியிலுள்ள மடுவிலிருந்து மேலெழும்பிவந்து ஐயா, அரசகுமாரனே நீர் எனதாச்சிரமத்தை விட்டுவிலகாமல் எனக்கு வேண்டிய சகாயத்தைச் செய்தமையால் வருணதேவர் நிமித்தமான யாகச்சடங்கையும், வெகுகாலமாய் முடிக்கவேணுமென்றெண்ணியிருந்த என தபீஷ்டத்தையும் பூர்த்திசெய்தனன். இனி நீர் ஊருக்குப்போகலாமென்று விசுவாசத்தையுடையான்போன்று மதுரமான வார்த்தைகளைச்சொல்ல அதைக் குவலயாசுவனென்னும் அரசகுமாரன் உண்மையாகவே நம்பி, அவ்வஞ்சகமுனியை சாஷ்டாங்கமாகவணங்கி அநுமதி பெற்றுக்கொண்டு வாயுதேவனுக்குந் திருமால்வாகனமான கருடதேவனுக்குஞ் சமானமான வேகபராக்கிரமங்களையுடைய தனது குதிரையின்மேல் ஏறி, தன்னுடைய பட்டணத்தைச் சேர்ந்தனன்.

இருபதாவது அத்தியாயம் முற்றிற்று.

உ

இருபத்தோராவது அத்தியாயம்.

மதாலசையென்னும் மனைவி மரணமடைந்தபடியால் குவலயாசுவன் என்னும் அரசகுமாரன் தன் மனதை தேற்றிக் கொள்ளுதல்.

குவலயாசுவனென்னும் இராஜகுமாரன் தன் தாய்தந்தைகளை வணங்கவும் தன் மனைவியைப்பார்க்கவும் கருத்துள்ளவனாய் விரைவாகத் தன் பட்டணத்திற்குப் போய்ச்சேர்ந்தான். அப்பட்டணத்தில் துயரக்குறிப்புள்ள சிலரையும் சந்தோஷக்குறிப்புள்ள சிலரை

யும், ஆச்சரியகரமான முகக்குறிப்புள்ள சிலரையும், அடங்காமகிழ்ச்சியால ஒருவரையொருவர் தழுவிக்கொள்பவர் சிலரையுமாகக் கண்டனன். அவர்களெல்லோரும் வந்து அரசகுமாரனைப்பார்த்துஐயா இராஜகுமாரனே, உம்முடைய பகைவரெலலோரும் மாண்டுபோனார்கள் நீர் நெடுங்காலம் வாழ்ந்திருக்கவேண்டுவதுமன்றி தாய்தந்தைகளையும், நகரவாசிகளாகிய எங்களையும் சந்தோஷப்படுத்திக்கொண்டிருப்பீராக என்று சொல்லக்கேட்டு ஏதோ புதுமை நடந்திருக்கலாமென் றெண்ணி பட்டணத்திலுள்ளவர்களால் சூழப்பட்டவனுகி அரண்மனையிலுள்ளோர் எல்லோரும் பெருங்களிப்படையுமாறு தந்தையிடத்திற்குப் போனுன். தாய்தந்தையரும் மற்றுமுள்ள பந்துக்களுங்கண்டு தீர்க்ககாலம் வாழக்கடவாயென்று ஆசீர்வதித்தார்கள். அதன்பின்னர், பிதாவைவணங்கி இராஜகுமாரன் ஆச்சரியங்கொண்டு இவ்விடத்து என்ன விசேடமென்று வினவ நடந்த சமாச்சாரமுழுவதும் பிதா தெரிவித்தார். தன் பிரியமனைவியாகிய மதாலசை சோகத்தால் இறந்துபோனதைக் கேள்வியுற்று தம்முன்னிருக்கின்ற மாதாபிதாக்களைப்பார்த்து நான் இறந்ததாகக் கேள்வியுற்று அந்தப்பதிவிரதையாகிய என்மனைவி, பிராணனை விட்டுவிட்டனள். ஆதலால், என்னை நிந்திக்கவேண்டுமென்றுகூறி நாடகனுகிய என்னிமித்தம பிராணனைபபோககடித்த மதாலசையைப்பிரிந்து தயையில்லாத நான உயிர்வாழுகின்றேன் நான் குரூரமுடையேன், பாவச்செய்கையுள்ளோன் என்று சொல்லி தன்னைப் பகைவன் வஞ்சித்தமையால் நேரிட்ட இலச்சையும் குணவதியான நாயகி மரணத்தால்வந்த வியசனமுமாகிய கடலில மூழ்கிக்கிடந்தனன். பின்னர் பெருமூச்செறிந்து ஒருவாறு தெளிந்து அப்பால மயக்கத்தை விலக்கி மனதைத்திடமாக நிறுத்திக்கொண்டு தன்னுள்ளே யோசிக்கலாயினுன். அம்மதாலசை என்னிமித்தம் இறந்தாளென்று நான் உயிர்விடுவேனுல், அகுணவதிக்கு என்ன உபகாரஞ்செயதவனுவேன். அவ்வாறு அவள்செய்தது பதி இறக்கக்கேட்டிறந்த பத்தினியென்பதை விளக்குகின்றது. அச்செய்கை மகாபதிவிரதைகளுக்கு இயற்கையாகுமென்று திடப்படுத்திக்கொண்ட பின்னரும் ஓ! பிராணநாயகியே பிராணநாயகியே யென்று பெருங்குரலிட்டழைததனன். பின்பு தெளிந்து நான் விடாதழுதாலும் யாது பலனுண்டாகும் அன்றியும் தேசவாசிகள் நகைப்பதற்கிடமாகும் அதுவுஞ் சரியன்று கிலேசத்தினுல் மெலிந்து நல்லுணர்ச்சி யின்றிச்சோர்ந்து ஆபரணம், மலர்மாலை முதல

வியுவைகளைத் தரியாதவனாகி அமங்கலமான கோலத்துடனிருப்பே னானால் பகைவர்செய்யும் அவமானத்திற்கு உடன்படுவேன். இப் பொழுது என்தந்தை பெருந்துயரங் கொண்டிருக்கின்றார். அத்துய ரம் எவ்வாறு தணியப்போகின்றது. இச்சமயத்தில் யான்செய்யத்தக் கது யாதெனில் உபசாரத்தால் என்பிதாவைக் களிப்பிக்கவும் யாவ ருக்கும் பெருந்துயரங்களை விளைவித்தபகைவனைத் தண்டிக்கவும் வே ண்டுவதேயாகும். மாதர் இன்பத்தை முழுவதும்விட்டால் இவ்விரண் டெண்ணமும் நிறைவேறும். மாதர் இன்பத்தை விட்டுவிடினும் என் பிராணநாயகிக்கு என்ன பலனுண்டாகும் என்னிமித்தம் பிரா ணனைவிட்டொழிந்தவளுக்கு நானிப்பொழுது மாதர் இன்பத்தை விட்டுவிடுவே னென்பதுமாத்திரம் சரியான உதவியாகாது நன்றியறி தலாகிய சரியானகாரியத்தைச் செய்யவேண்டுமென்று உறுதியாக எண்ணிக்கொண்டு அம்மனைவிக்குச் செய்யவேண்டிய நீர்க்கடன் முதலிய சரமக்கிரியைகளெல்லாவற்றையும் விதிவழியாகச் செய்து முடித்தனன். அதன்பின்னர் எனக்குப் பிரியமுள்ளவளும், இல்லற தருமத்தைஒழுங்காகநடத்துபவளும, சீலமுடையவளும், பெண்யானை போல நடையுடையவளும், மான்போலமருண்ட பார்வையுடையவ ளும், கந்தருவகுமாரியும் மதாலசையென்னும், பெயரையுடையவளு மாகிய என் மனையாள் இப்பிறவியிற்றானே எனக்குப் பெண்டாராக தேசிடாதவரையில் மற்றொருமாதரை யான்விவாகஞ்செய்வதுங் கூடு வதுமில்லையென்று சபதஞ்சொல்லி மடவார் சுகத்தைநீக்கி நண்பர்க ளுடன் நல்லொழுக்கத்திற் காலங்கழித்து வருகின்றனன். கேட்டீ ரோ நாகராஜராகிய தந்தையே அக்குவலயாசுவன் செய்த சபதம் கடவுளருக்கும் முடிப்பது அருமையாகுமே! மற்றையர் முடிக்குந் தரமுடையரோ இது அரிதானசெய்கை என்று நாககுமாரர்கள்கூறக் கேட்டபிதாவானவர் தீர்க்காலோசனைசெய்து புன்னகைகொண்டு குமாரர்களைநோக்கி அசுவதரராகிய பிதாசொல்லுகின்றார். யாதொரு காரியத்தை முடியாதென்றெண்ணி முயலாமல் மனிதர்கள் விடுவா ரெனில், அவர்கள் விவேகிகளால் இகழப்படுவார்கள். புருடப் பிர யத்தினத்தை விடாமல் எப்பொழுதும் முயற்சி செய்தலேவேண்டும். ஒரு காரியமானது தெய்வாதீனத்தினும புருடப் பிரயத்தினத்தினும் முடியவேண்டியிருந்தலின் அக்குவலயாசுவன் செய்த சபதம் நிறை வேறும்படியான தவத்தை அதிசீக்கிரத்தில் நானேசெய்து முடிக்கி

தேனென்றுசொல்லி தமையனுகிய கம்பளனைத் துணையாக அழைத்துக்கொண்டு இமயமலைக் கடுத்ததாம் கல்லாரை மரங்கள் நெருங்கிச் சூழ்ந்துள்ளதுமாகிய ஒரு புண்ணியதீர்த்தக்கரையைச்சேர்ந்து காலை உச்சி மாலை என்னும் மூன்றுகாலங்களிலும் ஸ்நாநஞ்செய்து காண பரிசுத்தஞ்செய்விக்கும் ஆகாரத்தை நியமமாகக்கொண்டு பிரமன் மனைவியாகிய சரஸ்வதிதேவியாரைக்குறித்துத் தவஞ்செய்துகொண்டிருந்து அந்தத் தவத்திற்குப்போதுமான சாதனங்களை யருள்பவளும் உலக மாதாவுமாகிய அக்கலைமகளைத் துதிசெய்யத் தொடங்கினர்.

கலைமகள் துதி.

பந்தத்திற்குக் காரணமாகிய பிரகிருதியையும் முத்திக்குக் காரணமாகிய சத்தென்னும் புருஷதத்துவத்தையும் கலந்தும் கலவாமலுமிருக்கின்றனை. சர்வ வேதாகமாதி கலைகளில் நிலைபெற்றுள்ள முதலின்பமாகிய பொருளும ஒலிவடிவமும் வரிவடிவமுமாகிய அக்ஷரங்களும் நீயாக விளங்குகின்றனை. மரந்தலடங்கிய தீயையும் மண்முதலிய பஞ்சபூதங்களிலடங்கிய பரமாணுக்களையும் நிகர்த்து நானாவித நாமரூபமான சகத்தையும் அச்சகத்தை விளக்கும் பரமான்மாவையும் உனது திருமேனியில் வேற்றுமை யில்லாமற்கொண்டு மூன்றரை மாத்திரை ஒலிசெய்யும் ஓங்காரமென்னும் பிரணவாக்ஷர வடிவமாக விளங்குகின்றனை, விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னும் மூவகை ஆன்மாக்கள்வாழும் திரிவிதபுவனங்களும் இருக்கு, எஜுர், சாமம் என்னும் மூன்றுவேதங்களும், கர்மக்கியான பத்திகளென்னும் மூன்றுவித்தைகளும், தட்சிணாக்கினி, காருகபத்தியம், ஆகவனீயம் என்னும் மூன்றக்கினிகளும், சூரியன், சந்திரன், அக்கினி என்னும் மூன்றுஒளிகளும், அகார, இகார, உகாரமென்னும் மூன்றுவர்ணங்களும், அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றுவர்க்கங்களும் சாத்விகம், இராஜசம், தாமதம் என்னும் மூன்று குணங்களும், இருபொருள் ஒன்றுபடும்பொழுது உண்டாகும் ஒலியும், ஒருபொருள் இரண்டுபடும்பொழுது உண்டாகிய ஒலியும் ஓரிடத்தில் தோன்றி மலை முதலிய மற்றோரிடத்தில் பிரதித்தொனியைப்போலகாணபபடும் ஒலியுமாகிய மூன்றுவித ஒலிகளும், பிரமா, விஷ்ணு, உருத்திரனென்னும் மும்மூர்த்திகளும், பிரமசரியம, கார்ஹஸ்தியம, வானபிரஸ்தம என்னும் மூன்று ஆசிரமங்களும, இறந்தகாலம, நிகழ்காலம், எதிர்

தூலம் என்னும் மூன்றுகாலங்களும், ஜாக்கிரம், சொப்பனம், சுழு த்தி என்னும் மூன்றவஸ்தைகளும், வசு, உருத்திர ஆதித்தர்என்னும் மூன்றுபிரிவான பிதிர்தேவர்களும், இரவும் பகலுமாகிய காலங்களும் உண்டு என்று வாதிப்பவர்களுக்கும் இல்லையென்று வாதிப்பவர்க ளுக்கும் போதுமான ஆதாரங்களும் மற்றுமுள்ளவைகளுமாக மே லெசொன்ன மூன்றரைமாத்திரை ஒலியுள்ளபிரணவத்தின்கண் மூன் றுமாத்திரை யளவில் நீயே விளங்குகின்றனை. அடியேனும் சந்திர சூரியாக்கினிகளாலும் பிரமன் முதலிய விண்ணவராலுமெடுத்துரை க்க முடியாததும் மனத்தால் சிந்திக்கப்படாததும் வேறுபாடில்லாத தும் நாசப்படாததும் அறிவு மழுங்காததுமாகிய உனது மெய்ஞ்ஞா னவடிவம் மற்றை அரைமாத்திரை யளவாகப் பிரகாசிக்கின்றது. உலகமாதாவே உனது காரணசொரூபம் உலகிற்குள்ளடங்கிய தென் றும் புறம்பானதென்றும் பிரபஞ்ச வடிவாகவே உள்ளதென்றும், என்றும் இல்லாததென்றும், உளதிலதென்றும் ஒன்றென்றும் பல வென்றும் ஒன்றுமல்லவென்றும் சாத்விக, இராஜத, தாமதம் என் னும் மூன்றுகுணத்திற்கும ஐசுவரியம, வீரியம், கீர்த்தி, திரு, ஞா னம், வைராக்கியம் என்னும் ஆறுகுணத்திற்கும் ஆதாரமென்றும், சக்திகளுக்குள் முக்கிய சக்தியென்றும் சுகமின்மை, சுகமுண்மை, சுகாதீதம என்னும் மூன்றும் உடையதென்றும இவ்வாறு வேதங்க ளிலும் உபநிஷத்துக்களிலும் பிரகிருதியே உலகத்திற்குக் காரண மென்னும் சாங்கியசித்தாந்தத்திலும் சொல்லப்படும் பலவாகிய வாத விகற்பங்களும் உன்னிடத்திற்றானே விதம்விதமாய் பாவிக்கப்படுகின் றன. அல்லாமலும் சகளமென்னும், நிஷ்களமென்னும், அத்வைத மென்னும், துவைதமென்னும் சப்தங்களோடு பூமி, வானம், என் னும் இரண்டிலும் நித்தியம், அநித்தியம், ஸ்தூலம, சூக்குமமாகக் காணபபடும் பொருள்களின் தோறறமெல்லாம் உனது வல்லமையா லே விளங்குகின்றன. தனித்தனியும் கூட்டம் கூட்டமுமாகிய விய ஷ்டி, சமஷ்டிகளுக்கு சமபந்தப்பட்ட திரிசியமான உருவங்க ளும் அதிரிசியமான அருவங்களும் உன் சுரங்களாலும் அவைகளின் அவயவ விசேஷங்களாலும தோன்றினவைகளாகும. ஓ! மாதாவே உலகின்கண் கர்மகாண்டவழி நிற்பவர் சோமலதையென்னும் வனக் கொடியைக்கொண்டும் அவிஸ் என்னும் பரிசுத்தமான அன்னத் தைக்கொண்டும் பாகமென்று சொல்லப்படும் வேறு பதார்த்தங்களை க்கொண்டும் முடிக்கும் பலவிதயாகங்களும் அவைகளின் பிரயோஜ

ளங்களும் பெரியோர்க ளடைந்துவரும் மாயாரகிதமான நிர்மலக்கி யானரூபப் பிரயோஜனமும் உனனுடைய உச்சாரணையின் மகிமை யால் விளங்குகின்றன. இவ்வாறு அசுவதரனென்னும் நாகராஜன் செய்த துதியைத் திருமாலுக்கு வாக்கேந்திரிய வடிவமாயுள்ள சரசு தேவியார் கேட்டருளி அந்நாகராஜனைநோக்கிச் சொல்லுகின்றனர். ஓ! நாகராஜனே, உமக்குவேண்டியவரம் யாது, சொன்னால் தருகின் றேனென்று கட்டளையிட அவ்வரசன் வணங்கி, அன்னையே, கம்பள னென்னும் என்தமபனை, கானவித்தைக்குத் துணையாகச்சேர்த்து அடியேங்களிருவருக்கும் சகல சுரலக்ஷணங்களுடன், சங்கீதவித்தை பூரணமாக அமையுமபடியான வரப்பிரசாதத்தைத் தந்தருளவேண்டு மென்று பிரார்த்தித்தனன். அங்ஙனம் பிரார்த்தித்த அசுவதரனைக் கடைக்கணித்துத் திருவருள்புரிந்து, ஏழுவிதசுரமும் கிராமம், கீதம், தானம், மூர்ச்சனையென்னும இராகலக்ஷணபேதங்களும் நான்குவித பதபேதமுள்ள தாளலக்ஷணங்களும், மூன்றுவிதமான லயையும் வர்த்திய விசேஷத்தொனி லக்ஷணங்களுமுடைய சங்கீதவித்தையைத் திரிலோகத்திலும் இதுவரையில் யாரும் அடையாதபெருமையோடு நீவிரடைவதுந் தவிர அச்சங்கீத சாஸ்திரத்துக்கு நீங்களே பிரவர்த் தகர்களாக இருக்கக் கடவீர்களென்கிற வரமுந்தந்தருளி அச்சரசு வதிதேவியார் அந்தர்த்தானமாயினர். அவ்வண்ணமே பத, தாள, சுராதிவிசேஷ ஞானத்தையடைந்து அந்நாகராஜர்களிருவரும் மகிழ்ந்தனர். அதன்பின்னர், நாகவரசனுகிய அசுவதரனும அவன் தமைய னுகிய கமபளனும் சுர உச்சரிபபுடன் இலக்கணந் தவறுது பாடும் வல்லமையைக் கலைமகளருளாற பெற்றுககொண்டு லயைபபொருத் தமான சத்தசுர கீதங்களினுலே திருக்கயிலாயமலையில எழுந்தருளி யிருப்பவரும் காமனையெரித்தவருமாகிய சிவபெருமானைக் காலை உச்சிமாலையென்னும மூன்றுசந்தியாகாலத்திலும இராத்திரியிலும் ஆராதனைசெய்யக் கருததுடையராய் இடைவிடாது முயன்று பூசித்துவந் தனர். இவவாறு நெடுங்காலம இவரிருவருஞ் செய்த கானபூசை யை அங்கீகரித்தகயிலைநாயகா திருவுளமிரங்கியருளித்து எழுநதருளிவந்து சாட்சி கொடுததருளினர்.

சிவபெருமானிடத்து வரம் பெறுதல்.

பார்வதிதேவி சமேதரும் நீலகண்டத்தையுடையாரும் மஹாதேவருமாகிய அக்கடவுளை, அவவிருவருந் தரிசித்துவணங்கி, மனங்

கனிந்துருகி, சோமசூரியாக்கினியென்னும் மூன்று கண்களையுடையோரே, தேவதேவரே, அடியேங்களிடத்துத் தேவரீர்கருணைசெய்து எழுந்தருளினமையால் எங்களெண்ணம் நிறைவேறத்தக்க வரத்தைத் தந்தருளவேண்டும் அவ்வரம்யாதெனின், பூலோகத்தில் குவலயாசுவனென்னும் அரசனுக்கு மனைவியாயிருந்து இறந்துபோன மதாலசையென்னும் பெண்ணரசி மரித்தபோதுள்ளவயதும், உருவமும், அழகும், குணமும், செய்கையும், முற்பிறப்பின்ஞானமும், சாதியாசாரவியற்கையும் பெற்று யோகதந்திரங்களை அறிந்திருக்கும் உபாயத்தோடு எங்கள் வீட்டின்கண் எங்கள் இருவரில் தம்பியாகிய அசுவதரனுக்கு •குமாரியாகப்பிறப்பதேயாகும். என்று பிரார்த்தித்த உரகாதிபர் இருவரில் அசுவதரனை சிவபிரான் கடைக்கணித்து, நீ கேட்டபடியே எல்லாவகையிலும் நிரம்பிய வரத்தைக்கொடுத்தோம். உனதெண்ணம் முடிவதற்கு, ஐயமொன்றுமில்லை அப்பெண்ணரசி உனக்கு மகளாகப்பிறக்கத்தக்க, முயற்சியை நாம் தெரிவிக்கின்றோம். நாகலோகத்திற்குப்போய் பிதிர்தேவர்களைக் குறித்து விதிவழியே சிராத்தம் புரிவாயாக. அச்சிராத்தத்தில் நடுவே வைக்கும் பிண்டமாகிய அன்னத்தை நீ உண்டால் அப்பொழுதே நீவிடுகிற சுவாசத்தினின்றும் அம்மதாலசை, முன்னிறந்தகாலத்துள்ள அழகுமுதலியவற்றோடு உனது நடுப்படத்திலே பிறப்பாள், என்று திருவாய்மலர்ந்ததைக்கேட்டு அவ்விருவரும் சிவபிரானை அட்டாங்கத்தோடு வணங்கி மனமகிழ்ந்து, துதித்து அநுமதிபெற்றுத் தமதிருப்பிடமாகிய நாகலோகத்திற்குச் சென்றார்கள். அதன்பின்பு கம்பளன் பின்னோனாகிய அசுவதரன் விதிப்படி சிராத்தஞ்செய்து நடுவேவைத்திருக்கும் பிண்டான்னத்தை உண்டு உமாசமேதர் தந்தருளிய வரத்தைச் சிந்தித்திருக்கும்போது நடுப்படத்தினுடைய சுவாசத்திலிருந்து முன்னுள்ள உருவ முதலியவற்றோடு அம்மதாலசை பிறந்தாளாக. அம்மாதரசியைக்கண்ட அசுவதரன், பெருமகிழ்ச்சியடைந்து, இவ்வற்புதத்தை அன்னியருக்குத் தெரிவியாது, தனது அரண்மனையுள் தக்க மாதரைத் துணையாகவைத்துப் பாதுகாத்து வந்தனன். பின்பு அந்த அசுவதரனுடைய குமாரர்களிருவரும், சத்தியத்தையே கொடியாகவுடைய குவலயாசுவனென்னும் இராஜகுமாரனிடத்துக்குத் தினந்தோறும்வந்து அவனுடன் நண்புபாராட்டித் தேவர்களைப்போல சுகவிநோதஞ்செய்துவந்தார்கள். அக்குமாரர்களை அசுவதரர்நோக்கி உங்களிடத்து நெடுநாளாக அன்புவைத்து உபசரித்துவரும் குவல

யாச்வனை நமது மனைக்கு அழைத்துவரும்படி நான் முன்னமே உங்களுக்குச் சொல்லியிருந்தேனே இதுவரையில் ஏன் அவ்வாறு செய்யாமற்போனீர்கள்? இப்போது அழைத்துவந்தால் நம்மாற்கூடுமான உபகாரம் செய்தனுப்பலாமென்று கூறிய பிதாவார்த்தையைக் கேட்டு ஒருமைமனதுள்ள சகோதரர்களிருவரும் தங்கள் நண்பனாகிய குவலயாசுவன் வாழ்கின்ற பட்டணத்திற்குப்போய் அவனைக் கண்டு குதுகலமாகக்கலந்திருந்து வேறுவேறுயுள்ள கதைகளைச் சொல்லி நாகலோகத்தில் எங்களரண்மனைக்குத் தேவர்வரவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதைக்கேட்ட குவலயாசுவன் நானுங்களை வேறாக நினைக்கவில்லையே! நான் வசிக்கும் அரண்மனை தங்களுடையதேயாகும். அதுவன்றியும் எனக்குள்ள திரவியமும், வஸ்திரமும், வாகனமும், ஆபரண முதலியவைகளும், தங்களுக்குரியதல்லவா? நான் இவ்வாறு சொலவது வார்த்தைமாத்திரமன்று வேண்டிய பொருள்களைத் தமதெண்ணம்போற் செலவுசெய்யலாம். உங்களுடைய நண்பை, என்னிடத்து வஞ்சனையாகச் சிநேகஞ்செய்த தாளகேதுவென்னும் தயித்தியன் நட்பினைப்போல் நினையேன். என்னுடைய பொருளெல்லாம், தங்களுடையதேயாம். தங்களுடைய பொருள்களும் அவ்வாறேயெனக்காம். இதை நீங்கள் உண்மையென்று மதிப்பீர்கள். நீவிரிருவரும் எனக்குப்புறம்பே சஞ்சரிக்கின்ற பிராணனாக விருக்கின்றீர்கள். ஆதலின் நான்மேலே சொல்லியவாறு ஒப்புக்கொள்வீர்கள். அவசியம் அப்படியே நடத்தவேண்டுமென்று அரசகுமாரன் பிரமாணஞ்செய்தனன். பின்னர் நாகராஜகுமாரர்களிருவரும் உள்ளே பெருமகிழ்ச்சிகொண்டு சிறுகோபத்தை முகத்திலே காட்டி சத்திபக்கொடியுடையோரே தேவர்கூறிய வார்த்தையில் ஐயமொன்றுமில்லை எங்கள் பிதாவாகிய அசுவதரர் தேவரைப் பார்க்கவேண்டுமென்று உடனுக்குடன் சொல்லுவதால் அவரெண்ணத்தை முடிக்குநிமித்தம் நாகலோகத்துக்கு வரவேண்டுமென்று நாங்கள் முன்னமே கேட்டுக்கொண்டோம் அவ்வாறு செய்வீராக வென்றனர். அதைக்கேட்ட இராஜகுமாரன் என்னைப்பார்க்கவேண்டுமென்று உங்கள் பிதா எண்ணியது நான்செய்த புண்ணிய பலனாகும். அம்மஹானுபாவர் அவ்வாறு சிந்தித்தமையால் எனக்கிணையாவரொருவருமில்லை. அப்பெரியவர் திருவடி சாக்ஷியாக ஒரு க்ஷணகாலமாயினும் தாமதியேன். இப்பொழுதே போகலாம் நீங்களும் எழுந்திருப்பீர்களென்று சுகாசனத்தினின்றும் எழுந்த

ணன். அவ்வாறெழுந்தபின் நாககுமாரர்களோடும் பிரயாணப்பட்டு பட்டணத்திற்கு வெளியே சிலதூரம்போய், கோமதிஎன்னும் புண்ணிய நதியை யடைந்தபோது அந்நதியிலுள்ள பிலத்துவாரவழியாக நாககுமாரர்கள் குவலயாசுவனை யழைத்துக்கொண்டு சென்று பாதாளலோகம் போனார்கள்.

குவலயாசுவன் நாகலோகத்தையடைதல்.

அதன்பின்பு அரசகுமாரனைப்போல் உருவங்கொண்டிருந்ததை மறைத்து சர்ப்பரூபங்கொண்டு அதிக பிரகாசத்தையுடைய இரத்தினங்களோடு விளங்கும் படங்களையுடையவர்களாகிய நாககுமாரர்களைப்பார்த்து வியப்படைந்து இவர்கள் தெய்வீகமுள்ளவரென்று மதித்துப் புளகமுற்று ஆ, ஆ, ஆச்சரியம் என்று சொல்லிய இராஜகுமாரனை நோக்கி இவ்விடத்துள்ள நாகக்கூட்டங்களுக்கெல்லாம் எங்கள் பிதா அரசராகவும் தேவர்களாலும் மதிக்கத்தக்கவராகவும் சாந்தசீலராகவும் வீற்றிருக்கின்றார் என்றனர். அதைக்கேட்டு அப்பாற்செல்லும்போது அந்நகரத்தில் திவ்யசுந்தரமுள்ள பாலரூபமான சர்ப்பங்களும் யவ்வனலக்ஷணங்களையுடைய சர்ப்பங்களும் விருத்தப்பருவமுள்ள சர்ப்பங்களும் அலங்காரமாகச் சூழ்ந்திருக்கப் பார்த்ததுமன்றி நக்ஷத்திரங்களால் விளங்கும் ஆகாசத்தைப்போல நவரத்தினமயமாகிய குண்டலம் ஆரம் முதலாகிய பல ஆபரணங்களைத்தரித்துக்கொண்டு சஞ்சரிக்கின்ற நாககன்னியர்களையும், வீணாகானத்துக்கும், புள்ளாங்குழலுக்கும், ஒத்ததாகிய பலவாயுள்ள, கானங்களையும், மத்தளமுதலிய வாத்திய பேதங்களையும் உடைய, இரத்தினகசிதமாகிய, பலவித மாளிகைகளையும், கண்டார்.

குவலயாசுவன் நாகேந்திரனாகிய அசுவதரனைக்கண்டு சன்மானம் பெறுதல்.

அப்பாற் போகும்போது அசுவதரன் திருமாளிகை காணப்பட அதினுள்ளேபோய் கோமேதகம், நீலம், பவளம், புருடராகம், மரகதம், மாணிக்கமுதலிய மணிகளைச் சுவர்களத்தின்மீது இழைத்துப் பளபளவென்று ஒளிவீசுகின்ற சிம்மாதனத்தில் வீற்றிருப்பவரும், வாசனைவீசும் புட்பமாலை, பீதாம்பரம், குண்டலம், முத்துமாலை, தோளணி முதலியவைகளை அணிந்தவரும், புண்ணியசீலரும், பேரழகுடையோரும் பெரியோருமாகிய நாகராஜனைப்பார்த்து, இவர்

எம்பிதாவென்று நாககுமாரர்கள் காண்பித்தனர். அக்கணமே குவலி யாசுவன் அந்நாகராஜன் திருவடிகளில் வணங்க, வணங்கியராஜகுமா ரன் பூலோகாதிபதியாகிய குவலயாசுவனென்பதைத் தனது புதல்வ ராலறிந்து ஆநந்தபரவசராய் விரைந்தெழுந்து அவனை எடுத்தணைத்து மூவி உச்சிமோந்து நீர் பகையரசரைவென்று தாய்தந்தையருக்குப் பணிபுரிந்து நெடுங்காலம் சுகஜீவியாய் வாழக்கடவீரென்று அந்நாக ராஜர் ஆசீர்வதித்தனர். பின்பு குவலயாசுவனுடனிருந்து, அசுவதரர் கூறுகின்றனர். இராஜகுமார, உம்மை நான் பாராதிருந்தபோதி லும், தருமவடிவங்கொண்ட வுமது செய்கைகளியாவும் கேள்வியுற் றிருக்கின்றேன், ஆதலின் மனம், வாக்கு, காயமென்னு முக்கரண மும், சுத்தமடைந்து, சுபகரமான செய்கைகளைச்செய்து பொழுது போக்குவீரென்று மதிக்கின்றேன். தூர்க்குணமுள்ளவன், ஜீவித் திருந்தாலும் இறந்தவனுக்கொப்பாவான், குணவான், பிழைத்தி ருப்பது எல்லாருக்கும் உபகாரமாகும். தனக்கு நன்மையைத் தேடு கிறவன், தாய் தந்தையருக்கு உபசாரமும், பகைவருக்கு மனோவே தனையும் பெரியோரிடத்தில் விசுவாசத்தையுஞ் செய்யக்கடவன். தேவர்களும் பிதிர்களும், பிராமணோத்தமரும், நண்பரும், யாசிப்ப வரும், அவயவப்பழு துடையவரும், உறவினரும், குணவானான புருடன் வாழ்ந்திருக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். பழி வார்த்தை வாராமல் தப்பித்துக்கொள்பவரும், ஏழைகளிடத்தில் இர க்கம்வைத்துக் காப்பவரும், ஆபத்தை யடைந்தவரைக்கண்டால், துயரப்படுங்குணமுடையோரும் ஆகிய விம்மூன்று பிரிவினையுடை யோர் எடுத்தபிறவி, புண்ணியரூபமென்று புகழப்படும். இவ்வா றாகிய நியாயங்களைக் கூறியபின்னர் அசுவதரர், தம்முடைய புத்திர ரைப்பார்த்து, இக்குவலயாசுவனென்பவருக்குப் போஜனபானாதிக ளைச்செய்வித்து அதன்பின்பு விநோதமாகக்காலம்போக்கலாமென்று கூறினர். அவ்வாறே எல்லோருமெழுந்து ஸ்நாநம் பூஜைமுதலிய நியமங்களை முடித்தபிறகு சுற்றத்தார் நண்பினர்சூழ விருந்துண்ண அறுசுவையோடுங்கூடிய கறிவர்க்கங்களையும் அன்னத்தையும் சிற் றுண்டிகளையும் சந்தோஷகரமாக உண்டிருந்தார் என்று, பிருகு வம்ச முனிவர் மரபிற் பிறந்த பிதாவுக்குச் சுமதியென்னும் பெயர் கொண்டவரும் பரஞானப் பிரசித்தருமாகிய குமாரர் சொல்லிமுடித் தனர்.

இருபத்தோராவது அத்தியாயம் முற்றிற்று.

இருபத்திரண்டாவது அத்தியாயம்.

அசுவதரனுக்கும் குவலயாசுவனுக்கும் நடக்கும் சல்லாபப்பிரகரணம்.

பிருகு முனிவன் சந்ததியிற் பிறந்த சுமதியானவன் பிதாவை நோக்கி ஐயரே, கேட்டருள்வீராக அசுவதரனாகிய நாகலோகாதிபனும், குவலயாசுவன் முதலானோர்களும், சுகபோஜனஞ்செய்த பின்பு, அவரவர்தகுந்த ஆசனங்களிலிருந்தனர். அந்நாகராஜன், குவலயாசுவனாதியர்க்குப் புண்ணியரூபமான கதைகளைச் சொல்லிக் கொண்டிருந்து, அப்பால், பூவுலகாதிபனைப்பார்த்து இவ்விடத்திற்கு அருமையாகவந்திருக்கின்ற உமக்குத்தகுந்த சன்மானஞ்செய்யலாமென்று நினைத்துளேன். உயர்ந்த சுவர்ணம் நவமணி விசித்திரபூஷணம், சிறந்தவாகனம், வஸ்திரம், ஆசனம், வெள்ளி முதலாகிய அரியபொருள்கள் எவைவேண்டினும் சுதந்தரமாகப் பெற்றுக்கொள்ளலாம் என்ற அசுவதரர் வார்த்தையைக்கேட்டு ஐயரே, சகலசம்பத்தும் என் தகப்பனுக்கிருக்கின்றன, என் பிதா அநேகமாயிரம் வருஷமாக நீதியரசாளுகின்றமையால் அகண்டசம்பத்துள்ளன, ஆதலின் எனக்கு வேண்டுவதொன்றுமில்லை. தந்தை சுகஜீவியாயிருக்க, புத்திரருக்குப் பொருள் முதலிய யாவுந் திரணமல்லவா, வேண்டிய பொருள்கள் அதிகரித்திருப்பதால் இவ்விடத்திற் பெறவேண்டுவதென்னையுள, தந்தையின் புஜபலமாகிய மர நிழலை அடுத்திருக்கும் குமாரர்கள் இன்பமுடையோரல்லவா, இளமைப்பருவமுதல் தந்தையை இழந்திருப்பவர் பிரமதேவராற்செய்யும் வஞ்சனைக்குட்பட்டு பொருளின்றித்துன்புறுவர். என் பிதாவின் அனுக்கிரகத்தினாலே அடியேனும் குடும்பத்திலுள்ள எல்லோரும் வேண்டியபொருள்களை யாசிப்பவருக்குக் கொடுத்துவருவோமாக. தேவர் பாததாமரையில் அடியேன் கிரீடம்படும்படி பணிந்தபோது தேவரீர்பாலித்த ஆசிர்வசனத்திற்குச் சரியான சம்பத்து உலகத்தில் வேறேயுள்ளதோ, என்று சொல்லிய குவலயாசுவனை நோக்கி நான்சொல்லிய இரத்தின சுவர்ணாதிகளில் உமக்கு இஷ்டமில்லாதிருந்தாலும் வேறே எந்தப்

பொருளில் விருப்பமுள்ளதோ, அதை வெளியாகச் சொல்லவேண்டு மென்றுகேட்க ஐயா, தேவரீர்பாதாம்புயங்களை அடிக்கடி தரிசிக்கவேண்டிய பிரியத்தைத்தவிர மற்றொன்றுமில்லையாயினும் புண்ணியத்தையே நிரந்தரஞ்செய்யும்படியான எண்ணம என்னை விலகாதிருக்க அநுக்கிரகஞ் செய்வீராக. மேலும் வஸ்திரம், வாகனம், மாளிகை, ஆசனம், மாதர், ஆகாரம், பானம், மக்கள், புட்பமாலை, சந்தன முதலிய வாசனைதிரவியங்களை அணிதல், கீதவாத்தியங்களை யநுபவித்தல் இன்னும் பலவகையான சுகாநுபவங்கள், யாவும் புண்ணியகர்மமாகிய விருக்ஷத்தின் பலமாகவேயுள்ளன புண்ணிய புருஷர்களுக்கு எப்படிப்பட்ட சுகங்களும் எளிதாகக்கிடைக்கின்றனவாகலின் விவேகியாயுள்ளோன் அப்புண்ணிய விருக்ஷத்தின் வேரை நற்சிந்தனையாகிய தீர்த்தத்தால் நனைத்துப் பாதுகாத்து வரவேண்டும் என்று கூறிய பூவுலகாதிபனை நோக்கி இராஜகுமார நீர்சொல்லியவாறே உமது எண்ணம் தருமத்திலேயே நிற்கப்போகிறது சகல சுகாநுபவங்களும், தர்மபலனென்று நீர்சொல்லியது வாஸ்தவமாகும் நீர் பக்ஷம் வைத்து, என் மாளிகைக்கு வந்தமையால், பூலோகத்தில் கிடைத்தற்கரிய ஒருபொருளை இவ்விடத்திலிருந்து பெற்றுக்கொண்டு போகவேண்டுமென்பது என்கருத்து என்று நாகராஜர் வார்த்தையைக் கேட்ட குவலயாசுவன் புத்திமான்களாகிய அந்நாகராஜ குமாரர் திருமுகங்களைப்பார்த்தனன். அவ்விருவரும் எழுந்து, பிதாவினுடைய, பாதங்களில், வணங்கி, துராத்மாவாகிய, இராக்ஷதன் செய்தமாயையால் மரணமடைந்த மதாலசையென்னும் மனையவள் ஜீவித்துவந்தாலன்றி வேறொருமாதைக் கலியாணஞ்செய்யவாவது ஸ்பரிசிக்கவாவது, சம்மதியேனென்று சத்தியக் கொடியையுடைய இம்மஹாராஜர் பிரதிக்ஞை செய்திருக்கின்றார். அந்த சபதத்தைக் கைகூடும்படிசெய்வதே இவருக்குச்செய்யும் சன்மானமாகும், என்றுரைத்தனர். அதைக்கேட்ட அசுவதரர், புத்திரர்களை தேகநஷ்டத்தையடைந்த பிராணிகள், பின்னர் அத்தேகத்தோடு வருதலை, சம்பராசுரன்செய்த மாயாவித்தையிலும், சொப்பனத்திலும் பார்க்கலாமேயன்றி உண்மையாகக் காணுதலருமையன்றோ என்றனர். அதைக்கேட்ட குவலயாசுவன், எழுந்து நமஸ்கரித்து, நாணமும் மகிழ்ச்சியுங்கொண்டு, மதாலசை வடிவத்தை, மாயாவல்லமையாற் காட்டி மறைத்தாலும் அடியேனுக்குப் பரமோபகாரஞ்செய்ததாக மதிப்பேன் என்றுசொல்ல அசுவதரர்புகலுவார். தமது வீட்டுக்குச்

சிறுவர்வந்தாலும் பெரியராகப்பாவித்து உபசரிக்கவேண்டியது அவ சியமாகலின் உமதெண்ணம்போல அம்மதாலசையை மாயாவல்ல பத்தாற் பாருமென்றுசொல்லி, தமதுபுத்திரரும், குவலயாசுவனும் அந்நகரத்திலுள்ளோ ரெல்லோரும் ஆச்சரியமும் மாறுமகிழ்ச்சியும் அடையுமாறு, தம்முடைய, அரண்மனையில், இரகசியமாகப் பாது காக்கப்பெற்றிருந்த மதாலசையை வரவழைத்தார். மாளிகையிலிரு ந்து, யாவரும்பார்க்கும்படி மின்னற்கொடிபோன்று வந்தமதால சையை நாகராஜர்பார்த்து இம்மாதன்றோ உமதுபிராணநாயகியென் றுகாட்டினர்.

குவலயாசுவன் மதாலசையைக் காண்டல்.

குவலயாசுவன் கண்களிகூரக்கண்டு கரைகடந்தசந்தோஷ சமு த்திரத்தில் முழுகித் தன்னைமறந்து, மோகாவேசமுற்று எதிர்நோக் கிச்சென்று நாணமின்றி, எனதுயிர்போன்ற நாயகியே பெண்ணமுத மே, இதுவரையில எவ்வாறுபிரிந்தனை, எனச்சொல்லி, சமீபிக்க, அசுவதரர், ஓய், அரசகுமார, நான்முன்னேதானே மாயாவடிவமெ ன்று சொன்னேனே நீர்தொடுவீரானல் அச்சணமே இவ்வடிவம் மறைந்துவிடுமே, ஆதலால் சமீபத்திருந்தாநேத்திராநந்தமுண்டாகப் பாருமென்றனர். இதைக்கேட்டு ஆ, ஆ, பிரியநாயகியே பிரியநாயகியே யென்று பெருங்குரலிட்டழைத்து, பின்பு மெய்ம்மறந்து கீழேவிழு ந்து மூர்ச்சையானார். உடனே மதாலசையென்னும் பெண்ணரசி மூர் ச்சித்த பிராண நாயகனைப்பார்த்து, ஆ, ஆ, ஆச்சரியம் பஞ்சபூதகாரி யமான தேகேந்திரிய காரணங்களுடனே நான் பிரத்தியக்ஷமாயிருக்க மாயையென்று சொல்லியசத்த விகற்பக்காலன்றோ தன்னிடத்தில் மட்டுக்கடங்கா மோகத்தைகயுடையோரும் சத்துருக்கள் நடுங்கி ஆயுதங்களையெறிந்து மெய்ம்மறந்து கீழேவிழுந்து மூர்ச்சிக்குமாறு செய்யவல்ல வீரருமாகிய என் பிரியநாயகர். பகைவருமின்றி ஆயு தங்களுமிலலாமல், கீழ்விழுந்து மூர்ச்சிக்கும்படி சம்பவித்ததே யென்று வியசனங்கொண்டனள். யதார்த்தவர்த்தை வெளிப்படுத்தி குவலயாசுவனைக் களிப்பிக்கவேண்டுமென்று நாகராஜர் நினைத்து அக்குவலயாசுவனை எடுத்துத்தாழ்வினதைத்தேற்றி மதாலசையிறந் ததைக் குமாரராலறிந்து இமயமலைக்கருகில் தவஞ்செய்து சரஸ்வதி தேவியினால் கீதவித்தைபெற்று சிவபிரானைத் துதித்து, அக்கடவுள் பிரசன்னராய்த் திருவாய்மலர்ந்த வண்ணம சிரார்த்தம புரிந்து முன்

யிருந்தவயதும், குணமும், அழகும், பூர்வஞான முதலியவற்ருேடு மதாலசை உண்டான சரித்திர முழுவதுஞ்சொல்லிச் சந்தேகத்தை நிவர்த்தித்து, சமாதானஞ் செய்வித்தனர். இதையறிந்த குவலயாசுவன் புளகங்கொண்டு மனமகிழ்ந்து நாகராஜர் பாதங்களிற்பணிந்து பின்னர் மதாலசையோடு பிரியாபாராட்டிப் பெருமகிழ்ச்சியால் விளங்கி சிலகாலமிருந்து அநுமதிபெற்று மகிமையுடைய தனது குதிரைமேலேறி மனைவியாளுடன் தன்னுடைய பட்டணத்தைச்சேர்ந்து தாய் தந்தையரைவணங்கி ஆசீர்வதித்த பிதாமாதா முதலாயினோர்க்கு நிகழ்ந்தசமாசார மெல்லாவற்றையுஞ் சொல்லினன்.

மதாலசையை மாமன்மாமி முதலாயினோர் கண்டுகளித்தல்.

மரணத்திற்கு முன்னிருந்தவாறே விளங்காநின்ற விஞ்ஞான சீலையாகிய அம்மதாலசை, மாமனார் மாமியாருடைய பாதங்களிற் பணிந்து மற்றையோராகிய பந்துக்களுக்குத் தக்கபடி உசிதமான வந்தனை உபசாராதிகளைச் செய்தனளாக, அப்பால், எல்லோருங்காணும்படி இறந்து தகனத்தையும் அவ்வாறேயடைந்த மதாலசை வந்த வரலாற்றை அரண்மனையிலுள்ளோரும நகரவாசிகளுமறிந்து ஆநந்தபரவசராய் தத்தமக்குரிய பரமமித்திரர் மரித்துப்பின்னர் வந்தால் எவ்வாறு அடங்கா மகிழ்ச்சியடைவார்களோ, அவ்வண்ணங்களித்து புளகங்கொண்டு ஆரவாரத்தோடு நகரத்தை நானாவிதமாக அலங்கரித்துக் கரைகடந்த சந்தோஷத்தாலும், ஆச்சரியத்தாலும், கலியாண மகோற்சவம்போலக் கொண்டாடினார்கள். அதன் பின்னர், குவலயாசுவன் மலையடிவாரங்களிலும், நதியின் கண்ணுள்ள மணற்குன்றுகளிலும், உத்தியானவன முதலிய இடங்களிலும் அந்த காந்தர்வ குமாரியான மதாலசையுடன் சிலகாலம் கூடியிருந்தனன். அம்மாதும், எதிர்காலத்தில் ஞானசமாதியடைந்து பேரின்பவாரியில் முழுகப்போகின்றவளாதலால் புண்ணியபலனை, சீக்கிரத்தில், காமரூபமாக அநுபவித்து, ஒழித்துவிடவேண்டிய எண்ணத்தினால் மனதுக்கு இன்பங்கொண்ட கணவனுடன் உல்லாசமாகச் சேர்ந்திருந்தனள். சிலகாலமானபின் குவலயாசுவனுக்கு பிதாவாகிய, சத்துருசித்து வென்னுமன்னவன், நெடுங்காலம், அரசாண்டவனாகித் தூலதேகத்தை விடுத்துப் புண்ணிய பதவியைப் பெற்றனன். அப்பால், மந்திரிமுதலிய தேசவாசிகளியாவரும் நீதியரசாளும் வல்லமை

யோடு பகைவரையழிக்குந் திறமுமுடைய குவலயாசுவனுக்கு மகுடாபிஷேகஞ் செய்வித்தனர். விதிவழியே மகுடந்தரிக்கப்பட்டு மநுநீதி விளங்குமாறு அரசாண்டுவரும் அவ்வரசன், குணவானாயுள்ள பிதா தன் இஷ்டபுத்திரனைப் பாதுகாப்பதுபோலத், தனது நாட்டிலுள்ள எல்லோரையும் பாதுகாத்து வரும்போது பட்டத்தரசியான மதாலசை வயிற்றில் பிரதமபுத்திரன் பிறந்தான். அரசகுமாரன் பிறந்த சந்தோஷத்தால் விரைமுதலாகிய தானங்களைச் செய்து, அன்ன வஸ்திர பூஷணங்களால், வறியோரைக்களிப்பித்து, புத்திரோற்சவங் கொண்டாடி, யாவரு மகிழ்ந்திருந்தனர். பின்பு ஜாதகர்மம், முதலியவைகளை நடத்தி, அக்குமாரனுக்கு, குவலயாசுவனாகிய பிதா விக்கிராந்தனென்னும் பெயரிட்டழைக்க சகலரும் சந்தோஷிக்கையில் மாதாவாகிய மதாலசைமாத்திரம் சந்தோஷியாமல் பரிகாசக்குறிப்புடன் புன்னகை செய்தனள்.

தாயார் குமாரனுக்குத் தத்துவோபதேசஞ் செய்தல்.

கேட்டீரோ பிதாவே, முதுகுகீழும் மார்புமேலுமாகப் படுத்தழுகின்ற தனது குழந்தையாகிய விக்கிராந்தனை, மதாலசைபார்த்து தாலாட்டென்னுஞ் சீராட்டு முன்னிலையாக, சிலவார்த்தைகளைச் சொல்லத்தொடங்கினள். அப்பா குழந்தையே நீ இப்போது சுத்தனாயிருக்கின்றனை உனக்கு வாஸ்தவத்தில் பெயரில்லை உன்பிதாவினால் வைத்திருக்கும் நாமம் கற்பனையே, பஞ்சபூத காரியமான உடம்பு உனக்கு வேறாயுள்ளது, அவ்வாறிருக்க நீ அழவேண்டிய தென்னை, உண்மையாகப் பார்க்குமிடத்தில் வியசனமுறுபவனாகத்தோற்றவில்லை உன்னிடத்துண்டாகிய ரோதனமும் அதற்குக் காரணமாகிய வேறுவேறான குணங்களும் குழந்தை வடிவைப்பற்றிய கிரியாவிகாரங்களேயன்றி உள்ளே விளங்கும் பரமான்மாவான உன்னிடத்தில் யாதொரு வேறுபாடும் இல்லை. பூதகாரியமான சிறுமீனை பூதகாரியமான பெருமீனுக்கு ஆகாரமாய் வளரச்செய்வதுபோல அன்னம், நீர், பால்முதலிய உணவுப் பொருளாலே, உடலுக்கு அபிவிருத்தி கூறவேண்டுவதன்றி சுத்தசொரூபனாகிய ஆசை, மதம்முதலானவைகளால் செய்யப்படும் நல்வினை தீவினைகளாலே சட்டையையொப்பாகிய உடல்கிடைத்துள்ளது அச்சட்டையை நீக்கி உனது வடிவை நோக்குவையாயின் நீ நின்மலனாக விளங்கும் அநுபவம்,

உனக்கேதெரியும் ஆகலின் அஞ்ஞானமயமாகிய உடம்பை உனது வடிவென்று கருதவேண்டாம், அப்பனே கண்மணியே குழந்தாய் என்று என்னால் அழைக்கப்படும் தேகத்தை யானென்றும் ஆகாராதிகளை, எனதென்றும் எண்ணி உலகநோக்கை விருத்திசெய்யாதே அஞ்ஞானி துயரங்களை விலக்காமல் போகங்களையே இன்பமென்றெண்ணி, மேலுமேலும் கிலேசங்களையே சம்பாதித்துக்கொள்ளுகின்றான். புருஷருக்கு விடயசுகத்தைக் கொடுக்கும் மடவார் சிரிக்கும்போது காணப்படும் பல்வரிசையை முத்துக்களென்று சிலர் அலங்கரித்துக் கூறினாலும் எலும்பின் வேறுபாடேயாமென்று உண்மையில் அறியவேண்டும். நவரசாதி அபிநயங்களைப் பிறருக்குக்காட்டி மயக்குந் தாமுடையது கண்ணென்று சிலர் சொன்னபோதினும் நெருப்புப் பொறியைப்போற் குரூரத்தைக்கொண்டு மலாதி தோஷத்தோடு கூடியதென்கிற உண்மையை உணரவேண்டும். குசங்களைத் தங்கக்கலசமென்று சிலர் கற்பித்துரைத்தாலும் அவைகளை மாமிசகண்டமென்றே உண்மையில் அறியவேண்டும். ஆதலால் போகத்திற்கு ஆதாரமானமாதரை இம்மையில் நரகமென்றேயெண்ணவேண்டும். வாகனத்தின்மேற்செல்லுகின்ற புருஷனானவன் தனக்காதாரம் தேகம் தேகத்திற்காதாரம் வாகனம் வாகனத்திற்காதாரம் பூமியென்று தத்துவத்தை உணராமல் பூமியையும் வாகனத்தையும் வேறாக்கி உடம்போடு தன்னை ஒன்றாகக்காண்கிறான். அவ்வாறு காணாது பூமியையும் வாகனததையும் நீக்குவதுபோல உடம்பையும் வேறாக்கித் தன்னைக்காணவேண்டும. இவ்வாறாக உடம்புக்கும் ஆன்மாவுக்கும் உள்ள பேதவிலக்கணங்களைச் சொல்லி குழந்தையைச் சீராட்டிவந்தனள்.

இருபத்திரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

இருபத்து மூன்றாவது

மதாலசை தன்குமாரர்களுக்கு நீதி உபதேசித்த அத்தியாயம்.

பிதாவே, கேட்பீராக குவலயாசுவனென்னும் மஹாராஜன் பத்தினியாகிய மதாலசை தன்குமாரனை விக்கிராந்தனென்னுங் குழந்தைக்குத் தினந்தோறும் வேதாந்த ரகசியங்களைச்சொல்லிச் சீராட்டி வந்தனள். அக்குழந்தை வளரவளர உலகப்பொருளில் வெறுப்பும் தவத்திலும் யோகத்திலும் ஞானத்திலும் விருப்பும் கூடவே வளர்ந்து, இராஜகுமாரர்களுக்குரிய தந்திரங்களிற் பழகாது யாவும் அநித்தியமென்றுணர்ந்து ஞானசாதனங்களிற் பழகியது. அதன்பின்பு அம்மதாலசைக்கு இரண்டாவது புத்திரன் பிறக்க அக்குழந்தைக்குப் பிதாவாகிய குவலயாசுவன் சுபாகு என்கிற நாமகரணத்தை வைத்து அழைத்தபோது, முன்போல மதாலசை நகைத்து, சீராட்டுகின்ற காரணத்தினாலே தேகான்மபுத்தி நீங்கவும் ஞானான்மபுத்தி ஓங்கவும் போதித்து வந்தனள். அக்குழந்தை வளர்ந்து விஷயவின்பங்களைப் போக்கி உலகவாசனையைநீக்கி அறிவைவளர்த்து வந்தது.

அப்பால் மதாலசைக்கு மூன்றாவது பிள்ளைபிறந்தது அதற்குக் குவலயாசுவன் சத்துருமர்த்தனன் என்னும் பெயரிட்டு அழைக்க மதாலசை பூர்வம்போலநகைசெய்து அக்குழந்தைக்கு இந்திரியகரணவியவகாரங்களை அடக்குவதற் கேதுவாகிய வேதாந்தத் துண்மையைப்போதித்துவரவர அச்சிறுவனும் போகத்திற்குக் காரணமாகிய கருமங்களைப்போக்கி, முத்திக்கேதுவாகியசாதனங்களிற்பழகினன். அதற்கப்பால் நாலாவது குமாரன் பிறந்தனன். பிதாவான குவலயாசுவன் விதிவழியே நாமகரணஞ்செய்ய எத்தனித்தகாலத்தில் அன்னையாகிய மதாலசை புன்னகைகொள்ளக்கண்டு ஓ மாதரசே இதற்கு முன்னுற்பவமான மூன்றுகுமாரர்களுக்கும் க்ஷத்திரியகுலத்தின் வீரமுதலிய குணங்களைக்குறிப்பாற் காட்டத்தக்க விக்கிராந்தன், சுபாகு, சத்துருமர்த்தனன் என்கிற பெயர்களை முறையாக நான் இட்டசமயத்தில், நீ நகைத்தகாரணம், எனக்கு இப்போது சந்தேகத்திற் கிடமாகின்றது அதை வெளியிடுவதுமன்றி இக்குமாரன் அர

சானுக்குபயோகமாகத்தக்க நாமத்தை, நீயே வைப்பாயென்று பிராணநாதனாகிய குவலயாசுவன் வார்த்தையைக்கேட்டுத் தேவரீர் நியமித்தபடியே செய்கிறேனென்று அக்குழந்தைக்கு அலர்க்கன் என்கிற பெயரைவைத்து இவன் புத்திமானாகவும், பிரசித்தியுள்ளோனாகவும், வாழப்போகின்றானென்று கூறினள். அவ்வபிதானத்தைக் கேட்ட மஹாராஜன் மதாலசையைநோக்கி சம்பந்தமற்ற நாமத்தை வைத்தனை, இப்பெயருக்கு அர்த்தம் யாது கூறுகவென்றனர். அதற்கு மதாலசை பிராணநாயக பெயர்வைக்கிறதென்றால், உலகவியவகாரம் நடப்பதற்கு ஒரடையாளக்குறியேயன்றி வேறேயாது, மூத்தபிள்ளைகளுக்குத் தேவரீர் வைத்தபெயர் வீரமாதிகுணங்களை, வெளியிடும் பெரும்பிரயோசனமென்று தெரிவித்தீர். அப்பெயர்கள் உபயோகமில்லாதன வென்பதை அடியேன் வெளியாக்குகின்றேன், மன்னித்தருள்வீராக. சரீரதாரியான ஆன்மா எங்கும் வியாபித்தவனென்று, பெரியர் மொழிகின்றாரல்லவா கிராந்தி என்பது ஓரிடத்திருந்து மற்றோரிடத்துக்குச் செல்லுதல். சர்வவியாபியான ஆன்மாவுக்குத் தங்குதற்கோரிடமுஞ், செல்லுதற்கோரிடமுமில்லாமையின், விக்கிராந்தனென்னும் பெயருக்குப் பொருள் பேதிக்கின்றது. அதுநிற்க இரண்டாவது குமாரனுக்கு வைத்த சுபாகுவென்னும் பெயரோ ஆன்மாவானவன் வடிவமில்லாதவனாயிருக்க அவயவவிசேஷத்தைக் குறிக்குஞ் சுபாகுவென்னும் பெயர் அவ்வான்மாவுக்கு எவ்வகையாகப் பொருத்தமுறும் அதுநிற்க, மூன்றாவது தனயனுக்குவைத்த சத்துருமர்த்தனன் என்னும் பெயரோ ஏகனாகிய ஆன்மா சர்வசரீரங்களிலும் வியாபித்திருக்க அவ்வான்மாவுக்குப் பகைவன்யாவன் நண்பன்யாவன் பஞ்சபூத காரியமாகிய தேகாதிகளுக்கு மர்த்தனமே தவிர, வடிவமற்ற ஆன்மா எவ்வாறு, மர்த்திக்கப்படும் எல்லாப்பிராணிகளையுஞ், சர்வசமமாகப்பாலிக்க வேண்டியதைவிட்டு சத்துருமித்துருவாகப் பேதபாவனைசெய்வது பயனற்றதாகும் இம்மூன்று பெயர்களும் இவ்விதமாக முடிந்தன. நான்காவது குமாரனுக்கு அடியேன் இட்டபெயர் பிரயோஜனமில்லாததென்று தேவர் தெரிவித்தற்குக் காரணம் யாது. சொல்லவேண்டுமென்ற மதாலசையைப்பார்த்து ஓ பெண்ணமுதமே, நீ சொல்லியவைகளியாவும் உண்மையேயென்று சம்மதித்தனராக. அப்பால் அலர்க்கனென்னும் நான்காவது மைந்தனுக்குத் தாயார் ஞானபோதனைக் கேதுவான சிலவார்த்தைகளைச்சொல்லிச், சீராட்ட எத்தனிக்கையில் குவலயாசுவமன்ன

வன்றிந்த சந்ததி விருத்தியில்லாமலே போகிறதென்னுங் கவலைக்கடலுளாழ்ந்து ஓ பிராணநாயகியே என்னுடைய இஷ்டப்படி போதியாமல் உலகாசாரத்தை மறந்துபோகத்தக்க போதனையைச்செய்து முன்பிறந்த புதல்வர்மூவரும் மெய்ஞ்ஞான சாதனங்களிற்பழகுமாறுசெய்தனை இக்குமாரனுக்காயினும் பிரவிர்த்தி தருமமென்னப்படும் இம்மை, மறுமை இன்பங்களுக்குத் தொடர்புடைய மனுநீதி வழியிலேசெல்லும் போதனையைச் செய்வாயாக. பிதிர்தேவர்களுக்கு வைக்கும் பிண்டங்கள் ஆனியாகாமற் செய்புஞ் சர்மவழிகரு நீ ஒருக்காலும் விரோதம் செய்யாதே யாதெனில், புண்ணியக் குறைவால் தேவராகவும் பிதிராகவும் புண்ணியக்குறைவினால் விலங்கு, பறவை சலசரம், ஊர்வனம் முதலானவாகிய திரியக்கு உயிர்களாகவும், மனிதராகவும் பூதப்பிரேத பிசாசாதிகளாகவும், வடிவங்கொண்டு, பசிதாகங்களால் வருந்துகின்ற பிதிர்தேவர்களைக்குறித்து ஒருவன் பிண்டத்தையுந் தீர்த்தத்தையுங் கொடுப்பானானால், அப்பிதிர் திருப்தியடைந்து அவர்கள்செய்யும் பலவகை உதவியையும்பெறுகின்றான் என்று கூறிய பிராணநாதன் வார்த்தையை மதாலசைகேட்டு நாலாவது பிள்ளைக்கு இம்மை மறுமையின்பங்களை விளக்கும் அரசநீதியைச் சீராட்டு மூலமாகப் போதித்துவந்தனள். அப்பா குழந்தையே நண்பர்களுக்கு உபகாரஞ் செய்தற்பொருட்டும், பகைவரை நாசஞ்செய்தற்பொருட்டும் நீவாழக்கடவை. நான்சொல்லும் நீதியை நீ பாதுகாத்து வருதலினாலே உன்பிதாவைச் சந்தோஷப்படுத்தப் போகின்றனை. நீ புண்ணியசீலனாக நீதிதவறாதிருந்து பகைவராற் றுன்பம்வராதபடி பூமண்டலத்தை நெடுங்காலம் அரசாளப்போகின்றாய். அதனாலே இம்மையில் இந்திரபோகத்திற்குச் சமானமான சுகத்தையும் மறுமையில் தேவபதத்தையும் அடையப்போகின்றாய். தகுந்தகாலங்களில் பிராமணர்முதலிய பெரியோரைக் களிப்பிப்பாயாக. பந்துக்களுடைய இஷ்டத்தை நிறைவேற்றுவாய். பிறருக்கு இன்பத்தை விளைவிப்பாய், பரதாரகமனத்தில் மனஞ்செலாதுதடுப்பாய். அனேகமான யாகங்களாலே தேவர்களையும், திரவியங்களாலே பிராமணரையும் அடுத்தோரையும், களிப்பிப்பாய். காமத்தாலே சொக்கமனைவியரையும், போரினாலேசத்துருக்களையும் வெல்லக்கடவாய். நீ பாலியப்பருவத்தில கற்றத்தாரையுங் குமாரபருவத்தில், பணிவிடை இயற்றுதலால் ஆசாரியர்களையும், யவ்வனபருவத்தில் குலமனைவியரையும் வயோதிகபருவத்தில் தவமுதலிய செப்டவரையுஞ், சந்தோஷப்படுத்

துவிஜர்தவிர சாதுக்களைப் பாதுகாத்தும் துஷ்டர்களையும் பகைவரையும் தண்டித்தும் வரக்கடவாய். பசுக்களையும் பிராமணரையும் பாதுகாப்பதில் பிராணனை ஒரு பொருளாக நினையாமலிருப்பாயாக. இவ்வாறாகிய தருமபோதனைகளைச் செய்து நான்காவது குமாரனை ஆசீர்வதித்தனள்.

இருபத்துமூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

இருபத்து நாலாவது

அலர்க்கனென்னும் அரசகுமாரனுக்குத் தாயாகிய மதாலசை இராஜநீதியைத் தெரிவித்த அத்தியாயம்.

பிதாவே கேட்டருள்வீராக, தாயாகிய மதாலசை அலர்க்கனென்னுங் குழந்தைக்குத் தினந்தோறும் இராஜநீதியைப்போதித்துவர சரீரமும் விவேகமும் வளர்ந்து குழந்தைப்பருவம் முதிர்ந்து குமாரப்பருவத்தைப்பெற்று வேதப்பொருளை விளைவுதற்குரிய உபநயனம் நிறைவேறியபின்னர் அவ்வலர்க்கன் அன்னையைப்பார்த்து, மாதாவே அடியேனுக்கு இம்மைமறுமை யின்பம் விதிமுறையாக நேரிடத்தகுங் கிரியைகளை நீ கட்டளையிடுக வென்றனன். அஃதுணர்ந்த அன்னை அப்பாகுழந்தையே அவைகளை உணர்த்துகின்றேன் கேட்டறிவாயென்று சொல்லத் தொடங்கினள். மகுடந்தரித்து அரசாட்சிசெய்கின்ற மஹாராஜன் தனதாளுகைக்குடன் பட்டவர்களெல்லோரையும் தருமந்தவறாது பாதுகாத்துவருவதே கடமையாகும். அரசாக்ஷியாகிய மரத்தின் வேர்களைக்களைந்து அவ்விருக்ஷத்தைக் கேடுதன்னுதற்குரிய சத்தவியசனமென்னும் ஏழுவிதகாரியங்களை விட்டுத்தான்செய்யும் மந்திராலோசனையை ஒருவருக்கும் வெளிப்படுத்தாமல் சத்துருபாதைக்குத் தப்பியிருக்கவேண்டும். சுபக்ஷமென்று சொல்லப்படுந் தன்னரசாங்கத்தைச்சேர்ந்த மந்திரிமுதலிய அதிகாரிகளுங் குடிகளுஞ் செய்யுந்துரோக கிர்த்தியத்தால், அரசன் ஆலகஷ்டத்தை யடைவதுபோல மந்திராலோசனையை வெளியிட்டால் அவ்வாறே கஷ்டமுண்டாகும். பகை அரசருக்குத் தன்னுடைய மந்திரிமுதலாயினோர் உபவாயிருக்கின்றாரென்பதையும், விரோதித்திருக்கின்றாரென்பதையுந் தனக்கந்தரங்கமான சாரரென்

றும் வேவுகாரரால் அரசன் தெரிந்துவரவேண்டும். நண்பினர் ஆப்தர் சுற்றத்தாராகிய இவர்களிடத்தில் அரசன் முழுநம்பிக்கையை வைக்கலாகாது. காரியவசத்திற்காக ஒருக்கால் பகைவரையும் நண்புபாராட்டவேண்டும்.

பகைமன்னருக்குத் தான் குறைந்திருப்பதும், அதிகரித்திருப்பதும், சமமாயிருப்பதுமாகிய விசாரணைகளை அநுபவமாகத் தெரிந்துசமாதானம், போர், தண்டெடுத்தல், ஆசனம், துவிதம், ஆசிரயம், இவைகளைச் சமயங்களில் உபயோகப்படுத்து நிமித்தம் அவைகளினியல்பை அரசன் செவ்வையாகத் தெரிந்திருத்தல் வேண்டும். மந்திரி, சேனாதிபதி, சேனை, தேசவாசிகளாகிய இவர்கள் தனக்கு விரோதஞ் செய்யமாட்டார்களென்பதை, முன்னேதெரிந்து அரசனானவன் பகைவரை வெல்லுவதற்குப் பிரயத்தனம் பின்னேசெய்யவேண்டும். முதலிலே தன்னாலும் மந்திரிமுதலாயினோராலும், விரோதம்வாராது பாதுகாத்து யுத்தஞ்செய்யும் அரசன் வெற்றியையடைவன். இவ்விதியை 'மாநிலங்காவலனாவான் மன்னுயிர்க்காக்குங்காலைத்தானதனுக் கிடையூறு தன்னால் றன்பரிசனத்தா லூனமிகும் பகைத்திறத்தாற் கள்வரானுயிர் தம்மாலான பயமைந்துந் தீர்த்தறங்காப்பானல்லனோ' வென்பது விளக்குகின்றது.

இவ்வாறு செய்யாது யுத்தஞ்செய்ய முயல்பவன் அபஜெயத்தை யடைவன் அரசனானவன் அரசாட்சியைக் கெடுக்குந் துர்க்குணங்களுக் கிடங்கொடாமல் அவைகளை வென்றிருக்க வேண்டும்.

காமமும், குரோதமும், உலோபமும், மதமும், அகங்காரமும், அவிவேக சந்தோஷமும, அரசனைக் கெடுக்கும் பகையாயுள்ளன. காமம் ஒன்றினாலே பாண்டுமகாராசனுங், குரோதம் ஒன்றினாலே அனுஹிராதனென்னும் மன்னனும், உலோபம ஒன்றினாலே ஐளனென்னும் புரூரவேந்தனும், மதம் ஒன்றினாலே வேனனென்னும் இறைவனும், அகங்காரம் ஒன்றினாலே அனுபுவின் குமாரனாகிய பார்த்திபனும், அவிவேக சந்தோஷம் ஒன்றினாலே புரஞ்சயன் என்னும் மகிபதியும் நஷ்டமடைந்தார்களாகையால் அரசனானவன் இத்துர்க்குணங்களை ஒழித்து இவைகளுக்குச் சம்பந்தப்படாமலிருந்த மஹான்மாவாகிய மருத்து என்னும் இராஜனைப்போலிருந்து விளங்கவேண்டும். மேலும், பன்றியானது பூமியைத் தோண்டி. விவேகு

போல, காலமறிந்து தகுந்த சாதனங்களால் பகைவரைக் களைந்துவிடவேண்டும். குயிலென்னும் பறவைக் குஞ்சு, தனக்குவிரோதமுள்ள காக்கைக்கூண்டிலிருந்து தன்சாதியை வெளிப்படுத்தாமல் ஆகாரத்திற்குரியவைகளை அக்காக்கையாற் பெற்றுக்கொண்டு, பறக்குஞ்சாமர்த்தியம் வந்தபோது அப்பாற்போய் விடுவதுபோல அரசனுங் காலபேதத்தால் சத்துரு கூட்டத்திலிருந்தானாயினுந் தனது சுபாவத்தை வெளிப்படுத்தாமல் அவர்களால் பரிபாலனத்தையடைந்து வேண்டிய அநுகூலங்களை முடித்துக்கொண்டு தனது நிலைமைக்குத் தவறுவாராத இருப்பிடத்திற்கு வந்துவிடவேண்டும். வண்டானது, கடினமலர்களையும் உபாயமாகத் துளைத்துப் பின்னப்படுத்துவதுமன்றி, மிருதுத்தன்மையுள்ள புஷ்பங்கள் நலங்காது தேனைக் கிரகிப்பதுபோல அரசனும் மந்திரிமுதலாயினோரிடத்தில் ஒருமைப்பாடாகவிருக்கும் பகையரசனையுந், தகுந்த உபாயசாதனங்களால், பேதப்படுத்தி காலமறிந்து வெற்றிகொள்ளுந் திறமையோடு, பரிசனங்களுக்குங் குடிகள் முதலானோருக்குந் துன்பநேரிடாது, அவர்களாலடையவேண்டிய சுகங்களை அநுபவித்துவரவேண்டும். கொக்கானது ஜீவகருணையோடு அசைவற்றுத தவஞ்செய்வதுபோலக் காட்டிப் புல்லாகிய சிறுமீன்களைவிட்டு உத்தேசமான ஒருபெரியமீனை அதிவிரைவில் கிரகிப்பதையொத்து, அரசனும், பலதேசங்களையுந் தன்வசப்படுத்திக் கொள்ளுதல் அரசநீதியாயிருந்தாலும் அன்னியர்பொருளில் விருப்பமில்லாதவனைப்போல உதாசீனபாவத்தைக் காட்டிக்கொண்டிருந்து பகைவன் சகாயமற்றிருக்கின்ற சமயம்பார்த்து தேசத்தையும் அவனையுந் தன்வசஞ்செய்யவேண்டும். அல்லாமலும் நாகசர்ப்பமானது எல்லோருக்கும் அச்சத்தை விளைவிப்பதுமன்றித் தானீன்றமுட்டைகளைத் தானே உண்ணுதல்போல அரசனும் யாவரும் நெருங்கக்கூடாத பயங்கரசொரூபனாகவிருந்து தான் சம்பாதித்த திரவியங்களை ஆவசியம் செலவுசெய்யவேண்டிய விஷயங்களில் செலவுசெய்து பின்பு வேறொருவழியில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

மயிலானது மழையில் நனைந்துபோகுங் கலாபங்களைச் சுமக்கமாட்டாது வருந்துதற்கு மேகங்காரணமானாலும் அம்மேகாடம்பரத்தைக்கண்டபோது களித்தாடுந்தன்மைபோல அரசனும் பின்னால்விளையுந் துன்பங்களை எண்ணியிருந்தாலும் களிப்படையத்தக்க விஷ

யங்கள் வந்தபோது தைரியத்துடன் மகிழ்ச்சியாய் முயலவேண்டும். அன்னமானது பாலையுந் தண்ணீரையும் பிரித்து பாலையுண்ணும் விசித்திரசக்தியைப்போல அரசனும் நல்லோர்போன்ற தீயோரையுந் தீயோர்போன்ற நல்லோரையும பலவாகிய செய்கைகளாலறிந்து கொள்ளத்தக்க வல்லமையைப் பெற்றிருக்கவேண்டும். சோதியானது விடியற்காலமுதலிய காலங்களைத் தொனியாற் காட்டுவதுபோல் அரசனும், ஒவ்வொரு தொழிலை முடிக்குங்காலத்தையறிந்து சிந்தித்தும் மந்திரிமுதலாயினோருக்குச் சிந்திப்பித்தும் வரவேண்டும். பாலியர்கள், தமது குடும்பத்திலுள்ள சுகதுக்கங்களுக்குச் சம்பந்தமில்லாமலே சதாகாலமும் விளையாட்டிலே எண்ணமுடையோரா யிருப்பதுபோல அரசனும் தனது அபிவிர்த்திக்குக் காரணமாகிய இராச்சிய தந்திரவியவகாரங்களில் சோம்பலின்றி நிரந்தரம் உற்சாகத்துடன் முயற்சி செய்துகொண்டே யிருத்தல் வேண்டும். புழுவானது பச்சிலைமுதலியவைகளை எளிதாக அரித்து விடுவதுபோல அரசனும் பகைமன்னருடைய பலங்களுஞ்செல்வங்களும நாளுக்குநாள் குறைந்துபோகும்படி செய்துவரவேண்டும். சிலகாலத்தில் அனேக எறும்புகள் ஒருமிக்கக்கூடி தேங்காய் முதலியவைகளை ரூபமின்றி யரித்து விடுவதுபோலவும் பஞ்சுப்பொதியை நெருப்புப்பொறி தகித்து விடுவதுபோலவும் மாறுபடாத எண்ணமுள்ள சேனைகளை அதிகமாகச் சேர்த்துப் பகைவரை அடியோடே நாசஞ்செய்யவேண்டும். அரசனானவன், சந்தர்ப்பங்களை அநுசரித்து சூரியனைப்போல வெப்பமும் சந்திரனைப்போல குளிர்ச்சியும் உடையனாதல்வேண்டும். வியபிசாரிணியானவள், மோககரமான ஆசையைக்காட்டி பரபுருஷனைத் தன்னிடத்து வருவித்தல்போலுந், தாசியானவள சங்கீதசாகித்திய நடனமுதலியவைகளால் ஜாரபுருஷனைமயக்கி கபடபோகத்தினால் அவனையும் அவன் பொருளையுந் தன்வசப்படுத்தல்போலுந், தாமரைப்பூவானது தன்னிடத்திலுள்ள பரிமளத்தை வெளிப்படுத்தி, வண்டுகளை வரவழைத்துக்கொள்ளுதல்போலுங், கருப்பமுடையவள் பிரசவித்த பின்னர் பாலின் ஆசையைக்காட்டி குழந்தையைச் சதாகாலமுந் தன்னைவிட்டுப் பிரியாமலிருக்கச் செய்தல்போலும் அரசனானவன் எப்பொழுதுந் தன்தேசசனங்களுக்கு ஒவ்வொருவிஷயத்திலும் பிரயோசனகரமான பலவித ஆசையைக்காட்டி அவர்கள் அன்பும் விசுவாசமுங்கொண்டு வேண்டும்போது தனக்கு உதவியுஞ்செய்துவிட்டு நீங்காதிருக்குமாறு பாதுகாத்து வரவேண்டும். அன்றியும், எதிர்கா

த்திலே பிறக்கப்போகிற குழந்தை பாலுண்ணும் பொருட்டுக் கர்ப்பிணியானவள் தன்னை ஆகாராதிகளால் ரக்ஷித்துத் தனங்களில் பாலை நிறைத்துக்கொண்டு சமயம் வாய்த்தபோது பால்கொடுத்து அக்குழந்தையைப் போஷிப்பதுபோல அரசனும் பௌஷ்யகாலத்தில் நடத்தவேண்டிய அவசியமான பெருத்தகாரியங்கள் நிமித்தமாக முன்னடியே பெரும்பொருளைச் சேகரித்து அவ்வலுவல் நிறைவேறுங் காலத்தில் தக்கவாறு செலவழித்துக் காரியபூர்த்தி செய்யவேண்டும்.

பிராமணன் நினைக்கவுங் கண்ணோக்கவுங் கிட்டநெருங்கவுங் கூடாத மகாதூஷிதையான சண்டாளஸ்திரியுடன் தேகசம்பந்தப்படுவதினால் மகாபாதகமென்றுந் தாருணமான பிராயச்சித்தத்திற்கு அருகனென்றும் ஏற்பட்டிருப்பதுபோல ஒருவரும் நினைக்கவுங்கண்ணோக்கவுங் கிட்டநெருங்கவுங் கூடாததான இராஜதிரவியத்தை அபகரிப்பது மகாபாதகமென்றும் மகாதூஷியமென்றும் பிராணாந்தியமான தண்டனை கிடைக்குமென்றும் ஜனங்களுக்குத் தோன்றுமாறுசெய்து பொருளைப் பத்திரமாய்க் காப்பாற்றி வரவேண்டும்.

தேவேந்திரன் மேகங்களால் கார்காலத்தில் மழைபெய்வித்துச் சகலபதார்த்தங்களையும் விருத்தியாக்கி எல்லாச்சீவர்களுக்குந் திருப்திசெய்விப்பதுபோல அரசனும் பூமி, பொருள் முதலாகிய பல பிரயோசனங்களால் சனங்கள் சுகித்து வாழும்படிசெய்துவரவேண்டும். சூரியன் எவ்வாறு தனதுகிரணங்களால் பூதமான சலகணங்களை எட்டுமாதகாலஞ் சிறிது சிறிதாகக் கிரகித்து வருதல்போல அரசனுங், குடிகளை ஏககாலத்திலே துயரத்துக்குட்படுத்தாமல் தனக்கு வரவேண்டிய பொருளைக் காலநியந்தனையின்மீது பெற்றுக்கொள்ளக் கடவன். இயமன், உயிர்களிடத்து ராகத்துவேஷங்களில்லாமல் சமமாகத் தண்டனை புரிவதுபோல அரசனுந், தாக்ஷணியமுதலியவைகளால் பக்ஷபாதத்தைப்பாராட்டாமல் சர்வஜனங்களையுஞ் சமமான நீதியில் நடத்திவரவேண்டும். பூர்ணசந்திரனைப்பார்த்து எல்லோரும் ஆநந்தத்தை யடைவதுபோல அரசனுஞ் சகலவிதத்திலும் இன்பத்தை யனுபவிக்கும் பிரஜைகளால் அவ்வாறு பாவனைப்படுமாறு நடந்துவரவேண்டும். வாயுவானது, எல்லாப் பிராணிகளிடத்திலுங் கண்ணுக்குப் புலப்படாமல் சஞ்சரிப்பதுபோல அரசனுஞ், சுதேசம் அன்னியதேசங்களைப்பற்றிய சகலசமாசாரங்களையுந்தருந்த

வேவுகாரரால் எப்பொழுதும் இரகசியமா யறிந்துவரக்கடவன். தனது சவுக்கியத்தையும் பொருள்வரலையுமே முக்கியமாகக்கொள்ளாமல் பரோபகார சாதனார்த்தமாய் முயற்சிக்கும் அரசனுந் தருமவொழுக்கத்தைச் சரியாக நடத்தாமற்றவறினவர்களையும், பாவவழியிற் செல்லுகின்றவர்களையுந், தவறாமலுஞ் செல்லாமலும் நிலை நிறுத்தும் அரசனும் இந்திரலோகத்தையடைவன். எந்த தேசத்தில் ஜாதிதருமமும், ஆச்சிரமதருமமும் அழியாமலொழுங்காய் நடக்கின்றனவோ, அத்தேய மன்னனுக்கு இகபரவின்பங்கள் நீடித்து விளங்கும். சகல விதத்திலும் அரசர்களுக்கு எல்லோரையுஞ் சவரக்ஷித்துவரும் பாரத்தைத் தாங்குவதைவிட வேறொரு தருமம் அதிகமில்லாமையால் அதை ஊக்கத்துடன் முயற்சித்து நடத்திவரும் அரசன் பலராலுஞ் செய்யுந் தருமமெல்லாவற்றிலும் பாகத்தைப் பெற்று புண்ணிய சீலனாகிவாழ்வான்.

இருபத்து நாலாவது அத்தியாயம் முற்றிற்று.

மார்க்கண்டேய புராணம்

முதற்பாகம் முற்றிற்று.

கணபதி துணை.

இந்நூலாசிரியர் வரலாறு.

——(*)——

"வேழமுடைத்து மலைநாடு மேதக்க
சோழவளநாடு சோறுடைத்துப்—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர்வயற் றொண்ட
நன்னாடு சான்றோ ருடைத்து."

என நமது ஔவைப் பிராட்டியாரால் புகழப் பெற்றதும் உத்தரசோழ மென்பதுமாய தொண்டமண்டலத்தில் கொடுங்கோல் செலுத்தின குறும்பரசர்களைக் களைந்தாண்ட ஆதொண்டமான் சக்கரவர்த்திக்குத் துளுவதேசத்தினின்றும் படைத்துணையாய் வந்த நற்குடி நாற்பத் தெண்ணாயிரவராகிய வேளாண்வைசிய * ருள் ஆறு நான்கு கோட்டத்துப் பகுப்பில் மூன்றாவதாம் ஈக்காட்டுக் கோட்டத்தையும் எழுபத்தொன்பது நாட்டில் காக்களூர் நாட்டடையுஞ் சார்ந்த தொழூவூர்-கிராமத்தில் பூவிருந்தவல்லி மரபு, "சதாசிவ மகாரிஷிகோத்திரம்" "போதாயன சிவசூத்திர" முடையராய் ஷை கிராமத்தில் வாத்தியார் வீடென்று சிறப்பிக்கப்பட்ட குடும்பத்தி லுற்பவித்து வியாபார நிமித்தம் சென்னைவந்து நாகப்பமுதலியா ரென்பவர் நிலைத்திருந்தனர். இவருக்கு குமாரசாமி முதலியார், வேலாயுத முதலியார், சபாபதிமுதலியாரென மூவர் புத்திரர்க ளிருந்தனர். அவருள் மூன்றாவது புத்திரராகிய சபாபதி முதலியாருக்கும் அவர் தர்மபத்தினி தனக்கோட்டி யம்மாள் என்பவருக்கும் "செங்கல்வராயமுதலியா" ரென்பவர் ஏகபுத்திரரா யவதரித்தனர். ஷை செங்கல்வராயமுதலியார் பலநற்குணங்களமைந்த ஏலவார்குழலியம்மையென்பாரை தர்மபத்தினியாராக மணந்து இல்லறதருமத்தை யாதொரு குறைபாடுமில்லாது வாணிபமேற்கொண்டு நடத்திவந்தனர். இச்செங்கல்வராய முதலியாருக்கு, ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி, தட்டாரப் பரதேசி, சட்டிப்பரதேசி முதலிய பெரியர் நேசம் நேரிட்டுச் சிறப்பவாழ்ந்திருந்தனர். இவருக்கு இந்நூலாசிரியராகிய தொழூவூர்-வேலாயுதமுதலியார், சாலிவாகன சகம் ௧௭௫௩-க்கு மேற்செல்லாநின்ற

* வேளாளர் துவசராகிய வைசியரென்பதை வேளாண் மரபியலுட்காண்க.

நந்தன ஹூ ஆவணிமீ 3-உ அஸ்வனி நட்சத்திரங்கூடிய குருவார ததனறு, இரண்டாவது புத்திரராக, அம்மரபிற்கும், சுற்றத்திற்கும் குடும்பத்திற்கும் பெருங்கீர்த்தி விளைக்கச் சிறுகடல் என்னும் கிராமத்தில் உதித்தனர். இவரது பெரியபாட்டனாரும் இவரது தந்தையை தன் சொந்த புத்திரராகப் பாவித்துச் சீராட்டி வந்தவருமாகிய வேலாயுதமுதலியார் சிவபதம் பெற்றதினத்திரவு திருவவதாரஞ்செய்தகாரணங்கருதி இவருக்கவர் பெயரிடப்பட்டது. இவருக்குப் பின் சபாபதிமுதலியாரெனச் சகோதர ரொருவரும், அம்மணியம்மாளெனச் சகோதரி யொருவருமுண்டாயினர். இவ்விருவரும் இவர்க்கு நேர்முரணான குண நலனுடையவர்களென்பது இக்குடும்பத்தின் நெருங்கிய உறவினர்க்கும், சிநேகர்க்கும் வெள்ளிடை மலைபோலத் தெரிந்த விடயமே.

இவர் ஐந்துவயதில் முறையே வித்தியாரம்பஞ் செய்யப்பெற்று தம்மனையிலேயே தகப்பனாருக்குகந்தநேசரான வோர் சாஸ்திரியாரிடம், தெலுங்கும், வடமொழியுங் கற்றுவந்தனர். பின்னர் தமிழுபாத்தியாய ரொருவரிடம் தமிழ்கற்றனர். இளமையிற்றானே, "விளையும் பயிர்முளையில்" என்றபடி, அன்பு, அடக்கம், பொறை, வாய்மை, தூய்மை, பத்தி, ஆசாரம், இரக்கம், நல்லோர் கேண்மை, பெரியாரைத் துணைக்கொள்ளல், சிற்றினஞ் சேராமை, பேதைமை யகற்றல், சுருங்கச்சொல்லல், விளங்கச்சொல்லல், மடியின்மை, மானமுடைமை, ஆறுவது சினம், அறஞ்செய விரும்பல், குறிப்பறிந்தொழுகல், முதலிய நற்குணங்களையே யோம்பி, வெறுப்பு, இறுமாப்பு, பொச்சாப்பு, ஓரஞ்சொல்லல், சோம்பல், அழுச்சினம், பிணக்கு, கடுஞ்சொல், கடுஞ்சினம், வெகுளல், மிகைபடச்சொல்லல், வெற்றெனச்சொல்லல், மற்றொன்று விரித்தல், மயக்கச்சொல்லல், தடுமாறாம் முதலிய தீக்குணங்களைக் கடிந்தேவந்தனர். இவ்வாறால் இவர் தந்தையானவர், "அமிழ்தினு மாற்றவினிதே தம்மக்கள, சிறுகை யளாவியகூழ்" எனவும், "மக்கண் மெய்தீண்ட லுடற்கின்பமற்றவர், சொற்கேட்ட லின்பஞ்செவிக்கு" எனவும் "தம்மிற்றம்மக்க ளறிவுடைமை மாநிலத்து, மன்னுயிர்க் கெல்லாமினிது" எனவும் தேவர் கூற்றின்படிக்களித்து "தந்தை மகற்காற்று நன்றியவையத்து முந்தியிருப்பச் செயல்" என்றபொய்யா மொழியின்படி நடத்திவந்தனர். இவரும் தமது தந்தைகளிக்க "மகன்றந்தைக்காற்று முதவி யிவன்றந்தை, யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்" என்னும் முப்பா

னூலை மெய்ப்படுத்தி வந்தனர். இவர் தமது 21-ம் வயதில் தந்தை யால் முடிசூட்டப்பட்டு அவருடன் அவர் நடத்திவந்த (இராணுவ) கம்மிஸேரியட் கண்டிராக்ட் முதலிய வேலைகளை, அவருடைய குமாஸ்தாக்களாகிய, ஸ்ரீ வரதாச்சாரியர், துரைசாமிராஜு முதலியவர்களுடன் பார்த்துவந்தனர். அக்காலையில் இவர் "ஒழுக்கம் விழுப்பந் தரலாலொழுக்க, முயிரினு மோம்பப்படும்" எனத்தேவர் கூறியபடி ஒழுக்கத்தையும், "யாகாவாராயினு நாகாக்ககாவாக்காற், சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு" எனச்செந்நாப்போதார் விதித்தவண்ணம் நாவடக்கத்தைப் போற்றியே வந்தனர். இவரும் இவர்தந்தையாருமாக, பிரங்கிமருந்து செய்வதற்காக அக்காலத்தில் கம்மிஸேரி ஜெனரலாகவிருந்த, ஜெனரல்டல்லோ வென்பவரால், காட்டுக்கரி கண்டிராக்ட் கொடுக்கப்பெற்று அதைச்சேகரிக்க, வடக்கே திருவேங்கடமென்னும் திருப்பதிக்கருகிலிருக்கும் பூடிக்கிராமத்திற்குச் சென்றனர். அவ்விடம் ஒருபக்ஷகாலம் தாமதிக்கும்போது இவர்தந்தை இராஜபிளவையால் சிவபதமடைந்தார். அவர்க்கு ஈமக்கடன்களை நிறைவேற்றி சென்னைவந்து சேர்ந்தார். அப்போது இவர் தந்தையின் பெரியதகப்பனார் குமாரசாமி முதலியாருக்கு மூன்றும் மனைவியாகிய மீனாட்சியம்மை என்பவரும், சிலபங்காளிகளுஞ் சேர்ந்து கண்டிராக்ட் கணக்குகளைத் தீவாய்ப்பெய்து இக்குடும்பத்திற்குப் பெரியநட்டத்தைச் செய்தனர். இப்படிக்கு கணக்குகள் மோசம்போகவே வருமானம் முட்டுப்பட்டது அதன்மேல் கண்டிராக்ட் வேலைகளை நிறுத்தித் தமக்குத் தெரிந்துள்ள சில்லரைப்பாக்கிகளில் நேர்ந்தவரையில் பாக்கிதாரர்கள் தயாவிடயமாகக் கொடுப்பவைகளையும், வழுதையர் வீதியில் இவரது பெரியபாட்டனார் வேலாயுத முதலியார் பெயரால்வாங்கியுள்ள இல்லமொன்றே இவர்கையிற் கெட்ட சென்னையிலுள்ள அவிபக்தகுடும்பப்பொதுச் சொத்துக்கள் பெரியபாட்டியாராகிய மீனாட்சியம்மைவசம் சிக்கிவஞ்சத்திற் குள்ளாக, அவ்வில்லத்தில் கிடைக்கும் குடிக்கூலிவசூல்களையுஞ்சேர்த்து, அறுவர் சேர்ந்துள்ள குடும்பத்தைப் பாதுகாத்துவந்தனர். அவ்வகையாக வறுமைநோ, வறுமையிற் செம்மை என்னுமுறைமையையும் "கற்கைநன்றே கற்கைநன்றே, பிச்சைபுகினுங் கற்கைநன்றே, கல்லாவொருவன் குலநலன்பேசுதல், நெல்லினுட் பிறந்த பதராகுமே" என்பதையும், "எண்ணென்பவேனை யெழுத்தென்ப விவ்விரண்டும், கண்ணென்பவாழு முயிர்க்கு" "தொட்டனைத்தூறுமணற்

கேணி மாந்தர்க்குக், கற்றனைத் தூறு மறிவு'' "ஒருமைக்கட்டான் கற்றகல்வி யொருவற், கெழுமையுமேமாப்புடைத்து'' கேடில்விழுச் செல்வங் கல்வி யொருவற்கு மாடல்ல மற்றையவை,'' "கல்லாதான் சொற்காமுறுதல் முலையிரண்டு, மில்லாதாள் பெண்காமுற்றற்று'' நல்லார்கட் பட்டவறுமையி னின்னாதே, கல்லார்கட் பட்டதிரு "மேற்பிறந்தாராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங், கற்றாரனைத்திலர்பாடு'' என்னுந் தமிழ் மறைப்பொருள்களையுஞ் சிந்தித்து தமிழை நெகிழ விடாது தமக்கு இலௌகிக வேலைகளில் லாக்காலத்துதாமே யுழைத்தும், அப்போது ஜீவந்தராயிருந்த தொல்காப்பியம்-வரதராஜ முதலியார் முதலிய பெரியார்களை யடுத்தும் "மெய்வருத்தம் பாரார் பசி நோக்கார் கண்டுஞ்சா, ரெவ்வெவர் தீமையுமேற்கொள்ளார் செவ்வி யருமையும் பாரார்வமதிப்புங் கொள்ளார், கருமமே கண்ணாயினார்'' என்ற நீதிநெறி விளக்கத்திற்குச் சான்றாகத்தமக்கு நேர்ந்தவறுமையிலும், பொழுதிலும், "கல்வியுடைமை பொருளுடைமை யென்றிரண்டு, செல்வமுஞ் செல்வமெனப்படு-மில்லார், குறையிரந்து தம்முன்னர் நிற்ப போற்றாமுந், தலைவணங்கித் தாழப்பெறின் எனவும் "கற்றோர்க்குக் கலனிலனே கலனல்லான், மற்றோரணிகலம் வேண்டாவா-முற்ற, முழுமணிப்பூணுக்குப் பூண்வேண்டாயாரே, யழகுக் கழகு செய்வார்'' எனவும் "அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும் புறங்கடை நல்லிசையுநாட்டு-முறுங்கவலொன், றுற்றுழியுங் கை கொடுக்குங் கல்வியினூங்கில்லைச், சிற்றுயிர்க்குற்றதுணை'' எனவும் "தொடங்குங்காற் றுன்பமா யின்பம் பயக்கு, மடங்கொன் றறிவகற்றுங் கல்வி - நெடுங்காம, முற் பயக்குஞ் சின்னீர வின்பத்தின் முற்றிழாய், பிற்பயக்கும் பீழைபெரிது'' எனவும், "குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகு, மஞ்சளழகு மழகல்ல-நெஞ்சத்து, நல்லம்யாமென்னு நடுவுநிலைமையாற்'' கல்வியழகே யழகு, எனவும் "இம்மை பயக்குமா லீயக்குறைவின்றாற், றம்மை விளக்கு மாற்றாமுளராக் கேடின்றா, லெம்மையுமரச்சும் யாங்காணோங் கல்விபோல், மம்மர றுக்கு மருந்து'' எனவும் "களர்நிலத்துப்பிறந்த வுப்பினைச்சான்றோர், விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர், கடை நிலத்தோராயினுங் கற்றறிந்தோரைத், தலைநிலைத்து வைக்கப்படும்'' எனவும் வருவனவற்றா லுள்ளூறுத்தப்பட்டாராய்த் தமிழ்க்கல்வியைப் போற்றிவந்தனர்.

அக்காலத்தில் "பூவுலகிலீது சிவலோகமென்றே மெய்த்தவத்தோர், போற்றுந் திருவொற்றியூர்" என்று நமது திருவெண்காட்டடிகளுண்மையிற் கண்டு பேறுபெற்ற திருவொற்றியூரில், ஆதொண்டமான் சக்கிரவர்த்தியின் பொருட்டு வரியிலங்கெழுதி "எழுந்தறியும் பெருமானுன" தியாகராயப் பிரபுவிற்குப் பத்திசெய்யும் ஊழ்வலியாலூக்கமேற்கொண்டு, பத்திவலையிற் படுவோனை நாடோறுஞ் சென்று தரிசித்து வருவாராயினர். அப்போது இவர் தந்தையின் ஆன்மநேயர்களிலொருவரும், இவரை மகமைபாராட்டிவந்தவரும், தமிழ்க்கல்வியிற் பற்றுடையவருமாகிய, காளவாய்-குப்பண்ணமுதலியாரென்பவர் இவர் அறிவின் விளக்கத்தை யறிந்து, அவ்விளக்கம் மேலும் மேலும் விருத்தியடைய வெண்ணங்கொண்டு, சென்னையில் முருகக்கடவுள் வரப்பிரசாதமும், சிவானுபூதிச் செல்வமும், "குலனருந்தெய்வங்கொள்கைமேன்மை, கலைபயிறெளிவு கட்டுரைவன்மை நிலமலைநிறைகோன் மலர்நிகர்மாட்சியும், உலகியலறிவோடுயர்குண மினையவும், அமைபவனூலுரை யாசிரியன்னே" என்றபடிசதாசிரிய விலக்கணமும், ஒருங்கே யமையப்பெற்று. முக்தி, சித்தி, வியக்தியுபாயங்களை விளக்க வெழுந்தருளிய குருமூர்த்தமாகிய, திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பரம் இராமலிங்கசுவாமிகளிடம், சமயமறிந்தறிவிக்க அக்குருமூர்த்தியும் இந்நூலாசிரியர் வரவை எதிர்பார்த்திருந்தவாரனபடியா ரொப்பச்சேர்த்தார். ஷெ குருமூர்த்தியாரிடம், ஸ்ரீனிவாச வரதாச்சாரியார், காயாறு-ஞானசுந்தர ஐயர், இறுக்கம்-இரத்தின முதலியார் முதலிய வித்தியார்த்திகளிருந்தனர். இப்படி இவர் வரவே அவர் கற்றுவெணக்களிந்து ஆசீர்வதித்து மகமைபாராட்டி, 'புதியவனல்லன், என் பிள்ளை எனக்குக்கிடைத்தது' என்றனுக்கிரகித்தனர். ஆனல் இந்நூலாசிரியர் தமக்கு ஆசிரியராவார் எத்தகையின ரென்பதை யறியவோர் பாசுரமு மதற்கைவகை உரையையு மவதானித்துக்கொண்டு, ஓர் ரோலை நறுக்கிலப் பாசுரத்தைத்தீட்டித் தமதாசிரியரிடங் கொடுத்து, இக்கவிக்கு ஐந்துவகையாய் உரைசெய்கின்றனர். அதைத் தாங்களடியேனுக்குத் திருவுளம்பற்ற வேண்டுமென்றிரந்தனர். ஆசிரியரும் அதற்குப் புன்னகைகோட்டி ஒன்பதுவிதமா யுரைசெய்தார். அதைக்கண்டு நடுங்கி யடங்கி யாசிரியபத்தியிலும் பணிவிடையிலு மீடுபட்டனர். அப்பாசுரத்தை யடியேன் எழுதிவைத்திருந்தும் அதுகைக்கெட்டவில்லை, கிடைக்குமேல் வெளியிடப்படும். அன்றுமுதல் நாடோறும் இலௌகிக

லையொழிந்த வேளைகளில் இவர் ஆசிரியரிடஞ் செல்ல அவர் இவரிடம் "தன்மகனாசான் மகனே மன்மகன், பொருணனி கொடுப்போன் வழிபடுவோனே, யுரைகோளாளனென வெடுத்தோதிய, விருவகை யவருளொருவராகிச், செவ்விதிற் றெரிதன் மெய்யுறக்காண்டு, னுரைபல கேட்டனுறு பெருங்காதற் றெய்வத்தின் மதித்தறிவி பொன்றின்மை, யன்னங்கிளியே நன்னிற னெய்யரி யானையானே றென்றிவைபோற, னுடையராகி நடையறிந் தொழுகுநர், கற்பிக்கப் படுங் கடப்பாட்டாரே" எனனும் நன்மாணாக்க ரிலக்கணம் நிரம்பி யிருப்பதைக் கண்டு இவர்க்கு "ஈதலியல்பே யியம்புங்காலைக் காலமு மிடனும் வாலிதினோக்கிச் சிறந்துழி யிருந்து தன்றெய்வம் வாழ்த்தி, உரைக்கப்படும் பொருளுள்ளத்தமைத்து விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து கொள்வோன் கொள்வகை யறிந்தவனுளங் கொளக்கோட்டமின் மனத்தினூல கொடுத்தலென்ப" எனக் கொடுக்க, இவரும் "கோடன்மரபு கூறுங்காலைப் பொழுதொடு சென்று வழிபடன்முனியான் முன்னும் பின்னு மிரவினும் பகலினு, மகலானாகியன் போடு கெழீஇக், குணத்தொடு பழகிக் குறிப்பின்வழி நின்றுசறவுணர்ந்தோன் வாவென வந்தாங், கிருவென விருந்தேட விழென வவிழ்த்துச், சொல்லெனச் சொல்லிச் செல்லெனச்சென்று, பருகுவனன்ன வார்வத்தனாகிச், சித்திரப்பாவையினத் தகவடங்கிச், செவிவாயாக நெஞ்சுகளனாகக், கேட்டவை கேட்டவை விடாதுளத்தமைத்துப், போற்றிக்கோடலது வதன்பண்பே" என்றபடி பாடம் போற்றிக்கொண்டு "அழலினீங்கா னணுகானஞ்சி நிழலினீங்கானிறைந்த நெஞ்சமொ டெத்திறமாசா னுவக்குமத்திற, மறத்திற் றிரியாப்படர்ச்சிவழிபாடே" எனவாசிரியவழி பாட்டிலொழுகி, எவ்வரியவிடயங்களையும், மற்றையவொருசாலை மாணுக்கருடன் தமதாசிரியர்பால் பெரும்பாலும் உபந்நியாச வாயிலாகவே தெளிந்து வந்தனர். இவரொருவ ரொழிய இவருடன் கற்கும் மற்றையர் தம்மாசிரியரைப் பின்பற்றினரல்லர். இவரை ஷெ சுவாமிகள் பலவகையிலும் சோதித்து, இளைய பிள்ளையார் உபாசனை சித்திக்கச் செய்தார். இதற்குண்டான ஓலை நறுக்கொன்று அடியேன் வசமின்று முள்ளது. இவரும் அம்முருகக்கடவுளது அனுக்கிரக வன்மையால் சகலவரிய விடயங்களையும் தமதாசிரியரிடஞ்செல்லுமுன்னரே யவதானித்துக்கொண்டு ஆசிரியர் சுட்டிக்காட்ட அவைகளை மிக வெளிதாகவும் சூட்சுமமாகவு முணர்ந்து அவர் மாணக்கர் பலருள்ளும், அகத்தியருக்குத்

தொல்காப்பியரைப்போலச் சிறந்தனர். இவர் பாடங்கேட்டமுறையை விரிவஞ்சி விடுத்தனன். ஷை சுவாமிகள் இவரது இலக்கியவிலக்கணமுதலியவற்றின் றேர்ச்சியை யறிந்து இவரை வாதில் வெல்லவல்லராக்கக் கருதி, கக்ஷிப்பிரதி கக்ஷிகளை வகுத்து இவருடன்தானே நேரில், வாதம், சர்ப்பம், விதண்டம் முதலியவைகளில், வாதித்தும், மஹாவாதப் பிரசங்கவிதிப்படி, சொற்போர்க்களத்தினை வகுத்து, முரசார்ப்பு, கொடியேற்றம், தேவரைவரித்தல், பிரமாணக் கோட்டி வகுப்பு, முதலியவாகச் செய்வனசெய்து, வாதித்தானம், பிரதிவாதித்தானம், நடுநிலைத்தானம், சிறந்தசாக்ஷி வரிசை, பிரசங்கவெழுத்துமுறை, இவைகளையும் வகுத்து, வாதவிலக்கணம், இருபத்திரண்டு வகை தோல்வித்தான விலக்கணம், சமயக்கட்டுப்பாடு, தோல்வி வெற்றிக்குறிப்பு, வாதவொட்டம் முதலியவையும் வகுத்து, பிறரையிவரிடம் வாதிக்கவும், இவரைப்பிறரிடத்து வாதிக்கவுஞ்செய்து அவ்வகைய வாதத்தில் இவர் வெற்றி யடையும்படி தேர்ச்சி யடைவித்தார். இவர் இவ்வளவு தேர்ச்சியடைந்திருந்தும் "அடக்கமமரருளுய்க்கு மடங்காமை, யாரிருளுய்த்துவிடும்" எனவும், "யாகாவாராயினு நாகாக்ககாவாக்காற், சோகாப்பர்சொல்லிழுக்குப்பட்டு" எனவும், "கதங்காத்துக் கற்றடங்கலாற்றுவான் செவ்வியறம்பார்க்குமாற்றினுழைந்து" எனவும், "காக்கபொருளா வடக்கத்தை யாக்கமதனினூங் கில்லையுயிர்க்கு" எனவும் வழங்கப்படுபவைகளைத் தெளிந்து அடக்கமுடைமையைத் தமக்கின்றியமையாவணிகலனாகக் கொண்டார். ஆனல், வாய்பேசாத மூகை, சபைக்கோழையோ வெளில், அற்றன்று, "எத்துணையவாயினுங் கல்வியிடமறிந் துய்த்துணர்வில்லெனினில்லாகு - முய்த்துணர்ந்துஞ், சொல்வன்மையின்றெனினென்னுமஃதுண்டேற், பொன்மலர் நாற்றமுடைத்து" என்றபடி வாக்கழுத்தமும், "கற்றுக்கறிந்தடங்கிதீ தொரீஇ நன்றாற்றிப், பெற்றதுகொண்டு மனந்திருத்திப் பற்றுவதே, பற்றுவதே பற்றிப்பணிப்பு நின்றொன்றுணர்ந்து நிற்பாரே நீணெறிச் சென்றார்" என வுண்மையை யுணர்ந்தவராயினர்.

அஃதற்றாக, இவர் தமது குலகுருவாகிய வயவெல்லா நெல்லூர் இரத்தினகுருக்க ளென்னும் ஆதிசைவ வேதியரிடம் சமயம், விசேடம், நிருவாணம் முதலிய தீக்ஷைகளைப்பெற்று, "அப்பனை நந்தியை யாராவமுதினை, யொப்பிலிவள்ளலை யூழிமுதல்வனை, யெப்பரிசாயினு மேத்துமினேத்தினு, லப்பரிசீச னருள்பெறலாமே," "என்பேனிற்கா

நிறைச்சி யறுத்திட்டுப் பொன்போற் கனலிற் பொரியவறுப்பினு,
மென்போடுருகியகங் குழைவார்க்கன்றி, யென்போன் மணியினை
யெய்தவொண்ணாதே" "இணங்கி நின்றானெங்குமாகி நின்றானும்,
பிணங்கி நின்றான் பின் முன்னாகி நின்றானு, முணங்கி நின்றானமரா
பதிநாதன், வணங்கி நின்றார்க்கே வழித்துணையாமே" "அன்புசிவமு
மிரண்டென்பரறிவி லாரன்பேசிவ மாவதாருமறிகிலாரன்பேசிவ
மாவதாருமறிந்தபினன்பே சிவமாயமர்ந்திருந்தாரே" என்றமந்திரங்
களைச்சிந்தித்து, "பத்திவலையிற்படுவோன்காண்க" எனவும், 'இன்னி
சை வீணையிலிசைந்தோன் காண்க" எனவும், "பிறப்பறுக்கும் பிஞ்
ஞகன்" எனவும், "மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடர்' என
வும் 'ஓராதாருள்ளத் தொளிக்கு மொளியான்' எனவும், "நள்ளிருளி
னட்டம் பயின்றாடு நாதன்" எனவும், "யாதுமனநினைவு மந்த நினை
வுக்கு நினைவாகி யாதின்பாலும், பேதமற நின்றுயிருக்குயிராகி யன்
பருக்கே பேரானந்தக், கோதிலமுதூற்றரும்பிக் குணங்குறி யொன்
றறத் தன்னைக்கொடுத்துக் காட்டுந், தீதில்பராபரமான சித்தாந்தப்
பேரொளியைச் சிந்தைசெய்வாம்" என்பனவற்றைச் சிந்தித்து "கை
த்தலம் விளங்குமொரு நெல்லியங்கனி யெனக்கண்ட வேதாகமத்தின்
காட்சி புருஷார்த்தமதின் மாட்சிபெறு முத்தியது கருதினனுமான
மாதி, யுத்திபலவா நிருவிகற்பமேயில்லையா லொன்றோடிரண்டென்ன
வோவுரையுமில்லை நீயுமில்லை நானுமில்லை யென்பதுமுபாய நீயுண்டு நா
னுஞ், சித்தமுளது னில்லையெனும் வசனநீ யறிவை தெரியார்க டெ
கியவசமோ செப்பு கேவலநீதி யொப்புவமை யல்லவே சின்முத்தி
ராங்கமரபிற், சத்தமறவென்னை யாண்டகுருமௌனிகையி னூற்றமிய
னேற்குதவு பொருளே சர்வபரிபூரண வகண்டதத்துவமான சச்சிதா
னந்தசிவமே" என்றும் "யானெனல்காணேன் பூரணநிறைவில் யாதி
னுமிருந்த பேரொளிநீ, தானெனநிற்குஞ் சமத்துற வென்னைத் தன்
னவனாக்கவுந் தகுங்காண், வானெனவயங்கி யொன்றிரண்டென்னு
மார்க்கமா நெறிதந்து மாறாத், தேனெனருசித்து ளன்பரைக்கலந்த
செல்வமே சிற்பரசிவமே" எனவும் "தாயுந்தந்தையுமெனக் குறவா
வதுஞ் சாற்றி, னையுநீயு நின்னருளு நின்னடி யருமன்றோ பேயனே
ன்றிருவடியிணைத்தா மரைபிடித்தே னையனே யெனையாளுடை முக்க
ணையகனே" எனவும் "கல்லாலெறிந்துங் கைவில்லாலடித்துங் கனிம
னாச், சொல்லாற்றுதித்து நற்பச்சிலை தூவியுந் தொண்டரின, மெல்
லாம் பிழைத்தனரன்பற்ற நானினியேது செய்வேன், கொல்லாவிர

திவர் கோனின்றமுக்கட் குருமணியே" எனவும் "நாடகத்தா லுன்
டியார் போனடித்து நானடுவே, வீடகத்தே புகுந்திடுவான் மிகப்
பெரிதும் விரைகின்றேன், ஆடகச் சீர்மணிக்குன்றே யிடையறா வன்
புனக்கென், னூடகத்தே நின்றுருகத் தந்தருளெம்முடையானே"
எனவும் "ஆமாறுன் றிருவடிக்கே யகங்குழையே னன்புருகேன்,
பூமாலைபுனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர், கோமானின்
றிருக்கோயிறூகேன் மெழுகேன் கூத்தாடேன் சாமாறே விரை
கின்றேன் சதுராலேசார்வானே" எனவும், "வானாகி மண்ணாகி வளி
யாகி யொளியாகி, யூனாகியுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்,
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு, வானாகி நின்றாயை
யென்சொல்லி வாழ்த்துவனே" எனவும் "தரிக்கிலேன் காயவாழ்க்
கைச் சங்கரா போற்றி வான, விருத்தனே போற்றி யெங்கள் விடலை
யே போற்றியொப்பி, லொருத்தனே போற்றி யும்பர்தம்பிரான்
போற்றிதில்லை, நிருத்தனே போற்றி யெங்களின்மலா போற்றி
போற்றி" எனவும், "வாழ்த்த வாயுநினைக்க மடநெஞ்சும், தாழ்க்கச்
சென்னியுந் தந்ததலைவனைச், சூழ்த்தமாமலர் தூவித் துதியாதே, வீழ்
த்தவா வினையேன் நெடுங்காலமே" எனவும், "கற்றுக்கொள்வன
வாயுள நாவுள, இட்டுக்கொள்வன பூவுளநீருள, கற்றைச்செஞ்சடை
யா னுளனுமுளோம், எற்றுக்கோ நமனால் முனிவுண்பதே" எனவும்
சிந்தித்தவற்று லாராமைகொண்டு பலபடத்துதித்துப் பரமசிவத்திற்
கிடையறாப்பத்தியும், "இயல்பென்றுந் திரியாமலியமமாதி யெண்
குணமுங்காட்டி யன்பாலின்பமாகிப், பயனருளப் பொருள்கள் பரி
வாரமாகிப் பண்புறவுஞ் சௌபான பக்ஷங்காட்டி, மயலறு மந்திரஞ்
சிக்ஷை சோதிடாதி மற்றங்கநூல் வணங்கமௌனமோலி, யயர்வறச்
சென்னியில் வைத்து ராசாங்கத்தி லமர்ந்தது வைதிக சைவமழகிதந்
தோ" என்றும், "வேதநூல் சைவநூலென் றிரண்டேநூல்கள் வே
றுள்ளாக்கு நூலிவற்றின் விரிந்தநூல்க, ளாதிநூல நாதியமலன் றரு
நூலிரண்டு மாரணநூல் பொது சைவமருஞ் சிறப்புநூலா, நீதியினு
லுலகர்க்குஞ் சத்திநிபாதர்க்கு நிகழ்த்தியது நீண்மறையி னொழிபொ
ருள் வேதாந்தத்தீதில் பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம் பிற
நூறிகழ் பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்தமாகும்" என்றும் பெரு
மையாய்ந்த சைவசித்தாந்தக் கொள்கையுமுடையரானார். அக்கால
த்தில் திருவொற்றியிடங்கொண்டபடம் பக்கவாணராய "தூய்மறை
பாடும் வாயார்" ஆளுடைய நம்பிகளுக்கு "அன்பிற் பெருகிய சிறப்

பின்மிக்க அருச்சனை பாட்டேயாகும், ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ்பாடுக" என்றனுக்கிரகித்ததைச் சிந்தித்துக் கரைந்து அத்தேவர் பிரானுரைச் செந்தமிழ்ப்பாக்களாற் றுதித்துவந்தனர்.

இவர் செய்கை யிங்ஙனமாக, மைசூர் ராஜ்ஜியத்தைச்சார்ந்த பெங்களூரில் இலௌகீகார்த்தமாய்ச் சென்று நிலைத்திருந்த இவர் குடும்பத்திற்குப் பழைய சம்பந்திகளாகிய, அரிமஹாரிஷிகோத்திரம்-திருக்கலசை (தொட்டிக்கலை) கிருஷ்ணசாமி முதலியாரென்பவருக்கும் அவர் தர்மபத்தினியார் இலட்சுமம்மாளுக்கும், வெகுநாள் புத்திரசந்தானமின்றிப் பிறகு தவப்பேறாக, எனதருமைத் தாயாகிய மாதுஸ்ரீ "சிரங்கம்மாள்" அவதரித்திருந்தனர். இம்மாது நல்லாளுக்குப் பருவம்வாய்க்க, ௸ கிருஷ்ணசாமி முதலியார் கல்விச்செல்வம் பொருட்செல்வமென்னு மிரண்டுசெல்வங்களுள் கல்விச்செல்வத்தையே முக்கியமாகக்கொண்டு தகுதியானவரைத் தேடிச்சென்னைக்குவந்தனர். அக்காலத்தில் இவ்விரண்டு குடும்பங்களுக்கும் குலகுருவாகிய வயலெல்லாநெல்லூர்-இரத்தின குருக்கள்மூலமாய் இந்நூலாசிரியரைத் திருவொற்றியூர் ஸ்ரீவடிவாம்பிகை சந்நிதியில் பார்த்துமகிழ்ந்து மகட்கொடுக்க ௸ ஆசிரியரிடம் வாக்களித்துப் போயினர். ௸ குலகுருவானவர் தன்சிஷ்ய குடும்பங்கள் தழைத்துப் பெருகவேண்டுமென்னு மெண்ணத்தினராய் இவரது மூத்தோரிடம் இவ்விடயத்தைச் செப்பிச் சம்மதிக்கச் செய்தனர். ஆனால், அக்காலத்தில் இவ்வாசிரியருக்கு சிறியதகப்பனாரிருவரும் வேறுபட்ட கருத்தினராயினர். அப்படியிருந்தும் கடவுளனுக்கிரகத்தால் மணம் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், அம்மணம் பெங்களூரிலேயே நிறைவேற வேண்டியதாயிற்று. அதற்குப்பணச்செலவு அதிகமாகுமென் றிவ்வாசிரியரது பாட்டியாராய மாது ஸ்ரீ தனக்கோடியம்மாள் மனம்வாட்டமுற்றனர். இதைக் குலகுருவா லறிந்த ௸ கிருஷ்ணசாமி முதலியார்தான் கன்னிகாதானம் செய்யமுடிவு செய்திருக்கிறபடியால், வரனும் வரனுக்குண்டான நெருங்கிய உறவினரும் தம்மிடம் வரப்போகப்பட்டுப்படியாகும் செலவுகளைத் தாமனுப்புவதாகக் குலகுருவுக்குத் தெரிவித்து அதற்குண்டான தொகையைத் தமது பந்துக்களியும் சென்னைவாசியுமாகிய தொட்டிக்கலை-தர்மசிவ முதலியாருக்கனுப்பி, இவர்களைப் புறப்பட்டு வரும்படி திட்டஞ்செய்தனுப்பினர். இவர்களும் அவ்வாறே, அக்காலத்தில் ரெயில்மார்க்கமில்லா

தபடியால் மாட்டுவண்டிமூலமாய் பதினைந்துதினம் பிரயாணஞ் செய்து பெங்களூரைச் சேர்ந்தார். பிறகு சுபமுகூர்த்தத்தில் என தருமைத் தாயாகியமாது ஸ்ரீ "சிரங்கம்மாளை" மணமுடித்தார். அப்போது சென்னையில் பெத்துநாயக்கன் பேட்டை வரதையர்வீதியில் சிதிரார்ச்சித வீட்டை இங்கே சிலகாரியஸ்தர்கள்மூலம் விட்டுப் போயிருந்தார். மணமுடித்ததும் இவரது மாமனார் இவரைத்தம்மிடத்திலேயே வைத்துக்கொள்ள விருப்பங்கொண்டு ஷை பெங்களூரில் பிரதான கோர்ட்டில் துவிபாஷி வேலையொன்றைத் திட்டஞ் செய்து இவருக்கு வேண்டிய விடுதிமுதலிய சவுகரித்து மனையறம் படுத்திவைத்தார். அவ்விடத்தில் இந்நூலாசிரியர் அந்தேயபாடையாகிய கன்னடமும், இந்துஸ்தானியும், மகாராஷ்டிரமும், ஆங்கிலமும், கற்றறிந்தார். ஆனால், ஆங்கிலேய பாடையை மற்றவர்களைப்போல விருத்திசெய்யாது அக்காலத்துக் கேற்றவரையில் கற்றறிந்தார். [இவருக்கு தேவநாகர எழுத்து பரிச்சியமின்றானாலும் தெலுங்குபாடை வருமாகையால் அதனுதவியால் ஸம்ஸ்கிருதம் வாசிக்கத் தடையில்லை. அவ்வாறு வாசித்து சில குறிப்புகள் எழுதியது அடியேனிடத்திப்போது முள்ளது.] அப்போது "தயங்கிணர்க்கோதை தன்னொடுதருக்கி; வயங்கிணர்த்தாரோன் மகிழ்ந்து செல்வுழிநாள், வாரொலி கூந்தற்பேரியற் கிழத்தி, மறப்பருங்கேண்மையோடறப் பரிசாரமும், விருந்து புறந்தரு உம்பெருந்தண் வாழ்க்கையும் வேறுபடு திருவின் வீறுபெறக்காண வுரிமைச்சுற்றமோடொருதனிப்புணர்க்க" யாண்டுசிலகழிந்தன. தூமப்பணிகளொன்றித் தோய்ந்தாலென வொருவர் காமர்மனைவியெனக் கைகலந்து-நாமம், தொலையாத வின்பமெலாந் துன்னினர்மண்மே னிலையாமை கண்டவர்போனின்று, எனவாழுநாளில், மகப்பேறின்றி மனத்தாங்கலோடு, "படைப்புப் பலபடைத்துப் பலரோடுண்ணு முடைப்பெருஞ் செல்வராயினு மிடைப்படக், குறுகுறு நடந்து சிறுகைநீட்டி, யிட்டுந் தொட்டுங் கௌவியுந் துழந்து, நெய்யுடையடிசின் மெய்படவிதிர்த்து, மயக்குறுமக்களை யில்லோர், பயக்குறவிலர்தாம் வாழுநாளே" எனவும், "குழலினிதியாழினி தென்பர்தம்மக்கண், மழலைச்சொற்கேளாதவர்" எனவும், "தம்பொருளென்ப தம்மக்களவர் பொருடந்தம் வினையான் வரும்" எனவும், "எழுபிறப்புந் தீயவைதீண்டா பழிபிறங்காப்பண்புடைமக்கட்பெறின்" எனவும் வருவனவற்றைச் சிந்தித்து தம்முடையாரிடமும், உபாசனாமூர்த்தத்தினிடமும் விண்ணப்பித்துப் பலவு

கைதுதவங்களை மேற்கொண்டெழுகினர். என்னை? கடவுளருளானே கிடைப்பதல்லது பலதவத்தான் முடியுமோ? அற்றன்று, "தெய்வத் தாலாகாதெனினு முயற்சிதன் மெய்வருந்தக் கூலிதரும்" "முயற்சி யுடையாரிகழ்ச்சி யடையார்" என்பதுண்மையன்றோ. அவ்வகையில், சிலவாண்டு தவங்கிடந்து ஓராண் மகவுண்டாயிற்று. அதன் பின்னர், ஓர் பெண்மக வுண்டானதும் அவ்வாண் மாகவு மரித்தது. அப்புறம், ஆண்மகவில்லையே யெனக்குறைவேண்டி நின்றாராக, அக்காலத்தில் வயற்றிலேயே வோராண்மகவு செத்துப்பிறக்கப் பின்னும் வருத்த மேற்கொண்டுத் தம்மிட்ட தெய்வமாகிய இளைய பிள்ளையாரிடம் குறைகூறிவந்தனர். அப்பால் ஓராண்மக வுண்டாயிற்று. இவ்வாண் மகவின் பின் ஓர் மகவுமரிதது பிறந்தது. இம்மக்கள் மூத்தானுக் காம். இவர் பெங்களூரிலும், சிவமுக்கி, நந்திமுதலிய விடங்களில், அநூலாகப் பதினெட்டு வருடகாலமிருந்தார். அவரிடையிடையே சென்னை சென்று தம்மாசிரியரையும், திருவொற்றியிடங் கொண்ட படம் பக்கவாணரையும் தரிசித்து வந்தனர். இப்பதினெட்டு வரு டம் கடந்தபிறகு சென்னைதிரும்பி வேறுவகையான உத்தியோக மனுகூலப்படாதபடியால் ஓர் தையல்ஷாப்பில் ஆறுரூபாய் சம்பளத் திற் கொப்புக்கொண்டு மிகுந்த கஷ்டத்துடன் சுமூர் எழுவருடன் ஜீவித்துவந்தனர். அக்காலத்தில் தாம் வசித்திருந்த வீட்டைத் தனது தங்கையும் மைத்துனரும் ஆக்கிரமிக்க அதை உபாயமாய்த் தகுந்த ஏற்பாடு செய்து சிக்கறுத்தார். அப்போது தனதாசிரியரும், பாளை யம்-சோமசுந்தரசெட்டியார், த-வாசுதேவமுதலியார், கோ-ஐயாசாமி முதலியார், ப-விஜயரங்கமுதலியார் முதலியர் மதுரையாத்திரை செய் யும்போது தானும் அவர்கள் வேண்டுகோளின்படி உடன் சென்ற னர். அங்கிருந்து திரும்பி சென்னைவந்ததும் தமதாசிரியர் தென் னூர்க்காடு ஜில்லா, கூடலூரில் சிலகாரிய நிமித்தம் நின்றார். சென் னையிலிருந்த இந்நூலாசிரியர் தமதாசிரியர் தமது பத்திப்பேரன்பிற் றதும்பித தோத்தரித்துப் பொறித்துவைத்த செந்தமிழ்ப்பாக்களில் ஓரோர்பகுதிக ளச்சாகிப் பலரோதுவதைக்கண்ட இறுக்கம்-இரத்தி னமுதலியார், மயிலை-சிக்கட்டி-சோமசுந்தர செட்டியார், புதுவை- வேலுமுதலியார், சிலானந்தபுரம், செல்வராயமுதலியார் முதலிய திரு வருட்பிரகாசவள்ளலாரது அபிமானிகள் வேண்டுகோளின்படி அப் பாக்களையெல்லாம் திரட்டித் திருமுறைகளாகவகுத்து முதல் நான்கு திருமுறைகளுக்கு ஓர் வரலாறு எழுதி சென்ற அட்சயவருஷம் அச்

சிட்டுப்பரிபாகிகள் முற்றுமோதியுய்யும்படி அப்புத்தகத்திற்கு திருவருட்பா வென்று திருநாமமிட்டு வெளிபிட்டனர். ஸ்ரீ மூத்தபிள்ளையார் ப்ரபந்திய பதிகங்களும் இளைய பிள்ளையார் பாமாகிய பதிகங்களையும் திரட்டி அதற்கோர் வாயுறைவாழ்த்து சேர்த்து சென்றபிரமாதி வருஷம் அச்சிட்டு வெளிபிட்டனர். பிறகு முதல் நான்கு திருமுறைகளின் காபிகள் நாளடைவில் செலவாய்விட்டமையால் சென்ற சர்வஜித்துவருஷம் இரண்டாம் பதிப்பொன்று அச்சிட்டுவெளியிட்டனர். மேற்படி ஐந்து திருமுறைகளின் கதையிற்றாக இந்நூலாசிரியர் தானெழுதிய வரலாற்றில் "ஆறுவதுமுறை யாரியனூர் தம்மருளாலே வேறோர்சார்பே முற்றன் றெம்வினைவிளை பாகம், தேறுப்பாறவீர் தேர்ந்தென்றி சிறேருந்து விற்க, வீறுர்மற்றை முறை வெளிவந்தம்ம விரிசெய்வாம்" என்றபடி ஆன்மாக்களது பரிபாகனோக்கி ஆறுவது திருமுறைவெளிபிடாது காலம் தாழ்த்தனர். அற்றாயினும், சென்றதாரணவருஷம் வேலூர் பத்மநாபமுதலியார், பெங்களூர்-ராகவலுநாயகர், வேலூர்-மாசிளாமணி முதலியார், திருசிரபுரம்-லோகநாதசெட்டியார், ஸ்ரீமான் வேணுகோபால் பிள்ளை முதலியோரது முயற்சியால் காலஞ்சென்ற மகாவித்துவான்-சோடசாவதானம் திருசிரபுரம் சுப்பராயசெட்டியார் அவர்களைக்கொண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது. ஆனால் அப்பதிப்பின் பதிக அடைவு சுவாமிகளினது கருத்துக்கும், மேற்படி சுவாமிகளினது பிரதமமாணுக்கராகிய இந்நூலாசிரியரது கருத்துக்கும், அக்குரு பரம்பரைகருத்துக்கும் பலவகையிலும் பிறழ்ந்து விட்டது. அதைப்பின்பற்றியே அநேகம் பதிப்புகள் வெளிவந்தன. [திருவருள் கூட்டிவைத்தால் சரிவரபதிகஅடைவுசீர்செய்து வெளியிடப்படும்] இதுகாரணமாக அக்காலத்தில் சென்னையில் ஈழநாட்டிலிருந்து வந்து வதிந்த யாழ்ப்பாணம்-நல்லூர் ஆறுமுகநாவலரவர்கள் அபிமானிகளுக்கும் திருவருட் பிரகாச வள்ளலாரது அபிமானிகளுக்கும் பலவகையில்வாதம், "நடந்தவண்ணம் உரைத்தல், நடந்தவண்ணம் அறிவித்தல் திருவருட்பா தூஷணபரிகாரம் விஞ்ஞாபனப் பத்திரிகை பிரார்த்தனைப்பத்திரிகை முதலான மூலமாய் நடக்கமுடிவில் "போலியருட்பா மறுப்பு" என்னும் குதர்க்கம் நிறைந்த புத்தகமொன்று மேற்படி நாவலரவர்கள் எழுதிமாவேண்டூர்-தியாகேச முதலியாரவர்கள் இயற்றியதாக முகபத்திரத்தோடு வெளிபிட்டனர். அதைக் கண்டு சமரசவேத சன்மார்க்கத் சங்கத்தின் அபிமானிகள் பலரும் வருத்தமுற்று இந்நூலாசிரியரை

வந்துவேண்ட அதற்கவர் அதன்மறுப்பாக "போலியருட்பா மறுப்
பென்னும் குதர்க்காரண்ணிய நாசமஹாபரசு" என்னும் புத்தகமெ
ழுதி சமரசவேத சன்மார்க்கத்து சங்கத்தார் பெயரால். வெளியிட்டு
மேற்படி குதர்க்கங்களுக்கு சமாதானங்களையும் திருவருட்பாவின்
உண்மையினையும் யாவரு முணர்ந்துய்யும்படி செய்தனர். உடனே
மேற்படி நாவலரவர்கள் தம் சொந்தநாடெய்தினர். அதோடு அவ்
வாதம் முற்றுப் பெற்றது.

பிறகு திருவருட்பிரகாசவள்ளலார் தெற்கிலுள்ள சிவஸ்தல யா
த்திரைசெய்து கூடலூருக்கடுத்த பார்வதிபுரம், உத்தரஞான சிதம்
பரம் எனப் பெயர்வாய்ந்த வடலூரில் சில ஞானசாதனங்களின்
பொருட்டுத் தங்கியபோது இவர்சென்ற சுக்கிலவருஷம் கடையில்
குடும்பத்துடன் அவ்விடஞ் சென்று "எத்திறத்தாசானுவக்குமத்திற
மறந்திற்றிரியாப்படர்ச்சிவழிபாடே" என்றபடி, ஆசிரிய பணிவிடை
யிற் றலைநின்றனர். அப்போது இவர் தமதாசிரியர் உபாசனாமூர்த்தம்
பெரியபெருமான், மூத்தபிள்ளையார், இளையபிள்ளையார், உலகமாதா
வாகிய பார்வதியார் நால்வர்முதலியர்விடையமாக அரியபலசெந்தமிழ்
ப்பாக்களால் தோத்திரங்களியற்றிப் பொறித்துவைத்தனர். ஷெ வட
லூரிலிருக்கையில் சிலகாரியங்களைமுன்னிட்டு இவர்குடியிருக்கு மிட
த்தை தீவர்த்தித் திருடர்கள் ஓர்கூட்டமாக வோரிரவுவந்துவளைத்து
மேற்கூரையைப்பிடுங்கிக் கொளுத்தி இவரையும், அடியேனையும்,
அடியேன் தமைக்கையாரையும், இவர் தம்பியாரையும், அடியேனது
அருமைத்தாயாரையும் இன்னுஞ் இக்குடும்பத்தினைச்சார்ந்த சிலரை
யும் உலக்கைகளைக்கொண்டு புடைத்தூறு பாடுசெய்தனர். அதில்
இவர்க்குண்டான ஊறுபாடுகள் இவர்காலமாகும்வரையில் தலையில்
நின்றிருந்தன. அப்போதிவர் பிழைத்தது அடியேனுடைய பூர்வ
புண்ணியமும், தமிழுலகு செய்த பெரும்பாக்கியமுமேயாம். ஏனெ
னில், அவ்வாக்கால் தமிழில் இவர் பலநூல்க ளியற்றவும், பார்
வையிடவும், மொழி பெயர்க்கவும் முடியாமையாய் விடும். அப்பு
றம் சிலநாள் சென்றபிறகு இவர் தமதாசிரியருடன் மேட்டுக்குப்பஞ்
சென்றிருந்தனர். அப்போது இவர்க்குப் பித்தபாண்டு வியாதியும்
தேகத்தில் கர்ப்பகாரக விரணமுமுண்டாய் அதிக கஷ்டமடைந்து
தமதாசிரியர் கிருபையால் ஒருவாறு சவுக்கியப்பட்டனர். அக்காலத்
தில் திருவருட்பிரகாச வள்ளலாரது தரிசனார்த்தமாக சாதுக்களும்,
வித்துவான்களும், பண்டிதர்களும், யோகிகளும், தவத்தர்களும்,

ஜோதிடர்களுமாகப் பல்லாயிரம்பேர் வந்து குழுமியிருந்தனர். அடிக்கடி தெற்கிலுள்ள சைவமடங்களினின்றும் தம்பிரான் சாமிகளும் வருவதுண்டு. ஒருகாலத்தில் இந்நூலாசிரியர் பத்தியினால் பொறித்துவைத்திருக்கும்பாக்களை, தர்மலிங்கபிள்ளை, வெங்கடேச அய்யர், ஆடூர்குருக்களென்னும் சபாபதி சிவாசாரியர் முதலியர் மூலமாகக் கேள்வியுற்று மேற்படி சுவாமிகள் அவைகளை வரவழைத்து அவ்விடங் கூடியிருந்த சமரசவேத சன்மார்க்க சங்கத்தினராகிய ஆனந்தநாத சண்முக சரணாலய சுவாமிகள், கல்பட்டு-இராமலிங்க சுவாமிகள் முதலிய மகத்துக்கள் முன்னிலையில்தானு முடனிருந்து அவைகளின் சொற்சுவை, பொருட்சுவை முதலியவைகளை யாராய்ந்து, வியந்து, நமது முதலியாரப்பா மதுரவாக்கிது, வித்துவான் பாட்டிது, என்றிடையிடையே யருமைபாராட்டி, மலர்வாய் மலர்ந்த மணிவார்த்தையிது, என்று தமது திருக்கரங்கொண்டே வரைந்தும் உபயகவாநிதிப் பெரும்புலவர், என்னும் பட்டமளித்துப் பொறித்துவைத்துங் களித்தனர். இதற்கான வாதாரம் அடியேனிடம் தற்காலத்துள்ளது. இவர் சதபங்கியும் இயற்றினர். அது எனது சிறியதந்தையாரது பாதுகாப்புக் குறைவினால் சென்னையிலிருந்த ஆயுள்வேத பண்டிதர் சிதம்பரம்-தளவசிலை-சுப்பிரமணிய பண்டிதர்கையிற்சிக்க, பின்னரது மனோன்மணியம்மா ளென்பவர் வசமாக, அவ்விடத்தினின்றும் கைதப்பிவிட்டதாகவும், அது அந்தம்மாள் வசமிருக்குங் காலையில் நேரில்பார்த்த சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம் ம-ா-ா-ஸ்ரீ முதலியாரவர்கள் பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்கள் அடியேனுக்குத் தெரிவித்து மிகவும் மனவாட்டமுற்றனர். எல்லாம்வல்ல விறைவன் கூட்டிவைத்தனராயின் அதை வெளியிடச் சித்தமாயிருக்கின்றனன்.

மேட்டுக் குப்பத்தில் இவர் நீறுபூத்த நெருப்புப் போன்று, கற்றுணர்ந்தடங்கல், என்பதைக் கடைப்பிடித்து, மற்றவைகளைக் கவனியாராய் ஆசிரியபத்தியி லீடுபட்டு அதை முட்டற முடித்துவந்தனர். இப்படி நிகழுநாளில் சென்ற ஸ்ரீ முகவருடம் ஆனிமீ கிருஷ்ணபக்ஷ சஷ்டிதிதியும், சதய நக்ஷத்திரமுங் கூடியதினத்தில் அடியேனது அருமைத்தாயும், இவரது உயிர்த்துணையும், வாழ்க்கைத் துணை நலனுமாகிய மாதுஸ்ரீ சிரங்கம்மாள் சுமார் ஆறுமாதகாலமாகக் கிராணிக்கழிச்சல் நோய்வாய்ப்பட்டு நோயுளார் வாயுளான் ஆகிய பரமசிவத்தின் திருவடி நீழலைச் சேர்ந்தா நந்தமுற்றனர். அதேகாலத்து சுமார் ஆறுமாதகாலம் கர்ப்பகாரக விரணநோய்வாய்ப்பட்டு,

இவரது ஏகபுத்திரியும் அடியேனது அருமைத் தமைக்கையாருமாகிய சிவகாமி யம்மையாரும் அடுத்த ஆவணித்திங்கள் திரிதிதையை திதியும், அஸ்த நக்ஷத்திரமுங் கூடிய தினத்தில் சிவபதமுற்றனர். அந்த ஸ்ரீமுகவருடத்தில் இக்குடும்பத்திற்குத் துணையாயிருக்கத் தகுந்தவர்கள் அநேகர் காலமாய் விட்டனர். அடியேனும், அடியேனது திருத்தந்தையாரும், இந்நூலாசிரியராகியவிவருமே மிகுந்திருந்தனம். பின்னர்மேல் வருங்கருமம் நோக்கி சிலகாலம் நாம் தேகத்துடன் ஒருவர்க்கும் புலப்படாது மறைந்திருப்போம் என்றனுக்கிரகித்திருந்தபடி திருவருட் பிரகாசவள்ளலார் இந்நிலவுகத்தாரது ஊனக்கண்ணுக் கெட்டாது மறையவுத்தேசங்கொண்டு இந்நூலாசிரியரை நீயிவ்விடம் நிற்கவேண்டாம் உனக்குத் தெரிவிக்கவேண்டியதை ஆண்டவர் அவ்வப்போது தெரிவிப்பர், சென்னை செல்வாயாக, என்று ஆக்கியாபித்து, ஸ்ரீமுகவருடம், தைமீ பௌர்ணமி திதி, பூச நக்ஷத்திரங்கூடிய தினத்தில் தாமிருந்த ஒடுக்கவறையைத் தாழிட்டு மூடினர். இவர் தம்மாசிரியர் சொற்கடவாது தாழிட்ட திருக்கதவைப் பூட்டி முத்திரித்து திறவுகோலை மேஷ ஒடுக்கவறைக் குள்ளேயே ஊக்கிவிட்டனர்.

மேலவ்விட மிருப்ப தருமையாக முடிய இவர் அடியேனைக் கைகற்றி சிதம்பரம், வைத்தீச்சுரன்கோயில், சீகாழி, திருவதிகை வீரட்டானம், திருமுதுகுன்றம், திருவண்ணாமலை முதலிய திருப்பதிகளைத் தரிசித்து, இராயவேலூர் பிரபுக்களில், கூடலூர்-சுப்பிரமணி முதலியார், சூரசங்காரமுதலியார், முத்தையாமுதலியாரென்னு சகோதரர்களுடைய ஆதரவில் அவ்விடத்திலேயே சிலகாலம் வதிந்தார். அப்போது இவரது இளைய சகோதரராகிய தொழுவூர்-சபாபதி முதலியாரென்பவர், மேஷ மேட்ரிக்குப் பத்தினின்று மிடையிற்றங்காது சென்னை சேர்ந்தார். அப்படிச் சேர்ந்தவர் இந்நூலாசிரியர் வேலூரிலிருப்ப தறிந்து அவ்விடம் வந்து பிரயத்தன பூர்வமாகபிதிரார்ச்சித கிராமங்களி லொன்றாகிய சிறுகடல் கிராமத்திற் கழைத்து வந்தனர். அக்கிராமத்திற்றானே தம்வாழ்நாள் முழுதுங் கழிக்கவேண்டி இந்நூலாசிரியர் தமது சிறிய தகப்பனாராகிய சண்முகராய முதலியாருடன் ஏககுடும்பமாக பயிரின் மேல்விசாரணையையும், ஓர் சிறுகிராமக் கல்விச்சாலையையும் மேற்படுத்தி சிறுவர்களுக்குத் தமிழ்க்கல்வியைத் திறமாகப் போதிப்பதும் செய்துவந்தனர். இவரது இளையசகோதரராகிய சபாபதிமுதலியார் சென்னையில் ஆயுள்வேத பண்டிதத்தொழி

லேயும், பெத்துநாயக்கன் பேட்டை வரதய்யர் வீதியிலுள்ள பிதிரார்ச்சித இல்லமொன்றனையும் பார்த்துவந்தனர். அப்போது கிராமத்திலுள்ள சண்முகராய முதலியார் தமது தமையன் மக்களாகிய இந்நூலாசிரியர், இவரது தம்பியார் சபாபதிமுதலியார் ஆகிய விருவர்க்கும் மணவினையை மேற்கொண்டனர். அப்போது இந்நூலாசிரியர் தமக்கு மறுமணம் வேண்டாமென்று நிராகரித்துத்தாம் தமதிச்சை வழிச்செல்ல உத்தேசித்திருந்தனர். அக்காரணம்பற்றி தமதிளைய சகோதரருக்கு விவாகம் முடிக்க வேற்பாடுகளைச் செய்தனர். அப்படி சகோதரருக்கு விவாகம் முடித்து சென்னையிலுள்ள பிதிரார்ச்சிவில்லமொன்றினையும் அடியேனையும் அவரிடமொப்பித்து இல்லறதருமத்தை வழுவாது நடத்திவரவேண்டு மென்பதிவர்கருத்து. ஆனல், இவரதிளைய சகோதரர் இந்நன்றியை யுட்கொள்ளாராகித் தமக்கு விவாகம் முடிந்ததும், "ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று சூழினுந்தான் முந்துறும்" என்ற தமிழ்மறையின்படி வினைவயத்தராய்த் தம்மனையாளும், மாமிமாரும் மற்றைய்வச்சார்பானவர்களது வஞ்சச் சூழ்ச்சிகளிற் சிக்குண்டு, ஷை பிதாரார்ச்சி இல்லத்தையும், மற்றைய பொருள்களையும், என தன்னைக்குக் கொடுத்துள்ள ஸ்ரீதன சொத்துக்களையுங் கைப்பற்றி, அவைகளைக் கெடுத்தும், மாற்றியும், விற்றும் இன்னும் பலவகையான கெடுதிகளையும் புரிந்து, அடியேனையும் இந்நூலாசிரியரையும் அநாதரணைசெய்து, தானுஞ் சரிவர வனுபவிக்காது தமையனர் குடும்பமு மனுபவிக்க வொட்டாது சந்ததி விருத்தியின்றி வறுமையால் பிடிக்கப்பட்டு, அவ்வில்லத்தினை மோசடியாயடகும் விற்றலுஞ்செய்து தான் வேறிடம் குடிபுகுந்து சென்ற 1905-ம் வரு ஜூலை 1-உ சிவபதம் பெற்றார். "தமக்கின்னாசெய்தாரையொறுத்தலவர்நாண, நன்னயஞ்செய்துவிடல்" என்றபடி அடியேனும் அடியேனது திருத்தம்பியாருஞ் சேர்ந்தவரது இறுதிக்கடன்களை ஒருவாறு நிறைவேற்றினம்.

இவ்வாறு தமதிளைய சகோதரரால் வஞ்சித்துத் துன்புறுத்தப்பட்ட இவ்வாசிரியர் தண்டலம்-ஆறுமுக முதலியாரவர்கள் தொட்டிக்கலை-சின்னதம்பி முதலியாரவர்கள் கோளப்பஞ்சேரி-பாலகிருஷ்ண முதலியாரவர்கள் சேமங்கலம்-இராஜாராம்பிள்ளை யவர்கள் முதலியோரது முயற்சியால் ஒருவகையாக விலகி இவர்களாதரவாலும் * கூட

* இப்பிரபு தற்காலம் உபகாரச் சம்பளம் பெற்று முத்தியாலுப்பேட்டை, இராமசாமித் தெருவில் சிவத்தியானத்திற் காலங்கழித்து சுகஜீவியாக வசித்து வருகின்றனர். இவர்மிக்க புண்ணியசீலரென்றே சொல்லப் பெவர்.

ஊர்-கனகசபை பிள்ளையவர்கள் ஆதரவாலும் சென்னையை யடுத்த அருணாசலேச்சுரன் பேட்டையில் முத்துகிருஷ்ண பிரமமடத்தில் சிலகாலம் தாமே சமைத்து அடியேனுக்கு மிட்டுத்தானுஞ் சாப்பிட்டுக்கொண்டு காந்துறைந்தனர். ஒருநாள் இவ்வாசிரியர் அம்மடத்தில் இவ்விதமாக வருத்தத்துடன் வசிப்பதை இவரது சகபாடியர்கிய வரும் திருவருட்பிரகாசவள்ளலார் தாம் தென்னாட்டிற் கேகும்போது தமக்குப்பதிலாக பாளையம்-சோமசுந்தர செட்டியார் வீட்டிற் புராண சிரவணஞ்செய்தலுக்கு நியமிக்கப்பட்டவருமான காயாறு ஞானசுந்தர ஐயர் கேள்விப்பட்டு ௸ பாளையம் சோமசுந்தர செட்டியாரவர்களுக்குத் தெரிவிக்க அவரது தூண்டலால் இவ்வாசிரியரிடம் வந்து இவரை ௸ செட்டியாரவர்களிடம் அழைத்துப் போயினர். ௸ செட்டியாரவர்கள் பழைமைபாராட்டி ஆதரித்தனர். அதுமுதல் இவரை அச்செட்டியாரவர்கள் தாம் சிரவணஞ் செய்துவந்த பெரியபுராணப் பிரசங்கத்தினை இவரைக்கொண்டு நடத்திவந்தனர். இவ்விடயத்தை அம்மடத்திற்கு அடுத்த பங்களாவிலிருந்த நாகை-கண்ணு-இராமலிங்கபிள்ளை யவர்களறிந்துபிரதிதினமும் காலைவேளைகளில் இவரிடம்வந்து அளவளாவிப்போவார். இவ்வாறாக இவர் சென்னையிலிருப்பது வெளிப்படவே இவர் நண்பர்களெல்லோரும் வந்துகலக்க வாரம்பித்தனர். அக்காலத்தில் இலங்கைநேசன் என்னும் பத்திரிகையின் ஆசிரியராகிய யாழ்ப்பாணம்-சின்னத்தம்பி பிள்ளையென்பவர் இவரிருப்பிடம் விசாரித்து பரிச்சயம் செய்துகொண்டு, மறுபடியும் யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலரவர்கள் சிலவிடயங்களில் மாறுபட நடக்கின்றாரென்றும், அவரைக்கண்டிக்கத் தகுந்தவர்கள் அவ்விடத் தில்லையென்றும், அக்காரியத்தை இவரே செய்துமுடிக்கவேண்டு மென்றும், அதற்காகவே இவரைத்தாம் நாடி வந்திருப்பதாகவும் பலநாளாக வற்புறுத்திவந்தனர். ஆனால், இவ்விடயங்களை எவ்வகையாகவோ, அக்காலத்தில் அகவுண்டான்ட் ஜெனரலாபீஸால், சீப் சூப்பரின்டென்டென்ட் அலுவல் பார்த்துவந்த யாழ்ப்பாணம் சி-வை-தாமோதரம்பிள்ளை யவர்கள், பி-ஏ. பி-எல். கேள்வியுற்று ௸ கூடலூர் கனகசபைபிள்ளையவர்கள் உதவியால், நேரில் மடத்திற்குவந்து இவருடன் கலந்து அக்காரியத்தி லிவ்வாசிரியர் பிரவேசிக்காது தடுத்துவிட்டனர். அப்படியிருக்கையில், பாளையம் சோமசுந்தர செட்டியாரவர்கள் அடியேன்மீது இரக்கமுற்று, அடியேனையும் இவரையும் சென்னைமுத்தியாலுப்பேட்டை, பவழக்காரர்

தெருவில், ௸ கண்ணு-இராமலிங்க பிள்ளையவர்கள் இளையசகோதராகிய நாகை-வீராசாமி பிள்ளையவர்கள் கிருகத்தில் மேல்பாகத்தைக் குடிக்கூலிக்குத் தீர்மானித்து, நிலைக்கச்செய்து அதன்மேல் தாம் அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்த முத்தியாலுப்பேட்டை, ஆங்கிலோ வெர்னாக்குலர் ஐஸ்கூலில், சம்பளமில்லாமல் ஆங்கிலேய பாஷையைக் கற்கும்படி யாக்கியாபித்து, அடியேனுக்கு வேண்டும், துணிமணிகளையும், புத்தகங்கள் முதலிய கல்விக்குரிய கருவிகளையுஞ் சவதரித்து, அடியேன் விருத்திக்குவரும் மார்க்கங்களை யெல்லாம், தன்னருமை மக்களைப்போல் பாவித்து நடத்தினர். இந்நன்றிக்கு அடியேனும், அடியேன் குடும்பமும், அவரையும், அவர் குடும்பத்தினையும் எந்நாளும் வாயாரவாழ்த்தி, அக்குடும்பம் விருத்தியடையும்படி ஆண்டவன் கிருபை புரியவேண்டுமென்று, திரிகரண சுத்தியாகப் பிரார்த்திப் பதேகடனும். ௸ கல்விச்சாலையில் அடியேன், ஆங்கிலமும், தெலுங்கும், வடமொழியும் கற்றுவந்தனன். அவ்வமயத்து இவரது ஆப்த நண்பர்களி லொருவரும், இவரிடம் குருவிசுவாச முள்ளவருமாகிய, தென்னேரி - அமிர்தலிங்க சோதிடரில்லத்தின் கண்போக்கு வரத்தாயிருக்குங்காலையில், பெங்களூரிலிருந்து வந்து, சென்னை, பிரஸிடென்ஸி காலேஜில் கன்னடபண்டிதராயிருந்த பெங்களூர்-சித்தாந்தி-பிரமஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரியார் நேசமாயினர். இவ்விருவர்களது நேசம் வலுவாக, இவரும் சேர்ந்து, இக்கலியுகத்திற் கடுத்த தர்மசாஸ்திரமாகிய ஸ்ரீபராசரஸ்மிருதியை, ஸ்ரீமாதவாசாரியருரையுடன் வடமொழியி னின்றும் தமிழில்மொழி பெயர்த்து சஞ்சிகைரூபமாக வெளியிட்டு வந்தனர். ௸ நூல் ஆசாரகாண்டத்தில், இரண்டத்தியாயம் முடிந்தது. ஆசாரகாண்டத்தில், முதல் அத்தியாயம் மாத்திரம், முதல்வால்யமாக விற்கப்படுகின்றது. மிகுதிப்பாகம் முடிப்பாரின்றி முட்டுபட்டிருக்கின்றது. குருவருள் கூட்டிவைத்தால் முடித்து வெளியிடப்படும்.

அது அப்படியிருக்க, திருவல்லிக்கேணியில், விஜயநகரம் மகாராஜாவினு லேற்படுத்தப்பட்டிருந்த, இந்துபாலிகா பாடசாலையில் பிரதம உபாத்தியாயரா யிருந்தவரும், இவரது உறவின்முறையாருளொருவருமாகிய ம-ா-ா-ஸ்ரீ தங்கம்பாக்கம்-சந்திரசேகரமுதலியார் இவரிடம் தமக்கொழிவான காலங்களை யெல்லாம் கழித்துவந்தனர். ஒருதினம் அம்முதலியாரவர்கள், சென்னை பிரஸிடென்ஸிகாலேஜில்

மாதமெடிக் புரொபொஸராக (கணிதநூற் புலவர்) இருந்து காலஞ்சென்ற இராயபஹதூர் பூண்டி-அரங்கநாத முதலியாரவர்கள் எம்-ஏ என்பவரிடம் கலந்திருக்குங் காலத்தில் சில சந்தர்ப்பத்தினால் இவ்வாசிரியரது அருமை பெருமைகளைப் பாராட்டி இருவரையும் நண்பராக்கினர். அதனால், "தக்கவனொருவன் வாழத் தன் கிளையெல்லாம் வாழ" வென்பதுண்மையாயிற்று. [இம்முதலியா ரொருவர்தான் இவ்வாசிரியர் சிவபதம் பெற்றதும், இவரது ஜேஷ்டகுமாரனாகிய அடியேனுக்குத்தாம் மேற்பார்த்துவந்த தமிழ் டிரான்ஸிலேட்டர் ஆபீஸில் உத்தியோகஞ் செய்வித்து அதன்மூலமாய்க் குடும்பத்தைத் தன் நண்பனைப்போற் பாலித்து, உலகங்களைக்காக்கும் கடவுளாகிய அரங்கநாதன் தானென்பதை மெய்ப்பித்தனர். அந்நன்றி யென்றும் அடியேனால் மறக்கற்பாலதன்று. அம்மகான்பின்னுஞ் சில காலமிருந்து அடியேனுக்குக் கொழுகொம்பாகும் பாக்கியம் அடியேன் புண்ணியக்குறைவினாற் பெறவில்லை.]

இது இப்படியிருக்க, சென்ற 1879-ம் ௵ ஆகஸ்டுமாதத்தில் சென்னை பிரஸிடென்ஸி காலேஜில் தமிழ்ப் தலைமைப்பண்டிதராயிருந்த ஈச்சம்பாடி - ஸ்ரீனிவாசராகவாச்சாரிய சுவாமிகள் உபகாரச் சம்பளம் பெற்று விலகியகாலத்தில், ஷை சோமசுந்தரம் செட்டியார் ரெவினியு போர்டாபீஸில் முதல் அஸிஸ்டெண்ட் வேலைபார்த்துவந்த, சிவசங்கரமுதலியார், ஷை அரங்கநாதமுதலியார், ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரியார், கும்பகோணம்-ஆராவமுது ஐயங்கார், பி-ஏ. பி-எல். இராங்கோன்-கிருஷ்ணசாமி முதலியார், ஆகிய இவர்கள் தூண்டலாலும், முயற்சியாலும், இவர் இரண்டாவது பண்டிதராக நியமிக்கப்பட்டார். அந்த அலுவலுக்கு, சென்னைகிறிஸ்டியன் காலேஜில் தமிழ்ப்பண்டிதராயிருந்த, திரு-சின்னசாமி பிள்ளையவர்கள், நார்மல்ஸ்கூலில் பண்டிதராயிருந்த, சோடசாவதானம்-சுப்பராய செட்டியாரவர்கள், ஸ்ரீ பச்சையப்ப முதலியார்காலேஜில் தமிழ்ப்பண்டிதராயிருந்த மயிலை-முருகேசமுதலியாரவர்கள், ஷை பிரஸிடென்ஸி காலேஜிற்றானே பண்டிதராயிருந்த ஸ்ரீகிருஷ்ணமாச்சாரியார் முதலியோர்கள் விண்ணப்பஞ்செய்து பரீக்ஷைக்குள்ளாக அவர்களெல்லோரினும் இந்நூலாசிரியர், அக்காலேஜில் பிரின்ஸிபாலாயிருந்து காலஞ்சென்ற, மிஸ்டர், எட்மண்ட்-தாம்ஸன் எம்-ஏ அவர்கள் ஷை அரங்கநாதமுதலியாரவர்கள் ஷை காலேஜிற்றானே ஸமஸ்கிருத புரொபஸராகவிருந்து காலஞ்சென்ற பிரம ஸ்ரீ மிட்டாதார்-சேஷகிரி சாஸ்

திரியாரவர்கள் எம்-ஏ, ஆகிய இவர்கள் முன்னிலையில் சிறப்பாகவெரப் பெறினர். இவர்க்கு ஷை எட்மண்ட் தாம்ஸன் துரையவர்கள் ஆங்கிலேய நாட்டிற்குச் செல்லும்பொழுது கொடுத்த நற்சாட்சிப் பத்திரம் தற்காலம் அடியேனிடமுள்ளது. 188)-ம் ஞு த்தில் இவர் முத்தியாலுப்பேட்டையி னின்றும் தண்டையார்பேட்டை கொல்லவார் அக்கிராரம் ரோட்டில் ஒரில்லம் வாங்கியதிற்குடி புகுந்தார்.

சென்ற 1881-ம் வருடத்தில் தனதிளைய மாமனாராகிய தொட்டிக்கலை-சுப்பிராயமுதலியாருக்கும் காமாக்ஷியம்மாளுக்கும் அவதரித்தமாதுஸ்ரீ சுவர்ணம்மாள் என்பவர் தமது மூத்தமனைவிபோன்ற நற்குண நற்செய்கை யமையப்பெற்றவரென்று கண்டு மறுமணம் முடித்தார். இந்தம்மாள் தற்காலம் தர்பதநிலையை வழுவாது நடத்திக்கொண்டு, ஏககுடும்பத்தினராக அடியேன்வசமாக சிவத்தியானத்தோடும் ஜீவந்தராக விருக்கின்றனர். இந்தம்மாள் உண்மையாய் அடியேனுக்கு மாற்றாந்தாயாகவே நடந்து அடியேனைக் காப்பாற்றிக்கொண்டு கீர்த்திபெற்றிருக்கின்றனர். அந்நன்றியை அடியேனும் என்குடும்பத்தினரும் என்றும் மறக்கற்பாலதன்று. தண்டையார்ப்பேட்டையில் வசிக்கும்போது அடியேனுக்கு இல்லறவியல்பு நடத்திக்காட்டியும் அடியேனுக்குச் சகாயமாக தனதிரண்டாம்மனைவியகர்பால் தொழுவூர்-வே-செங்கல்வராயமுதலியாரென்னும் கண்மணியைப் பெற்றுவைத்தும் ஷை காலேஜில் சுமார் பத்துவருடகாலம் தமிழ்ப்புலமை நடாத்தியும் வந்து தமது 57-ம் வயதில் இராஜபிளவையால் 1889-ம் ஞு பிப்ரவரிமீ 22உக்குச்சரியான சர்வதாரி ஞு மாசிமீ 12-உ கிருஷ்ண பக்ஷம் சப்தமிதிதி விசாக நக்ஷத்திரங்கூடிய சுக்கிரவாரதினம் தனதான்மார்த்தமாகிய ஸ்ரீ படம்பக்கவாைரது திருவடி நீழலைச் சேர்ந்தனர். இவரது அருமைத் திருமேனி திருவொற்றியூரில் சேமித்துப் பூசிக்கப் படுகிறது.

இவர் தண்டையார்ப்பேட்டையி லிருக்கும்போது ஷை அரங்கநாதமுதலியாரவர்கள் ஆசுகவியாகச்சொல்லக்கேட்டுக் கொண்டபடி "மகிழ்மாக்கலம்பகம்" என்னும் பிரபந்தமும், மற்றுஞ் சில ஆசுகவிப் பதிகங்களும்பாடி அரங்கேற்றி ஷை முதலியாரைக் களிப்பித்தனர். இவ்வாசிரியர் வசனநடையிலும், செய்யுள் நடையிலும் ஏராளமாக நூல்களியற்றி யுள்ளனர். அவற்றில் "பட்டினத்துப்

பிள்ளையார்'' என்று வழங்கும் "திருவெண்காட்டடிகள்'' சரித்திர வசனத்திற்கும் சங்கரவிஜயம் என்று வழங்கும் "சங்கராச்சாரியார் சரித்திர'' வசனத்திற்கும் இரண்டாம்பதிப்புவெளிவந்திருக்கின்றது. இந்நூலும் இரண்டாம்பதிப்பே மற்றவைகளை ஒவ்வொன்றாக வெளியிட உத்தேசங் கொண்டுள்ளேன். அவைகளில் முக்கியமானவைகளினட்டவணையொன்று சேர்த்துள்ளேன். இவருடைய சரித்திரம் ஒருவாறு சுருக்கிக்கூறப்பட்டது. விரிவு பின்னர் தனிப்புத்தகமாக வெளியிடப்படும். சுபம்!

இங்ஙனம்

(தொழூர். வே. திருநாகேஸ்வரன்.)

கணபதி துணை

மேற்கோள் விளக்கம்.

—(*)—

ஆசானுரைத்த தமைவரக் கொளினும்
காற்கூ றல்லது பற்றல னாகும். நன்னூல்.

(இ-ள்.) தனதாசிரிய னுரைத்த பொருளைத் தன்மனத்துள் சீடனானவன் அமையக் கொள்வானாயினும் அவ்வாசிரியனது புலமைத்திறத்திற் காற்கூறு பற்றினவனாவதன்றி யொழிந்த முக்காற்கூறும் பற்றுதவனாவன்.

பெரியாரைத் துணைக்கொள் ஆத்திசூடி.

(இ-ள்.) அறிவானு மநுபவத்தானும் மூத்தாரது துணையை யொருவன் கொள்ளற்பாலது.

பேதைமை யகற்று. ஆத்திசூடி.

(இ-ள்.) சிறந்த கல்விகளைக் கற்றறிந்து இயற்கைத் திரிபாகிய அறியாமையை யொருவன் நீக்கக்கடவன்.

பருவத்தோ டொட்ட வொழுக றிருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு குறள்.

(இ-ள்.) அரசன் காலத்தோடு பொருந்த வினைசெய்து ஒழுகுதல் ஒருவர்கண்ணும் நில்லாது நீங்குஞ் செல்வத்தைத் தன்கண் நீங்காமற் பிணிக்குங் கயிறாம்.

குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது குறள்.

(இ-ள்.) துறவு மெய்யுணர்வு அவாவின்மை முதலிய நற்குணங்களாகிய குன்றின் முடிவின் கணின்ற முனிவரது வெகுளிதானுள்ள அளவு கணமேயாயினும் வெகுளப்பட்டாரால் தடுத்தலரிது.

ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலு
மெண்ணிற் றவத்தான் வரும். குறள்.

(இ-ள்.) தம்மறத்திற்குப் பகையாய் அழிவுசெய்தாரைக் கெடுத்தலும் அதனை உவந்தாரை உயர்த்தலும் ஆகிய இவ்விரண்டையும் தவஞ்செய்வார் நினைப்பாராயின், அவர் தவவலியான் அவை அவர்க்குளவாம்.

அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும். குறள்.

(இ-ள்.) ஒருவனை அடக்கமாகிய அறம் பின் தேவருலகத்துய்க்கும்; அடங்காமையாகிய பாவம் தங்குதற்கரிய இருளின்கட்செலுத்கும்.

யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு குறள்.

(இ-ள்.) தம்மாற் காக்கப்படுவன எல்லாவற்றையும் காக்கமாட்டாராயினும் நாவொன்றனையுங்காக்க, அதனைக்காவாராயின் சொற்குற்றத்தின் கட்பட்டுத் தாமே துன்புறுவர்.

ஆற்றரு மாற்றி யடுப விடனறிந்து
போற்றார்கட் போற்றிச் செயின் குறள்.

(இ-ள்.) வலியர் அல்லாதாரும் வலியராய் வெல்வர், அதற்கேற்ற இடத்தினையறிந்து தம்மைக் காத்துப்பகைவர்மாட்டு வினைசெய்வீராயின்.

உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர். குறள்.

(இ-ள்.) கருத்தாவாதலையுடைய தம்வலியின் அளவறியாதே மனவெழுக்சியால் தம்மின் வலியாரோடு வினைசெய்தலைத் தொடங்கி அவர் அடர்த்தலான் அதுசெய்து முடிக்கப்பெறாது இடையே கெட்ட அரசர் உலகத்துப் பலர்.

யானையெருத்தம் பொலியக்குடை நிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரு-மேனை
வினையுலப்பவேறாகி வீழ்வர்தாங்கொண்ட
மனையாளை மாற்றார் கொள. நாலடியார்.

(இ-ள்.) யானை யெருத்தம் பொலிவுபெறக்குடை நிழற்கீழ்ச் சேனைத்தலைவராய்ச் சென்றோருந் தீவினையுலப்பவேறு பட்டுத்தாங்கொண்ட மனையாளைப் பகைவர் கொள்ளக் கெடுவர்.

முனைமுகத்து நில்லேல். ஆத்திசூடி.

(இ-ள்.) போர்முகத்தொருவன் காரியமேம்படாவிடத்து நன்மை பயவாது தீமையைச் செய்யுமாதலால் அஃதொழிப்பானாக.

வகுத்தான் வகுத்தவகை யல்லாற்கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது. குறள்.

(இ-ள்.) ஐம்பொறிகளான் நுகரப்படும் பொருள்கள் கோடியை முயன்று தொகுத்தார்க்கும் தெய்வம் வகுத்தவகையான் அல்லது நுகர்தலுண்டாகாது.

முயற்சி திருவினையாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும். குறள்.

(இ-ள்.) அரசர் மாட்டுளதாய முயற்சி அவரது செல்வத்தினை வளர்க்கும். அஃதில்லாமை வறுமையை அடைவித்து விடும்.

அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான். குறள்.

(இ-ள்.) எல்லாவுயிர்கண் மேலுஞ் செவ்விய தண்ணளியைப் பூண்டொழுகலான், அந்தணரென்று சொல்லப்படுவார் துறவறத்தினின்றார்.

மனத்துளதுபோலக் காட்டி யொருவற்
கினத்துளதாகு மறிவு. குறள்.

(இ-ள்.) அறிவானது ஒருவற்குமனத்து உளதுபோலக்காட்டி ந்த இனத்தின் கண்ணே உளதாம்.

உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. குறள்.

(இ-ள்.) கைம்மாறுன உதவிகாரணத்தானும் பொருளானுங் காலத்தானும் ஆகியமூவகையானும் முன்செய்த உதவியளவிற்றன்று அதனைச் செய்வித்துக்கொண்டவர்தம் அமைதி யளவிற்று.

தந்தைசொன்மிக்க மந்திரமில்லை. கொன்றைவேந்தன்

(இ-ள்.) ஒருவற்கு தந்தையாவன் தெய்வத்தோ டொப்பானுவனுதலாலும், முற்படவெவற்றையும் அறமல்லது மறக்கருணையால் புகட்டுபவனுதலாலும், அத்தந்தையின் சொல்யாதொரு மந்திரங்களைப்போன்று காரியசித்தியைச் செய்யுமாதலால் வேறுமிக்கதொரு மந்திரம் வேண்டாவாம்.

மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய்வாரிற் றலை. குறள்.

(இ-ள்.) ஒருவன் தன்மனத்தோடு பொருந்த வாய்மையைச் சொல்வானாயின், அவன் தவமுந் தானமுந் ஒருங்கு செய்வாரினுஞ் சிறப்புடையன்.

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
முள்ளழிக்க லாகாவரண். குறள்.

(இ-ள்.) அரசர்க்கு அறிவென்பது இறுதிவாராமற் காக்குங் கருவியாம், அதுவேயும் அன்றிப் பகைவர்க்கு அழிக்கவாராத உள்ளரணுமாம்.

ஒருமைக்கட்டான்கற்ற கல்வியொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து. குறள்.

(இ-ள்.) ஒருவனுக்குத் தானொரு பிறப்பின் கண்கற்றகல்வி எழுபிறப்பினுஞ் சென்று உதவுதலை யுடைத்து.

கேடில்விழுச்செல்வங் கல்வியொருவற்கு
மாடல்ல மற்றையவை. குறள்.

(இ-ள்.) ஒருவனுக்கு அழிவில்லாத சீரியசெல்வமாவது கல்வி, அஃதொழிந்தமணியும் பொன்னு முதலாயின செல்வமல்ல.

சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லியினமென்னு
மேமப்புணையைச் சுடும். குறள்.

(இ-ள்.) சினமென்னும் நெருப்புத்தனக்கு இடமானவரையே யன்றி அவர்க்கு இனமாகிய ஏமப்புணையையுஞ் சுடும்.

யாமெய்யாக்கண்டவற்றுளில்லை யெனைத் தொன்றும்
வாய்மையி னல்லபிற குறள்.

(இ-ள்.) யாம் மெய்ந்நூல்களாகக் கண்ட நூல்களுள் யாதொரு தன்மையானும் வாய்மையின் மிக்கனவாகச் சொல்லப்பட்ட பிறவறங்க ளில்லை.

ஆபத்துள் தருமம் ஆதுரவிதி.

(இ-ள்.) ஒருவர்க்கு இடுக்கண் நேர்ந்தவழி தருமத்தைக் காத்தலென்னு மேற்பாடு நோயாம்.

எல்லைக்க ணின்றார் துறவார் தொலை விடத்துந்
தொல்லைக்க ணின்றார் தொடர்பு. குறள்.

(இ-ள்.) நட்பு வரம்பிகவாது அதன்கண்ணே நின்றவர் தம்மொடு பழமையிற் றிரியாது நின்றாரது நட்பினை அவராற் றொலைவு வந்தவிடத்தும் விடார்.

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்றலரிது. குறள்.

(இ-ள்.) தனக்கு முன்னொருதவி செய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குச் செய்த வுதவிக்கு மண்ணுலகும் விண்ணுலகுங் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஒத்தலரிது.

சுற்றத்தாற் சுற்றப்பட வொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன். குறள்.

(இ-ள்.) செல்வம் பெற்றவதனால் ஒருவன் பெற்றபயனாவது தன் சுற்றத்தால் தான் சூழப்படும்வகை அதனைத்தழீஇ ஒழுகுதல்.

கெடாஅவழி வந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையு முலகு. குறள்.

(இ-ள்.) உரிமையுறுது பழையதாய் வந்த நட்பினை யுடையாரது நட்பினை அவர் பிழைநோக்கி விடுதல் செய்யாதாரை உலகம் நட்புக்குறித்து விரும்பும்.

ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறிவாளன் றிரு. குறள்.

(இ-ள்.) உலக நடையை விரும்பிச் செய்யும் பெரிய அறிவினை யுடையவனது செல்வம், ஊரின்வாழ்வார் தண்ணீருண்ணுங் குளம் நீர்நிறைந்தாற் போலும்.

தன்னைத்தான்காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம். குறள்.

(இ-ள்.) தன்னைத்தான் துன்பமெய்தாமற் காக்க நினைத்தானாயின், தன்மனத்துச் சினம் வாராமற்காக்க, காவானாயின், அச்சினந் தன்னையே கெடுக்குங் கடுந்துன்பங்களை யெய்துவிக்கும்.

நகையுமுவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோபிற. குறள்.

(இ-ள்.) துறந்தார்க்கு அருளான் உளவாய முகத்தின்கண்நகையையும் மனத்தின் கண் உவகையையுங் கொன்று கொண்டு எழுகின்றசினமே அல்லது அதனிற்பிறவாயபகைகளும் உளவோ இல்லை.

இம்மை பயக்குமா லீயக்குறைவின்றா
றம்மை விளக்குமாற் றுமுளராக்கேடின்றா
லெம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோல்
மம்மரறுக்கு மருந்து. நாலடியார்

(இ-ள்.) இப்பிறப்பின்கட்டமக்கின்பத்தைப் பயக்கும் பிறர்க்கீக்கொடுத்தாற் குறைவுபடாது தம்மையிப் பெற்றிப்பட்டாரென்று எல்லோரு மறியவிளக்குஞ் செல்வம்போலத்தாமுளராகக் கேடு காணப்படாது மனத்தின் கண்ணுள்ள மயக்கத்தைக் கல்விபோல அறுக்குமருந்து எவ்வுலகத்தும் யாங்கண்டறியோம்.

அழலினீங்கா னணுகானஞ்சி
நிழலினீங்கானிறைந்த நெஞ்சமோ
டெத்திறத்தாசானு வக்குமத்திற
மறத்திற்றிரியாப் படர்ச்சி வழிபாடே. நன்னூல்

(இ-ள்.) அழல்காய்வோன் அவ்வழலைப்போல, ஆசிரியனை விட்டு நீங்காதவனும் அஞ்சி நெருங்காதவனும், அவன் சென்றவிடத்தெல்லாம் அவனிழலைப்போல நீங்காது பின் செல்பவனாகியும், அன்புநிறைந்த மனத்துடனேகூடி, எவ்வகையா லாசிரியன் மகிழ்வானோ, அவ்வகை புரிவதும், தருமத்தினின்றும் மாறுபடாத நடையும், ஆசிரியனை மாணக்கன் வழிபடும் வழிபாடாம்.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றனென்றாங்
கைம்புலத்தாறோம்ப றலை. குறள்.

(இ-ள்.) பிதிரர் தேவர் விருந்தினர் சுற்றத்தார் தானென்று சொல்லப்பட்ட ஐந்திடத்துஞ் செய்யும் அறநெறியை வழுவாமற் செய்தல் இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய அறமாம்.

பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்லபிற. குறள்,

(இ-ள்.) ஒருவன் பெறும் பேறுகளுள் அறியவேண்டுவன அறிதற்குரிய மக்களைப் பெறுதல் அல்லது பிறபேறுகளை யாமதிப்பதில்லை.

மக்களொடு மகிழ்ந்து மனையறங்காத்து
மிக்ககாமவேட்கை தீர்ந்துழித்
தலைவனுந் தலைவியுந் தம்பதிநீங்கித்
தொலைவில் சுற்றமொடு துறவறங் காப்ப.

(இ-ள்.) ஓராடவன் இல்லறத்திற் பயனாய நன்மக்களையீன்று அதனால் நெஞ்சமகிழ்ச்சி யடைந்து, இல்லறதருமத்தை குறைவற நடாத்தி, அதனால் புலனும் மற்றுள்ளவையாலு முண்டாமோர் விரும்புதலைத் துய்த்தொழித்து, அவ்வில்லத்திற்கு தலைவனாயதானும்

அதற்குத் துணையாய்நின்ற பன்னியாய தலைவியும், தாமில்லற நடாத்திவந்த பதியைவிட்டு விலகி, விட்டுநீங்காத சுற்றத்தினரொடு துறவறம்பூண்டு, அதில் யாதோர் குறைபாடும் நேராதவாறு, காடுழுதவிய் வெளியிடஞ் சென்று காப்பதே துறவறத்தின் தருமவொழுக்கமாம்.

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும். குறள்.

(இ-ள்.) ஒருவன் இருவகைப்பற்றும் அற்றபொழுதே, அப்பற்றறுதி அவன் பிறப்பையறுக்கும், அவையறாத பொழுது அவற்றாற் பிறந்திறந்து வருகின்ற நிலையாமை காணப்படும்.

கற்றாரை யான்வேண்டேன் கற்பனவு மினியமையும். திருவாசகம்.

(இ-ள்.) பல்வகைய கலைகளைத் திறம்படவும் பலபடவும் கற்றுவல்லாரை விரும்புதல் செய்தலெனக் காகவேண்டா, மேலவ்வகையாக கற்கத்தகும் கல்விகளும் அற்றேயாக (வேண்டாதொழிக என்றவாறு.)

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅநின்ற வித்தாவர சங்கமத்து
ளெல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன். திருவாசகம்.

(இ-ள்.) ஈச்சுரனாற் றொன்றுதொட்டு படைக்கப் பட்டுள்ள புல், பூண்டு, புழு, மிருகம், பறவை, பாம்பு, கல், மனிதர், பேய், கணங்கள், வலிமைமிக்கவசுரர், முனிவர், புண்ணியமேலீடுள்ள தேவர், ஆகிய பல்வகைத்தாய நிலையியலும் இயங்கியலுமாய, வளர்வன, நடப்பன, இருப்பனமுதலவாம் பிறப்புக்கடோறும் பலநாளும் பிறந்து பிறந்து அப்பிறவிகடோறு முளதாய பலவிடுக்கண்களைத் துய்த்து அலந்தேன்.

உவலைச் சமயங்களெவ்வாத சாத்திரமாஞ்
சவலைக்கடலுளனய்க்கிடந்து தடுமாறுங்
கவலைகெடுத்துக் கழலிணைக டந்தருளுஞ்
செயலைப்பரவிநாந் தெள்ளேணங்கொட்டாமோ. திருவாசகம்.

(இ-ள்.) சமயக் கோட்பாடுகளெல்லாம் சுத்த ஞானிகட்குப் பெய்யாகு மாகையா லவைகளும், ஒன்றுக்கொன்று முரணுறுஞ் சாத்திரங்களெல்லாம் ஞானிகளுக்கு மனமொருமைக் கிடந்தராத மெலிவு செய்வதனு லவ்வகைப்பட்ட கடலுளாழுந்தி துறைதெரியாது மயங்குவதைத் தனது ஞானேப தேசத்தாற் கெடுத்தொழித்து, அத னுண்மைப் பயனுகிய தன்றிருவடியைத் தந்தருளும்படித்தாய வோர் காரியத்தைக் கூட்டுவித்த பரமசிவத்தைப் பணிந்து, தோழிகளே நாம் தெள்ளேண மென்னும் விளையாட்டைச் செய்வோம்.

ஒருமைக்கட்டான் கற்றகல்வியொருவற்
கெழுமையு மேமாப்புடைத்து. குறள்.

(இ-ள்.) ஒருவனுக்குத் தானொரு பிறப்பின்கண் கற்றகல்வி யெழுபிறப்பினுஞ் சென்று உதவுதலை யுடைத்து.

தம்மிற்றம் மக்களறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது. குறள்.

(இ-ள்.) தம்மக்களது அறிவுடைமை பெரியநிலத்து மன்னு நின்றவுயிர்கட் கெல்லாந் தம்மினும் இனிதாம்.

தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான். குறள்.

(இ-ள்.) துன்பஞ் செய்யுங் கூற்றவாகிய பாவங்கள் தன்னைப் பின்வந்து வருத்துதலை வேண்டாதவன், தீமைக் கூற்றவாகிய வினை களைத்தான் பிறர்மாட்டுச் செய்யா தொழிக.

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும். குறள்.

(இ-ள்.) ஒருவன் தன்னெஞ்சறிவ தொன்றனைப் பிறர் அறிந்தி லரென்று பொய்யாதொழிக, பொய்த்தானுயின், தன்னை அதன்பய ஹைய துன்பத்தை யெய்துவிக்கும்.

தம்பொருளென்பதம் மக்களவர்பொரு
டந்தம் வினையான் வரும். குறள்.

(இ-ள்.) தம்புதல்வரைத் தம்பொருளென்று சொல்லுவர் அறி ந்தோர், அப்புதல்வர் செய்த பொருள் தம்மைநோக்கி அவர் செய்யு நல்வினையானே தம்பால்வரும் ஆதலான்.

மாய்வதன் முன்னே வகைப்பட்ட நல்வினையை
ஆய்வின்றிச் செய்யாதார் பின்னை—வழிநினைந்து
நோய்காண் பொழுதினறஞ் செய்வார்க்காணுமை
நாய்கானிற் கற்காணுவாறு. பழமொழி

(இ-ள்.) ஒருவன் தனக்கு இறுதிநாள் சமீபிக்க முன்னரே தருமவொழுக்கங்களைச் செய்யாது தாழ்த்தானாயின் அவன் பின் தனக்குயிறுதிநாள் நேரும்போது, அயலாரைக்கொண்டு தன் நிமித்தம் அறத்தைச் செய்விக்க உத்தேசித்தானாயினும், அக்காலத் தெவரும் நேராதொழிய, நாயினைக்கண்டவிடத்து அதனாறுபாடு தன்னை யடையாவண்ணம் கல்லாலெறிய வெண்ணியும் கற்கிட்டாதொழிந்து துன்புறுவாரைப் போலாவன்.

யானேதும் பிறப்பஞ்சே னிறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
றேனேயு மலர்க்கொன்றைச் சிவனே யெம்பெருமானெம்
மானேயுன்னருள் பெறுநாளென்றென்றே வருந்துவனே.

(இ-ள்.) அடியேன், தேவரீரது திருவருளைப் பெறுமாறு கிடைக்கப்பெற்றேனாயின் அவ்வகைத்தாயபலபிறவிகளெடுக்க அஞ்சினேனல்லேன். ஆனால்,தேவரீரது திருவருள்பெறாது வருந்தியிறப்பேனாயின் அந்தோ, அதற்குச் செய்வகையறியேன் காக்கக்கடவீராக. அடியேன் தேவருலகத்துப்போகத்தை வேண்டேனல்லேன். இந்நிலவுலகத்து அரசுரிமைபூண்ட அரசச் செல்வத்தையாயினும் அரசையாயினு மொருபேறாகக் கொண்டேனல்லன். பின்னையாது வேண்டினே னென்பீராயின், தேன் நிரம்பிய கொன்றைமாலை வேய்ந்த சிவனே, எம்மிறைவனே, எந்தலைவனே, உனது கிடைத்தற்கரிய தண்ணருளை எந்நாளைக்கு யான் பெறுமாறு என்று சிந்தித்து, அது சீக்கிரம் கைகூடுமோ வல்லதுகாலந் தாழ்க்குமோ வென்னு மொன்றனையே சிந்தித்து மனவாட்டங் கொண்டுள்ளேன்.

மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. குறள்.

(இ-ள்.) அனிச்சப்பூ மோந்துழி யன்றிக்குழையாது, விருந்தினர் முகம் வேறுபட்டு நோக்கக் குழைவர்.

நலக்குரியார் யாரெனி னமநீர் வைப்பிற்
பிறற்குரியா டோடோயாதார்.

(இ-ள்.) அச்சந்தரும் கடலாற் சூழப்பட்ட உலகத்து எல்லா நன்மைகளும் எய்துதற்குரியார் யாவரெனின், பிறனொருவனுக்கு உரிமையாகியாளுடைய தோளைச் சேராதார்.

காணிற் குடிப்பழியாங் கையுறிற் கால்குறையு
மாணின்மை செய்யுங்காலச்சமா—நீணிரயத்
துன்பம் பயக்குமாற்றுச்சாரிகீகண்ட
வின்பமெனக் கெனைத்தாற் கூறு. நாலடியார்.

(இ-ள்.) ஒருவர்காணிற் குடிப்பழியாம் கைப்படிற்றன் கால் குறைப் புண்ணும் மாண்டகைமையை யழிவிக்கும் அச்சமிகவுண் டாம் நீண்ட நரகத்திடும்பையையுந் தருதலாற் பொல்லாத செய்கை யை யுடையாய் நீயாராய்ந்த வின்பமெத்தன்மையா யிருக்கும் எனக் கதனைச் சொல்.

அருள்வெஃகி யாற்றின்க ணின்றான் பொருள் வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும். குறள்.

(இ-ள்.) அருளாகிய அறத்தைவிரும்பி அதற்கு வழியாகிய இல் லறத்தின் கண் நின்றவன் பிறர்பொருளை அவாவி அதனை வருவிக் கும் குற்ற நெறிகளை எண்ணக் கெடும்.

பூத்தகாலை புனையிழை மடந்தை
நீராடியபின் னீராறு நாளுங்
கருவயிற்றுறூஉங்காலமாதலிற்
பிரியவும்பெறுஅன் பரத்தையிற் பிரிவோன்.

(இ-ள்.) ஓரில்லத் தலைவனுக்கேற்ற தருமமாவது, தனது தலைவி யானவள் பூப்படைந்து மூழுகின பிறகு பன்னிரண்டுதினமும் கரு வுண்டாங் காலமாதலால் அத்தினங்களில் அவளை யில்லத்திருத்தித் தான் பிற தாசி வேசிமனைக்குச் செல்லா தொழிதலாம்.

என்புள்ளுருக்கி யிருவினையை யீடழித்துத்
துன்பங்களைந்து துவந்துவங்க டேய்மைசெய்து
முன்புள்ளவற்றை முழுதழிய திருவாசகம்

(இ-ள்.) தேவர்ரோமானது பத்தியானது என்பை உள்ளாக வே யுருகும்படிசெய்து நல்வினை தீவினைகளின் திட்பத்தைக் கெடு த்து, அதனாலுண்டாம் பிறவித்துன்பங்களையறவே யொழித்து, பந்த ங்களையும் விலக்கி பரிசுத்தஞ் செய்து, முன்பாகவே யமைந்துள்ள கெடுதிகளை முற்று மொருங்கே கெட்டொழியுமாறு செய்து

விளக்குப்புக விருண்மாய்ந்தாங் கொருவன்
றவத்தின் முன்னிில்லாதாம் பாவம்.

(இ-ள்.) பிரகாசத்தைச் செய்யுந்தீபம் வந்தவழி யடியோடு கெட்டொழியும் இருளைப் போன்று, ஒருவனீட்டிய பாவமானது திண்மையான் தவத்தைச் செய்வானாயின டியோடு கெட்டொழியும்.

அவிசொரிந்தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று. குறள்.

(இ-ள்.) தீயின்கண் நெய்முதலிய அவிகளைச் சொரிந்து ஆயிரம் வேள்விவேட்டலினும், ஒருவிலங்கின் உயிரைப்போக்கி அதன் ஊனை உண்ணாமை நன்று.

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. குறள்.

(இ-ள்.) பெரிய அறங்களைச் சிதைத்தார்க்கும் பாவத்தில் நீங்கும் வாயில் உண்டாம், ஒருவன்செய்த நன்றியைச் சிதைத்த மகனுக்கு அஃதில்லை.

தீவினையாரஞ்சார் விழுமியாரஞ்சுவர்
தீவினையென் னுஞ் செருக்கு. குறள்.

(இ-ள்.) தீவினையென்று சொல்லப்படும் மயக்கத்தை முன் செய்த தீவினயுடையார் அஞ்சார், அஃதிலராகிய சீரியார் அஞ்சுவர்.

நெடுநீர்மறவி மடிதுயினான்கும்
கெடுநீரார் காமக் கலன்.

(இ-ள்.) மடியும், விரைந்து செய்வதனை நீட்டித்துச் செய்யும் இயல்பும், மறப்பும், துயிலும் ஆகிய இந்நான்கும் இறக்கும் இயல்பினையுடையார் விரும்பி யேறும் மரக்கலம்.

அலசாது நடக்கும் எறும்பும் ஆயிரங்காதமுஞ் செல்லும்.

(இ-ள்.) ஓர்நிலையாய்ச் செல்லும் அற்ப எறும்பும் யாதொரு சலிப்பின்றி மெல்லென ஆயிரங்காததூரம் போகும்.

அடிபெயர்க்காத கருடன் அங்குலியும் நடவாது,

(இ-ள்.) வானத்திற் பறக்கத்தவிர தன்னடியைப்பெயர்க்கவழியறியாதுநிற்கும்பறவையாகியகருடன் ஓர் அங்குலிதூரமும்நடவாது ஆதலால் நல்லறம் முடியாதாயினும் அதை முடிக்க முயற்சி செய்தல் வேண்டும்.

சினத்தைப்பேணிற்றவத்திற் கழிவு. கொன்றைவேந்தன்.

(இ-ள்.) யாதொரு தவமேற் கொண்டான் அவன் தன்னறிவைக்கெடுத் தொழிக்கும் சினத்தைப் பேணு தொழிவானாக.

மேற்கோள் விளக்க முற்றிற்று.

கணபதி துணை

அரும்பத விளக்கம்.

அ

அகவல்-அழைத்தல்
அங்கணன்-சிவன்
அசிபத்திரநரகம்-எரிநெருப்பு நிலமுடைய நரகம்
அசுவமேதம்-குதிரையைவிட்டு அரசர்களை ஜெயித்துப் பிறகு செய்யும் யாகம்
அசுரன்-இராக்ஷசன்
அச்சோ-ஐயோ
அஸ்மிதம்-புத்தி ஆத்மாக்களின் ஒற்றுமையுணர்ச்சி
அஸ்வனிதேவர்-தேவமருத்துவர்
அஞ்சலி-கும்பிடல்,வந்தனை
அஞ்சல்-பயப்படுதல்
அஞ்சனமலை-கறுப்புமலை
அஞ்ஞானம்-தெய்வஅறிவின்மை
அணிதல்-அலங்கரித்தல்,தரித்தல்
அணி-ஆபரணம்
அணிமா-அணுமாப்போலாதல்
அணிவகுப்பு-படைவகுப்பு
அதமன்-கடையானவன்
அதிகரணம்-இடம்
அதிரிசியம்-காணப்படாத தன்மை
அதீதம்-எட்டாதது, மேற்பட்டது.
அத்வைதம்-இரண்டற்றது, (பரமாத்மாவும் ஜீவாத்மாவுமொன்றென்கைபலவென்றும்பொருள்
அநுபந்தம்-பின்வருவது.
அந்தரங்கம்-இரகசியம்
அந்தர்த்தானம்-ஆகாயநிலை.
அபரக்கிரியை-இறந்தபின் செய்யுங் காரியங்கள்
அபிதானம்-பெயர்
அபிநயம்-கைமெய்காட்டல்
அபிநிவேசம் - மரணபயத்தால் சரீரத்தை ரக்ஷித்தலிலுண்டாகும் ஆக்கிரகம்
அப்பிரகம்-ஓர்வகைலோகக்கல்
அமயம்-சமயம்
அமரர்-வானோர்
அமுதாசனர்-தேவர், பிரமன்
அமைதல்-பொருந்தல், நிறைதல்
அம்போருகம்-தாமரை.
அயனம்-வருடப்பாதி
அரக்கன்-இராட்சசன்
அரணம்-காவல், கோட்டை
அரணி-தீக்கடைக்கோல்
அரண்-காவல், கோட்டை
அரதனம்-நவமணி
அரமாதர்-தெய்வலோகத்துப்பெண்கள்.
அரற்றல்-ஒலித்தல், அழுதல்
அரி-விஷ்ணு, அழகு
அரிதாளி-பொன்னரிதாரம்
அருக்கியம்-மந்திரநீரிறைத்தல்
அருத்தவாதம்-வேதஞானத்தின் நிந்தைவடிவினவும் அபேதஞானத்தின் ஸ்துதிவடிவினவுமான வாக்கியங்கள்.
அருவம்-உருவின்மை
அருளப்பாடு-அநுக்கிரகம்
அருளாளன்-தயையுடையவன், சிவன்
அலப்படை-கலப்பையாயுதம்
அலமருதல-அசைதல்.
அலாயுதன்-பலபத்திரன்
அல்லல்-துன்பம்
அவதாரம்-பிறப்பு அம்சப்பிறப்பு
அவதூதி-முற்றத்துறந்தவன்
அவி-வேவி, தேவருணவு
அவிசு-தேவருணவு

அவித்தை-அஞ்ஞானம்.
அவிர்ப்பாகம்-யாகத்தில் தேவர்களுக்குக் கொடுக்கும் உணவு.
அவிழ்தம்-மருந்து
அவ்வியக்தம்-விளங்கக்காணப்படாதது.
அழல்-நெருப்பு
அழுக்காறு-பொறாமை
அறக்கடவுள்-தருமதேவதை, யமன்
அறம்-தருமம்
அறுகுணம்-ஆறுவித குணங்கள்
அறைகூவுதல்-போருக்கழைதல்
அனகர்-பாவமில்லாதவர்
அனுட்டித்தல்-ஆசரித்தல்
அனுவதித்தல்-சொன்ன நியாயத்தையே திரும்பச்சொல்லல்

ஆ

ஆகவநீயம்-தேவாக்கினி
ஆகுலம்-துன்பம்
ஆக்கம்-செல்வம்
ஆசிரயம்-இடம்
ஆஸ்திகர்-தெய்வமுண்டென்னுங் கொள்கையர்
ஆண்டு-அவ்விடம், வருடம்
ஆதித்தர்-வானோர், சூரியர்
ஆதுரம்-அவா, நோய்
ஆராதனை-பூசனை, வணக்கம்
ஆரியன்-அறிவுடையோன்
ஆற்றல்-வல்லமை
ஆனி-கேடு

இ

இகத்தல்-விட்டுவிடுதல்
இகல்-பகை, போர்
இசை-புகழ், பாட்டிசை
இச்சை-விருப்பம்
இடுகாடு-சுடுகாடு
இடுக்கண்-துன்பம், வறுமை
இடையூறு-இடர், தடை
இணக்கல்-சம்மதித்தல்
இதிகாசம்-பழங்கதை
இந்திரியங்கள் பொறிகள்
இயங்குதிணை-நடையுள்ளது
இயலல்-பொருந்தல்
இயற்கை-சுபாவம்
இயன்றளவு-நேர்ந்தவரையில்
இரலி-கொன்றை
இராஜசு-மனவூக்கம், ஞானம் வீரம், தவம், தருமம், தானம், கல்வி, கேள்வி யென்னுங் குணங்கள்
இராஜசம்-முக்குணத்தி லொன்று
இராஜசூயம்-அரசர்கள் செய்யும் யாகம்
இருடி-முனிவன்
இருதுகாலம்-கருப்பந்தரிக்கத் தகுந்தநாள்
இருத்துவிக்கு-யாகத்தைச் செய்விப்போன்
இருபிறப்பாளன்-பிராமணன்
இருமுதுகுரவர்-தந்தை தாயார்
இரௌரவம்-ஓர்நரகம்
இலக்கு-குறிப்பு
இலம்பாடு-வறுமை
இலிங்கம்-அடையாளம்
இல்லாள்-மனைவி
இழிதல்-இறங்குதல்
இளிவரல்-குறைவு
இறைமகன்-அரசபுத்திரன்

ஈகை-கொடை
ஈண்டு-இவ்விடம்
ஈமம்-சுடுகாடு

உ

உசிதம்-உத்தமம் மேன்மை
உச்சாரணை-உச்சரித்தல்
உடன்பாடு-சம்மதம்

உதயகிரி-உதயமலை
உதாசீனம்-தூஷணம்
உதானன்-நாபியில் நிற்கும்வாயு
உத்தாரம்-தாராளம்.
உத்தராயணம்-சூரியன் வடக்கிற் சஞ்சரிக்கும் ஆறுமாதகாலம்
உந்தி-கொப்பூழ்
உபநிஷத்-வேதசாரசாஸ்திரம்
உபாக்கியானம்-கதை
உபாதி-வருத்தம்
உபாசனை-வழிபாடு
உபேந்திரன்-விஷ்ணு
உய்யானவனம்-சிங்காரவனம், பூந் தோட்டம்
உரிமை-சுதந்தரம்
உலண்டுப்பூச்சி-கோற்புழு
உலவாத-கெடாத
உழத்தல்-வருந்தல்
உழைப்பு-வருத்தம்
உறல்-பொருந்தல்
உறங்கல்-நித்திரை செய்தல்
உறுதி-வலி, உண்மை.

ஊ

ஊதியம்-இலாபம், பலன்
ஊர்தி-வாகனம்
ஊழ்-பூர்வகன்மம்

எ

எச்சின்மயக்கம்-உச்சிட்டதோஷம்
எட்டுணை-எவ்வளவு

ஏ

ஏகாந்தம்-தனிமை
ஏது-நிமித்தம், காரணம்
ஏவலன்-வேலைக்காரன்
ஏனம்-பன்றி
ஏனையார்-மற்றையர்

ஐ

ஐயம்-சந்தேகம்

ஒ

ஒக்கல்-உறவினர்
ஒருங்கு-எல்லாம்
ஒருதலையாக-ஒருபக்கமாக
ஒலி-சத்தம்
ஒலிவடிவம்-சத்தரூபம்

ஓ

ஓம்பல்-பாதுகாத்தல்
ஓலம்-அபயமிட்டழைத்தல்

க

கசிதம்-துடிப்பு
கடிகன்-நாழிகையளப்போன்
கடு-நஞ்சு
கடைமுறை-கடைசிமுறை
கட்புலன்-நேத்திரேந்திரியம்
கணங்கள்-கூட்டங்கள்
கணம்-கூட்டம், திரட்சி நான்கு நிமிஷம்
கணிகை-தாசி
கண்-இடம்
கண்டம்-கழுத்து
கண்டை-வீரக்கழல் ஓராபரணம்
கண்ணது-இடத்தது.
கதிரவன்-சூரியன்
கதிர்-கிரணம், சூரியன்
கபடம்-தந்திரம், வஞ்சகம்
கமனம்-கதி, போதல்
கம்பலை-ஒலி, துன்பம்
கரணம்-அந்தரிந்திரியம், உபகரணம்
கருவி-ஆயுதம், உபகரணம்
கருவூலம்-பொக்கசம்
கர்மகாண்டம்-கர்மநிவிர்த்தி சொல்லுநூல்
கலசம்-குடம்
கலன்-ஆபரணம்
கலித்தல்-சந்தித்தல்
கலுழன்-கருடன்
கலைகள்-சாஸ்திரங்கள்

கலைமகள்-சரஸ்வதி
கவலல்-வருந்தல்
கவற்சி-வருத்தம்,விருப்பம்
கழி-மிகுதி
கழுவாய்-பிராயச்சித்தம்
கற்பம்-உலகமுடியுங்காலம், மூப்புவாராமற் செய்யு மருந்து
கனி-பழம்
கனிட்டர்-இளையவர்
கன்னல்-கரும்பு, சர்க்கரை

கா

காடுபடு பொருள்-காட்டினிடத்துண்டாகும் திரவியங்கள்
காதிவேந்தன்-விசுவாமித்திரன்
காமம்-ஆசை விருப்பம்
காருகபத்தியம்-வேதாக்கினி மூன்றிலொன்று
கார்காலம்-ஆறுபருவத் தொன்று
கார்ஹஸ்தியம்-வேதாக்கினிமூன்றி லொன்று
காலக்கிரமம்-கால்லாட்சம்
கானகம்-காடு, குறிஞ்சிநிலம்
கானம்-காடு, வனம்

கி

கிரணம்-ஒளி, கதிர்
கிரணம்-தொழில்
கிருமி-புழு
கிருஷ்ணைதேவி-துரோபதை
கிர்த்தியம்-சடங்கு, தொழில்
கிலேசம்-கவலை, துன்பம்

கீ

கீடம்-புழு, வண்டு
கீதம்-இசை, பாட்டு

கு

குசம்-நீர், மூலை
குஞ்சி-குடுமி
குடில்-குடிசை, சிற்றில்
குணகடல்-கீழ்சமுத்திரம்.
குதம்-மலவாயில்
குதர்க்கம்-முறைகெட்ட தருக்கம்
குய்யம்-அபானவாயில்
குரவன்-ஆசிரியன்
குரவங்கம்-ஓர்வகைமரம்
குரூரம்-கொடுமை
குரோசம்-கூடப்பிடுதூரம்
குரோதம்-சினம், பகை
குரைத்தல்-சத்தித்தல்
குலாலன்-குயவன்
குழவி-குழந்தை
குன்று-சிறுமலை

கூ

கூர்மம்-ஆமை
கூறு-பங்கு
கேணி-குளம், கிணறு
கேழல்-பன்றி

கை

கைமை-கைம்பெண்டன்மை
கைம்மாறு-பிரதியுபகாரம்
கையடை-அடைக்கலம்

கொ

கொடுமுடி-மலையினுச்சி
கொண்கன்-கணவன், தலைவன்

கோ

கோடை-வேனிற்காலம்
கோமளம்-இளமை
கோமகன்-அரசன், தலைவன்
கோரண்டை-ஓர்வகைமரம்
கோரம்-அச்சம்
கோறல்-கொல்லல்.

கௌ

கௌமாரம்-இளம்பருவம்

ச

சகலர் - மூவகை யான்மாக்களொருவர்

சகளம்-மாயாரூபமு. சராசரங்களுடன் கூடிய உருவம்
சங்கிதை-சரித்திரம்
சங்கை-அளவு
சசி-சந்திரன், இந்திராணி
சடன்-மூடன்
சட்டை-அங்கி, மேற்றோல்
சத்துவம்-சாத்துவிக குணம்
சந்தப்பூச்சு-சந்தனம்
சந்தனக்கலவை-வாசனை கூடிய சந்தனம்.
சந்தி-இளைப்பு, கூடல்
சபதம்-பிரதிக்கினை, வாக்கு நிண்ணயம்
சமர்-போர்
சமஷ்டி-சமூகம், சுருக்கம்
சமித்தல்-சேணித்தல்
சயனம்-படுக்கை
சரபம்-எண்காற்புள்
சராசரம்-நடையுள்ளதுமில்லதும்
சருப்பம்-பாம்பு
சற்பனை-சதி
சன்மானம்-வெகுமானம்

சா

சாகினி-சிறுகீரை
சாதனம்-பயிற்சி
சாத்தியதேவர்-வியாசர்
சாந்தாற்றி-விசிறி, சிற்றாலவட்டம்
சாயல்-அழகு, நிறம்
சாரணர்-புலவர், ஒற்றர்
சார்ங்கம்-விஷ்ணுவின்வில்
சார்த்தல்-அடைதல், கூடுதல்
சார்பிடம்-அடைக்கலத்தானம்
சாலம்-கூட்டம், மாயவித்தை, விற்பம்
சாளரம்-சன்னல், பலகணி
சான்றோர்-அறிஞர்

சி

சிகரம்-மலையுச்சி, மயிர்முடி
சிகை-குடுமி, மயிர்முடி
சிட்டர்-நல்லோர், பெரியோர்
சித்தம்-உட்கரணம் நான்கிலொன்று, உள்ளம்.
சித்தர்-சித்திபெற்றவர்கள்
சித்தாந்தம்-கருத்துமுடிபு
சிந்தித்தல்-நினைத்தல்
சினம்-கோபம்

சீ

சீரியோன்-சிறப்பானவன்

சுக்கிலம்-வெண்மை, இந்திரியம்
சுண்ணாக்கல்-சுக்கான்கல்
சுதந்தரம்-உரிமை
சுத்தமம்-குற்றமற்றது
சுபக்ஷம்-பொருளிருக்கும்பக்கம்
சுரம்-இசை, அருநெறி, காடு
சுரர்-வானோர்
சுருதி-வேதம், ஒலி
சுரேசன்-இந்திரன்
சுழுத்தி-மயக்கமானநித்திரை, மூன்றுமவத்தை
சுளுக்கல்-கோபித்தல்

சூ

சூக்குமம்-அணு
சூடாமணி-முடிமணி
சூரரமாது-தெய்வப்பெண்
சூர்த்தவடிவு-அச்சங் கொடுக்கும் ரூபம்

செ

செருக்கு-ஆணவம், களிப்பு

சே

சேடம்-மிச்சப்பொருள்
சேனப்பறவை-பருந்து
சேனமுனிவர்-கழுகுரூபமுள்ள இருடிகள்

சொ

சொப்பனம்-கனா

சோ

சோடை-விடாய், இளைப்பு

ஜா

ஜாக்கிரம்-விழிப்பு, ஓரவத்தை
ஜாரபுருஷன்-கள்ளபுருஷன்

ஸ்

ஸ்தூலம்-பருமை

ஞா

ஞாதியர்-தாயத்தார், பங்காளிகள்
ஞாபகம்-நினைவு
ஞாயிறு-சூரியன், ஆதிவாரம்
ஞான்று-காலம், நாள்

த

தகரவித்தை-பிரமவித்தை
தகித்தல்-சீரணித்தல், சுடுதல்
தகையர்-தன்மையுடையவர்
தக்கோலம்-வால்மிளகு
தசை-ஊன்
தட்சணாக்கினி-தேவாக்கினிமூன்றிலொன்று
தணல்-தழல், நெருப்பு
தணிதல்-ஆறுதல், குளிர்தல்
தண்டம்-தடி, சிக்ஷை, வணக்கம்
தண்டலை-பூந்தோட்டம்
தத்துவங்கள் தத்துவத்திரயங்கள்
தநயன்-புத்திரன்
தமோகுணம்-தாமசம்
தருக்கு-அகங்காரம, எழுச்சி
தலைப்படல்-எதிர்த்தல்
தவசிரேஷ்டன்-முனிவர், தவத்திற்குவைப்பிடமானவன்
தளிர்-தழை
தக்ஷாயனம்-சூரியன் மூவகைவீதியிலொன்று
தக்ஷிணை-காணிக்கை

தா

தாபம்-உஷ்ணம், தாகம் துன்பம்
தாமசம்-இருள், தாமதம்
தாருணம்-அச்சம், கூச்சம்
தாவரம்-மரம்
தானம்-இடம், ஈகை
தானவர்-அசுரர்
தாக்ஷணியம்-இரக்கம்

தி

திகிரி-சக்கரம்
திக்காரம்-நிந்தை
திங்கள்-சந்திரன், மாதம்
தியானம்-சிந்திப்பு, அனுட்டானம்
தியானயோகம்-அட்டாங்க யோகத் தொன்று
திரணம்-அற்பம்
திரள்-கூட்டம்
திரிசியம்-காணப்படுவது
திரியக்குயோனி - குறுக்குயோனி, மிருகவகை
திருத்தி-பூரணம், மனரம்மியம்
திலகர்-மேம்பட்டவர்

தீ

தீக்கடன்-ஈமக்கடன்
தீர்க்கம்-நீளம், தூரம்
தீவரம்-விரைவு, சடுதி

து

துய்த்தல்-அநுபவித்தல்
துய்த்தொழித்தல்-அநுபவித்துத் தீர்த்தல்
துர்ப்புத்தி - கெட்டகுணம் துன்மதி
துலை-தராசு, துலா
துவேஷம்-பகை, வெறுப்ப
துவைதம்-இரண்டு
துழனி - ஒலி, பறவைக்கூட்டத் தொனி

தெ

தெய்வகதி-தேவர்களின்வழி. தெய்வாதீனம்,

தே

தேஜசு-பிரகாசம்
தேவமானம் - தேவதைகளின் வருடம்
தேற்றம்-தெளிவு, நிச்சயம்

தை

தைத்தியர்-அசுரர், திதிமைந்தர்
தைவரல்-தடவல்

தொ

தொடக்கு-கட்டு, சிக்கு
தொழுகுலம்-பிராமவருணம்

ந

நட்டம்-கேடு, சேதம்
நலம்-பயன், உபகாரம்
நறுமலர்-வாசனையுள்ளபூ

நா

நாகர்-சற்பசாதியார், தேவர்
நாடகம்-நடனம்
நாயகன்-எசமான், புருடன், அரசன்
நாரம்-அன்பு, தண்ணீர்
நாளம்-பூந்தண்டு, வட்டம்

நி

நிகர்த்தல்-ஒப்பாதல், பொருதல்
நிட்டூரம்-இடையூறு, கொடுமை
நிட்டை - சாதகம், முடிவு
நிணம்-கொழுப்பு
நிதியம்-திரவியம்
நித்தியகருமம்-நியமநிட்டை
நிபந்தனை-ஏற்பாடு, கட்டு
நியமம்-வழக்கம், நிச்சயம்
நிரந்தரம்-எப்பொழுதும்
நிராயுதன்-ஆயுதமில்லாதவன்
நிருத்தம்-கூத்து
நிலத்திணை-நடையில்லது
நின்மலம்-அழுக்கின்மை
நின்மலன்-கடவுள், சுத்தன்
நிஷ்களம்-உருவின்மை, கலப்பின்மை

நீ

நீர்க்கடன்-திலதர்ப்பணம்

நு

நுகர்தல்-அனுபவித்தல், புசித்தல்
நுண்ணறிவு-நுட்பமான அறிவு

நே

நேயம்-சிநேகம்

நை

நைமித்திகம்-விசேடாராதனை

ப

பகடிக்கூத்து-விகடக்கூத்து
பகலோன்-சூரியன்
பகவன்-கடவுள், அரி, பிரமன், குரு
பக்கச்சிகை-சிலுப்பா
பசுநிரை-பசுவின்கூட்டம்
பஞ்சடைதல்-கண்பஞ்சாடுதல்
படர்-வேலைக்காரர்
படை-சேனை
பட்சபாதம்-ஒரவாரம்
பணயம்-பணம், பொருத்தப்பணம்
பணி-வேலை, ஆபரணம்
பணிவிடை-வேலை, உபசாரம்
பண்டம்-பொருள், தானியம்
பதங்கம்-பறவை
பதடி-பதர்
பதார்த்தம்-கறி, போசனவஸ்து, பாக்கியம்
பதிதர்-குலஞ்சமய முதலியவற்றிற் றவறினோன்
பயிறல்-சொல்லுதல், ஒலித்தல்.
பரமபதம்-மோட்சம்
பரவசம்-மூர்ச்சை, தன்வசமற்றிருத்தல்
பரமான்மா-கடவுள், இராபதார்

த்தாவச்சின்னவான்மா
பரிசனம்-வேலைக்காரர்
பரிசனர்-வேலைக்காரர்
பரிமேத வேள்வி-அஸ்வமேதயா
கம்
பருவம் இருது, காலம்
பலாசம்-பலாமரம், முருக்கமரம்
பழுது-குற்றம்
பறித்தல்-பறிக்குதல்
பன்னி-மனைவி

பா

பாகம் பங்கு, சமைத்தல்
பாசம்-கயிறு, கட்டு
பாஞ்சராத்திராகமம்-விஷ்ணு பிர
மனுக்குச் செப்பியது
பாதலம்-பாதாளலோகம்
பாயல்-படுக்கை
பாலகர்-சிறுவர், குழந்தைகள்
பானம்-குடித்தல், பருகும்வஸ்து
க்கள்

பி

பிணக்கு-சண்டை
பிண்டம் - கருப்பம், உண்டை
சோறு,
பிதிரர்-தந்தைவழி மூதாக்கள்
பிரஜாபதி-பிதா, பிரமன், அரசன்
பிரகிருதி-பஞ்சபூதம்
பிரணவம்-ஓங்காரம்
பிரதிக்ஞை-சம்மதிபொருத்தனை
பிரதித்தொனி-எதிரொலி
பிரபஞ்சம்-உலகம்
பிரமசாரியம்-கற்றுவிரதங்காத்து
விவாகமின்றி யிருத்தல்
பிரவர்த்தகர்-ஆக்கியோர்வ்யாபாரி
கள்
பிராமாகலர்-மாயைநீத்தோர்
பிராயச்சித்தம்-தண்டனைநிவிர்த்தி
பிராணாந்தியம்-உயிர்முடிவு, மர
ணம்
பிரேதம்-சவம்
பிலம்-வளை, கீழறை, குகை
பிழம்பு-திரட்சி, தம்பம்

பீ

பீடம்-ஆசனம்

பு

புகலிடம்-அடைக்கலத்தானம்
புடைத்தல்-அடித்தல்
புண்ணீர்-இரத்தம்
புரத்தல்-காத்தல்
புரீடம்-அழுக்கு, மலம்.
புருஷதத்துவம் - ஆண்தன்மை,
தைரியம்
புலம்-அறிவு, இடம்
புலன்-அறிவு
புலையர் - கீழ்மக்கள், சண்டாளர்
புலையன்-சண்டாளன்
புழை-உட்டுளை
புளகம்-மகிழ்ச்சி, மயிர்சிலிர்த்தல்
புள்-பறவை
புறங்காடு-சுடுகாடு
புறவு-புறா
புறம்பு-தனியானது
புறம்போதல் - வெளியிற் போகு
தல்
புற்று-வளை, வன்மீகம்
புனிதம்-சுத்தம்
புனைதல்-அலங்கரித்தல்
புன்கு-புன்கமரம்
புன்னகை-புன்சிரிப்பு

பூ

பூகதம்-பூமிக்குவருதல்
பூகம்-பூககணம், ஐம்பூதம்
பூத்தல்-மலர்தல்
பூப்பு-மாதவிடாய்
பூருவபக்கம்-வளர்பிறை, தருக்
கத்தில் எதிரியின் கோட்பாடு
பூவை-நாகணவாய்ப்புள், பெண்
பூஷணம்-ஆபரணம்

—·—

பே

பேதுத்தல் - பகைத்தல், வேற்றுமைப்படுத்தல்
பேரீந்து-பேரீச்சமரம்
பேழை-பெட்டி
பேழ்வாய்-திறந்தவாய்

பை

பைங்கூழ-பயிர்

பொ

பொதுமை-பொதுத்தன்மை
பொருள்-பணம், பொன், வஸ்து

போ

போழ்தல்-பிளத்தல்

பௌ

பௌஷியகாலம்-எதிர்காலம்

ம

மகிபதி-அரசன்
மகிமை-கனம், பெருமை
மகுடம்-கிரீடம்
மகேச்சுரன்-சிவன்
மஞ்சாடி-ஓர்வகைமரம்
மணம்-விவாகம்
மணவினை-விவாககாரியம்
மண்டலம்-வட்டம், தேயம்
மதர்ப்பு-இறுமாப்பு, செழிப்பு
மதுபானம்-கள்குடித்தல்
மந்தணம்-கலைதல், இரகசியம்
மழகாரம்-அகந்தை
மயானம்-சுடுகாடு
மருத்துக்கள்-தேவசாதியர்
மருள்-மயக்கம், உன்மத்தம்
மர்த்தனன்-வென்றவன், கெடுத்தவன்
மலர்-பூ
மலையரசன் - இமையபருவதராஜன்
மழுக்கம் - மங்கல், தோற்றமின்மை
மழுங்கல்-பொலிவழிதல்
மறுமை-வருபிறப்பு
மறையவன்-பிராமணன்
மற்போர்-மல்லயுத்தம்
மனைவி-நாயகி
மன்டதை-மக்கட்பரப்பு
மன்னவன்-அரசன்
மஹாரதர்-பதினோராயிரந் தேருக்குத் தலைவர்
மஹான்மா-அறிஞன்

மா

மாடம்-உப்பரிகை
மாணக்கன்-சீடன்
மாதர்-ஸ்ரீகள்
மைந்தர்-மக்கள்
மாயாரகிதம்-மாயை நீங்கினது
மாயை-பொய்
மார்க்கம்-வழி
மார்த்தாண்டன்-சூரியன்
மாலை-அந்திப்பொழுது
மாறு-விரோதம்
மாற்றார்-பகைவர்
மானபரணன் - மானி, வெட்கமுள்ளவன்

மி

மிருதி-தருமநூல்

மு

முகை-மலரும்பருவத்தரும்பு
முச்சந்தி-மூன்றுதெருக்கூடுமிடம்
முதுகாடு-சுடுகாடு
முதுகிடல்-தோற்றல்
முதுவர் - வயது சென்றவர், இழவர்
முதுமொழி-பழஞ்சொல்
முயலல்-முயற்சிசெய்தல்
முரண்-விரோதம்
முழை-குகை, துடுப்பு
முனிகள்-குணசுகன்

மூ

மூசை-மட்குகை
மூர்ச்சனை-நினைவுமயக்கம்

மோ

மோகம்-ஆசை
மோத்தை-வெள்ளாட்டுக்கடா

யா

யாக்கை-தேகம்
யாதனாதேகம்-ஆக்கினை யநுபவிக்கத்தக்க சரீரம்
யாதனை-துன்பம்

யோ

யோகி-நிஷ்டைசெய்வோன்

ர

ரசாதலம்-பாதாளலோகம்

ரோ

ரோதனம்-அழுகை

ல

லயை-அடங்கல்
லக்ஷணம்-முறைமை, அடையாளம்

வ

வசம்-கீழ்ப்படிதல்
வசி-இருப்பிடம், வாள், கூர்மை
வச்சிரப்படை-தேவேந்திரனது ஆயுதம்
வஞ்சம்-கபடம், கொடுமை
வடிவம்-உருவம்
வட்டம்-வளைவு
வட்டில்-கிண்ணம்
வண்ணம்-நிறம், வடிவு
வண்டில்-பண்டி
வரலாறு-ஒழுங்கு, மூலம்
வரிவடிவம்-எழுத்தின் உருவம்
வருக்கம்-வகுப்பு
வருடல்-தடவல்
வருணாச்சிரமம்-சாதியொழுக்கம்
வருவாய்-வரும்படி
வலம்-இடம், வலி, வலப்பக்கம்
வல்லமை-சாமார்த்தியம்
வவ்வுதல்-பிடித்தல்
வழிபாடு-ஆராதனை
வழு-குற்றம்
வளம்-அழகு, மாட்சிமை
வனிதை-பெண், மனையாள்
வன்செய்கை-கொடுமையான காரியம்
வன்மொழி-கடுஞ்சொல்

வா

வாக்கியம்-வசனம், வாசகம்
வாக்கு-சொல்
வாய்மை-நிசம், உண்மை
வாழ்க்கைத்துணை-மனைவி
வானப்பிரத்தன்-வனத்திற் சென்று தவஞ்செய்பவன்

வி

விகாரம்-வருத்தம், நோய்
விசுவதேவர் - திரயோதச தேவகணத்தர்
விசுவாசம்-விருப்பம்
விஞ்ஞானகலர்-மூவகை யாத்மாக்களி லொருவர்
விஞ்ஞானம்-அறிவு
விடயம்-அறியப்படத்தக்கது
விடை-உத்தரம்
விண்ணப்பம்-சொல்லுதல், மன்றாட்டம்
விண்ணவர்-தேவதைகள்
விதித்தல்-நியமித்தல்
விதிமொழி-நியமிக்கும்வார்த்தை
வித்து-வமிசவழி, விதை
விபரீதம்-அதிசயம், மாறுபாடு
விப்பிரசித்தி-ஓரசுரன்
வியபிசாரிணி-வேசி
வியப்பு-ஆச்சரியம்
வியூகம்-படைவகுப்பு
விரதம்-தவம்
விராயம்-தளபாடம்
விரித்தல்-விளக்குதல்
விருத்தம்-விரோதம்
விழி-கண்
விழுப்பொருள்-மேன்மைப் பொருள்

விழைதல்-விரும்பல்
விழைவு-விருப்பம்
வினா-கேள்வி
வினை-காரியம், தொழில்
வினைத்திட்பம்-ஊழின்று வலிவு

வீ

வீடு-மோட்சம்
வீரியம்-வலிமை, வீரம்

வெ

வெகுளி-கோபம்
வெறுப்பல்-வாட்டல்

வே

வேதனம்-சம்பளம், கூலி
வேதனை-நோய், வருத்தம்
வேதாந்தம் - வேதத்தின்முடிவு, வைதிகம்
வேதியன்-பிராமணன்,வேதபோதினவன்
வேவுகாரன்-ஒற்றன்
வேள்வி-யாகம்

வை

வைகுந்தன்-விஷ்ணு
வைசுவதேவம் - ஓமப்பலி, பிதிர்பூசை
வைப்பு - சேமத்திரவியம், வைத்தல், இடம்
வைராகம்-வெறுப்பு

அரும்பத விளக்கம்

முற்றிற்று.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௩	௩	வியர்சாரற்	வியாசார்ற்
௬	௬	ஒருக்தியே	ஒருத்தியே
௮	௧	ப்ம	பஞ்
௯	௨௧	மானத்தாலும்	மானத்தாலு
,,	௩௧	லுட்காங்	லுட்கார்ங்
௰	௨௰	னையும	னையும்
,,	௨௫	னுக்குமம	னுக்கும்
௧௧	௩௧	மூனிவர்	முனிவர்
௧௨	௨௯	முற்றவர்களே	முற்றவர்களே
௧௫	௨௩	வளருமம	வளரும்
,,	௨௬	மாத்திற்	மாத்திற்
௧௭	௫	பார்த்து	பார்த்து
௨௰	௯	என்னும	என்னும்
,,	௨௫	மென்று	மென்னு
,,	௩௧	தும	தும்
௨௩	௧௧	வார்தன்தை	வார்த்தை
,,	௩௰	வங்கள	உங்கள்
௨௭	௩	எனுவே	எனவே
,,	௧௯	தேவன்	தேவன்
௨௯	௧௮	கோமப்பில்	கோம்பவில்
௩௪	௭	பூக்களோடம	பூக்களோடும்
,,	௩௩	நத	நத
௩௮	௧௧	முயன	முயன்
,,	௩௨	சொன்னுன்	சொன்னுன்
௬௰	௧௮	எதகனை	எத்தனை
௬௧	௨	காலமாயினு	காலமாயினும்
,,	௧௯	வரும	வரும்
௭௮	௩௰	நிறம	நிறம்
௭௯	௨௮	ஆபி	ஆயி
௫௰	௧௪	புனையனவ	புலையன்வ
௫௨	௧௰	இங்஗னம	இங்஗னம்
௫௫	௧௯	அழுதனா	அழுதனர்
,,	௩௰	தோற்றவில்லை	தோற்றவில்லை
,,	௩௨	அவ்வமமையும்	அவ்வம்மையும்
௫௯	௩	மெலலிய	மெல்லிய
,,	௭	துவ்ளன	துள்ளன
,,	௨௨	அவ்வமமை	அவ்வம்மை
,,	௨௫	அவளலலள்	அவளல்லள்
௫௯	௧௯	போசலாற்ருயோ	போகலாற்ருயே
௯௧	௩௧	வினைக்ளுள்	வினைகளுள்
௯௪	௧௭	ஆவர்	ஆவா
௯௫	௩௨	பழய	பஞ்ழய
௯௮	௧௫	ஜவா	ஜயா

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௬௯	௩௨	தெனபது	தென்பது
௭௩	௨௭	அவவி	அவ்வி
௭௪	௨௮	வெளியபட்டு	வெளிப்பட்டு
௭௫	௨௧	கீழ்விருந்	கீழ்விழுந்
௭௭	௧௭	பொழுதின்ருஞ்	பொழுதினறஞ்
௮௰	௫	தின்னப்பட்ட	தின்னப்பட்ட
௮௮	௧௩	அவ்வாறே	அவ்வாறே
,,	௨௨	நோக்	நோக்
௯௧	௧௫	ருசையி	மூசையி
,,	௨௮	லீழ்த்தப்	லீழ்த்தப்
௯௪	௨௮	கிச்சிலிக்	கிச்சிலிக்
௯௫	௨	வாடைய	வாடையை
௯௬	௧௬	நகரம்	நரகம்
௯௯	௯	நுர்கந்	நுர்கந்
௱௩	௭	யொழிந்	லொழிந்
௱௰	௨௧	தத்தாதிரே	தத்தாத்திரே
,,	௨௨	தத்தாதிரே	தத்தாத்திரே
௱௰௧	௩	தாதி	தாதி
௱௧௨	௩௩	யடையரோ	யுடையரோ
௱௨௰	௨௩	கள்ளர்	கள்ளர்
௱௨௧	௫	முண்டாவனனை	முண்டாவதனை
,,	௭	வேள்விளைகச்	வேள்விகளைச்
௱௨௯	௨௭	உம்மிடத்து	உம்மிடத்து
௱௪௰	௪	ரெல்லோரும்	ரெல்லோரும்
௱௪௬	௯	வித்தை	வித்தை
௱௫௪	௨௧	வாகனத்தையும்	வாகனத்தையும்
௱௫௫	௨௨	காம்ம	கர்ம
௱௫௭	௯	நிறைவால்	நிறைவால்
௱௫௮	௨௩	சத்த	சத்த
௱௫௯	௨௰	அரச	அரச
௱௬௧	௩	சததி	சததி

பிழை திருத்தம்

முற்றிற்று.

கணபதி துணை

இந்நூலாசிரிய ரியற்றிய நூல்கள்.

வசன நடை.

பாராசரஸ்மிருதி ஆசாரகாண்டம்
சங்கரவிஜயம்
திருவெண்காட்டடிகள் சரித்திரம்
பெரியபுராணம்
மார்க்கண்டேய புராணம்
ஞானாண் மாபியல்
யோகவித்தை உபந்நியாசம்
விநாயக சதுர்த்தி விரதசங்கிரகம்
மகாவீர சரித்திரநாடகம்
ஆயிரம்பிறை கண்டகற்பம்

செய்யுள் நடை மூத்தபிள்ளையார்.

துவாதசநாம சங்கீர்த்தனம்
திருப்பாதப் புகழ்ச்சிமாலை
சரண தசகம்
மங்களம்
பஞ்சரத்தினம்

இளையபிள்ளையார்

ஸ்ரீ சிவசண்முக சரணாஷ்டகம்
திருப்பதத் திருப்புகழ் மாலை
திருக்கழற் பல்லாண்டுமாலை
சித்திரயமக வந்தாதி
திருத்தணிகைச் சித்திரமாலை
,, பதிற்றுப் பத்தந்தாதி
வெண்பா வந்தாதி
திருத்தணிகை நான்மணிமாலை
,, மும்மணிக் கோவை
,, இரட்டைமணிமாலை
, கலம்பகம்
திருப்போரூர் கலிவிண்ணப்பம்
தனிப்பதிகங்கள்

சிவபெருமான்.

ஸ்ரீசிவாட்டோத்தர சதநாமமஞ்சரி
ஸ்ரீ பாதத்திருப்புகழ் மாலை
திருவடித் திருப்புகழ்மாலை.
திருப்பதிபழகாயிரத்தந்தாதி
அடைக்கலமாலை
அபயமாலை
சிறுவிண்ணப்பமாலை
சாணாகதிமாலை
அம்பலக்குறம் (அமுதப்பாட்டு)
கையடைமாலை
சந்நிதிமுறையீட்டுமாலை
ஓலமாலை
தைந்நிய சரணியமாலை
கையறவுமாலை
அபராத க்ஷமிப்புமாலை
அருணமபாராயணத்திரட்டு
மகிழ்மாக்கலம்பகம்

வடிவுடையம்மையார் சௌந்தரியாஷ்டகம்

திருவருட்பிரகாசனார் சந்நிதிமுறை.

ஆளுடைய பிள்ளையார்
இரட்டைமணிமாலை
தசகமாலை
ஆளுடைய நம்பிகள்
கலிவிண்ணப்பம்

சிவஞான பாலையதேசிகர் மும்மணிக்கோவை

[illegible]

ஸ்ரீ [illegible].

MAHAMAHOPADHYAYA
U V SWAMINATHA IYER LIBRARY
MADRAS 41

கமலமுனி இரேகை சாஸ்திரம்.

மூலமும் - உரையும்.

சிநேகிதர்களே, இவ்வுலகத்திலுள்ள சகல ஜீவராசிகளிலும் மேலான ஜென்மத்தைப்பெற்ற நாம் பயன்படும் கீர்த்திபெற்ற பதினெண்சித்தர்கள் நமதுபேரில் கிருபைவைத்து, சரியை, கிரியை, யோகம், ஞானம், மணி, மந்திரம், வயித்தியம், சோதிடமென வகுத்து தேகத்திலுள்ள இரேகைகளைப்பார்த்து பலாபலன் சொல்லக்கூடிய சாஸ்திரங்களை ஏராளமாக எழுதியிருக்கிறார்களல்லவா, அதில் கமல முனிவர் இரேகைசாஸ்திரம் ஏழுகாண்டமும் இதுவரையில் மூலபாடமாகவே யிருந்தது அதில் யெடுத்துச்சொல்லும் விஷயங்கள் நம் முதும் நமது தாய் தகப்பன் புத்திரவர்க்கங்களின் பிறப்பு, இறப்பு வயது, யோகம் மற்றுமுள்ள பலாபலன்கள் சிலருக்கு இருளாகவே யிருந்து வியார்த்தமாய் போவதைக்கண்டு பரிதபவிக்கு சில வெளியூர் உள்ளூர் நேசர்களின் வேண்டுகோளால் சாமுத்திரிகா இலட்சணத்தை எடுத்தோத வல்லவர்களைக்கொண்டு அதிபிரயாசையுடன் செந்தமிழ் நடையில் உரை எழுதியும் கற்றோரும் தங்கள் தங்கள் பலாபலன்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்துக்கொள்ளும்படி எழுதி உயர்ந்த கடிதத்தில் குறைந்த விலைக்கு அச்சிட்டு வெளியிட்டிருக்கிறோம். வேண்டியவர்கள் எமது விலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளவும்.

இதன் விலை அணா 8. வி. பி. தபாற்கூலி அணா 3.

முத்தி முடிவு உரையுடன்.

இஃதோர் அருமையான வேதாந்தநூல்.

இந்நூலில் கூறியபடி நடக்கும் ஒவ்வொருவரும் மேலான மோக்ஷசாம்ராஜ்யத்தை அடைவது திண்ணம் ஒவ்வொரு செய்யுளுக்கும் பொழிப்புரையும் பல நூலகளினின்றும் மேற்கோள்களும் அடங்கி யிருக்கின்றன.

இதன் விலை அணா 8. வி. பி. தபாற்கூலி அணா 3.

மருத்துவசாஸ்திரம்.

இந்த மருத்துவ சாஸ்திரமானது பெரும்பாலும் நம்முடைய வீட்டுப் பெண்களுக்கு வேண்டுமெனக் கருதி தஞ்சைமாநகரம் வைத்தியர் கருணாநிதிப்பிள்ளை அவர்களால் பலவைத்திய நூல்களில் இருந்ததைபெயர்த்து எழுதி மாதர்களைக் கார்க்கப்பட்டதால். இதற்கு மருத்துவசாஸ்திரமெனப் பெயரிடப்பட்டது. ஆதலால் அவர்கள் படும் கஷ்டமானது சொல்லிமுடியாது. பிள்ளைகள் பிரசவிக்கும் காலங்களிலும் மற்றக்காலங்களிலும் அவர்களுக்கு யெத்தனையோ வியாதி சம்பவிக்கின்றன. அதாவது நாலாயிரத்தி நானூற்று நாற்பத்தெட்டு வியாதியென்று ஆயுர்வேத சாஸ்திரம் கூறுகின்றது. தவிர அந்தந்த வியாதிகளுக்கு சிகிச்சையும், குழம்புகளும், தைலங்களும், மாத்திரைகளும், அஞ்சனங்களும், கலிக்கங்களும், லேகியங்களும, சூரணங்களும், எண்ணைகளும், பஸ்பங்களும், கலிக்கங்களுய், கியாழங்களும், சுன்னங்களும், மெழுகுகளும் இன்னும் இங்கிலீஷ் முறைகளும் யூனானி முறைகளும் மாதர்களே தங்களுக்கு உண்டாகும் புத்திரர்களுக்கு வரும் கிரகதோஷங்களுக்கு சக்கரங்களும் சேர்த்து அச்சிட்டிருக்கின்றன. இப்புத்தகம் ஒவ்வொரு வீடுகளிலும் யிருந்தால் வைத்தியரைத் தேடவேண்டிய அவசியம் கிடையாது.

1. சூதகக்கட்டு
2. தீட்டுக்காலங்களில் வலி
3. உதிரப்பெருக்கு
4. பிரமேகோற்பத்தி
5. சுபமும் பலமுமுள்ள பிள்ளைகளைப் பெருவதற்கானவழி.
6. கருதரிக்கும் விவரம்
7. கருத்தரித்த முதல் மாதத்தில் பிண்டத்தின் நிலைமையும் கிரமமாய் தோன்றும் குறிகளும்சொல்லப்படும்.
8. இரண்டாம் மாதத்தில்காணும் குறிகள்.
9. மூன்றும் மாதத்தில் காணும் குறிகள்.
10. நாலாம் மாதத்தில் தோணும் குறிகள்
11. ஐந்தாம் மாதத்தில்உண்டாகும் குறிகள்
12. ஆறும்மாதத்தில் செய்யும் குறிகள்.
13. ஏழாம் மாதத்தில் காணும்குறிகள்
14. எட்டாம் மாதத்தில் அடையும் குறிப்பு
15. ஒன்பதாம் மாதத்தில் தோன்றும் குறிகள்
16. பத்தாம் மாதத்தில் செய்யும் விதம்
17. கர்ப்பகாலம்

பிரசவவேதனை முதலிய இன்னும் அளவிருந்துள்ள வியாதிகளுக்கு சிகிட்சையும் சேர்த்து உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டு குறைந்த விலைக்கி விக்கிரயம் செய்யப்பட்டது. விலை ரூபா 1-8-0. வி. பி. தபாற்கூலி அணா 0-3-0

போகர்பஞ்சபட்சி சாஸ்திரம்.

மூலமும் - உரையும்.

இஃது மிக்க மேன்மை தங்கிய சோதிட சாஸ்திரங்களில் ஒன்றென்பதை பூர்வீக சோதிடர்களறிந்தவுடன் இக்காலத்துச் சோதிடர்கள் பலரும் அறிவார்கள்.

இதுவரையில் வடமொழியிலிருந்த இந்த சாஸ்திரத்தை (சோதிடமணி) தேவேந்திரன் என்பவரால் லோகோபகாரமாகும்படி பாட்டும் உரையுமாக மிக எளிய தமிழ் நடையில் எழுதித்தர எம்மால் அச்சிடப்பட்டிருக்கின்றது.

இச்சாஸ்திரத்துள் பஞ்சபட்சிகளின் தொழில் முறைகள், சக்கரங்கள், பாடங்கள், ஆரூடங்கள், இதன்பலன்கள், நிமிஷ பஞ்சபட்சியென்னும் சுருக்குபஞ்சபட்சிகளின் பலாபலன்கள் தனித்தனி விவகாரமாகக் கூறப்பட்டிருக்கிறது.

இதைச் சாமான்னிய சோதிடர்களும் கையாண்டு வருவார்களானால் சோதிடம் வல்ல மகா பண்டிதர்களுக்கு நிகராக நற்பேறெடுப்பார்களென்று இந்நூல் மொழி பெயர்த்தவரின் கருத்து.

இத்தமிழ் பேருலகில் சோதிடம் தெரியாதவர்களும தமிழ்நடை அறியாதவர்களுமா யுள்ளவர்கள் இதை ஒருமுறை கண்ணோட்டமிடுவார்களானால் சோதிடங்கற்கு உபாயத்தை சொற்பநாளில் தாமே யுணர்வார்களென்பதுண்டு. இதன் விலை அணா 12. வி. பி. அணா 2.

கண்டசுத்தி கதைகளென்கிற விகட

அதிவினோத கதை.

ஐயா என் அன்பும் பிரியமுள்ள சினேகிதர்கள், இவ்வுலகத்தில் அநேக கதைகள் வாசித்திருந்தாலும் இந்த (அதிவினோதகதை) என்னும் பெயர்வாய்ந்த சரித்திரத்தை வாசித்தால் வேடிக்கையான வினோதகதைகளும், எல்லா சிரிப்பு, எல்லாம தமாஷ், எல்லாவிகடமும் இல்லறமார்க்கத்தியல்பும், விபசாரத்தால் வரும் கேடும், விபரீதமானகலகமும், கற்பழியாத லக்ஷணங்களும் பாவபுண்ணியத்தால் வரும் நன்மை தீமைகளும் முன்சென்மத்தில் செய்த வினோதகாட்சிகளும் அதிவினோதமாகிய அகஸ்யங்களும் உத்தமஸ்திரீகளை கலியாணஞ்செய்து கலக்கமில்லாமல் நித்தியானந்தத்தில் மூழ்கி இவ்வுலகத்தில் நல்லபெயரும் அவ்வுலகத்தில் சாலோபதவி அடைந்தும் இன்னம் அடுக்கடுக்காய் சொன்னால் யேடும் அடங்காதென்று இம்மட்டில் விடப்பட்டது. 192-பக்கங்கொண்டது.

இதன் விலை ரூபா 1. வி. பி. தபாற்கூலி அணா 3.

MAHAMAHOPADHYAYA
U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS 41

விளம்பரம்.

மார்க்கண்டேய புராணவசனம்.

இப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னை - சூளை - ஆண்டியப்ப நாய்க்கன் தெருவு 44-நெம்பர் வீட்டில் ஸ்தாபித்திருக்கும் ஆயுர்வேத அச்சுக்கூடத்தலைவர் சிறுமணவூர் - அண்ணாமலை முதலியாரிடத்திலும் ஷை ஆரிமுத்து மேஸ்திரி தெருவு சி. அ. கண்ணபிரான் முதலியாரிடத்திலும் சென்னை தம்புசெட்டி தெருவு 91-வது ரிப்பன் புத்தகசாலையிலும் ஷை லிங்கப்பசெட்டி தெருவு 288 - வது நெம்பர் அ. மஹாதேவ செட்டியாரிடத்திலும் யெல்லா புத்தக கடைகளிலும் ரூபா 1—8—0 கொடுத்து பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு,

சிறுமணவூர்,

அண்ணாமலை முதலியார்

சூளை போஸ்ட், மதராஸ்.

MAHAMAHOPADHYAYA
U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS 41